தமிழ் நாடு காந்தி நினைவு நிதி வெளியீடு—5

மகாத்மா காந்திஜியின் சுய சரிதம்

சுருக்கம்

தமிழாக்கம் :
எல். கிருஷ்ணசாமி பாரதி, எம். ஏ., பி. எல்.,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

பதிப்பாளர் :
தமிழ் நாடு காந்தி நினைவு நிதி

முதற் பதிப்பு—ஜனவரி 1955

நவஜீவன் டிரஸ்டின் அனுமதியுடன்
தமிழ் நாடு காந்தி நினைவு நிதி
வெளியிட்டது

விலை ரூபாய் இரண்டு

கிடைக்கும் இடம் :
ஸர்வோதயப் பிரசுராலயம்
தஞ்சாவூர்

கபீர் அச்சகம், சென்னை (2763)

பொருள் அடக்கம்

அதிகாரம் பக்கம்

தமிழாக்கியோனின் குறிப்புரை ... vii
பதிப்பாளர் குறிப்பு ... xi
மஹாத்மா காந்திஜியின் முன்னுரை ... xiii

பாகம் I :

குழந்தைப் பருவமும் இளமையும்

1. பிறப்பும் பெற்றோரும் ... 1
2. பள்ளியில் ... 4
3. திருமணம் ... 14
4. துன்பகரமான நட்பு ... 16
5. களவும் கழுவாயும் ... 26
6. என் தந்தையின் நோயும் சாவும் ... 31
7. சமயத்தின் ஒளிகள் ... 33
8. இங்கிலாந்து செல்ல ஏற்பாடுகள் ... 37
9. கப்பலில் ... 43

பாகம் II :

இங்கிலாந்தில்—ஒரு மாணவனாக

10. இலண்டனில் ... 49
11. ஆங்கில கனவானாக நடித்தல் ... 54
12. மாறுதல்கள் ... 59
13. கூச்சம்—என் கவசம் ... 65
14. பொய்மைப் புரை ... 66
15. சமய ஆராய்ச்சி ஆரம்பம் ... 75

பாகம் III :

பாரிஸ்டராக இந்தியாவில்

16. இந்தியா திரும்புதல் ... 79
17. வாழ்க்கையை எப்படித் தொடங்கினேன் ... 80
18. முதல் அதிர்ச்சி ... 84

அதிகாரம் பக்கம்

பாகம் IV :

தென் ஆபிரிக்காவில்

19. தென் ஆபிரிக்கா வருதல் ... 93
20. பிரிட்டோரியாவுக்கு ... 95
21. பிரிட்டோரியாவில் முதல் நாள் ... 107
22. கிரிஸ்தவரோடு பழகுதல் ... 109
23. இந்தியர்களின் பிரசினையை அறிந்து கொள்ளுதல் ... 116
24. வழக்கு ... 122
25. " நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கின்றது " ... 125
26. நேதால் இந்தியன் காங்கிரஸ் ... 128
27. 3 பவுண் வரி ... 131

பாகம் V :

இந்தியா வருகை

28. இந்தியாவில் ... 135

பாகம் VI :

மீண்டும் தென் ஆபிரிக்காவில்

29. தென் ஆபிரிக்கா வருகை—பெரும் புயல் ... 141
30. குழந்தைகள் படிப்பு—பராமரிப்பு ... 150
31. எளிய வாழ்க்கை ... 153
32. ஒரு நினைவும் பிராயச்சித்தமும் ... 155
33. போயர் போர் ... 159
34. சுகவழிச் சீர்த்திருத்தம் ... 162
35. விலை உயர்ந்த வெகுமதிகள் ... 164

பாகம் VII :

மீண்டும் இந்தியாவில்

36. எனது முதல் காங்கிரஸ் ... 169
37. கர்சான் பிரபுவின் தர்பார் ... 175
38. பம்பாயில் ... 177

அதிகாரம் பக்கம்

பாகம் VIII :

மீண்டும் தென் ஆபிரிக்காவில்

39. மீண்டும் தென் ஆபிரிக்காவில் ... 179
40. கீதையைக் கற்றல் ... 182
41. ' இந்திய சிந்தை ' ... 184
42. ஒரு நூலின் மந்திர சக்தி ... 186
43. போனிக்ஸ் உறைவிடம் ... 188
44. இல்லம் ... 191
45. சூலுக்கலகம் ... 192
46. பிரமசரியம் ... 196
47. கஸ்தூரிபாவின் தீரம் ... 198
48. வீட்டு சத்தியாக்கிரகம் ... 203
49. தன்னடக்கப் பாதையில் ... 207
50. நீதிமன்றத்தின் சில நினைவுகள் ... 209
51. சத்தியாக்கிரகத்தின் பிறப்பு ... 214
52. சிறை ... 216
53. தாக்கப்பட்டேன் ... 221
54. மீண்டும் சத்தியாக்கிரகத் துவக்கம் ... 228
55. டால்ஸ்டாய்ப் பண்ணை ... 231
56. பெண்கள் போரில் சேர்ந்தனர் ... 236
57. தொழிலாளர் படை ... 242
58. மாபெரும் யாத்திரை ... 247
59. சத்தியாக்கிரகத்தின் வெற்றி ... 257

பாகம் IX :

இங்கிலாந்துக்குச் செல்லுதலும்—போரும்

60. போரில் என் பங்கு ... 263

பாகம் X :

இந்தியாவில்

61. சபர்மதி ஆசிரமம் நிறுவுதல் ... 267
62. மூன்றும் வகுப்புப் பிரயாணியின் துயரங்கள் ... 268
63. ஆசிரமம் நிறுவுதல் ... 273

அதிகாரம் பக்கம்

பாகம் XI : சம்பரான்

64. அவுரி அநீதி ... 279
65. அகிம்சையின் காட்சி ... 283
66. வழக்கு ‘ வாப்பஸ் ’ ... 288
67. கிராமங்களிலே ... 291
68. கறை நீங்கியது ... 295

பாகம் XII : ஆமதாபாத் தொழிலாளர்

69. தொழிலாளர் தொடர்பு ... 299
70. உண்ணு நோன்பு ... 301

பாகம் XIII : கேதா சத்தியாக்கிரகம்

71. கேதா சத்தியாக்கிரகம் ... 307
72. வெங்காயக் கள்வன் ... 309
73. கேதா சத்தியாக்கிரகத்தின் முடிவு ... 313

பாகம் XIV : பட்டாளத்திற்கு ஆள் சேர்த்தல்

74. பட்டாளத்திற்கு ஆள் சேர்த்தல் ... 317
75. எமன் வாயிலே ... 323

பாகம் XV : ரௌலட் சட்டம்—அரசியல் பிரவேசம்

76. ரௌலட் சட்டம் ... 329
77. மறக்கமுடியாத அந்த வாரம் ... 332
78. ‘ இமாலயத் தவறு ’ ... 340
79. ‘ நவஜீவன் ’ ‘ யங் இந்தியா ’ ... 343
80. அமிருதசரஸ் காங்கிரஸ் ... 344

பாகம் XVI : காதியின் பிறப்பு

81. காதியின் பிறப்பு ... 349
82. வந்தனம் ... 357

தமிழாக்கியோனின் குறிப்புரை

அன்பும் பண்பும் நிறைந்த எனது பிரிய நண்பர், மதுரை திரு. நா. ம. ரா. சுப்பராமன் அவர்கள், காந்தி நினைவு நிதியின் சார்பில் காந்தி அடிகளின் ஆங்கிலச் 'சுயசரிதச் சுருக்க'த்தைத் தமிழில் மொழி பெயர்த்துத் தருமாறு என்னை வேண்டினர். அவ்வரிய பணியின் அருமைக்கு அஞ்சியும், சூழ்நிலைகளையும் என் மன நிலைகளையும் கருதியும் அதனை ஏற்க மறுத்து மன்னித்தருளுமாறு வேண்டினேன். ஆனால், அவர்கள் என்பால் கொண்டுள்ள அன்பால் விடாது மீண்டும் என்னை வற்புறுத்தலானார்கள். சிறந்த அவ் அன்பின் ஆற்றலைத் தடுக்க வழியறியாது, இத்திருப்பணியை மேற்கொள்ளலானேன். ஆண்டவன் அருளால் இது இப்பொழுது இனிதே முடிவுற்றுள்ளது. பண்புள்ள நண்பர் திரு. சுப்பராமன் அவர்களுக்கு என் அன்பு கனிந்த நன்றி உரியதாகுக.

இப்பணியினை ஆண்டவன் அடியேனுக்கு அருளிய அரியதொரு வாய்ப்பு எனக் கொண்டு அகமகிழ்கின்றேன். இம்மொழிபெயர்ப்பு வேலை எனக்கு இன்பமும் துன்பமும் தந்தது. இன்பம் என்ன ? துன்பம் என்ன ? இத் தெய்விக நூலை நான் தமிழாக்கிக் கொண்டுவந்த போது, யான் அடைந்து வந்த ஆன்ம இன்பம் அளவிடல் அரியது. இதுவே நான் பெற்ற பேரின்பம். அடிகளார் பட்ட துன்பங்களையும் வீரத் தியாகிகளின் சோக நிகழ்ச்சிகளையும் என் எழுதுகோல் எழுதிவரும் போது, அந்நிகழ்ச்சிகளில் சில என் மனக்கண்முன் தோன்றி உள்ளத்தை உலுக்க இடை இடையே நான் கண்ணீர் விட்டழுததும் உண்டு ! இதுவே நான் அடைந்த துன்பம் !

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், கடல் கடந்த தென் ஆப்பிரிக்கா நாட்டில், வீரத் தமிழ் மகள் பதினறு ஆண்டு இளம் பெண்மணி—வள்ளியம்மாள், சத்தியாக் கிரகம் செய்து சிறை சென்று எலும்பும் தோலுமாய் திரும்பி வெளிவந்த சில நாளில் உயிர் துறந்த சோகக் கதையைப் படித்தவர் யாரே கண்ணீர் விட்டுக் கரைந் துருகாதார்? இவ் வீரத்தியாகி வள்ளியம்மாள் யார்? எந்த ஊர், என்பன அறிவோமா? அறிய வேண்டாமா? காந்தி அடிகளின் வாக்குப்படி, 'வள்ளியம்மாள் என்ற பெயர்ச் செல்வம் நீடு வாழ்க!' பல் உடைக்கப்பட்ட பேதைத் தொழிலாளி பாலசுந்தரத்தின் பரிதாபம்தான் என்னே! இவர்கள் தமிழர்கள் என்று நினைக்கும்போது நம் உள் ளம் உருகுகிறதல்லவா?

காலநிலையைக் கருதிக் காந்தி அடிகளின் 'சுயசரி தையையும்' 'தென் ஆப்பிரிக்காக் சத்தியாக்கிரக வர லாறு' என்ற நூலையும் சேர்த்துச் சுருக்கி, நவஜீவன் பிரசுராலயத்தார் ஒரு சிறு நூலாக ஆங்கிலத்தில் வெளி இட்டுள்ளார்கள். அதனைத் தமிழ்நாடு காந்தி நினைவு நிதியாளர்கள் தமிழாக்கித் தமிழகத்துக்குத் தந்துள்ள திரு நூலே இவ்வரிய நூலாகும். அதனைப் பண்புள்ள தமிழர் முன்னர் இன்புடன் சமர்ப்பிக்கின்றோம்; அன் புடன் ஏற்றுக் கொள்ளுவார்களாக!

ஒரு மொழியில் உள்ள நூலை இன்னொரு மொழிக்குக் கொண்டு வருவது என்பது எளிதான வேலை அன்று. அதுவும், தூய்மை மயமான ஆன்ம ஊற்றிலே, வாய் மைப் பேனவைத் தோய்த்து எழுதும் காந்தி அடிகளார் சொல்லோவியத்தை மொழிபெயர்ப்பது என்பது மிகக் கடினமான வேலை. எனவே, எனது மொழிபெயர்ப்பில் காணலாகும் குறைபாடுகளைப் பாராட்டாது குணங் களைப் போற்றி அருளுமாறு பண்புடைய தமிழ் மக் களைப் பணிவோடு வேண்டிக் கொள்ளுகிறேன்.

படிக்கும் தொறும் படிக்கும் தொறும் புத்தகம் புதிய

கருத்துக்களைப் பயந்து கொண்டிருப்பதே சிறந்த நூலாகும் என்று, நூலுக்கு வள்ளுவனார் அழகுபட இலக்கணம் வகுத்துள்ளாரல்லவா? அந்த அரிய இலக்கணத்துக்கு அருமையான இலக்கியமாகும் காந்தி அடிகளின் 'சுயசரிதம்' என்பதை, அதனைப் படிப்பவர் எவரும் எளிதே அறிந்து கொள்ளலாகும்.

உலகம் உய்விக்க உதித்த உத்தமன் காந்தி அடிகளின் சத்திய சோதனைகளே, இச்சுயசரிதைப் புத்தகத்தில் காணப்படுவன. அச்சோதனைகளால் அவரடைந்த 'ஆன்ம சுகத்தை நாமும் அடைதல் குறித்தே' அடிகளார் தன் சரிதையை எழுதலுற்றார். இத்தெய்விக நூலைப் பக்தி உள்ளத்தோடும் ஆழ்ந்த கவனத்தோடும் படிப்பவர்கள் எவரும் பெறலாகும் பண்பும் பயனும் அவரவர்களே உணரலாகும். வள்ளுவர் வகுத்துப் போந்த வாழ்க்கை நெறிகளை, வாழ்ந்து காட்டிய பெருமை காந்தி அடிகளைச் சார்ந்தது என்பதையும் இந்நூலிற் கண்டு களிக்கலாம். காந்தி நெறியில் திளைத்துள்ள தமிழ் மக்கள் இந்நூலைப் பன்முறையும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று பகருவதற்கு நான் யார்?

நயினாகரம்
(தென்காசி)
1–12–1954

எல். கிருஷ்ணசாமி பாரதி.

பதிப்பாளர் குறிப்பு

முதலாவதாக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள காந்திஜியின் ‘சுயசரிதமும்’, ‘தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரக வரலாறும்’ சேர்ந்து அச்சில் சுமார் ஆயிரம் பக்கங்கள் வரை ஆகின்றன. அவ்விரு நூல்களின் விஷயங்களேயும், இந்த நூல் மூலமாகச் சுருக்கி எழுத முதன் முறையாக முயற்சிக்கப்பட்டுள்ளது. காந்திஜியின் நடையே செறிவுள்ளபடியினுல், அப்பணி அவ்வளவு எளிதாக இருக்க வில்லே. மேலும், அவர் சொல்லுகின்ற ஒவ்வொன்றும் ஒரு நோக்கம் கொண்டதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. எனவே அவர் எழுதி இருப்பதில் எதையும் எடுத்துவிட முற்படும் பொழுதுப் பன்முறை சிந்திக்க வேண்டி இருக்கிறது.

என்ருலும், சிறிய வடிவில் காந்திஜியின் சுயசரிதம் வேண்டும் என்று தற்கால வாசகர்கள் விரும்புகிருர்கள். அத்தேவையையும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களின் தேவையையும் நிறைவேற்றுவதற்காகவே, இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மூலங்களின் இடத்தை இது நிச்சயமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனல் மூலத்தில் விவரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள விஷயங்களே வாசகர்கள் சாவதானமாகப் படிக்க முற்படுவதற்கு இந்நூல் தூண்டுதல் புரியக்கூடும் என்று நம்புகிறேன்.

மூலங்கள் காந்திஜியால் குஜராத்தியில் எழுதப்பட்டன ; பின்னர் மற்றவர்களால் ஆங்கிலத்தில் மொழி

பெயர்க்கப்பட்டன. ஆனால் ஆங்கில மொழி பெயர்ப்பு காந்தி அடிகளால் பார்க்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டன. இந்நூல், ஆங்கில நூல்களின் சுருக்கமே யாகும்.

அவருடைய வாழ்க்கையில் உள்ள எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் இது சேர்க்க முற்பட்டுள்ளது. இந் நூல்களை எழுதுவதில் அடிகளுடைய ஆத்மிக நோக்கத்தையும் மனதிலே வைத்தே எழுதப்பட்டுள்ளது. மேலும் காந்திஜியின் சொற்களை மாற்றமின்றி அப்படியே எடுத்து ஆளப்பட்டிருக்கிறது. இச்சுருக்க நூலுக்கு மிக அவசியம் என்று கருதப்பட்ட சில இடங்களில்தான், அவருடைய சொற்கள் மாற்றப்பட்டுள்ளன. அப்பொழுதும், அவற்றின் பொருள் சிறிதும் மாருத வண்ணமே செய்யப்பட்டுள்ளது. சுருக்கி எழுதும் இவ்வேலையில், மகாதேவ் தேசாய் பதிப்பித்துள்ள, ‘ எனது இளமைக்கால வாழ்க்கை’ என்ற நூல் உபயோகமாக இருந்தது.

பம்பாய்
நவம்பர் 1951

பரதன் குமரப்பா.

முன்னுரை

ஒரு முறையான சுயசரிதையை வரைய முற்படுவது என் நோக்கம் அல்ல. எனது பலப்பல சத்தியசோதனைகளின் கதையினைச் சொல்லவே விளம்புகிறேன்; ஆயின், எனது வாழ்க்கையே சத்திய சோதனைகளன்றிப் பிறிது ஒன்றும் கொண்டதில்லையாகவே, இக் கதை ஒரு சுயசரிதையின் வடிவையே கொள்ளுவதாகும். ஆனால், அதின் ஒவ்வொரு பக்கமும் சத்தியசோதனையைப் பற்றி மட்டுமே பேசுவதானாலும், நான் அதனைப் பொருட்படுத்தமாட்டேன். இந்த எல்லாச் சோதனைகளின் தொடர்ச்சியான வரலாறு, படிப்போருக்குப் பயன் இல்லாது போகாது என்று நம்புகின்றேன்; அல்லது அந்த நம்பிக்கையால் என்னை நான் புகழ்ந்து கொள்ளுகின்றேன். அரசியல் துறையில் எனது சோதனைகள் இதுபோழ்து அறிந்தவையே. ஆனால், ஆன்மிகத் துறையில் எனது சோதனைகளைச் செப்பவே நிச்சயமாக விழைகின்றேன்;. அவை எனக்குமட்டுமே தெரிந்தவை. அரசியல் துறையில் பணியாற்ற நான் பெற்றுள்ள ஆற்றல் அனைத்தும், அவற்றிலிருந்தே நான் பெற்றதாகும். அச்சோதனைகள் உண்மையிலேயே ஆன்மீகமாயிருப்பின், தற்புகழ்ச்சிக்கு இடமே இல்லை. அவை என் பணிவுடைமையை மிகுதியே படுத்தக்கூடும். கடந்தகாலத்தைப் பற்றி எவ்வளவு சிந்தித்து திரும்பிப் பார்க்கிறேனோ அவ்வளவு தெளிவாக எனது வரம்புகளை நான் உணர்கின்றேன்.

நான் அடைய விழைவதும் இந்த முப்பது ஆண்டு களாக நான் உழைத்தும், ஏங்கியும் வருவதும் எல்லாம் என்னை யான் உணர்வதற்கே ஆகும். அதாவது, கடவுளை நேருக்குநேரே காணுதல், மோக்ஷம் பெறுதல் ஆகும். நான் வாழ்வது, நடமாடுவது, ஊன் தரித்திருப்பது எல்லாம், இக் குறிக்கோளை நாடியேயாகும். பேச்சு, எழுத்து என்ற வகையில் நான் செய்வது அனைத்தும், அரசியல் துறையில் எனது செயலாற்றல்கள் அனைத்தும் இந்த லட்சியத்தை நோக்கியே ஆற்றப் பெறுகின்றன. ஆனால் ஒருவருக்கு முடிந்தது, எல்லாருக்கும் இயலும் என்று நெடுகிலும் நான் நம்பி வந்திருக்கிறபடியால், எனது சோதனைகள் மூடிய அறையில் இரகசியமாக நிகழ்த்தப்படாமல், திறந்தவெளியில் பகிரங்கமாகவே நிகழ்த்தப் பட்டவைகளாகும். ஆனால், இதனால் இதனுடைய ஆன்மீக மதிப்புக் குறைவதாக நான் கருதுவதற்கு இல்லை. ஒருவருக்கும், அவரைப் படைத்த கடவுளுக்கும் மட்டுமே தெரியக்கூடியவையான சில உள. அவை தெளிவாகப் பிறருக்குச் சொல்லுதற்கு அரியன. நான் சொல்லப்போகும் சோதனைகள் அத்தகையன அல்ல. ஆனால் அவை பாரமார்த்திகத் தன்மையன அல்லது நன்னெறிக்குரியன; ஏனெனில் சமயத்தின் சாரம் நன்னெறியேயாகும்.

குழந்தைகளும்கூட வயதான மக்கள் அளவு அறிந்து கொள்ளக் கூடியனவாய் உள்ள சமய விஷயங்களே இக்கதையில் சேர்க்கப்படும்.

காய்தல் உவத்தல் இன்றிப் பணிவுடைமைப் பான்மையோடு இவைகளை நான் கூறக்கூடுமானால், ஏனைய பல சோதனையாளர்களும் தங்களுடைய முன்னேற்றப் பயணத்திற்கு உரிய சாதகங்களை ஆங்குக் காண்பர். இச்சோதனைகள் பரிபூரணத்துவ நிலை பெற்றவை என்று நான் சிறிதும் உரிமை கொண்டாடுவேன் அல்லன். விஞ்ஞானி ஒருவன், மிகவும் திருத்த

மாகவும், முன்சிந்தனையோடும், நுட்பமாகவும், தனது சோதனைகளை நடத்தினாலும், தனது முடிவுகள் இறுதியானவை என்று உரிமை கொண்டாடாது, அவைகளைப் பற்றித் திறந்த மனப்பான்மையோடு இருப்பான். இந்த விஞ்ஞானியின் அளவே நானும் உரிமை கொண்டாடுகின்றேன். என் உள்ளத்தை நான் ஆழ்ந்து சிந்தனைக்குள்ளாக்கி உள்ளேன்; ஆழ ஆழத் துருவி உள்ளேன்; நன்கு சோதித்து ஒவ்வொரு மனோதத்துவ நிலையையும் விண்டு ஆய்ந்துள்ளேன். என்றாலும், எனது முடிவுகளுக்கு எத்தகைய இறுதித் தன்மையும், பிழையிலாமையும் கொண்டாடும் உரிமையிலிருந்து மிக விலகி நிற்கின்றேன். ஒரு உரிமை மட்டும் நான் கொண்டாடுவேன்: அது இதுதான்: என் அளவில் அவை முழுமையும் சரியாகவே தோன்றுகின்றன; தற்போதையக் காலத்திற்கு இறுதியானவைகளாகவே தோன்றுகின்றன. அப்படி இல்லாவிட்டால், அவைகளை அடிப்படையாகக் கொண்டு, எச்செயலும் நான் செய்யமுடியாது. ஆனால் ஒவ்வொரு அடியிலும் கொள்ளுவதா, தள்ளுவதா என்ற முறையினைக் கையாண்டு, அதற்கு ஏற்றாற் போலவே நடந்து வந்திருக்கிறேன். எனது செயல்கள், எனது அறிவையும் உள்ளத்தையும் திருப்திசெய்து வரும்வரை எனது முதல் முடிவுகளை உறுதியாக கடைப்பிடித்துக் கொள்ளவே வேண்டும்.

சொல்லப்பெறும் சோதனைகளை உதாரணங்களாகவே கொள்ள வேண்டும். அவற்றை உறுதுணையாகக் கொண்டு, ஒவ்வொருவரும் தங்கள் மனப்பான்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தங்களுடைய சொந்தச் சோதனைகளை நடத்தலாம். இவ் உதாரணங்கள் அந்தக் குறுகிய அளவு உண்மையில் பயன்படும் என்று நம்புகின்றேன்; ஏனெனில் சொல்லவேண்டிய விரஸமான விஷயம் எதனையும், நான் மறைக்கவோ குறைக்கவோ போவதில்லை. எனது பிழைகளையும் தவறுகளையும்

எனது வாசகர்களுக்கு முழுதும் சொல்லவே விரும்புகின்றேன். சத்தியாகிரக சாஸ்திரத்தின் சோதனைகளை விவரிப்பதே எனது நோக்கம் ஆகும்; நான் எவ்வளவு நல்லவன் என்று சொல்லுவதற்கு அல்ல. என்னையே நான் சீர்தூக்கும்போது, உண்மையைப் போல் கடுமையாக இருக்க முயல்வேன்; ஏனையோரும் அவ்வாறு இருக்க விரும்புகின்றேன்.

ஆசிரமம்—சபர்மதி
நவம்பர், 26—1925.

எம். கே. காந்தி

பாகம் I

குழந்தைப் பருவமும் இளமையும்

1

பிறப்பும் பெற்றோரும்

என் பாட்டனாரான, ஒடாகாந்தி என்று அழைக்கப் பட்ட உத்தமசந்த் காந்தி, கொள்கை உடையவராக இருந்திருக்க வேண்டும். போர்ப்பந்தரில் அவர் திவானாக இருந்தார். ஆனால் அரசியல் சூழ்ச்சிகள் அவர் போர்பந்தரிலிருந்து சென்று ஜுனகாட்டில் அடைக்கலம் புகும்படி செய்தன. ஆங்கு, அந்த நவாபை இடது கையால் சலாம் செய்தார். இந்த மரியாதைக் குறையைக் கண்ட ஒருவர் இவரிடம் முகாந் திரம் கேட்டபோது, அவர் கீழ்வருமாறு மறுமொழி கொடுத்தார்: "எனது வலது கை ஏற்கெனவே போர்பந்தருக்கு வழங்கப்பட்டு உள்ளது"—என்றார்.

ஒடாகாந்தி, முதல் மனைவியை இழந்த பின்னர், இரண்டாம் முறை மணம் செய்து கொண்டார். அவருக்கு முதல் மனைவியின் மூலம் நான்கு ஆண்களும், இரண்டாவது மனைவி மூலம் இரண்டு ஆண்களும் பிறந் தனர். இந்த ஆறு சோதரரில், ஐந்தாவதவரே, காபா காந்தி என்று அழைக்கப்படும் கரம்சந்த் காந்தி; ஆறாவதவர் துளசிதாஸ் காந்தி. இந்த இரு சகோதரர் களும், ஒருவருக்கு அடுத்தபடி மற்றொருவராக போர் பந்தர் பிரதம அமைச்சராக இருந்தனர். காபாகாந்தி என்பவர் எனது தந்தை ஆவார்.

காபாகாந்தி, நான்கு முறை மணம் செய்தார்; ஒவ்வொரு தரமும், மனைவி மரித்த பின்னரே மறு மணம் செய்தார். அவரது கடைசி மனைவி புட்லிபாய் ஒரு பெண்ணும், மூன்று ஆணும் பெற்றெடுத்தாள். நான் அந்த ஆண்மக்களில், எல்லோருக்கும் இளையவன்.

என் தந்தை குல அபிமானம் உள்ளவர்; சத்திய சந்தன், தைரியசாலி, தயாளமுள்ளவர்; ஆனால் முன் கோபி. அந்த சமஸ்தானத்திடம் அவர் கொண்டிருந்த விசுவாசம் எல்லோரும் நன்கு அறிந்தது. அவருடைய தலைவரான ராஜகோட்டைத் தாகூர் சாஹேப்பைப் பற்றி, ஒரு உதவி அரசியல் அதிகாரி இழிவாகப் பேசியதை இவர் எதிர்த்து நின்றார். அவ் அதிகாரி சினந்தார்; காபாகாந்தியை மன்னிப்புக் கோருமாறு சொன்னார். இதனை இவர் மறுக்கவே, சில மணி நேரம் இவர் காவலில் வைக்கப்பட்டார். காபாகாந்தி பிடிவாதமாக இருப்பதைக் கண்ட அவ் அதிகாரி, அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவு இட்டார்.

என் தந்தைக்குப் பணம் சேகரிக்கவேண்டும் என்ற பேராசை கிடையாது. எனவே அவர் எங்களுக்குச் சொத்து ஒன்றும் வைத்துப் போகவில்லை.

அவருக்கு அனுபவத்தைத் தவிர வேறு படிப்புக் கிடையாது. அவர் குஜராத்தி ஐந்தாவது வகுப்புவரை படித்ததாகச் சொல்லப்படலாம்; சரித்திரம், பூகோளம் பற்றி ஒன்றும் தெரியாது. மிகவும் சிக்கலான பிரச்னை களில் தீர்வு காண்பதிலும், நூற்றுக் கணக்கான பேர் களைச் சமாளித்துகொண்டு போவதிலும், உலகக் காரியங் களில் அவருக்கு உள்ள நிரம்பிய அனுபவம் அவருக்குப் பேருதவியாய் இருந்தது. சமயப் பயிற்சி அவருக்கு மிகக் குறைவு. ஆனால் அடிக்கடி ஆலயங்களுக்குச் செல்லுவதாலும், சமயச் சொற்பொழிவுகளைக் கேட்ப தாலும், அநேக இந்துக்களுக்குக் கிட்டுவதாகிய ஒரு விதச் சமயப் பண்பாடு அவருக்கு உண்டு. படித்த

குடும்ப அந்தண நண்பர் ஒருவரின் தூண்டுகோலின் பேரில், அவருடைய கடைசி நாட்களில் கீதை படிக்கத் தொடங்கினர் ; தொழுகையின்போது, சில பாக்களை அவர் உரக்க ஒப்புவித்து வருவது உண்டு.

எனது அன்னையாரைப் பற்றி நான் நினைக்கும் போது அவருடைய தவச்சீலமே எனக்குத் தோற்றம் அளிக்கிறது. அவர் சமயத்தில் ஆழ்ந்த பற்று உள்ள வர். அவர் தினசரி பிரார்த்தனை செய்யாமல் உணவு அருந்த நினைக்கமாட்டார். வைணவ ஆலயத்துக்குப் போவது அவருடைய தினப்படிக் கடமைகளில் ஒன்று கும். என்னுடைய நினைவு செல்லும் அளவும், சதுர்மாச[1] விரதத்தை அவர் யாண்டும் தவறியதாக எனக்கு நினைவு இல்லை. மிகக் கஷ்டமான விரதங்களை எடுத்துக் கொள்ளுவார் ; தயங்காமல் அவற்றை நிறைவேற்றியும் வைப்பார். அவைகளை நெகிழ விடுவதற்கு நோய் அவருக்கு ஒரு காரணம் ஆகாது. சந்திராயன விரதத்தை அனுஷ்டித்து வரும் ஒரு சமயம் அவர் நோய்வாய்ப் பட்டிருந்தது என் நினைவுக்கு வருகிறது. ஆனல் அவ் விரதத்தைக் கடைப்பிடிப்பதை அந்நோய் தடைசெய்ய அவர் இடம் கொடுத்தாரல்லர். தொடர்ந்தார்ப்போல், இரண்டு மூன்று பட்டினிகள் அவருக்கு ஒன்றும் பிரமாதம் இல்லை. சதுர்மாச காலத்தில் ஒரு நாளைக்கு ஒரே உணவு அவருக்கு வழக்கம். அத்தோடு அமையாமல் ஒரு சதுர்மாசத்தில், ஒன்றுவிட்டு ஒரு நாள் பட்டினியையும் மேற்கொண்டார். இன்னொரு சதுர் மாசத்தில், சூரியனைக் காணுது உணவு உண்ணுவது இல்லை என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார். அந்த நாட்களில் குழந்தைகளான நாங்கள், சூரியன் தோன்றியதும் தாயாருக்கு அறிவிப்பதற்காக வானத்தை

---

[1] சதுர்மாசம் என்ருல் நான்கு மாசங்கள் என்று பொருள். மாரிகாலம் நான்குமாதங்களில் ஒருவேளை உணவு அருந்தியும், உணவு அருந்தாமலும் விரதம் இருப்பது.

உற்று நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருப்போம். மாரிகால உச்சநிலையில் சூரியன் தன் திருமுகத்தை எளிதே காட்ட வாரான் என்பது ஒவ்வொருவரும் அறிந்ததே. சூரியன் தோன்றியதும் நாங்கள் விரைந்தோடித் தாயாருக்கு அறிவித்த நாட்களும் என் நினைவுக்கு வருகின்றன. தாயாரும் சூரியனைத் தன் கண்களால் காண, விரைந்து வருவார். ஆனால், அதற்குள்ளாக ஓடும் சூரியன் மறைந்து விடுவான்; தாயாரையும் உணவு உண்ணாமல் செய்திடுவான். தாயாரும் மலர்ச்சியோடு "அதனால் பரவா இல்லை. இன்று நான் உண்ண ஆண்டவன் விரும்பவில்லை போலும்!" என்று சொல்லிவிட்டு தன் வழக்கமான காரியங்களைப் பார்க்கச் சென்றிடுவார்.

என் தாயாருக்கு ஆழ்ந்த இயற்கை அறிவு உண்டு. அரசாங்கக் காரியங்கள் எல்லாவற்றையும் பற்றி அவர் அறிந்திருந்தார். அவருடைய அறிவைப் பற்றி இராஜ குடும்பத்துப் பெண்டிருக்குப் பெருமதிப்பு உண்டு. குழந்தை என்ற சலுகையை உபயோகித்து, நான் அடிக்கடி அவரோடு போவேன்—தாகூர் சாஹேபின் விதவைத் தாயாரோடு என் தாயார் நிகழ்த்திய சாரமான விவாதங்கள் பல இன்னும் எனக்கு நினைவு இருக்கின்றன.

இனைய பெற்றோருக்கு சுதாம்பூரி என்று அழைக்கப்படும் போர்பந்தரில் 1869-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி நான் பிறந்தேன்.

2

பள்ளியில்

எனது குழந்தைப் பருவத்தைப் போர்பந்தரில் கழித்தேன். என்னைப் பள்ளியில் வைத்தது நினைவு இருக்கிறது. பெருக்கல் வாய்ப்பாட்டைக் கொஞ்சம் சிரமத்தோடேயே படித்தேன். ஏனையப் பையன்களோடு

சேர்ந்துகொண்டு எங்கள் ஆசிரியரைப் பலவிதமாக வையப் பயின்றதைத்தவிர, அந்த நாட்களைப் பற்றி வேறு யாதொன்றும் என் நினைவில் இல்லை என்பதில் இருந்தே, எனது அறிவு மந்தமாகவும், எனது நினைவுச் சக்தி குறைவாகவும் இருந்திருக்கவேண்டும் என்பதை யூகிக்கச்செய்கிறது.

என் தந்தை, ராஜஸ்தானிக அரசரவையில் ஒரு உறுப்பினராவதற்காக, போர்பந்தரை விட்டு ராஜ கோட்டைக்குச் செல்லும்போது, எனக்குச் சுமார் ஏழு வயதாய் இருக்கும். அங்கு ஒரு தொடக்கப்பள்ளியில் சேர்ந்தேன். என்னைப் பயிற்றுவித்த ஆசிரியர்களின் பெயர்கள், அவர்களைப்பற்றிய ஏனைய விவரங்கள் உள் பட, அந்த நாட்களைப் பற்றிய நினைவு எனக்கு நன்றாக இருக்கிறது. போர்பந்தரைப் போலவே, இங்கும் எனது படிப்பைப் பற்றிக் குறிப்பிடற்கு உரியது ஒன்றும் இல்லை. நான் ஒரு சாதாரண மாணவனாகவே இருந் திருக்கவேண்டும். அப்பள்ளியிலிருந்து, நகர்ச் சுற்றுப் புரமுள்ள பள்ளிக்குச் சென்று, அங்கிருந்து உயர்தரப் பள்ளிக்குச் சென்றேன். அதுபோழ்து எனக்கு வயது பன்னிரண்டு. இந்தக் குறுகிய காலத்தில், எனது பள்ளிச் சகாக்களிடமாவது, ஆசிரியர்களிடமாவது, ஒரு பொழுதும் ஒரு பொய்கூடச் சொன்னதாக நினைவு கிடையாது. நான் மிகவும் கூச்சம் உள்ளவன் ; எனவே எல்லாச் சேர்க்கையையும் தவிர்த்தேன். எனது புத்தகங் களும் பாடங்களுமே எனக்கு உற்ற தோழர்களாவார்கள். கடிகாரம், குறிப்பிட்ட நேரத்தில் அடிக்கும்போது பள்ளி யில் இருக்கவும், பள்ளி முடிந்தஉடனே வீட்டுக்கு ஓடு வதும்—இவையே எனது தினப்படிப் பழக்கம். எவ ரோடும் பேச மனம் விரும்பாதபடியால், வீட்டிற்கு உண்மையாகவே ஓட்டம் பிடிப்பேன். யாரேனும் என்னைக் கேலி செய்வார்களோ என்று அஞ்சியதும் உண்டு.

உயர்நிலைப் பள்ளியில் எனது முதல் ஆண்டுத் தேர்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி ஈண்டுப் பதிவு செய்வதற்கு உரியது. கல்வித்துறைப் பரிசோதகரான திரு. கில்ஸ், பள்ளிப் பார்வைக்காக வந்திருந்தார். எழுத்துக் கூட்டல் அப்பியாசத்திற்காக, எங்களுக்கு ஐந்து சொற்கள் கொடுத்திருந்தார். அவற்றில் ஒரு சொல் 'கெட்டில்' (kettle) என்பது. நான் தவருக எழுத்துக் கூட்டி இருந்தேன். ஆசிரியர் தனது பாதரட்சையின் முனையால் என்னைத் தூண்ட முற்பட்டார். ஆனல் அதற்கு நான் இணங்கவில்லை. எனக்கு அடுத்துள்ள பையனுடைய கரும்பலகையில் உள்ள எழுத்தைப் பார்த்து என்னைக் 'காப்பி' அடிக்க விரும்பினர் என்பதைத் தெரிந்துகொள்வது எனக்கு அப்பாற்பட்டதாயிற்று. ஏனெனில், பையன்கள் பிறரைப் பார்த்து எழுதுவதைத் தடுப்பதற்காகவே ஆசிரியர் அங்கு மேற்பார்வையாளராக இருக்கிருர் என்று நினைத்தேன். முடிவு: என்னைத் தவிர எல்லாப் பையன்களும் ஒவ்வொரு சொல்லையும் சரியாகவே எழுத்துக் கூட்டி இருந்தார்கள். நான் ஒருவனே முட்டாள் ஆனேன். ஆசிரியர் பின்னர் எனது இம்மடமையை அறிவுறுத்த முயன்ருர்; ஆனல் அது பயனற்றுப் போயிற்று. 'காப்பி' அடிக்கும் கலையை நான் ஒருபொழுதும் கற்க முடியவே இல்லை.

ஆனல் இந்த நிகழ்ச்சி, ஆசிரியரிடம் எனக்கு உள்ள மரியாதையை ஒரு சிறிதும் குறைக்க இல்லை. பெரியோர் குறைகளை இயல்பாகவே என் கண்கள் காண்பதில்லை. இவ் ஆசிரியரின் பல குறைகளை நான் பின்னர் அறியலானேன்; ஆனல் எனக்கு அவரிடமுள்ள மதிப்பு என்றும் குறையாது ஒரேவிதமாகவே இருந்துவந்தது.

அதே காலத்தைச் சேர்ந்த இன்னும் இரு நிகழ்ச்சிகள் எப்பொழுதும் என் நினைவை விட்டு அகலாது ஒட்டிக்கொண்டு இருக்கின்றன.

பள்ளிப் புத்தகங்களைத் தவிற, வேறு படிப்பதில் எனக்குப் பிடித்தம் கிடையாது. தினப்படிப் பாடங்களை முடித்துத் தீரவேண்டும். ஆசிரியரால் கண்டிக்கப் படுவதைப் போலவே, ஆசிரியரை ஏமாற்றுவதையும் நான் வெறுத்தேன். எனவே, அடிக்கடி, என் சிந்தை அவற்றினில் செல்லாமலே பாடங்களை முடிப்பேன்.

எனவே, பள்ளிப் பாடங்களையே சரிவரச் செய்ய முடியாதபோது, வேறு பிறபடிப்பு என்ற கேள்விக்கே இடமில்லையே. ஆனால், எப்படியோ, என் தந்தையார் வாங்கி வைத்திருந்த ஒரு நூல் என் கண்களில் பட்டது. '<u>சிராவண பிதிர் பக்தி நாடகம்</u>' என்பது அது. அது சிராவணரின் பெற்றோர் பக்தியைப் பற்றிய ஒரு நாடகம். அதனை ஆழ்ந்த அக்கறையோடு படித்தேன். சற்றேறக் குறைய அதே சமயத்தில் நாடோடிப் படம் காட்டுவோர் எங்கள் ஊருக்கு வந்தார்கள். எனக்குக் காட்டப்பட்ட படங்களில் ஒன்று, சிராவணர், தனது குருட்டுப் பெற்றோரைத் தன் தோளில் கட்டிய தொட்டிலில் தூக்கிக் கொண்டு யாத்திரை செல்வதானது, ஆகும். அந்த நூலும் அந்தப் படமும் என் உள்ளத்தில் அழிக்கொணாதே ஒரு பதிவை ஏற்படுத்தியது. "<u>நீ பார்த்துக் கைகொள்ள வேண்டிய உதாரணம் இதோ பார்!</u>" என்று எனக்கு உள்ளே நான் சொல்லிக்கொண்டேன். சிராவணரின் மரணத்தால், அவர் பெற்றோர்களின் வேதனை நிறைந்த பிரலாபம் இன்னும் என் நினைவில் அப்படியே புதியதாய் இருக்கிறது. உள்ளத்தை உருக்கும் அந்தமெட்டு என்னை உணர்ச்சி வயப்படுத்தியது. எனக்கு என் தந்தை வாங்கித் தந்திருந்த ஊது குழலில் அதை நான் வாசித்தேன்.

இதைப்போன்ற, இன்னொரு நாடகத்தைச் சார்ந்த, பிறிதொரு நிகழ்ச்சியும் உளது. சற்றேறக் குறைய இதே சமயத்தில், ஒரு நாடகக் குழுவினர் நடத்திய ஒரு நாடகத்தைப் பார்ப்பதற்கு என் தந்தையின் அனுமதியைப்

பெற்றிருந்தேன். இந்த நாடகம்,—' ஹரிச்சந்திரா— என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அதனைப் பலமுறை பார்ப்பதில் நான் சலித்ததே இல்லை. ஆனால் எத்தனைதரம்தான் நான் பார்ப்பதற்கு அனுமதி கிடைக்கும்? அது என் நெஞ்சகத்தை விட்டகலவில்லை. எண்ணுக்கு அடங்காத் தடவை, எனக்குள்ளேயே அரிச்சந்திரனாக நான் நடித்திக்கவேண்டும். "எல்லோரும் ஏன் அரிச்சந்திரனைப்போல் சத்தியசீலர்களாக இருக்கக் கூடாது? என்ற கேள்வியையே நான் இரவும் பகலும் என்னிடமே கேட்கலுற்றேன். உண்மையைக் கடைப்பிடித்து, அரிச்சந்திரனைப்போல் எல்லா இன்னல்களுக்கும் உட்படவேண்டும் என்பதே எனக்கு அது தூண்டிய ஒரு குறிக்கோளாகும்.

அரிச்சந்திரன் கதையை நான் உண்மையென நம்பினேன். அந்த நினைவு எல்லாம், என்னை அடிக்கடி அழும்படி செய்தது. அரிச்சந்திரன் ஒரு சரித்திர புருடராக இருந்திருக்க முடியாது என்று இன்று என் பகுத்தறிவு கூறுகிறது. எனினும், அரிச்சந்திரனும், சிராவணரும் என்னளவில், உயிருள்ள மெய்ப்பொருள்களேயாவர். அந்த நாடகங்களை நான் மீண்டும் இன்று படிக்க நேர்ந்தாலும், அவைகள் என்னை முன்போலவே ஆட்கொள்ளும் என்பது உறுதியே.

உயர்நிலைப் பள்ளியில் நான் உதவாக்கரையாகக் கருதப்படவில்லை. எப்பொழுதும் எனது ஆசிரியர்களின் அன்பினை அடைந்து வந்தேன். ஒவ்வொரு ஆண்டும், பெற்றோர்களுக்கு முன்னேற்ற ஒழுக்கச் சான்று இதழ்கள் அனுப்புவது வழக்கம். ஒருகாலும் எனக்கு மோசமான சான்றிதழ் கிடைத்ததில்லை. இரண்டாவது வகுப்புத் தேறியபின்னர், நான் பரிசுகள்கூடப் பெற்றதுண்டு. ஐந்தாவது, ஆறுவது வகுப்புகளில், முறையே நான்கு, பத்து ரூபாய்கள் இலவசச் சம்பளம் பெற்றேன்; இந்தச் சாதனைக்கு எனது தகுதியைவிட

எனது நற்பேற்றிற்கே நான் நன்றி நல்கவேண்டும். ஏனெனில், அந்த இலவச சம்பளப் போட்டி, எல்லாருக்கும் அல்லாது, கத்தியவாட்டின் சொராத் பகுதியில் இருந்துவரும் மாணவர்களுக்கு மட்டுமே ஆகும். அந்தக் காலத்தில், நாற்பதிலிருந்து ஐம்பது வரை மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில், சோரத்திலிருந்து வரும் மாணவர்கள் பலர் இலர்.

எனது ஆற்றலைப் பற்றி நான் எவ்விதப் பெரிய மதிப்பும் கொண்டதில்லை என்பதே என் சொந்த நினைவு ஆகும். பரிசுகளும், இலவசச்சம்பளமும் பெற்ற போதெல்லாம், நான் ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால் என் ஒழுக்கத்தை நான் மிகக் கவனமாகப் பாதுகாத்து வந்தேன். மிகச் சிறிய களங்கம் கூட, என் கண்களிலிருந்து கண்ணீரைக் கொட்டிவிடும். ஆசிரியருடைய வசவைப் பெறுதற்கு உரியவனால் அல்லது ஆசிரியருக்கு அவ்வாறு தோன்றினால், என்னால் அது தாங்கமுடியாது. ஒரு சமயம் நான் உடல் தண்டனையைப் பெற்றதாக நினைவு. தண்டனையை நான் அவ்வளவாக பொருட் படுத்தவில்லை. ஆனால் அதனைப் பெறுதற்கு உரியவனாகக் கருதப்பட்டதைப் பெரிதும் பொருட்படுத்தினேன். நான் இரங்கி அழுதேன். அது, நான் முதலாவதோ இரண்டாவதோ வகுப்பில் இருக்கும்போது நடந்தது.

ஏழாவது வகுப்பில் இருக்கும்போது இதே மாதிரி வேறொரு நிகழ்ச்சி நடந்தது. தோராப்ஜி எதுல்ஜி ஜிமி என்பவர் அப்பொழுது தலைமை ஆசிரியர். அவர் மாணவர்களிடையே கட்டுப்பாடு செலுத்துபவர்; காரியங்களை ஒழுங்குறச் செய்பவர், நல்ல போதகர்; மேல் வகுப்பு மாணவர்களுக்கு, கிரிக்கெட்டையும், உடற் பயிற்சியையும் கட்டாயமாக ஏற்படுத்தினார். இவ் இரண்டையும் நான் வெறுத்தேன். கிரிக்கெட்டும், கால் பந்தும், கட்டாயமாக ஆக்கும்வரை, எந்த உடற் பயிற்சி

யிலும் நான் கலந்து கொண்டதே கிடையாது. இப்படி விலகி நிற்பதற்கு, உரிய காரணங்களில் எனது கூச்சம் ஒன்ருகும். இது தவறு என்பதை இப்பொழுது நான் அறிகிறேன். உடற் பயிற்சிக்கும், கல்விக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்ற தவருன எண்ணம் அப்பொழுது எனக்கு இருந்தது. இன்று, உள்ளப் பயிற்சிக்கு உள்ள அளவு உடற்பயிற்சிக்கும் படிப்புப் பட்டியலில் இடம் இருக்கவேண்டும் என்று உணர்ந்துள்ளேன். உடற் பயிற்சித் திட்டத்தைத் தவிர்த்தமையால், எனக்கு ஒன்றும் தீங்கு ஏற்படவில்லை என்பதை மீண்டுக் குறிக்கின்றேன். அதற்குக் காரணம், ஆகாய வெளியில் காற்றில் நீண்ட உலாவுதலின் நன்மைகளைப் பற்றி நூல்களில் படித்துள்ளேன். அந்த போதனையை மதித்து, நீண்ட தூரம் உலாவும் வழக்கத்தைக் கையாண்டேன். அஃது இன்றும் என்னுடு வந்துள்ளது. இந்த நடைப் பழக்கம் எனக்குச் சுமாரான வலுவான உடற்கட்டைத் தந்துள்ளது.

உடற் பயிற்சியை நான் வெறுத்ததற்குக் காரணம், என் தந்தைக்கு நான் ஒரு தாதி ஆக பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பமேயாகும். பள்ளி மூடிய உடனே, வீட்டிற்கு விரைந்து வந்து அவருக்குச் சேவை செய்யத் தொடங்குவேன். கட்டாய உடற்பயிற்சி இந்தச் சேவைக்குக் குறுக்கே நின்றது. என் தந்தைக்குச் சேவை செய்வதற்கு வசதியாக, கட்டாயத் தேகப் பயிற்சியிலிருந்து எனக்கு விதிவிலக்கு அளிக்குமாறு திரு. ஜிமியை வேண்டினேன். ஆனல் அவர் எனக்குச் செவிசாய்க்கவில்லை. ஒரு சனிக்கிழமை; காலையில்தான் பள்ளி. பிற்பகல் 4 மணிக்கு வீட்டிலிருந்து தேகப் பயிற்சிக்குப் பள்ளி செல்ல வேண்டும். என்னிடம் கடிகாரம் இல்லை. மேகங்கள் என்னை ஏமாற்றின. நான் பள்ளி சேரு முன்னர், பையன்கள் அனைவரும் பள்ளியிலிருந்து போய்விட்டனர். மறுநாள்,

திரு. ஜிமி, ஆஜர் குறிப்பைப் பார்த்து, நான் ஆஜர் இல்லை என்ற குறியைக் கண்டார். நான் வராமைக்குக் காரணம் கேட்கவே, நிகழ்ந்ததைச் சொன்னேன். அவர் என்னை நம்ப மறுத்தார்; ஒரு அணுவோ, இரண்டு அணுவோ (எவ்வளவு என்று இப்பொழுது நினைவு இல்லை) அபராதம் கட்டுமாறு உத்தரவு இட்டார்.

பொய் புகன்றதாகத் தண்டிக்கப்பட்டேன். இது என்னை ஆழமாகத் துன்புறுத்தியது. நான் நிரபராதி என்பதை எப்படி ருசுச் செய்வது? வழி இல்லை. ஆழ்ந்த மனோவேதனையால் அலறி அழுதேன்: ஒரு சத்தியவாதி, கவனம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பதைக் கண்டேன். பள்ளியில் என் கவன மின்மைக்கு இதுவே, முதலாவதும் கடைசித் தடவையுமாகும். முடிவில் அபராதத்தைத் தள்ளுபடி செய்யுமாறு செய்ததாக மங்கலான ஒரு நினைவு. பள்ளி முடிந்ததும் நான் வீட்டில் இருக்கவேண்டும் என்று என் தந்தையே தலைமை ஆசிரியருக்கு எழுதினபடியால், தேகப்பயிற்சியிலிருந்து விதிவிலக்கு எனக்குக் கிடைத்தது.

இவ்வாறு தேகப்பயிற்சியைக் கைவிட்டபடியால், எனக்கு ஒன்றும் கெட்டுப்போகா விட்டாலும், இன்னொரு விஷயத்தைக் கவனியாததினால் ஏற்படலான தண்டனையை இன்னும் நான் அனுபவித்தே வருகிறேன். கல்விக்கு நல்ல கையெழுத்து ஒரு அவசியமான அம்சம் இல்லை என்ற எண்ணம் அப்பொழுது எங்கிருந்து பெற்றேனோ தெரியவில்லை!

எனது பள்ளி நாட்களின் பழைய நினைவுகளில், இன்னும் இரண்டு குறித்தற்கு உரியன. எனது திருமணத்தால், ஒரு ஆண்டை நான் இழந்தேன். இந்த நஷ்டத்தை, நான் ஒரு வகுப்புத்தாண்டிச் சென்று ஈடு செய்யுமாறு என் ஆசிரியர் சொன்னார், இது, சாதாரணமாக, நன்றாக உழைத்துப் படிக்கும் மாணவர்களுக்கு

வழங்கும் சலுகையாகும். ஆகையால் மூன்ருவது வகுப்பில் நான் ஆறு மாதங்கள் தான் இருந்தேன். தேர்வுக்குப் பின் நாலாவது வகுப்புக்கு மாற்றப்பட்டேன். கோடை விடுமுறை தொடர்ந்தது. நாலாவது வகுப்பிலிருந்து அநேகமாக எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்திலேயே போதிக்கப்பட்டன. அது எனக்குக் கண்ணைக் கட்டிக்காட்டில் விட்டமாதிரி இருந்தது. க்ஷேத்திர கணிதம் ஒரு புதிய பாடம்; அதில் எனக்கு வல்லமை கிடையாது. போதனை மொழியான ஆங்கிலம் வேறு எனக்கு இன்னும் அதிகமான சிரமத்தைத் தந்தது. ஆசிரியர் வெகு நன்ருகத்தான் பாடத்தைச் சொல்லித் தந்தார்; ஆனல் நான் அவர் சொல்லியதை அறிந்து கொள்ள முடிய வில்லை. இரண்டு ஆண்டுப் பாடங்களை ஒரே ஆண்டில் திணித்தது மிகுந்த பேராசையானது என்று எண்ணி, அடிக்கடி மனமுடைந்து மீண்டும் மூன்ருவது வகுப்புக் குப் போக நினைத்தேன். ஆனல், இது எனக்கு மட்டு மல்ல, என் ஆசிரியருக்கும் இழிவைத்தருவதாகும். ஏனெனில், என் உழைப்பை நம்பி, ஆசிரியர் என் மேல் வகுப்புத் தேர்வுக்குச் சிபாரிசு செய்துள்ளார். எனவே, இந்த இரட்டை இழிவு, அந்த வகுப்பிலேயே என்னை வைத்தது. மிகுந்த பிரயாசையுடன் ஈக்குலிட்டின் (Euclid:) பதின் மூன்ருவது சூத்திரத்துக்கு வந்த போது, அப்பாடத்தின் நனி எளிமை எனக்கு திடீரெனப் புலனுயிற்று. ஒருவருடைய அறிவு ஆற்றலை மட்டும் சாதாரணமாக உபயோகிக்க வேண்டிய ஒரு பாடம், கடினமானதாக இருக்க முடியாது. அதன் பின்னர் க்ஷேத்திர கணிதம் எனக்கு எளிதாகவும், இனிதாகவும் இருந்தது.

சமஸ்கிருதம் இதனினும் கடினமான காரியமாய் இருந்தது. க்ஷேத்திர கணிதத்தில் மனப்பாடம் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. ஆனல், சமஸ்கிருதத்தில் ஒவ்வொன்றையும் மனப்பாடம் பண்ண வேண்டும்

என்று கருதினேன். இந்தப் பாடமும் நாலாவது வகுப்பிலிருந்து தொடங்கப்பட்டது. ஆருவது வகுப்பு வந்ததும், தைரியம் இழந்தேன். ஆசிரியர் வேலே வாங்குவதில் சமர்த்தர்; பையன்களே வலுக்கட்டாயப்படுத்துவதில் ஆசை உள்ளவர். சமஸ்கிருத, பாரசீக மொழிகளின் ஆசிரியர்களுக்குள் ஒருவிதப் போட்டி நடைபெற்று வந்தது. பாரசீக மொழி ஆசிரியர் சிறிது இளக்காரம் உடையவர். பாரசீக மொழி எளிதென்றும், பாரசீக மொழி ஆசிரியர் மிக நல்லவர், மாணவர்களுக்குக் இணக்கமாக இருப்பவர் என்றும், பையன்கள் அவர்களுக்குள் பேசிக்கொள்ளலாயினர். அந்த 'எளிமை' என்னேக் கவர்ந்தது; ஒரு நாள் பாரசீக மொழி வகுப்பில் உட்கார்ந்தேன். சமஸ்கிருத ஆசிரியர் வருத்தமுற்ருர். என்னே அவர் பக்கம் அழைத்து அவர் சொன்ஞர்: "நீ, ஒரு வைஷ்ணவத் தந்தையின் மகன் என்பதை எப்படி மறக்க முடியும்? உனது சமயத்தின் மொழியை நீ படிக்க வேண்டாமா? உனக்கு ஏதேனும் சிரமம் இருந்தால், என்னிடம் வருவதற்கு என்ன? எனது ஆற்றல் எட்டிய மட்டும், சமஸ்கிருதத்தை மாணவர்களாகிய உங்களுக்குப் போதிக்க விரும்புகின்றேன். நீ மேலே போகப்போக, உள்ளத்தை ஈர்க்கும் ரஸனேயான விஷயங்களே நீங்கள் காண்பீர்கள். நீ தைரியம் இழக்கக் கூடாது. வா, மீண்டும் சமஸ்கிருத வகுப்பில் வந்து அமர்வாயாக!" என்ருர்.

இந்த அன்பு, என்னே நாணம் அடையச் செய்தது. கிருஷ்ணசங்கர் பாண்டியாவை, இன்று நன்றி உணர்ச்சியோடு அல்லாமல், நினேவுகூற முடியாது. அப்பொழுது நான் படித்த சிறிய அளவு சமஸ்கிருதம் படித்திரா விட்டால், நமது வேத நூல்களில் நான் அக்கறை எடுத்துக் கொள்ள மிகுந்த சிரமப்பட்டிருப்பேன். அம்மொழியில், எனக்கு இன்னும் அதிகமான ஆழ்ந்த அறிவு பெற முடியாமல் போயிற்றே என்று, நான்

மிகவும் வருந்துகிறேன். ஏனெனில், ஒவ்வொரு இந்து ஆணும், பெண்ணும் ஆழ்ந்த சமஸ்கிருத பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பதை, இப்பொழுது உணர்கிறேன்.

இந்தியாவில் உயர்தரக் கல்வி முறையில் தாய் மொழியோடு இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம், அரபு, ஆங்கிலம் ஆகியவைகள் இடம்பெற வேண்டும் என்பது என் இப்போதையக் கருத்து. இந்தப் பெரிய பட்டியலைப் பார்த்து யாரும் பயம் அடைய வேண்டாம். நமது கல்வி முறை ஒழுங்காக இருந்து, அன்னிய மொழி மூலமாகப் பாடங்களைப் படிக்கும் பாரத்திலிருந்து நமது பையன்கள் விடுவிக்கப்படுவார்களானால், இந்த எல்லா மொழிகளையும் பயில்வது சிரமமாக இருக்காது; பூரண இன்பமாகவே இருக்கும். ஒரு மொழியில் முறையான அறிவு பெற்றால் மற்ற மொழிகளின் அறிவை எளிதாகப் பெறலாம்.

3

திருமணம்

எனது திருமணம் பதின்மூன்றாவது வயதில் நடந்தது என்பதை இங்குப் பதிவு செய்ய வேண்டியது எனது வருத்தமான கடமையாகிறது. எனது பராமரிப்பில் உள்ள என்னைச் சூழ்ந்து நிற்கும் இளைஞர்களைப் பார்த்து, எனது திருமணத்தையும் நினைத்துப் பார்க்குங்கால், என்பால் நான் இரக்கம் கொள்வதோடு, என் கதியிலிருந்து அவர்கள் தப்பியதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இவ்வளவு படுமோசமான பால்ய மணத்திற்கு ஆதரவாக எவ்வித அறநெறிப்பட்ட வாதமும் நான் காணவில்லை. உடுத்துவதற்கு நல்ல ஆடைகளும், மேளதாளங்களும், திருமண ஊர்வலங்களும்,

அரிய விருந்துகளும், விளையாடுவதற்கு ஒரு புதிய பெண்ணும்—இவை தவிர இத் திருமணம் எனக்குப் பிறிதொரு பொருளும் தந்திலது. நாங்கள் இருவரும் மெள்ள ஒருவரை ஒருவர் அறியவும், சேர்ந்து தாராளமாகப் பேசிக்கொள்ளவும் ஆரம்பித்தோம். நாங்கள் ஒரே வயதினர். ஆனால், ஒரு கணவன் என்ற அதிகாரத்தை எடுத்துக்கொள்ள எனக்கு அதிக நாள் பிடிக்கவில்லை.

எனது மனைவியின் ஒழுக்கத்தைச் சந்தேகிக்க எனக்குக் கொஞ்சம்கூடக் காரணம் கிடையாது. ஆனால் சந்தேகம், காரணங்களுக்காகக் காத்திருப்பதில்லை. அவள் நடமாட்டத்தை நான் கண்காணித்து வரலானேன்; ஆதலால் என்னுடைய சம்மதம் இன்றி அவள் எங்கும் செல்ல முடியாது. இது, எங்களுக்குள் ஒரு கடுமையான சண்டைக்கு விதைகள் போடுவதாயிற்று. எனது தடை, அவளுக்கு அநேகமாக ஒரு விதமான சிறையாயிருந்தது. இதனைப் பொறுப்பதற்கான பெண் அல்ல கஸ்தூரிபா. தான் விரும்பியவாறு எங்கும் எப்பொழுதும் போவதைத் திட்டமாகக் கொண்டாள். நான் போட்ட அதிகத் தடை, அவள் இன்னும் அதிகமாகச் சுதந்திரம் எடுத்துக் கொள்வதிலும், நான் மேன்மேலும் அதிகமாற்சரியம் கொள்வதிலுமே கொண்டு விட்டது. மணமான குழந்தைகளான நாங்கள், ஒருவரோடு ஒருவர் பேச மறுப்பதே தினசரி நிகழ்ச்சியாகி விட்டது. எனது தடைகளோடு இவ்வாறு சுதந்திரம் எடுத்துக் கொண்டதில் கஸ்தூரிபா, மிகவும் நிரபராதியே என நினைக்கிறேன். கோவிலுக்குப் போவதையும், தனது நண்பர்களைக் காணச் செல்வதையும் தடை செய்வதைச் சூதுவாது அறியாத பெண் ஒருத்தி எப்படிச் சகிப்பாள்? அவள் மேல் தடை விதிக்க எனக்கு உரிமை உண்டு என்றால், அவளுக்கும் என் மீது அம்மாதிரி உரிமை கிடையாதா? இவை எல்லாம் இன்று எனக்குத் தெளி

வாய்த் தெரிகிறது. ஆனால், அச்சமயம், கணவன் என்ற அதிகாரத்தைச் செலுத்தியாக வேண்டுமே!

இதிலிருந்து எங்கள் வாழ்க்கை முழுவதும் ஒரே கசப்பானது என்று வாசகர்கள் கருதிவிட வேண்டாம். ஏனெனில், எனது கடுமைகள் எல்லாம் அன்பினை அடிப்படையாகக் கொண்டது. எனது மனைவியை ஒரு லக்ஷிய மனைவியாக்கவே விரும்பினேன். அவளை ஒரு தூய வாழ்க்கை வாழச் செய்யவும், நான் படித்ததை அவள் படிக்கவும், அவள் வாழ்வையும் சிந்தனையையும், என்-வாழ்வோடு ஒருமைப் படுத்தவும் வேண்டும் என்பதே என் ஆசை.

கஸ்தூரிபாவுக்கு இத்தகைய ஆசை இருந்ததோ, என்னமோ, நான் அறியேன்—அவள் எழுதப்படிக்கத் தெரியாதவள். எளிமை, சுயேச்சை விருப்பம், விடா முயற்சி, என்னோடு மட்டுமாவது மௌனியாக இருப்பது என்ற இவை எல்லாம் அவளுடைய இயல்பான குணங்கள். தனது அறியாமையைப் போக்கிக்கொள்ள அவள் ஆத்திரம் ஒன்றும் காட்டவில்லை. எனது படிப்புகள் கூட எப்பொழுதேனும் அவளை இத்தகைய முயற்சியில் ஈடுபடுமாறு தூண்டியதாக எனக்கு நினைவு இல்லை.

4

துன்பகரமான நட்பு

உயர்நிலைப் பள்ளியில் பல சமயங்களிலும் உள்ள எனது சில நண்பர்களில், இருவரை அன்னியோன்னியமானவர் என்று கூறலாம். இவற்றில் ஒன்று நீண்ட காலம் நீடித்திருக்கவில்லை. அந்த நண்பரை நான் கைவிடாவிட்டாலும், நான் மற்றவரோடு நட்புக் கொண்டதால், அவர் என்னைக் கைவிட்டார். ஆனால் இந்தப் பிந்திய நட்பு என் வாழ்க்கையில் ஒரு துன்பகர

மானது என்று கருதுகிறேன். அது நீண்ட காலம் நீடித்தது. ஒரு சீர்திருத்தவாதி என்ற முறையில், அந் நட்பை மேற்கொண்டேன்.

இந்தக் கூட்டாளி ஆரம்பத்தில் எனது மூத்த சகோதரரின் நண்பராய் இருந்தார். அவர்கள் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவருடைய குறைகளை நான் அறிவேன். ஆனாலும், அவரை நம்பிக்கை உள்ள ஒரு நண்பராகக் கருதினேன். எனது தாயார், மூத்த சகோதரர், எனது மனைவி ஆதியோர், நான் கெட்ட சகவாசத்தோடு இருப்பதாக என்னை எச்சரித்தார்கள். எனது மனைவியின் எச்சரிக்கைக்குச் செவி சாய்க்கமுடியாத அத்தனை கருவம் எனக்கு. ஆனால், என் தாயார், மூத்த சகோதரர், இவர்களின் கருத்துக்கு எதிராகப் போகத் துணியேன். இருந்தாலும், அவர்களிடம் இவ்வாறு எடுத்துரைத்தேன்: "நீங்கள் அவனுக்கு சொல்லுகிற குறைகள் அவனிடம் உண்டு என்பதறிவேன். ஆனால் அவனுடைய நற்குணங்கள் உங்களுக்குத் தெரியாது. அவன் என்னைத் தவறான வழிக்குச் செலுத்திவிட முடியாது. ஏனெனில் நான் அவனிடம் கொண்டுள்ள உறவு அவனைத் திருத்துவதற்காகவே ஏற்பட்டுள்ளது. அவன் தன் வழிகளைத் திருத்திக் கொள்வானானால், அவன் ஒரு சிறப்பான மனிதன் ஆவான் என்பது நிச்சயம். ஆதலால், என்பொருட்டு நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று உங்களை வேண்டுகின்றேன்," என்றேன்.

இது அவர்களைத் திருப்தி செய்தது என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவர்கள் என் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, என் வழியே என்னைப் போக விட்டு விட்டார்கள்.

பின்னர், நான் தவறாக எண்ணிவிட்டோம் என்பதைக் கண்டேன். தான் திருத்த நினைக்கும் ஒருவரோடு ஒரு சீர்திருத்தவாதி மிக நெருங்கிய நட்பு கொள்வது ஒவ்வாது. உண்மையான நட்பு, இவ்வுலகில் காண்ப

தற்கு அருமையான ஆன்மாக்களின் ஒரு ஒருமைப் பாடேயாகும். நட்பு, ஒத்த இயல்புகளுக்குள்தான், தகுதி உடையதாயும் நீடித்தும் இருக்கும். நண்பர்களில் ஒருவருடைய குணம் செயல் மற்றவருக்குப் படியவே செய்யும். எனவே, நட்பில் சீர்திருத்தத்திற்கு இடம் மிகக் குறைவு. ஏனைய பிறரோடு பகிர்ந்திட முடியாத மிக அன்னியோன்யமான நெருக்கம் எல்லாம் தவிர்க்க வேண்டும், என்பதே என் கருத்து. ஏனெனில் மனிதன் நற்குணங்களைவிட, தீய குணங்களையே விரைவில் பற்றிக் கொள்ளுகிறான். ஆண்டவனோடு நண்பனாக இருக்க விரும்புபவன், தனிமையாகவே இருக்க வேண்டும், அல்லது உலகம் முழுவதையும் தன் நண்பனாகக் கொள்ளவேண்டும். நான் கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால், ஒரு நெருங்கிய நட்பை வளர்க்க நான் மேற்கொண்ட முயற்சி, தோல்வியில் முடிந்தது.

இந்த நண்பரை நான் சந்தித்த காலத்தில் ராஜகோட்டையில் ஒரு சீர்திருத்த அலை பரவிக்கொண்டு இருந்தது. எங்கள் ஆசிரியர்களில் பலர் மறைவிலே, மதுவும், மாமிசமும் உண்ணுகிறார்கள் என்று அந் நண்பர் எனக்கு அறிவித்தார். அக்குழுவில் சேர்ந்துள்ளதாக, ராஜகோட்டையிலுள்ள நன்கு தெரிந்த பலருடைய பெயர்களையும் அவர் கூறினார். அவர்களுக்குள் சில உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் உண்டு என்றும் சொன்னார். இவற்றை எல்லாம் கேட்டு, நான் வியப்பும் வேதனையும் அடைந்தேன். நான் எனது நண்பரைக் காரணம் கேட்டேன். அவர் இவ்வாறு விளக்கினார்: "நாம் மாமிசம் உண்ணாதபடியால், பலம் குறைந்த மக்களாக இருக்கிறோம். ஆங்கிலேயர் மாமிசம் உண்ணுபவர்கள் ஆதலால் அவர்கள் நம்மை ஆளமுடிகிறது. நான் எவ்வளவு உடற்கட்டோடு இருக்கிறேன், எவ்வளவு பெரிய ஓட்டக்காரன் என்பது நீ அறிவாய். இதற்குக் காரணம் நான் புலால் உண்பதே. மாமிசம் உண்பவர்

களுக்குக் கொப்பளம், கட்டி ஒன்றும் உண்டாகாது. உண்டானாலும், விரைவிலே குணமாகிவிடும். புலால் உண்ணுகிற நமது ஆசிரியர்களும், ஏனைய புகழ் வாய்ந்த பிரமுகர்களும் முட்டாள்கள் அல்ல. அதன் நன்மைகள் அவர்களுக்குத் தெரியும். நீயும் அம்மாதிரிச் செய்யவேண்டும். எதையும் பரிட்சை செய்து பார்ப்ப தைப்போல் பிறிதொன்றும் கிடையாது. பரிட்சை செய், செய்த பின் அது எவ்வளவு வலிமை தருகிறது என்பதை நீயே பார்த்துக்கொள்!''

ஊன் உண்ணுவதின் சார்பில் இவ் உரைகள் அனைத்தும் எனக்கு ஒரே சமயத்தில் எடுத்துக் கூறப் பட்டன அல்ல. அவை அவ்வப்போது எனது நண்பர் என் மனதில் பதியுமாறு செய்வதற்காகக் கூறிய நீண்ட விஸ்தாரமான வாதத்தின் சாரமேயாகும். என் தமையன் ஏற்கெனவே இவ்வலையில் வீழ்ந்துவிட்டார். எனவே, என் நண்பரின் வாதத்தை அவர் ஆதரித்தார். எனது தமையன், நண்பர்—இவர்கள் பக்கத்தில், நிச்சய மாக நான் மெலிந்த உடலினனாகவே காணப்பட்டேன். அவர்கள் இருவரும் என்னிலும் உடற்கட்டு உடையவர், வலிமையாளர், துணிச்சலாளர். என் நண்பரின் தீரச் செயல்கள் என்னை மயக்கின. அவர், நீண்ட தூரம், அசாதரண வேகத்தோடு ஓடுவார். அவர் தனது தீரச் செயல்களை அடிக்கடி எனக்குக் காட்டுவார். தன்னிடம்இல் லாத குணங்களைப் பிறர் இடம் ஒருவர் காணும்போது, பிரமிப்பதுபோல, நானும் இந் நண்பரின் தீரச் செயல் களைக் கண்ணுற்றுப் பிரமித்துப் போனேன். அவனைப் போல் ஆகவேண்டும் என்ற தீவிரமான விருப்பம் இதனைத் தொடர்ந்து எனக்கு வந்தது. என்னால் ஓடவோ, உயரத்தாவவோ முடியாது. அவனைப்போல் நானும் ஏன் பலவானாக இருக்கக்கூடாது? மேலும் நான் ஒரு கோழை. கள்வர்கள், பேய்கள், பாம்புகள்—இவற்றின் அச்சம் என்னைத் தொந்திரவு செய்யும். இரவில் வெளியே

செல்லத் துணியேன். இருட்டு எனக்கு ஒரு பயங்கரம். இருட்டில் தூங்க என்றால் அநேகமாக முடியாது. ஏனெனில், பேய்கள் ஒரு திசையிலிருந்து வருவதாகவும், கள்ளர்கள் மற்றொன்றில் இருந்தும், பாம்புகள் மூன்ரு வதில் இருந்தும் வருவதாக எனக்குத் தோன்றும். எனவே அறையில் விளக்கில்லாமல், என்றால் தூங் கவே முடியாது. என் மனைவி குழந்தையன்று; இளமை யின் வாசலிலே நிற்கும் அந்த என் மனையாளிடம், இந்த அச்சத்தை நான் எங்ஙனம் வெளிப்படுத்த இயலும்? என்னைவிட அவள் தைரியசாலி என்பது அறி வேன்: எனவே என்னைப் பற்றி நான் நாணம் அடைந் தேன். பாம்புகளுக்கோ, பிசாசுகளுக்கோ அவளுக்கு அச்சம் கிடையாது. இருட்டில் அவள் எங்கும் போவாள். இந்த எனது குறைபாடுகள் எல்லாம் என் நண்பருக்குத் தெரியும். உயிருள்ள பாம்புகளைத் தான் கையில் பிடித்துக் கொள்ள முடியும் என்றும், கள்ளர்களை எதிர்க்க முடியும் என்றும், பிசாசுகளைத் தான் நம்புவதில்லை என்றும் என் நண்பர் சொன்னார். இவை எல்லாம், தான் ஊன் உண்ப தின் பயனேயாகும், என்றார்.

பள்ளி மாணவர்களாகிய எங்களிடம் குஜாராத்தி கவி நர்மதை பாடிய கீழேவரும் பாட்டு ஒன்று உலாவி வந்தது:—

"வலிமை கொண்ட ஆங்கிலனைப் பார்,
பலஹீன இந்தியனை ஆளுகிறான்தேர்!
ஊனை அவன் உண்டு வருவதாலே
ஆனைபோல் வளர்ந்துளான் பலே!"

இவை எல்லாம் என்னிடம் அவற்றின் உரிய முடிவை விளைவித்தது. நான் தோல்வி உற்றேன். ஊன் உண்பது நல்லது, என்னை வலிமை கொண்டவனாகவும், தைரியசாலியாகவும் செய்யும், நாடு முழுதும் ஊன் உண்ணுவதை மேற்கொண்டால் ஆங்கிலேயரை வென்று

விடலாம், என்ற எண்ணம் என்னிடம் வளரத் தொடங்கியது.

எனவே, இச்சோதனையைத் தொடங்க ஒரு நாள் குறிப்பிடப்பட்டது. எனது பெற்றோர் ஆழ்ந்த வைணவர்கள் ஆதலாலும், நானும் என் பெற்றோர்களிடம் மிகுந்த பற்று உடையன் ஆதலாலும், அது இரகசியத்திலேயே நடக்கவேண்டும். நான் ஊன் உண்டேன் என்று அவர்கள் கேள்விப்பட்ட போழ்தத்தே, அவர்கள் உயிர் போகும் வண்ணம் திக்பிரமையடைவார்கள் என்பது அறிவேன். மேலும், வாய்மையின்பால் எனக்குள்ள அன்பு, என்னை இன்னும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கச் செய்தது. நான் ஊன் உண்ணத் தொடங்கினால், என் பெற்றோரை ஏமாற்றவேண்டி இருக்கும் என்று அப்பொழுது எனக்குத் தெரியாது என்று சொல்லுவதற்கில்லை. ஆனால், என் மனது 'சீர்திருத்தத்திலே' முனைந்து நின்றது. நாவுக்கு ருசி தரும் என்ற எண்ணம் ஒன்றும் இல்லை. அதற்குத் தனியான நல்ல ருசி உண்டு என்பது ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆங்கிலேயரைத் தோற்கடித்து இந்தியாவை விடுவிப்பதற்காக நான் வலிமை கொண்டவனாகவும், தீரனாகவும் இருக்க வேண்டுமெனவும் எனது நாட்டு மக்களும் அவ்வாறு இருக்கவும், விரும்பினேன். 'சுயராஜ்ஜியம்' என்ற சொல்லை அப்பொழுது நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் சுதந்திரம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். 'சீர்திருத்த' வெறி என்னைக் குருடாக்கியது. எனவே இரகசியத்தை ஏற்படுத்திக்கொண்டு, இச்செயலைப் பெற்றோரிடம் இருந்து மறைப்பது உண்மையிலிருந்து விலகுவது ஆகாது என்று என்னை நான் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

எனவே அந்த நாள் வந்தது. என் நிலையை முழுதும் விவரிப்பது கடினமே. ஒரு பக்கத்தில் சீர்திருத்த வேகமும் வாழ்க்கையில் பிரமாதமான மாறுதல் செய்யும் புது

மையும் இருந்தது. ஆனால் இந்தக் காரியத்தைக் கள்வனைப்போல் மறைத்துச் செய்யும் அவமானம் மற்றொரு பக்கம். இவ் இரண்டில் எது என்னை அதிகமாக இழுத்தது என்று சொல்ல முடியாது.

ஆற்றோரமாக, தனி இடம் ஒன்றை நாடிச் சென்றோம். அங்குத் தான் என் வாழ்க்கையில், முதல் தடவையாகக் கண்டேன்,—புலாலை! ரொட்டியும் இருந்தது. இரண்டில் எதுவும் எனக்கு ருசிக்கவில்லை. ஆட்டு மாமிசம் தோலைப்போல் கடினமாக இருந்தது. அதை என்னால் சாப்பிடவே முடியவில்லை. அருவெறுப்பு கொண்டு உண்ணுவதையே நிறுத்த வேண்டியதாயிற்று.

பின்னர் அன்று இரவு துன்பகரமாயது. ஒரு பயங்கரக் கனவு என்னை வாட்டியது. தூங்கச் சாயும் ஒவ்வொரு சமயமும் உயிருள்ள ஆடு ஒன்று என் வயிற்றுக்குள் இருந்து பிளிறுவது போலத் தோன்றும். நிரம்பிய துக்கத்தோடு துள்ளி எழுவேன். பின்னர் ஊன் உண்பது ஒரு கடமை என்பதை நினைவூட்டிக்கொண்டு மலர்ச்சி கொள்ளலானேன்.

எனது நண்பர் அவ்வளவு எளிதில் விட்டுக்கொடுப்பவரல்லர். புலாலால் மிக ருசியான பண்டங்கள் பல சமைத்து, அவைகளைச் சுத்தமாக அழகு படுத்திவைக்க ஆரம்பித்தார். இனி, உண்பதற்கு ஆற்றங்கரைத் தனித்த இடத்தை விட்டுவிட்டு என் நண்பர் தலைமைச் சமையல்காரனோடு கலந்து ஏற்பாடு செய்து, மேசை, நாற்காலிகள் அமைந்த அரசாங்க போஜன சாலையை நாடினோம்.

இந்த வலை, அதன் பலனைத் தந்தது. ரொட்டி மேலிருந்த வெறுப்புப் போயிற்று; ஆடுகளின் மேற் காட்டிய கருணை மறைந்தது; புலாலைச் சுவைக்கா விட்டாலும், புலாலால் செய்யப்பட்டப் பலகாரங்களை ருசிப்பவன் ஆனேன். இப்படி ஓராண்டு நடந்தது. ஆனால், ஊன் விருந்தெல்லாம் மொத்தத்தில் ஆறு தரத்திற்கு மேல்

இரா. ஏனெனில், அரசாங்க மண்டபம் ஒவ்வொரு நாளும் கிடையாது; மேலும் விலை உயர்ந்த ருசியான மாமிசப் பண்டங்களை அடிக்கடி தயாரிப்பதில் உண்டாகும் தெளிவான சிரமம் வேறு. இந்தச் 'சீர்திருத்த'த்திற்குக் கொடுக்க என்னிடம் பணம் கிடையாது. எனவே இதற்குப் பணம் எப்பொழுதும் என் நண்பரே தேட வேண்டியதாயிற்று. ஆனால் அவர் பணம் எப்படியோ சேகரிக்கவே செய்தார்; ஏனெனில் என்னை ஊன் உண்பவராகச் செய்வதில் அவர் முனைந்து நின்றார். ஆனால், அவருடைய பொருள் வசதியும் வரம்புடைத்ததாயிருக்க வேண்டும். எனவே இவ் விருந்துகள் குறைந்து வரும்படி நேர்ந்தன. இந்தக் கள்ளத் தனமான விருந்துகளில் கலந்துகொள்ள நேர்ந்த பொழுதெல்லாம், எனக்கு வீட்டில் உணவு அருந்துவது என்பது முடியாத காரியம். என் தாயார் இயல்பாகவே, என்னை வந்து சாப்பிடுமாறு சொல்லுவார்; நான் ஏன் சாப்பிட விரும்பவில்லை என்ற காரணம் அறியவும் விரும்புவார். நான் அவரிடம் சொல்லுவேன், "எனக்கு இன்று பசி இல்லை. எனது சீரணத்தில் ஏதோ தவறு இருக்கிறது." என்று. இவ்வாறு சாக்குப் போக்குகள் கண்டுபிடிப்பதில், என் மனம் வருந்தாமல் இல்லை. நான் பொய் பேசுகின்றேன், அதுவும் என் தாயாரிடம் என்பதும் அறிவேன். மேலும், என் தாயும் தந்தையும் நான் ஊன் உண்பவனாகிவிட்டதைத் தெரிய நேர்ந்தால் ஆழ்ந்த அதிர்ச்சி அடைவார்கள் என்பதும் அறிவேன். இந்த அறிவு, என் இதயத்தை அறுக்கலுற்றது.

எனவே, எனக்கு நான் சொல்லிக்கொண்டேன்: "ஊன் உண்பது அவசியமாயினும், நாட்டில் உணவுச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமாயினும், தந்தையையும் தாயையும் ஏமாற்றி அவர்களிடம் பொய் உரைப்பது என்பது, ஊன் உண்ணுதலைவிட இழிவானது. எனவே, அவர்கள் ஆயுள் காலத்தில் ஊன்

உண்பது என்பது நடக்கத் தகாத விஷயமாகும். அவர்கள் காலமான பிறகு நான் சுயேச்சை அடைந்த பின்னர் பகிரங்கமாக ஊன் உண்பேன்; ஆனால் அந்தக் காலம் வரும் வரை ஊன் உண்பதை விட்டுவிடுவேன்.''

என் நண்பரிடம் இம் முடிவைத் தெரிவித்தேன். மீண்டும் நான் ஊன் உண்டது இல்லை. தன் பிள்ளைகளில் இருவர், ஊன் உண்பவர்கள் என்பது என் பெற்றோர்களுக்கு என்றும் தெரியவே தெரியாது.

என் பெற்றோரிடம் பொய் பேசலாகாது என்ற என் விருப்பத்தின் தூய்மையாலேயே நான் ஊன் உண்பதைக் கைவிட்டேன். ஆனால் என் நண்பரின் உறவை நான் கைவிட்டு விடவில்லை. அவனைச் சீர்திருத்த நான் கொண்ட ஆசை, எனக்குப் பேராபத்தாய் முடிந்தது. அக்கால முழுதும், இவ்வுண்மையை முற்றிலும் அறியாமலே இருந்தேன்.

இதே சேர்க்கை, என் மனைவிக்கு நான் துரோகம் இழைப்பதில் கொண்டு விட்டிருக்கும். ஆனால் நல்ல வேளை நான் தப்பினேன். ஒரு சமயம் என் நண்பர் என்னை ஒரு விபசார விடுதிக்குக் கூட்டிக்கொண்டு போனார். அவசியமான போதனைகளோடு என்னை உள்ளே அனுப்பினார். எல்லாம் முன்னேற்பாடு ஆகி இருந்தது. பணம் ஏற்கெனவே கொடுபட்டுவிட்டது. பாவத்தின் வாய்க்குள்ளே நுழைவதாக இருந்தேன். ஆனால் ஆண்டவன் தன் அளப்பருங் கருணையால் என்னைப் பாதுகாத்து அருளினார். இந்தத் தீமையின் குகையில், எனக்குத் திடீரென என் வாயடைத்து கண்மூடிப் போயிற்று. எனது ஆண்மை பங்கமுற்றதுபோல உணர்ந்தேன்; நாணத்தால் மண்ணுள் மறைய விரும்பினேன்; ஆனால், என்னைக் காப்பாற்றியதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தி வரலானேன்.

என் மனைவியோடு எனது மாறுபாடுகளுக்குக் காரணங்களில் ஒன்று, சங்கையின்றி இந்த நண்பனின்

சேர்க்கையேயாகும். நான் மிகவும் பிரியமும் சந்தேகமும் உள்ள ஒரு கணவன். என் மனைவியைப் பற்றிய சந்தேகங்களுக்கு, இந்த நண்பன் தூபம் போடலாயினான். அவன் வாய்மையை நான் எக்காலும் சந்தேகிப்பதற்கில்லை. அவன் தகவலின் பேரில், என் செயலால் அடிக்கடி என் மனைவிக்குத் துன்பம் விளைத்த, என் குற்றத்தின் கொடுமையை எக்காலத்தும் நான் மன்னித்ததே கிடையாது. இத்தகைய இன்னல்களை ஒரு இந்து மனைவிதான் சகிப்பாள் போலும்! ஆகவேதான், பெண்ணைப் பொறுமையின் அவதாரம் என்று நான் கருதி வருவது. ஒரு பணியாளைத் தவறாகச் சந்தேகப்பட்டால், அவனை வேலையைவிட்டு நீக்கிவிடலாம்; ஒரு மகன், அந்நிலையில், தன் தந்தையின் வீட்டை விட்டுப் போய் விடலாம்; ஒரு நண்பன், தன் நட்பை முடித்துவிடலாம். மனைவி, தன் கணவன் நடத்தையில் சந்தேகித்தால், பேசாதிருப்பாள்; ஆனால் கணவன் அவளைச் சந்தேகித்தாலோ, அவள் அடியோடு தொலைந்தாள். அவள் போவது எங்கே? ஒரு இந்து மனைவி நீதிமன்றத்தில் மணப்பிரிவினை கோர முடியாது. *சட்டத்தில் அவளுக்கு விமோசனம் இல்லை. என் மனைவியை அந்த நிலைக்கு நான் விரட்டியதை நான் எந்நாளும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

அகிம்சையை, அதன் எல்லா அம்சங்களிலும் நான் அறிந்த பின்னரே, சந்தேகப் பேய் என்னிடமிருந்து வேரறுக்கப்பட்டது. அப்பொழுது பிரமசரியத்தின் மகிமையைக் கண்டேன்; மனைவி என்பவள், கேவலம் ஒரு கணவனின் அடிமை அல்ல என்றும், ஆனால் அவனுடைய கூட்டாளி, வாழ்க்கைத் துணைவி, அவனுடைய இன்பத்திலும் துன்பத்திலும் சரிபங்கு உடையவள்— தன் வழியைத் தேர்ந்துகொள்ள கணவனைப்போல் சுதந்

* இப்பொழுது மணப்பிரிவினைக்குரிய சட்டம் உளது. (மொழிபெயர்ப்பாளர்.)

திரம் உடையவள்—என்பதை உணரலானேன். ஐயங்களும் சந்தேகங்களும் கொண்ட இந்த இருண்ட நாட்களை நான் நினைக்கும்போதெல்லாம், என் மனம் எனது மடமையையும் காமாதூரமான கொடுமையையும், எண்ணி வருத்தம் நிரம்பியதாக நிற்கும்; என் நண்பரிடத்துள்ள எனது மூட பத்தியை வெறுத்து நிற்கும்.

5

களவும் கழுவாயும்

இந்தப் புலால் உண்ணும் காலத்தும் அதற்குமுன்பும் நடந்த இன்னும் சொல்லவேண்டிய என் பிழைபாடுகள் சில உள. அவைகள் என் திருமணத்திற்கு முன்பு அல்லது சிறிது பின்னர் நிகழ்ந்தவையாகும்.

என் உறவினர் ஒருவரும் நானும் புகைப்பிடிப்பதில் பிரியம் கொண்டோம். புகைபிடிப்பதில் எந்த நன்மையும் கண்டு, அல்லது சிகரட்டின் மணத்தில் மோகம் கொண்டு அன்று, நாங்கள் புகைபிடிக்க விரும்பியது. எங்கள் வாயிலிருந்து, புகை மேகங்கள் கிளம்புவதில் ஏதோ ஒரு வகையான இன்பம் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டோம். எங்கள் சிறிய தந்தைக்கு இப் பழக்கம் உண்டு. அவர் புகைபிடிப்பதைப் பார்த்து, நாங்களும் அவர் உதாரணத்தைப் பின்பற்ற நினைத்தோம். ஆனால் எங்களிடம் பணம் கிடையாது. எனவே, எங்கள் சிறிய தந்தையால் விட்டெறியப்பட்ட சிகரெட் துண்டுகளை எடுக்க ஆரம்பித்தோம்.

ஆனால் துண்டுகள் எப்பொழுதும் கிடைப்பதில்லை. அத்துடன் அவை அதிகப் புகையைக் கிளப்புவதுமில்லை. எனவே, பீடிகளை வாங்குவதற்காகப் பணியாட்களின் 'பாக்கட்' பணத்திலிருந்து செம்புக் காசுகளைத் திருடத் தொடங்கினேம். ஆனால், அவைகளை எங்கு வைப்பது என்ற கேள்வி எழுந்தது. மூத்தோர்கள் முன்னிலையில்

நாங்கள் புகைபிடிக்க முடியாது. இந்தத் திருடிய காசு களைக்கொண்டு எப்படியோ சில வாரங்களைச் சமாளித் தோம். இதன் மத்தியில், ஏதோ ஒரு செடியின் தண்டு களில் துவாரங்கள் உள்ளன என்றும், அவைகள் சிகரெட் டைப்போல் புகைபிடிக்க முடியும் என்றும் கேள்விப் பட்டோம். அவைகளைத் தேடிப்பிடித்து, இம்மாதிரிப் புகைபிடிப்பதை ஆரம்பித்தோம்.

ஆனால், இத்தகைய பொருள்களைக் கொண்டு நாங்கள் திருப்தி கொள்ளவே இல்லை. எங்களுடைய சுதந்திர மின்மை எங்களைத் தாக்க ஆரம்பித்தது. மூத்தோர்கள் அநுமதியின்றி நாங்கள் எதையும் செய்ய இயலாது என்பது எங்களுக்குத் தாங்க முடியாததாக இருந்தது. இறுதியில் மிக வெறுப்படைந்து, நாங்கள் தற்கொலை செய்து கொள்வதாக முடிவு செய்தோம்!

ஆனல் நாங்கள் அதை எப்படிச் செய்வது? நஞ் சினை எங்கிருந்து பெறுவது? ஊமத்தை விதை பலன் தரத்தக்க நஞ்சு என்று கேள்விப்பட்டோம். இவ்விதை களைத் தேடிக் காட்டுக்குச் சென்று, அவற்றைப் பெற் ரேம். மாலை இதற்கு நல்ல வேளை என்று கருதப் பட்டது. நாங்கள் கேதார்ஜி கோவிலுக்குச் சென்று, கோவில் விளக்கில் நெய் ஊற்றித் தரிசனம் செய்துவிட்டு, பின் ஒரு தனியான மூலையைத் தேடினும். ஆனல் சம யத்தில் தைரியம் எங்களைக் கைவிட்டது. எங்களுக்கு உடனே சாவு நேராவிட்டால்? எங்களை நாங்கள் கொன்று கொள்ளுவதில் நன்மைதான் என்ன? அதை விடச் சுதந் திர மின்மையைப் பொருத்துக் கொண்டு இருந்து விட்டால் தான் என்ன? ஆனலும், இரண்டு மூன்று விதைகளை விழுங்கிவிட்டோம். அதிகம் உட்கொள்ளத் துணியவில்லை. நாங்கள் இருவருமே சாவதற்கு அஞ்சினேம். எங்களைச் சாந்திப்படுத்திக் கொள்ளவும், தற்கொலை எண்ணத்தை நீக்கவும், ராம்ஜி ஆலயத்திற் குப் போக முடிவு செய்தோம்.

தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானம் செய்வது போல், செய்வது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்ந்தேன். அதன் பின்னர், யாரேனும் தற்கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தினதாகக் கேள்விப்பட்ட பொழுதெல்லாம் அது என்னை எவ்விதமும் பாதிப்பதில்லை.

இந்தத் தற்கொலை எண்ணம் இறுதியில் நாங்கள் இருவரும் இந்தத் துண்டுச் சிகரெட்டுப் புகை பிடிக்கும் வழக்கத்தையும், புகைபிடிப்பதற்காக வேலைக்காரர்களின் செம்புக் காசுகளைத் திருடும் வழக்கத்தையும் விட்டுவிடும்படி செய்தது.

நான் பெரியவனான பின்னர் எக்காலும் புகைபிடிக்க விரும்பியதில்லை; புகைபிடிக்கும் வழக்கம் அநாகரிகமானது, ஆபாசமானது, தீங்கிழைப்பது என்ற கருத்தை எப்பொழுதும் கொண்டுள்ளேன். உலகம் எங்கணும் இப்புகைபிடித்தலில் ஏன் இவ்வளவு மோகம் என்பது எனக்கு எப்பொழுதும் விளங்கியதே இல்லை. புகை பிடிப்போர் நிரம்பியுள்ள ரயில் வண்டியில் நான் பிரயாணம் செய்யச் சகியேன்; என் மூச்சுத் திணறி விடுகிறது.

ஆனால் இதற்குப் பின்னர் நான் குற்றவாளியான ஒரு திருட்டு இக்களவினும் மிகமோசமானது. பதிமூன்று, அல்லது பனிரண்டு, அல்லது ஒருவேளை அதனினும் குறைந்த வயதுள்ள சமயமே நான் செம்புக் காசுகளைத் திருடியது. மற்றத்திருட்டு, எனக்குப் பதினைந்து வயதாகும்போது செய்யப்பட்டது. இச்சமயம், புலால் உண்ணும் என் தமையனரின் கைக் காப்பிலிருந்து ஒரு தங்கத் துண்டைத் திருடினேன். இந்தச் சோதரருக்கு சுமார் இருபத்தைந்து ரூபாய் கடன் ஏற்பட்டிருந்தது. அவர் கையில், தங்கக் கட்டிக் காப்பு இருந்தது. அதிலிருந்து ஒரு சிறிய துண்டை வெட்டி எடுப்பது கடினமல்ல.

சரி, அது அவ்வாறு செய்யப்பட்டது; கடனும் தீர்க்கப்பட்டது. ஆனால் இதை என்னால் தாங்கமுடியாதவாறு ஆயிற்று. இனி ஒருக்காலும் திருடுவது இல்லை என்று தீர்மானித்தேன். இதை என் தந்தையிடம் ஒத்துக் கொள்ளுவது என்றும் உறுதி பூண்டேன். ஆனால் பேச எனக்குத் துணிவு இல்லை. என் தந்தை என்னை அடிப்பார் என்ற அச்சம் அன்று. இல்லை, எங்களில் எவரையேனும் அவர் அடித்ததாக நினைவு இல்லை. நான் அவருக்குத் தரக்கூடிய வேதனைக்கே அஞ்சினேன். ஆனால் இந்தச் சங்கடத்திற்கு நான் துணிந்தே தீரவேண்டும் என்றும், என் குற்றத்தைத் தெளிவாக ஒத்துக்கொள்ளாமல் அழுக்கைத் துடைக்க முடியாது என்றும் உணர்ந்தேன்.

முடிவில், ஒரு கடிதத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு எழுதி, அதைத் தந்தையிடம் சமர்ப்பித்து, அவர் மன்னிப்பைக் கோரவேண்டும் என்று முடிவு செய்தேன். ஒரு துண்டுக் கடிதத்தை எழுதி, நானே என் தந்தை இடம் கொடுத்தேன். இக்கடிதத்தில், என் குற்றத்தை நான் ஒத்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அவர் எனக்குப் போதுமான தண்டனை தருமாறும் கேட்டிருந்தேன். என் குற்றத்திற்காகத் தானே தன்னைத் தண்டித்துக்கொள்ள வேண்டாம் என்ற வேண்டுகோளோடு கடிதத்தை முடித்திருந்தேன். வருங்காலத்தில் இனி ஒருநாளும் திருடுவதில்லை என்ற வாக்குறுதியையும் கொடுத்திருந்தேன்.

இந்தக் 'குற்றம் ஒத்துக்கொள்ளும்' கடிதத்தை அவரிடம் கொடுத்தபோது, நான் நடுநடுங்கிக்கொண்டிருந்தேன். அவர் அப்பொழுது பௌத்திர நோய் உற்றிருந்தார்; எனவே படுக்கையில் இருந்தார். அவர் படுக்கை ஒரு வெறும் மரப்பலகையே. அக்கடிதத்தைக் கொடுத்துவிட்டு, பலகையின் எதிர்ப்பக்கம் உட்கார்ந்தேன்.

அவர் அதனை முழுதும் படித்தார்; முத்துத்துளிகள் அவருடைய கன்னங்களின் வழி ஒழுகிக் காகிதத்தை நனைத்தன. சிறிது நேரம், சிந்தனையில் தன் கண்களை மூடி, பின்னர் கடிதத்தைக் கிழித்தார். அதைப் படிப்பதற்காகப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்திருந்தார். பின் மீண்டும் அவர் படுத்துக்கொண்டார். நானும் அழுதேன். என் தந்தையின் வேதனையை நான் பார்க்கலானேன். நான் ஒரு ஓவியக் கலைஞனாக இருந்திருப்பின், இக்காட்சி அனைத்தையும் இன்று ஒரு படமாக வரைந்திருக்க முடியும். என் உள்ளத்தில் அது இன்னும் அவ்வளவு தீட்சண்யமாகத் தோற்றம் அளிக்கிறது. அன்பின் அந்த முத்துத்துளிகள் என்னுள்ளத்தைத் தூய்மைப் படுத்தி, என் பாவத்தைக் கழுவிச் சென்றன. இத்தகைய அன்பை அனுபவித்தவரே, அஃது எத்தகையது என்பதை உணரலாகும். பாட்டுப் பகருவது போல்,

“ அன்பின் அம்பால் அடிபட்டவரே
அன்பின் ஆற்றல் அறிவார் ஆவார்.”

இது, எனக்கு அகிம்சையில் ஒரு உதாரணப் பாடமாகும். அதுபொழுது, அந்நிகழ்ச்சியில் ஒரு தந்தையின் அன்பினைத்தவிரப் பிறிதொன்றும் நான் கண்டிலேன். ஆனால், இன்றோ அஃது தூய்மையான அகிம்சை என்று அறிகிறேன். இத்தகைய அகிம்சை எல்லாவற்றையுஞ் சேர்த்துத் தழுவிக்கொள்ளும் போழ்து, அது தொட்டது அனைத்தையும் பொன்னாக மாற்றி அமைக்கிறது. இதன் ஆற்றலுக்கு எல்லையே இல்லை.

இத்தகைய மகோன்னதமான மன்னிப்பு என் தந்தைக்கு இயல்பு அன்று. அவர், கோபிப்பார், கடுமையாய்ப் பேசுவார், நெற்றியில் அடித்துக்கொள்ளுவார் என்று எல்லாம் நான் எண்ணி இருந்தேன்: ஆனால் அவர் அற்புதகரமான சாந்தியோடு இருந்தார்; நான் ஒன்றும் ஒளியாது ஒத்துக்கொண்டதே இதற்குக் காரண

மென்று நம்புகிறேன். அப்பாவத்தை மீண்டும் செய்வதில்லை என்ற வாக்குறுதியோடு இணைந்த எனது பூரண ஒத்துக்கொள்ளலை அதனைப் பெறுதற்கு உரியாரிடம் வழங்கப்பெறும்போது, அதுதான் மிகப்பரிசுத்தமான கழிவிரக்கமாகும். நான் 'ஒத்துக்கொண்டது,' என்னைப் பற்றிக் கவலைப்படாது நான் பூரணமாகப் பத்திரமாக உள்ளேன் என்று என் தந்தை என்னைப்பற்றி நினைக்கச் செய்தது; அத்துடன், என்பால் அவர் கொண்டிருந்த பிரியத்தையும் அளவிலாது பெருக்கியது.

6

என் தந்தையின் நோயும், சாவும்

இப்பொழுது நான் பேசும் காலம், எனது பதினாறுவது வயது. ஏற்கெனவே, நாம் பார்த்ததுபோல், என் தந்தை பௌத்திர நோயினால் படுக்கையில் இருந்தார். என் தாயாரும் வீட்டின் பழைய வேலையாளும் நானும்தான் என் தந்தைக்கு முக்கிய பணிவிடையாளர். எனக்கு ஒரு தாதிக்குரிய வேலை; அதாவது புண்ணைக் கட்டுவதும், மருந்து கொடுப்பதும், வீட்டிலே செய்யவேண்டியிருந்தால் மருந்துப் பொருள்களைச் சேர்ப்பதும், என்னுடைய அவ்வேலைகளில் முக்கியம். ஒவ்வொரு இரவும் நான் அவர் கால்களைப் பிடிப்பேன்; என்னை அவர் போகும்படி சொன்னால், அல்லது அவர் தூங்கிய பின்னரே நான் தூங்கச் செல்லுவேன். இச் சேவை செய்வது எனக்குப் பிரியமாய் இருந்தது. இதனை எக்காலும் தட்டிக் கழித்ததாக எனக்கு நினைவு இல்லை. தினசரிக் கடமைகளைச் செய்த பின்னர், என்னுடைய நேரம் எல்லாம், பள்ளிக்குச் செல்வதிலும், தந்தைக்குப் பணிவிடை செய்வதிலும் ஆக பகிர்ந்து அளிக்கப்பட்டது. அவர் எனக்கு அநுமதி தரும்போது,

அல்லது நலமாயிருப்பதாக உணரும்போதுதான் நான் மாலையில் உலாவ வெளியே செல்லுவேன்.

அந்தப் பயங்கர இரவு வந்தது. மணி 10–30 அல்லது 11 இருக்கும். நான் காலைப்பிடித்துக்கொண்டு இருந்தேன். என் சிறிய தந்தை அவ்வேலையைத் தான் செய்து எனக்கு ஓய்வுதர முன்வந்தார். நான் மகிழ்வுற்று, படுக்கை அறைக்கு நேரே சென்றேன். எனது மனைவி, பாவம் பேதை ஆழ்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள்: ஆனால் நான் அங்கு இருக்கும்பொழுது, அவள் எப்படித் தூங்கமுடியும்? நான் அவளை எழுப்பினேன். ஆனால் ஐந்து அல்லது ஆறு நிமிடத்தில், பணியாள் கதவைத் தட்டினான். பயத்தோடு எழுந்தேன்: "எழுந்திருங்கள்; தந்தையார் மிகவும் நோயுற்றுள்ளார்" என்று அவன் சொன்னான். எனக்கு அவர் மிக நோயுற்றுள்ளார் என்று தெரியும். எனவே அச்சமயத்தில் "மிகவும் நோய்!" என்பதின் பொருள் என்ன என்பதை யூகித்துக்கொண்டேன்: படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தேன்.

"என்ன செய்தி? சொல்லு உடனே!"

"தந்தையார் மாண்டார்!"

ஆகவே, எல்லாம் முடிந்தது. என் கைகளை நான் பிசைந்தேன். அளவற்ற வெட்கம் அடைந்தேன்: துயரத்தில் உழன்றேன். தந்தையார் அறைக்கு ஓடினேன். மிருக இச்சை என்னைக் குருடாக்கி இரா விட்டால், என் தந்தையின் கடைசிநேரத்தில் அவரை விட்டுப் பிரிந்ததனால் உண்டான சித்திரவதையினின்று எனக்கு விமோசனம் கிடைத்திருக்கக் கூடுமென்பதைக் கண்டேன். அது, நான் எக்காலும் அழிக்கவோ, மறக்கவோ முடியாத களங்கமாகும். பெற்றோர் பால் எனக்கு உள்ள பக்தி வரம்பின்றி இருந்ததேனும், அதற்காக நான் எதையும் கொடுத்திருப்பேன் ஆனாலும், அச்சமயம் என் மனம் காமத்தின் பிடியில் சிக்

குண்டிருந்தபடியால், அப்பக்தியை நிறுத்துப்பார்க்கும் போது, அது மன்னிக்க முடியாத அளவு குறைவுபட்டு இருந்தது என்றே எப்பொழுதும் நான் கருதி வந்துளேன். காமத்தின் விலங்கிலிருந்து விடுதலையடைய எனக்கு நீண்ட நாள் பிடித்தது. அதனை அடக்கும் முன்னர், நான் கடும் சோதனைகள் பலவற்றைக் கடக்கவேண்டி இருந்தது. மணம் ஆனவர்கள் அனைவரும் எனது இவ் உதாரணத்தால் எச்சரிக்கப் படுவார்களாக!

7

சமயத்தின் ஒளிகள்

வைணவ மரபில் பிறந்தபடியால், கோவிலுக்கு நான் அடிக்கடி போகவேண்டி இருந்தது. ஆனல் அது என்னை ஒருபொழுதும் கவரவில்லை. அதன் பகட்டும் படாடோபமும் எனக்குப் பிடிக்கவில்லை. மேலும், ஆங்கு ஒழுக்கத்தவறுன காரியங்கள் செய்யப்படுவதான வதந்தியையும் கேள்விப்பட்டேன். எனவே, அதில் எனக்கு அக்கறை ஏற்படவில்லை. எனவே ஆலயத்தில் இருந்து இலாபம் ஒன்றும் நான் பெறுமாறு இல்லை.

ஆனல், ஆங்கு பெறத் தவறியதை, குடும்பத்தின் பழைய வேலைக்காரியான என் செவிலித்தாயிடம் இருந்து நான் பெற்றேன். என்னிடம் அவள் கொண்டுள்ள பிரியம் இன்றும் என் நினைவுக்கு வருகிறது. எனக்குப் பேய்பிசாசுகளிடம் ஒரு அச்சம் உண்டு என்று முன்பு கூறி உள்ளேன். ராம்பா—அது அவளுடைய பெயர்—இவ் அச்சத்திற்கு மாற்று மருந்தாக, இராமநாமத்தைத் திரும்பத்திரும்பச் சொல்லுமாறு ஆலோசனை கூறினள். அவள் சொன்ன மருந்தைவிட அவளிடம் எனக்கு நம்பிக்கை அதிகம்.

எனவே, பேய் பிசாசுகளின் பயத்தைப் போக்குவதற்காக இளவயதிலேயே இராமநாமத்தை ஜெபிக்க ஆரம்பித்தேன். இது சிறிது காலமே நடந்தது. ஆனால், குழந்தைப் பருவத்திலே விதைத்த இந்த நல்விதை, வீண்போகவில்லை. அந்தப் பெருமகள், ராம்பா அன்று விதைத்த விதையே, இன்று எனக்கு இராமநாமம் பழுதுறு அருமருந்தாக இருந்துவருவதற்குக் காரணம் என்று கருதுகிறேன்.

நோயுற்றிருந்த காலத்தில் ஒரு பகுதி என் தந்தை போர்பந்தரில் இருந்தார். அங்கு ஒவ்வொரு மாலையும் அவர் இராமாயணத்தைக் கேட்டு வருவார். அதைப் படிப்பவர், ஒரு பெரிய இராமபக்தர். அவருக்கு இனிமையான குரல் உண்டு. அவர் ஈரடிப்பாவையும், நாலடிப்பாவையும் இசையோடு பாடி, அவைகளை விளக்கி, அச்சொற்பொழிவில் தன்னையே மறந்து, கேட்போரையும் தன்னோடு இழுத்துச் செல்லுவார். எனக்கு அப்பொழுது பதின்மூன்று வயது இருந்திருக்க வேண்டும். ஆனால் அவருடைய வாசிப்பினால் நான் ஆநந்தத்தில் மூழ்கப்பட்டிருந்தது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. இராமாயணத்தில் எனக்குள்ள ஆழ்ந்த பக்திக்கு அதுவே அடிப்படை போட்டது. பக்தி இலக்கியம் அனைத்திலும், துளஸிதாசர் இராமாயணமே சாலச் சிறந்த நூல் என்று இன்று நான் கருதுகிறேன்.

இந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளிடமும், ஏனைய சகோதர சமயங்களிடமும், நான் சகிப்புத் தன்மை கொள்ளுவதற்கு இராஜ கோட்டையில் எனக்கு இளமையிலேயே அடிப்படைப் பயிற்சி கிடைத்தது. எனது தந்தையும் தாயும் வைஷ்ணவக் கோவிலுக்கும், அத்தோடு சிவன் கோவிலுக்கும், இராமர் கோவிலுக்கும் செல்லுவார்கள். இளம் சிறுர்களாகிய எங்களையும் அங்கு அழைத்துச் செல்லுவார்கள்; அல்லது அங்கு அனுப்பு

வார்கள். ஜைன சந்நியாசிகளும் என் தந்தையைப் பார்க்க அடிக்கடி வருவார்கள்; தங்கள் சாதாரண வழக்கத்தை மீறி, ஜெயினர் அல்லாத எங்கள் வீட்டு உணவை ஏற்றுக்கொள்ளுவார்கள்; சமயம், லௌகிகம், இவை சம்பந்தமான பொருள் பற்றி என் தந்தையோடு பேசுவார்கள்.

இவர்கள் தவிர, அவருக்கு முசல்மான் பார்சி நண்பர்களும் உளர். அவர்கள் தங்கள் சமயங்களைப் பற்றிப் பேசுவார்கள். அவர் அவற்றை எப்பொழுதும் மரியாதையோடு கேட்பார்; அடிக்கடி அக்கறையோடும், கேட்பார். அவருக்கு நான் தாதியாக இருந்தபடியால் இப்பேச்சுக்களின் பொழுது நான் இருப்பதற்கு எனக்கு அடிக்கடி வாய்ப்புக் கிடைத்தது. இவை அனைத்தும் சேர்ந்து ஒருங்கே, எல்லாச் சமயங்களிடமும் எனக்குச் சகிப்புத்தன்மை உண்டாகும்படி செய்தன; கிறிஸ்தவ சமயம் மட்டும் இதற்கு அக்காலத்தில் ஒரு விதிவிலக்காக இருந்தது. அதனிடம் எனக்கு ஏதோ ஒரு வகை வெறுப்பு உண்டாயது. அது ஒரு காரணம் பற்றியே யாகும். அந்நாட்களில், கிறிஸ்தவப் பாதிரிமார் உயர் நிலைப்பள்ளியின் ஒரு மூலையில் நின்று கொண்டு இந்துக் களையும் அவர்களுடைய கடவுளையும் பற்றி வசை பொழிந்து சொற்பொழிவு ஆற்றி வருவார்கள். இதை என்னால் தாங்க முடியவில்லை. அவர்கள் சொல்லுவதைக் கேட்க நான் ஒரே ஒரு தரம்தான் அங்கு நின்றிருக்க வேண்டும். ஆனால் மீண்டும் அவ்வாறு நான் போகாமல் தடுப்பதற்கு அஃதொன்றே போதுமானது. அதே சமயத்தில் எல்லாருக்கும் தெரிந்த ஒரு இந்து, கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டதையும் கேள்விப்பட்டேன். அவர் 'ஞானஸ்நானம்' பெற்றதால் அவர் மாட்டிறைச்சி உண்ணவேண்டி இருந்தது, மது அருந்தவேண்டி இருந்தது, உடைகளை மாற்றிக்கொள்ள வேண்டி இருந்தது, தலைக்கு 'தொப்பி' உள்பட ஐரோப்பியர்

உடையிலேயே இனி நடமாடவேண்டும், என்பதே ஊர் முழுவதும் பேச்சாக இருந்தது. இவைகள் என் நரம்புகளை உலுக்கின. மாட்டிறைச்சி உண்ணுவதையும், மது அருந்துவதையும், ஒருவருடைய ஆடைகளை மாற்றி அணிவதையும் கட்டாயப்படுத்தும் ஒரு மதம், நிச்சயமாக அப்பெயருக்கே பொருத்தமில்லாதது, என்று கருதினேன். மேலும், புதிதாக மதம் மாறியவர், அதற்குள்ளாகவே தனது முன்னோர்களின் சமயத்தையும், அவர்கள் வழக்கங்களையும், நாட்டையும் பற்றி வசை கூறத் தொடங்கிவிட்டார் என்றும் கேள்விப்பட்டேன். இவைகள் அனைத்தும் கிரிஸ்தவ சமயத்திடம் எனக்கு வெறுப்பை உண்டாக்கியது.

ஏனைய சமயங்களிடம் நான் சகிப்புக்கொண்டு விட்டதாலே கடவுளிடம் எனக்கு ஒரு உயிர்ப்பான நம்பிக்கை உண்டாகிவிட்டது என்பதில்லை. ஆனால் ஒன்றுமட்டும் என்னிடம் ஆழமாக வேர் ஊன்றி நின்றது :—அது, ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதும், எல்லா ஒழுக்கத்தின் சாரமும் உண்மையே என்பதுமான உறுதியே யாகும். உண்மையே எனது ஒரே குறிக்கோள் ஆயிற்று. அது ஒவ்வொரு நாளும் பரிமாணத்தில் வளரத் தொடங்கியது ; அதற்கு என்னுடைய இலக்கணமும் நாள்தொரும் விரிந்து கொண்டே வரலாயிற்று.

இதேபோல் குஜாரத்தி பாட்டு ஒன்று என் உள்ளத்தையும் இதயத்தையும் ஒருங்கே கொள்ளை கொண்டது. அதன் படிப்பினை—இன்னா செய்தார்க்கு நன்னயம் செய்க—என்பது எனக்கு வழிகாட்டும் கொள்கை ஆயிற்று. அதில் நான் எண்ணற்ற சோதனைகளைத் தொடங்கும் அளவிற்கு, அது எனக்குப் பேருணர்ச்சி ஊட்டி நின்றது. அவ் அற்புத அடிகள் இதோ கீழே வருவன :—

"ஒரு குவளை நீருக்கு அருவிருந்து தருக !
அன்புறு முகமனுக்கு ஆர்வமொடு தலை வணங்கு !
சிறிய ஒரு சல்லிக்கும் அரிய பொன்னே தருக !
நினது உயிர் காப்புறின் நின் உயிர் கொடுத்திடுக.
அறிஞர் சொல்லும் செயலும் இனையன ஆகும்.
ஒன்றே குலமனைத்தும் என்றேயறிந்து பெரியோர்,
இன்னுசெய்தார்க்கும் இன்பொடு நன்னயமே புரிவார்."

8

இங்கிலாந்து செல்ல ஏற்பாடுகள்

'மெட்ரிகுலேஷனுக்குப் பின்னர், கல்லூரியில் நான் மேலே படிக்கவேண்டும் என்று என் மூத்தோர்கள் விரும்பினர். பம்பாயிலும் பவநகரிலும் கல்லூரிகள் இருந்தன. முன்னையது, செலவு சுருக்கம் ஆதலால் அங்குச்சென்று சமால்தாஸ் கல்லூரியில் சேருவதாக முடிவு செய்தோம். நான் சென்றேன்; அங்கு என்னைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதிரி இருந்தது. ஒவ்வொன்றும் கடினமாக இருந்தது. பேராசிரியர்களின் சொல்லாற்றல்களில் அக்கறை கொள்வது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவை ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இது அவர்களுடைய குற்றம் அன்று. பேராசிரியர்கள் முதல்தரமானவர்கள் என்று கருதப்பட்டவர்கள். ஆனல் நான் புதிது. முதல் ஆறு மாதம் முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பினேன்.

மாவ்ஜி தேவே, எங்கள் குடும்பத்தின் பழைய நண்பரும் ஆலோசகரும் ஆவார். அவர் புத்தி கூர்மை வாய்ந்த கற்றறிந்த அந்தணர். எனது தந்தையின் மரணத்திற்குப் பின்னரும், எங்கள் குடும்பத்தோடு சம்மந்தம் வைத்திருந்தார். என் விடுமுறையில் அவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். என் தாயாரிடமும், அண்ணனிடமும் பேசிக் கொண்டிருக்கும்போது, என்

படிப்பைப் பற்றி விசாரித்தார். சாமால்தாஸ் கல்லூரியில் நான் படிப்பதைத் தெரிந்து, அவர் சொன்னூர்: " காலம் மாறிவிட்டது. சரியான கல்வியின்றி, உங்கள் தந்தையின் ஸ்தானத்தை அடைய நீங்கள் யாவரும் எதிர்பார்க்க முடியாது. இப்பொழுது இந்தப் பையன், படிப்பை மேற்கொண்டு வருவதால், அந்த ஸ்தானத்தை அடைவதற்கு இவனையே எதிர்பார்க்க வேண்டும். அவன் பீ. ஏ. (B. A.) பட்டம் வாங்க, நாலு ஐந்து ஆண்டுகள் ஆகும். அது அவனை ஒரு அறுபது ரூபாய் வேலைக்குத் தகுதி வாய்ந்தவனுக்கும். அது திவான் வேலைக்கு தகுதியாக்காது. என் பையனைப் போல், சட்டம் படிக்கச் சென்ருல், இன்னும் அதிகக் காலம் பிடிக்கும்; அதற்குள்ளாகத் திவான் வேலையைக் கோரி அநேக 'வழக்குரைஞர்' வந்துவிடுவார்கள். எனவே, அவனை நீங்கள் இங்கிலாந்துக்கு அனுப்புவதே நல்லது. இங்கிலாந்திலிருந்து இப்பொழுதுதான் திரும்பிய அந்தப் பாரிஸ்டரை நினைத்துப் பாருங்கள்! எவ்வளவு ஜோராக வாழ்கிருர்! கேட்ட அளவிலேயே அவருக்குத் திவான் வேலை கிடைக்கும். எனவே இவ் ஆண்டே மோகன்தாஸை நீங்கள் இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டும் என்று வன்மையாக யோசனை கூறுகிறேன். கேவல்ராமுக்கு இங்கிலாந்தில் பல நண்பர்கள் உளர். அவன் அவர்களுக்கு அறிமுகக் கடிதங்கள் கொடுப்பான். மோகன்தாஸ் அங்குக் காலத்தை எளிதே கழித்துவிட்டு வரலாம்."

ஜோஷிஜி—முதிர்ந்த மாவ்ஜி தேவை நாங்கள் அவ்வாறே அன்பாக அழைப்பது வழக்கம்—பூரண உறுதியோடு என் பக்கம் திரும்பி என்னைக் கேட்டார், " இங்கு படிப்பதைவிட இங்கிலாந்து போக விரும்புவாய் அல்லவா? என்ருர். எனக்கு இதனைவிட வரவேற்கத் தகுந்தது வேருென்றும் இருக்க முடியாது. எனது கடினமான படிப்புகளோடு நான் போராடிக் கொண்டிருந்தேன்.

எனவே இந்த யோசனைக்கு நான் துள்ளிக் குதித்து, "எவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பப்படுவேனே அவ்வளவு நல்லது," என்றேன். என் தமையன் உள்ளத்தில் இது மிகுந்த சிந்தனையை உண்டாக்கியது. என்னை இங்கிலாந்து அனுப்புவதற்கு அவர் பணத்தை எப்படித் தேடுவது? தனியாக என் போன்ற இளைஞனை நம்பி வெளியூர் அனுப்புவது முறைதானு? என் தாயார் மிகக் கிலேசம் உற்ருள். என்னை விட்டுப் பிரியும் யோசனையை அவள் விரும்பவில்லை. அவள் நுட்பமாக விசாரணைகளைச் செய்யத் தொடங்கினுள். இங்கிலாந்தில் இளைஞர்கள் வழி தவறி விடுகிருர்கள் என்று அவளுக்கு யாரோ ஒருவர் சொல்லி இருக்கிருர். மற்ருெருவர், இங்கிலாந்தில் புலால் உண்ணுகிருர்கள், என்று சொல்லி இருக்கிருர்; இன்னும் பிறிதொருவர், ஆங்கே மதுவின்றி வாழமுடியாது என்று கூறி இருக்கிருர். "இவற்றைப் பற்றி எல்லாம் எப்படி?" என்று அவர் என்னைக் கேட்டார். நான் சொன்னேன், "நீங்கள் என்னை நம்ப மாட்டீர்களா? உங்களிடம் நான் பொய் புகலேன். இவைகளில் எதனையும் நான் தீண்டுவதில்லை என்று சத்தியம் செய்கிறேன். இத்தகைய ஆபத்து ஏதேனும் இருக்குமாயின், ஜோஷிஜி என்னைப் போக விடுவாரா?"

அவர் சொன்ஞர், "உன்னை நான் நம்பமுடியும், அப்பா; ஆஞல், தொலை தேசத்தில் எப்படி உன்னை நம்புவது? என் அறிவு மயங்குகிறது; யாது செய்வதென்று அறிகிலேன். பிஸார்ஜி சுவாமியைக் கேட்கிறேன்" என்ருர்.

பிஸார்ஜி சுவாமி ஆரம்பத்தில் ஒரு மோத் பனியா. ஆஞல் இப்பொழுது ஒரு ஜைன சன்னியாசி ஆகிவிட்டார். ஜோஷிஜியைப் போலவே, அவரும் ஒரு குடும்ப ஆலோசனையாளர். அவர் என் உதவிக்கு வந்தார். அவர் சொன்ஞர், "இப்பையனை அந்த

மூன்று சத்தியங்களையும் சம்ஸ்காரத்தோடு எடுக்கச் சொல்லுகிறேன்; பின்னர் அவனைப் போக அனுமதிக்கலாம்.'' அந்தச் சத்தியங்களை அவர் எனக்கு ஓதினார்: நானும், மது, மங்கை, மாமிசம்—இவற்றைத் தீண்டுவதில்லை எனச் சத்தியம் செய்தேன். இது முடியவே, என் தாயார் எனக்கு அனுமதி தந்தார்.

நான் படித்த உயர்நிலைப் பள்ளியில் என்னைக் கௌரவிக்கும் பொருட்டு ஒரு பிரிவுபசாரம் நடந்தது. ராஜகோட்டையில் இளைஞன் ஒருவன் இங்கிலாந்து செல்லுவது ஒரு அசாதாரணமான விஷயமே. நன்றியுரைகள் சில நான் எழுதி வைத்திருந்தேன். ஆனால் அவைகளை நான் திக்கிச் சொல்லவே திண்டாடியது. அவைகளை வாசிக்க நான் எழுந்து நின்ற பொழுது, என் தலை எப்படிச் சுழன்றது, என் உடல் முழுவதும் எப்படி நடுங்கிற்று என்று எனக்கு நினைவிருக்கிறது.

என் தாயாரின் அநுமதியோடும், ஆசிகளோடும், பிறந்து சில மாதங்களான கைக்குழந்தையோடு என் மனைவியையும் விட்டுவிட்டு, பம்பாய்க்குக் குதூகலமாகப் புறப்பட்டேன். ஆனால் ஆங்குச் சேர்ந்தபோது, இந்திய மாகடல் ஜூன், ஜூலை மாதங்களில் கொந்தளிப்பாக இருக்கும் என்றும், இது எனது முதற் கடல் பயணமாகவே, நவம்பருக்கு முன் நான் போக அநுமதிக்கக் கூடாது என்றும் என் தமையனிடம் நண்பர்கள் கூறினார்கள்.

இதன் மத்தியில், என் சாதியினர், நான் வெளிநாடு செல்வதைப் பற்றிக் கிளர்ச்சி செய்தார்கள். ஒரு பொது ஜாதிக் கூட்டம் போட்டு, நான் அவர்கள் முன் வருமாறு அழைக்கப்பட்டேன். நான் சென்றேன். எப்படித் திடீரென எனக்கு அவ்வளவு தைரியம் பிறந்தது, என்பது யான் அறியேன்! எதற்கும் அஞ்சாது, சிறிதேனும் தயக்கம் இன்றி, அவை முன்பு வந்தேன். ஜாதித் தலைவர்—அந்த ஷேத், எனக்கு எட்டிய பந்து—

என் தந்தையோடு நல்ல உறவாக இருந்தவர்; அவர் என்னை இவ்வாறு வரவேற்றார்:

"இங்கிலாந்துக்குப் போவதான உன் யோசனை முறை அல்ல என்பது ஜாதிக் கூட்டத்தின் கருத்து. வெளிப் பயணங்களை நமது மதம் தடைசெய்கிறது. நமது மதக் கோட்பாடுகளை மீறாமல் ஆங்கு வாழ முடியாது என்றும் நாங்கள் கேள்விப்படுகிறோம். கட்டாயம் ஐரோப்பியர்களோடு உண்ணவும், குடிக்கவும் வேண்டி இருக்கும்." என்றார். இதற்கு நான் பதில் இறுத்தேன், "இங்கிலாந்துக்குப் போவது நமது மதத்திற்கு எனைத்தும் விரோதமானது என்று நான் கருதவில்லை. மேல் படிப்புக்காக ஆங்கு நான் போக உத்தேசிக்கிறேன். நீங்கள் மிக அஞ்சுகின்ற மூன்று விஷயங்களையும் நான் தீண்டுவதில்லை என்று என் தாயாரிடம் நான் மனப்பூர்வமாக வாக்குறுதி கொடுத்துள்ளேன். அந்தச் சத்தியம் என்னைப் பாதுகாக்கும் என்பது என் உறுதி."

அந்த ஷேத் அதற்கு மீண்டும், "நமது மதத்தை அங்குப் பாதுகாக்க முடியாது என்று உனக்கு நாங்கள் சொல்லுகிறோம். உன் தந்தையோடு எனக்குள்ள சம்பந்தம் உனக்குத் தெரியும்; எனவே நீ என் புத்திமதியைக் கேட்க வேண்டும்," என்று பதில் கொடுத்தார்.

"அந்தச் சம்மந்தம் எனக்கும் தெரியும்." என்றேன். "நீங்கள் எனக்கு ஒரு மூத்தவர் போல. இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நான் உள்ளேன். நான் இங்கிலாந்துக்குப் போவதான எனது தீர்மானத்தை மாற்ற முடியாது. எனது தந்தையின் நண்பரும், ஆலோசகருமான, கற்றறிந்த அப் பிராமணர் நான் இங்கிலாந்து செல்லுவதில் எவ்வித ஆட்சேபனையும் காணவில்லை. என் தாயாரும் தமையனும் எனக்கு அனுமதியும் தந்துள்ளார்கள்."

"ஆனல் நீ ஜாதியின் ஆணையைப் புறக்கணிப்பாயா ?

"உண்மையிலேயே, நான் ஒன்றும் செய்வதற்கியலாத நிலையில் உள்ளேன். ஜாதி இந்த விஷயத்தில் தலையிடக்கூடாது என்று கருதுகிறேன்."

இது அந்த ஷேத்தைக் கோபமூட்டியது. என்னைத் திட்டினர். அசையாது அமர்ந்து இருந்தேன். எனவே, ஷேத் தன் தீர்ப்பை அறிவித்தார். இந்தப் பையன், "இன்று முதல் ஜாதியிலிருந்து விலக்கப்பட்டவனகக் கருதப்படவேண்டும். யாரேனும் அவனுக்கு உதவி செய்தாலும், அவனை அனுப்புவதற்குத் துறைமுகத்துக்குச் சென்றாலும், ஒரு ரூபாய் நாலு அணு அபராத தண்டனைக்கு உள்ளாவார்கள்." அவ்வுத்திரவு என்னிடம் எவ்விதப் பயனும் பயக்கவில்லை. தலைவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். என் தமையனர் இதை எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று கருதினேன். நல்ல வேளையாக, அவர் உறுதியாய் இருந்து, ஷேத்தினுடைய ஆணை இருப்பினும், நான் போவதற்குத் தனது அநுமதி உண்டு என்று எனக்கு உறுதி அளித்தார்.

ஜூனகாட் வக்கீலான திரு. திரியாம் பக்ரி மசும்தார் செல்லும் அதே கப்பல் அறையிலேயே எனக்கும் ஒரு இடம் என் நண்பர்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். அவர்கள் அவருக்கு என்னைப் பற்றி சிபார்சுரைகள் கூறி இருந்தார்கள். அவர் வயதான அனுபவசாலி; உலகம் அறிந்தவர். நானே இன்னும் உலகில் எவ்வித அனுபவமும் இல்லாத பதினெட்டு ஆண்டைய இளைஞன். திரு. மசூம்தார் என்னைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டாம் என்று என் நண்பர்களிடம் கூறினர்.

9
கப்பலில்

எனக்கு ஆங்கிலத்தில் பேசிப் பழக்கம் கிடையாது. திரு. மசும்தாரைத்தவிர, இரண்டாவது வகுப்பில் மற்ற எல்லாப் பிரயாணிகளும் ஆங்கிலேயர். என்னால் அவர் களோடு பேச முடியவில்லை. அவர்கள் என்னிடம் பேச வந்தபோது, அவர்கள் உரைகளை நான் தெரிந்து கொள்ளுவது அரிதாயிருந்தது. அப்படித் தெரிந்த போதும், என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஒவ் வொரு வாக்கியத்தையும் சொல்லு முன்னர், எனது மனதில் அதனை வடிவாக்கிக் கொள்ளவேண்டி இருந்தது. எனக்குக் கத்தி, முள் போன்ற கருவிகளை உபயோகிக்கத் தெரியாது; உணவுப் பட்டியலில் கண்ட எந்தப்பொருள் மாமிசம் இல்லாதது என்று கேட்கத் தைரியம் இல்லை. எனவே மேசையில் நான் சாப்பிடவே இல்லை; எனது அறையிலேயே சாப்பிட்டேன். என் உணவு முக்கியமாக, நான் என்னுடன் கொண்டுவந்திருந்த இனிப்புப்பண்டங் களும் பழங்களுமே ஆகும். திரு. மசும்தாருக்கு எவ்விதச் சிரமமுமில்லை; அவர் எல்லாருடனும் கலந்து பழகினார். கப்பல் மேல் தட்டில் அவர் தாராளமாக நடப்பார்; நானோ நாள் முழுதும் அறையிலேயே அடைத்துக் கிடப்பேன்; மேல் தளத்தில் மிகச் சிலரே இருக்கும் சமயம் பார்த்துத் தான் வெளிக் கிளம்புவேன். மசும்தார், என்னைப் பிரயாணிகளோடு கலந்து அவர்களோடுத் தாராளமாகப் பேசுமாறும், வற்புறுத்திக் கொண்டே வந்தார். அவர், வழக்குரைப்போர்களுக்கு நீண்ட நாக்கு இருக்க வேண் டும் என்றும், சட்டத்தொழிலில் தன் அனுபவத்தையும் எடுத்துரைத்தார். ஒரு அன்னிய மொழியைப் பேசும் போது நிச்சயமாகத் தவிர்க்கொணாத பிழைகள் ஏற்படு வதைப் பொருட்படுத்தாது, ஆங்கிலத்தில் பேசக்கிடைக்

கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எனக்குப் புத்திமதி கூறினர். ஆனால் எனது கூச்சத்தை வெல்லச் செய்ய எதனாலும் முடிய வில்லை.

ஒரு ஆங்கிலப் பிரயாணி, என்னிடம் அன்புடன், என்னைப் பேசுவதற்கு இழுத்தார். அவர் என்னைவிட வயதானவர். அவர், என்னிடம், நான் என்ன சாப்பிடு கிறேன், எனக்கு என்ன வேலை, நான் எங்குப் போகி றேன், நான் ஏன் கூச்சப்படுகிறேன் என்றவாறெல் லாம் கேட்டார். என்னை மேஜைக்கு வருமாறு எனக் குப் புத்தி சொன்னர். அவர், நான் புலால் உண்ண மறுப்பதை வற்புறுத்துவதைக் கேட்டுச் சிரித்துவிட்டு, நாங்கள் செங்கடலில் இருந்தபோது சிநேகபான்மை யுடன் சொன்னர்: "இதுவரை எல்லாம் சரிதான்; ஆனல் பிஸ்கே விரிகுடாக் கடலில், உனது முடிவை மாற்ற வேண்டியதுதான்; புலாலின்றி ஒருவர் வாழ முடியாத அளவு சீமையில் குளிராயிருக்கும்."

"ஆனல் புலால் உண்ணுமல் மக்கள் வாழ முடியும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்." என்று நான் சொன்னேன்.

"அதெல்லாம் கதை என்று அறிவாயாக. நான் அறிந்தவரை அங்கு மாமிசம் உண்ணுதவரே கிடையாது. நான் மதுவினை அருந்தினலும், உன்னை அருந்துமாறு கேட்கவில்லை என்பது உனக்குத் தெரியவில்லையா? புலால் உண்ணுது வாழமுடியாது; ஆதலால்தான் நீ உண்ணவேணும் என்று கருதுகிறேன்," என்று சொன்னர்.

"உங்கள் புத்திமதிக்கு நன்றி. ஆனல் புலாலைத் தீண்டுவதில்லை என்று என் தாயாருக்கு மனப்பூர்வமான உறுதிமொழி கொடுத்துள்ளேன்; எனவே அதைப்பற்றி நான் நினைப்பதற்கே இல்லை. அஃதில்லாமல் அங்கிருக்க முடியாது என்று காணநேர்ந்தால், அங்கிருப்பதற்காக

ஊன் உண்ணுவதைவிட, இந்தியாவுக்கே திரும்பிப் போய் விடுவேன்.''

பிஸ்கே விரிகுடாக் கடலில் நுழைந்தோம். ஆனால் மதுவோ, மாமிசமோ, இவற்றின் அவசியத்தை நான் உணர ஆரம்பிக்கவில்லை. ஒரு சனிக்கிழமை சவுதாம்டன் வந்து சேர்ந்ததாக, என் நினைவு. கப்பலில் நான் கறுப்பு காலணி* உடை போட்டுக்கொண்டு இருந்தேன். என் நண்பர்கள் எனக்கு வாங்கித் தந்த, வெள்ளை பிளானல் உடை நான் கப்பலைவிட்டு இறங்கும்போது தரிப்பதற்காக வைத்திருந்தேன். துறைமுகத்தில் இறங்கும்போது, வெண்மை ஆடை எனக்கு நன்றாகப் பொருந்தும் என்று எண்ணி இருந்தேன். ஆகையினால் வெள்ளைப் பிளானல் உடை தரித்து இறங்கினேன். அவை செப்டம்பரின் கடேசி நாட்கள்; இத்தகைய ஆடை அணிந்திருந்தது நான் ஒருவனே என்று கண்டேன்: திறவுகோல்கள் உள்பட என் சாமான்கள் அனைத்தையும், கிரிண்ட்லே' கம்பெனியின் ஏஜெண்டு வசம் ஒப்பி வித்தேன்; ஏனைய பலரும் அவ்வாறு செய்வதைப் பார்த்து, நானும் அதைப் பின்பற்றினேன்.

டாக்டர் பி. ஜே. மேத்தா, திரு. தல்பத்ராம் சுக்லா, ரஞ்சிட்சிங்ஜி ராஜ்குமாரர், தாதாபோய் நௌரோஜி ஆகிய நால்வருக்கும் என்னிடம் அறிமுகக் கடிதங்கள் இருந்தன. இலண்டனில், விக்டோரியா ஹோட்டலில் தங்குமாறு கப்பலில் ஒருவர் ஆலோசனை கூறி இருந்தார். எனவே, திரு. மசும்தாரும் நானும் அங்குச் சென்றோம். வெள்ளை ஆடையில் இருப்பவன் நான் ஒருவனே என்ற வெட்கம் எனக்கு அதற்குள்ளாகவே என்னால் பொறுக்க முடியாமலிருந்தது. என் சாமான்கள் கிரிண்ட்லே கம்பெனியிலிருந்து மறுநாள், ஞாயிறு ஆகவே, எனக்கு வந்து சேராது என்று விடுதியில் சொன்னபோது மனமுடைந்தேன்.

* காலணி உடை - சூட் (suit)

சவுதாம்டனில் இருந்து டாக்டர் மேதாவுக்குத் தந்தி கொடுத்து இருந்தேன். அவர் அன்று மாலையே எட்டு மணி சுமாருக்கு என்னை வந்து பார்த்தார். என்னை உளமார வரவேற்றூர். நான் பிளானல் ஆடையில் இருப்பதைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். நாங்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது, அவருடைய தொப்பியை நான் எடுத்து, அது எவ்வளவு மிருதுவாக இருப்பதைப் பார்க்கத் தடவியபோது, எதிர்ப்பக்கமாகத் தடவியதால், அதிலுள்ள பீலிகள் கலைந்து போயின. டாக்டர் மேத்தா நான் செய்து கொண்டிருந்ததைக் கொஞ்சம் கோபமாகப் பார்த்து, அதை நிறுத்தினூர். ஆனல் தவறு நடந்துவிட்டது. இந்நிகழ்ச்சி, பிற்காலத்திற்கு ஒரு எச்சரிக்கையாக இருந்தது. ஐரோப்பிய மரியாதைப் பண்பில் இது ஒரு முதற்பாடம். டாக்டர் மேத்தா அதன் நுணுக்கங்களில் என்னை நகைச்சுவையோடு பயிற்றுவித்தார். அவர் சொன்னூர்: "மற்றவர் சாமான்களைத் தொடாதே. நாம் இந்தியாவில் செய்வது போல், முதல் பரிச்சயத்திலேயே, கேள்விகள் கேட்காதே. உரத்துப் பேசாதே; இந்தியாவில் செய்வதுபோல், மற்றவர்களை 'சார்' என்று விளிக்காதே. வேலைக்காரரும், கீழ் அதிகாரிகளுமே தங்கள் எஜமானர்களை அவ்வாறு விளிக்கிறூர்கள்." இன்ன இனையன அவர் சொன்னூர். விடுதியில் இருப்பது மிகச் செலவுகரமானதென்றும் சொன்னூர்; ஒரு தனிக் குடும்பத்தில் தங்குவது நல்லது என்றும் அவர் எனக்குச் சிபாரிசு செய்தார்.

திரு. மசும்தாரும் நானும் விடுதி ஒரு சிரமமான விஷயம் என்பதைக் கண்டோம். மால்டாவிலிருந்து ஒரு சிந்தி எங்கள் கூடப்பிரயாணம் செய்தார்; அவர் மசும்தாருக்கு சிநேகம் ஆனூர். அவர் இலண்டனுக்குப் புதியவர் அல்லர். எனவே அவர் எங்களுக்கு அறைகள் பார்த்துத் தருவதாகச் சொன்னூர். நாங்கள் ஒத்துக்

கொண்டோம். திங்கட்கிழமை, எங்கள் சாமான்கள் வந்தவுடன், விடுதிக்குப் பணம் கொடுத்துவிட்டு சிந்தி நண்பர் எங்களுக்கு வாடகைக்குப் பிடித்து இருந்த அறைகளுக்குச் சென்றோம். என் ஹோட்டல் கணக்கு 3 பவுனாயிற்று; இத்தொகை என்னைத் தூக்கிவாரிப் போட்டது. தொகை இவ்வளவு அதிகமாக இருந்தும், நான் அநேகமாகப் பட்டினியே கிடந்தேன். ஏனென்றால் எனக்கு ஒன்றும் ருசிக்கவில்லை. ஒரு பண்டம் பிடிக்காத போது, இன்னொன்று கேட்டேன்; ஆனால் இரண்டுக்கும் பணம் கொடுத்தாகவேண்டும். உண்மை என்னவென்றால், பம்பாயிலிருந்து நான் என்னுடன் கொண்டு வந்திருந்த பொருள்களையே இதுகாலம் வரையும் நம்பி வந்தேன்.

இப்புது அறைகளில் நான் மிகவும் சஞ்சலம் உற்றிருந்தேன். எனது வீட்டையும் நாட்டையும்பற்றி ஓயாது நினைக்கலுற்றேன். என் தாயாரின் அன்பு என் மனதில் உலவியது. இரவில், கன்னங்களின் வழி கண்ணீர் பொழியும். பலவிதமான வீட்டு நினைவுகள் வந்து தூக்கம் என்ற விஷயம் இல்லாமலே செய்து விட்டன. இச்சஞ்சலத்தை நான் யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது. அப்படியே பகிர்ந்து கொள்வதானாலும், அதனால் என்ன பயன்? எனக்கு ஆறுதல் அளிக்கக்கூடியது ஒன்றும் தெரியவில்லை. மக்கள், அவர்கள் நடைகள், அவர்கள் வீடுகளும்கூட எல்லாம் புதியன. ஆங்கிலேய நடைமுறைப் பழக்கங்களுக்கு நான் முற்றிலும் புதியவன்; எனவே ஓயாமல் கவனமாக இருக்கவேண்டியதாயிற்று. அத்துடன் 'சைவ உணவு' விரதமும் இன்னும்கூடச் சேர்ந்தபடியால் அசௌகரியம் அதிகமாயிற்று. நான் உண்ட பதார்த்தங்களும் கூட ருசியில்லாமல் சப்பென்று இருந்தது. எனவே நான் இருதலைக்கொள்ளி எறும்பு போலானேன். இங்கிலாந்து, என்னால் சகிக்கமுடியவில்லை. ஆனால் இந்தியாவுக்குத்

திரும்புவதோ நினைக்கவும் முடியாதது. நான் வந்தாயிற்று; எனவே, இந்த மூன்று ஆண்டுகளை எப்படியும் முடித்தே தீரவேண்டும் என்று என் அந்தராத்துமா கூறிற்று.

பாகம் II

இங்கிலாந்தில் – ஒரு மாணவனாக

10

இலண்டனில்

டாக்டர் மேத்தா, என்னைப் பார்க்கத் திங்கட்கிழமை விக்டோரியா விடுதிக்குச் சென்றார். அவர் நாங்கள் அங்கு விட்டுப் போய் விட்டோம் என்பதைக் கண்டு பிடித்து, எங்கள் புது முகவரியைத் தெரிந்துகொண்டு, எங்கள் அறையில் எங்களை வந்து சந்தித்தார். டாக்டர் மேத்தா அந்த அறைகளையும் ஏனைய சாமான்களையும் பார்வையிட்டு அதனை ஒத்துக்கொள்ளாத முறையில் தலையை அசைத்தார். "இது சரிப்படாது, நாம் இங்கிலாந்துக்கு வருவது படிப்புக்காகக் கூட அவ்வளவு அல்ல. ஆங்கிலேய வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் இவை களைப் பற்றி அனுபவம் அடைவதற்காகவே. அதற்கு நீ ஒரு குடும்பத்தோடு தங்க வேண்டும். அப்படி நீ செய்யு முன்னர், என்னுடைய நண்பர்..........., கூட சில காலம் நீ முற்பயிற்சி பெறுதல் நலம். நான் உன்னை அங்கு அழைத்துச் செல்லுகிறேன்." என்று சொன்னார்.

அந்த ஆலோசனையை நான் நன்றி அறிதலோடு ஏற்றுக்கொண்டு, அந்த நண்பர் அறைக்குச் சென்றேன். அவர் மிகப் பிரியமாக என்னைக் கவனித்தார். தன் சொந்தச் சகோதரன் போல் பாவித்து, ஆங்கிலேய நடை உடை பழக்க வழக்கங்களை எனக்கு எடுத் துரைத்து, அந்த மொழி பேசவும் பழக்கப்படுத்தி வைத்தார். உப்பும் தாளிதமும் இல்லாத வெறுமனே வேகவைத்த காய்கறிகள் எனக்குச் சுவைக்கவில்லை. வீட்டு அம்மாளுக்கு எனக்கு என்ன தயார் செய்வது

என்று விளங்க வில்லை. காலைச் சாப்பாட்டுக்கு 'ஓட்மில் கஞ்சி; அது வயிறு நிரப்பிவிடும். ஆனால் நண்பகலும் இரவும் நான் எப்பொழுதும் பட்டினி. புலால் உண்ணுமாறு என் நண்பர் எனக்கு ஓயாது காரணம் காட்டி வாதித்து வந்தார்; நான் எனது சத்தியத்தையே எப்பொழுதும் சொல்லி வாளா இருந்தேன். மதியமும் இரவும் எங்களுக்குப் பசலைக்கீரையும், ரொட்டியும், 'ஜாமும்' உண்டு. நான் நன்றாகச் சாப்பிடுபவன்; என் வயிறும் பெரிது. ஆனால் இரண்டு மூன்று ரொட்டித் துண்டுகளுக்கு மேலே கேட்க எனக்கு வெட்கமாயிருந்தது; அப்படிக் கேட்பதும் சரியில்லாததுபோல் தோன்றியது. இத்துடன், நண்பகலிலும் இரவிலும் சாப்பாட்டுக்குப் பாலும் கிடையாது. அந்த நண்பர், இத்தகைய என் நிலையைப் பார்த்து வெறுப்படைந்து, "நீ என் சகோதரனாய் இருந்திருந்தால், உன்னை ஊருக்கு அனுப்பி இருப்பேன். எழுதப்படிக்கத் தெரியாத ஒரு தாயார் முன்னர், இங்குள்ள நிலைமைகளை அறியாமல், செய்யப்பட்ட ஒரு சத்தியத்தின் மதிப்பு என்ன? அது சத்தியமே அல்ல. சட்டத்தில் அது ஒரு வாக்குறுதியாகவே கருதப்பட மாட்டாது. இந்த வாக்குறுதியை ஒட்டிக்கொண்டிருப்பது ஒரு மூடநம்பிக்கையே. இப்படி அதனை வற்புறுத்தி வருவதினால் இங்கு எதனையும் தெரிந்து கொள்ளப் பயன் படாது என்று நான் சொல்லுகிறேன். புலாலை உண்டு ருசித்திருக்கிறேன் என்று ஒப்புக்கொள்ளுகிறாய். சிறிதும் அவசியமில்லாத இடத்தில் அதை நீ சாப்பிட்டாய்; மிகவும் அவசியமான இடத்தில் உண்ண மாட்டேன் என்கிறாய்! என்னே பரிதாபம்!

ஆனால் நான் அசையவில்லை.

தினம் ஓய்வும் ஒழிதலும் இல்லாமல் என் நண்பர் வாதிப்பார். ஆனால் என்றும் சொல்லிவந்த 'முடியாது' என்ற பதிலே வரும். அவர் வாதிக்க வாதிக்க, என் பிடிவாதமும் வலுத்து வந்தது. நாளும் ஆண்டவன்

பாதுகாப்பை நான் கோரிப் பெற்று வந்தேன். கடவுளைப் பற்றி எனக்கு அப்போது அறிவு உண்டாகிவிட்டது என்பதில்லை. ஆனால் நம்பிக்கையே வேலை செய்து வந்தது. அந்த நல்ல செவிலி ராம்பா போட்ட விதையினால் விளைந்த நம்பிக்கையே இவ்வாறு வேலை செய்தது.

ஒரு நாள் அந்த நண்பர் பெந்தாம் (Bentham) எழுதிய 'உபயோகத்தின் தத்துவம்' 'Theory of Utility' என்ற நூலை எனக்குப் படிக்க ஆரம்பித்தார். எனக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. அதன் நடை, அறிந்து கொள்ளுவதற்கு மிகக் கடினமாய் இருந்தது. அதை அவர் விளக்க ஆரம்பித்தார். நான் சொன்னேன் :

"தயை கூர்ந்து மன்னியுங்கள். இந்த விஷயங்கள் எனக்கு அப்பாற்பட்டவை. புலால் உண்ணவேண்டியது அவசியம் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். என் விரதத்தை நான் மீற முடியாது. அதைப்பற்றி உம்மோடு வாதாடவும் முடியாது. வாதத்தில் நான் உம்மை எதிர்த்துரைக்க முடியாது என்பதும் நிச்சயம். ஆகையால் தயவு செய்து என்னைப் பிடிவாதக்காரன் அல்லது முட்டாள் என்று விட்டுவிடுங்கள். உமது அன்பை நான் பாராட்டுகிறேன். நீர் எனது நந்நலம் நாடுபவர் என்பதும் அறிவேன். நீர் இதைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்லுவதற்கு எல்லாம் காரணம், எனக்காக நீர் உணர்வதுதான் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை, விரதம் விரதமேயாகும்; அது மீறொணாதது."

நண்பர் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தார். நூலை மூடி விட்டு அவர் சொன்னார் : "நிரம்ப சரி. இனிமேல் நான் வாதாடுவதில்லை." நான் மகிழ்வுற்றேன். அந்த விஷயத்தைப் பற்றி அவர் பின்பு விவாதிக்கவே இல்லை. ஆனால் அவர் என்னைப் பற்றிக் கவலைப்படுவதை மட்டும் நிறுத்தவில்லை. அவர் குடிப்பார்; புகைப்

பிடிப்பார். ஆனால் என்னை அவ்வாறு செய்யச் சொல்லவில்லை. வாஸ்தவத்தில், அவைகளிலிருந்து என்னை விலகி இருக்குமாறே கூறினார். அவருடைய ஒரே கவலை எல்லாம், நான் புலால் உண்ணாததால் மிகவும் மெலிந்து போய், இங்கிலாந்தில் நான் உற்சாகத்துடன் காலங் கழிக்க முடியாது என்பதே ஆகும்.

இவ்வாறு ஒரு மாதம் என் முதற் பயிற்சியைக் கழித்தேன். எனது நண்பர் வீடு ரிச்மாண்டில் இருந்தது. எனவே வாரம் ஓரிரு முறைக்கு மேல் இலண்டன் போக முடியாது. டாக்டர் மேதாவும், திரு தல்பத்ராம் சுக்லாவும் நான் ஏதாவது ஒரு குடும்பத்தோடு தங்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். திரு சுக்லா மேல் கெனிங்ஸ்டனிலுள்ள ஒரு ஆங்கில இந்தியர் வீட்டைத் தெரிந்து எடுத்து, என்னை அங்குக் குடி இருக்கும்படி வைத்தார். அந்த வீட்டு அம்மாள் ஒரு கைம்பெண். எனது பிரதிக்ஞையைப் பற்றி அவளிடம் சொன்னேன். அந்த வயதான அம்மாள் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்ளுவதாக வாக்குச் சொன்னாள். எனவே, அவள் வீட்டில் எனது உறைவிடத்தை வைத்துக் கொண்டேன். இங்கும் கூட நான் அநேகமாகப் பட்டினி கிடக்கவே நேர்ந்தது. வீட்டிற்கு இனிப்புக்களும் வேறு தின் பண்டங்களும் அனுப்புமாறு எழுதி இருந்தேன். ஆனால் இதுவரை ஒன்றும் வரவில்லை. எல்லாம் சப்பென்று இருந்தது. ஒவ்வொரு நாளும், அக் கிழவி அம்மாள் எனக்கு உணவு பிடித்ததா என்று கேட்பாள்; ஆனால் அவள் என்ன செய்ய முடியும்? இன்னும் நான் முன் போலவே கூச்சம் உள்ளவனாகவே இருந்தேன்; எனக்கு முன்னர் படைத்திருந்ததை விட அதிகம் வைக்குமாறு கேட்கத் துணியேன். அவளுக்கு இரண்டு பெண்கள். அவர்கள் கூட ஒன்றிரண்டு ரொட்டித் துண்டை எனக்குப் பரிமாற முன் வருவார்கள். ஆனால் ஒரு முழு ரொட்டிக்குக் குறைவாக எதுவும் என்

வயிற்றை நிரப்பி இருக்காது என்பது அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது.

இப்பொழுது நான் ஸ்திரப்பட்டுவிட்டேன். நான் இன்னும் ஒழுங்காகப் படிக்கத் தொடங்கவில்லை. திரு. சுக்லாவினுல் நான் செய்தித்தாள்களைப் படிக்க இப்பொழுதுதான் ஆரம்பித்தேன். இந்தியாவில் நான் செய்தித்தாளை என்றும் படித்ததே இல்லை. ஆனுல் இங்கே அவற்றை ஒழுங்காகப் படித்ததினுல், அவற்றில் ஒரு பிரியம் உண்டாவதைப் பயின்று கொண்டேன். 'தி டெய்லி நியூஸ்', 'தி டெய்லி டெலிகிராப்', 'தி பால் மால் கெஜட்' என்ற செய்தித்தாள்களை எப்பொழுதும் பார்ப்பேன். இது ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகாது. எனவே, நான் சுற்றித்திரிய ஆரம்பித்தேன். ஒரு காய் கறி உணவு விடுதியைத் தேடிப் புறப்படலானேன். இத்த கைய இடங்கள் நகரத்தில் உள என்று வீட்டு அம்மாள் எனக்குச் சொல்லி இருந்தாள். ஒவ்வொரு நாளும், நான் பத்துப் பனிரண்டு மைல் நடந்து, ஒரு சகாய மான விடுதிக்குச் சென்று, வயிருர ரொட்டி சாப்பிடு வேன்; என்ருலும் மன நிறைவு அடைவதில்லை. இவ்வாறு சுற்றிவரும் பொழுது, ஒரு சமயம் பாரிஸ்டன் தெருவில் ஒரு 'சைவ' விடுதியைக் கண்டேன். தன் மனதுக்கு உகந்த ஒரு பொருளைக் கண்டதும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு மகிழ்ச்சி இருக்குமோ, அவ்வளவு மகிழ்ச்சி எனக்கும் அதைப் பார்த்ததும் இருந்தது. உள்ளே நுழையு முன்னர், வாசலுக்குப் பக்கத்தில் ஒரு கண்ணுடி ஜன்னலில் விற்பனைக்கு நூல்கள் வைக்கப்பட்டிருப்ப தைப் பார்த்தேன். அவைகளில் 'சால்ட்' எழுதிய 'சைவ உணவுக்கு ஆதரவு' என்ற நூலைப் பார்த்தேன். இதை ஒரு 'ஷிலிங்'குக்கு வாங்கிக்கொண்டு, சாப்பிடும் அறைக்கு நேராகச் சென்றேன். நான் இங்கிலாந்து வந்ததற்பின் இதுவே நான் மனமார உண்ட முதல் உணவாகும்.

சால்டின் நூலை அடியிலிருந்து முடிவு வரைப் படித்தேன். அது என்னை மிகவும் கவர்ந்தது. அந்த நூலை நான் படித்த நாளிலிருந்து நான் எனது விருப்பத்தினுலேயே சைவ உணவு சாப்பிடுபவன் ஆகிவிட்டேன் என்று சொல்லிவிடலாம். எனது தாயார் முன் நான் பிரதிக்ஞை செய்த நாளை வாழ்த்தினேன். இது நாள் வரை நான் மாமிசம் உண்ணுதது, உண்மைக்காகவும், நான் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞைக்காகவுமே; அதே சமயத்தில், ஒவ்வொரு இந்தியனும் மாமிசதாரியாக இருக்கவேண்டும் என்றும், நானே தாராளமாகவும் பகிரங்கமாகவும் அவர்களில் ஒருவனுகை இருக்கும் நாளை எதிர்நோக்குபவனுமாக இருந்து வந்தேன்; மற்றவர்களையும் இந்தக் காரியத்திற்குச் சேர்க்கவேண்டும் என்றும் எண்ணி இருந்தேன். ஆனுல் சைவ உணவுக்கு ஆதரவாகவே இப்பொழுது முடிவு செய்தேன். இனிமேல் இதனைப் பரப்புவது என் வாழ்க்கை வேலையாயிற்று.

11

ஆங்கிலக்கனவானுகை நடித்தல்

இதன் மத்தியில் என் நண்பர் என்னைப்பற்றிக் கவலைப் படுவதை நிறுத்தவில்லை. அவர் ஒரு நாள் என்னை நாடகத்துக்கு வருமாறு அழைத்தார். நாடகம் தொடங்குமுன் நாங்கள் இருவரும் ஹால்பரன் விடுதியில் சாப்பிடுவதாக ஏற்பாடு. எனது கூச்சம், கேள்வி எதையும் கேட்க இடங்கொடாது என்று கருதியே என்னை இந்த விடுதிக்குக் கூட்டிச் செல்லத் திட்டம் இட்டிருந்தார் போலும்! ஆங்கு மிகப் பெரிய விருந்துக் கூட்டம்; அதன் மத்தியில் நானும் எனது நண்பரும் ஒரு மேஜையருகே அமர்ந்தோம். முதலில் ரஸம் வந்தது. அஃது எதனுல் செய்யப்பட்டிருக்கும் எனத் திகைத்

தேன். ஆனால் நண்பரைக் கேட்கத் துணிவில்லை. எனவே பரிமாறுகிறவனைக் கூப்பிட்டேன். எனது சமிக்ஞையை என் நண்பர் கவனித்து என்ன விஷயம் என்று மேஜையின் எதிர்ப்புறத்திலிருந்து கோபமாகக் கேட்டார். மிகவும் தயக்கத்துடன் நான் அவரிடம் இந்த ரஸம் காய்கறியாலானதா என்று விசாரிக்க விரும்பினேன் என்று சொன்னேன். அவர் கோபத்தோடு, "நீர் நாகரிகமான கூட்டத்துக்கு லாயக்கே இல்லை" என்று உரத்துச் சொன்னார். "உமக்குச் சரியாக நடந்து கொள்ளத் தெரியாவிட்டால், நீர்போய் விடுவதே நலம். வேறு விடுதி எதிலேனும் சாப்பிட்டுவிட்டு, என்னை வெளியே எதிர்பாரும்" என்றார். இது எனக்கு மகிழ்வூட்டியது. சென்றேன் வெளியே. அண்மையில் ஒரு சைவவிடுதி இருந்தது; ஆனால் அது சாத்தி இருந்தது. எனவே அன்றிரவு நான் சாப்பிடவில்லை. நான் என் நண்பரோடு நாடகசாலைக்குச் சென்றேன். அந்த நண்பர் அன்றைய நிகழ்ச்சியைப் பற்றி ஒரு சொல் கூடச் சொல்லவில்லை. என் மட்டிலோ, நான் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

இதுவே எங்களுக்குள் நடந்த கடைசியான சிநேக பான்மையான சண்டை. இது எங்கள் உறவைச் சிறிதேனும் பாதிக்கவில்லை. எனது நண்பரின் முயற்சிகள் அனைத்தும் அன்பினால் தூண்டப்பட்டன என்று நான் கண்டு அவரைப் பாராட்டினேன். எங்கள் கருத்திலும் செயலலிலும் வேறுபாடுகள் இருந்த காரணம் பற்றியே, அவரிடம் எனக்கு மதிப்பு அதிகம் இருந்தது.

நான் அவரைச் சமாதானப்படுத்தவேண்டும் என்றும், நான் இனி அநாகரிகமாக நடந்துகொள்ளுவதில்லையென்றும், மிக நாசூக்கானவராக இருப்பதற்கு முயல்வேன் என்றும், எனது 'சைவவுணவு'க் கொள்கைக்கு நாகரிகமான கூட்டத்திற்கு தகுதி பெறு

வதற்கு உரிய ஏனையப் பண்புகளைப் பயின்றுகொள்ளுகிறேன் என்றும், உறுதி கூறுவதாகத் தீர்மானித்தேன். இந்தக் காரியத்துக்காக, ஆங்கிலேய கனவான் ஆவதற்கு உள்ள, செய்தற்கே அரியதான காரியத்தை மேற்கொள்ளலானேன்.

பம்பாய் முறையில் தைத்த என் ஆடைகள் ஆங்கிலேயக் குழுவுக்கு உகந்தது இல்லை எனக் கருதினேன்.; எனவே 'ஆர்மிநேவிஸ்டோரில்' புது உடைகளைப் பெற்றேன். பத்தொன்பது ஷில்லிங் விலையுள்ள—அந்த நாளிலே அது அதிக விலையுள்ளது—ஒரு 'சிம்னி-ஹாட்' ஒன்று வாங்கினேன். இலண்டனில் நாகரிக மக்கள் வாழும் பகுதியான பாண்டு தெருவில், மாலையில் அணியும் "சூட்" ஒன்று வாங்கிப் பத்து பவுண் விரையம் செய்தேன். சிறந்த உள்ளம் படைத்த எனது அருமைச் சகோதரரை இரண்டுவடத் தங்கக் கெடிகாரச் சங்கிலி ஒன்று அனுப்பச் செய்தேன். செய்யப்பட்ட கழுத்துப் பட்டையை (டை) கட்டுவது சரியல்ல; எனவே நானே டை கட்டிக்கொள்ளும் கலையைக் கற்றுக்கொண்டேன். இந்தியாவில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒரு 'ஷோக்கு'ப் பொருள்; குடும்ப நாவிதன் என் முகத்தை வழிக்கும் போதுதான் எங்களுக்குக் கண்ணாடி தரப்படும். இங்கு நாளும் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி முன் நின்று எனது 'டை'யைச் சீர்படுத்துவதிலும், தலையைச் சரியான மோஸ்தரில் வகுப்பு எடுப்பதிலும் பத்து நிமிடம் வீணாக்கி வந்தேன்: எனது முடி அப்படி ஒன்றும் மிருதுவானதல்ல. ஒவ்வொரு நாளும் அதைச் சரிப்படுத்துவது 'பிரஷோடு' வழக்கமாகப் போராட்டமாகவே இருந்தது. தலையில் தொப்பியை வைக்கும்போதும், எடுக்கும் போதும், முடியைச் சீர்படுத்துவதற்கு, என் கைகள் தானாகவே தலையை நோக்கிச் செல்லும். நாகரிகமான குழுவோடு அமர்ந்திருக்கும்போதும், அடிக்கடி இவ்வாறு

செய்துவரும் நாகரிகப் பழக்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாமே.

கனவானாகத் தோன்றுவதற்கு இவைகள் எல்லாம் போதாவென்று, ஒரு ஆங்கில கனவானாவதற்கு எவை எல்லாம் வேண்டும் என்று கருதப்படுகிறதோ, அந்த ஏனைய விவரங்களிலும் என் கவனத்தைச் செலுத்தினேன். நடனம், பிரஞ்சுமொழி, சொல்லாற்றல், இவைகளைப் பயின்றுகொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். பிரஞ்சு, அண்மையிலுள்ள பிரான்சு நாட்டு மொழிமட்டுமன்று, ஐரோப்ப கண்ட முழுதுக்கும் பொதுமொழி. ஐரோப்பக் கண்டத்தில் பிரயாணம் செய்ய எனக்கு ஆவல் இருந்தது. எனவே நடன வகுப்பில் சேருவதாக முடிவு செய்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 3 பவுண் கட்டணம் செலுத்தினேன். மூன்று வாரத்தில் ஆறுபாடங்கள் கற்றிருப்பேன். ஆனால், இசைக்கு இசைய நடனம் பயில்வது என்பது, என்னால் இயலாத காரியமாக இருந்தது. 'பயானோ' வாத்தியத்தை என்னால் பின்பற்ற முடியவில்லை. எனவே அதோடு நேரத்தை இசைக்க முடியவில்லை. நான் பின் என்னதான் செய்ய? கதையில் ஒரு துறவி எலிகளை விரட்டப் பூனை வளர்த்தார்; பூனைக்குப் பால்கொடுக்க ஒரு பசுவை வளர்த்தார்; பசுவைப் பார்க்க ஒரு ஆளை வைத்தார்; இப்படியே மேலும் மேலும் எனது ஆசைகளும், கதையின் சந்நியாசியின் குடும்பம் போல, வளர்ந்தன. மேலைநாட்டு இசைக்கு என் காதுகளைப் பழக்கப்படுத்த பிடில் வாசிக்க வேண்டும் என்று எண்ணினேன். எனவே, ஒரு பிடிலுக்கு 3 பவுனும் அதைவிடக் கொஞ்சம் அதிகம் சம்பளத்திற்கும் செலவழித்தேன். சொற்பொழிவுப் பாடம் சொல்லிக்கொடுக்க மூன்றாவது ஒரு ஆசிரியரைக் கண்டு, பூர்வாங்கச் சம்பளமாக ஒரு 'கினி' கொடுத்தேன். 'பெல்' எழுதிய 'ஸ்டான்டேர்டு எலக்யூஷனிஸ்டு' என்ற சொல்

லாற்றல் நூலை எனக்குப் பாடப்புத்தகமாகச் சிபாரிசு செய்தார்; அதை நான் வாங்கினேன். பிட் (Pitt) என்பவரின் சொற்பொழிவை முதலாவதாகப் படிக்கத் தொடங்கினேன்.

ஆனால் திரு. 'பெல்', எச்சரிக்கை மணியை என் காதில் அடித்தார்; நான் விழிப்புற்றேன்.

நான் என் வாழ்க்கை முழுதும் இங்கிலாந்தில் கழிக்கவேண்டியதில்லையே என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். எனவே, சொற்பொழிவுக் கலை படிப்பதினால் என்ன பயன்? நடனம் எப்படி என்னைக் கனவானாக ஆக்கும்? பிடிலை நான் இந்தியாவிலேயே படித்துக்கொள்ளலாம். நான் இங்கு ஒரு மாணவன். என் படிப்பையே கவனிக்க வேண்டும். இலண்டன் வழக்குரைப்போர் மன்றத்தில் சேருவதற்கு நான் என்னைத் தகுதி செய்துகொள்ளவேண்டும். என் ஒழுக்கம் என்னைக் கனவானாகச் செய்ய முடியுமானால், அந்த மட்டும் நல்லது; அஃது இல்லையேல், அந்த ஆசையை விட்டுவிடவேண்டியதுதான்.

இவையும், இவை போன்ற எண்ணங்களும் என்னைக் கவ்வின. எனது செற்பொழிவுக் கலை ஆசிரியருக்கு இக் கருத்துக்களை ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்து, மேற்கொண்டு பாடம் நான் படிக்க வராமைக்கு மன்னிக்குமாறு வேண்டியிருந்தேன். நானும் இரண்டு மூன்று பாடங்கள்தான் படித்து இருந்தேன். நடன ஆசிரியருக்கும் இதேமாதிரியான கடிதம் எழுதினேன். பிடில் ஆசிரியரிடம் நேரே சென்று பிடிலை அதுபோகும் விலைக்கு விற்றுவிடும்படி வேண்டிக் கொண்டேன். அந்த அம்மாள் நேசப்பான்மையாக இருந்தார்; எனவே, நான் அப்படி ஒரு தவறான எண்ணத்தில் சென்று கொண்டிருப்பதைக் கண்டுபிடித்ததைக் கூறினேன். ஒரு முழு மாறுதல் செய்ய நான் கொண்ட உறுதியில் அந்த அம்மாள் என்னை ஊக்கினார்.

இந்த வெறி சுமார் மூன்று மாதங்கள் நீடித்திருக்கும். உடையிலே எனது கவனம் பல வருடங்கள் நிலைத்திருந்தன. ஆனால், அதன் பிறகு நான் ஒரு மாணவன் ஆனேன்.

12

மாறுதல்கள்

நடனம், மற்று இனையவைகளில் எனது அனுபவங்களால் எனது வாழ்க்கையில், போகத்தில் நான் ஆழ்ந்து விட்டதாக யாரேனும் கருதற்க. அப்போதும் கூட என் அறிவை நான் பறிகொடுக்கவில்லை என்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். மயக்குற்றிருந்த காலத்திலும், ஓரளவு அகமுக நோக்கில் ஆய்ந்ததும் உண்டு; எனது செலவுகள் கவனமாகத் திட்டமிடப்பட்டிருந்தன.

நான் வாழும் முறையைப்பற்றிக் கூர்ந்து கவனித்து வந்ததால், சிக்கனம் செய்யவேண்டிய அவசியத்தை நான் உணர முடிந்தது. எனவே ஒரு குடும்பத்தில் மேற்கொண்டு தங்குவதற்குப் பதிலாக அறைகள் எடுத்துக் கொள்ளுவதென்று தீர்மானித்தேன். நான் செய்யவேண்டியவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது இடங்களை மாற்றிக்கொள்ளுவதென்றும் தீர்மானித்தேன். இதனால் இதேசமயத்தில் அனுபவமும் கிடைக்கும். என் வேலை இடத்திற்கு நடந்து அரைமணி அளவில் செல்லக்கூடிய படி அறைகள் தேர்ந்து எடுக்கப்பட்டன. இதனால் 'பஸ்' கட்டணம் மிச்சம் ஆனது. இதற்கு முன்னர், நான் எங்குச் சென்றாலும், ஏதாவது ஒரு வகை வாகனத்திலேயே செல்லுவேன்; உலாவுவதற்குத் தனியாக வேறு நேரம் பார்க்க வேண்டும். இந்தப் புது ஏற்பாடு, உலாவுதல் சிக்கனம் இரண்டையும் ஒன்றில் இணைத்துள்ளது; பஸ் கட்டணம் மிச்சம்; தினம் எட்டு அல்லது பத்து மைல் நடையும் கிடைத்தது. முக்கிய

மாக இந்த நீண்ட நடைப்பழக்கமே, இங்கிலாந்தில் உள்ளவரை எனக்கு நோய் வராமல் காத்ததும், ஏகதேசமான வன்மையான உடற்கட்டையும் கொடுத்தது மாகும்.

ஆகவே அறைத் தொகுதியை வாடகைக்குப் பிடித்தேன்; ஒன்று அமரும் அறை; மற்றொன்று படுக்கை அறை. இது இரண்டாவது நிலை. மூன்ருவது இனி வர இருக்கிறது.

இம்மாறுதல்கள் எனக்குப் பாதிச் செலவை மிச்சப் படுத்தின. ஆனால் நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது? சட்டத் தேர்வுக்கு அதிகமாகப் படிக்கவேண்டியதில்லை என்பதறிவேன். எனவே, நேரம் இல்லையே என்று நான் சிரமப்படவில்லை. ஆங்கில மொழியில் என் தாழ்ந்த ஞானம் எனக்கு ஒழியாத கவலையாக இருந்தது. நான் வழக்குரைப்போன் பட்டம் பெறுவதோடு, இலக்கியப் பட்டமும் பெறவேண்டும் என்று எண்ணினேன்.

ஆக்ஸ்போடு, கேம்பிரிடஜ், சர்வகலாசாலைப் படிப்புத் திட்டங்களைப் பற்றி விசாரித்தேன்; சில நண்பர்களையும் கலந்தேன். நான் இந்த இடங்களில் எதற்குப் போவதாகத் தீர்மானித்தாலும், நான் தயாராக இருப்பதற்கு அதிகமாகச் செலவும், இங்கிலாந்தில் அதிக நாள் தாமசமும் ஆகும். உண்மையில் ஒரு கடினமான பரிட்சையில் தேறிய மனநிறைவு இருக்கவேண்டுமென்று கருதினால், இலண்டன் மெட்ரிகுலேஷன் பரிட்சையில் தேர்வுபெற வேண்டும் என்று ஒரு நண்பர் ஆலோசனை சொன்னார். அது அதிகமான உழைப்பு. சொல்லத்தகுந்த பிரமாதமான செலவு இல்லாமலே, என் பொது அறிவுக் களஞ்சியத்தை அதிகமாகக் கூட்டுவதும் ஆகும். இவ் ஆலோசனையை நான் வரவேற்றேன். ஆனால் படிப்புப் பட்டியல் என்னைப் பயமுறுத்தியது. லத்தீனும், ஒரு தற்கால மொழியும் கட்டாயப் பாடங்கள்! லத்தீனை நான் எப்படிச் சமாளிப்பது? ஆனால் அந்த நண்பர் அதற்குச்

சாதகமாக வன்மையாக வாதாடினர். "இலத்தீன் வழக்குரைப்போருக்கு மிகவும் உபயோககரமானது. சட்டநூல்களை அறிந்துகொள்ளுவதற்கு, லத்தீன்மொழி ஞானம் மிக உபயோகமானது. உரோமன் சட்டத்தில் ஒரு விளுத்தாள் முழுதும் இலத்தீனிலேயே இருக்கும். மேலும் லத்தீன் ஞானம், ஆங்கிலமொழியை லாகவமாகக் கையாளத் துணைபுரியும்" என்றார். இது என் மனதில் பதிந்தது. எவ்வளவு கடினமாயிருப்பினும், பாதக மில்லை; லத்தீன் படிப்பது என்று முடிவு செய்தேன். பிரஞ்சு, நான் ஏற்கெனவே படித்திருந்தது; எனவே நான் அதையே தற்கால மொழியாகக் கொண்டேன். மெட்ரிகுலேஷனுக்குத் தனியாகச் சொல்லிக்கொடுக்கும் வகுப்பு ஒன்றில் சேர்ந்தேன். தேர்வுகள் ஆறு மாதங் களுக்கு ஒரு தரம்; என் முன்னே ஐந்து மாதங்கள்தான் இருந்தன. இது என்னால் அநேகமாக முடியாத காரிய மாகவே இருந்தது. ஆனால் ஆங்கிலேய கனவானாக ஆவதற்கு விரும்பியவர் ஒரு சிரத்தை உள்ள மாணவ னாகத் தன்னை மாற்றிக்கொள்ள இப்பொழுது முற் பட்டார். ஒவ்வொரு நிமிடம் வரையும், கால அட்டவணை வரைந்துகொண்டேன். ஆனால் கொடுக்கப்பட்டுள்ள காலத்திற்குள், மற்றப் பாடங்களோடு, பிரஞ்சு, இலத்தீன், இவற்றைச் சமாளிக்க, என் அறிவோ, நினைவு சக்தியோ துணைபுரியவில்லை. முடிவு: நான் இலத்தீன் பாடத்தில் தேறவில்லை. நான் வருத்தம் உற்றேன். ஆனால் தைரியத்தை இழக்கவில்லை. இலத் தீனில் எனக்கு ஒரு சுவை இருந்தது. இன்னொரு முயற்சியால், எனது பிரஞ்சும் வளரும் என்று எண்ணி னேன். விஞ்ஞானப் பகுதியில் இன்னொரு புதுப் பாடத்தை எடுத்துக்கொள்ளலாம்.

ரஸாயனம் மிகவும் சுவையுள்ள பாடமாகவேண்டும்; ஆனால், விஞ்ஞானத்தில் எனது பாடமான ரஸாயனம், பரிசோதனைகள் செய்வதற்கு இல்லாததால், எனக்கு

அதில் விருப்பம் ஏற்படவில்லை. இந்தியாவில் அது கட்டாயப் பாடங்களில் ஒன்று. எனவே அதை இலண்டன் மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு எடுத்திருந்தேன். ஆனால் இப்பொழுது, ரஸாயனத்திற்குப் பதிலாக 'வெட்பமும்', 'ஒளியும்' எடுத்துக்கொண்டேன். அது எளிதென்று சொன்னார்கள்; அப்படியே இருந்தது.

இன்னொரு முயற்சிக்கு நான் தயார் செய்துகொண்டிருந்ததோடு, என் வாழ்க்கையை இன்னும் எளிதாக்கும் முயற்சியும் எடுத்துக்கொண்டேன். எனது குடும்பத்தின் சாதாரணப் பொருள் நிலைக்குத் தக்கவாறு இன்னும் என் வாழ்க்கைமுறை அமையவில்லை என்பதை உணர்ந்தேன். பணம் நான் கேட்கும்போதெல்லாம் பெருந்தன்மையோடு அனுப்பி வந்த சிரமப்பட்டு வரும் என் தமையனின் நினைப்பு என்னை வருத்தியது. மாதம் எட்டு முதல் 15 பவுண் செலவழித்தவர்களில் பெரும்பாலோர் உபகாரச் சம்பளம் பெற்ற ஒரு வசதி கொண்டவர்களாவர் என்பதைக் கண்டேன்.

என்னைவிட மிக எளிய வாழ்க்கை நடத்தியவர்களின் உதாரணங்கள் என் கண்முன் இருந்தன. என்னைவிட எளிமையாக வாழ்ந்துவந்த மாணவர் பலரை நான் சந்தித்திருக்கிறேன்: ஒருவர், ஏழைகள் சேரியில் வாரத்திற்கு 2 ஷிலிங் ஆகும் ஒரு அறையில் இருந்துகொண்டு, 'லாக்ஹார்ட் சகாய கொக்கோ' விடுதியில் ஒரு உணவுக்கு 2 'பென்சு' விலையுள்ள ரொட்டியும் கொக்கோவும் சாப்பிட்டு வாழ்ந்து வந்தார். அவரைப் பின்பற்ற நினைப்பதென்பது என்னால் முடியாத காரியம். ஆனால் இரண்டு அறைகளுக்குப் பதிலாக ஒரு அறையை வைத்துக்கொண்டு, அங்கேயே சில உணவுகளை நானே சமைத்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன். அதனால் ஒவ்வொரு மாதமும் நாலிலிருந்து ஐந்து பவுன்வரை மிச்சமாகும். எளிய வாழ்க்கையைப் பற்றிய நூல்களையும் நான் பார்க்க நேர்ந்தது. அறைத் தொகுதிகளை

விட்டு விட்டு ஒரு அறையை எடுத்துக்கொண்டேன். 'ஸ்டவ்' அடுப்பு ஒன்று வாங்கி, வீட்டிலே காலை உண்டியைத் தயார் செய்யத் தொடங்கினேன். இந்த வேலை இருபது நிமிடங்களுக்கு மேலாகவில்லை. ஏனென்றால், 'ஓட்மீல்' கஞ்சியும், கொக்கோவுக்கு வெந்நீரும்தானே தயார் செய்யவேண்டும். நண்பகல் சாப்பாடு வெளியே,—இரவில் ரொட்டியும் கொக்கோவும் வீட்டிலே. இவ்வாறு நாளொன்றுக்கு ஒரு ஷிலிங் மூன்று பென்சில் வாழத் தெரிந்துகொண்டேன். இது நான் மிக ஆழ்ந்து படித்த காலமுமாகும். எளிய வாழ்க்கை எனக்குப் போதுமான நேரத்தைத் தந்தது. நானும் என் தேர்வில் தேறினேன்.

இத்தகைய வாழ்வு, என் வாழ்க்கையைத் தொந்தரவுக்கு உள்ளாக்கியது என்று வாசகர்கள் எண்ணற்க! அதற்கு மாறாக இம்மாறுதல் என் அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையும் இசைத்தது. மேலும் அது என்குடும்பப்பொருளாதார நிலைக்குத் தகுந்தவாறும் இருந்தது. எனது வாழ்க்கை நிச்சயமாகச் சத்தியகரமாக இருந்தது. எனது ஆன்மா அடைந்த இன்பத்திற்கு அளவேயில்லை.

எனது செலவுகளிலும் வாழ்க்கை முறையிலும் நான் மாறுதல் செய்தவுடன் அல்லது அதற்கு முன்னதாகவே, என் உணவிலும் மாறுதல்கள் செய்யத் தொடங்கினேன். வீட்டிலிருந்து வரவழைத்திருந்த பண்டங்களையும் இனிப்புகளையும் சாப்பிடுவதை நிறுத்தினேன். என் மனம் வேறு பக்கம் திரும்பவே, இனிப்புப்பண்டங்களில் விருப்பம் குறைந்தது. ரிச்மாண்டில் சப்பென்று இருந்த தாளிதம் செய்யாத வேகவைத்த கீரை இப்பொழுது எனக்குச் சுவையாயிருந்தது. சுவையின் உறைவிடம் நாவன்று, ஆனல் உள்ளமே என்று, இனைய சோதனைகள் பல எனக்குப் போதித்தன!

பொருளாதாரப் பிரசினை என் முன் சதா இருந்தது.

காப்பியும் டீயும் தீங்கு விளைக்கும் பொருள் என்று கொக்கோவை ஆதரித்து வந்த ஒரு கூட்டம் அந்த நாளில் இருந்தது. உடலைக் காப்பாற்றும் பொருள்களை மட்டுமே உட்கொள்ள வேண்டும் என்று நான் திட்டமாய்க் கருதிய படியால், காப்பிக்கும் டீக்கும் பதிலாகக் கொக்கோவை வைத்துக்கொண்டேன்.

பிரதானச் சோதனையோடு, சிறியசோதனைகள் பலவும் நடந்துவந்தன. உதாரணமாக மாவுப்பண்டங்களை விட்டுவிட்டு, ரொட்டியும் பழங்களும் மட்டும் சாப்பிட்டேன். ஒரு சமயம் வெண்ணெ, பால், முட்டை இவைகளை மட்டும் சாப்பிட்டேன். இந்தக் கடைசிச் சோதனை குறித்தற்கு உரியது. அது ஒரு அரைமாதம் கூட நீடித்திருக்கவில்லை.

மாவு இல்லாத உணவுகளை ஆதரித்த நண்பர், முட்டைகளைப் பற்றி உயர்வாக எடுத்து உரைத்து, முட்டை, மாமிச மில்லை என்று கூறினர். முட்டைகளைச் சாப்பிடுவதினால், உயிருள்ள பிராணிகள் எதற்கும் தீங்கு இழைக்கவில்லை என்பது தெளிவாகத்தோன்றியது. இந்த வாதம் என்னைக் கவர்ந்தது; 'பிரதிக்ஞை இருப்பினும் முட்டை சாப்பிட்டேன். ஆனால் இந்தத் தவறு மிகச் சிறிய காலமே நடந்தது. பிரதிக்ஞைக்குப் புதுப் பொருள் கொடுக்க எனக்கு உரிமை இல்லை. எனக்குப் பிரதிக்ஞையை வழங்கிய என் தாயார் கொள்ளும் பொருள் அதற்கு உண்டு. அதன்படி ஊன் என்பது முட்டையும் அடங்கும் என்பது எனக்குத் தெரியும். எனவே, பிரதிக்ஞையின் உண்மைப்பொருளை நான் கண்டவுடன் முட்டையையும் சோதனையும் ஒருங்கே விட்டுவிட்டேன்.

இங்கிலாந்தில் நான் நடத்திய சோதனைகள், சிக்கனம், உடல்நலம் என்ற கோணத்திலிருந்தே நடத்தப்பெற்றன. தென் ஆப்பிரிக்காவுக்கு நான் போகும்வரை, அதனுடைய சமய அம்சம் கருதப்பட

வில்லே. தென் ஆப்பிரிக்காவில் நான் மேற்கொண்ட கடும்பிரயாசை உள்ள சோதனைகள் பின்னால் சொல்லப் படும்.

சைவ உணவுக்கு ஆதரவாக, புதிதாக மதம் மாறிய ஒருவரின் தீவிர ஆவேசத்தோடு, என் தலப் பகுதியில் ஒரு ‘கிளப்’ தொடங்கத் தீர்மானித்தேன். அங்கு வசித்து வந்த சர் எட்வேர்டு அர்னால்டு என்பவரை அதற்கு துணைத் தலைவராக இருக்குமாறு அழைத்தேன். ‘சைவ உணவு’ சஞ்சிகையின் ஆசிரியரான டாக்டர் ஓல்டுபீல்டு அதற்குத் தலைவர் ஆனார். நானே செயலாளன் ஆனேன். சில காலம் கிளப் நன்றாக நடந்தது; ஆனால் சில மாதங்களுக்குள் முடிவடைந்தது. காலங்கள் தோறும் இடம்விட்டு இடம் பெயரும் என் பழக்கப்படி, நான் அப்பகுதியை விட்டுப் போய்விட்டதால், ‘கிளப்’பும் முடிவுற்றது. ஆனால் இக்குறுகிய காலத்துச் சிறிய அனுபவம், ஸ்தாபனங்களை நிறுவுவதிலும் நடத்துவதிலும் எனக்குக் கொஞ்சம் பயிற்சியை அளித்தது.

13

கூச்சம் என் கவசம்

‘சைவ’ச் சங்கத்தின் செயற்குழுவுக்கு நான் தேர்ந்து எடுக்கப்பட்டேன். அதன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் கட்டாயம் போவேன். ஆனால் எப்பொழுதும் என் வாய் பூட்டியே கிடக்கும். தென் ஆப்பிரிக்காவில் தான் இக் கூச்சத்தை நான் போக்கடித்தேன். ஆனால் அதை ஒரு நாளும் முழுதும் போக்க முடியவில்லை. எழுதி வைத்துக்கொள்ளாமல் என்னால் பேசவே முடியாது. புதிய அவையோர்களைக் கண்டபோதெல்லாம், தயங்குவேன்; முடிந்தபோதெல்லாம் சொற்பொழிவாற்றுவதைத் தவிர்ப்பேன்.

எனது இயல்பான இக்கூச்சம், சில சமயம் என்னை நகைப்பிற்கு இடமாக்கியதைத் தவிர, மற்றப்படி எனக்குச் சிறிதேனும் இது பிரதிகூலமாக இல்லை என்பதை நான் சொல்லவேண்டும்; அது முற்றிலும் எனக்கு அனுகூலமாகவே இருந்தது; நான் பேசத்தயங்கியது ஒரு காலத்தில் துன்பமாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ, அதுவே இன்பமாக இருக்கிறது. எனது சிந்தனைகளை அடக்கிக் கொள்ளும் பழக்கத்தை உண்டாக்கியதே, அதன் மிகச் சிறந்த நன்மை ஆகும். மிகைப்படுத்தல், தெரிந்தோ தெரியாமலோ உண்மையை மறைப்பது அல்லது குறைப்பது எல்லாம் மனிதனின் இயற்கையான குறைபாடுகள். அவற்றை எல்லாம் வெற்றி கொள்ள, மௌனம் அவசியமாகும். சில சொல்லுபவன், பயனிலாச் சொல் பேசுவதரிது; ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தே பேசுவான். பேசுவதற்கு மக்கள் பலர் ஆத்திரப் படுவதைப் பார்க்கிறோம். இந்தப் பேச்செல்லாம், உலகத்திற்கு எவ்விதப் பயனும் பயவாது என்று சொல்லிவிடலாம். அது அவ்வளவும் கால வீண்போக்கே யாகும். உண்மையிலே என் கூச்சம், எனக்குக் கவசமும் கேடயமும் ஆக இருந்தது. என்னைப் பாதுகாத்து நான் வளர்ச்சி அடையத் துணைபுரிந்தது. உண்மையைக் கண்டறிவதிலும் எனக்கு உதவி புரிந்தது.

14

பொய்மைப் புரை

இக்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், நாற்பது ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் மிகச் சிலரே இருந்தனர். மணம் ஆயிருந்தாலும்கூட அவர்கள், பிரமசாரிகள் போலப் பாவனை செய்து கொள்ளுவது அவர்களிடம் உள்ள ஒரு பழக்கமாய்

இருந்தது. மணவாழ்க்கை படிப்போடு ஒவ்வாது என்று இங்கிலாந்தில் கருதப்பட்டமையால், அங்கு பள்ளி, கல்லூரி மாணவர்கள் எல்லாரும் மணம் ஆகாதவர்களாகவே இருந்தனர். எனவே, இங்கிலாந்திலுள்ள இந்திய இளைஞர்கள் தாங்கள் மணமானவர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டனர். இப்படி மறைப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அதாவது, இந்த விஷயம் தெரிந்துவிட்டால், தாங்கள் வசித்து வந்த குடும்பத்தில் உள்ள இளம் பெண்களோடு விளையாட முடியாது. இவ்விளையாட்டு அநேகமாகக் குற்ற மிலாததே. அவர்களுடைய பெற்றோர்கள் அதற்கு ஊக்கம்கூட அளிப்பார்கள். அங்கே, (இங்கிலாந்தில்) இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இத்தகைய கூட்டுறவு அவசியம் கூட என்றும் சொல்லலாம். ஏனென்றால், அவர்களே தங்கள் வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், ஆங்கிலேய யுவர்களுக்கு இயல்பாக உள்ள இவ்உறவாடல்களை, இங்கிலாந்து வந்ததும் இந்திய யுவர்கள் கைக்கொண்டால், அதன் விளைவுகள், அடிக்கடி ஏற்பட்டுள்ளது போல், துக்ககரமானதே ஆகும். ஆங்கிலேய இளைஞர்கள் விஷயத்தில் இது குற்றம் இல்லை. ஆனால் இது நமது இளைஞர்கள் விஷயத்தில் விரும்பத்தகாதது. ஒரு கூட்டாளிச் சேர்க்கைக்காக, இந்தப் பொய்மை வாழ்க்கையை நமது இந்திய இளைஞர்கள் மேற்கொள்ளுவதைப் பார்த்தேன். இந்தத் தொத்து நோய் என்னையும் பற்றியது. எனக்கு மணமாகி ஒரு மகனும் உளன்; எனினும் ஒரு பிரமசாரியைப்போல் நடந்துகொள்ள நான் தயங்கவில்லை. ஆனால் இவ்வாறு ஒரு ஏமாற்றுக்காரனாக இருப்பதில் எனக்கு மன மகிழ்ச்சியே இல்லை.

நான் வென்ட்னரில் குடியிருந்ததைப் போன்ற குடும்பங்களில், வீட்டுக்கார அம்மாளின் மகள், தமது விருந்தினரை உலாவ உடன் அழைத்து செல்லுவது

வழக்கம். நான் தங்கியிருந்த வீட்டுக்காரியின் மகள் ஒரு நாள் வென்ட்னரைச் சுற்றியுள்ள அழகிய குன்றுகளுக்கு என்னைக் கூட்டிச் சென்றாள்.—நான் மெள்ள நடக்கிறவன் அல்ல. ஆனால் என் கூட்டாளி என்னைவிட மிகத் துரிதமாக நடந்து, நேர முழுதும் பேசிக்கொண்டே தன் கூட இழுத்துச் சென்றாள். அவளுடைய பேச்சுக்கு நானும் சில சமயம், 'ஆமாம்' 'இல்லை', என்று மெல்லிய குரலில் பதில் சொல்லுவேன்; அதிகமாகச் சொன்னால் "ஆமாம், எவ்வளவு அழகு!" என்பேன். அவள் பறவை போல் பறந்தாள்; நானோ எப்போது வீட்டுக்குத் திரும்புவேன் என்று ஏங்கினேன். இப்படியாக நாங்கள் குன்றின் உச்சிக்குச் சென்றோம். எப்படிக் கீழே இறங்குவது என்பதே கேள்வி. உயரமான ஆணி உள்ள பாதரட்சை போட்டிருந்தாலும், இருபத்தைந்து ஆண்டு வயது உள்ள அந்தச் சுறு சுறுப்புள்ள இள மங்கை, குன்றிலிருந்து அம்புபோல் கீழே பாய்ந்தாள். இறங்குவதற்கு நான் வெட்கத்தோடு திணறிக் கொண்டிருந்தேன். அவள் குன்றின் அடியில் நின்று கொண்டு, குறுநகை புரிந்தும், என்னை ஊக்கியும், மேலே வந்து என்னைக் கூட்டிவரட்டுமா என்று கேட்டுக்கொண்டும் இருந்தாள். இவ்வளவு பயங்கொள்ளித்தனமாக நான் எப்படி இருக்கமுடியும்? மிகுந்த சங்கடத்தோடும், சில சமயம் தவழ்ந்தும், எப்படியோ சமாளித்துக்கொண்டு கீழே வந்து சேர்ந்தேன். அவள் உரக்க 'பலே!' என்று சொல்லிச் சிரித்து, என்னைத் தன்னால் இயன்றமட்டும் கேலி செய்து விட்டாள்.

ஆனால் எல்லாவிடத்தும், நான் வடுப்படாது தப்பித்து கொள்வதற்கில்லை. இந்தப் பொய்மைப் புரையை நான் களைந்து எறிய வேண்டும் என்று ஆண்டவன் திருவுள்ளம் கொண்டார். வென்டனரைப் போல, இன்னொரு தண்ணீர் தரும் இடமான, பிரைட்டனுக்கு ஒரு சமயம் சென்றேன். இது வென்டனர் விஜயத்துக்கு

முன் நடந்தது. அங்கு ஒரு உணவு விடுதியில், சாதாரண வசதி உள்ள ஒரு வயதான விதவையைச் சந்தித்தேன். இது இங்கிலாந்தின் எனது முதல் வருடம். உணவுப் பட்டியலில் எல்லாம் பிரஞ்சு மொழியில் எழுதி இருந்தது; அது எனக்கு விளங்கவில்லை. அந்த வயதான அம்மையார் அமர்ந்திருந்த மேசைப் பக்கமே நானும் இருந்தேன். நான் ஒரு புதியவன், திகைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அந்த அம்மாள் கண்டு, உடனே அவள் என் உதவிக்கு வந்தாள்; அவள் சொன்னாள், "நீங்கள் புதியவர் போலத் தோன்றுகிறது; திகைப்பது போலத் தெரிகிறது. நீங்கள் ஏன் ஒன்றும் கொண்டுவரச் சொல்லவில்லை?" நான் உணவுப் பட்டியலில் கண்ட சொற்களை எழுத்துக் கூட்டிக்கொண்டு, பரிமாறுகிறவனிடம் அந்த வகைகளில் என்ன கலந்திருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக என்னைத் தயார் செய்து கொண்டிருந்தேன். இந்தச் சமயம் தான், இந்த நல்ல அம்மையார் மேலே கண்டதுபோல் தலையிட்டது. அவளுக்கு நன்றி கூறினேன்; எனக்கு பிரஞ்சு மொழி விளங்காததால், பட்டியலில் கண்ட வகைகளில் எவை 'சைவ'மானவை என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் விழிக்கிறேன் என்று என் சங்கடத்தை விளக்கினேன்.

அவள், "நான் உமக்கு உதவி செய்கிறேன்; இந்தப் பட்டியலை உமக்கு விளக்கி, எதை நீர் சாப்பிடலாம் என்று சொல்லுகிறேன்," என்று சொன்னாள். நான் நன்றியறிதலோடு அவள் உதவியை நன்கு பெற்றுக் கொண்டேன். இதுவே பின்னர் நட்பாகப் பழுத்த பரிச்சயத்தின் ஒரு தொடக்கமாகும்; இந்த நட்பு இங்கிலாந்தில் நான் இருந்த காலம் முழுவதும் நீண்ட காலத்திற்குப் பின்னரும் நீடித்திருந்தது. அந்த அம்மாள் தனது இலண்டன் முகவரியை என்னிடம் கொடுத்து, ஞாயிறு தோறும் வந்து தன் வீட்டில் விருந்து அருந்துமாறு

என்னை அழைத்தாள். விசேஷமான நாட்களிலும், அவள் என்னை அழைப்பாள்; எனது கூச்சத்தைப் போக்குவதற்கு துணைபுரிவாள்; இளம் பெண்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்து, அவர்களோடு நான் சல்லாபிப்பதற்கு என்னை இழுத்து வைப்பாள். என்னோடு இந்தச் சொல்லாடலுக்கு என்றே குறிப்பாக அவளோடு வசித்து வந்த ஒரு இளமங்கை இருந்தாள். அடிக்கடி நாங்கள் இருவரும் மட்டும் தனித்திருக்குமாறு விடப்படுவோம்.

முதலில் இவை எல்லாம் எனக்குச் சங்கடமாகவே இருந்தது. ஒரு பேச்சை என்னால் ஆரம்பிக்க முடியாது; கேலிப் பேச்சுகளில் எனக்கு ஈடுபடவும் தெரியாது. ஆனால், அவள் எனக்கு வழிகாட்டிக் கொடுத்தாள்; நான் அவற்றைப் படிக்க ஆரம்பித்தேன். காலப்போக்கில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் எதிர்பார்ப்பேன்; அவ் இள நண்பரோடு சல்லாபிப்பதைப் பிரியப்படலானேன்.

அவ்வயதான அம்மாளும் நாளும் தனது வலையை விரித்துக்கொண்டே போனாள். எங்கள் சந்திப்பில் அவள் அக்கறை கொள்ளலானாள். எங்களைப்பற்றி அவள் ஒரு திட்டம் போட்டிருந்தாள் போலும்!

நான் இவ்வாறு ஒரு இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டேன். "அந்த நல்ல அம்மாளிடம், நான் மணமானவன் என்று சொல்லி இருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!" என்று எனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டேன். "அவ்வாறு சொல்லியிருந்தால், எங்களுக்குள் மணம் முடித்து வைப்பதைப்பற்றி அவள் நினைத்து இருக்கவேமாட்டாள். ஆனால் எப்பொழுதும் திருத்திக்கொள்ளலாம். இப்பொழுது உண்மையை விளம்பி விட்டால், நான் இன்னும் அதிகமான துயரத்திலிருந்து தப்பக்கூடும்." இத்தகைய எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு, அடியிற்கண்ட பொருள்

கொண்டுள்ளதான ஒரு கடிதம் நான் அவளுக்கு எழுதினேன் :

“பிரைட்டனில் நாம் சந்தித்த நாளில் இருந்து நீங்கள் என்னிடம் பிரியமாக இருக்கிறீர்கள். ஒரு தாய் தனது தநயனைக் கவனிப்பதுபோல, நீங்கள் என்னைக் கவனித்து வந்துள்ளீர்கள். நீங்கள் எனக்கு மணம் ஆகவேண்டும் என்று நினைத்து, அந்த நல்ல நோக்கத்தோடு இளம் பெண்களை எனக்கு அறிமுகப் படுத்தி வந்தீர்கள். விஷயம் மேலே போகுமுன்னர் நான் உங்களது அன்பிற்குத் தகுதியில்லாதவன் என்பதை உங்களிடம் ஒத்துக்கொள்ளவேண்டும். உங்கள் வீட்டிற்கு வர ஆரம்பித்த காலத்திலேயே, எனக்கு மணமாகி விட்டது என்பதை நான் உங்களுக்குச் சொல்லி இருக்க வேண்டும். இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் தங்களுக்கு மணமான செய்தியை மறைத்து வைப்பதை நான் அறிவேன்; நானும் அதைப் பின்பற்றினேன். நான் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்பதை, இப்பொழுது அறிகிறேன். நான் சிறு பையனாக இருக்கும்போதே எனக்கு மணம் ஆகிவிட்டதென்பதையும், ஒரு மகனுக்குத் தந்தையாக இருக்கிறேன் என்பதையும் ஈண்டுச் சொல்லுகிறேன். இவ்வளவு நீண்ட நாள் இந்தச் செய்தியை உங்களிடம் சொல்லாது இருந்தது, என்னைத் துன்புறுத்துகிறது. ஆனால் உண்மையைச் சொல்லிவிடக் கடவுள் இப்பொழுது எனக்குத் தைரியம் கொடுத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் மன்னிப்பீர்களா? நீங்கள் எனக்கு அறிமுகம் செய்துவைத்த இளம் பெண்ணோடு, தகாத முறையில் ஒன்றும் நான் நடக்கவில்லை என்று உங்களுக்கு உறுதி சொல்லுகிறேன். எனது வரம்புகளை நான் அறிவேன். நான் மணமானவன் என்று தெரியாத நிலையில், நாங்கள் இருவரும் மணம் செய்து கொள்ளவேண்டும் என்று நீங்கள் விரும்பியது இயற்கையே. காரியங்கள்,

இப்பொழுதுள்ள நிலையைவிட மேலே போகாமல் இருப்பதற்காக, உங்களிடம் உண்மையைச் சொல்லியாக வேண்டும்:

இக்கடிதம் பெற்ற பின்னர், உங்களுடைய விருந்தோம்பலுக்கு நான் தகுதி அற்றவனாகத் தாங்கள் கருதினால் நான் அதைத் தவறாகக் கொள்ளமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். உங்கள் அன்பாலும் ஆதரவாலும், என்னை உங்களிடம் என்றும் நின்று நிலவும் கடப்பாட்டு உணர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறீர்கள். இதற்குப் பின்னரும், என்னை நீங்கள் தள்ளி விடாமல், உங்கள் விருந்தோம்பலுக்குத் தகுதியுடையவனாகத் தொடர்ந்து கருதினால்,—அதனைப் பெறுதற்கு உரியனாக்கிக்கொள்ளுதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுவேன்,—நான் மிகவும் இன்பமடைவதோடு, உங்கள் அன்பிற்கு மேற்கொண்டுள்ள அடையாளம் எனக் கொள்ளுவேன்.''

ஒரு பொழுதில் இத்தகைய கடிதம் நான் எழுதி இருக்க முடியாது என்பதை வாசகர் அறிவாராக. நான் நகல்மேல் நகலாக பல முறை எழுதி இருக்க வேண்டும். ஆனால் என்னை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பாரம், நீங்கியது. அடுத்த தபாலிலேயே கீழ்க்கண்ட மாதிரி அவளுடைய பதில் வந்தது :

'' தங்களுடைய ஒளிவு மறைவில்லாக் கடிதம் பெற்றேன். நாங்கள் இருவரும் மகிழ்வுற்று உளமாரச் சிரித்தோம். நீங்கள் குற்றம் இழைத்ததாகக் கூறுகிற வாய்மையின்மை, மன்னிக்கத் தகுந்ததே. ஆனால் உள்ள நிலையை எங்களுக்குத் தெரியப்படுத்தியது நல்லது. எனது அழைப்பு என்றும்போல் அப்படியே இருக்கிறது. உங்களை நிச்சயமாக அடுத்த ஞாயிற்றுக்கிழமை எதிர் பார்ப்போம் ; உங்களுடைய குழந்தைக் கலியாணத்தைப் பற்றிய விவரம் எல்லாம் கேட்டறிந்து உங்களை நோக்கிச் சிரித்து மகிழ்வதையும் எதிர் நோக்கி இருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சியால் நமது நட்புச் சிறிதேனும் பாதிக்கப் படவில்லை என்பதை உங்களுக்கு நான் உறுதி சொல்ல வேண்டுமா?''

இவ்வாறு பொய்மைப் புரையை உதறித் தள்ளி னேன். அதன் பின்னர், அவசியமான சமயத்தி லெல்லாம், எனது மணமான நிலையைச் சொல்லுவதற் குத் தயங்கியதே கிடையாது.

எனக்கு ஞாபகம் உள்ளமட்டும் இங்கிலாந்தில் எனது கடைசி வருடம், அதாவது 1890-ல், போர்ட் மவுத்தில், ஒரு சைவ உணவு மாநாடு நடந்தது. அதற்கு நானும், என்னுடைய இந்திய நண்பர் ஒருவரும் அழைக் கப்பட்டிருந்தோம். போர்ஸ்மவுத் ஒரு கடற்கரைப் பட்டினம்; மாலுமிகள் நிறைந்த ஊர். ஆங்கு, தங்கள் ஒழுக்கத்தைப் பற்றி அவ்வளவு சட்டை செய்யாத, ஆனால் வாஸ்தவமான விபசாரிகள் இல்லாத, பெண்கள் கொண்ட கெட்ட பெயர் வாங்கிய வீடுகள் பல உள. எங்களை இவ்வீடுகளில் ஒன்றில் தங்க ஏற்பாடு செய் திருந்தார்கள். வரவேற்புக் குழுவுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்று சொல்லத் தேவை இல்லை.

மாலையில் மாநாட்டிலிருந்து திரும்பினோம். இரவு உண்டிக்குப் பின்னர் சீட்டாட உட்கார்ந்தோம். அதில் அந்த வீட்டு அம்மாளும் கலந்து கொண்டாள். கண்ணியமுள்ள வீடுகளில்கூட அது வழக்கம்தான்; ஒவ்வொரு ஆட்டக்காரரும் குற்றமில்லாத கேலிகளில் ஈடுபட்டார்கள். ஆனால் எனது நண்பரும் வீட்டு அம்மாளும் கண்ணியமில்லாத கேலிகளும் செய்யத் தொடங்கினார்கள். என் நண்பர், இந்தக் கலையில் சமர்த்தர் என்பது எனக்குத் தெரியாது. அது என்னைக் கவர்ந்தது; அதில் நானும் சேர்ந்து கொண்டேன். சீட்டுகளையும் விளையாட்டையும் அப்படியே விட்டுவிட்டு, என் எல்லையைக் கடந்து போகப் போகும் அந்தத் தருணத்தில், எனது நல்ல நண்பன் மூலம், ஆண்டவன்,

"எங்கிருந்து இந்தச் சாத்தான் உன்னிடம் வந்தது, மகனே? ஓடு விரைவிலே?" என்ற ஆசி கலந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நான் வெள்கினேன். எச்சரிக்கையை ஏற்றுக் கொண்டு, நண்பருக்கு உள்ளூர நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டேன். என் தாயாருக்குக் கொடுத்த பிரதிக்ஞையை நினைத்துக் கொண்டு, அந்த இடத்தை விட்டு விரைந்தோடினேன். உடல் ஆடிக்கொண்டும் நடுங்கிக் கொண்டும், இதயம் துடித்துக் கொண்டும், வேடனிடமிருந்து தப்பிய மான்போல், என் அறைக்குச் சென்றேன்.

சமயத்தின் சாராம்சமோ, கடவுளையோ, அல்லது அவர் நம்மில் எப்படி இயங்குகிருர் என்பதைப் பற்றியோ அப்பொழுது எனக்கு ஒன்றும் தெரியாது. அந்தச் சமயத்தில் என்னை ஆண்டவன் காப்பாற்றினுர் என்பது மட்டும் ஒருவாறு எனக்கு விளங்கியது. சோதனைக் காலங்களிலெல்லாம் அவர் என்னைக் காப்பாற்றி உள்ளார். நம்பிக்கை எல்லாம் இழந்த பின்னர், துணைபுரிவோர் கைவிட்டு, வசதியெல்லாம் பறந்தோடிய பின்னர், எப்படியோ உதவி வந்து சேருவதைக் காண்கிறேன்; அது எங்கிருந்து வருகிறதோ அறிகிலேன். மன்ருடுதல், தொழுதல், பிரார்த்தனை—இவை மூடப் பழக்கம் அன்று. உண்ணுவது, அருந்துவது, உட்காருவது, நடப்பது ஆகிய செய்கைகளைவிட, அச்செயல்கள்தான் மிக உண்மையானவைகளாகும். அவைகளே உண்மையானவை; மற்றவை எல்லாம் உண்மை யன்று என்று கூறுவது மிகையாகாது.

15

சமய ஆராய்ச்சி—ஆரம்பம்

இங்கிலாந்தில் எனது இரண்டாம் ஆண்டு இறுதியில் [1] 'பிரம்மஞானிகள்' இருவரை நான் சந்தித்தேன். இருவரும் சோதரர்கள்; மணம் ஆகாதவர்கள். 'கீதை'யைப் பற்றி அவர்கள் என்னிடம் பேசினார்கள். சர் எட்வின் அர்னால்டு (Sir Edwin Arnold) என்பவரின் கீதை மொழிபெயர்ப்பான 'தெய்வீகப்பா'வைப் படித்துக் கொண்டிருந்தார்கள். மூலத்தை அவர்களோடு என்னையும் படிக்குமாறு அழைத்தனர். நான் வெட்கமுற்றேன். ஏனெனில், இந்தத் தெய்வீகப் பாடலை, சமஸ்கிருதத்திலேனும் அல்லது குஜராத்தியிலேனும் நான் படித்ததில்லை. நான் கீதையைப் படித்தது இல்லை என்றும், ஆனால் அவர்களோடு படித்து மகிழ்ச்சி அடைவேன் என்றும், எனது சமஸ்கிருதமொழி ஞானம் சிறிதே எனினும், மொழிபெயர்ப்பு எந்த இடத்தில் மூலத்தின் பொருளை வெளிப்படுத்தத் தவறிவிட்டது என்ற அளவுக்கு மூலத்தை அறிந்துகொள்ள முடியும் என்று நம்புவதாகவும், அவர்களிடம் சொல்ல வேண்டியதாயிற்று. கீதையை அவர்களோடு படிக்கத் தொடங்கினேன். இரண்டாவது படலத்தில் உள்ள,

> "புலன்களின் பொருள்களில் ஈடுபட்டால்
> விருப்பம் பிறக்கிறது.
> விருப்பத்திலிருந்து ஆசை வளர்கிறது.
> ஆசை பேராசைச் சுடராகிறது.
> பேராசை மயக்கத்தையும் மறதியையும் தருகிறது.
> மறதி உன்னத நோக்கத்தை
> இழக்கச் செய்கிறது; இறுதியில் எடுத்த
> காரியம், மனம், மனிதன் யாவும் அழிகின்றன"

என்ற வரிகள் என் உள்ளத்தில் ஆழப் பதிவுற்றன.

[1] Theosophists

அவை இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நூல்—கீதை—விலைமதிக்கவொண்ணுதது என்று எனக்குப்பட்டது. அந்த எண்ணம் நாளும் வளர்ந்து கொண்டேவந்து, சத்தியத்தின் ஞானம் பெறுவதற்கு இது ஒன்றே மிகச் சிறந்த நூல் என்று நான் இன்று கருதும்படியாயிற்று. எனது இருள் சூழ்ந்த சமயங்களில் எல்லாம், இது எனக்கு மதிக்கவொண்ணுத உறுதுணை புரிந்துள்ளது.

'தெய்வப்பாட'லின் ஆசிரியர் என்றுமட்டுமே அதுவரை நான் அறிந்திருந்த சர் எட்வின் அர்னால்டு எழுதிய, 'ஆசிய ஜோதி'. என்ற நூலையும் படிக்குமாறு அச்சோதரர்கள் எனக்குப் பகன்றுர்கள். பகவத்கீதையைப் படிக்கும்போதுள்ள அக்கறையைவிட அதிக அக்கறையோடு அதைப் படித்தேன். அதைப் படிக்கத் தொடங்கி விட்டால், அதை என்னுல் கீழே வைக்க முடியாது. அவர்கள் என்னை ஒரு சமயம் 'பிளாவட்ஸ்கி உறைவிட'த்திற்குக் கூட்டிக்கொண்டு போனுர்கள்; பிளாவட்ஸி அம்மையாருக்கும், திருமதி பெஸண்டு அம்மையாருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். பின் சொல்லப்பட்டவர், அப்பொழுதுதான் பிரம்மஞான சபையில் சேர்ந்திருந்தார்; அவருடைய மாற்றத்தைப் பற்றி நடந்த விவாதத்தை நான் மிகுந்த அக்கறையோடு கவனித்து வந்தேன். என் நண்பர்கள் அந்தச் சங்கத்தில் என்னைச் சேருமாறு கூறினுர்கள். நான் மரியாதையோடு அதை நிராகரித்துச் சொன்னேன், "எனது சொந்த மதத்தைப் பற்றி எனக்கு உள்ள இந்தச் சொற்ப அறிவோடு பிறிதொரு சமயச் சங்கத்தில் சேர நான் விரும்பவில்லை." இச் சோதரர்களின் தூண்டுதலின் பேரில், பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய, 'பிரம்மஞானத்தின் திறவுகோல்' என்ற நூலைப் படித்த நினைவு இருக்கிறது. இந்த நூல், இந்து சமயத்தைப் பற்றிய நூல்

களைப் படிக்கும்படி எனக்கு ஆசையை உண்டாக்கியது; இந்து மதம் மூடப்பழக்கவழக்கத்தால் நிரம்பியது என்று பாதிரிகள் கிளப்பிவந்த கருத்தை விட்டொழிக்கச் செய்தது.

சுமாராக அதே சமயத்தில், மான்செஸ்டரில் ஒரு சைவ உணவு விடுதியில் ஒரு நல்ல கிரிஸ்தவரை நான் சந்தித்தேன். அவர் கிரிஸ்தவ சமயத்தைப் பற்றிப் பேசினார். நான் அவரிடம், எனது ராஜகோட்டை நினைவுகளைப் பற்றிக் கூறினேன். அவைகளைப் பற்றிக் கேட்டு அவர் வருத்த முற்றார். அவர் சொன்னார், "நான் ஒரு சைவ உணவுக்காரன். நான் குடிப்பதில்லை. பல கிரிஸ்தவர்கள் புலால் உண்பவர்கள், குடிப்பவர்கள், என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், மாமிசம் உண்பதையும் மது அருந்துவதையும் எங்கள் சமய நூல் வற்புறுத்துவது இல்லை. தயவு செய்து எங்கள் பைபிளைப் படியுங்கள்," என்றார். அவர் யோசனையை நான் ஏற்றேன். அவர் எனக்குப் பைபிளின் ஒரு பிரதி கொடுத்தார். நான் அதைப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் பழைய ஆகமத்தை என்னால் படிக்க இயலவில்லை. 'ஆதி ஆகமம்' என்னும் முதற் பகுதியைப் படித்தேன். அதைத் தொடர்ந்து வந்த படலங்கள் அநேகமாக என்னைத் தூக்கத்தில் ஆழ்த்தின. நான் படித்து விட்டேன் என்று சொல்ல முடிவதற்காக, மற்றப் பகுதிகளையும் சிரமத்துடன், சிறிதும் அக்கறையோ ஞானமோ இன்றிப் படித்து முடித்தேன். 'எண்ணாகமம்' என்ற நூலைப் படித்து அதனை வெறுத்தேன்.

ஆனால் புதிய ஆகமம் வேறுவிதமான எண்ணத்தை உண்டாக்கியது. முக்கியமாக மலை உச்சிப்போதனை என் உள்ளத்தில் ஆழப் பதிந்தது. கீதையோடு அதை ஒற்றுப் பார்த்தேன். "நான் உனக்குச் சொல்லுகிறேன்: தீமையைத் தீமையினால் எதிர்க்காதே. யாரே

னும் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவருக்கு மற்றக் கன்னத்தையும் திருப்பிக் காட்டு. உனது மேல் அங்கியை ஒருவர் எடுத்துக்கொண்டால், அவருக்கு உனது மற்ற அங்கிகளையும் கொடுப்பாயாக!'' என்ற அடிகள் எனக்கு எல்லை இல்லாத இன்பம் தந்தது. ஷாமால் பட் எழுதிய 'ஒரு குவளை நீருக்கு, அரு விருந்து தருக'—முதலிய அடிகளை இவை எனக்கு நினைவுறுத்தின. 'கீதை,' 'ஆசிய ஜோதி', 'மலை உச்சிப்பிரசங்கம்'—இவற்றின் போதனைகளை இணைத்து நோக்க என் இள உள்ளம் முற்பட்டது. தன்னல மறுப்பே சமயத்தின் தலையாய வடிவம் என்பது என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது.

சமயத்தோடு இந்த அளவுப் பரிச்சயத்துக்குமேல் இது போழ்து நான் மேலே போக வில்லை. ஏனெனில் தேர்வுக்குப் படிப்பதால், வேறு வெளி விஷயங்களில் சிந்தை செலுத்த நேரமில்லை. ஆனால் இன்னும் அநேக சமய நூல்கள் படிக்க வேண்டும் என்றும், முக்கியமான சமயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், என் மனதில் குறித்து வைத்துக்கொண்டேன்.

பாகம் III

பாரிஸ்டராக இந்தியாவில்

16

இந்தியா திரும்புதல்

நான் தேர்வில் தேறினேன். 1891-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி வழக்குரைப்போராக ஏற்கப்பட்டு, 11-ம் தேதியன்று உயர்நீதி மன்றத்தில் பதிவு செய்யப் பட்டேன். 12-ம் தேதி வீட்டிற்குக் கப்பலில் பயண மானேன்.

ஆனால் இவ்வளவு நான் படித்திருந்தும்கூட, என் அச்சத்திற்கும் தவிப்புக்கும் அளவே இல்லை. சட்டத் தொழிலை நடத்த எனக்குச் சக்தி இருப்பதாக நான் உணரவில்லை. நான் சட்டங்களைப் படித்துள்ளேன். ஆனால் எப்படித் தொழில் ஆற்றுவது என்பதைப் படிக்க வில்லை. மேலும் இந்தியர்களின் சட்டத்தைப் பற்றி ஒன்றுமே படிக்கவில்லை. இந்து, மகமதியச் சட்டங் களைப்பற்றி எனக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது. ஒரு பிராது எப்படி வரைவது என்பதைக்கூட நான் படித்துக் கொள்ளவில்லை; எனவே, எனக்கு என்னை நடுக்கடலில் விட்டமாதிரி இருந்தது. இந்தத் தொழில் மூலமாக என் வாழ்க்கையையேனும் நடத்திக்கொள்ள முடியுமா என்ப தில் எனக்குப் பலமான சந்தேகம் இருந்தது.

ஏடெனில் இருந்து வழிநெடுகக் கடல் கொந்தளிப்பா கவே இருந்தது. அநேகமாக ஒவ்வொரு பிரயாணியுமே நோயுற்றுர். நான் மட்டும் பூரண நலத்தோடு இருந் தேன். கப்பல் மேல்தட்டிலிருந்து, கடல் கொந்தளிப்பைப் பார்த்துக்கொண்டும், அலைகள் மோதுவதைக் கண்டு ஆநந்தித்திக் கொண்டும் இருந்தேன்.

வெளிக்காட்சி எனக்கு அகக்காட்சியின் அடையாள மாகவே இருந்தது. முன்னையது என்னைக் கலக்காதது போல, பின்னையதைப் பற்றியும் நான் அவ்வாறே கூற இயலும். பம்பாய்த் துறைமுகத்தில் என் தமையனுர் என்னைச் சந்திக்க வந்திருந்தார். என் தாயாரைப் பார்க்க நான் தவித்துக் கொண்டிருந்தேன். நான் இங்கிலாந்தில் இருக்கும்போதே என் தாயார் இறந்து போன செய்தியை, என் தமையனுர் எனக்குத் தெரிவியா மல் இருந்துவிட்டார். அன்னிய நாட்டில் வைத்து எனக்கு இந்தப் பேரிடி தரவேண்டாம் என்று கருதி அவ்வாறு செய்தார். ஆனுல் அந்தச் செய்தி எனக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கியது. என் தகப்பனுர் இறந் ததைவிடக்கூட இது எனக்கு அதிகமான துக்கத்தை உண்டாக்கியது. நான் போற்றி வந்த எண்ணங்க ளெல்லாம் சுக்குநூருய் உடைந்து போயின. ஆனுல் என் துக்கத்தை வாய்விட்டு அலறி ஒன்றும் வெளிப் படுத்தவில்லை என்பது நினைவிருக்கிறது.

17

வாழ்க்கையை எப்படித் தொடங்கினேன்

எனது அன்னிய நாட்டுப் பயணத்தைப்பற்றிய எங்கள் சாதிப் புயல் இன்னும் கவிந்துகொண்டிருந்தது. அது எங்கள் சாதியை இரண்டு திறத்தினராகப் பிரித் திருந்தது. ஒன்று, என்னை உடனே சாதியில் சேர்த்துக் கொண்டது; மற்ருென்று என்னை வெளியிலேயே வைத் திருக்க முனைந்து நின்றது. என் நுழைவை மறுத்த பகுதியினுள் சேருவதற்காக நான் முயலவே இல்லை. அப்பகுதியில் உள்ள தலைவர் யாரிடத்தும், நான் மனத் தால்கூடக் கோபித்தது கிடையாது. அவர்களில் சிலர் என்னிடம் வெறுப்போடு இருந்தார்கள்; ஆனுல் அவர்

களுடைய உணர்ச்சியைப் புண்படுத்துவதை சர்வ ஜாக்ரதையாகத் தவிர்த்து வந்தேன். சாதியைவிட்டுத் தள்ளி வைக்கும் விதிகளுக்கு நான் பூரணமாக மதிப்புக் கொடுத்தேன். அவற்றின்படி, என் மாமனர், மாமியார், சகோதரி, மைத்துனர் உள்பட என் உறவினர் எவரும் எனக்கு விருந்து அளிக்கக் கூடாது; நான் அவர்கள் வீட்டில் தண்ணீர்கூடச் சாப்பிடக்கூடாது. அவர்கள், இரகசியத்தில் இந்தத் தடையை மீறிவிடத் தயாராக இருந்தார்கள். ஆனால் நான் பகிரங்கமாக செய்ய மாட்டாத எந்தக் காரியத்தையும் இரகசியத்தில் செய்வது என்பது என் இயல்புக்கு மாருய் இருந்தது.

சர்வஜாக்ரதையான என்னுடைய இவ் ஒழுக்கத்தின் விளைவு, சாதியினுல் எனக்கு எவ்விதமான தொந்தரையும் வரச் சந்தர்ப்பமே ஏற்பட இல்லை. அது மட்டுமல்ல; சாதியிலிருந்து தள்ளப்பட்டவனுக இன்னும் கருதிவந்த பகுதியின் பொதுமக்களிடம் இருந்து நான் அன்பையும், தயாளத்தையும் தவிர பிறிதொன்றையும் அனுபவித்தது இல்லை. அவர்கள் என் வேலையில் எனக்கு உதவிகூடப் புரிந்தார்கள்; சாதிக்காக எதனையும் என்னிடம் எதிர்பார்க்கவில்லை. இந்த நல்ல காரியங்களுக்கெல்லாம் காரணம், என்னுடைய எதிர்ப்பின்மையே என்பது எனது உறுதியான கருத்து. நான் சாதியில் சேரவேண்டும் என்று கிளர்ச்சி பண்ணி இருப்பேனுல், அவர்களை இன்னும் பலதிறத்தினராகப் பிரியும்படி செய்திருப்பேனுனல், சாதிக்காரர்களைப் புண்படுத்தி இருப்பேனுனல், அவர்கள் திரும்பவும் பதிலுக்குப் பதில் செய்து இருப்பார்கள்; எனவே புயல்காற்றிலிருந்து விலகி நிற்பதற்குப் பதிலாக, சீமையிலிருந்து வந்ததும், ஒரு கிளர்ச்சி வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருந்திருப்பேன். ஒரு வேளை நான் பொய் நடிப்பைக் கைக்கொள்ள வேண்டியும் வந்திருக்கலாம்.

ராஜ்கோட்டையில் தொழிலைத் தொடங்குவது

என்பது நிச்சயமாக நகைப்பிற்கு இடமாகும். தகுதிப் பட்டம் பெற்ற ஒரு வக்கீலுக்கு உள்ள ஞானம்கூட எனக்குக் கிடையாது. எனினும் அவரைவிட எனக்கு பத்து மடங்கு 'ஊதியம்' எதிர்பார்த்தேன்! என்னை அமர்த்த எந்தக் கட்சிக்காரனும் அவ்வளவு முட்டாள் அல்ல. அப்படி ஒரு முட்டாள் இருப்பதானுல்கூட, எனது அறியாமையோடு எனது அகம்பாவத்தையும் ஏமாற்றும் திறத்தையும் சேர்த்துக்கொண்டு, உலகத் திற்கு நான் கொடுக்க வேண்டியதாக உள்ள கடன் பளுவை அதிகமாக்க வேண்டுமா?

உயர் நீதி மன்றத்தின் அனுபவம் பெறவும், இந்திய சட்டங்களைப் படித்துக் கொள்ளவும், முயன்று கிடைக்கும் வழக்குகளைப் பெறவும், சிலகாலம் பம்பாய்க் குச் செல்லுமாறு நண்பர்கள் ஆலோசனை சொன்னுர் கள். அதை நான் ஏற்றுக்கொண்டு பம்பாய் சென்றேன். வளர்ந்து கொண்டே போகிற செலவைச் சரிக்கட்டிக் கொள்ளப் போதிய வருமானம் இல்லாததால், பம்பாயில் நாலைந்து மாதங்களுக்கு மேல் இருக்க எனக்குச் சாத்தி யப் படவே இல்லை. இது போழ்து, மணிபாய் என்ற ஒருவரின் வழக்கை நான் ஏற்றுக்கொண்டேன். அது ஒரு சிறியவழக்கு. "வழக்குப் பிடித்துக் கொடுத்த வருக்குத் தரகு கொடுக்க வேண்டும்" என்று சொன்னுர் கள். அது முடியாது என்று கண்டிப்பாக மறுத்தேன்; தரகு கொடுக்கவில்லை; ஆனுல் மணிபாயின் வழக்கு எனக்கே கிடைத்தது. அது மிகவும் எளிமையான வழக்கு. என் 'பீசு'க்கு 30 ரூபாய் கேட்டேன். வழக்கு ஒரு நாளைக்கு மேல் செல்லாது.

சுமால்காஸ் கோர்ட்டில் இதுவே என் முதல் அரங் கேற்றம். நான் பிரதிவாதிக்காக ஆஜராயிருந்தேன். எனவே வாதியின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். நான் எழுந்து நின்றேன். ஆனுல் என் இருதயம் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டது.

என் தலை சுழன்றது ; நீதிமன்றம் முழுவதுமே அவ்வாறு சுழல்வதாக எனக்குத் தோன்றியது. கேட்பதற்கு எந்தக் கேள்வியும் எனக்கு நினைவு வரவில்லை. நீதிபதி சிரித்திருப்பார் ; வழக்குரைஞர்களும் இக் காட்சியை அனுபவித்திருப்பார்கள். ஆனால், நானோ எதையும் பார்க்கும் நிலையில் இல்லை. நான் அமர்ந்தேன். நான் வழக்கை நடத்துவதற்கில்லை என்றும், பட்டேலை அமர்த்தித் கொள்ளுமாறும், என்னிடமிருந்து 'பீசை'த் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் என் கட்சிகாரியின் பிரதிநிதியிடம் கூறினேன். 51 ரூபாய் கொடுத்து திரு. பட்டேல் அமர்த்தப்பட்டார். இவ் வழக்கு அவருக்கு ஒரு குழந்தை விளையாட்டாக இருந்தது.

என் கட்சிக்காரி வழக்கில் வென்றாளா தோற்றாளா என்று அறியாமலே, நீதிமன்றத்திலிருந்து விரைந்தேன். ஆனால் என்னைப் பற்றி வெட்கமுற்றேன். வழக்குகளை நடத்தப் போதிய தைரியம் வரும் வரை, வழக்குகளை இனி எடுத்துக் கொள்ளுவதில்லை என்று முடிவு செய்தேன். எனவே, ஒரு ஆசிரியர் வேலையை எடுத்துக் கொள்ளலாம் என நினைத்தேன். எனது ஆங்கில ஞானம் நன்றாய் இருந்தது. ஏதேனும் ஒரு பள்ளிக்கூடத்தில் மெட்ரிகுலேஷன் மாணவர்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதில் மிக விருப்பமுடையேன். இவ்வழியில் என் செலவில் ஒரு பகுதியைச் சரிக்கட்ட முடியும். செய்தித் தாள்களில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன் ; "தினம் ஒரு மணி நேரம் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க ஆசிரியர் தேவை. சம்பளம் ரூ. 75." இந்த விளம்பரம் ஒரு புகழ் பெற்ற உயர் நிலைப் பள்ளியிலிருந்து வந்தது. அவ் வேலைக்கு விண்ணப்பித்தேன் ; நேரில் வருமாறு அழைப்பு வந்தது. மிகுந்த உற்சாகத்தோடு அங்குச் சென்றேன். ஆனால் தலைமை ஆசிரியர் நான் ஒரு பட்டாதாரி இல்லை என்று தெரிந்ததும், வருத்தத்துடன் என்னை நிராகரித்து விட்டார்.

"ஆனால் நான் இலத்தீன் இரண்டாவது மொழியாகக் கொண்டு இலண்டன் மெட்ரிகுலேஷன் தேர்வு தேறி இருக்கிறேன்."

"உண்மைதான். ஆனால், எங்களுக்கு ஒரு பட்டதாரி வேண்டும்."

இதற்கு வேறு வழி இல்லை. நம்பிக்கை இழந்து கையைப் பிசைந்தேன். எனது தமையனாரும் மிகக் கிலேசம் உற்றார். இனிப் பம்பாயில் அதிக காலம் தங்குவதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

ஏமாற்றத்தோடு பம்பாயை விட்டு ராஜகோட்டைக்கு வந்தோம். ஆங்கு என் அலுவலகத்தை நிறுவினேன். இங்குச் சாதாரணமாக நன்றாக முன்னேற்றம் அடைந்தேன். மனுக்கள், விண்ணப்பங்கள் தயாரிப்பதில் சராசரி மாதம் 300 ரூபாய் கிடைத்தது. இந்த வேலைக்கு எனது சொந்த ஆற்றலைவிட, செல்வாக்குக்கே நான் அதிக நன்றி செலுத்த வேண்டும்; ஏனென்றால் எனது சகோதரரின் பங்காளிக்கு ஒரு திட்டமான கட்சிக்காரர்கள் உண்டு. மிக முக்கியத் தன்மை வாய்ந்தவை, அல்லது அவ்வாறு அவர் மனதில் படுகிற மனுக்கள் முதலியவற்றை, பெரிய பாரிஸ்டர்களுக்கு அவர் அனுப்பினார். தனது எளிய கட்சிக்காரர்களின் மனுக்கள் தயார் செய்யப்படுவதற்கு என்னிடம் வந்து சேர்ந்தன.

18

முதல் அதிர்ச்சி

காலஞ்சென்ற போர்பந்தரின் ராணசாகேப் பட்டத்திற்கு வருமுன், என் தமையன் அவருக்குச் செயலாளராகவும், ஆலோசகருமாக இருந்தார். அவர் அந்த உத்தியோகத்தில் இருக்கும்போது அவருக்குத் தவறான

ஆலோசனை கூறியதாக ஒரு குற்றச்சாட்டு அச்சமயத்தில் அவர் தலைமேல் தொங்கிக்கொண்டிருந்தது. அவ் விஷயம் அப்பொழுது அரசியல் அதிகாரியிடம் சென்றிருந்தது ; அவர் என் தமையனுக்கு விரோத மனப்பான்மை கொண்டிருந்தார். இந்த அதிகாரியை எனக்கு இங்கிலாந்தில் வைத்துத் தெரியும். அவர் என்னிடம் சுமாராக நல்ல நேசப்பான்மையோடு இருந்தார் என்று சொல்லலாம். நான், இந்த நட்பைப் பயன்படுத்திக் கொண்டு, தன் சார்பில் நல்ல விதமாகச் சொல்லி அந்த அரசியல் அதிகாரியின் துவேஷத்தைப் போக்கிவிட முயலவேண்டும் என்று என் தமையன் கருதினார். இது எனக்குப் பிடிக்கவே இல்லை. இங்கிலாந்தில் வைத்து ஏற்பட்ட ஒரு சிறிய பரிச்சயத்தை இப்படிப் பயன்படுத்தக் கூடாது என்று கருதினேன். என் தமையனார் உண்மையிலேயே குற்றம் செய்திருந்தால், என் சிபார்சினால் என்ன பயன்? குற்றமிலாதவராய் இருந்தால், முறையான வழியில் மனுச் சமர்ப்பித்து, தன் குற்றமின்மையில் திடநம்பிக்கையோடு, முடிவை எதிர்நோக்க வேண்டும். இந்த என் புத்திமதி என் தமையனுக்குப் பிடிக்கவில்லை. அவர் சொன்னார், "கத்தியவாரைப் பற்றி உனக்குத் தெரியாது. உலகத்தைப் பற்றியும் இனிமேல் தான் உனக்குத் தெரியவேண்டும். இங்குச் செல்வாக்குக் குத்தான் மதிப்பு. உனக்குத் தெரிந்த ஒரு அதிகாரியிடம் என்னைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை நீ நிச்சயமாகச் சொல்லக்கூடியபோது, சகோதரனாகிய நீ உன் கடமையைப் புறக்கணிப்பது முறையன்று."

அவரை நான் மறுக்குமாறில்லை. எனவே, என் விருப்பத்திற்கு மாறாக அந்த அதிகாரியிடம் சென்றேன். எனக்கு அவரை அணுக உரிமை இல்லை என்பது அறிவேன். எனது சுயமரியாதையை நான் பங்கப்படுத்துகிறேன் என்பதும் நன்றாக உணர்வேன். அவரைப் பார்க்கத் தகுந்த சமயம் கேட்டேன் ; அதுவும் கிடைத்

தது. நான் அவருக்கு அந்தப் பழைய பரிச்சயத்தை நினைவூட்டினேன்; ஆனால் சத்தியவாடு வேறு, இங்கிலாந்து வேறு என்பதையும், வேலைபார்த்துக் கொண்டிருக்கும் அதிகாரியும் ஓய்விலிருக்கும் அதிகாரியும் ஒரே மாதிரி அன்று என்பதையும் உடனே கண்டேன். அந்த அரசியல் அதிகாரி எனது நட்பை ஒத்துக்கொண்டார். ஆனால் அந்த நினைப்பூட்டுதல் அவருக்கு விறைப்பு உண்டாக்கியது. "நிச்சயமாக, அந்தப் பழக்கத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள இங்கு நீங்கள் வரவில்லையே? அதற்காகத்தானா?" என்பதே அந்த விறைப்பின் பொருளாகத் தோன்றியது; அது அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்த மாதிரியும் தோன்றிற்று. இருந்தாலும், நான் வந்த காரியத்தைப் பேச ஆரம்பித்தேன். அதிகாரி பொறுமையற்றிருந்தார்: "உங்கள் சகோதரர் ஒரு சூழ்ச்சிக்காரர். உங்களிடமிருந்து நான் எதுவும் மேற்கொண்டு கேட்க விரும்பவில்லை. எனக்கு நேரமில்லை. உங்கள் சகோதரருக்கு ஏதாவது சொல்ல வேண்டி இருந்தால், முறையான வழிப்படி வரட்டும்." இந்தப் பதில் போதும்; தகுந்ததுமாகும். ஆனால் சுய நலத்துக்குக் கண் தெரியாது. என் கதையைச் சொல்லிக் கொண்டே போனேன். அவர் எழுந்து நின்று, "நீங்கள் இப்பொழுது போய்விட வேண்டும்," என்றார்.

"ஆனால் நான் சொல்லுவதைத் தயவு செய்து கேளுங்கள்," என்றேன்.

அது அவரை இன்னும் அதிகக் கோபம் உண்டாக்கியது. அவர் தனது சேவகனைக் கூப்பிட்டு, வெளியே போகச் சொல்லுமாறு கட்டளை இட்டார். நான் இன்னும் தயங்கிக்கொண்டு இருந்தபோது, சேவகன் உள்ளே வந்து, என் கழுத்தில் கையைப் போட்டு வெளியே தள்ளினான்.

துரை வெளியே சென்றார்; சேவகனும் அப்படியே. நான் எரிச்சலோடும் புகைச்சலோடும் சென்றேன்.

உடனே ஒரு கடிதத்தை எழுதி அவருக்கு அனுப்பினேன். அதன் சாரமாவது: "நீங்கள் என்னை அவமரியாதை பண்ணினீர்கள். உங்கள் சேவகன் மூலம் என்னைத் தாக்கினீர்கள். அதற்குப் பரிகாரம் செய்யாவிட்டால், நான் உங்கள்மேல் நடவடிக்கை எடுக்க நேரும்."

அவருடைய சேவகன் மூலம் பதிலும் உடனே வந்தது :—

"நீங்கள் என்னிடம் முரட்டுத்தனமாக நடந்தீர்கள். உங்களைப் போகச் சொன்னேன்; போகவில்லை. எனக்கு வேறு வழியின்றி, எனது சேவகனை உங்களுக்கு வாசல் கதவைக் காட்டச் சொன்னேன். அலுவலகத்தைவிட்டு அகலுமாறு அவன் உங்களைக் கேட்டுக்கொண்ட பிறகும், நீங்கள் அவ்வாறு செய்யவில்லை. எனவே உங்களை வெளியே அனுப்பவேண்டியதற்கான அளவுள்ள பலாத்காரத்தை அவன் உபயோகிக்க வேண்டி இருந்தது. உங்கள் பிரியம் போல் தாராளமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்."

இந்தப் பதிலை என் பையில் வைத்துக்கொண்டு, நான் தொங்கிய தலையுடன் வீட்டிற்கு வந்தேன்; நிகழ்ந்தவற்றை என் தமையனுரிடம் சொன்னேன். அவர் துக்கப்பட்டார்; எனக்கு எப்படி ஆறுதல் சொல்ல என்று அவர் திண்டாடினுர். தனது வக்கீல் நண்பர்களிடம் இதைப்பற்றிப் பேசினுர்; ஏனெனில் துரைமேல் எப்படி நடவடிக்கை எடுப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு வழக்குக்காகப் பம்பாயிலிருந்து சர்பிரோஸ்ஷா மேத்தா, அந்தச் சமயம் ராஜகோட்டைக்கு வந்திருந்தார். என்னைப் போன்ற இளம்பாரிஸ்டர் ஒருவருக்கு, அவரைக் காண எப்படி துணிவு உண்டாகும்? எனவே இந்த என் வழக்குக்குள்ள ஏடுகளை, அவரைக் கூட்டிக்கொண்டு வந்திருந்த வக்கீல் மூலமாக அவருக்கு அனுப்பி அவருடைய ஆலோசனை

யைக் கொடுக்குமாறு வேண்டி இருந்தேன். அவர் சொன்னார் : "இம்மாதிரி நிகழ்ச்சிகள் வக்கீல் பாரிஸ்டர் பலருக்கும் சர்வ சாதாரணமான அனுபவம் என்பதைக் காந்தியிடம் கூறுங்கள். இங்கிலாந்திலிருந்து இப்பொழுதுதான் புதிதாக வந்திருக்கிறார் ; துடிதுடிப்புள்ளவர். ஆங்கிலேய அதிகாரிகளைப் பற்றி அவருக்குத் தெரியாது. ஏதோ கொஞ்சம் சம்பாதித்துக்கொண்டு, காலத்தை இங்கு இலகுவாகக் கழிக்க அவர் விரும்பினால், இக்குறிப்பைக் கிழித்தெறிந்துவிட்டு, அவமானத்தைச் சகித்துக் கொள்ளட்டும். துரைமேல் நடவடிக்கை எடுப்பதினால், அவருக்கு எவ்வித இலாபமும் கிடைக்கப் போவதில்லை. அதற்கு மாறாக, தனக்கு அழிவு தேடிக் கொள்வதாகவே முடியலாம். வாழ்க்கையைப் பற்றி அவர் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது என்பதை அவரிடம் சொல்லுங்கள்."

இந்தப் புத்திமதி எனக்கு நஞ்சுபோல் கசப்பாய் இருந்தது. ஆனால் அதை விழுங்கியே தீரவேண்டியிருந்தது. நான் அவமரியாதைக் கட்டிக்கொண்டேன் ; ஆனால் அதனால் இலாபமும் அடைந்தேன். "இனி எக்காலும் இம்மாதிரித் தவறான நிலையில் என்னை நான் வைத்துக்கொள்ள மாட்டேன் ; இனி எக்காலும் நட்பினை இவ்வாறு பயன்படுத்த முயலமாட்டேன்," என்று எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன். அதற்குப் பின்னர், இவ் உறுதியை மீறிய குற்றவாளியாக நான் ஆனதே கிடையாது. இந்த அதிர்ச்சி என் வாழ்க்கைப் போக்கையே மாற்றியது.

அந்த அதிகாரியிடம் நான் போனது என் தவறே. ஆனால் அவருடைய பொறுமையின்மையும், அகம்பாவமும், சீற்றமும், என் தவறுக்குத் தகுந்தாற்போல் அல்ல ; பலமடங்கு அதிகமாய் இருந்தன. என் தவறு என்னை வெளியே தள்ளும் அளவுக்கு ஆனதல்ல. இனி, எனது வேலைகளில் அநேகம் அவருடைய நீதி மன்றத்

திலே நடக்க வேண்டியவைகள். அவரைச் சமானப் படுத்துவது என்ருல் இயலாத காரியம். அவருடைய தயவை நாட நான் விரும்பவில்லை. அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்போவதாக அச்சுறுத்திய பின்னர், நான் வாளா இருக்க விரும்பவில்லை.

இதற்கிடையில், நாட்டின் குட்டி அரசியலைப் பற்றிச் சில தெரிந்து கொள்ளலானேன். கத்தியவாடு, சிறிய சமஸ்தானங்களின் தொகுதி; எனவே, இயல்பாகவே, அரசியல்வாதிகள் பெருவாரி இருந்தனர். சமஸ்தானங்களுக்குள் குட்டிச் சூழ்ச்சிகள்; அதிகாரத்திற்கு வருவதற்காக அதிகாரிகளிடம் குட்டிச் சூழ்ச்சிகள், இவை நாளும் நடக்கும் நிகழ்ச்சிகள். மன்னர்கள் ஏனையோர் தயவையே நாடி நின்ருர்கள்; அடைப்பக்காரர்கள் சொல்லுவதற்குக் காது கொடுக்க எப்பொழுதும் தயாராயிருந்தார்கள். துரையினுடைய சேவகனைக் கூடத் 'தாஜா'ப் பண்ணவேண்டும். துரையினுடைய தலைமைக் குமாஸ்தாவோ, துரைக்கே அவருடைய எஜமானருக்கு மேலே; ஏனென்ருல் அவர்தான் துரைக்குக் கண்ணும் காதும் மொழி பெயர்ப்பாளரும் ஆவார். தலைமைக் குமாஸ்தா வைத்ததே சட்டம்; அவருடைய வருமானம் துரையைவிட இரண்டு மடங்கு என்று சொல்லப்பட்டது. இது மிகைப்படுத்தியதாக இருக்கலாம். ஆனல், நிச்சயமாகத் தன் வருவாய்க்கு மேலாகவே அவர் வாழ்ந்து வந்தார்.

இந்தச் சூழ்நிலை நச்சுத் தன்மை வாய்ந்ததாய் எனக்குத் தோன்றியது. இதில் எப்படி நான் வடுப்படாது தப்புவது என்பதே எனக்கு நிரந்தரமான பிரசினையாயிருந்தது.

நான் மிகவும் வாட்டமுற்றேன். என் தமையனரும் இதைத் தெளிவாகப் பார்த்தார். எனக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்குமானல் இந்தச் சூழ்ச்சி மிக்க சூழ்நிலையிலிருந்து விடுதலை பெறலாம் என்று நாங்கள் இருவரும்

உணர்ந்தோம். ஆனால், ஒரு மந்திரிப் பதவியோ நீதிபதிப் பதவியோ, சூழ்ச்சியின்றிக் கிடைக்காது. துரையோடு எனது சண்டை என் தொழிலுக்குக் குறுக்கே நின்றது.

நான் பொறுமை இழந்தேன். இதற்கிடையில், போர்பந்தரிலிருந்த ஒரு மேமன் கடை, அடியிற்கண்ட நிபந்தனை கொண்ட ஒரு கடிதத்தை என் தமையனுக்கு அனுப்பி இருந்தது.

" எங்களுக்குத் தென் ஆப்பிரிக்காவில் வியாபாரம். எங்களுடையது பெரிய கடை. அங்கு நீதிமன்றத்தில் ஒரு பெரிய வழக்கு இருக்கிறது. எங்கள் தாவா, 40,000 பவுண். அது நீண்ட காலமாக நடந்துகொண்டிருக்கிறது. நாங்கள் தலைநின்ற வக்கீல்களையும், பாரிஸ்டர்களையும் ஏற்படுத்தி இருக்கிறோம். உங்கள் சகோதரரை அனுப்பினால், எங்களுக்குப் பயன்படும்; அவருக்கும் பயன்படும். எங்களைவிட எங்கள் வக்கீல்களுக்கு வழக்கு விவரங்கள் நன்றாக எடுத்துரைக்கக் கூடும். அவருக்கும், உலகத்தில் ஒரு பகுதியைப் பார்க்கவும், புது நண்பர்களை ஏற்படுத்திக்கொள்ளவுமான ஒரு அனுகூலம் கிடைக்கும்."

" எவ்வளவு காலம் என் சேவை உங்களுக்குத் தேவை? பணம் எவ்வளவு கொடுப்பீர்கள்?" என்று கேட்டேன்.

" ஓராண்டுக்கு மேல் இராது. நாங்கள் போகவர முதல் வகுப்புப் பிரயாணச் செலவும், மற்ற எல்லாச் செலவும் நீங்கலாக 105 பவுனும் உங்களுக்குத் தருவோம்."

இது பாரிஸ்டராக அங்குப் போவதற்குப் போதாது. இது அந்தக் கடையின் ஒரு வேலையாளாகப் போவதே போலாகும். ஆனால் எப்படியாவது இந்தியாவைவிட்டுப் போகவேணும் என விரும்பினேன். அதனால் புது நாட்டைப் பார்க்கவும் புது அனுபவம் பெறவும் வாய்ப்பு

கள் இருந்தன. அத்தோடு, அண்ணனுக்கு 105 பவுண் அனுப்பலாம்; வீட்டுச் செலவுக்கு உதவி செய்யலாம். ஏதும் இழுத்துப்பறிப்பு இல்லாமல், இதனை நான் ஏற்றுக் கொண்டேன்; தென் ஆப்பிரிக்காப் போகத் தயார் ஆனேன்.

பாகம் IV

தென் ஆப்பிரிக்காவில்

19

தென் ஆப்பிரிக்கா வருதல்

நேட்டாலின் துறைமுகம் தர்பான்; அதை நேட்டால் துறைமுகம் என்றும் கூறுவர். என்னை வரவேற்க அப்துல்சேத் அங்கு வந்திருந்தார். கப்பல் துறைமுகம் வந்ததும், ஜனங்கள் தங்கள் நண்பர்களைச் சந்திக்கக் கப்பலுக்குள் வருவதைப் பார்த்தபோது, ஆங்கு இந்தியர்கள் மதிக்கப்படவில்லை என்பதைக் கண்டேன். அப்துல்லா சேத்தைத் தெரிந்தவர்கள், அவரிடம் ஒரு விதமான அகம்பாவத்தோடு நடந்துகொண்ட விதத்தை என்னால் கவனியாமல் இருக்க முடியவில்லை; அது என்னைக் குத்தியது. என்னை நோக்கியவர்கள் ஓரளவு விநோதத்தோடே நோக்கினார்கள். எனது உடை, மற்ற இந்தியர்களைப் பிரித்து என்னைக் காட்டியது. நான் ஒரு கோட்டும் தலைப்பாகையும் வங்காளிகள் அணிவது போன்ற மேலங்கியும் அணிந்திருந்தேன்.

நான் கடையின் தங்குமிடத்திற்குச் சென்றேன். அப்துல்லா சேத்தின் அறைக்கு அடுத்தாற்போல், எனக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றேன். சேத் என்னை அறிந்துகொள்ள முடியவில்லை; நான் அவரை அறிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய சகோதரர் என் மூலமாக அவருக்கு அனுப்பி உள்ள காகிதங்களைப் படித்தார்; அவர் மேலும் திகைத்தார். ஏதோ ஒரு பெரிய யானையை அவர் சகோதரர் அனுப்பிவிட்டார் என்று கருதினார். என் உடை, வாழ்க்கை, இவற்றின் பாணி, ஐரோப்பியர்

ரைப்போல், மிகச் செலவுகரமானது என்று அவருக்குப் பட்டது. அப்பொழுது எனக்குக் கொடுக்கக் கூடியதான குறிப்பிட்ட வேலை எதுவும் இல்லை. அவர்கள் வழக்கு டிரான்ஸ்வாலில் நடந்து கொண்டு இருந்தது. என்னை உடனே ஆங்கு அனுப்புவதில் அருத்தம் இல்லை. எனது ஆற்றலையும், நாணயத்தையும் எவ்வளவு தூரம் அவர் நம்ப முடியும்? என்னைக் கண்காணித்துக் கொள்ளுவதற்கு அவர் பிரிட்டோரியாவில் இருக்க முடியாது. பிரதிவாதிகள் பிரிட்டோரியாவில் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் முறையற்ற செல்வாக்கை என்னிடம் உபயோகிக்கலாம். வழக்குச் சம்பந்தமான வேலையை என்னிடம் ஒப்புவிக்காவிட்டால், என்ன வேலையை எனக்குக் கொடுக்க முடியும்? மற்ற வேலைகளை எல்லாம் அவர்களுடைய குமாஸ்தாக்களே என்னைவிட நன்ருகச் செய்வார்களே. குமாஸ்தாக்கள் தவறு செய்தால், அவர்களைத் தண்டிக்கலாம். நான் தவறுசெய்ய நேர்ந்தால், அவ்வாறு செய்ய முடியுமா? எனவே வழக்குச் சம்பந்தமான வேலை ஒன்றும் கொடுக்காவிட்டால், என்னை வெறுமனே வைத்திருக்க வேண்டியதுதான்.

அப்துல்லாசேத் அநேகமாக எழுத்து வாசனை அறியாதவர். ஆனல் அவருக்கு நிறைந்த அனுபவம் உண்டு. அவருக்கு நுண்ணிய அறிவு உண்டு; அதை அவர் உணர்ந்திருந்தார். பழக்கத்தினலே உரையாடுவதற்கு வேண்டிய அளவு ஆங்கிலம் பயின்றிருந்தார்; அது, அவருக்கு பாங்குப் பிரமுகர்களிடமோ, அல்லது ஐரோப்பிய வணிகர்களிடமோ காரியங்களை நடத்திக் கொள்ளுவதற்கும், தனது வக்கீலிடம் தனது வழக்கை விளக்குவதற்கும் பயன்பட்டது. இந்தியர்கள் அவரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். அக்காலத்தில் அவருடைய கடை இந்தியக் கடைகளுக்குள் மிகப் பெரியது; அல்லது மிகப் பெரியவைகளில் ஒன்ருகும். நான் வந்து சேர்ந்த இரண்டாவது அல்லது மூன்

ருவது நாள், தர்பான் நீதிமன்றத்தைப் பார்க்க அவர் என்னைக் கூட்டிப்போனார். அங்கு என்னைப் பலருக்கு அறிமுகப்படுத்தினார்; தனது வக்கீல் பக்கத்தில் அமரச் செய்தார். நீதிமன்றத் தலைவர் என்னைக் குறுகுறுஎன்று உற்று நோக்கினார்; முடிவில் எனது தலைப்பாகையை எடுத்து விடுமாறு கூறினார். இது செய்ய நான் மறுத்து, நீதிமன்றத்தை விட்டு வெளி வந்தேன்.

எனவே, இங்கும் கூடப் போராட்டம் எனக்குத் தயாராய் இருந்தது!

இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பத்திரிகைக்கு எழுதினேன். நீதிமன்றத்தில் தலைப்பாகை அணிவதை ஆதரித்திருந்தேன். பத்திரிகைகளில் இதைப்பற்றி அதிகமாக விவாதிக்கப்பட்டது; அவைகள் 'வேண்டா விருந்தினர்' என்று என்னைப்பற்றி விவரித்தன. எனவே நான் வந்த சில தினங்களுக்குள்ளாகத் தென் ஆப்பிரிக்காவில், இந்த நிகழ்ச்சி எனக்கு எதிர்பாராத விளம்பரத்தைத் தந்தது. சில என்னை ஆதரித்தன; வேறு சில என் திமிரை வன்மையாகக் கண்டித்தன. நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்தவரை என் தலைப்பாகையும் என்னோடேயே இருந்தது.

20

பிரிட்டோரியாவுக்கு

வழக்குக்குத் தயார்பண்ணிக்கொள்ள வேண்டும் என்றும், அப்துல்லா சேத் தானே பிரிட்டோரியாவுக்கு வரவேண்டும் அல்லது ஒரு பிரதிநிதியை அனுப்ப வேண்டும் என்று கடைக்கு அவர்கள் வழக்குரைஞரிடமிருந்து கடிதம் வந்தது. அப்பதுல்லா ஷேத் இக்கடிதத்தைப் படிக்கச் சொன்னார்; நான் பிரிட்டோரியாவுக்குப் போகலாமா என்று கேட்டார். நான்

அவரிடம், "இவ் வழக்கைப்பற்றி உங்களிடமிருந்து அறிந்துகொண்டபின்னரே நான் சொல்லமுடியும்" என்று சொன்னேன். "இப்பொழுது நான் அங்கு என்ன செய்ய என்பது விளங்கவில்லை." அதற்குப்பின், அவர் அவருடைய குமாஸ்தாக்களை வழக்கை எனக்கு விளக்குமாறு சொன்னார்.

நான் வந்த ஏழு அல்லது எட்டாவது நாளில் தர்பானுக்குப் புறப்பட்டேன். ரயிலில் எனக்கு ஒரு முதல் வகுப்பு இடம் வாங்கப்பட்டது. படுக்கை வேண்டும் என்றால், 3 ஷிலிங் அதிகமாகக் கொடுப்பது வழக்கம். நான் ஒரு படுக்கைக்கும் சீட்டு வாங்கிக் கொள்ளுமாறு அப்துல்லாசேத் வற்புறுத்தினர்; ஆனால் பிடிவாதத்தினலும் பெருமையினலும் 5 ஷிலிங் மிச்சப் படுத்தலாம் என்ற நோக்கத்தினலும், நான் மறுத்தேன். "இதோ, பாருங்கள்; இது இந்தியாவைப்போல் அல்ல; வேறு நாடு. எங்களுக்கு, ஆண்டவன் அருளினல், போதுமான அளவு பணம் இருக்கிறது. உங்களுக்குத் தேவையான எதிலும் நீங்கள் தயவுசெய்து சுருக்கிக்கொள்ள வேண்டாம்" என்றார்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு, என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்று சொன்னேன்.

நேதாலின் தலைநகரான மாரிட்ஸ்பர்குக்குப் புகை வண்டி இரவு 9 மணிக்குச் சென்றது. இந்தப் புகை வண்டி நிலையத்தில் படுக்கைகள் கொடுப்பது வழக்கம். ஒரு ரயில்வே வேலைக்காரர் வந்து எனக்குப் படுக்கை தேவையா என்று கேட்டார். "வேண்டாம்; என்னிடமே ஒன்று இருக்கிறது" என்றேன். அவர் போய்விட்டார். ஆனல் ஒரு பிரயாணி அடுத்தாற்போல் வந்தார்; அவர் என்னை மேலும் கீழும் பார்த்தார். நான் ஒரு 'கருப்பு' மனிதன் என்பதைக் கண்டார். அது அவர் மனத்தைக் கலக்கியது. அவர் வெளியே சென்று, ஒன்றிரண்டு அதிகாரிகளோடு மீண்டும் உள்ளே வந்தார். அவர்கள்

எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். அப்பொழுது இன்னொரு அதிகாரி என்னிடம் வந்து, "வாருங்கள்; சாமான் வண்டிக்கு நீங்கள் போகவேண்டும்" என்றார்.

"ஆனால் என்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு இருக்கிறது", என்றேன்.

"அதனால் பரவா இல்லை—நீங்கள் சாமான் வண்டிக்கே போகவேண்டும், என்று நான் கூறுகின்றேன்." என்றார் மற்றொருவர்.

"டர்பானில் இந்தப் பெட்டியிலே பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளேன் என்று நான் சொல்லுகிறேன் : இதிலேயே போகவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்." என்றேன்.

"இல்லை நீங்கள் போகமுடியாது. இந்தப்பெட்டியை விட்டு நீங்கள் வெளியேறவேண்டும்", அல்லது உங்களை வெளியே தள்ளப் போலிஸ்காரரை நான் கூப்பிடவேண்டி இருக்கும்." என்றார்.

"ஆகா, நீங்கள் அவ்வாறே செய்யலாம். நானாக இங்கிருந்து போக மறுக்கிறேன்." என்றேன்.

போலிஸ்காரர் வந்தார் என்னைக் கையைப் பிடித்து வெளியே தள்ளினார். எனது சாமான்களும் வெளியேற்றப்பட்டன. நான் மற்ற வண்டியில் ஏற மறுத்தேன். புகைவண்டி கிளம்பிவிட்டது. நான் என் கைப்பையை மட்டும் எடுத்துக்கொண்டு பிரயாணிகள் உட்கார்ந்திருக்கும் அறைக்குச் சென்று அங்கு அமர்ந்தேன்; மற்றச் சாமான்கள் இருந்த இடத்திலேயே இருந்தன. ரயில்வே அதிகாரிகள் அவற்றைக் கவனித்துக் கொண்டார்கள்.

அது மாரி காலம். தென் ஆபிரிக்காவின் உயர் பாகங்களில் மாரி காலம் கடுமையான குளிராக இருக்கும். மாரிட்ஸ்பர்க் மிக உயர்வான இடமானதால், குளிர் மிகவும் கடுமையாக இருந்தது. என்னுடைய 'ஓவர்கோட்' பெட்டிக்குள் இருந்தது. ஆனால்,

மீண்டும் அவமானத்துக்குள்ளாளக் கூடுமாதலால், அதனைக் கேட்க நான் துணிவு கொள்ளவில்லை. எனவே, உட்கார்ந்து நடுநடுங்கிக்கொண்டு இருந்தேன். அந்த அறையில் விளக்கு இல்லை. நள்ளிரவு சமயத்தில் ஒரு பிரயாணி உள்ளே வந்தார்; ஒருக்கால் என்னிடம் பேச விரும்பினார் போலும்; ஆனால் நான் பேசக்கூடிய ஒரு பான்மையில் இல்லை.

எனது கடமையைப் பற்றிச் சிந்திக்கலானேன்: எனது உரிமைகளுக்காகப் போராட வேண்டுமா அல்லது இந்தியாவுக்குத் திரும்பவேண்டுமா, அல்லது இவ் அவமானங்களைப் பாராட்டாது பிரிட்டோரியாவுக்குச் சென்று, வழக்கை முடித்துக்கொண்டு இந்தியா திரும்ப வேண்டுமா? எனது கடமைகளை நிறைவேற்றாது, இந்தியாவுக்கு திரும்புவது என்பது கோழைத்தனமாகும். நான் உள்ளான கஷ்டங்கள் மேலெழுந்த வாரியானவை—நிறத்துவேஷம் என்ற ஆழமான நோயின் ஒரு அடையாளமே ஆகும். முடியுமானால் இந்த நோயை வேரறுக்கப் பிரயாசைப்பட வேண்டும்; அந்த நடவடிக்கைகளில் கஷ்டங்கள் படவேண்டும். நிறத்துவேஷத்தை நீக்குவதற்கு அவசியமான அளவே, அநீதிகளுக்குப் பரிகாரங்களை நான் நாடவேண்டும் என்று தீர்மானித்தேன்.

எனவே, அடுத்த புகைவண்டியில் பிரிடோரியா போவதாக முடிவு செய்தேன்.

மறுநாட் காலை ரயில்வே பொது மானேஜருக்கு நீண்ட தந்தி ஒன்று அனுப்பினேன். அப்துல்லா சேத்துக்கும் தெரிவித்தேன். அவர் உடனே பொது மானேஜரைப் பார்த்தார். ரயில்வே அதிகாரியின் நடத்தை சரியானதே என்று பொது மேனேஜர் சொன்னார்; ஆனால் நான் குறிப்பிட்ட ஊருக்குச் செல்லுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு புகைவண்டி நிலைய அதிகாரிக்குத் தாக்கல் கொடுத்திருப்பதாகச் சொன்னார். அப்துல்லா ஷேத், மாரிட்ஸ்பர்கிலுள்ள இந்திய வணிகர்களுக்கும், மற்ற

ஊரிலிலுள்ள நண்பர்களுக்கும் என்னைச் சந்தித்துக் கவனித்துக்கொள்ளுமாறு தந்திகள் அனுப்பி இருந்தார். வணிகர்கள் புகைவண்டி நிலயத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார்கள்; தங்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களைச் சொல்லியும், எனக்கு நிகழ்ந்தது ஒன்றும் அசாதாரண மானது அல்ல என்பதை விளக்கியும், எனக்கு ஆறுதல் சொல்ல முற்பட்டனர். முதல் வகுப்பிலோ, இரண்டாவது வகுப்பிலோ பிரயாணம் செய்யும் இந்தியப் பிரயாணிகள் ரயில்வே உத்தியோகஸ்தர்களிடமிருந்தும், வெள்ளைப் பிரயாணிகளிடம் இருந்தும், தொந்தரவை எதிர்பார்க்க வேண்டியதே என்றும் சொன்னார்கள். அந்நாள் இவ்வாறு இச்சோகக் கதைகளைக் கேட்பதில் கழிந்தது. மாலை ரயில் வந்தது. எனக்கு ஒரு இடம் ஒதுக்கிவைக்கப்பட்டு இருந்தது. தர்பானில் வேண்டாம் என்று மறுத்த 'படுக்கை'ச் சீட்டை இப்பொழுது மாரிட்ஸ்பர்கில் வாங்கிக்கொண்டேன்.

அடுத்த நாள் ரயில் சார்ல்ஸ்டவுன் என்ற ஊரை அடைந்தது. அந்நாளில், சார்ல்ஸ்டவுனுக்கும் ஜோகனஸ்பர்குக்கும் இடையில் ரயில் கிடையாது. கோச் வண்டிதான் உண்டு. அது இரவில் வழியில் ஸ்டாண்டர்டன்னில் நிற்கும். அந்த கோச்சுக்கு என்னிடம் பயணச் சீட்டு இருந்தது. மாரிட்ஸ்பர்க்கில் பிரயாணம் ஒரு நாள் நின்றதால், அந்தச் சீட்டு ரத்தாக்கப்படவில்லை. தவிரவும், சார்ல்ஸ்டன் 'கோச்' ஏஜண்டுக்கு, அப்துல்லா சேத் தந்தியும் அனுப்பி இருந்தார்.

ஆனால், அந்த ஏஜண்டுக்கு என்னைத் தட்டிக் கழிக்க ஒரு 'சால்ஜாபு' வேண்டி இருந்தது. எனவே நான் புதியவன் என்று கண்டுகொண்டஉடன், "உங்கள் பயணச்சீட்டு ரத்தாகிவிட்டது" என்றான். நான் அதற்குத் தகுந்த பதில் கொடுத்தேன். அவன் என்னை மறுப்பதற்கு அவன் உள்ளத்திலிருந்த காரணம், இருப்பதற்கு இடமில்லை என்பது அல்ல, ஆனால் பிறிதொன்று :

பிரயாணிகள் கோச்சுக்குள் இருக்கவேண்டும்; ஆனால் நான் ஒரு 'கூலி'யாகக் கருதப்பட்டதாலும், புதிய வனாகத் தோன்றியதாலும், வெள்ளையரோடு என்னை உட்காரவைப்பது தகுதியன்று என்று, அந்தத் 'தலை வன்,' (அதாவது கோச்சை மேற்பார்க்கும் வெள்ளைய னுக்கு அப்படிப் பெயர்) கருதினான். கோச்சுப்பெட்டியில் இருபக்கமும் பிரயாணிகள் உட்கார ஆசனங்கள் இருந் தன. வழக்கமாக இதில் ஒன்றில் 'தலைவன்' அமரு வான். இன்று அவன் உள்ளே உட்கார்ந்துகொண்டு, அவனுடைய ஆசனத்தை எனக்குத் தந்தான். இது தனியான அநியாயம், அவமானம், என்று எனக்குத் தெரியும். எனினும் அதனைச் சகித்துக்கொள்ளுவதே நல்லது என்றெண்ணினேன். நான் பலவந்தமாக உள்ளே சென்றிருக்கமுடியாது. நான் இதை மறுத் துரைத்திருந்தால், கோச் வண்டி என்னை விட்டுவிட்டுக் கிளம்பியிருக்கும். அதனால் இன்னொருநாள் வீணாகும்; அதற்கு அடுத்த நாளும் யாது நிகழுமோ, ஆண்டவனே அறிவார்! எனவே, அகத்துள்ளே நான் எவ்வளவு கொதிப்பு அடைந்தாலும், புத்திசாலித்தனமாக கோச் வண்டிக்காரன் பக்கத்தில் அமர்ந்துகொண்டேன்.

சுமார் 3 மணிக்கு கோச் பார்டிகோப்பை அடைந் தது. இப்பொழுது, தலைவன் புகைப்பிடிக்கவோ, அல் லது நல்ல காற்று வாங்கவோ, நான் அமர்ந்திருந்த ஆசனத்திற்கு வர விரும்பினான். எனவே அவன் வண்டி யோட்டியிடமிருந்து, ஒரு அழுக்குப் படிந்த சாக்குத் துணியை எடுத்து ஏறும் படியில் அதை விரித்து, என்னை விளித்து, "சாமி, நீர் இதன்மேல் உட்காரும். நான் சாரதி பக்கம் உட்காரவேண்டும்." என்றான். இந்த அவமானம் என்னால் தாங்கவே முடியவில்லை. பயந்து நடுங்கிக்கொண்டு அவனிடம் சொன்னேன்; "எனக்கு உள்ளேயே நீர் இடம் தந்திருக்கவேண்டும் என்றாலும், நீரே இங்கு என்னை அமரச்செய்தீர். நான் அந்த அவ

மானத்தைப் பொறுத்துக்கொண்டேன். இப்பொழுது உமக்கு வெளியில் உட்கார்ந்து புகைப்பிடிக்க வேண்டி இருப்பதால், உமது காலடியில் உட்காரச் சொல்லுகிறீர். என்னால் அது முடியாது. ஆனால் உள்ளே அமரத்தயார்.'' என்றேன்.

இவ்வாக்கியங்களை நான் தத்தித் தடுமாறிச் சொல்லிக்கொண்டிருக்கையில், அவன் என் பக்கத்தில் வந்து, காதில் ஓங்கி அறைய ஆரம்பித்தான். என்னைக் கையால் பிடித்துக்கொண்டு இழுக்க முயன்றான். நான் கோச்பெட்டியின் பித்தளைக் கம்பிகளைக் கட்டியாகப் பிடித்துக்கொண்டு, எனது மணிக்கட்டை எலும்புகள் முறிந்துபோவதாய் இருந்தாலும், பிடியை விடாமலிருக்கத் தீர்மானித்தேன். அந்த மனிதன் என்னைத் திட்டுவது, இழுப்பது, அடிப்பது, நான் சும்மா இருப்பது ஆகிய இக்காட்சியைப் பிரயாணிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சில பிரயாணிகள் என்மீது இரக்கம் கொண்டு, ''ஏ மனிதா, அவரைச் சும்மா விட்டுவிடு. அவரை அடிக்க வேண்டாம். அவர்மேல் குற்றமில்லை. அவர் சொல்வது சரியே. அவர் அங்கே இருக்கவேண்டாம் என்றால், உள்ளே வந்து எங்களோடு உட்காரட்டும்.'' என்று கூறினார்கள். ''அதெல்லாம் முடியாது,'' என்று அம்மனிதன் உரத்துக் கூறினான். ஆனால் அவன் முகம் கொஞ்சம் வாட்டமுற்றது; என்னை அடிப்பதை நிறுத்திவிட்டான். எனது கையை விட்டுவிட்டான். ஆனால் இன்னும் கொஞ்சம் அதிகமாகத் திட்டினான். கோச்சுப்பெட்டியின் அடுத்த பக்கம் அமர்ந்து இருந்த ஹாடன்டாட் வேலைக்காரனை, நடைப் பலகையில் உட்காரச் சொல்லி, காலி ஆன அந்த இடத்தில் அவன் உட்கார்ந்துகொண்டான்.

பிரயாணிகள் ஆசனத்தில் அமர்ந்தனர்; விசில் ஊதியது. வண்டியும் புறப்பட்டது. என் இருதயம், நெஞ்சுக்குள்ளே வேகமாக அடித்துக்கொண்டிருந்தது.

நான் போகவேண்டிய ஊருக்கு உயிரோடு போய்ச் சேருவேனு என்று சிந்தித்துக்கொண்டு இருந்தேன். வாயே திறக்காமல், ஆண்டவனைத் துணைபுரியுமாறு பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். இருட்டிய பின் நாங்கள் ஸ்டாண்டர்டன் சேர்ந்தேன். சில இந்தியர் களைக் கண்டதும் ஆறுதல் பெருமூச்சு விட்டேன். நான் கீழே இறங்கியதும், அந்த நண்பர்கள், "உங்களை வரவேற்று இசாசேத் கடைக்குக் கூட்டிப் போகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். தாதா அப்துல்லாவிட மிருந்து எங்களுக்குத் தந்தி வந்தது" என்ருர்கள். நான் மிக மகிழ்வுற்றேன். சேத் இசாஹாஜி கடைக்குச் சென்ரேம். சேத்தும் அவருடைய குமாஸ்தாக்களும் என்னை வளைந்து கொண்டனர். எனக்கு நடந்ததை எல்லாம் அவர்களிடம் சொன்னேன். அவர்கள் மிக மனவருத்தமுற்ருர்கள்; தங்களுக்கு நேர்ந்த கடுமை யான அனுபவங்களைச் சொல்லி எனக்கு ஆறுதல் கூறினுர்கள்.

கோச் கம்பெனியின் பிரதிநிதிக்கு இந்த நிகழ்ச்சி முழுவதையும் தெரிவிக்க விரும்பினேன். எனவே அவருக்கு நிகழ்ந்த ஒவ்வொன்றையும் வரைந்து, அம் மனிதன் அச்சுறுத்தியதையும் அவர் கவனத்துக்குக் கொண்டுவந்து ஒரு கடிதம் எழுதினேன். நாங்கள் மறுநாட்காலை புறப்படும் பொழுது கோச் வண்டியின் உள்ளே மற்றப் பிரயாணிகளோடு அமர இடம் தருவதாக உறுதி தரவேண்டும் என்றும் கேட்டிருந்தேன். அதற்கு அந்த ஏஜண்டு அடியிற்கண்ட பொருளோடு பதில் அளித்தார். "ஸ்டாண்டர்டன்னிலிருந்து, வேறு ஆட் களின் பார்வையில் பெரிய கோச் வண்டி புறப்படுகிறது. நீங்கள் புகார் செய்துள்ள அந்த ஆள் நாளைக்கு வர மாட்டார். மற்றப் பிரயாணிகளோடு உங்களுக்கு உள்ளே இடம் தரப்படும்." இது எனக்கு ஏதோ கொஞ்சம் ஆறுதல் அளித்தது. என்னைத் தாக்கியவர்

மேல் நடவடிக்கை எடுப்பதான எண்ணம் எனக்குக் கிடையாது. எனவே இத்தாக்குதல் இத்துடன் முடிவுற்றது.

காலையில் இசாசேத்தின் ஆட்கள் கோச் வண்டிக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போனார்கள். எனக்கு நல்ல ஆசனம் கிடைத்தது. அன்றிரவு சுகமாக ஜோகனஸ்பர்க் போய்ச் சேர்ந்தேன்.

ஸ்டாண்டர்டன் ஒரு குக்கிராமம்; ஜோகனஸ்பர்க் பெரிய நகரம். அப்துல்லாசேத் ஜோகனஸ்பர்குக்கும் தந்தி அனுப்பி இருந்தார்; அங்குள்ள மகமத் காசம் கம்ருதின் கடை முகவரியும் பெயரும் என்னிடம் கொடுத்திருந்தார். அவருடைய ஆட்கள் வண்டி நிற்கும் இடத்திற்கு வந்திருந்தார்கள்; நான் அவர்களைப் பார்க்கவில்லை. அவர்கள் என்னை அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ளவில்லை. எனவே நான் ஒரு விடுதிக்குச் செல்லுவதாகத் தீர்மானித்தேன். பலவற்றின் பெயர்கள் எனக்குத் தெரியும். எனவே ஒரு வாடகை வண்டி எடுத்துக்கொண்டு கிராண்டு நேஷனல் விடுதிக்குச் சென்றேன். மானேஜரைப் பார்த்து, ஒரு அறை கேட்டேன். என்னைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்து, "இங்கு இடம் நிரம்பிவிட்டது; நான் மிகவும் வருந்துகிறேன்," என்று மரியாதையோடு சொல்லி அனுப்பிவிட்டார். எனவே சாரதியை மகமத் காசம் கமருதீன் கடைக்கு விடுமாறு சொன்னேன். இங்கு அப்துல்கனி சாகேப் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்; என்னைப் பிரியத்தோடு வரவேற்றார். விடுதியில் எனது அனுபவக் கதையைக் கேட்டு நெஞ்சாரச் சிரித்தார். "ஒரு விடுதியில் உங்களுக்கு இடம் கிடைக்குமென்று எப்படித்தான் நீங்கள் எதிர்பார்த்தீர்களோ?" என்றார்.

"ஏன் கிடையாது?" என்று கேட்டேன்.

"நீங்கள் இங்குச் சில நாட்கள் தங்கிய பின்னர் எல்லாம் தெரிந்து கொள்ளுவீர்கள்." என்றார் "இம்

மாதிரியான ஒரு நாட்டில் நாங்கள் தான் வாழ முடியும். ஏனென்றால் பணம் சம்பாதிப்பதற்காக அவமரியாதைகளை நாங்கள் பொருட்படுத்துவதில்லை. எனவே நாங்கள் இங்குளோம்.'' இத்தோடு, அவர் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் அவதிக் கதையை எனக்கு எடுத்துரைத்தார்.

நாம் மேலே செல்லும் போது, சேத் அப்துல் கனியைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ளுவோம்.

அவர் சொன்னார், '' இந்த நாடு உங்கள் போன்றவர்களுக்கு அன்று. நீங்கள் நாளை பிரிட்டோரியா செல்ல வேண்டும். மூன்றாவது வகுப்பில்தான் பிரயாணம் செய்ய வேண்டும். நேதாலைவிட இங்கே திரான்ஸ்வாலில் நிலைமை மிக மோசம். இந்தியர்களுக்கு முதல், இரண்டாவது வகுப்புப் பயணச் சீட்டுக்கள் கொடுப்பதில்லை.

'' இந்தக் காரியத்தில் நீங்கள் ஓயாத பிரயாசைகள் எடுத்திருக்க மாட்டீர்கள்.''

'' நாங்கள் விண்ணப்பங்கள் அனுப்பி உள்ளோம். ஆனால் நம் ஆட்களும் முதல், இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்ய விரும்புவதில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.''

ரயில்வே விதிகளை வரவழைத்து, அவற்றைப் படித்தேன். திரான்ஸ்வால் சட்டங்கள், அவ்வளவு திட்டவட்டமாக இல்லை; ரயில்வே விதிகளோ அதைவிட வழ வழாவாக இருந்தன. நான் சேத்திடம் சொன்னேன். '' நான் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய விரும்புகிறேன். அது முடியாவிட்டால், பிரிட்டோரியாவுக்கு ஒரு மோட்டாரில் போக நினைக்கிறேன்; முப்பத்தேழு மைல் தானே.''

ஷேத் அப்துல் கனி, இதனால் ஏற்படும் அதிக நேரத்தையும், செலவையும் என் கவனத்திற்குக் கொண்டு வந்தார். எனினும் நான் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும் யோசனையை ஏற்றுக் கொண்டார்.

எனவே ரயில் நிலைய அதிகாரிக்கு ஒரு கடிதம் அனுப்பினேம். அக்கடிதத்தில், நான் ஒரு பாரிஸ்டர் என்றும், நான் எப்பொழுதும் முதல் வகுப்பிலேயே பிரயாணம் செய்பவர் என்றும், நான் பிரிட்டோரியாவுக்கு எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போக வேண்டி இருக்கிறதென்றும், எனவே அவருடைய பதிலுக்குக் காத்திருக்க நேரமில்லாதபடியால், பயணச் சீட்டை ரயில் நிலையத்தில் நேரிலே பெற்றுக் கொள்ளுகிறேன் என்றும், ஒரு முதல் வகுப்புச் சீட்டுப் பெற நான் எதிர் பார்ப்பதாகவும், எழுதி இருந்தேன். நேரிலேயே பதிலைப்பெற்றுக் கொள்ளுவதாக எழுதியதில் ஒரு நோக்கம் இருந்தது. நிலைய அதிகாரி எழுத்து மூலமாகப் பதில் தருவதானல், நிச்சயமாக ‘இல்லை’ என்றே சொல்லுவார்; ஏனென்றல், ‘கூலி’ பாரிஸ்டரைப்பற்றி அவருக்குத் தனியான கருத்து இருக்கும், என்று நான் நினைத்தேன். எனவே அவர் முன்னிலையில் அழகிய ஆங்கில உடையில் சென்று, நேரில் பேசி, முதல் வகுப்புப் பயணச் சீட்டுத் தருமாறு இணங்கச் செய்ய வேண்டும். எனவே, ரயில் நிலைய அதிகாரியிடம் நாகரிகமான கோட்டும் ‘டையும்’ அணிந்து கொண்டு, எனது பயணச் சீட்டுக்காக ஒரு பவுனைச் சீட்டுக்கொடுக்கும் பலகையில் வைத்து முதல் வகுப்புச் சீட்டுக் கேட்டேன்.

“நீங்கள் தான் அக்கடிதம் அனுப்பியவரோ?” என்று அவர் கேட்டார்.

“ஆமாம், அப்படியேதான். நீங்கள் பயணச் சீட்டுக் கொடுத்தால் மிகக் கடப்பாடுடையேன். இன்று நான் பிரிட்டோரியா போய்ச் சேர வேண்டும்.”

அவர் புன் புறுவல் செய்து, இரக்கத்தால் தூண்டப் பெற்றுச் சொன்னர்; “நான் டிரான்ஸ்வால்காரனல்ல. ஹாலந்து நாட்டினன். உங்கள் உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். உங்களுக்கு என் அனுதாபமும் உண்டு. உங்களுக்குப் பயணச் சீட்டுக் கொடுக்கவே

விரும்புகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் தருவேன். ரயில் 'கார்டு' உங்களை மூன்றாவது வகுப்பு வண்டிக்குப் போகும்படி சொன்னால், இந்த விஷயத்தில் என்னை இழுத்து விடக்கூடாது; அதாவது ரயில்வே கம்பெனிமேல் நீங்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாது. நீங்கள் சுகமாகப் பிரயாணம் செய்வீர்களாக! நீங்கள் கனவான் என்பது எனக்குத் தெரிகிறது.''

இவ்வார்த்தைகளோடு எனக்குப் பயணச் சீட்டுக் கொடுத்தார். நான் அவருக்கு நன்றி கூறி, அவசியமான உறுதி மொழியும் கொடுத்தேன்.

சேத் அப்துல் கனி என்னை வழியனுப்ப ரயில் நிலையத்திற்கு வந்திருந்தார். அது அவருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அதிசயத்தை அளித்தது; ஆனால் அவர் எச்சரித்துச் சொன்னார்: "நீங்கள் பிரிட்டோரியாவுக்குச் சுகமாகப் போய்ச் சேர்ந்தால் மிகு நன்றி உள்ளவனாக இருப்பேன். முதல் வகுப்பில் உங்களைச் சாந்தியாக இருக்க ரயில் கார்டு விடமாட்டார் என்றெண்ணுகிறேன்; அவர் விட்டாலும், பிரயாணிகள் விடமாட்டார்கள்.''

நான் முதல் வகுப்பில் அமர்ந்தேன்; புகை வண்டி புறப்பட்டது. கிரிம்ஸ்டனில் கார்டு சீட்டுகளைச் சோதிக்க வந்தார். நான் அங்கிருப்பதைப் பார்த்துச் சினமுற்று, அவருடைய விரலால் மூன்றாவது வகுப்பு வண்டிக்குப் போகுமாறு சமிக்ஞை செய்தார். நான் எனது முதல் வகுப்புப் பயணச் சீட்டைக் காட்டினேன். "அதனால் பாதகம் இல்லை; மூன்றாவது வகுப்புக்குச் செல்லுக.'' என்றார்.

அந்தப் பெட்டியில் ஒரே ஒரு ஐரோப்பியப் பிரயாணியே இருந்தார். அவர் கார்டைக் கண்டித்தார். "இப்பிரயாணியை இப்படித் தொந்திரவு செய்வதின் அருத்தம் என்ன? அவர் முதல் வகுப்புச் சீட்டு வைத்திருக்கிறார் என்பது தெரியவில்லையா? அவர் என்னோடு

பிரயாணம் செய்வதில் எனக்குக் கிஞ்சிற்றேனும் தடை இல்லை'' என்றார். அவ் ஐரோப்பியர் என்னை விளித்து; "நீங்கள் இருக்கும் இடத்திலேயே சௌகரியமாக இருங்கள்.'' என்றார்.

கார்டு முணு முணுத்தார். "ஒரு 'கூலி'யோடு நீங்கள் பிரயாணம் செய்ய விரும்பினால் எனக்கென்ன?'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மாலை 8 மணி சுமாருக்குப் புகைவண்டி பிரிட் டோரியா போய்ச் சேர்ந்தது.

21

பிரிட்டோரியாவில் முதல் நாள்

1893-ல் பிரிட்டோரியா ரயில் நிலையம் 1914-ல் இருந்ததைப் போல் அல்ல. மிக வேறுபாடு உண்டு. விளக்குகள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. பிர யாணிகள் மிகச் சிலரே. எல்லாப் பிரயாணிகளும் போயின பின்னர், சீட்டுச் சேகரிப்போர் சுமாராகச் சும்மா இருக்கும்போது, நான் பயணச் சீட்டை அவ ரிடம் கொடுத்துவிட்டு, நான் தங்குவதற்கு ஒரு சிறிய விடுதி, அல்லது அதைப்போல ஏதாவது ஒரு இடத்திற் குப் போக வழி சொல்ல முடியுமா என்று கேட்க வேண் டும் என்றெண்ணினேன். மற்றப்படி, அன்றிரவை ரயில்வே நிலையத்தில் கழிக்கவேண்டும். இதை அவரிடம் கேட்பதற்குக்கூட நான் பின்வாங்கினேன் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் அவமானப் படுத்தப் படுவதற்கு அஞ்சினேன்.

நிலையத்திலிருந்து பிரயாணிகள் அனைவரும் சென் றனர். எனது சீட்டைச் சீட்டுச் சேகரிப்போரிடம் கொடுத்து விட்டு, என் விசாரணைகளை ஆரம்பித்தேன். அவர் மிக மரியாதையோடு பதில் சொன்னார்; ஆனால்

எனக்கு உபயோகமான தகவல் ஒன்றும் தர இயல வில்லை. ஒரு அமெரிக்க நீக்ரோ, எங்கள் சம்பாஷணையில் புகுந்தார்.

" நீங்கள் நண்பர்களில்லாத ஒரு புதியவர் என்று தெரிகிறது. நீங்கள் என்னுடன் வந்தால், நான் ஒரு சிறிய விடுதிக்கு அழைத்துச் செல்லுகிறேன். அதன் சொந்தக்காரர் ஒரு அமெரிக்க நாட்டினர். எனக்கு அவரை நன்ருகத் தெரியும். உங்களை அவர் ஏற்றுக் கொள்ளுவார் என்றெண்ணுகிறேன்," என்ருர்.

அவருடைய இந்த யோசனையில் எனக்குச் சந்தேக மிருந்தது; ஆனலும் அவருக்கு நன்றி கூறி அதை ஏற் றுக் கொண்டேன். அவர் என்னை ஜான்சனின் குடும்ப விடுதிக்கு அழைத்துச் சென்ருர். அவர் திரு. ஜான்ச னிடம் பேசுவதற்காக அவரை ஒரு பக்கமாகக் கூட்டிச் சென்ருர்; திரு. ஜான்சன், இரவில் நான் அங்கு தங்கு வதற்கு இரவுச் சாப்பாட்டை, என் அறையிலேயே சாப் பிட்டுக்கொள்ளும் நிபந்தனைக்கு உட்பட்டு, ஒத்துக் கொண்டார்.

அவர் சொன்னர், " எனக்கு ஒன்றும் நிறத் துவேஷம் கிடையாது என்று உங்களுக்கு உறுதி சொல்லுகிறேன். ஆனல் எனக்கெல்லாம் ஐரோப்பிய வாடிக்கைக்காரர்களே. சாப்பிடும் பொது அறையில் உங்களைச் சாப்பிட அனுமதித்தால், அவர்கள் கோபம் கொள்ளக் கூடும்; வெளியே கூடப் போய்விடக் கூடும்."

" எனக்கு இங்கு இரவு இடம் கொடுத்ததற்காக, உங்களுக்கு நன்றி. இங்கு உள்ள நிலைமைகளைப்பற்றி ஏறத்தாழ இப்பொழுது அறிந்து கொண்டுள்ளேன்; எனவே உங்கள் சங்கடத்தை நான் உணர்கிறேன். எனது அறையில் எனக்குச் சாப்பாடு போடுவதற்கு எனக்குத் தடை இல்லை. நாளை நான் வேறு ஏற்பாடு செய்து கொள்ளக்கூடும் என்று நம்புகிறேன்." என்றேன்.

ஒரு அறையை எனக்குக் கொடுத்தார்கள். நான் தனியே இருந்தபடியால், சிந்தனையில் ஆழ்ந்து உணவுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். பரிமாறுகிறவன் உணவோடு விரைவிலே வருவான் என்று எதிர்பார்த்தேன். அதற்குப் பதிலாக திரு. ஜான்சன் வந்து சொன்னார், “உங்களை நான் இங்கு சாப்பிடச் சொன்னதற்காக வெட்கமடைகிறேன். உங்களைப் பற்றி மற்ற விருந்தினரிடம் கூறி, நீங்கள் சாப்பாட்டு அறையில் சாப்பிடுவதற்கு ஏதாவது தடை உண்டா என்று கேட்டேன். அவர்கள் அதற்கு எவ்விதத் தடையுமில்லை என்றும், நீங்கள் வேண்டிய நாள் இங்கு இருப்பதிலும் தடை இல்லை என்றும் சொன்னார்கள். எனவே, சாப்பாட்டு அறைக்கு வாருங்கள். இங்கும் வேண்டு நாளளவும் தங்குங்கள்.”

அவருக்கும் மீண்டும் நன்றி கூறிச் சாப்பாட்டு அறைக்குச் சென்று வயிறுர உண்டேன்.

22

கிரிஸ்தவரோடு பழகுதல்

மறுநாட்காலை, வக்கீலான திரு. ஏ. டபிள்யூ. பேக்கரைச் சந்தித்தேன். அவரைப்பற்றி அப்துல்லா சேத் விவரித்திருந்தார். எனவே அவருடைய உற்சாகமான வரவேற்பில் நான் ஆச்சரியப் படவில்லை. என்னை முக மலர்ச்சியோடு வரவேற்று, அன்பாகக் குசலங்கள் விசாரித்தார். என்னைப் பற்றி யாவும் சொன்னேன். அதன்மேல் அவர் சொன்னார், “பாரிஸ்டர் என்ற நிலையில் உங்களுக்கு இங்கு வேலை இல்லை. ஏனென்றால் நாங்கள் தலைசிறந்த வழக்குரைஞரை ஏற்பாடு செய்திருக்கிறோம். வழக்கு நீடித்த காலமாயுள்ளது; சிக்க

லானது. எனவே, அவசியமான தாக்கல்கள் வரவழைக்கும் அளவுக்கு உங்கள் உதவியைப் பெற்றுக் கொள்ளுகிறேன். என் கட்சிக்காரரோடு இனிக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதை நீங்கள் எனக்கு இலகு ஆக்குவீர்கள் ; ஏனென்றால் எனக்கு வேண்டிய தகவல் முழுதும் இனி உங்கள் மூலமாகவே கேட்பேன். நிச்சயமாக அது ஒரு அனுகூலமே. உங்களுக்கு இன்னும் அறைகள் நான் ஏற்பாடு செய்யவில்லை. உங்களைச் சந்தித்த பின்னர் செய்வதே நல்லது என்றிருந்தேன். இங்கு நிறத்துவேஷம் பயங்கரமான அளவு அதிகம். எனவே உங்களைப் போன்றவர்களுக்கு இடம் பிடிப்பது சுலபம் அல்ல. ஆனால் எனக்கு ஒரு ஏழைப் பெண்ணைத் தெரியும். அவள் ஒரு ரொட்டி செய்வோரின் மனைவி. அவள் உங்களை ஏற்றுக் கொண்டு, அதே சமயத்தில் தனக்கு அதிகவருவாய் பண்ணிக் கொள்ளுவாள் என்றெண்ணுகிறேன். சரி, அவளுடைய இடத்துக்குப் போவோம், வாருங்கள்.''

அவள் வீட்டுக்கு அவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனார். என்னைப்பற்றி அவளிடம் அவர் தனியாகப் பேசினார். வாரத்திற்கு 35 ஷிலிங் வீதம் என்னை உண வருந்துவோராக அவள் என்னை ஏற்றுக்கொண்டாள்.

திரு. பேக்கர், ஒரு வக்கீலாக இருப்பதோடு, ஒரு மத போதகராகவும் இருந்தார். இன்னும் அவர் உயிரோடிருக்கிறார் ; சட்டத் தொழிலை விட்டுவிட்டு, கிரிஸ்தவப் பிரசாரவேலையில் இப்பொழுது ஈடுபட்டுள்ளார். அவர் நல்ல பணக்காரரர். இன்னும் எனக்குக் கடிதம் எழுதி வருகிறார். அவருடைய கடிதங்களில் அவர் எப்பொழுதும் ஒரு விஷயத்தையே வற்புறுத்தி வருகிறார். பல கோணங்களில் இருந்து, கிரிஸ்தவ மதத்தின் உயர்வை நிலை நாட்டுகிறார். கிரிஸ்துவே ஆண்டவனுடைய ஒரே மகன் என்பதையும், அவரே மனிதகுலத்தைக் காப்பாற்றுகிறவன் என்றும் ஒருவர் ஏற்றுக்கொண்டாலொழிய,

நிரந்தரமான சாந்தியை அடைவது சாத்தியமில்லை என்று வாதாடுகிறார்.

எனது முதற்சந்திப்பிலே, திரு. பேக்கர் என்னுடைய சமயக் கருத்துக்களைத் தெரியலுற்றார். "என் பிறப்பினால் நான் ஒரு இந்து. எனினும் இந்து மதத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் அதிகம் தெரியாது; மற்ற மதங்களைப் பற்றி நான் அறிந்திருப்பது அதனினும் குறைவே. உண்மையாக, என் நிலை என்ன என்பதும் எனது மத நம்பிக்கை எது, எதுவாயிருக்கவேண்டும் என்பதும் எனக்குத் தெரியாது. எனது மதத்தைப் பற்றியும், என்னால் இயன்ற அளவு பிற மதங்களைப் பற்றியும், கவனத்தோடு படிக்க நினைத்திருக்கிறேன்."

திரு. பேக்கர் இவற்றை எல்லாம் கேட்டு மகிழ்வுற்றுச் சொன்னார்: "நான் தென் ஆப்பிரிகா பொது கிரிஸ்தவச் சங்கத்தின் 'டைரக்டர்'களில் ஒருவன். என் செலவிலேயே நான் ஒரு கிரிஸ்தவக் கோவில் கட்டி இருக்கிறேன். அதில் ஒழுங்காகச் சொற்பொழிவு செய்து வருகிறேன். எனக்கு நிறத்துவேஷம் கிடையாது. எனக்குச் சில சக ஊழியர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒவ்வொருநாளும் ஒரு மணிக்குச் சில நிமிடங்கள் சந்தித்து, சாந்தியும் ஒளியும் அருளுமாறு இறைஞ்சி வருகிறோம். எங்களோடு நீங்களும் கலந்து கொள்ளக் கூடுமானால், நான் மகிழ்ச்சி அடைவேன். எனது சக ஊழியர்களுக்கு உங்களை அறிமுகம் செய்துவைக்கிறேன்; அவர்கள் உங்களை மகிழ்ச்சியோடு சந்திப்பார்கள்; நீங்களும் அவர்களுடைய உறவை விரும்புவீர்கள் என்று நம்புகிறேன்." நான் திரு. பேக்கருக்கு நன்றிகூறிக் கூடுமானமட்டும் ஒழுங்காக அவருடைய ஒருமணிப் பிரார்த்தனைக்கு வருவதாக ஒத்துக்கொண்டேன்.

பிற்றை நாள் ஒரு மணிக்குத் திரு. பேக்கரின் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றேன். ஆங்கு, குமாரி ஹாரிஸ், குமாரிகாப், திரு. கோட்ஸ், ஆகியோருக்

கும், ஏனையோருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். ஹாரிஸ், காப் ஆகிய குமாரிகள், வயதான மணமாகாத பெண்கள். திரு. கோட்ஸ் ஒரு குவேக்கர்* அவ் இரு பெண்களும் சேர்ந்தே வசித்துவந்தனர். அவர்கள், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், 4 மணி 'டீ'க்கு அவர்கள் வீட்டுக்கு என்னை வருமாறு ஒரு நிரந்தரமான அழைப்புக் கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமை நாங்கள் சந்தித்தபோது, நான் திரு. கோட்ஸிடம், அவ்வாரத்தின் சமயசம்மந்தமான நாட்குறிப்பைக் கொடுப்பதுவழக்கம்: நான் படித்த நூல்களைப்பற்றியும், அவை என் உள்ளத்தில் நிறுத்திய கருத்துக்களைப் பற்றியும் சர்ச்சை செய்வேன். திரு கோட்ஸ் திறந்த உள்ளமுள்ள தீவிரமான இளைஞர். நாங்கள் சேர்ந்தே உலாவப்போவோம்; அவர் மற்றக் கிறிஸ்தவ நண்பர்களிடமும் என்னைக் கூட்டிச் சென்றார். நாங்கள் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகியதும், அவருக்குப் பிடித்த சில நூல்களை எனக்குக் கொடுக்கத் தொடங்கினர்; புத்தகம் வைக்கும் எனது அலமாரி நிரம்பின. இத்தகைய நூல்களில் பல, 1893-ல் நான் படித்தேன்.

அவருக்கு என்னிடத்தில் அதிகப்பிரியம். எனது கழுத்தில் வைஷ்ணவக் கழுத்தாரமான துளசி மணிகள் இருப்பதை அவர் பார்த்தார். அது ஒரு மூட நம்பிக்கை என்றெண்ணி வருத்தமுற்றார்: "இம் மூட நம்பிக்கை உங்களுக்கு ஏற்றதல்ல. வாருங்கள், இதை நான் உடைத்தெறியட்டும்." என்றார்.

"முடியாது, நீங்கள் அவ்வாறு செய்யக்கூடாது. இது என் தாயாரால் அளிக்கப்பட்ட புண்ணிய அன்பளிப்பு."

---

* குவேக்கர்கள் எனப்படுவோர் கிறிஸ்தவ சமயத்தில் ஒரு பிரிவினர். சமாதானத்திலும், யாவரும் நண்பர் என்ற கொள்கையிலும் நம்பிக்கை உடையவர்.

"ஆனால் நீங்கள் அதில் நம்பிக்கை கொள்ளுகிறீர்களா?"

"அதனுடைய அற்புத சக்தியை நான் அறியேன். அதை நான் அணியாவிட்டால், எனக்குக்கேடு நேரும் என்று நினைக்கவில்லை. என்பால் அன்பாலும், எனக்கு நலம் தரும் என்ற நம்பிக்கையாலும் என் தாயார் கழுத்தில்போட்ட துளசி மாலையை, தகுந்த காரணமின்றிக் கைவிட முடியாது. காலப்போக்கில் அது தேய்ந்து தானாக அறுந்து போனால், புதியது ஒன்று வாங்கிப் போட்டுக்கொள்ள எனக்கு விருப்பமிராது. ஆனால் இந்த மாலையை உடைக்க முடியாது."

திரு கோட்சுக்கு எனது மதத்தில் மதிப்புக் கிடையாது. எனவே இந்த வாதத்தை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அறியாமைப் படுகுழியிலிருந்து என்னைக் கடைத்தேற்றும் நாளை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மற்றச் சமயங்களில் ஏதோ சில உண்மை இருந்தாலும் கூட, சத்தியத்தைப் பிரதி பலிக்கும் கிரிஸ்தவசமயத்தை ஏற்றுக் கொண்டால் ஒழிய எனக்கு விமோசனம் சாத்தியமே இல்லை என்றும், இயேசுவின் கருணை இருந்தாலன்றி எனது பாவங்கள் ஒழியா என்றும், எல்லா நல்ல வேலைகளும் பயனற்றுப் போகும் என்றும், என்னைத் திருப்திப்படுத்த அவர் விரும்பினார்.

எனது பிற்கால வாழ்வைப் பற்றி திரு. பேக்கர் கவலை கொள்வதானார். என்னை வெலிங்கடன் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். அந்த மாநாடு மூன்று நாள் நடந்தது. அதற்கு வந்திருந்தவர்களின் பக்தியை நான் பாராட்டி உணர முடியும். ஆனால் என் நம்பிக்கையை—மதத்தை—மாற்றிக்கொள்ள எவ்விதக் காரணமும் புலப்படவில்லை. நான் கிரிஸ்தவன் ஆனால் தான் சுவர்க்கம் போக முடியும், அல்லது விமோசனம் அடைய முடியும் என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

சில நல்ல கிறிஸ்தவ நண்பர்களிடம் நான் இதைச் சொன்னபொழுது, அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். ஆனால் இதற்கு வேறு வழி இல்லை.

இயேசு தனது மரணத்தாலும், இரத்தத்தாலும், உலகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்தார் என்பதை அப்படியே நம்பிவிட என் அறிவு தயாராக இல்லை. அணிந்துரை ரீதியாக அதில் கொஞ்சம் உண்மை இருக்கலாம். அத்தோடு கிறிஸ்தவ மதப்படி, மக்களுக்கு மட்டும்தான் ஆன்மா உண்டு; ஏனைய உயிர் வாழ் பிராணிகளுக்குக் கிடையாது. அவர்களுக்குச் சாவு என்பது பூரண அழிவுதான். நான் இதற்கு நேர்மாறான கருத்துக் கொண்டவன். இயேசு, கொள்கைக்காக உயிரைவிட்ட மகான் என்றும், தியாகத்தின் அவதாரம் என்றும், தெய்விகப் போதகாசிரியர் என்றும் நான் ஏற்றுக் கொள்ள முடியும்; ஆனால் இதுவரை பிறந்த மக்களுக்குள் தலைநின்ற பரிபூரணம் பொருந்தியவர் என்பதை நான் ஏற்றுக்கொள்ளுமாறில்லை.

ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களுடைய வாழ்க்கை எனக்கு அளிக்காத எதனையும், கிறிஸ்தவர்களின் பக்தி வாழ்க்கை எனக்குத் தரவில்லை. கிறிஸ்தவர்களிடம் நான் கேள்விப்பட்ட அதே மாறுதல்களை ஏனைய மக்களுடைய வாழ்க்கைகளிலும் நான் கண்டதுண்டு. தத்துவ பூர்வமாக, கிறிஸ்தவக் கொள்கைகளில் அசாதாரணமானது ஒன்றும் இல்லை. தியாகத்தை எடுத்துக் கொண்டாலோ, இந்துக்கள் கிறிஸ்தவர்களைவிட மிக மிஞ்சி உள்ளார்கள்.

இங்ஙனம், கிறிஸ்தவ மதம், பரிபூரணமானது, அல்லது எல்லா மதங்களிலும் சிறந்தது என்று ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை. ஆனால், இந்து மதம் அப்படிச் சிறந்தது என்று அப்பொழுது நான் திருப்தி அடைந்து விடவில்லை. இந்துக் கொள்கைகள் எனக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தன. தீண்டாமை இந்து மதத்தின்

ஒரு பாகமாக இருக்குமானால், அது ஒரு அழுகிப்போன பாகம் அல்லது பொருந்தாத வளர்ச்சி ஆக இருக்க வேண்டும். கணக்கற்ற மதப் பிரிவுகளும், சாதிகளும் இருப்பதற்கு உரிய காரணம் எனக்குப் புலப்படவில்லை. வேதங்கள் ஆண்டவனால் தூண்டப்பட்ட சொல் என்பதின் பொருள் என்ன? அவைகள் தூண்டப்பட்ட சொற்களாக இருக்குமானால் பைபிளும் கோரானும் ஏன் அப்படி இருக்கக் கூடாது?

என்னுடைய இச்சங்கைகளை ராய்சந்த்பாய்க்குக் கடித மூலம் தெரிவித்திருந்தேன். இந்தியாவிலுள்ள ஏனைய மத ஆசாரியர்களுக்கும் எழுதிப் பதிலும் பெற்றேன். ராய்சந்தபாயின் கடிதம் என்னைக் கொஞ்சம் சமாதானப் படுத்தியது. அவர் என்னைப் பொறுமையாய் இருக்குமாறும், இந்து மதத்தை இன்னும் ஆழமாகப் படிக்குமாறும் எழுதி இருந்தார். அவர் வாக்கியங்களில் கீழே வருகின்ற ஒன்று இக் கருத்தைக் கொண்டது:—"உணர்ச்சியால் தூண்டப் பெறுமல், இப்பிரசினையை ஆராய்ந்தால், இந்து மதத்தைப்போல நுண்ணிய ஆழமான கருத்தும், ஆன்மாவைப் பற்றிய அதன் நோக்கும் கருணையும் வேறு எந்த மதத்திற்கும் கிடையாது என்பதே எனது கருத்து."

கிரிஸ்தவ நண்பர்கள் என்னை மதமாற்றம் செய்யப் பிரயத்தனம் செய்ததுபோலே, முஸல்மான் நண்பர்களும் செய்யலாயினர். இஸ்லாம் மதத்தைப் பற்றிப் படிக்குமாறு அப்துல்லாசேத் என்னைத் தூண்டிக் கொண்டே இருந்தார். 'சேல்' (Sale) என்பவருடைய கோரான் மொழிபெயர்ப்பை வாங்கிப் படிக்கத் தொடங்கினேன். இஸ்லாத்தைப் பற்றிய மற்ற நூல்களும் பெற்றேன்.

இங்கிலாந்திலுள்ள கிரிஸ்தவ நண்பர்களுக்கு எழுதினேன். அவர்களில் ஒருவர் எட்வேடு மெயிட்

லாண்டு (Edward Maitland) என்பவரை எனக்கு அறிமுகப்படுத்தினர். அவரோடு நான் கடிதப் போக்கு வரத்து ஆரம்பித்தேன். அன்னுகிங்க்ஸ்போடு என்பவரோடு சேர்ந்துழைத்து அவர் எழுதிய, "பூரண வாழ்க்கை" என்ற நூலை எனக்கு அனுப்பி வைத்தார். அந்த நூல், அதுபோழ்து நிலவிவந்த கிரிஸ்தவக் கொள்கைகளை நிராகரிப்பதாகும். அவர், 'பைபிளுக்கு புதிய விளக்கம்', என்ற நூலையும் எனக்கு அனுப்பினர். அவை இரண்டும் எனக்குப் பிடித்தன. அவை இந்து மதத்தை ஆதரிப்பவை போலிருந்தன. டால்ஸ்டாயின் 'கடவுளுடைய சாம்ராஜ்ஜியம் உன் அகத்தே உள்ளது' என்ற நூல் என்னைக் கொள்ளை கொண்டது. அது, என்றும் நின்று நிலவும் கருத்தை என் அகத்தே நிலை நிறுத்தியது.

எனது கிரிஸ்தவ நண்பர்கள் எனக்குத் தீர்மானித்திருந்த ஒரு பாதையை யன்றி, வேறு ஒன்று நான் ஏற்படுத்திக் கொண்டாலும், என்னிடம் மதசம்பந்தமான ஆர்வத்தைத் தூண்டிவிட்டதற்காக, அவர்களுக்கு எப்பொழுதும் நான் கடப்பாடு உடையவனுக இருந்து வந்துள்ளேன். அவர்களுடைய உறவைப் பற்றிய நினைவை என்றுமே நான் பாராட்டிக் கொண்டிருப்பேன்.

23

இந்தியர்களின் பிரசினையை அறிந்து கொள்ளுதல்

நேடாலில் தாதா அப்துல்லா வகித்து வந்த அதே ஸ்தானத்தை, பிரிட்டோரியாவில் சேத் தயாப்ஹாஜிகான் மகமத் வகித்தார். அவரில்லாமல் எந்தப் பொது இயக்கமும் நிகழாது. முதல் வாரத்திலேயே அவரோடு பரிச்சயம் கொண்டேன். பிரிட்டோரியாவில் உள்ள

ஒவ்வொரு இந்தியரோடும் நான் பழக விரும்புவதை அவரிடம் சொன்னேன். ஆங்கு இந்தியர்களுடைய நிலையைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ள விரும்புவதாகவும், அவ்வேலையில் அவருடைய உதவி வேண்டும் என்றும் சொன்னேன். அவ் உதவி எனக்கு அளிப்பதாக மகிழ்ச்சியோடு அவர் ஒத்துக் கொண்டார்.

எனது முதல் நடவடிக்கை, பிரிட்டோரியாவிலுள்ள எல்லா இந்தியர்களையும் ஒரு கூட்டம் கூட்டி, அவர்களிடம், டிரான்ஸ்வாலில் அவர்களுடைய நிலையை எடுத்துரைப்பதாகும். ஆங்கு வாழும் இந்தியர்களின் அவதிகளைப்பற்றிச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூற ஒரு சங்கம் நிறுவ வேண்டும் என்ற யோசனையைக் கூறினேன். அத்தோடு, நானும் என்னால் இயன்ற சேவையையும் காலத்தையும் அளிப்பதாக உறுதிசொன்னேன். எனக்கு ஞாபகம் இருக்கும்வரை, இம்மாதிரிக் கூட்டங்கள், வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ நடத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. கூட்டங்கள் அநேகமாக ஒழுங்காக நடத்தப்பட்டன. இந்தத் தருணங்களில், கருத்துக்கள் தாராளமாகப் பரிமாறப்பட்டன. இதன் பயன் என்னவென்றால், இதுபோழ்து பிரிட்டோரியாவில் எனக்குத் தெரியாத ஒரு இந்தியனோ, அல்லது அவருடைய நிலையை நான் அறிந்து கொள்ளாத ஒரு இந்தியனோ கிடையாது.

பிரிட்டோரியாவில் உள்ள ஆங்கிலப் பிரதிநிதியான திரு. ஜாக்கோபஸ் டிவெட் என்பவரைப் பரிச்சயம் செய்துகொள்ள இது தூண்டுவதாயிற்று. இந்தியர்களிடம் அவருக்குப் பரிவு இருந்தது ; ஆனால் அவருக்குச் செல்வாக்கு மிகக் குறைவு. இருந்தாலும் தன்னால் இயன்ற அளவு எங்களுக்கு உதவி புரிவதாகக் கூறினார் ; நான் விரும்பிய போதெல்லாம் தன்னைச் சந்திக்குமாறும் அழைத்தார்.

நான் இதுபோழ்து ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதினேன். அவர்களின் விதிகளின்படியே, பயணத்தில் இந்தியர்கள் உள்ளாகும் அவதிகளுக்கு நியாயமே இல்லை என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். ஒழுங்காக ஆடை அணிந்துள்ள இந்தியர்களுக்கு, முதல், இரண்டாவது பயணச் சீட்டுகள் வழங்கப்படும் என்ற பதில் கடிதம் எனக்கு வந்தது. இது போதுமான பரிகாரம் தருமாறில்லை ; ஏனென்றால், யார் ' ஒழுங்காக ' ஆடை அணிந்துள்ளார்கள் என்பதைத் தீர்மானிப்பது ரயில்வே நிலைய அதிகாரியைச் சார்ந்தது.

இந்திய விவகாரங்கள் சம்பந்தமான சில கடிதங்களை அவர் எனக்குக் காட்டினர். தயாப் ஷேத்தும் என்னிடம் இதைப்போன்ற கடிதங்களைக் கொடுத்திருந்தார். ' ஆரஞ்சு பிரிஸ்டேட் ' (Orange Free State) என்ற பகுதியிலிருந்து இந்தியர்கள் எவ்வளவு கொடுமையாக விரட்டப்படுகிறர்கள் என்பதை அவைகளிடம் இருந்து அறியலானேன். சுருங்கச் சொல்லின், நான் பிரிட்டோரியாவில் தாமதித்தது திரான்ஸ்வாலிலும் ஆரஞ்சு பிரிஸ்டேட்டிலும் உள்ள இந்தியர்களின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமையைப் பற்றி ஆழ்ந்து தெரிந்து கொள்ளுவதற்குச் சாத்தியமாக இருந்தது. இந்தப் படிப்பு வருங்காலத்தில் எனக்கு விலைமதிக்க வொண்ணாத உதவியாக இருக்கும் என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. ஏனென்றால், ஆண்டு இறுதியிலோ, அல்லது ஆண்டு முடிவதற்குள் வழக்கு முடிந்து விட்டால், அதற்கு முன்னதாகவோ, ஊருக்குத் திரும்புவதாக நினைத்து இருந்தேன். ஆனல் கடவுள் வேறுவிதமாக நினைத்துவிட்டார்.

திரான்ஸ்வாலிலும், ஆரஞ்சு பிரிஸ்டேட்டிலும், உள்ள இந்தியர்களில் நிலைமையை முழுதும் விவரிப்பது ஈண்டுப் பொருத்தமன்று. அதைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்ள விரும்புவார்கள், "தென் ஆபிரிகாவில்

சத்தியாக்கிரகச் சரிதை '' என்று நான் எழுதிய நூலைப் படித்துக் கொள்ளுவார்களாக.

திருத்தப்பட்ட சட்டத்தில், திரான்ஸ்வாலுக்குள் நுழைகிற ஒவ்வொரு இந்தியனும், தலைக்கு 3 பவுண் வீதம் தலைவாரிக் கட்டணம் செலுத்த வேண்டும், என்று கண்டிருந்தது. அவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கப் பட்ட இடத்தில் தவிர வேறெங்கும் அவர்கள் நிலம் சொந்தமாக வைத்துக் கொள்ளக் கூடாது ; அந்த இடத் திலும்கூட, அனுஷ்டானத்தில் நிலம் அவர்களுக்குச் சொந்தமாகாது. அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது. இவைகளெல்லாம், ஆசிய மக்களுக்கான தனிச் சட்டத் தின் படியாகும் ; 'கறுப்பு' மனிதர்களுக்கான சட்டமும் இவர்களுக்குப் பிரயோகிக்கப்பட்டன.

பின்னர் சொல்லப்பட்ட சட்டப்படி, இந்தியர்கள் பொது நடைபாதைகளில் நடக்கக் கூடாது. அனுமதிச் சீட்டு இல்லாமல், இரவு 9 மணிக்குமேல் வீட்டை வீட்டு வெளியே வரக்கூடாது. நான் திரு. கோட்ஸ்கூட அடிக் கடி இரவுகளில் உலாவப் போவேன். 10 மணிக்கு மிகவும் முன்னதாக நாங்கள் வீட்டிற்குத் திரும்பி வருவது மிக அபூர்வமாகும். போலீசார் என்னைக் கைதி செய்தால்? என்னைவிட திரு. கோட்ஸுக்கு இதைப்பற்றிக் கிலேசம் அதிகம். தன்னுடைய நீக்ரோப் பணியாளர்களுக்கு அவர் அனுமதிச் சீட்டுக் கொடுக்கவேண்டி இருந்தது. ஆனால் அவர் எனக்கு அனுமதிச் சீட்டு ஒன்று எப்படித் தர முடியும்? ஒரு எஜமானன்தான் தன் வேலைக்காரனுக்கு அனுமதிச் சீட்டுத் தரலாம். நானும் ஒரு சீட்டை அவரிடம் கேட்டு, திரு. கோட்சும் எனக்குக் கொடுக்கத் தயாராக இருந்தாலும்கூட, அவர் அவ்வாறு செய்திருக்க முடியாது : ஏனென்றால் அது ஒரு ஏமாற்று ஆகும்.

எனவே, திரு. கோட்ஸோ, அல்லது அவருடைய நண்பர்களில் ஒருவரோ, என்னை அரசாங்க வழக்குரைஞ ரான டாக்டர் கிரவுஸ் என்பவரிடம் அழைத்துச்

சென்றுர். டாக்டர் கிரவுசும் நானும் பாரிஸ்டர் குழுவில் ஒரே மன்றத்தைச் சார்ந்தவர்கள். இரவு 9 மணிக்கு மேல், வீட்டிற்கு வெளியே இருப்பதற்கு எனக்கு ஒரு அனுமதிச் சீட்டுத் தேவை என்பது அவரால் சகிக்க முடியாததாயிருந்தது. அவர் என்னிடம் தன் அனுதாபத்தைத் தெரிவித்தார். ஒரு அனுமதிச்சீட்டுக்கு உத்திரவு பிறப்பிப்பதற்குப் பதிலாக, போலீசாரின் குறுக்கீடு இல்லாமல், எந்நேரமும் நான் வெளியே இருப்பதற்கு எனக்கு அனுமதி அளித்து ஒரு கடிதம் என்னிடம் கொடுத்தார். நான் வெளியே போகும்போதெல்லாம் இக்கடிதத்தை என்னுடன் வைத்திருந்தேன். ஆனல் அதை நான் ஒரு பொழுதும் உபயோகிக்க வேண்டியது வரவில்லை என்பது ஒரு தற்செயலான காரியமே.

நடைபாதை உபயோகத்தைப் பற்றிய விதிகளின் விளைவு, எனக்குச் சங்கடம் தந்தது. நான் உலாவுவதற்கு எப்பொழுதும் பிரசிடெண்டு தெரு வழியாக ஒரு திறந்த மைதானத்திற்கு செல்லுவேன். ஜனதிபதி குருகரின் வீடு அந்தத் தெருவில் உள்ளது. அவ்வீடு, அண்டையில் உள்ள மற்ற வீட்டுகளிலிருந்து பிரித்து சொல்லமுடியாதபடி, ஆடம்பரமில்லாத, தோட்டமில்லாத, மிகச்சாதாரணமான கட்டிடம்.

அந்த வீட்டில் முன்நின்ற போலீஸ் பாதுகாவலர் தான், அந்த வீடு யாரோ ஒரு அதிகாரி உடையது என்பதைத் தெரிவிக்கும். நான் இந் நடைபாதையின் வழியாகத்தான் அநேகமாக எப்பொழுதும் இக்காவலாளரை தாண்டிச் சிறிதுகூடத் தகராரோ தடையோ இல்லாமல் செல்லுவேன்.

இக்காவலாளர்கள் அடிக்கடி மாற்றப்படுவதுண்டு. ஒரு சமயம், இவர்களில் ஒருவன் என்னை, எவ்விதமான முன்னெச்சரிக்கையும் செய்யாமல், நடைபாதையை விட்டுவிலகு என்றுகூடச் சொல்லாமல், உதைத்துத்

தெருவிலே தள்ளினன். நான் கதிகலங்கினேன். அவன் நடத்தையைப் பற்றி அவனிடம் கேட்கப் போகுமுன்னர், அவ்வழியே குதிரையின்மேல் போய்க்கொண்டிருந்த, திரு. கோட்ஸ் என்னை விளித்துச் சொன்னர் :—"காந்தி! நான் எல்லாவற்றையும் பார்த்தேன். இவன்மேல் நீங்கள் நடவடிக்கை எடுத்தால், நீதிமன்றத்தில் நான் உங்களுக் குச் சாட்சி சொல்லுகிறேன். இவ்வளவு கடுமையாக உங்களைத் தாக்கியதற்கு, நான் மிக வருந்து கிறேன்."

நான் சொன்னேன், "நீங்கள் வருந்த வேண்டாம். இந்தப் பேதை மனிதனுக்கு என்ன தெரியும்? கறுப்பு மனிதர்கள் எல்லோரும் இவனுக்கு ஒன்றுதான். என்னை நடத்தியது போலவே, நீக்ரோயர்களையும் இவன் நடத்து கிறன் என்பதில் சந்தேகம் இல்லை. என்னுடைய சொந்தக் கஷ்டங்களுக்காக, நான் நீதிமன்றம் போவ தில்லை என்று உறுதிபூண்டிருக்கிறேன். எனவே, அவன் மேல் நடவடிக்கை எடுக்க எனக்கு உத்தேசம் இல்லை." என்றேன்.

திரு. கோட்ஸ் சொன்னர்: "இது உங்களுக்குத் தகுந்ததே. எனினும், மீண்டும் சிந்திப்பீர்களாக." பின்னர் அவர் அப்போலீசாரைக் கண்டித்தார். அப் போலீஸ்காரன் ஒரு 'போயர்' ஆனதால், அவர்கள் டச்சுமொழியில் பேசினதால், அவர்கள் பேச்சை நான் அறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆனல், அவன் என் னிடம் மன்னிப்புக் கோரினன்; அதற்கு அவசியமே இல்லை. அவனை முன்னதாகவே நான் மன்னித்து விட்டேன்.

ஆனல், அத்தெருவின் வழியாக நான் பின்னர் போனதே இல்லை. இவனுக்குப் பதிலாக, மற்றும் சிலர் வருவார்கள்; நடந்த நிகழ்ச்சியைத் தெரியாமல், மீண்டும் இம்மாதிரி நடத்தக்கூடும். எதற்காக, அநா வசியமாக நான் இன்ஞெரு உதையை நாடிக்கொள்ள

வேண்டும்? எனவே, உலாவுவதற்கு இன்னெரு பாதையைத் தேர்ந்துகொண்டேன்.

தென் ஆபிரிக்கா, தன்மானமுள்ள இந்தியன் வாழத் தகுதியற்ற நாடு என்பதைக் கண்டேன். இந்த நிலைமையை எப்படிச் சீர்திருத்துவது என்ற பிரசினை யிலேயே என் மனம் மேலும் மேலும் சிந்தை செய்வ தாயிற்று. ஆனல், இச்சமயத்தில் எனது முதற்கடமை, தாதா அப்துல்லாவின் வழக்கைக் கவனிப்பதாகும்.

24

வழக்கு

தாதா அப்துல்லாவின் வழக்கின் விவரங்கள், அவருக்கு மிக அனுகூலமாகவே இருந்தன என்பதையும் சட்டமும் அவர் பக்கமே சாதகமாக இருக்கவேண்டும் என்பதையும் கண்டேன். வழக்கைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருந்தால், உறவினரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களுமான வாதி பிரதிவாதி இரு வருமே அழியநேரிடும் என்பதையும் கண்டேன். இவ் வழக்கு எவ்வளவுகாலம் நீடிக்கும் என்று யாரும் அறியார். வழக்கை நீதிமன்றத்திலே நீடிக்கும்படி விட்டால், எக்கட்சிக்கும் நன்மையின்றிக் காலவரை யறை யின்றி நடந்துகொண்டே போகும். எனவே, முடியுமானல், வழக்கை உடனடியாக முடித்துவிட இரு வரும் விரும்பினர்.

நான் தயாப்சேத்தை அணுகி மத்தியஸ்தத்துக்குப் போகும்படி கோரினேன்; ஆலோசனை கூறினேன். அவ ருடைய வழக்குரைஞரைப் பார்க்கும்படி சிபாரிசு செய்தேன். இருசாராருடைய நம்பிக்கைக்கும் பாத்திர மான ஒரு நடுவரை நியமித்தால், வழக்கை விரைவில் முடித்துவிடலாம் என்று அவருக்கு நான் யோசனை

கூறினேன். இரு சாராரும் பெரிய வணிகர்களாயினும், அவர்களுடைய பணம் முழுவதையும் கபளீகாரம் பண்ணும் அளவுக்கு, வழக்குரைஞர் கட்டணம் விரைவாக ஏறிக்கொண்டிருந்தது. வழக்கு அவர்களுடைய கவனம் முழுவதையும் கவர்ந்தது; வேறு எந்த வேலையும் பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரமே இல்லை. இதற்கு மத்தியில் பரஸ்பர குரோதம் வேறு வளர்ந்து கொண்டே வந்தது. இந்தத் தொழிலில் நான் வெறுப்பு அடைந்தேன். வழக்குரைஞர் என்ற முறையில், இரு சாரிலும் உள்ள வக்கீல்களும், தங்கள் கட்சிக்குச் சாதகமானச் சட்ட அம்சங்களைக் கிளப்பிக்கொண்டே இருப்பார்கள். அத்தோடு, வெற்றிபெற்ற கட்சியும், செலவழித்த எல்லாச் செலவுப் பணத்தையும் திரும்பப் பெறுவதில்லை என்பதையும் முதல் தடவையாக அப்பொழுதுதான் நான் தெரிந்து கொண்டேன். நீதி மன்றக் கட்டண விதிகளின்படி, கட்சிக்காரர்களுக்கு அனுமதிக்கக் கூடிய செலவுக்கு, திட்டமான ஒரு விகிதம் நிர்ணயிக்கப் பட்டிருந்தது; ஆனால், உண்மையில் செலவாவது அதற்கு மிக அதிகமாக இருக்கும். இது என்னால் சகிக்க முடியாதது. நான் இரு சாராரோடும் நட்புக்கொண்டு, இருவரையும் ஒன்று சேர்ப்பதே என் கடமை என்பதை உணர்ந்தேன். ஒரு சமரஸம் ஏற்படுத்த, என்னால் இயன்ற தனைத்தையும் செய்தேன். இறுதியில், தயாப் சேத் ஒத்துக் கொண்டார்: ஒரு நடுவர் நியமிக்கப்பட்டார்; அவர் முன்பு வழக்கு வாதாடப்பட்டது; தாதா அப்துல்லா வென்றூர்.

ஆனால், அது என்னைத் திருப்தி செய்யவில்லை. எனது கட்சிக்காரரர், அத்தீர்ப்பை உடனே நிறைவேற்ற முற்பட்டால், தீர்ப்புத் தொகை முழுவதையும் உடனே கட்ட, தயாப்ஷேத்தினால் முடியாது. தென் ஆபிரிக்காவில் உள்ள போர்பந்தர் முஸல்மான்களிடம், திவாலாகப் போவதைவிட சாவது மேல் என்று ஒரு எழுதாச்

சட்டம் உளது. 37000 பவுணும் செலவு தொகையும், முழுவதையும், உடனே செலுத்த தயாப்ஷேத்தினல் முடியாது. அந்தத் தொகைக்கு ஒரு சல்லிகூடக் குறைத்துக் கொடுக்க அவர் விரும்ப வில்லை; 'திவா'லாகப் போவதையும் அவர் விரும்ப வில்லை. இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அவர் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணைகளாகக் கொடுக்க, தாதா அப்துல்லா அனுமதிக்க வேண்டும். தாதா அப்துல்லா பெரிய மனது பண்ணினர்; தயாப் ஷேத் நீண்டகாலத்திற்குப் பல தவணைகளாகப் பணம் கொடுப்பதற்குச் சம்மதித்தார். இரு சாராரையும் மத்தியஸ்தத்திற்கு இணங்கச் செய்ததைவிட, தவணைகளில் பணம் செலுத்தும் இந்தச் சலுகையைப் பெறுவது எனக்குக் கடினமாக இருந்தது. ஆனால், இருவரும், இம் முடிவிலே மகிழ்ந்தனர்; பொதுமக்கள் மதிப்பிலே உயர்ந்தனர். எனக்குக் எல்லையில்லாத ஆநந்தம் உண்டாயிற்று. சட்டத் தொழிலை உண்மையாக ஆற்றும் வழியைக் கற்றேன். மக்கள் இயல்பின் நல்ல பகுதியைக் கண்டு பிடிக்கவும், மக்கள் உள்ளத்தில் நுழையவும் கற்றுக்கொண்டேன். பிரிந்து போனவர்களைப் பிணைப்பதே வழக்குரைஞரின் உண்மையான பணி என்பதை உணர்ந்தேன். இப் பாடம் என் உள்ளத்திலே என்றும் அழியா வண்ணம் ஆழப் பதிந்துள்ளது; அதன் விளைவாக, வழக்குரைஞனுக நான் பணி ஆற்றிய இருபது ஆண்டுகளில் பெரும் பகுதி, நூற்றுக்கணக்கான வழக்குகளில், சமரஸம் ஏற்படுத்துவதிலேயே கழிவதாயிற்று. அதனால் நான் எதையும் இழக்க வில்லை—பணம்கூட இழக்கவில்லை—நிச்சயமாக, என் ஆத்மாவை இழக்க வில்லை.

25

"நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கின்றது"

வழக்கு முடிந்த பின்னர், பிரிடோரியாவில் நான் தங்கிக்கொண்டிருப்பதற்கு அவசியம் இல்லை. எனவே தர்பானுக்குச் சென்று, ஊருக்குத் திரும்பத் தயார் செய்யத் தொடங்கினேன். ஆனால், எனக்கு வழியனுப்பு உபசாரம் செய்யாமல், என்னைக் கப்பலேற விடக்கூடிய வர் அப்துல்லா சேத் அல்லர். எனவே சிடன்ஹாமில், எனக்கு அவர் ஒரு பிரிவுபசாரம் நடத்தினர்.

நாள் முழுவதும் ஆங்குக் கழிப்பதாகத் திட்டம். ஆங்குக் கிடந்த செய்தித்தாள்களை நான் புரட்டிக் கொண்டிருந்தபொழுது, அவைகளின் ஒன்றின் ஒரு மூலையில், '<u>இந்தியர் வாக்குரிமை</u>' என்ற தலைப்பில் ஒரு பத்தியைக்காண நேர்ந்தது. அது, நேட்டால் சட்ட சபைக்கு இந்தியர்கள் உறுப்பினர்களைத் தேர்ந்து எடுக்கும் உரிமையைப் பறிக்கும் நோக்கம் கொண்ட தான, அப்பொழுது சட்ட சபையில் வந்திருக்கும் மசோதாவைப்பற்றியது. அந்த மசோதாவைப்பற்றி எனக்குத் தெரியாது; ஆங்குக் குழுமி இருந்த விருந் தினர்களுக்கும் அப்படியே.

அப்துல்லா சேத்தை அதைப்பற்றிக் கேட்டேன். அவர் சொன்னார், "இவ்விஷயங்களில் எங்களுக்கு என்ன தெரிந்துகொள்ள முடிகிறது? எங்கள் வியா பாரத்தைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள்தான் எங்க ளுக்கு அருத்தமாகும்." ஆனால், நானோ, ஊருக்குத் திரும்பப்போகும் தறுவாயிலிருந்தேன்; எனவே, இவ் விஷயத்தில், என் உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருந் ததை வெளியிடத் தயங்கினேன். நான் அப்துல்லா சேத்திடம் சொன்னேன். "இம்மசோதா, சட்டம்

ஆக்கப்பட்டால், இது நமது நிலைமையைப் படுமோசம் ஆக்கிவிடும். நம்மைப் படுகுழியில் ஆழ்த்தும் முதற்படி இது. நமது தன்மானத்தின் அடிப்படையை அறுப்பதாகும்.'' என்றேன்.

இந்த உரையாடலை மற்ற விருந்தினர்கள் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் சொன்னார் :—'' என்ன செய்யவேண்டும் என்று நான் சொல்லட்டுமா? இந்தக் கப்பலில் நீங்கள் போக இருக்கும் பயணத்தை ரத்துச் செய்யுங்கள். இன்னும் ஒரு மாதம் தங்குங்கள்; நீங்கள் வழிகாட்டுகிறபடி நாங்கள் போராடுகிறோம்.'' மற்ற அனைவரும் இதை ஆமோதித்தனர்.

போராட்டமுறையை என் மனதிற்குள்ளேயே திட்டம் போட்டேன். வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களை விசாரித்தறிந்தேன். ஒரு மாதம் தங்குவதாகத் தீர்மானித்தேன்.

இங்ஙனம், ஆண்டவன் எனது தென் ஆப்பிரிக்கா வாழ்க்கைக்கு அடிகோலி தேசீயத் தன்மானப் போராட்டத்திற்கு விதையும் விதைத்தார் :

நாங்கள் முதலாவதாகச் செய்தது, அந்த மசோதாவின் விவாதத்தைத் தள்ளிவைக்குமாறு, சட்டசபைத் தலைவருக்கு ஒரு தந்தி அனுப்பியதாகும். முதலமைச்சருக்கும் அத்தகைய தந்தி அனுப்பப்பட்டது.

சட்ட சபையில் சமர்ப்பிக்க வேண்டிய மனு எழுதப்பட்டது. அதை எழுதுவதில் நான் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டேன். அப்பொருள் சம்பந்தமாக கிடைத்துள்ள எல்லாத் தகவல்களையும் படித்தேன். இருவாரத்தில் பத்தாயிரம் கையெழுத்துக்கள் வாங்கப்பட்டன. இப்பணி செய்த ஆட்கள் வெகு புதியவர்கள் என்பதைக் கருதும்போது, மாகாணம் முழுதுமிருந்து இவ்வளவு எண்ணிக்கை உள்ள கையெழுத்துக்கள் வாங்குவது என்பது எளிதான காரிய

மல்ல. இம் மனுவைக் கையொப்பமிடுவோர் நன்ருக அறிந்து கொள்ளாமல் ஒரு கையெழுத்தும் வாங்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தபடியால், இவ் வேலைக்கு விசேஷ லாயக்குள்ள தொண்டர்களையே பொறுக்கி எடுக்க வேண்டி இருந்தது. கிராமங்கள், நீண்ட தூரங்களுக்கு இடையே பரவிக் கிடந்தன. பணியாளர் பலர் முழு மனதோடு இதில் ஈடுபட்டால் தான், இவ்வேலை விரைவில் முடியும். அவ்வாறே அவர் களும் செய்தார்கள்.

முடிவில் மனு சமர்பிக்கப்பட்டது. பலருக்கும் அனுப்புவதற்காக ஓராயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. நேதாலில் உள்ள நிலைமையைப் பற்றி இந்தியப் பொது மக்களுக்கு அறிவித்தது இதுவே முதலாவதாகும். எனக்குத் தெரிந்த எல்லாப் பத்திரிகைகளுக்கும் இதன் பிரதிகளை அனுப்பினேன்,

‘ டைம்ஸ் ஆப் இந்தியா ’ என்ற செய்தித் தாள் விண்ணப்பத்தைப் பற்றி எழுதிய ஒரு தலையங்கத்தில் இந்தியரின் கோரிக்கையை வன்மையாக ஆதரித்தது. இங்கிலாந்தில் உள்ள பலதிறப்பட்ட கட்சிகளின் சார்பில் உள்ள செய்தித் தாள்களுக்கும் பிரதிகள் அனுப்பப் பட்டன. இலண்டனில் உள்ள ‘ டைம்ஸ் ’ பத்திரிகை, எங்கள் கோரிக்கைகளை ஆதரித்தன. மசோதா நிராகரிக் கப்படும் என்ற நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தோம்.

இனி நான் நேதாலை விட்டுப் போவது அசாத்திய மாயிற்று. இந்திய நண்பர்கள் என்னை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, அங்கேயே நிரந்தரமாகத் தங்குமாறு வேண்டலாயினர். எனவே நேத்தாலில் நான் தங்க லானேன்.

26

நேதால் இந்தியன் காங்கிரஸ்

வாக்குரிமை பறிக்கும் மசோதாவைப் பற்றி விண்ணப்பம் ஒன்றை அனுப்பியது மட்டும் போதாது. குடியேற்ற நாடுகளுக்கான காரியதரிசி உணருமாறு, ஓய்வில்லாத கிளர்ச்சி அவசியம். இக்காரியத்திற்காக, நிரந்தரமான ஸ்தாபனம் ஒன்று நிறுவ வேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டது. எனவே, சேத் அப்துல்லாவையும் ஏனைய நண்பர்களையும் கலந்தேன். நிரந்தரத் தன்மை வாய்ந்த ஒரு பொது நிறுவனம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். மே மாதம் 22-ம் நாள், நேத்தால் இந்தியன் காங்கிரஸ் உருவாகியது.

நேதால் இந்திய காங்கிரஸில், ஆங்கு பிறந்த இந்தியர்களும், குமாஸ்தா வகுப்பைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருந்தாலும், கூலி வேலைக்காரர்களும், தோட்டத் தொழிலாளிகளும் அதன் வட்டாரத்துக்கு வெளியே இருந்தார்கள். காங்கிரஸ் இன்னும் அவர்கள் உடையது ஆகவில்லை. அவர்களால் சந்தாச் செலுத்தி உறுப்பினர்கள் ஆக இயலாது. காங்கிரசு, அவர்களுக்கு உழைத்தே அவர்களுடைய அன்பைப் பெற முடியும். காங்கிரசோ, நானோ அதற்குத் தயாராக இல்லாதபோது, எனக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. நான் தொழில் செய்து மூன்று நான்கு மாதங்கள்தான் இருக்கும்; காங்கிரசும் அதன் குழவிப் பருவத்திலே உள்ளது. இது போழ்து, இடுப்பிலே கந்தைத் துணி, கையிலே தலைப்பாகை, உடைந்த இரு முன் பற்கள், இரத்தம் ஓடும் வாய்—இக்காட்சி உடைய தமிழன் ஒருவன், நடுங்கிய உடலோடும் கண்ணீரும் கம்பலையுமாய் என் முன் நின்றான். அவனுடைய முதலாளியால்

நையப்புடைக்கப்பட்டிருந்தான். தமிழனை எனது குமாஸ்தா மூலம், அவனைப் பற்றிய விவரம் யாவும் அறிந்தேன். பாலசுந்தரம்—வந்தவனின் பெயர் அதுவே யாகும்—தர்பானில் உள்ள, எல்லோருக்கும் தெரிந்த ஐரோப்பியர் ஒருவரிடம் தனது வேலையைச் செய்து வந்தான். முதலாளி இவனிடம் கோபம் கொண்டு, தன் சுய நிலைமை இழந்து, அவனுடைய இரண்டு பற்கள் உடையுமாறு, இவனை நையப் புடைத்தார்.

அவனை ஒரு மருத்துவரிடம் அனுப்பினேன். அக் காலத்தில் வெள்ளை மருத்துவரே கிடைப்பர். பால சுந்தரத்துக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையைக் குறித்து, அவரிடமிருந்து ஒரு சான்றிதழ் வேண்டி இருந்தேன். சான்றிதழ் பெற்றுக் காயமடைந்தவனை உடனே நீதிபதியிடம் அழைத்துச் சென்று, அவனுடைய பிரமாண வாக்குமூலத்தை அவரிடம் சமர்ப்பித்தேன். அதைப் படித்ததும் நீதிபதி சினமடைந்தார்; முதலாளி நீதி மன்றத்துக்கு வருமாறு 'கட்டளை' அனுப்பினார்.

முதலாளி தண்டனை அடைய வேண்டும் என்பது என் நோக்கம் அல்ல. அவரிடமிருந்து பாலசுந்தரம் விடுதலை அடையவேண்டும் என்பதே நான் விரும்பியது. ஒப்பந்தத் தொழிலைப் பற்றிய சட்டத்தைப் படித்தேன். ஒரு சாதாரண வேலையாள் முன் அறிவிப்பின்றி வேலையை விட்டால், 'சிவில்' நீதி மன்றத்தில் முதலாளி வழக்காடலாம். ஆனால், ஒப்பந்தத் தொழிலாளி விஷயம் மிக வேறு. அம்மாதிரி நிலைமையில், தொழிலாளி குற்ற நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, சிறை தண்டனைக்கு உரியவன் ஆவான். எனவேதான் சர் வில்லியம் ஹண்டர், ஒப்பந்தத் தொழில் முறை, அநேகமாக அடிமை முறையைப் போல மோசமானது என்று உரைத்தார். அடிமையைப் போலவே, ஒப்பந்தத் தொழிலாளி, முதலாளியின் ஒரு சொத்து.

பாலசுந்தரத்தை விடுவிக்க இரு வழிகளே உள.

ஒன்று, ஒப்பந்த தொழிலாளிகளின் பாதுகாவலரை[1]க் கொண்டு அவன் ஒப்பந்தத்தை ரத்து செய்து, இன்னொரு முதலாளிக்கு மாற்றுவது, அல்லது, பாலசுந்தரத்தின் முதலாளியைக் கொண்டு அவனை விடுவிக்கச் செய்வது. அம் முதலாளியிடம் நான் சென்று அவரிடம் சொன்னேன், "உங்கள் மீது நடவடிக்கை எடுத்து, உங்களுக்குத் தண்டனை வாங்கித்தர நான் விரும்பவில்லை. நீங்கள் அவனைப் பலமாக அடித்தீர்கள் என்பதை உணருகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் அவன் ஒப்பந்தத்தை வேறு எவருக்கேனும் மாற்றி விட்டால், நான் திருப்தி அடைவேன். இதற்கு அவர் உடனே இணங்கினர். அடுத்தபடியாக 'பாதுகாவல'ரை நான் பார்த்தேன். நான் ஒரு முதலாளியைப் பார்த்துத் தருவதான நிபந்தனைக்கு உட்பட்டு, அவரும் இணங்கினர்.

எனவே ஒரு முதலாளியைத் தேடினேன். இந்தியர் ஒப்பந்தத் தொழிலாளியை வைத்துக்கொள்ள முடியாதபடியால், அவர் ஐரோப்பியராக இருக்கவேண்டும். அக் காலத்தில், எனக்கு வெகு சில ஐரோப்பியர்களையே தெரியும். அவர்களில் ஒருவரைச் சந்தித்தேன். பாலசுந்தரத்தை எடுத்துக்கொள்ள அவர் அன்புடன் இசைந்தார். அவர் அன்பிற்கு நன்றி செலுத்தினேன். நீதிபதி பாலசுந்தரத்தின் முதலாளியைக் குற்றவாளி எனத் தீர்ப்புக் கூறினர்; அம்முதலாளி பாலசுந்தரத்தின் ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு மாற்ற ஏற்றுக் கொண்டதாக நீதிபதி பதிவு செய்தார்.

பாலசுந்தரத்தின் வழக்கு, ஒப்பந்தத் தொழிலாளி ஒவ்வொருவருடைய காதுக்கும் எட்டியது; நான் அவர்களுடைய நண்பராக மதிக்கப் பெற்றேன். இவ் உறவை நான் ஆனந்தத்தோடு வரவேற்றேன். எனது அலுவலகத்திற்கு ஒப்பந்தத் தொழிலாளிகள் திரள் திரளாக

---

[1] ஒரு அதிகாரி.

வந்து குவியத் தொடங்கினர். அவர்களுடைய இன்ப துன்பங்களை அறிந்துகொள்ள நல்லதொரு வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

பாலசுந்தரம் வழக்கின் எதிரொலி தொலையில் உள்ள சென்னையிலும் கேட்டது. மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் நேட்டாலுக்குச் சென்ற ஒப்பந்தத் தொழிலாளிகள் தங்கள் சகோதர ஒப்பந்தத் தொழிலாளிகள் மூலம் இவ்வழக்கைப் பற்றித் தெரிந்துகொண்டனர்.

இவ்வழக்கில், அசாதாரணமானது ஒன்றும் இல்லைத் தான். ஆனால், ஒப்பந்தத் தொழிலாளிகளுக்குத், தங்களுடைய குறைபாடுகளை எடுத்துரைத்து, அவர்களுக்காகப் பொதுச் சேவையில் ஈடுபட, நேட்டாலில் ஒருவர் இருக்கிறார் என்பது, அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஆச்சரியத்தைக் கொடுத்து, நம்பிக்கையையும் ஊட்டியது.

27

3 பவுண் வரி

1860-ம் ஆண்டு வாக்கில், நேட்டாலில் உள்ள ஐரோப்பியர்கள், ஆங்குக் கரும்பு பயிரிடுவதற்கு ஏராளமான வசதிகள் இருப்பதைக் கண்டு, தொழிலாளிகளைத் தேடலாயினர். நேட்டால் சூலுக்கள் அத்தகைய வேலைக்குத் தகுதியற்றவர்களாக இருந்தபடியால், வெளித் தொழிலாளிகள் இல்லாமல், கரும்பு பயிரிடுவதோ சர்க்கரை உற்பத்தி செய்வதோ முடியாது. எனவே நேட்டால் அரசாங்கம், இந்திய அரசாங்கத்துக்கு எழுதி, இந்தியத் தொழிலாளிகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி பெற்றது. இத்தொழிலாளிகள், நேட்டாலில் ஐந்து ஆண்டுகள் வேலை செய்வதாக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவேண்டும். அக்காலத்திற்குப் பிறகு

அவர்கள் நேட்டாலில் குடி இருக்கச் சுதந்திரம் உண்டு. பூரண நில உடைமை பெறுவதற்கும் உரிமை உண்டு. இவைகள் அவர்களுக்குக் காட்டிய தூண்டுகோல்களாகும்.

ஆனால் இந்தியர்களோ, அவர்களிடமிருந்து எதிர் பார்த்ததிற்கு அதிகமாக அங்குச் செய்தார்கள். காய் கறிகள் அதிகப்படியாகப் பயிரிட்டார்கள். இந்தியக் காய்கறிகள் வகைகளைப் புதிதாகப் பயிரிட்டார்கள். உள்ளூர் வகைகளையும், சகாயமாகப் பயிரிடுவதைச் சாத்தியமாக்கினார்கள். அவர்கள் மாமரத்தையும் நுழைத்தார்கள். அவர்களுடைய முயற்சி பயிர்த்தொழிலோடு மட்டும் நிற்கவில்லை. வணிகத்திலும் நுழைந்தார்கள். வீடுகட்டுவதற்காக நிலம் வாங்கினார்கள். பலர், தொழிலாளி என்ற நிலைமையிலிருந்து, நிலம் வீடு இவைகளுக்கு உரிமையாளர் என்ற நிலைமைக்கு உயர்ந்தனர். இந்தியாவிலிருந்து, வணிகர் பலர் அவர்களோடு சென்று வாணிபத்திற்காக நேட்டாலில் குடியேறினர். காலம் சென்ற சேத் அபூபேக்கர் ஆமத், அவர்களில் முதலானவர். அவர் விரைவிலே, விரிவான வாணிபத்தை நடத்தலானார்.

வெள்ளை வணிகர் திகிலடைந்தனர். இந்தியத் தொழிலாளிகளை அவர்கள் முதலில் வரவேற்றபொழுது, அன்னாருடைய வாணிப சாமர்த்தியத்தை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. சுயேச்சையான விவசாயிகளாக அவர்களைச் சகித்துக்கொள்ளலாம். ஆனால் வணிகத்தில் போட்டியை அவர்கள் பொறுப்பதற்கில்லை.

இது, இந்தியர்களுக்கு விரோதமான விதையை ஊன்றுவதாயிற்று. அதன் வளர்ச்சிக்குப் பல காரியங்கள் துணைபுரியலாயின. இவ்விரோதம், வாக்குப் பறிக்கும் மசோதாவின் மூலமாகவும், ஒப்பந்தத் தொழிலாளிகள் மீது வரி விதிக்கும் மசோதா மூலமாகவும்,

வெளிப்படலாயின. சட்டத்தைத் தவிர்த்து, வேறு பல விதச் சில்லரை இடையூறுகளும் ஆரம்பமாயின.

இந்தியத் தொழிலாளிகளின் ஒப்பந்தம் இந்தியாவி லேயே முடிவுபெறும் வண்ணம் அவர்களை இந்தியா விற்குக் கட்டாயமாகத் திரும்ப அழைக்கப்படவேண்டும் என்பது முதல் யோசனை. இந்த யோசனையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. எனவே வேறு ஒரு யோசனை செய்யப்பட்டது. அதாவது :—

(1) ஒப்பந்தத் தொழிலாளிகள், ஒப்பந்த காலம் முடிந்தவுடன் இந்தியாவிற்குத் திரும்பி விடவேண்டும் ; அல்லது,

(2) ஒவ்வொரு இரண்டு ஆண்டும் அவன் ஒரு புது ஒப்பந்தித்தில் கையெழுத்திட வேண் டும். அவ்வாறு புதுப்பிக்கும்போது, கூலி உயர்வு கொடுக்கப்படும், மேலும் ;

(3) இந்தியாவிற்குப் போகவோ, அல்லது ஒப்பந் தத்தைப் புதுப்பிக்கவோ மறுத்தால், ஆண்டுதோறும் 25 பவுண் வரி செலுத்த வேண்டும்.

இந்த யோசனையை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதற்காக, சர்ஹென்றிபின்ஸ், திரு மெஸ்டன் ஆகியோர் அடங்கிய தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. அதுபோழ்து இந்தி யாவின் இராசப்பிரதிநிதி எல்ஜின் பிரபு என்பவராவர். அவர் 25 பவுண் வரியை ஏற்றுக்கொள்ளவில்லை ; ஆனால் 3 பவுண் தலைவாரி வரிக்கு ஒத்துக்கொண்டார். இது இராசப்பிரதிநிதியின் மகத்தான தவறு என்று அப் பொழுது கருதினேன். இப்பொழுதும் கருதுகிறேன் ; ஒரு கணவனின் மாதச் சராசரி வருமானம் † 14 ஷிலிங் குக்கு மேல் இல்லாதபோது, கணவன், மனைவி, இரு

† ஷிலிங் என்பது சுமார் 12 அணாவாகும்

குழந்தைகள், ஆகிய நால்வர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு, ஆண்டுக்கு வரி 12 பவுன் விதிப்பது என்பது படுமோசமானது; உலகிலேயே எங்கும் கேட்டறியாதது.

இவ்வரிக்கு எதிர்த்து நாங்கள் கடுமையான கிளர்ச்சியை ஏற்படுத்தினோம். இந்தியர் இப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தால், காங்கிரசு கிளர்ச்சியை நிறுத்தியிருந்தால், தவிர்க்கொணாதது என்று இவ்வரிக்குச் சம்மதித்து இருந்தால், தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கும், இந்தியா முழுமைக்கும் அழியாத அவமானமாக, வெறுப்புக்குரிய இவ்வரி இன்றுவரை விதிக்கப்பட்டு வந்திருக்கும்.

இதுபோழ்து வரையில் நான் தென் ஆப்பிரிக்காவில் மூன்று ஆண்டுகள் இருந்துளேன். மக்களை நான் தெரிந்துகொண்டேன் ; அவர்களும் என்னைத் தெரிந்து கொண்டனர். நான் அங்கு நீண்ட காலம் தங்கவேண்டி இருக்கும் என்பதைக் கண்டு, 1896-ல், ஆறு திங்கள் ஊருக்குப் போக அனுமதி கேட்டேன். எனக்கு நல்ல தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தது ; மக்களுக்கும் நான் அங்கு இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்தனர். எனவே ஊர் சென்று, மனைவி மக்களை வரவழைத்துத் திரும்பவந்து, அங்கேயே தங்கிவிடத் தீர்மானம் செய்துகொண்டேன். மேலும், நான் ஊருக்குச் சென்றால் பொது மக்களுக்கு விபரங்கள் எடுத்துரைத்துத் தென் ஆப்பிரிக்கா இந்தியர்களிடம் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளுமாறு செய்யலாம் என்பதையும் கண்டேன்.

பாகம் V

இந்தியா வருகை

28

இந்தியாவில்

நான் பம்பாயில் தங்காமல், நேராக இராஜகோட்டைக்குச் சென்றேன். தென் ஆப்பிரிக்காவிலுள்ள நிலைமையைப் பற்றி ஒரு துண்டுப் பிரசுரம் எழுத ஏற்பாடு செய்யத் தொடங்கினேன். அச்சிறிய பிரசுரத்தை எழுதி வெளியிடுவதற்கு சுமார் ஒரு திங்கள் பிடித்தது. அதற்குப் பச்சை மேலட்டை போட்டிருந்தது. எனவே அதற்குப் பச்சை நூல் என்று பின்னர் பெயர் விளங்கலாயிற்று. அதில், தென் ஆப்பிரிக்காவில் இந்தியருடைய நிலைமையைப் பற்றி வேண்டுமென்றே அடக்கமான ஒரு சித்திரமே தீட்டி இருந்தேன். பத்தாயிரம் பிரதிகள் அச்சடித்து, எல்லாப் பத்திரிகைகளுக்கும், எல்லாக் கட்சியின் தலைவர்களுக்கும் அனுப்பினேன். முதலாவதாகத் தன் தலையங்கத்தில் குறிப்பிட்டது 'பயனீர்' தான். அக்கட்டுரையின் சுருக்கம், 'ராய்ட்ட'ரால் இங்கிலாந்துக்குத் தந்தி மூலம் அனுப்பப்பட்டது. அச்சுருக்கத்தின் சுருக்கத்தை, ராய்ட்டரின் இலண்டன் அலுவலகம் நேட்டாலுக்குத் தந்தி மூலம் அனுப்பியது. இந்தத் தந்தி, அச்சில் மூன்று வரிகளுக்கு மேல் இல்லை. இது நேட்டாலில் இந்தியர்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றி நான் வரைந்த சித்திரத்தின், சிறிய, ஆனால் மிகைப்படுத்தப்பட்ட, ஒரு பதிப்பாகும். நேட்டாலில் இதன் விளைவைப் பற்றிப் பின்னர் காண்போம்.

இந்நூலை அஞ்சலுக்கு அனுப்புவதற்குத் தயார் செய்வது என்பது அவ்வளவு எளிதான வேலை இல்லை.

மேல் சுற்றட்டை போடுதல் முதலான வேலைகளுக்குப் பணம் கொடுத்து ஆள் வைப்பதாயிருந்தால், அதிகச் செலவாகும். ஆனால் நான் ஒரு எளிதான திட்டத்தைக் கைக்கொண்டேன். என் பகுதியிலுள்ள குழந்தைகளை எல்லாம் அழைத்துப் பள்ளிக்கூடம் இல்லாத நாளன்று காலையில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தங்கள் உழைப்பைத் தர முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இதை அவர்கள் மனதோடு செய்வதாக ஏற்றுக்கொண்டார்கள். நான், அவர்களுக்கு ஆசி கூறுவதாகவும், நான் சேகரித்து வைத்திருந்த, உபயோகப்படுத்தப்பட்ட தபால் தலைகளை வெகுமதியாகத் தருவதாகவும் வாக்களித்தேன். அவர்கள் அவ் வேலையை வெகு விரைவிலே முடித்தனர். சிறு குழந்தைகளைத் தொண்டர்களாகக் கொண்டது, அதுவே என் முதற் சோதனையாகும். அவ் இள நண்பர்களில் இருவர், இன்று எனது சக ஊழியர்களாக இருக்கிறார்கள்.

இராஜகோட்டையில் அச்சிறு நூலை எழுதுவதில் ஈடுபட்டிருந்த காலை, பம்பாய்க்குப் போய்வர ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. பொதுக் கூட்டங்கள் போட்டு, இப்பிரசினையை நகர மக்களுக்கு எடுத்து உரைக்க வேண்டும் என்பது எனது உத்தேசம். அதற்குப் பம்பாயையே முதலாவது நகரமாகக் கொண்டேன். முதன் முதலில் ரானடே நீதிபதியைச் சந்தித்தேன்; நான் சொல்லியதைக் கூர்ந்து கேட்டுவிட்டு, அவர் பிரோஸ்ஷா மேதா பிரபுவைச் சந்திக்குமாறு எனக்கு ஆலோசனை கூறினார். காலக் கிரமத்தில் அவரைச் சந்தித்தேன். அவரைக் கண்டதும் அச்சுறுவதற்கு நான் தயாராக இருந்தேன். அவர் பொதுமக்களுடைய பட்டங்களைப் பெற்றிருந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன்; 'பம்பாயின் சிங்க'த்தை, 'மாகாணத்தின் முடிசூடா மன்னரை' நான் பார்க்க இருப்பது; ஆனால் அம்மன்னர், என்னை அச்சுறுத்தவில்லை. வயது வந்த தன் தந

யனே, ஒரு அன்புள்ள தந்தை சந்திப்பதுபோல் என்னை வரவேற்றார். சர் பிரோஸஷா நான் சொல்லியதைக் கூர்மையாகக் கேட்டார். நீதிபதிகள் ரானடே, தயாப்ஜி—இவர்களை நான் சந்தித்ததை அவரிடம் சொன்னேன். அவர் சொன்னார் : " காந்தி, உங்களுக்கு நான் உதவி செய்யவேண்டும் என்று உணர்கிறேன்; இங்கு ஒரு பொதுக்கூட்டம் போட நான் ஏற்பாடு செய்யவேண்டும் "—இதோடு அவருடைய செயலாளரான திரு. முன்ஷியைப் பார்த்துக் கூட்டத்திற்கு நாள் குறிப்பிடும்படிக் கூறினார். தேதி குறிப்பிடப்பட்டது; அவர், எனக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

சர் கோவாஸ்ஜி ஜிகாங்கீர் நிறுவத்தின் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. சர் பிரோஸஷா மேத்தா பேசும் கூட்டங்களில், பெரும்பாலும் அவரைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணவர்களால், மண்டபம் எப்பொழுதும் எள்ளுவிழற்கு இடமின்றி நிறைந்துவிடும். இத்தகைய கூட்டம் இதுவே என் அனுபவத்தில் முதலாவதாகும். என் பேச்சு சர். பிரோஸஷாவுக்குப் பிடித்திருந்தது. நான் பேராநந்த மடைந்தேன்.

சர். பிரோஸஷா எனது பாதையை எளிதாக்கி விட்டார். எனவே, பம்பாயிலிருந்து பூனா சென்றேன். இங்கு இரு கட்சிகள் உள. எல்லாக் கருத்துக் கொண்டோரின் உதவியும் எனக்குத் தேவை. முதலில் லோகமான்ய திலகரைச் சந்தித்தேன். அவர் சொன்னார் :

" எல்லாக் கட்சியினருடைய உதவியையும் நீங்கள் நாடுவது மிகவும் சரியே. தென் ஆபிரிக்காப் பிரசினையில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. ஆனால் கட்சிச் சார்பில்லா ஒருவரை நீங்கள் கூட்டத் தலைவராகக் கொள்ள வேண்டும். பேராசிரியர் பந்தர்காரைச் சந்தியுங்கள். சமீப காலத்தில் அவர் எவ்விதப் பொது இயக்கத்திலும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இந்தப் பிரசினை ஒருக்கால் அவரை வெளியில் இழுக்கக்கூடும். அவ

ரைப் பார்த்து, அவர் என்ன சொல்லுகிருர் என்பதை எனக்குத் தெரிவியுங்கள். முழு அளவிற்கு நான் உங்களுக்கு உதவி புரிய விழைகின்றேன். நீங்கள் விரும்பும் பொழுதெல்லாம் தாராளமாக என்னைச் சந்திக்கலாம்; நீங்கள் என்னை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.''

இதுவே, எனக்கு லோகமானியரின் முதல் சந்திப்பு. இது, லோகமானியரை ஒப்புயர்வற்ற முறையில் மக்கள் விரும்புவதின் மர்மத்தை, எனக்குப் புலப்படுத்தியது.

அடுத்தபடி, கோகலேயைச் சந்தித்தேன். நான் அவரைப் பெர்கூசன் கல்லூரி மைதானத்தில் கண்டேன். என்னை அவர் அன்போடு வரவேற்ருர். அவருடைய முறை, என் உள்ளத்தை உடனே கொள்ளைகொண்டது. அவரோடும் இதுவே என் முதல் சந்திப்பு, ஆனுலும் ஏதோ பழைய நட்பினைப் புதுப்பித்துக்கொள்ளுவது போல் தோன்றியது. சர்பிரோசஷா, இமயமலைபோல் எனக்குத் தோன்றினர்; லோக மானியர் கடல்போலக் காட்சி தந்தார். ஆனுல் கோகலே, கங்கையாகத் தோன்றினர். அப்புண்ணிய நதியில், உளம் குளிர ஒருவர் குளிக்கலாம். இமயமலை ஏற ஒண்ணாது; கடலிலும் ஒருவர் எளிதிலே இறங்கி விடமுடியாது. ஆனுல் கங்கையோ, தன்னகத்தே ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. கங்கை நதியின் மிசைத் தோணியோட்டுவது பேரானந்தமாகும். பள்ளியில் சேர விரும்பும் மாணவன் ஒருவனை ஆசிரியர் பரிசோதிப்பதுபோல், கோகலே என்னை நுணுக்கமாகச் சோதித்தார். யாரைப் பார்க்க வேண்டும், எப்படிப் பார்க்கவேண்டும் என்று எனக்கு அவர் சொன்னுர். என் சொற்பொழிவைப் பார்க்க விரும்பினுர்; கல்லூரியைச் சுற்றிக் காட்டினுர்; நான் வேண்டும்போது அவர் தயாராக இருப்பதாக உறுதி கூறினுர்; பேராசிரியர் பந்தர்காரோடு, நான் போக இருக்கும் பேட்டியின் முடிவைப் பற்றித் தனக்குத்

தெரிவிக்குமாறு சொன்னார். நான் பேரானந்தத்தோடு விடைபெற்று வந்தேன்.

டாக்டர் பந்தேர்க்கார், ஒரு தந்தைபோல் என்னை அன்போடு வரவேற்றார். நான் அவரைப் பார்க்கும் போது நடுப்பகல். அவ்வேளையில் நான் பிறரைக் காண்பதற்காகச் சென்றுகொண்டிருக்கிறேன் என்பது இந்தச் சலியாத ஊழியரை மிகவும் கவர்ந்தது; கூட்டத்திற்குத் தலைமை தாங்கக் கட்சிச் சார்பில்லா ஒருவர் வேண்டும், என்ற என் வற்புறுத்தலை அவர் உடனே அங்கீகரித்தார்.

எவ்விதச் சிரமமுமின்றி, பூனாவிலுள்ள இக்கற்றறிந்த தன்னலமற்ற ஊழியர் கூட்டம், படாடோபமில்லாத ஒரு சிறிய இடத்தில், கூட்டத்தை நடத்தி, என் வேலையில் மேலும் நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் நான் திரும்பிப் போகுமாறு செய்தது.

அடுத்தபடி நான் சென்னை சென்றேன். சென்னை உணர்ச்சி வெள்ளத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. பொதுக்கூட்டத்தில் பாலசுந்தரத்தின் நிகழ்ச்சி ஆழ்ந்த உணர்ச்சியை உண்டாக்கியது. எனது சொற்பொழிவு அச்சடிக்கப்பட்டிருந்தது. என்னளவில், அது மிக நீளமே. ஆனால் அவையோர், ஒவ்வொரு சொல்லையும் செவிசாய்த்துக் கேட்டனர். கூட்ட முடிவில், 'பச்சை நூலை' மக்கள் போட்டிபோட்டு வாங்கலாயினர். திருந்திய இரண்டாவது பதிப்பு, 10,000 பிரதிகள் அச்சடித்தேன். அவைகளும் வெகு விரைவிலே விற்கப்பட்டன.

சென்னையிலிருந்து கல்கத்தா சென்றேன். அங்கு, டர்பானிலிருந்து வந்த அடியிற்கண்ட தந்தியைப் பெற்றேன்: "ஜனவரியில் பாராளு மன்றம் ஆரம்பம். உடனே திரும்ப வருக."

தாதா அப்துல்லா, 'கூர்லாந்து' என்ற கப்பலை அப்பொழுதுதான் வாங்கி இருந்தார். அவர் என்னையும், என் குடும்பத்தாரையும், அக்கப்பலில் இலவசமாக அழைத்துச் செல்லுவதாகச் சொல்லி, நான் அக்கப்பலில்

பயணம் செய்யுமாறு வற்புறுத்தினர். அதனை நான் நன்றியறிதலோடு ஏற்றுக்கொண்டேன். டிசம்பர் முற்பகுதியில், இரண்டாம் தடவையாக, ஆனால் இப்பொழுது என் மனைவி, இரு மகன்கள், விதவையான என் உடன் பிறந்தவளின் ஒரே மகன்,—இவர்களோடு, தென் ஆபிரிக்காவுக்குக் கப்பலில் பயணமானேன். அதே சமயத்தில் 'ததேரி' என்ற கப்பலும் தர்பானுக்குப் புறப்பட்டது. அக்கம்பெனியின் பிரதிநிதிகள் தாதா அப்துல்லா கம்பெனியாரே. இக்கப்பலில் சென்ற பிரயாணிகள் சுமார் எண்ணூறு பேர் இருக்கும். இதில் பாதிப்பேர் டிரான்ஸ்வால் செல்லுபவர்கள்.

பாகம் VI

மீண்டும் தென் ஆபிரிக்காவில்

29

தென் ஆபிரிக்கா வருகை—பெரும்புயல்

டிசம்பர் 18-ம் நாளிலோ, அல்லது அத்தேதி வாக்கிலோ இரண்டு கப்பல்களும் டர்பான் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சின. பூரண வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் தென் ஆபிரிக்காவின் துறைமுகங்கள் எதிலும் எந்தப் பிரயாணியையும் இறங்க அனுமதிப்பதில்லை. தொத்து நோயால் பீடிக்கப்பட்ட பிரயாணி யாரும் கப்பலில் இருந்தால், கப்பல் குறிப்பிட்ட கால அளவு அங்கே நிற்கவேண்டும். நாங்கள் புறப்பட்டபொழுது பம்பாயில் 'பிளேக்' இருந்ததால் நாங்கள் ஒரு குறுகிய காலமாவது 'குவாரன்டை'னில் இருக்கவேண்டும் என்று அஞ்சினேம். மருத்துவர் வந்து எங்களைப் பரிசோதித்தார். எங்களுக்கு ஐந்து நாள் குவாரன்டைன் கட்டளை இட்டார்; ஏனென்றால், பிளேக் கிருமிகள் வளரகூடிய பட்சம் 23 நாட்களாகும் என்பது அவர் கருத்து. எனவே பம்பாயிலிருந்து நாங்கள் புறப்பட்டு இருபத்து மூன்றுவது நாள் வரை எங்கள் கப்பல் குவாரண்டைனில் இருக்குமாறு அவர் கட்டளை இட்டார். ஆனால், இந்த குவாரன்டைனில், உடல்நலக் காரணங்கள் தவிர வேறு சிலவும் இருந்தன.

எங்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்று டர்பானில் உள்ள வெள்ளை வாசிகள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர்; இக்கிளர்ச்சி, இவ் உத்திரவுக்குக் காரணங்களில் ஒன்று. நகரத்தில் நடக்கும் தினசரி நிகழ்ச்சிகளைப் பற்றித் தாதா அப்துல்லா

கம்பெனியார் எங்களுக்கு ஒழுங்காகத் தகவல் கொடுத்துக் கொண்டு வந்தனர். வெள்ளையர் ஒவ்வொரு நாளும் பெரிய கூட்டங்கள் போட்டு வந்தனர். அவர்கள் தாதா அப்துல்லா கம்பெனியாருக்குப் பலவகையான பயமுறுத்தல்களும், சில சமயங்களில் ஆசைச் சொற்களும் விடுத்து வந்தனர். இரண்டு கப்பல்களும் திரும்ப அனுப்பப்படுமானால், அதனால் ஏற்படும் நஷ்டியைக் கம்பெனியாருக்குக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் தாதா அப்துல்லா கம்பெனியார் பயமுறுத்தல்களுக்குப் பயந்தவர்களல்லர். சேத் அப்துல் கரீம் ஹாஜி ஆதம், அப்பொழுது அக்கம்பெனியின் நிருவாகப் பங்காளி. துறைமுகத்திலேயே கப்பல்களை நிறுத்தி, ஏது நேரினும் பிரயாணிகளை இறக்கிவிடுவது என்று அவர் உறுதி கொண்டார். அவர் தினந்தோறும் எனக்கு விவரமான கடிதம் எழுதி வந்தார். நல்ல வேளையாக, காலஞ்சென்ற திரு. மனுசுக்லால் நாசர், என்னைச் சந்திப்பதற்காக அப்பொழுது டர்பானில் இருந்தார். அவர் அஞ்சா நெஞ்சினர்; ஆற்றல் வாய்ந்தவர்; இந்தியர்களுக்கு வழிகாட்டினர். அவர்களுடைய வழக்குரைஞர் திரு. லாப்டனும் அவரையைய அஞ்சா நெஞ்சினர். அவர், வெள்ளை வாசிகளுடைய நடத்தையைக் கண்டித்தார்; ஊதியம் பெற்ற அவர்களுடைய வக்கீல் என்பதோடு இல்லாமல், அவர்களுடைய உண்மையான நண்பராக இந்தியர்களுக்கு அவர் ஆலோசனை கூறினர்.

இப்படி டர்பான், சமஜோடி இல்லாத ஒரு போர்க்களமாக விளங்கியது. சிறு தொகையினரான ஏழை இந்தியர்களும் அவர்களுடைய சில ஆங்கிலேய நண்பர்களும் ஒரு பக்கம்; மறுபக்கமோ, ஆயுதம், எண்ணிக்கை, படிப்பு, பணம் இவற்றின் பலம் பொருந்திய வெள்ளையர் அணிவகுத்து நின்றனர். அத்தோடு அவர்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தது;

நேட்டால் அரசாங்கம் அவர்களுக்குப் பகிரங்கமாக உதவி புரிந்தது. அமைச்சர் அவையில் மிகச் செல்வாக்கு வாய்ந்த திரு. ஹாரி எஸ்கோம்பி, அவர்களுடைய கூட்டங்களில் பகிரங்கமாகப் பங்கு எடுத்துக் கொண்டார்.

பிரயாணிகளின் பொழுதுபோக்கிற்காகக் கப்பலில் நாங்கள் பல வகையான விளையாட்டுகள் ஏற்பாடு செய்தோம். அக்கேளிக்கைகளில் நானும் பங்கெடுத்துக் கொண்டேன். ஆனால் டர்பானில் நடந்துவந்த போராட்டத்தில்தான் என் உள்ளம் இருந்தது. ஏனெனில், நான்தான் அவர்களின் வாஸ்தவமான குறி. என்மேல் அவர்கள் சுமத்திய குற்றங்கள் இரண்டு :

(1) நான் இந்தியாவில் இருக்கும்போது நேட்டால் வெள்ளையரைப் பற்றித் தகாத கண்டனம் செய்தேன்.

(2) நேட்டாலை இந்தியர்கள் மயமாக்குவதற்காக, இரண்டு கப்பல்கள் நிறையப் பிரயாணிகளைக் கொண்டு வந்திருக்கிறேன்.

எனது பொறுப்பை நான் உணர்ந்திருந்தேன். என் பொருட்டாக, தாதா அப்துல்லா கம்பெனியார் பெரிய அபாயங்களை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதும், பிரயாணிகளின் உயிர்கள் அபாயத்தில் இருக்கிறது என்பதும், என்னோடு என் குடும்பத்தைக் கூட்டி வந்ததில் அவர்களையும் அதேபோல் அபாயத்திற்கு ஆளாக்கி உள்ளேன் என்பதும் நான் அறிவேன்.

ஆனால் நான் முற்றிலும் நிரபராதி. நேட்டாலுக்குப் போகும்படி யாரையும் நான் தூண்டியது கிடையாது. கப்பலேறும்போது அப்பிரயாணிகளை எனக்குத் தெரியாது. எனது உறவினர் இருவரைத் தவிர, கப்பலில் உள்ள நூற்றுக்கணக்கான பிரயாணிகளின் யாருடைய பெயரும் முகவரியும் எனக்குத் தெரியாது. நேட்டாலிலேயே நான் முன்னர் வெள்ளையர்களைப் பற்றிச் சொல்லாத எந்தச் சொல்லையும், இந்தியாவில் நான்

சொல்லவில்லை. நான் பகர்ந்தது எல்லாவற்றிற்கும் போதிய சான்றுகள் என்னிடம் உள.

இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டே சென்றன.

இருபத்து மூன்ருவது நாள் முடிவில் எங்கள் கப்பல் துறைமுகம் செல்ல அனுமதிக்கப்பட்டது. பிரயாணிகளை இறக்குவதற்குக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

எனவே கப்பல்கள் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டன; பிரயாணிகள் இறங்கத் தொடங்கினர். ஆனல், வெள்ளையர்கள் என் பேரில் மிகவும் ஆத்திரம் கொண்டிருப்பதால், என் உயிருக்கு ஆபத்து என்றும், எனவே, நானும் என் குடும்பத்தினரும் அந்தி மயங்கிய பின் இறங்க வேண்டும் என்றும், துறைமுக அதிகாரி திரு. டாட்டம் எங்களை வீட்டுக்கு அழைத்து வருவார் என்றும், கப்பல் தலைவருக்கு திரு. எஸ்கோம்பி சொல்லி அனுப்பி இருந்தார். தலைவர் அச்செய்தியை எனக்குத் தெரிவித்தார்; நானும் அவ்வாறே நடக்க இணங்கினேன். ஆனல், இதற்கு அரைமணி நேரத்திற்குப்பின், திரு. லாப்டன் கப்பல் தலைவரிடம் வந்தார். அவர் சொன்னர். "திரு. காந்திக்குத் தடை இல்லை என்ருல் அவரை நான் என்னோடு அழைத்துச் செல்ல விரும்புகின்றேன். திரு. எஸ்கோம்பியிடமிருந்து வந்த செய்திப்படி, நீங்கள் ஒன்றும் நடக்கவேண்டிய கட்டாயம் இல்லை என்று, ஏஜண்டுக் கம்பெனியின் சட்ட ஆலோசகர் என்ற முறையில் நான் கூறுகின்றேன்" இதற்குப் பின் அவர் என்னிடம் வந்து, இவ்வாறு சொன்னர்;—"நீங்கள் ஒன்றும் பயப்படவில்லையானல், திருமதி காந்தியும், குழந்தைகளும் வண்டியில் திரு. ரஸ்டம்ஜி வீட்டிற்குச் செல்லட்டும்; நானும் நீங்களும் அவர்களைப்பின் தொடர்ந்து நடந்து போவோம். இரவில் ஒரு திருடனைப் போல் நகரத்தில் நீங்கள் நுழைவது எனக்குச் சிறிது கூடப்பிடிக்கவில்லை. உங்களை யாரும் காயப்படுத்தும் பயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எல்லாம்

இப்பொழுது அமைதியாக இருக்கிறது. வெள்ளையர்கள் எல்லாம் கலைந்துபோய் விட்டார்கள். ஆனால், எப்படியாயினும், கள்ளத்தனமாய் நீங்கள் நகரத்தில் நுழையக் கூடாது என்பதே என் கருத்து.'' நான் உடனே இதற்கு இணங்கினேன். எனது மனைவியும் குழந்தைகளும், திரு. ரஸ்டம்ஜி வீட்டிற்குப் பத்திரமாகச் சென்றனர். கப்பல் தலைவரின் அனுமதியின் பேரில், திரு. லாப்டனோடு நான் கரையில் இறங்கினேன். திரு. ரஸ்டம்ஜி வீடு துறைமுகத்திலிருந்து சுமார் 2 கல் இருக்கும்.

நாங்கள் இறங்கியதும், சில இளைஞர்கள் என்னை அடையாளம் தெரிந்து கொண்டு, 'காந்தி, காந்தி' என்று கூவினார்கள். சுமார் ஐந்தாறு பேர் அவ் விடத்திற்கு ஓடி வந்து, கூப்பாட்டில் சேர்ந்துகொண்டனர். திரு. லாப்டன், கூட்டம் பெருகிவிடும் என்று அஞ்சி ஒரு ரிக்ஷாவைக் கூப்பிட்டார். ரிக்ஷாவில் ஏறுவது எனக்கு எப்பொழுதும் பிடித்ததில்லை. இதுவே எனது முதல் அனுபவம். ஆனால், இளைஞர்கள் அதில் என்னை ஏற விடவில்லை. ரிக்ஷாக்காரனை உயிரை வாங்கிவிடுவோம் என்று அவர்கள் பயமுறுத்தவே, அவன் ஓட்டம் பிடித்தான். நாங்கள் மேலே நடக்கவே, கூட்டம் பெருகிக் கொண்டே வந்து, நாங்கள் மேலும் நடந்து செல்வது அசாத்தியமாயிற்று. அவர்கள் முதலில் திரு. லாப்டனைப் பிடித்து, என்னிடமிருந்து பிரித்தனர். பின், கற்களாலும், செங்கல் கட்டிகளாலும், அழுகிய முட்டைகளாலும் என்னைத் தாக்கினர். ஒருவன் என் தலைப் பாகையைப் பிடித்திழுத்தான். மற்றவர்கள் என்னைத் தாக்கவும் உதைக்கவும் ஆரம்பித்தனர். நான் மூர்ச்சையுற்று, ஒரு வீட்டின் முன் அளிக்கம்பிகளைப் பிடித்துக் கொண்டு மூச்சுவாங்க நின்றேன். ஆனால் அது முடியாத காரியம். அவர்கள் என்னைக் குத்தினர். புடைத்தனர். அதுசமயம் என்னை அறிந்த போலீஸ் சூப்ரண்

டெண்டின் மனைவி அப்பக்கம் போய்க்கொண்டிருந்தாள். துணிவுள்ள அந்த அம்மை என் பக்கம் வந்து, அப்பொழுது சூரியன் இல்லாவிட்டாலும், குடையைவிரித்துப் பிடித்துக், கூட்டத்திற்கும் எனக்கும் நடுவில் நின்றுள். இது கூட்டத்தின் கோபாவேசத்தைத் தடுத்தது. ஏனென்றுல் ஸ்ரீமதி அலெக்சாந்தருக்குத் தீங்கு விளைவிக்காமல், எனக்கு அடிகள் கொடுப்பது கஷ்டம்.

இதன் நடுவில், இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற ஒரு இந்திய இளைஞன், போலீஸ் நிலையத்திற்கு ஓடினன். போலீஸ் சூப்ரண்டெண்டு திரு. அலெக்சாந்தர், என்னைச் சுற்றி வளைத்துப் பத்திரமாக என் இடத்திற்குக் கொண்டுபோய்விட ஆட்களை அனுப்பி வைத்தார். அவர்கள் சரியான நேரத்தில் வந்தனர். போலீஸ் நிலையம் நாங்கள் போகும் வழியில் இருந்தது. ஆங்கு நாங்கள் போய்ச் சேர்ந்ததும், போலீஸ் சூப்ரண்டெண்டு, என்னைப் போலீஸ் நிலையத்தில் தங்குமாறு சொன்னர்; ஆனல் நான் அதை நன்றியறிதலோடு ஏற்க மறுத்துவிட்டேன். "அவர்கள் தவறை உணர்ந்தவுடன், நிச்சயமாகச் சும்மா இருந்து விடுவார்கள்," என்று சொன்னேன். "அவர்களுடைய நியாய உணர்ச்சியில் எனக்கு நம்பிக்கை உண்டு" என்றேன். போலீசார் துணையோடு, மேலும் தீங்கில்லாமல், திரு. ரஸ்டம்ஜி இடத்திற்கு வந்தேன். எனக்கு மேல் எல்லாம் சிராய்த்திருந்தது. ஆனல், ஒரு இடத்தில் தவிரக் காயங்கள் இல்லை. தலத்தில் இருந்த கப்பல் மருத்துவர் டாக்டர் டாடிபர்ஜார், இயன்ற உதவி அனைத்தும் செய்தார்.

உள்ளே அமைதி. ஆனல் வெளியே, வெள்ளையர் வீட்டைச் சூழ்ந்தனர்; பொழுது சாய்ந்து வந்தது; ஆனல் ஓலமிடும் கூட்டம் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தது: "எங்களுக்குக் காந்தி வெளியே அனுப்பவேண்டும்!" என்று. விரைவில் அறியும் ஆற்றலுடைய போலீசு சூப்

ரண்டெண்டு ஆங்கு அதற்குள்ளாக வந்துக் கூட்டத்தை அச்சுறுத்தலால் அல்லாமல், தாஜாப் பண்ணிச் சமாளிக்க முயன்று கொண்டிருந்தார். ஆனால் அவருக்குக் கவலை முற்றிலும் இல்லாமல் இல்லை. அவர் எனக்கு இவ்வாறு ஒரு செய்தி அனுப்பினார் :—“ உங்களுடைய நண்பருடைய வீடு, சொத்து, உங்கள் குடும்பம்—இவர்களைக் காப்பாற்ற விரும்பினால், நான் சொல்லுகிறபடி, நீங்கள் இந்த வீட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும்.’’

சூப்ரண்டென்டின் யோசனைப்படி, நான் ஒரு இந்தியப் போலீசின் உடையைத் தரித்துத் தலையில் தட்டைச் சுற்றி ஒரு சென்னைத் துண்டைக் கட்டி ஒரு ‘ ஹெல்மட்’ போல வைத்துக் கொண்டேன். இரண்டு துப்பறியும் போலீசார் என்கூட வந்தனர்; ஒருவர் இந்தியரைப் போல இருப்பதற்காக சாயம் பூசிக்கொண்டு, இந்திய வணிகரைப் போல மாறு வேடம் பூண்டிருந்தார். இன்னொருவருடைய மாறுவேடம் எனக்கு நினைவில்லை. நாங்கள் ஒரு சிறு சந்து வழியாகப் பக்கத்துக்குக் கடைக்கு வந்தோம். கிட்டங்கியில் அடுக்கிக் கிடந்த சாக்குக் குவியல்களைக் கடந்து, கடையின் வாசல் வழியாகத் தப்பிக் கூட்டத்தின் வழியாகத் தெருவின் கோடியில் எனக்காக நிறுத்தப்பட்டிருந்த வண்டிக்குச் சென்றோம். இதிலே, சிறிது நேரத்திற்கு முன்னர் திரு. அலெக்சாந்தர் எங்களைத் தங்குமாறு சொன்ன அதே போலீசு நிலையத்திற்குச் சென்றோம். அவருக்கும், துப்பறியும் அவ் அதிகாரிகளுக்கும் நான் நன்றி செலுத்தினேன்.

நான் இப்படித் தப்பித்துக் கொண்டிருக்கும்போது, திரு. அலெக்சாந்தர், கூட்டத்தில்,

> தூக்கில் இடுங்கள் காந்தியை,
> இந்த ஆப்பிள் மரக்கிளையிலே !

என்றுபாடிக் கூட்டத்தைக் கேளிக்கைப் படுத்திக்கொண்

டிருந்தார். நான் போலீசு நிலயத்திற்குப் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தேன் என்ற தகவல் அவருக்கு அறிவிக்கப் பட்டதும், அவர் கூட்டத்திற்கு இச்செய்தியை அறிவித்தார்; "உங்கள் வேட்டை ஆசாமி, பக்கத்துக் கடை மூலமாகத் தப்பித்துக் கொண்டார். நீங்கள் இப்பொழுது வீட்டுக்குப் போகலாம்" என்ருர். அவர் களில் சிலர் கோபமுற்றனர்; சிலர் சிரித்தனர்; சிலர் இதனை நம்ப மறுத்தனர்.

"சரி, அப்படியாளுல், நீங்கள் என்னை நம்பவில்லை யாளுல், உங்களில் ஒன்றிரண்டுபேரை நியமியுங்கள்; அவர்களை நான் வீட்டிற்குள் கூட்டிப்போகத் தயாராக இருக்கிறேன். அவர்கள் அங்குக் காந்தியைக் கண்டு பிடித்துவிட்டால், அவர்களை உங்களிடம் ஒப்புவித்து விடுகிறேன். ஆளுல், அப்படி முடியாவிட்டால், நீங்கள் கலைந்துபோய்விட வேண்டும். திரு. ரஸ்டம்ஜியின் வீட்டைத் தகர்ப்பதோ, திரு. காந்தியின் மனைவி மக்களை துன்புறுத்துவதோ உங்கள் நோக்கமில்லை என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்று அப்போலீசு அதிகாரி பகர்ந்தார்.

வீட்டில் தேடிப்பார்ப்பதற்குக் கூட்டம் தனது பிரதி நிதிகளை அனுப்பியது. அவர்கள் ஏமாற்றச் செய்தி யோடு விரைவிலே திரும்பினர். அவர்களில் பலர் போலீசு அதிகாரி நிலமையைச் சாமர்த்தியமாகச் சமாளித்ததைப் புகழ்ந்தும், சிலர் எரிச்சலோடும் புகைச்சலோடும், கலைந்து சென்றனர்.

அதுபோழ்து, குடியேற்ற நாடுகளுக்கு அரசாங்கக் காரியதரிசியாக இருந்த, காலஞ்சென்ற திரு. சேம்பர் லெயின், என்னைத் தாக்கியவர்கள்மேல் வழக்குத் தொடருமாறு நேட்டால் அரசாங்கத்துக்குத் தந்தி அனுப்பினர். திரு. எஸ்கோம்பி என்னை அழைத்து, நான் காயமுற்றதிற்குத் தன் வருத்தத்தைத் தெரிவித் துச் சொன்ஞர்: "உங்கள் உடலுக்கு இழைக்கப்பட்ட

சிறுகாயமும் என்னை வருத்தாமல் இருக்க முடியாது என்று நான் சொல்லுவதை நம்புங்கள். திரு. லாப்டனின் ஆலோசனையை ஏற்று, எதனையும் சமாளித்து நிற்க உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் என் ஆலோசனைகளை ஏற்று நடந்திருப்பீர்களானால், இவ்வருத்தமான நிகழ்ச்சிகள் நடந்திரா. உங்களைத் தாக்கியவர்களை நீங்கள் அடையாளம் காட்ட முடியுமானால், அவர்களைக் கைது செய்து, அவர்கள் மேல் வழக்குத் தொடர நான் தயாராக இருக்கிறேன்.''

இதற்கு நான் அடியில்வரும் மறுமொழி பகர்ந்தேன்.

''யார்மேலும் வழக்குத்தொடர நான் விரும்பவில்லை. அவர்களில் ஓர் இருவரை நான் அடையாளம் காட்டமுடியும். ஆனால் அவர்களைத் தண்டிப்பதால், என்ன பயன்? மேலும், என்னைத் தாக்கியவர்களை நான் இக்குற்றத்திற்குப் பொறுப்பாக்கவில்லை. நேட்டால் வெள்ளையரைப் பற்றி நான் இந்தியாவில் மிகைப்படுத்திக் கூறியதாகவும், அவர்களைப்பற்றி அவதூறுகப் பேசியதாகவும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். இச் செய்திகளை அவர்கள் நம்பியிருந்தார்களானால், அவர்கள் கோபங் கொண்டதில் வியப்பு ஒன்றுமில்லை. தலைவர்களும், என்னைச் சொல்ல அனுமதித்தீர்களானால், நீங்களுமே குற்றத்திற்குப் பொறுப்பு. நீங்கள் மக்களுக்குச் சரியாக வழிகாட்டி இருக்கலாம். ஆனால் நீங்களும் ராய்ட்டர் செய்தியை நம்பினீர்கள்; நான் இங்குள்ள விஷயங்களை மிகைபடுத்திக் கூறி இருக்க வேண்டும் என்று அனுமானித்தீர்கள். யாருக்கும் தண்டனை வாங்கித் தர எனக்கு விருப்பமில்லை. உண்மை வெளிவரும் போது, தங்களுடைய நடத்தைக்கு அவர்கள் வருந்துவார்களென்பது நிச்சயம்.''

'' இதைத் தாங்கள் எழுத்தில் எழுதித்தரலாமா? ஏனெனில் சேம்பர்லெயினுக்கு இதை நான் கடல் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டும். நீங்கள் அவசரப்பட்டு

எந்த அறிக்கையும் தரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. நீங்கள் இறுதியான ஒரு முடிவுக்கு வருமுன்னர், விரும்பினால் திரு. லாப்டனையும், மற்ற நண்பர்களையும் கலந்து கொள்ளலாம். உங்களைத் தாக்கியவர்களைத் தண்டனைக்கு ஆளாக்கும் உங்கள் உரிமையை இவ்வாறு நீங்கள் விட்டுக் கொடுப்பதானால், அமைதியை நிலை நாட்டுவதற்கு எனக்குப் பேருதவி செய்வதோடு அல்லாமல், உங்கள் புகழையும் பெருக்கிக் கொண்டவர்கள் ஆவீர்கள்"—என்றார் திரு. எஸ்கோம்பி.

"உங்களுக்கு நன்றி; யாரையும் நான் கலக்க வேண்டியதில்லை. உங்களிடம் வருவதற்கு முன்னரே, நான் இம்முடிவுக்கு வந்துள்ளேன். என்னைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடரக்கூடாது என்பது என் உறுதியான கொள்கை. அம்முடிவை இக்கணமே எழுத்தில் எழுதித்தரத் தயாராக இருக்கிறேன்" என்றேன்.

30

குழந்தைகள் படிப்பு—பராமரிப்பு

1897 ஜனவரியில் நான் தர்பானில் இறங்கிய பொழுது, என்னோடு மூன்று குழந்தைகள் இருந்தனர்; பத்து வயதுள்ள என் உடன் பிறந்தவளின் மகன், ஒன்பது வயது, ஐந்து வயதுள்ள என் மகன்கள். அவர்களை நான் எங்கே படிக்க வைப்பது?

ஐரோப்பியக் குழந்தைகளுக்கான பள்ளிக்கூடத்துக்கு அவர்களை நான் அனுப்பி இருக்க முடியும்; ஆனால் அது தயவினாலும், தனியான சலுகையினாலேயேயும் முடியும். இந்தியக் குழந்தைகள் எவரும் அங்கு அனுமதிக்கப் படுவதில்லை. இவர்களுக்குக் கிறிஸ்தவப்

பாதிரிகள் நிறுவிய பள்ளிகள் இருந்தன. ஆனால் என் குழந்தைகளை அங்கு அனுப்பத் தயராக இல்லை. ஏனென்றால் அங்கு சொல்லிக் கொடுத்த படிப்பு எனக்குப் பிடிக்கவில்லை. முதலாவதாக, அங்கு போதனாமொழி ஆங்கிலமே; அல்லது ஒருக்கால் பிழையான தமிழ் அல்லது இந்தி; இதுவும் மிகுந்த சிரமத்தோடுதான் ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் இணைய பிரதி கூலங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கிடையில், அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க நானே முயற்சி செய்யலானேன்.

அவர்களைத் திரும்ப இந்தியாவுக்கு அனுப்ப நான் விரும்பவில்லை. ஏனென்றால், இளம் குழந்தைகளைப் பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கக் கூடாது என்று நான் அப்பொழுதே கருதி வந்தேன். ஒழுங்கான வீட்டில் குழந்தைகள் இயல்பாகப் பெறுகிற படிப்பு, விடுதிகளில் கிடைப்பது அசாத்தியம். எனவே, குழந்தைகளை என்னோடு வைத்துக்கொண்டேன்.

நான் கொடுக்க நினைத்த நேரம் முழுதும் குழந்தை களுக்கு ஓதுக்க முடியவில்லை. அவர்களுக்குப் போதிய கவனம் செலுத்த முடியாத என் அசக்தியும், தவிர்க்க முடியாத பிற காரணங்களும், நான் விரும்பிய கலைக் கல்வியை அவர்களுக்கு அளிக்க முடியாது போயிற்று. இவ்விடயத்தில், என்பேரில் என் மகன்களுக்குப் புகார் உண்டு. அவர்கள், ஒரு எம். ஏ. அல்லது பி. ஏ.-யை அல்லது ஒரு மெட்ரிகுலேஷன் தேறிய ஒருவரைச் சந்திக்கும் போதுகூட, பள்ளிப் படிப்பின்மையின் சங்கடத்தை அவர்கள் உணர்வதாகத் தெரிகிறது.

இருந்தாலும், அவர்கள் பொதுப் பள்ளியில் எவ்வா றேனும் பயிலுவதை நான் வற்புறுத்தி இருப்பேனானால், அனுபவம் என்ற பள்ளியில், அல்லது பெற்றோர்களோடு அடிக்கடி பழகுதல் என்பதனால் ஏற்படும் பயிற்சி அவர் களுக்குக் கிடையாது போயிருக்கும் என்றே கருது

கிறேன். எனது மகன்களுடைய சம காலத்தவர்களான பல இளைஞர்களை நான் அறிவேன். அவர்கள், ஆளுக்கு ஆள், என் மகன்களைவிட மேலானவர்கள் என்றோ, அல்லது அவர்களிடம் இருந்து என் பிள்ளைகள் படிக்க வேண்டியது அதிகம் உளது என்றோ நான் கருதுவதற்கில்லை.

ஆனால். என் சோதனையின் இறுதியான முடிவு, வருங்காலத்தின் வித்திலிருக்கிறது. நாகரிகச் சரித்திர மாணவன் ஒருவன், கட்டுப்பாடான வீட்டுப் படிப்புக்கும் பள்ளிப் படிப்புக்கும் உள்ள வேறுபாட்டை ஆய்வதே இங்கு நான் இதைச் சர்ச்சை செய்ததின் நோக்கமாகும்.

மேலும், நான் தன்மான உணர்வு இல்லாமல், மற்றப் பிள்ளைகள் பெற முடியாத ஒரு கல்வியை என் பிள்ளைகள் பெறுவதில் மன நிறைவு கொண்டிருப்பேனால், கலைக் கல்வி பெறுவதற்குப் பாதகமாகச் சுதந்திரத்திலும் தன் மானத்திலும் நான் அளித்த உதாரணப்பாடம் அவர்களுக்குக் கிடையாது போயிருக்கும். சுதந்திரம், படிப்பு இவற்றில் ஒன்றைத் தெரிந்தெடுக்க நேர்ந்தால், பின்னையதினும், முன்னதே ஆயிரம் மடங்கு மேலானது என்று யாரே சொல்லமாட்டார்?

அடிமைத் தளையில் கல்வி பயிலுவதைவிட நாட்டின் விடுதலைக்காகக் கல்லுடைத்துக் கல்லாதிருப்பதே சாலச் சிறந்தது என்று கருதி, 1920-ல், அந்த அடிமைக் கோட்டைகளான தங்கள் பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வெளிவருமாறு நான் அழைத்த மாணவர்கள், என் புத்திமதியின் மூலத்தை இப்பொழுது அறிந்துகொள்ளக் கூடும்.

நிரந்தரத் தன்மை வாய்ந்த மக்கள் சேவை ஏதாவது செய்ய விழைந்தேன். டாக்டர் பூத்செயின்டு எய்தான் மிஷனின் தலைவர். அவர் கருணை உள்ளம் படைத்தார்; நோயாளிகளுக்கு இலவசமாகச் சிகிச்சை செய்தார்.

பார்சி ரஸ்டம்ஜீயின் தருமத்தினுல், டாக்டர் பூத்தின் மேற்பார்வையில் ஒரு சிறு இலவச மருத்துவ நிலையம் நிறுவ முடிந்தது. இந்த மருத்துவ நிலையத்தில், ஒரு தாதியாகப் பணியாற்ற எனக்குப் பெரு விருப்பம் இருந்தது. நோயுற்ற இந்தியர்கள்—பெரும்பாலும் தமிழ், தெலுங்கு வடநாட்டு ஒப்பந்தத் தொழிலாளி களோடு நான் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பாய் இருந்தது. போயர் போரில், நோயுற்ற, காயம்பட்ட, சிப்பாய்களுக்குச் சிகிச்சை செய்ய என் சேவையை வழங்கியபொழுது, இந்த அனுபவம் எனக்கு நல்ல உதவியாக இருந்தது.

31

எளிய வாழ்க்கை

வண்ணனுடைய கூலி அதிகமாக இருந்தது. மேலும், அவன் குறித்த காலத்தில் வருவது என்பது இல்லாததால், இரண்டு மூன்று டஜன் சட்டைகளும், கழுத்துப்பட்டைகளும் கூட எனக்குப் போதவில்லை. காலர்கள் நாள்தோறும் மாற்றப்படவேண்டும்; சட்டைகள் நாள்தோறும் மாற்ருவிட்டாலும், ஒன்றுவிட்டு ஒரு நாளாவது மாற்றவேண்டும். இந்த இரட்டிப்புச் செலவு அநாவசியம் என்று எனக்குப்பட்டது. எனவே, சிலவை மிச்சப்படுத்தச் சலவைக்கு உரிய கருவிகளை வாங்கினேன். சலவையைப்பற்றிய ஒரு நூலும் வாங்கி, அக்கலையைக் கற்று, என் மனைவிக்கும் சொல்லிக் கொடுத்தேன். இது என் வேலையை அதிகரிக்கச் செய்தது. இருந்தாலும், இதன் புதுமை இதனை இன்பமாக்கியது.

நான் தேய்த்த முதற் 'காலரை' நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். போதிய அளவிற்கு அதிகமாகக்

கஞ்சிப் பசையை உபயோகித்தேன். தேய்க்கிற பெட்டி போதிய சூடில்லை. காலரைத் தீய்த்து விடுவோமோ என்ற அச்சத்தில், காலரைப் போதுமானபடி அழுத்தித் தேய்க்கவில்லை. அதன் பலன் : காலர் நன்ருக விரைப்பாக இருந்தாலும், அதிகப்படியான கஞ்சி ஒழுகிக் கொண்டே இருந்தது. காலரைப் போட்டுக்கொண்டு நீதி மன்றத்துக்குச் சென்றேன். சக வழக்குரைப்போர்களின் நகைப்புக்கு ஆளானேன். ஆனல் அந்நாளிலேயே கேலி என்னைப் பாதிப்பதில்லை.

"என் காலர்களை நானே வெளுப்பதில் இதுவே என் முதல் அனுபவம் ; எனவே கஞ்சிப்பசை அதிகம். அதனல் நான் கவலைப்படவில்லை. அதனேடு, நீங்கள் தமாஷ் செய்வதற்கும் இது இடம் தருகிறதல்லவா ? என்றேன்.

"ஆனல் சலவைச் சாலைகளுக்கு இங்கு ஒன்றும் குறைவில்லையே ?" என்ருர் ஒரு நண்பர்.

"சலவைக் கூலி மிக அதிகமாகிறது. ஒரு காலரைச் சலவை செய்யக் கூலி, அநேகமாக அதன் விலை அளவு ஆகிறது ; அப்பொழுதும்கூட, வண்ணுன் தயவை நாம் எப்பொழுதும் எதிர்பார்க்கவேண்டி இருக்கிறது. என் ஆடைகளை நான் வெளுத்துக்கொள்வதே மேலானது".

வண்ணுனுடைய பிடியிலிருந்து நான் விடுவித்துக் கொண்டது போலவே, நாவிதனுடைய தயவிலிருந்தும் விடுவித்துக் கொண்டேன். இங்கிலாந்துக்குப் போகிறவர்கள், ஆங்கு முகத்தை வழித்துக்கொள்ளும் கலையைக் கற்றுக்கொள்ளுவதுண்டு ; ஆனல், நான் அறிந்த மட்டில், தன் முடியை வெட்டக் கற்பதில்லை. நான் அதனையும் படித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிரிட்டோரியாவில், ஒரு ஆங்கிலேய முடிவெட்டுபவனிடம் ஒரு சமயம் நான் சென்றேன். அவன் மிகவும் ஏளனமாக என் முடிவெட்ட மறுத்தான் : என் மனம் புண்பட்டது. உடனே தலைவெட்டும் ஒரு கத்திரி வாங்கி,

கண்ணாடி முன் நின்று என் முடியை வெட்டிக் கொண்டேன். முன்பக்க முடியை ஒருவாறு சரியாக வெட்டிக்கொண்டேன். ஆனால் பின்புறம் கெடுத்து விட்டேன். நீதி மன்றத்திலுள்ள நண்பர்கள் விலாப் புடைக்கச் சிரித்தார்கள்.

"உங்கள் தலைமுடிக்கு என்ன நேர்ந்தது, காந்தி?, எலிகள் என்ன கத்திரித்து விட்டனவா?

"இல்லை. வெள்ளை நாவிதன் என் கருப்பு மயிரைத் தொடத் தயாரா இல்லை. எனவே, எவ்வளவு மோசமானாலும் பரவா இல்லை என்று, நானே என் முடியை வெட்டிக் கொண்டேன்." என்றேன்.

இந்த மறுமொழி அந்நண்பர்களுக்கு அதிசயம் விளைவிக்கவில்லை.

என் தலை முடியை வெட்ட மறுத்ததில் நாவிதன் மேல் தவறொன்றும் இல்லை. கருப்பு மனிதர்களுக்கு அவன் வேலை செய்தால், அவன் வாடிக்கைக் காரர்களை இழந்துவிட நேரிடும். நாமும், நமது நாவிதர்களை நம்முடைய 'தீண்டாத' சகோதரர்களைத் தொடவிடுவதில்லை. எனவே, இதற்கு இந்த வெகுமதியை நான் தென் ஆபிரிகாவில் ஒரு முறையல்ல, பன்முறை பெற்றேன். நமது பாவங்களுக்கு உரிய தண்டனை இது என்ற எண்ணம், நான் சினம் உருவண்ணம் காப்பாற்றியது.

32

ஒரு நினைவும் பிராயச்சித்தமும்

என் வாழ்க்கையில் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகள், பல சமயங்களைச் சார்ந்தவர்களையும் சாதியைச் சார்ந்தவர்களையும் நான் நெருங்கிப் பழகும்படி செய்தன. உறவினர் அன்னியர், நம் நாட்டவர் பிறநாட்டவர்,

வெள்ளையர் கறுப்பர், இந்துக்கள் முசல்மான்கள், பார்சிகள், கிரிஸ்தவர்கள், யூதர்கள் ஆகிய எந்தப் பிரசமயங்களைச் சார்ந்த இந்தியர்கள், என்று இவர்களில் எவ்வித வேறுபாடும் அறிந்திலன் என்பதை அவர்களோடு நான் பழகிய அனுபவத்திலிருந்து சொல்ல முடியும். இத்தகைய வேற்றுமையை உண்டாக்குவதே என் உள்ளத்திற்கு இயலாதது என்றே நான் சொல்லக்கூடும். இதனை என்னுடைய ஒரு தனியான பண்பு என்று கொண்டாடுமாறில்லை; ஏனென்றால், அது என் இயல்பிலேயே உள்ளது.

நான் டர்பானில் தொழில் செய்து வருங்கால், என் அலுவலகக் குமாஸ்தாக்கள் என்னோடு தங்குவது உண்டு; அவர்களில் இந்துக்களும் கிரிஸ்தவர்களும் இருந்தனர்; மாகாண வாரியாகச் சொல்ல வேண்டுமானல், குஜராத்தி, தமிழர்கள் இருந்தனர். அவர்களை எனது உற்ற உறவினர்களாகவே நான் கருதி வந்தேன்; எனது குடும்ப உறுப்பினர்களாகவே பாவித்து வந்தேன். அவர்களை நான் அவ்வாறு பாவித்து வருவதில் என் மனைவி குறுக்கிடுங்கால், அவளுக்கு மனத்தாங்கல் உண்டாக்குவேன். குமாஸ்தாக்களில் ஒருவர் கிரிஸ்தவர்; "தீண்டப்படா"தோர் என்று சொல்லப்படுகிற பெற்றோருக்குப் பிறந்தவர்.

வீடு மேலைநாட்டு முறையில் கட்டப்பட்டது. அறைகளில் இருந்து கழிவு தண்ணீர் வெளியே போகத் துவாரம் கிடையாது. எனவே ஒவ்வொரு அறையிலும், நீர்கழிக்கும் பாத்திரம் உண்டு. இவைகளை ஒரு வேலைக்காரனே தோட்டியோ துப்புரவு செய்வதற்குப் பதிலாக, என்மனைவி அல்லது நான் இவற்றைச் செய்யலானோம். வீட்டோடு கலந்து பழகிய குமாஸ்தாக்கள், தங்கள் பாத்திரங்களைத் தாங்களே கழுவிக் கொள்ளுவார்கள். ஆனல் கிரிஸ்தவக் குமாஸ்தா புதியவர்; அவருடைய படுக்கை அறையைக் கவனிக்கவேண்டியது

எங்கள் கடமையாயது. என் மனைவி, மற்றவர்களுடைய பாத்திரங்களைச் சமாளித்துக்கொண்டாள்; ஆனால், 'தீண்டப்படா'தவனாயிருந்த ஒருவர் உபயோகித்த பாத்திரங்களைக் கழுவுவது என்பது அவளுக்குத் தாங்க முடியாததாகத் தோன்றியது; எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டது. பாத்திரங்களை நான் கழுவுவதையும் அவளால் பொறுக்க முடியவில்லை; தானும் செய்வதை அவள் விரும்பவில்லை. கண்கள் கோபத்தால் செந்நிறம் படரக் கன்னங்களில் கண்ணீர் வடிந்தொழுக, அவள் சட்டியைக் கையிலேந்திப் படிக்கட்டுகளில் என்னை வைதுகொண்டே இறங்கிவரும் காட்சி இன்றும் என் மனக் கண்முன் நிற்கிறது. ஆனால் நான் வன்கண்மையான அன்புடைய கணவன். நான் என்னை அவளுடைய ஆசிரியனாகக் கருதினேன்; எனவே, கண்மூடித்தனமான அன்பினால் அவளைத் தொந்திரவுகளுக்கு உள்ளாக்கினேன்.

அவள் சட்டியைத் தூக்கிக் கொண்டு போவதில் நான் திருப்தி அடைந்து விடவில்லை. அதை அவள் மலர்ந்த முகத்தோடு செய்ய வேண்டும் என்று விரும்பினேன். எனவே, என் குரலை உயர்த்தி, "இந்த முட்டாள் தனத்தை என் வீட்டில் நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது." என்று சொன்னேன்.

இச் சொற்கள் அவளை அம்புபோல் தொளைத்தன.

"உங்கள் வீட்டை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்; நான் போகிறேன்," என்று அவள் உரத்த குரலில் கூவினாள். என்னை நான் மறந்தேன்; என் கருணையின் ஊற்று வறண்டு போயிற்று. அவள் கையைப் பிடித்துப் படிக்கட்டுக்கு எதிரே இருந்த வாசலுக்குத் திக்கற்ற அப் பெண்ணைக் கரகரவென இழுத்து, வெளியே பிடித்துத் தள்ளும் எண்ணத்தோடு கதவைத் திறக்க முற்பட்டேன். கண்ணீர் அவள் கன்னங்களில் இருந்து தாரை தாரையாகக் கொட்டிக் கொண்டிருந்தது; அவள் கதறிக்

கூறினுள் : "உங்களுக்கு மான உணர்ச்சி இல்லையா? நீங்கள் இவ்வளவு தூரம் உங்களை மறந்து விடலாமா? நான் எங்கே போக? எனக்கு அபயமளிக்க என் தாய் தந்தையர் உறவினர் யாரும் இங்கு கிடையாதே. நான் உங்கள் மனைவியானபடியால், உங்கள் அடி உதைகளை எல்லாம் நான் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் போலும்? கடவுளுக்காகக் கண்ணியமாக நடங்கள்; கதவைச் சாத்துங்கள். இப்படி நாம் நடந்துகொள்ளுவதைப் பிறர் பாராதிருக்கட்டும்!"

உண்மையாக நான் வெட்கமடைந்தேன்; முகத்தை மட்டும் தீரன்போல் காட்டிக் கொண்டேன். கதவை அடைத்தேன். என் மனைவி என்னை விட்டுப் பிரிய முடியாவிட்டால், அவளையும் நான் விட்டுப் பிரிய முடியாது. எங்களுக்குள் எத்தனையோ சண்டைகள் நடந்துள்ளன; ஆனல் எப்பொழுதும் அவற்றின் முடிவு எங்களுக்குள் சமாதானமே. பொறுமையின் ஒப்பற்ற ஆற்றல் பெற்ற மனைவியே என்றும் வெற்றி அடைவாள்.

இந் நிகழ்ச்சியை இன்று நான் ஓரளவு பற்றிலா ஒரு நிலைமையில் இருந்து சொல்ல முடிகிறது. ஏனென்றல், அது ஒரு காலப் பகுதியைச் சேர்ந்தது; நல்ல வேளையாக அப்பகுதியிலிருந்து நான் இப்பொழுது மீண்டுவிட்டேன். இப்பொழுது நான் கண்மூடிய மையலில் மூழ்கிய கணவன் அன்று; எனது மனைவியின் ஆசிரியனும் அன்று. நான் அன்று அவளிடம் நடந்து கொண்டதுபோல், இன்றுகஸ்தூரிபா, அவள் விரும்பினல், என்னிடம் நடக்க முடியும். நாங்கள் இப்பொழுது பழகிய நண்பர்கள்; ஒருவர் மற்றொருவரை ஒரு இச்சைப் பொருளாகக் கருதுவது கிடையாது.

33

போயர் போர்

1897-க்கும் 1899-க்கும் உள்ள காலத்தில் உள்ள ஏனைய பல அனுபவங்களை நான் இப்பொழுது தள்ளி விட்டுப் போயர் போருக்கு நேராக வருகிறேன்.

போர் பிரகடனமானதும், எனது தனிப்பட்ட அனுதாபம் எல்லாம் போயர்கள் பக்கத்திலேதான். ஆனால், இத்தகைய விடயங்களில், எனது சொந்தக் கருத்துக்களைத் திணிப்பதற்கு எனக்கு இன்னும் உரிமை கிடையாது என்று அப்பொழுது கருதினேன். இதைப் பற்றி எனது உள்போராட்டத்தைத் 'தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரக வரலாறு' என்ற நூலில் நுணுக்கமாக விளக்கி உள்ளேன். அவ்வாதங்களை ஈண்டு மீண்டும் உரைத்தலாகாது. ஆர்வமுள்ளவர்கள் அந்நூலைப் படித்துக் கொள்வார்களாக ஆங்கிலேய ஆட்சியிடம் எனக்கு உள்ள விசுவாசமே, இப்போரில் அவர்களோடு நான் கலந்துகொள்ளுமாறு ஊக்கியது என்று சொல்லுவதே போதுமானது. ஆங்கிலேயக் குடி என்ற நிலைமையில் உரிமைகளைக் கோரும்போது, ஆங்கில ராஜ்ஜியத்தின் பாதுகாப்பில் கலந்துகொள்ளவேண்டியது அதே குடி என்ற முறையில் நம் கடமை என்று கருதினேன். ஆங்கிலராஜ்ஜியத்தின் உள்ளிருந்தே அதன் மூலமாகவே இந்தியா தன் பூரண விடுதலை அடையலாம் என்று அப்பொழுது கருதினேன். எனவே, என்னால் இயன்ற அளவு சகாக்களைச் சேர்த்துக்கொண்டு, மிகுந்த பிரயாசையின் பேரில், காயம்பட்டோரைச் சிகிச்சை செய்யும் படையில் அவர்கள் சேவையை ஏற்றுக்கொள்ளச் செய்தேன்.

இந்தியன் கோழை, அபாயங்களை ஏற்க முன்வரான், தன் உடனடியான சுயநலத்துக்கு அப்பால் எட்டிப் பாரான்,—என்று ஒரு சாதாரண வெள்ளையன் நினைத்து

வந்தான். எனவே, அநேக ஆங்கிலேய நண்பர்கள், என் திட்டத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் டாக்டர் பூத் முழுமனதோடு ஆதரித்தார்: சிகிச்சை வேலையில் எங்களைப் பழக்கினார். பணியாற்றத் தகுதியானவர்கள் என்று மருத்துவச் சான்றிதழ்கள் நாங்கள் பெற்றோம். திரு. லாப்டன், காலஞ்சென்ற திரு. எஸ்கோம்பே எங்கள் திட்டத்தை மிகவும் உற்சாகமாக ஆதரித்தார். முடிவில், போர்முனைச் சேவைக்கு நாங்கள் விண்ணப் பித்தோம்.

எங்கள் படையில் 1,100 பேர்கள்; அதில் 40 தலை வர்கள். 300 பேர் சுயேச்சை இந்தியர்கள்; ஏனையோர் ஒப்பந்தக்காரர்கள். டாக்டர் பூத்தும் எங்களோடு இருந்தார். இப்படை திறம்பட வேலை செய்தது. எங்க ளது வேலை சுடுகின்ற எல்லைக்கு அப்பால் இருந்தாலும், செஞ்சிலுவையின் பாதுகாப்பு இருந்தாலும், ஒரு நெருக் கடியான நிலைமையில் சுடுகின்ற எல்லைக்குள் சேவை செய்யுமாறு நாங்கள் வேண்டப்பட்டோம். இவ்வாறு ஒதுக்குமாறு நாங்கள் ஒன்றும் கேட்டுக்கொள்ளவில்லை. சுடுகின்ற எல்லையில் நாங்கள் இருக்கவேண்டாம் என் பது அதிகாரிகளின் திட்டம். ஸ்பியன்கோப் போருக்குப் பின் நிலைமை மாறியது. தளபதி புல்லர், அவ்வபா யத்தை ஏற்க நாங்கள் கட்டுப்படாவிட்டாலும், அவ் வாறு நாங்கள் செய்து போர்க்களத்திலிருந்து காயம் பட்டோரைக் கொண்டுவந்தால், அரசாங்கம் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள், என்ற செய்தியைச் சொல்லி அனுப்பினார். எங்களுக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. எனவே, ஸ்பியன்கோப் போரில், சுடுகின்ற எல் லைக்குள் நாங்கள் பணியாற்றி வந்தோம். அக்காலத்தில் காயம்பட்டோரைக் கட்டிலில் தூக்கிக்கொண்டு, தினந் தோறும் இருபதிலிருந்து இருபத்தைந்து கல் வரை நடக்கவேண்டி இருக்கும். காயம்பட்டோரில் தளபதி உட்கேட் போன்ற பட்டாளக்காரர்களைச் சுமந்து வந்த

பெருமை எங்களுக்கு உண்டு. ஆறுவார சேவைக்குப் பின் எங்கள் படை கலைக்கப்பட்டது.

அச்சமயத்தில் எங்களுடைய பணிவான சேவை பெரிதும் பாராட்டப்பட்டது. இந்தியர்களுடைய மரியாதையும் உயர்ந்தது. தினத்தாள்கள், "சாம்ராஜ்யத்தின் மக்களே நாம் அனைவரும்," என்ற பல்லவியோடு பாராட்டுப் பாக்களைப் பிரசுரித்தன.

தளபதி புல்லர், தனது முடங்கலில் எங்கள் படையின் சேவையைப் பாராட்டி எழுதினார். தலைவர்களுக்குப் போர்ப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்தியர்கள் மேலும் ஒன்றாக ஆனார்கள். ஒப்பந்தத் தொழிலாளிகளோடு நான் மேலும் நெருங்கிப் பழகினேன். அவர்களுக்குள் புதியதொரு உணர்ச்சி ஏற்படலாயிற்று; இந்துக்கள், முசல்மான்கள், கிரிஸ்தவர்கள், தமிழர், குஜராத்தி, சிந்தியர் ஆகிய அனைவரும் இந்தியரே, ஒரே தாய்நாட்டின் மக்கள் என்ற உணர்ச்சி அவர்களிடையே ஆழமாக வேரூன்றலாயிற்று. இந்தியர்களுடைய குறைபாடுகள் நிச்சயமாக நீங்கிவிடும் என்று ஒவ்வொருவரும் நம்பினார்கள். அச்சமயத்தில், வெள்ளையர்களுடைய மனோபாவத்திலும் தெளிவான மாறுதல் ஏற்பட்டிருந்ததாகத் தோன்றியது. போர்க்காலத்தில், வெள்ளையர்களோடு இருந்த உறவு மிகவும் இனிமையானது. ஆயிரக்கணக்கான வெள்ளைச் சிப்பாய்களோடு நாங்கள் பழகினோம். அவர்கள் எங்களோடு சிநேக பாவமாக இருந்தார்கள்; அவர்களுக்குப் பணியாற்ற நாங்கள் அங்கு இருந்ததற்கு நன்றி உள்ளவர்களாக இருந்தார்கள்.

சோதனைக் காலத்தில், மனித உள்ளம் எப்படிச் சிறப்பாகத் திகழ்கிறது என்பதைக் காட்டும் ஒரு இனிய நிகழ்ச்சியை நான் இங்குப் பதிவுசெய்யாமல் இருக்கமுடியாது. ராபர்ட்ஸ் பிரபுவின் மகன், லெப்டினன்ட் ராபர்ட்ஸ் உயிர்க்காயப் பட்டிருந்த சீவ்லி முகாமுக்கு,

நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். அவ்வுடலைச் சுமந்து வந்த பெருமை எங்கள் படையைச் சாரும். நாங்கள் போன தினம், மிகவும் புழுக்கமான நாள். ஒவ்வொருவருக்கும் தாகமாக இருந்தது. எங்கள் வழியில் ஒரு சிறிய ஓடை இருந்தது. அதில் எங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம். ஆயின், யார் முதலில் குடிப்பது? வெள்ளைச் சிப்பாய் குடித்தபின் நாங்கள் குடிக்க வருகிறோம் என்றோம். ஆனால் அவர்கள் முதலில் குடிக்க மறுத்து, எங்களைக் குடிக்குமாறு சொன்னார்கள்; சிறிது நேரம், ஒவ்வொருவரும் மற்றொருவரை முதலில் நீர் குடிக்கச் சொல்லும் இனிய போட்டி நிகழ்ந்தது.

34

சுகவழிச் சீர்திருத்தம்

சமூகத்தின் குறைபாடுகளை மறைப்பதோ, அவற்றிற்கு அனுசரணையாக இருப்பதோ, அல்லது அதன் குற்றங்களைக் களையாது, உரிமைகளை வற்புறுத்துவதோ, எப்பொழுதும் நான் விரும்புவதன்று. எனவே நான் நேட்டாலில் குடி அமைத்த காலத்தில் இருந்தே, சமூகத்தின்மேல் சாட்டப்பட்ட சிறிது உண்மையோடு கூடிய அக்குற்றங்களைப் போக்குவதற்குப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தியர்கள் தங்கள் பழக்க வழக்கங்களில் ஆபாசமாக இருப்பதாகவும், தங்கள் வீட்டையும் சுற்றுப்புறங்களையும் துப்புரவாக வைத்துக் கொள்வதில்லை என்றும் அவர்கள் மீது அடிக்கடி குற்றம் சாட்டுவதுண்டு. எனவே, சமூகத்தின் பிரமுகர்கள் தங்கள் வீடுகளைச் சீர்படுத்த ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டனர். ஆனால் டர்பானில் பிளேக் கிளம்பிவிடும் என்று தெரிவிக்கப்பட்ட போதுதான் வீடுதோறும் பார்வை இடுதல் மேற்கொள்ளப்பட்டது. எங்களுடைய ஒற்றுமைப்பை

விழைந்த நகரத் தந்தையர்களைக் கலந்துகொண்டு, அவர்களுடைய அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னரே, இது செய்யப்பட்டது. எங்களுடைய ஒத்துழைப்பு அவர்களுடைய வேலையை எளிதாக்கியது; எங்களுடைய சிரமங்களையும் குறைத்தது.

ஆனால் எனக்குச் சில கடுமையான சோதனைகள் ஏற்பட்டன; இந்தியச் சமூகம், அதன் உரிமைகளைப் பெறுவதற்குப் பாடுபடும்போது நான் அவர்களிடமிருந்து பெற்ற உதவியை, தமது கடமைகளை ஆற்றுமாறு செய்வதில், நான் பெறுவது எளிதில்லை என்பதைக் கண்டேன். சில இடங்களில் அவமானத்திற்கு ஆளானேன்; வேறு இடங்களில் மரியாதையான பராமுகத்திற்கு ஆளானேன்; தங்கள் சுற்றுப்புறங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ள அவர்கள் முற்படுவது என்பது அவர்களுக்கு மிதமிஞ்சிய காரியமாக இருந்தது. அவ்வேலைக்கு அவர்கள் பணம் சேகரிப்பார்கள் என்பதை எதிர்பார்ப்பதும் முடியாத காரியம். இவ் அனுபவங்கள், முன்னைவிட, அளப்பரிய பொறுமை இன்றி மக்களை எவ்வேலையும் செய்யுமாறு செய்வது அசாத்தியம், என்றதை எனக்குக் கற்பித்தன. சீர்திருத்தத்திற்கு அவசரப்படுத்துவது சீர்திருத்தவாதியேயன்றி, சமூகம் அல்ல; அவன் அச்சமூகத்திலிருந்து எதிர்ப்பு, வெறுப்பு, துன்புறுத்தல், இவைகளைத் தவிரப் பிறிதொன்றையும் எதிர்பார்க்கக் கூடாது. உயிரனையது என்று சீர்திருத்தவாதி கொள்ளும் ஒன்றைப், பிற்போக்கானது என்று ஏன் சமூகம் கருதலாகாது?

என்றாலும் இக்கிளர்ச்சியின் பயனாக, தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தைச் சமுதாயம் ஏறக்குறைய ஏற்றுக்கொள்ள முற்பட்டது. அதிகாரிகளுடைய நன்மதிப்பை நான் பெற்றேன். அவர்களுடைய குறைபாடுகளை வெளிப்படுத்தி உரிமைகள் பெறுவதற்

காக வற்புறுத்துவதே என் வேலையாகக் கொண்டிருந்தாலும், நம்மை நாமே தூய்மைப்படுத்துவதையும் நான் வற்புறுத்துகிறேன் என்பதையும் அவர்கள் (அதிகாரிகள்) அறியலானார்கள்.

35

விலை உயர்ந்த வெகுமதிகள்

போர்ப் பணியிலிருந்து விடுதலை பெற்று வந்ததும், இனிமேல் எனது வேலை தென் ஆப்பிரிக்காவில் இல்லை என்றும், இந்தியாவிலேயே இருக்கிறது என்றும் உணர்ந்தேன். இந்தியாவில் உள்ள நண்பர்களும் என்னை வருமாறு வற்புறுத்தி வந்தார்கள். நானும், இந்தியாவிலே அதிக சேவை செய்ய வேண்டும் என்று உணர்ந்தேன். எனவே, எனது சக ஊழியர்களை என்னை விடுவிக்குமாறு வேண்டினேன். மிகுந்த சிரமத்தின் பேரில், எனது வேண்டுகோள் ஒரு நிபந்தனையோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிபந்தனை : ஒரு ஆண்டுக்குள், சமூகத்துக்கு எனது சேவை தேவையாக இருந்தால், நான் தென் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பப் போகத் தயாராக இருக்க வேண்டும் என்பதாகும். பல இடங்களில் பிரிவு உபசாரக் கூட்டங்கள் நிகழ்ந்தன. விலை உயர்ந்த பரிசுகள் வெகுமதியாக எனக்கு வழங்கப்பட்டன. வெகுமதிகளில் தங்கம் வெள்ளிச் சாமான்களும் உள்ளன ; விலைஉயர்ந்த வைரச் சாமான்களும் இருந்தன.

இவ்வெகுமதிகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள எனக்கு என்ன உரிமை இருக்கிறது? சமூகத்திற்கு ஊதியம் இன்றி உழைப்பதாக நான் எப்படிக் கருதிக்கொள்ள முடியும்? எனது கட்சிக்காரர்கள் கொடுத்த சிலவற்றைத் தவிர, மற்ற வெகுமதிகள் அனைத்தும், எனது சமுதாய சேவைக்காகவே வழங்கப்பட்டன ; எனது கட்சிக்காரர்

கள்—சக ஊழியர்கள் என இவர்களிடை நான் வேற்றுமை பாராட்டுமாறில்லை. ஏனெனில் எனது கட்சிக்காரர்களும் என் பொதுப் பணியில் எனக்கு உதவி புரிந்துள்ளார் கள்.

என் மனைவிக்காகக் கொடுக்கப்பட்ட 50 பவுண் விலை பெறுமானம் உள்ள தங்கச் சங்கிலி வெகுமதிகளில் ஒன்று. ஆனால் அந்த வெகுமதியும்கூட, என்னுடைய பொது சேவைக்காகத்தான் கொடுக்கப்பட்டது. எனவே, மற்றவைகளில் இருந்து அதையும் பிரிக்கமுடியாது.

இவற்றில் பெரும்பாலானவைகள் வழங்கப்பட்ட அன்று இரவு நான் தூக்கம் இன்றிக் கழித்தேன். ஆழ்ந்த மனக்கிளர்ச்சியோடு அறையில் மேலும் கீழும் நடந் தேன்; ஆனால் இதற்கு ஒரு வழி தென்படவில்லை. நூற்றுக்கணக்கில் பெறுமானம் உள்ள வெகுமதிகளை விட்டுவிடுவது என்பது கடினமே; ஆனால் அவைகளை வைத்திருப்பதோ அதனினும் கடினம்.

அவைகளை நான் வைத்திருந்தாலும், என் குழந்தை களைப் பற்றி என்ன? மனைவியைப் பற்றி எப்படி? அவர்கள் சேவை வாழ்க்கைக்காகவும், சேவைக்குச் சேவையே பலன் என்ற உணர்வு பெறுவதற்காகவும், பயிலப்பட்டு வருகிறார்கள்.

எங்கள் வீட்டில் விலை உயர்ந்த நகைகள் கிடையா. எங்கள் வாழ்க்கையை விரைவாக எளிமை ஆக்கி வருகி றோம். எனவே நாங்கள் எப்படித் தங்கக் கடிகாரங்களை யும் வைர மோதிரங்களையும் வைத்திருக்க முடியும்? நகைகள் மேலுள்ள மோகத்தை வெல்லுங்கள் என்று அப்பொழுதே நான் மக்களை வேறு வேண்டிக்கொண் டிருக்கிறேன். இப்பொழுது, என்பால் வந்துள்ள இந்த நகைகளை நான் என்ன செய்வது?

அவைகளை நான் வைத்திருக்க முடியாது என்று தீர் மானித்து விட்டேன். சமுதாயத்திற்காகத் தருமம் ஏற் படுத்தி, பார்சிரஸ்டம்ஜியையும் ஏனையோரையும் தரும

கருத்தாக்களாக நியமித்து ஒரு சாஸனம் எழுதினேன். காலையில், எனது மனைவி மக்களோடு கலந்தேன். இறுதியில், இப்பெரும் பாரத்தை என்னிடமிருந்து கழற்றிக் கொண்டேன்.

எனது மனைவியைத் திருப்திப் படுத்துவதில் எனக்குக் கொஞ்சம் சிரமம் இருக்கும் என்பதறிவேன். ஆனால் என் குழந்தைகள் சம்பந்தப்பட்டவரையில் யாதொரு சிரமமும் இராது என்று நிச்சயமாய்த் தெரியும். எனவே எனக்காகப் பேசுவதற்கு அவர்களை எனது வக்கீல்களாக நியமிக்க முடிவு செய்தேன்.

குழந்தைகள் எனது ஆலோசனையை உடனே ஏற்றுக்கொண்டார்கள். "இந்த விலை உயர்ந்த வெகுமதிகள் நமக்குத் தேவை இல்லை. அவற்றைச் சமுதாயத்திற்குத் திரும்பக் கொடுத்துவிடவேண்டியதுதான். எப்பொழுதேனும் தேவையாக இருந்தால், எளிதாக நாம் வாங்கிக்கொள்ளலாம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

நான் மகிழ்வுற்றேன். "அப்பொழுது நீங்கள் தாயாரோடு எனக்காக வாதிப்பீர்கள். செய்வீர்களா? என்று அவர்களை நான் கேட்டேன். "நிச்சயமாக அது எங்கள் வேலை. அம்மாள் அவைகளை அணிய அவசியம் இல்லை. எங்களுக்காக வைத்திருக்கவே விரும்புவார்கள்: எங்களுக்குத் தேவை இல்லை என்றால், அவைகளைக் கொடுத்துவிட ஏன் சம்மதிக்கக்கூடாது?

ஆனால் சொல்லுவது எளிது, செய்வது கடினம்.

என் மனைவி சொன்னாள்: "அவைகள் உங்களுக்குத் தேவை இல்லாமல் இருக்கலாம், உங்கள் பிள்ளைகளுக்கும் தேவை இல்லாமல் இருக்கலாம். தட்டிக்கொடுத்தால், உங்கள் தாளத்திற்கு ஏற்பக் கூத்தாடுவார்கள். நான் அணிவதற்கு நீங்கள் சம்மதிக்காமல் இருப்பது எனக்கு அருத்தமாகிறது: என்னுடைய மணாட்டுப் பெண்களைப்பற்றி என்ன? நிச்சயமாக அவர்களுக்கு அவைகள் வேண்டும். மேலும் நாளை என்ன நடக்கும்

என்று யார் அறிவார்? இவ்வளவு அன்போடு கொடுத்த வெகுமதிகளைக் கொடுக்க நான் இணங்க முடியாது.''

இவ்வாறு வாத மழை பொழிந்தது; அதனோடு இறுதியில் கண்ணீர் மழையும் கலந்தது. ஆனால் பிள்ளைகள் உறுதியாக இருந்தார்கள். நானும் அசைய வில்லை.

நான் மெள்ளச் சொன்னேன்: ''குழந்தைகளுக்கு இனிமேல்தானே கலியாணம். அவர்கள் குழந்தைகளாக இருக்கும்போதே மணம் செய்வதை நாம் விரும்பவில்லை. அவர்கள் வயதுவந்த பின்னர், தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளுவார்கள். மேலும் நகைகளில் மோகம் கொள்ளும் பெண்களை நம் பிள்ளைகளுக்கு மனைவி மார்களாக நாம் நிச்சயமாகக் கொள்ளப்போவதில்லை. அப்படி அவர்களுக்கு நகைகள் போடவேண்டும் என்று ஏற்பட்டால், நான் இருக்கிறேன். அப்பொழுது நீ என்னைக் கேட்கவேண்டியதுதானே!

''என்ன, உங்களைக் கேட்கவா? இதற்குள்ளாக உங்களை எனக்குத் தெரியுமே. எனது நகைகளை எல்லாம் பிடுங்கினீர்கள். அவைகளை வைத்திருக்க என்னை விட வில்லை. இனி மருமக்களுக்கு நகை வாங்கிக் கொடுக்க முன்வருவதைப் பார்க்க வேண்டுமே, இப்பொழு திருந்தே பையன்களைத் துறவி ஆக்க முயன்று வருகிற நீங்கள்! முடியாது. நகைகளைத் திரும்பித்தர முடியாது. மேலும், இந்த என் கழுத்துச் சங்கிலியில் உங்களுக்கு என்ன உரிமை, சொல்லுங்கள்?

''ஆனால், இந்தக் கழுத்துச் சங்கிலியை உனக்குக் கொடுத்து உன் சேவைக்காகவா, என் சேவைக்காகவா?'' என்று வினவினேன்.

''நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் நீங்கள் ஆற்றிய சேவை, நான் ஆற்றிய சேவையைப் போலத் தானே. இரவும் பகலும் உங்களுக்காக உழைத்து வந்தேனல்லவா? அது சேவை இல்லையா? யார் எல்

லாமோ கொண்டு வந்து சுமத்தினீர்கள் ; என்னை இரத்தக் கண்ணீர் விடும்படி செய்தீர்கள். அவர்களுக் கெல்லாம் தொண்டு செய்தேனே !''

இவைகள் என்னைக் குத்தி எடுக்கும் சொற்கள் ; சில உள்ளத்தில் பாய்ந்தன. ஆனால், அணிகளைத் திரும்பக் கொடுத்துவிடுவதாக உறுதி பூண்டிருந்தேன். அவள் சம்மதத்தை எப்படியோ பெறுவதில் வெற்றி பெற்றேன். 1896-லும் 1901-லும் பெற்ற வெகுமதிகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப் பட்டன. ஒரு தரும சாஸனம் தயார் செய்யப்பட்டது ; நகைகள் ஒரு வங்கியில் பாது காப்பாக வைக்கப்பட்டன. என்னுடைய அல்லது தருமகருத்தாக்களுடைய விருப்பத்திற்கு இணங்க, சமுதாய நலனுக்காக அவைகள் உபயோகிக்கப்பட வேண்டும் என்று அதில் கண்டிருந்தது.

பொதுக் காரியங்களுக்காகப் பணம் தேவை இருந்த சமயங்களில், இந்தத் தருமத்திலிருந்து பணம் எடுக்க வேண்டும் என்று நான் உணர்ந்தபோது, தரும நிதியை அப்படியே வைத்துக் கொண்டு, அதன்பேரில் வேண்டிய பணத்தை வாங்க முடிந்திருக்கிறது. தேவையான சமயங்களில் பணத்தை எடுத்துக்கொண்டு, அந்த நிதி இன்னும் அப்படியே இருக்கிறது ; ஒழுங்காக வளர்ந்து கொண்டு வருகிறது.

இந்த எனது நடவடிக்கையைப் பற்றி நான் பின்னர் எப்பொழுதும் வருந்தியதே கிடையாது. காலம் செல்லச் செல்ல, இதன் நியாயத்தன்மையை என் மனைவியும் அறியலானாள். பல ஆசைப்பாடுகளி லிருந்து இது எங்களைக் காப்பாற்றியது.

பொது ஊழியர் விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதே எனது உறுதியான கருத்து.

பகுதி VII
மீண்டும் இந்தியாவில்

36
எனது முதல் காங்கிரஸ்

இந்தியாவிற்கு வந்த பின்னர், நாட்டைச் சுற்றி வருவதில் சிலகாலம் கழித்தேன். 1901-ம் ஆண்டு கல்கத்தாவில், (பின்னர் 'சர்' ஆன) திரு. தின்ஷா வாச்சாவின் தலைமையில் காங்கிரசு கூடியது. நான் அதற்குச் சென்றிருந்தேன். அதுதான் எனக்குக் காங்கிரசில் முதல் அனுபவம்.

நான் எங்கே போகவேண்டும் என்று ஒரு தொண்டரைக் கேட்டேன். பிரதிநிதிகள் பலர் தங்கி இருந்த ரிப்பன் கல்லூரிக்கு அவர் என்னைக் கூட்டிச் சென்றார். தொண்டர்கள் ஒருவரை ஒருவர் மோதிக் கொண்டிருந்தனர். ஏதாவது ஒரு காரியம் செய்யுமாறு ஒரு தொண்டரைக் கேட்டால், அவர் இன்னொருவரிடம் தள்ளிவிடுவர். அவரும் மற்றொருவரிடம் ...... இப்படியாக. பிரதிநிதிகளோ என்றால், அவர்கள் இங்குமில்லை, அங்குமில்லை !

அசங்கியத்திற்கு அளவே இல்லை. எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கிக் கிடந்தது ; கக்கூசுகள் மிகச் சிலவே இருந்தன. அவைகளின் வீச்சத்தை நினைத்தாலும் இன்னும் அசங்கியமாக இருக்கிறது. தொண்டர்களிடம் இதைச் சுட்டிக் காட்டினேன். அவர்கள் திட்டவட்டமாக, "இது எங்கள் வேலை அல்ல; தோட்டிகளுடைய வேலை" என்று சொன்னார்கள். அவர்களிடம் ஒரு விளக்குமாறு தருமாறு கேட்டேன். அம்மனிதன் என்னை ஆச்சரியத்தோடு உற்று நோக்கினான். ஒரு

விளக்குமாறு பெற்றுக், கக்கூசைச் சுத்தம் செய்தேன். ஆனால் அது எனக்கு மட்டுமே. கூட்டம் அதிகம்; கக்கூசுகள் குறை; எனவே அவைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படவேண்டும்; ஆனால் அது என் சக்திக்கு அப்பாற்பட்டது.

காங்கிரஸ் பேரவை தொடங்க இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. அனுபவம் அடைவதற்காக, எனது சேவையைக் காங்கிரசு அலுவலகத்துக்கு உதவத் தீர்மானித்தேன். பாபு புபேந்திரநாத் பாசு, திரு. கோசால், செயலாளர்களாக இருந்தனர். நான் பூபன் பாபுவிடம் சென்று எனது சேவையை அளிக்க முன் வந்தேன். என்னை அவர் ஏறிட்டுப் பார்த்து, "உங்களுக்கு என்னிடம் வேலை இல்லை. ஆனால், ஒருக்கால், உங்களுக்கு வேலை கொடுக்கக் கோசல் பாபுவிடம் ஏதாவது இருக்கலாம். தயவுசெய்து அவர்களிடம் போங்கள்" என்றார்.

எனவே, அவரிடம் சென்றேன். அவர் என்னை உற்று நோக்கிப் புன்புறுவலோடு சொன்னார், "குமஸ்தா வேலைதான் உங்களுக்கு நான் தர இயலும். அதை உங்களால் செய்ய முடியுமா?"

"பேஷாக, எனது சக்திக்கு அப்பாற் போகாத எந்த வேலையும் நான் செய்யத் தயார்." என்றேன்.

"அதுதான் சரியான மனப்பான்மை, இளைஞரே!" என்றார். மேலும் அவர், தன்னைச் சுற்றி நின்ற தொண்டர்களை விளித்து, "இந்த இளைஞர் சொன்னதை நீங்கள் கேட்டீர்களா?" என்றார்.

பின், என்பக்கம் திரும்பிப் பகன்றார்: "சரி, இதோ கடிதக் குவியல்கள்: அந்த நாற்காலியை எடுத்துக் கொண்டு, ஆரம்பியுங்கள். நீங்கள் இதோ காணுவதுபோல் நூற்றுக்கணக்கானவர் என்னைப் பார்க்க வருகிறார்கள். நான் என்ன செய்ய? நான் இவர்களைச் சந்தித்துப் பேசவா? அல்லது வெள்ளம்

பேர்ல் நிறைந்துள்ள பெரியவர்களின் இக்கடிதங்களுக்குப் பதில் எழுதவா? இவ்வேலைகளை ஒப்படைக்க, என்னிடம் குமாஸ்தாவும் கிடையாது. இக்கடிதங்களில் பெரும்பாலானவற்றில் காரியம் ஒன்றும் இருக்காது; ஆனால் தயவுசெய்து அவைகளை முழுதும் படியுங்கள். பதிலுக்கு உரியவைகளுக்குக், கடிதம் வந்து சேர்ந்ததான பதில் எழுதுங்கள். யோசித்துப் பதில் எழுத வேண்டியவைகளை என்னிடம் கேளுங்கள்.''

என்னிடம் அவர் வைத்த நம்பிக்கை, எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது.

திரு. கோசால் எனக்கு இவ்வேலையைத் தரும்போது அவருக்கு என்னைத் தெரியாது. பின்னர்தான் அவர் என்னுடைய தகுதிகளைக் கேட்டு அறிந்து கொண்டார். என் வரலாற்றைப்பற்றி அவர் என்னிடமிருந்து சில தெரிந்துகொண்டபோது, குமாஸ்தாவின் வேலை எனக்குக் கொடுத்ததற்காக அவர் வருத்தப்பட்டார். ஆனால் அவருக்கு நான் உறுதி கூறினேன் :—'' தயவு செய்து கவலைப்பட வேண்டாம். உங்கள் முந்நிலையில் நான் யார்? காங்கிரசின் சேவையில் நீங்கள் தலை நரைத்து விட்டீர்கள்; எனக்கு நீங்கள் மூத்தவர்போல. நானோ அனுபவமில்லாத ஒரு இளைஞன். இப்பணியை நீங்கள் எனக்குத் தந்ததற்காக நான் உங்களுக்கு மிகவும் கடப்பாடுடையேன். ஏனெனில், நான் காங்கிரசு சேவை செய்ய விரும்பினேன். விவரங்களை அறிந்து கொள்ளக் கூடிய அரியதொரு வாய்ப்பினை நீங்கள் எனக்கு அளித்துள்ளீர்கள்.'' இவ்வாறு நாங்கள் சிறந்த நண்பரானோம்.

திரு. கோசாலின் மேல் அங்கிப் பொத்தானை அவருடைய பணியாள் மாட்டி விடுவது வழக்கம். அப்பணியாள் வேலையை நான் செய்ய முன்வந்தேன். பெரியோரிடம் எனக்குள்ள மதிப்பு என்றும் பெரிது ஆகையால், இப்பணியினை நான் செய்வதில் பிரியமுற்றேன். இதனை

அவர் அறியநேர்ந்தபோது, அவருக்கு நான் இத்தகைய சிறிய பணிவிடைகள் செய்வதைத் தடுக்கவில்லை. உண்மையில் அவர் மகிழ்ச்சி உற்ருர். இப் பணியினுல் நான் பெற்ற பலனே மதிப்பிடலரியது.

சில நாட்களில், காங்கிரசின் வேலையைப்பற்றி நான் அறிந்து கொள்ளலானேன். தலைவர்களில் பலரை நான் சந்தித்தேன். கோகலே, சுரேந்திரநாத் போன்ற தீரர் களின் நடவடிக்கைகளை நான் ஊன்றி நோக்கினேன். ஆங்கு மிகுதியான கால விரயமாவதையும் கண்டேன். நமது காரியங்களில் ஆங்கிலமொழி வகித்து வரும் பிரதான நிலையையும், அப்பொழுதே வருத்தத்தோடு, கவனித்தேன். சக்திச் செட்டைக் கவனிப்பாரே இல்லை. ஒருவர் செய்யக் கூடிய வேலையை, ஒருவருக்கதிகமான பேர்களே செய்தார்கள்; முக்கியமான வேலைகள் பல, யாருமே செய்யாது கிடந்தன.

இவைகளை என் மனம் ஊன்றிக் கவனித்துக் கண்டிப்பதாக இருப்பினும், என்னிடம் போதிய கருணை யும் கலந்திருந்தது. எனவே, இந்தச் சூழ்நிலையில், இதனினும் நன்ருகச் செய்வது அசாத்தியமானதாகவே இருக்கலாம் என்றே நான் எப்பொழுதும் கருதி வந்தேன். இது, நான் எப்பணியையும் குறைத்து மதிப்பிடாதபடி, என்னைக் காத்து வந்தது.

சர் பிரோசிஷா, தென் ஆப்பிரிக்காவைப் பற்றிய எனது தீர்மானத்தைக் கொண்டுவர ஒத்துக்கொண்டார். ஆனால், இதை விஷய ஆலோசனைக் கமிட்டி முன்னர் யார், எப்பொழுது, கொண்டுவரப் போகிருர்களென்று நினைத்த வண்ணமிருந்தேன். ஏனென்ருல் ஒவ்வொரு தீர்மானித்தின் பேரிலும் நீளமான சொற்பொழிவுகள்,—அவையும் ஆங்கிலத்தில்,—நிகழ்ந்தன. ஒவ்வொரு தீர் மானத்தையும் ஆதரிக்க யாராவது ஒரு பிரபலத் தலைவர் இருந்தார். இந்தப் பிரபல பேரிகை முழக்கங்களின் நடுவில், என்னுடைய குரலோ ஈன சுரமுள்ள நாதசுரம்.

இரவு நேரமாக ஆக, என் இதயம் வேகமாக அடிக்கலாயிற்று. ஒவ்வொருவரும் கிளம்புதற்குத் துரிதப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மணி இரவு 11. பேசுவதற்கு எனக்குத் தைரியம் இல்லை. கோகலேயே நான் சந்தித்திருந்தேன். அவர் என் தீர்மானத்தைப் பார்த்து இருந்தார். எனவே அவர் நாற்காலி அருகில் சென்று, "என் காரியத்திற்கு ஏதாவது செய்யுங்கள்," என்று காதோடு சொன்னேன்.

"ஆகவே, எல்லாம் முடிந்தது." என்றுர் சர் பிரோசிஷா மேத்தா.

"இல்லை, இல்லை, இன்னும் தென் ஆப்பிரிக்காவைப் பற்றிய தீர்மானம் ஒன்று இருக்கிறது. காந்தி நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிருர்," என்று கூவினுர் கோகலே.

"அத்தீர்மானத்தை நீங்கள் பார்த்துள்ளீர்களா?" என்று சர் பிரோஸஷா கேட்டார்.

"ஆமாம்."

"உங்களுக்குப் பிடித்தம்தானு?"

"அது மிக நன்ருக இருக்கிறது."

"சரி, அப்படியானுல் அதை ஏற்றுக்கொள்வோம் காந்தி."

அதை நடுக்கத்துடன் நான் படித்தேன். கோகலே ஆதரித்தார்.

"ஒருமனதாக நிறைவேறியது," என்று எல்லோரும் கூவினுர்கள்.

"இந்தத் தீர்மானத்தைப் பற்றி நாளைப் பேச உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் உண்டு, காந்தி," என்றுர் திரு. வாச்சா.

இந்த நடவடிக்கை எனக்குச் சிறிதும் மனநிறைவு அளிக்கவில்லை. இத் தீர்மானத்தை அறிந்துகொள்ள யாருமே சிரத்தை எடுத்து கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் கிளம்பிப் போகவே துரிதப்பட்டுக் கொண்டிருந்

தனர். கோகலே தீர்மானத்தைப் பார்த்துவிட்டபடியால், மற்றவர்கள் அதனைப் பார்க்கவோ, அறிந்துகொள்ளவோ அவசியமில்லை என்று கருதப்பட்டது போலும்!

மறுநாட் காலை எனது சொற்பொழிவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஐந்து நிமிடங்களில் நான் என்ன சொல்ல முடியும்? நான் சுமாராக நன்ருகத் தயார் பண்ணிக் கொண்டிருந்தேன்; ஆனுல் வார்த்தைகள் வரவில்லை. எப்படியோ தீர்மானத்தைப் படித்தேன். வெளிநாட்டுக் குடியேற்றத்தைப் புகழ்ந்து தானெழுதிய பாடலின் பிரதிகளை யாரோ ஒருவர் அச்சடித்துப் பிரதிநிதிகளிடம் வழங்கி இருந்தார். அப்பாடலை நான் படித்து, தென் ஆபிரிகாவில் குடியேறியவர்களின் கஷ்டங்களைக் குறிப்பிட்டேன். இச்சமயத்தில் திரு. வாச்சா மணியை அடித்தார். நான் ஐந்து நிமிடங்கள் பேசியாகவில்லை என்பது எனக்கு நிச்சயம். இன்னும் இரண்டு நிமிடங்களில் என் பேச்சை முடித்துவிட வேண்டும் என்பதை எச்சரிப்பதற்காக அம்மணி அடிக்கப்பட்டது என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது. மற்றவர்கள் அரைமணி, முக்கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டிருக்கிறேன்; என்ருலும் அவர்களுக்கு மணி ஒன்றும் அடிக்கப்படவில்லை. எனக்கு இது தைத்தது; மணி அடித்த உடனே நான் அமர்ந்து விட்டேன்.

தீர்மானம் நிறைவேற்றப் படுவதைப் பற்றிக் கேள்வியே இல்லை. அந்த நாளில், பார்வையாளர்கள், பிரதிநிதிகள் என்ற வேறுபாடே இல்லை. எல்லோரும் கையை உயர்த்துவார்கள். தீர்மானங்கள் எல்லாம் ஒருமனதாக நிறைவேறும். எனது தீர்மானமும் இதே கதியை அடைந்தது; எனவே என்னளவில் அது அதனுடைய எல்லா முக்கியத்துவத்தையும் இழந்தது. ஆயினும் இது காங்கிரசால் நிறைவேற்றப்பட்டது என்ற ஒன்றே எனது உள்ளத்தை மகிழ்விக்கப் போதுமானது.

காங்கிரசின் முத்திரை, தேசத்தின் முத்திரை என்ற ஞானமே, யாருக்கும் மகிழ்ச்சிதரப் போதுமானது.

37

கர்சான் பிரபுவின் தர்பார்

காங்கிரஸ் முடிவுற்றது. ஆனால் தென் ஆபிரிக்கா வில் என் வேலை சம்பந்தமாக வணிகர் குழுவையும், மற்றவர்களையும் நான் பார்க்கவேண்டி இருந்ததால், ஒரு மாதம் கல்கத்தாவில் தங்கினேன். ஒரு விடுதியில் தங்குவதற்குப் பதிலாக, 'இந்தியா கிளப்'பில் ஒரு அறை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய அறிமுகம் பெற்றேன். அதன் உறுப்பினர்களில் இந்தியப் பிரமுகர் கள் பலர் இருந்தனர். அவர்களோடு பழகி, தென் ஆபிரிக்கா வேலையில் அவர்கள் அக்கறை கொள்ளுமாறு செய்யவேண்டும் எனக் கருதினேன்.

இச்சமயத்தில் கர்சான் பிரபு தனது தர்பாரை நடாத்தினர். தர்பாருக்கு அழைக்கப்பட்ட ராஜாக்கள், மகாராஜாக்களில், சிலர் 'கிளப்'பின் உறுப்பினர்களாக வும் இருந்தார்கள். 'கிளப்'பில் அவர்கள், மெல்லிய வங்காளி வேஷ்டிகளையும், சட்டைகளையும், அங்க வஸ்திரத்தையுமே அணிந்திருப்பதை எப்பொழுதும் பார்த்திருக்கிறேன். தர்பார் தினத்தன்று அவர்கள், குற்றேவலாளர் போடுவதற்கு லாயக்கான காற்சட்டை களையும், பழபழப்பான பூட்சுகளையும் அணிந்தனர். என் மனம் நொந்து, இம்மாறுதலுக்குக் காரணத்தை அவர்களில் ஒருவரைக் கேட்டேன்.

"எங்களுடைய துரதிர்ஷ்ட நிலையை நாங்களே அறிவோம். எங்களுடைய பட்டங்களையும் சொத்துக் களையும் பாதுகாப்பதற்காக நாங்கள் பொறுத்துக்

கொள்ளவேண்டிய அவமதிப்பு எங்களுக்கே தெரியும்'' என்று அவர் பதில் தந்தார்.

"ஆனால் இந்த வேலைக்காரர்களுக்குரிய தலைப் பாகையும், மின்னும் 'பூட்சு'ம் பற்றி என்ன?'' என்று கேட்டேன்.

"எங்களுக்கும் பணியாட்களுக்கும் வேற்றுமை ஏதாவது காண்கிறீர்களா?'' என்று கேட்டு, மேலும் அவர் சொன்னார், "அவர்கள் எங்களுடைய பணியாட்கள்; நாங்கள் கர்சான் பிரபுவின் பணியாட்கள். நான் இவ்வைபவத்திற்குப் போகாமல் இருந்தால், அதன் விளைவுகளை நான் அனுபவிக்க வேண்டும். எனது வழக்கமான ஆடையோடு சென்றால், அது குற்றமாகும். மேலும், அங்கு கர்சான் பிரபுவோடு நான் பேசும்படியான வாய்ப்பு எதுவும் கிடைக்குமென்று நினைக்கிறீர்களா? கொஞ்சம்கூடக் கிடையாது!''

இப்படி உள்ளத்தைத் துறந்து பேசிய நண்பரிடம் நான் இரக்கம் கொண்டேன்.

இது இன்னொரு தர்பாரை நினைவூட்டுகிறது.

ஹார்டிஞ்சு பிரபு, இந்துப் பல்கலைக்கழகத்து அடிப் படைக்கல் நாட்டிய சமயத்தில், ஒரு தர்பார் நடந்தது. ராஜாக்களும், மகாராஜாக்களும் வந்திருந்தனர். பண்டிதர் மாளவியாஜியின் விசேட அழைப்பின் பேரில் நானும் சென்றிருந்தேன்.

மகாராஜாக்கள் பெண்மணிகளைப்போல் அலங்காரம் செய்துகொண்டிருந்ததைக் கண்டு உளம் நொந்தேன்.—பட்டு பைஜமா, பட்டு மேல்கோட்டு, கழுத்தைச் சுற்றி முத்து மாலைகள், மணிக்கட்டில் காப்புகள், தலைப்பாகையில் வைரப் பதக்கங்கள்—இவைகள் தவிர—அரைக்கச்சுகளிலிருந்து பொன் உறையில் போட்டிருந்த பட்டாக் கத்திகள் தொங்கிக்கொண்டிருந்தன.

இவைகள், அவர்களின் திறமையின் சின்னங்கள் அல்ல என்றும், ஆனால் அடிமைத்தனத்தின் சின்னங்கள்

என்பதையும் அறியலானேன். இந்தச் சக்தியின்மையின் சின்னங்களை அவர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தினாலேயே அணிகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் இத்தகைய வைபவங்களில், தங்களுடைய விலை உயர்ந்த அணிகலங்களை எல்லாம் அவர்கள் கட்டாயமாக அணியவேண்டும் என்றும் கேள்விப்பட்டேன். இவ் ஆபரணங்களை அணிவதில் அவர்களில் சிலருக்கு வெறுப்புக்கூட இருப்பதாகவும் தெரிந்துகொண்டேன். பணம், பதவி, கௌரவம்,—இவைகள் மனிதன் தலையில் எவ்வளவு பளுவான பாவத்தையும் பாரத்தையும் சுமத்துகின்றன!

38

பம்பாயில்

பம்பாயில் நான் தங்கி, நீதி மன்றத்தில் தொழில் புரிந்து, பொதுப் பணியில் தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று கோகலே பெரிதும் விரும்பினார். அந்த நாட்களில், பொதுப் பணி என்றால் காங்கிரசு பணி என்றுதான் பொருள். கோகலேயின் ஆலோசனை எனக்குப் பிடித்தது. ஆனால், வழக்குரைஞனாக நான் வெற்றி அடைவதில் எனக்கு அதிகமான நம்பிக்கை இல்லை. எனது சென்ற காலத் தோல்வியின் இனிமையற்ற நினைவுகள் இன்னும் என்னோடு இருந்தன. எனவே ராஜகோட்டையில் எனது தொழிலைத் தொடங்கினேன்.

ராஜகோட்டையில் சிறிது நீண்ட காலம் தங்கவே திட்டமிட்டிருந்தேன். அப்பொழுது கேவல்ராம் தேவே என்னிடம் வந்து, "காந்தி, நீங்கள் இங்கே வீணே காலம் கழிப்பதற்கு நாங்கள் விடமாட்டோம். நீங்கள் பம்பாயில் தங்க வேண்டும்; பொதுப் பணி செய்வதே தங்கள் கடனாகும். கத்தியவாட்டில் நீங்கள் மறைந்து

கிடப்பதற்கு நாங்கள் இடம் கொடோம். எனவே, எப் பொழுது நீங்கள் பம்பாய்க்குப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்" என்றார்.

"நேதாலில் இருந்து பணம் வருவதை எதிர்பார்த் துக் கொண்டு இருக்கிறேன். அது வந்து சேர்ந்ததும், நான் போகிறேன்" என்றேன். சுமார் இரண்டு வாரங் களில் பணம் வந்தது; நானும் பம்பாய் சென்றேன்.

நான் எதிர்பார்த்ததற்கு மேலாகத் தொழிலில் நான் வளம் உற்றேன். எனது தென் ஆபிரிக்கா நண்பர்கள் அடிக்கடி என்னிடம் சில வேலைகளைக் கொடுத்தார்கள்; அது என் வாழ்க்கையை நடத்தப் போதுமானதாக இருந்தது.

நான் நினைத்தபடி காரியங்கள் ஒழுங்கான முறைக்கு வந்துகொண்டிருக்கிற சமயத்தில், தென் ஆபிரிக்காவி லிருந்து ஒரு எதிர்பாராத தந்தி கிடைக்கப் பெற்றேன்: "இங்கு சேம்பர்லெயின் எதிர்பார்க்கப் படுகிறார். உடனே திரும்பி வருக." எனது வாக்குறுதியை நினைத் துக் கொண்டு, பணத்தை அவர்கள் என் கைவசம் சேர்ப்பித்ததும் நான் புறப்படத் தயார் என்று தந்தி கொடுத்தேன். அவர்கள் உடனே பணம் அனுப்பி னார்கள். தொழிலை விட்டு விட்டு தென் ஆபிரிக்காப் புறப்பட்டேன்.

ஆங்குள்ள வேலை என்னை ஓராண்டாவது இருத்தக் கூடும் என்பது என் கருத்து. எனவே, பங்களாவை வைத்துக்கொண்டு, மனைவி மக்களை அங்கேயே விட்டுச் சென்றேன்.

நாட்டிலே வேலைக்கு வழி இல்லாத துணிச்சலுள்ள இளைஞர்கள் மற்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று நான் அப்பொழுது நம்பினேன். எனவே நாலைந்து இளைஞர்களையும் என்னுடன் கூட்டிச் சென் றேன். அவர்களில் ஒருவர் மகன்லால் காந்தி.

பாகம் VIII

39

மீண்டும் தென் ஆபிரிக்காவில்

தர்பானுக்கு நான் ஒரு நாள் கூட முன்னதாக வரவில்லை. எனக்காக வேலைக் காத்துக்கொண்டிருந்தது. சேம்பர்லெயினைத் தூதுக் குழு காணும் தேதி குறித்தாயிற்று. அவரிடம் சமர்ப்பிக்க விண்ணப்பம் ஒன்றை நான் தயார் செய்து, அவர்களோடு கூடப் போக வேண்டும்.

தென் ஆபிரிக்காவிலிருந்து இனுமாக 3 கோடி பவுணைப் பெறவும், வெள்ளையர்கள், போயர்கள் இவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெறவுமே, திரு. சேம்பர்லெயின் வந்துள்ளார். எனவே, இந்தியத் தூதுக் குழுவுக்கு அவர் சுமுகமான வரவேற்பளிக்கவில்லை.

அவர் சொன்னுர் : " தன்னுட்சியிலுள்ள குடியேற்ற நாடுகளில் ஏகாதிபத்திய அரசாங்கத்துக்கு அதிகாரம் என்றும் கிடையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் குறைபாடுகள் நியாயமானவைகளாகவே தோன்றுகின்றன. என்னுல் இயன்றதைச் செய்கின்றேன். ஆனுல் ஐரோப்பியர்கள் இடையில் நீங்கள் வாழ விரும்பினுல், நீங்கள் அவர்களைச் சமாதானப் படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்."

இந்தப் பதில், தூதுக் குழுவினருக்கு மன அசதியைத் தந்தது. நானும் ஏமாற்றம் அடைந்தேன். எங்கள் எல்லோருக்கும் இது கண்ணைத் திறந்துவிட்டது போலிருந்தது. வேலையை மீண்டும் அடியிலிருந்து புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்று உணர்ந்தேன். நிலைமையை என் சகாக்களுக்கு விளக்கினேன்.

சேம்பர்லெயின், நேதாலில் இருந்து டிரான்சுவாலுக்குச் சென்றுர். அங்கும் இந்தியர்களுடைய கட்சியைத் தயார் செய்து, அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டி இருந்தது. ஆனுல் நான் பிரிட்டோரியாவுக்கு எப்படிப்

போவது? அங்குள்ள நம்முடைய மக்கள் நான் காலா காலத்தில் அங்கு போய்ச் சேருவதற்கான சட்ட சம்பந்த மான சௌகரியங்களைச் செய்யும் நிலைமையில் இல்லை. அந்தப் போயர் போர் டிரான்சுவாலை ஒரு ஓலமிடும் பாலைவனமாகச் சீரழித்து விட்டது. உணவுப் பொருள் களோ, உடைகளோ அங்குக் கிடைப்பதில்லை. கடைகளில் உணவுப் பொருள்கள் வந்து சேரும்வரை அகதிகளைக் கூட அங்கு அனுமதிக்க முடியவில்லை. எனவே ஒவ் வொரு டிரான்சுவால்காரனும் போவதற்கு ஒரு அனு மதிச் சீட்டுப் பெறவேண்டி இருந்தது. அனுமதி பெறு வதில் ஐரோப்பியர்களுக்குச் சிரமம் எதுவும் இல்லை. ஆனால் இந்தியர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நீக்ரோவர்களுக்கு வேறு தனி இலாக்கா இருந்தது. அப்படியே ஆசியவாசிகளுக்கு வேறொரு தனி இலாக்கா; இந்தியர்கள் இந்த இலாக்காவுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். செல்வாக்கு இல்லாமல் அனுமதி பெற முடியாதென்றும், செல்வாக்கு இருப்பினும் சில சந்தர்ப் பங்களில், ஒருவர் நூறு பவுண் வரை கொடுக்க வேண்டும் என்றும் கேள்விப்பட்டேன். எனவே, எனக்கு வழி ஒன் றும் தெரியவில்லை. எனது பழைய நண்பரான தர்பான் போலீஸ் சூப்ரிண்டென்டிடம் சென்று, "அனுமதி அலுவலாளரிடம் என்னை அறிமுகம் செய்வித்து, எனக்கு அனுமதி பெற உதவி புரிக; நான் டிரான்சுவாலில் குடி யிருந்தவன் என்பது உங்களுக்குத்தான் தெரியுமே," என்று சொன்னேன். அவர், உடனே தலையில் தொப் பியை மாட்டிக் கொண்டு, வெளியே வந்து, எனக்கு அனுமதியும் வாங்கித் தந்தார். நான் சூப்ரிண்டென் டென்டு அலெக்சாந்தருக்கு நன்றி தெரிவித்து விட்டு, பிரிட்டோரியாவுக்குப் புறப்பட்டேன்.

பிரிட்டோரியா வந்ததும் விண்ணப்பத்தைத் தயா ரித்தேன். டர்பானில், தூதுப் பிரதிநிதிகளின் பெயர்களை முன்னக்கூடியே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டதாக

நினைவு இல்லை. ஆனால் இங்கே புது இலாகா. அது அவ்வாறு செய்யுமாறு எங்களைக் கேட்டது.

நாங்களும் அப்படியே செய்தோம். எங்களுக்கு ஆசியவாசிகளின் இலாக்காத் தலைவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், நான் ஏற்கெனவே தர்பானில் சேம்பர்லெயினைப் பார்த்துவிட்டபடியால், இங்கு காணப் போகும் தூதுக் குழுவிலிருந்து என் பெயரை நீக்கி விடுவது அவசியமாயிற்று என்று எழுதப்பட்டிருந்தது.

இது எனது சக ஊழியர்களால் தாங்கவே முடிய வில்லை. "உங்களுடைய தூண்டுதலின் பேரிலேயே நமது சமூகம் போரில் உதவி புரிந்தது. அதன் பலனை இப்பொழுது பாருங்கள்," என்ற சொற்களினால் சிலர் என்னை இடித்துக் காட்டினார்கள். ஆனால் அக் குத்துரை என்னைப் பாதிக்கவில்லை. நான் சொன்னேன்: "என்னுடைய ஆலோசனைக்கு நான் வருந்தவில்லை. போரில் நாம் பங்கு கொண்டது நல்லது என்றே இன்னும் நான் சாதிப்பேன். அப்படிச் செய்ததில், நாம் நமது கடமையைத்தான் செய்தோம். நமது சேவைகளுக்கு நாம் வெகுமதிகளை எதிர்பார்ப்பதற்கில்லை; ஆனால் எல்லா நல்வினைகளும் இறுதியில் நல்ல பயனையே தரும் என்பது என் திடமான உறுதியாகும். நடந்ததை மறந்து, நம் முன் நிற்கும் வேலையைப் பற்றிச் சிந்திப்போமாக." இதில், எல்லோரும் என்னோடு ஒத்துக் கொண்டார்கள்.

நான் மேலும் சொன்னேன், "உண்மையைச் சொல்லவேண்டுமானால், நீங்கள் என்னை அழைத்த வேலை அநேகமாக முடிந்து விட்டது. ஆனால், நீங்கள் நான் போவதற்கு அனுமதி கொடுத்தால் கூட, என்னால் கூடுமானமட்டும் நான் டிரான்சுவாலை விட்டுப் போகக் கூடாது என்று கருதுகிறேன். எனது வேலையை நேட்டாலில் இருந்து செய்வதற்குப் பதிலாக, நான் இனி இங்கிருந்தே செய்ய வேண்டும். ஓராண்டுக்குள் இந்தியா

வுக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு, டிரான்சுவால் உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞுகைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்தப் புது இலாக்காவைச் சமாளித்துக் கொள்ளப் போதிய தந் நம்பிக்கை எனக்கு உண்டு. இதை நாம் செய்யா விட்டால், இந்தியர்கள் இந்த நாட்டை விட்டு விரட்டி யடிக்கப் படுவார்கள்.''

இவ்வாறு, பிரிட்டோரியாவிலும் ஜோகனஸ்பர்க் கிலும் உள்ள இந்தியர்களோடு உரையாடி, இறுதியில் ஜோகனஸ்பர்க்கில் ஒரு அலுவலகம் ஏற்படுத்த முடிவு செய்தேன்.

40

கீதையைக் கற்றல்

பிரும்மஞான நண்பர்கள் என்னை அவர்கள் கழகத் தில் சேர்க்கக் கருதிஞர்கள் ; ஆனுல் இது, இந்து என்ற நிலையில் என்னிடமிருந்து சில பெற்றுக்கொள்ளும் நோக் கத்தோடேயே. பிரும்மஞான இலக்கியத்தில், இந்து சமயச் சாயல் நிரம்ப இருந்தது. நாங்கள் ‘நாடுவோர் சங்கம்’ என்பதாக ஒன்றை ஏற்படுத்திளுேம். அதில் கூட்டங்கள் ஒழுங்காக நடந்தன. எனக்குக் கீதையில் முன்னரே நம்பிக்கை உண்டு. அது என்னைக் கவர்ந் துள்ளது. அதை இன்னும் ஆழ்ந்து நோக்க வேண்டிய அவசியத்தை நான் இப்பொழுது உணர்ந்தேன். என் னிடம் ஒன்றிரண்டு மொழிபெயர்ப்புகள் இருந்தன. அவற்றைக் கொண்டு சமஸ்கிருத மூலத்தை அறிய முயன்றேன். ஒவ்வொரு நாளும் ஒன்றிரண்டு சுலோகங் களை மனனம் செய்யத் தீர்மானித்தேன். இதற்காகக் காலை அனுஷ்டான நேரத்தை உபயோகித்தேன். அவ் வேலைகள் எனக்கு முப்பத்தைந்து நிமிடங்கள் பிடித்தன;

பல்துலக்க பதினைந்து நிமிடங்கள்; குளிக்க இருபது. எனவே, எனக்கு எதிரிலுள்ள சுவர்களில் கீதையின் சுலோகங்களைத் தாள்களில் எழுதி ஒட்டினேன். ஞாபகப் படுத்திக் கொள்ளுவதற்காக அப்போதைக் கப்போது அவைகளை நான் பார்த்துக் கொள்ளுவேன். தினந் தோறும் உள்ள பகுதியை மனனம் செய்து கொள்ளவும், ஏற்கெனவே படித்த சுலோகங்களை நினைவு செய்து கொள்ளவும், இந்த நேரம் போதுமானபடியாக இருந்தது. இவ்வாறு பதிமூன்று அதிகாரங்களை மனனம் செய்து கொண்ட நினைவு இருக்கிறது.

கீதையைக் கற்றதில் எனது நண்பர்களுக்கு என்ன பயன் விளைந்ததோ, அதை அவர்கள்தான் சொல்ல முடியும். ஆனால், எனக்கு அது ஒரு பழுது போகாத வாழ்க்கை வழிகாட்டியாக அமைந்தது. தினம்தோறும் நான் பார்த்துக்கொள்ளும் எனது அகராதியாக அமைந்தது. அபரிகிரஹ (உடைமை இன்மை) சமபாவ (சமநோக்கு) போன்ற சொற்கள், என்னைக் கவ்வியன. அந்தச் சமரச நோக்கத்தை, எப்படிப் பண்படுத்திப் பேணுவது என்பதே கேள்வி. உள்ளது அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, அவனைப் பின்பற்றிச் செல்லவா? நேரே வந்தது பதில்: உன்னிடம் உள்ளதனைத்தையும் உதறினால் ஒழிய, 'அவனை'ப் பின்பற்ற முடியாது. எனது ஆங்கிலப் படிப்பு எனக்கு உதவிக்கு வந்தது. 'தருமகருத்தா' என்ற சொல்லின் உட்பொருளைக் கீதா உபதேசத்தின் விளக்கத்தில், மிகத் தெளிவாக உணர லானேன். கீதை உபதேசத்தின் 'உடைமையின்மை' யின் பொருள்: விமோசனம் விரும்புவர்கள், தரும கருத்தாவைப் போல் நடந்து கொள்ளவேண்டும். அதா வது, பெரிய உடைமைகள் தமது ஆளுகைக்குள் இருப்பி னும், அவற்றில் இம்மியேனும் தனக்குச் சொந்தமானது என்று கருதாமை, என்று உணரலானேன். உடைமை இன்மைக்கும் சமநிலைக்கும், உள்ள நோக்கில் மாற்ற

மும், மனப்போக்கில் மாற்றமும் அவசியம் என்பது வெள்ளிடைமலையாய் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. நான் ரேவசங்கரபாய்க்கு, எனது ஆயுள் நிதிக்குப் பணம் கட்டாது விட்டுவிடும்படிக்கும், அதில் கிடைக்கக் கூடிய பணத்தை வாங்கிவிடும்படிக்கும், அல்லது இது வரை கொடுத்துள்ள பணம் இழந்து போனதாகக் கருதி விடும்படிக்கும், எழுதினேன். ஏனெனில், என்னையும் என் மனைவி மக்களையும் படைத்த ஆண்டவன், அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுவான் என்பதில் நம்பிக்கை கொண்டேன். எனக்குத் தந்தைபோலிருந்த என் தமையனுக்கு, அதுவரை நான் சேமித்திருந்த அனைத்தையும் அவருக்கு அளித்தாயிற்று என்றும், இனிமேற்கொண்டு என்னிடமிருந்து யாது ஒன்றையும் அவர் எதிர்பார்க்க வேண்டாம் என்றும், மேற்கொண்டு ஏதாவது மிஞ்சுமானால், அது சமூகத்தின் நலனுக்காக உபயோகிக்கப் படுமென்றும், விளக்கி எழுதினேன்.

41

‘இந்திய சிந்தை’ (Indian Opinion)

சுமார் இதே சமயத்தில் திரு. மதன்ஜி ‘இந்திய சிந்தை’ என்ற சஞ்சிகை ஆரம்பிக்கும் யோசனையோடு என்னை அணுகி, என் புத்திமதியைக் கேட்டார். ஏற்கெனவே அவர் ஒரு அச்சகம் வைத்திருந்தார். அவருடையை யோசனையை நான் ஆதரித்தேன். 1904-ல் சஞ்சிகை ஆரம்பிக்கப் பெற்றது. திரு. மன்சுக்லால் நாசர் அதன் முதல் ஆசிரியர் ஆனார். பெரும்பகுதி நேரம் சஞ்சிகையை நான் மேற்பார்த்து வந்தபடியால், வேலைப் பளு முழுவதும் நானே தாங்க வேண்டி இருந்தது. திரு. மனுசுக்லால் அதை நடத்த முடியாது என்பதல்ல. இந்தியாவில் இருந்த பொழுது, அவர்

பத்திரிகைத் தொழிலைப் போதுமான மட்டும் பார்த்திருக்கிறார். ஆனால், நான் அங்கே இருக்கும் வரை, சிக்கலான தென் ஆப்பிரிக்கா பிரசினைகளைப் பற்றி அவர் எழுதத் துணிவதில்லை. என்னுடைய பகுத்தறிவில் அவருக்கு அபார நம்பிக்கை; எனவே ஆசிரியர் பகுதிக்கான வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பை என் தலையில் சுமர்த்தினார். இன்றளவும் அது ஒருவார சஞ்சிகையே.

இந்தச் சஞ்சிகையில் நான் பணம் போட வேண்டி இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. ஆனால், என்னுடைய பண உதவியின்றி அது நடைபெறாது என்பதை விரைவிலே உணரலானேன். இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும், நான் "இந்திய சிந்தை"யின் பிரசுரிக்கப்பட்ட அதிபராக இல்லா விட்டாலும், அது நடைபெற்று வருவதற்கு நானே முழுப் பொறுப்பாளி, என்பது தெரியும். இந்தச் சஞ்சிகை ஆரம்பிக்கப் படாமலே இருந்திருந்தால், பாதகம் ஒன்றுமில்லை; ஆனால் ஆரம்பிக்கப்பட்டபின் நிறுத்துவது என்பது, நஷ்டத்தோடு அவமானமுமாகும். எனவே, என் பணத்தை அள்ளிக் கொட்டினேன். எனது வருவாய் மிச்சம் அனைத்துமே அதில் கொட்டினேன். மாதம் ஒன்றுக்கு 75 பவுண் வீதம் நான் அனுப்ப வேண்டியிருந்த காலம் நினைவுக்கு வருகிறது.

ஆனால், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும், அந்தச் சஞ்சிகை இந்திய சமூகத்தினருக்கு நன்றாகவே உழைத்தது என்றே கருதுகிறேன். அது ஒரு வியாபாரச் சஞ்சிகையாகக் கருதி ஆரம்பிக்கவில்லை. அது என்னுடைய ஆளுகைக்குள் இருக்கும் வரையில், சஞ்சிகையில் ஏற்பட்ட மாறுதல்கள், எனது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களையே சுட்டிக் காட்டுவதாகும். அக்காலத்து, 'இந்திய சிந்தை', இந்நாட்களில் உள்ள 'யங் இந்தியா'—'நவஜீவன்' போல், என் வாழ்க்கை

யின் ஒரு பகுதியின் கண்ணுடியே யாகும். வாரம் தோறும் அதன் பத்திகளில், எனது ஆன்ம உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டி, நான் உணர்ந்துள்ளபடி சத்தியாக்கிரகத்தின் கொள்கைகளேயும் அதனைக் கடைப் பிடிக்க வேண்டிய முறைகளேயும் பற்றி விளக்கி வந்தேன். நான் சிறையில் கட்டாய ஓய்வு பெற்றிருந்த இடைக்காலம் தவிர, பத்தாண்டுகள், அதாவது 1914 வரை, என்னுடைய கட்டுரை இல்லாத ‘இந்திய சிந்தனை’ இதழ் ஒன்று கூட இல்லே.

42

ஒரு நூலின் மந்திர சக்தி

நான் ஒரு ‘சைவ’ விடுதியில் சாப்பிட்டுவந்தேன். இங்கு திரு. ஆல்பர்டு வெஸ்டு என்பவரைச் சந்தித்தேன். நாங்கள் விடுதியில் ஒவ்வொரு மாலேயும் சந்தித்து, உணவுக்குப் பின் உலாவப் போவது வழக்கம். திரு. வெஸ்டு ஒரு சிறு அச்சகத்தில் ஒரு பங்காளி. அவர் எனக்கு உதவி செய்ய முன்வந்தார். டர்பானிலுள்ள ‘இந்திய சிந்தை’ அச்சகத்தை மேற்கொள்ளுமாறு அவரை நான் வேண்டினேன். சஞ்சிகையின் பொருளாதார நிலேயைப்பற்றித் திரு. வெஸ்டின் அறிக்கை பயம் தரத் தக்கதாயிருந்தது; டர்பானுக்கு உடனே புறப்பட்டுப் போவதென்று தீர்மானித்தேன்.

‘சைவ’ விடுதியில் நான் சிநேகம் செய்தவர்களில் மற்றொரு நண்பரான திரு. போலக், புகைவண்டி நிலயத்தில் என்னே வழி அனுப்ப வந்தார்; பிரயாணத்தின் போது நான் படிப்பதற்காக ஒரு நூலே என்னிடம் அவர் கொடுத்தார். அது நிச்சயம் எனக்குப் பிடிக்கும் என்றும் சொன்னுர். அது ரஸ்கினுடைய ‘Unto this last’ (‘சர்வ நலம்’) என்பது. அந்த நூலேப் படிக்க ஆரம்பித்த பின்

னர், அதைக் கீழே வைக்கவே முடியவில்லை. அது என்னை ஈர்த்தது. ஜோகனஸ்பர்க்கிலிருந்து டர்பான் வரை இருபத்திநான்கு மணிநேரம் பிரயாணம். புகைவண்டி மாலை அங்குபோய்ச் சேர்ந்தது. அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. அந்த நூலில் கண்ட குறிக்கோள்களின்படி என் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ள உறுதி பூண்டேன்.

ரஸ்கினின் இவ் அரிய நூலில், என்னுடைய ஆழ்ந்த உறுதிப்பாடுகளில் சில பிரதிபலித்திருப்பதைக் கண்டேன். எனவேதான், அது என்னை அவ்வளவு கவர்ந்திழுத்து என்வாழ்க்கையை மாற்றும்படி செய்தது. மனித உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் நல்லவற்றை வெளிப்படச் செய்பவனே கவிஞனாவான். கவிஞர்கள், எல்லோரையும் ஒரேமாதிரி உணர்ச்சியுறச் செய்வதில்லை. ஏனெனில் எல்லோரும் ஒரேமாதிரியான நிலையில் வளர்ந்திருப்பதில்லை. 'சர்வநலம்' என்ற நூலில் இருந்து நான் அறிந்துகொண்ட போதனைகளாவன :—

(1) தனிப்பட்ட ஒருவரின் நலம், எல்லாருடைய நலத்திலும் அடங்கி உள்ளது.

(2) வழக்குரைஞன் வேலைக்கும், நாவிதன் வேலைக்கும் மதிப்பு ஒன்றே. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தங்கள் உழைப்பின் மூலம் வாழ்க்கையை நடத்தச் சம்பாதிக்கச் சம உரிமை உண்டு.

(3) உழைப்பைக்கொண்ட வாழ்க்கை,—அதாவது உழுகிறவன், மற்றக் கைத்தொழிலாளியின் வாழ்க்கையே,—வாழத் தகுந்த வாழ்க்கையாகும்.

இவற்றில், முதலில் உள்ளது எனக்கு முன்னரே தெரியும். இரண்டாவது, மங்கலாக உணர்ந்து இருந்தேன். மூன்றாவது எனக்குப் படவே இல்லை. இரண்டாவதும், மூன்றாவதும், முதலாவதில் அடங்கி உள்ளது என்பதை 'சர்வநலம்' என்ற இந் நூல் வெள்ளிடைமலையாய் எனக்கு விளக்கியது. இக்கொள்கைகளை

வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்குச் சித்தமாகவே விடி வெள்ளி எழுதலோடு துயில் எழுந்தேன்.

43
போனிக்ஸ் உறைவிடம்

திரு. வெஸ்டிடம், 'சர்வநலம்' என்ற நூல் என் உள்ளத்தில் ஏற்படுத்திய விளைவு அனைத்தையும் பற்றிப் பேசினேன். 'இந்திய சிந்தை' நமது பண்ணை இடத்துக்கு மாற்றப்படவேண்டும் என்றும், ஆங்கு ஒவ்வொருவரும் உழைத்துச் சரிசமானமான ஊதியம் பெறவேண்டும் என்றும், எஞ்சிய நேரத்தில் அச்சக வேலையைக் கவனித்துக்கொள்ளலாம் என்றும் யோசனை கூறினேன். திரு. வெஸ்டு எனது யோசனையை ஒத்துக் கொண்டார். வருணை, தேச வேறுபாடின்றி ஒவ்வொரு வருக்கும் மாத ஊதியம் 3 பவுண் என்று தீர்மானிக்கப் பட்டது.

டர்பான் பக்கத்தில் ஒரு புகைவண்டி நிலையத்திற்குச் சமீபமாக ஒரு நிலம் தேவை என்று விளம்பரம் செய் தேன். 'போனிக்ஸ்' சம்பந்தமாகத் தகவல் கிடைத்தது. ஒரு வாரத்திற்குள் 20 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கி னோம். அதில் ஒரு நல்ல சிறு ஊற்றும், ஆரஞ்சு, மா மரங்களும் இருந்தன. அதற்குப் பக்கத்தில் 80 ஏக்கர் பரப்புள்ள ஒரு நிலம்; அதில் அநேக பழமரங்களும், ஒரு பாழடைந்த கட்டிடமும் இருந்தன. அதையும் நாங்கள் விலைக்கு வாங்கினோம். எல்லாம் ஆயிரம் பவுண் விலை ஆயிற்று.

என்னுடன் போயர் போரில் வேலைசெய்த சில இந்தியத் தச்சர்களும், கொத்தர்களும், அச்சகத்துக்கு ஒரு கொட்டகை போட உதவிபுரிந்தார்கள். 75 அடி நீளமும் 50 அடி அகலமும் உள்ள அக்கட்டிடம், ஒரு

மாதத்திற்குள்ளாகவே முடிக்கப்பட்டது. திரு. வெஸ்டும் மற்றோரும், தங்களுடைய சொந்தச் சௌகரியங்களைக் கவனியாது, தச்சர்கள் கொத்தர்களோடு அங்கேயே தங்கினார்கள். அந்த இடம் குடியிருப்பு இல்லாது, புல் அடர்ந்து வளர்ந்திருந்தபடியால் பாம்புகள் நிறைந் திருந்தன. எனவே மக்கள் வசிப்பதற்கு ஆபத்தான தாக இருந்தது. முதலில் எல்லோருமே படுதாக் குடிசையில் இருந்தோம். சுமார் ஒரு வாரத்தில் போனிக்சுக்கு எங்கள் சாமான்களில் பெரும்பகுதியை வண்டியில் கொண்டு வந்தோம். அது, டர்பானிலிருந்து பதினான்கு கல்கள்; போனிக்ஸ் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டரைக் கல்கள்.

மகன்லால் காந்தி என்வாழ்வோடு சேர்ந்து வாழ்வதற்காக தன் தொழிலை ஒரேயடியாக விட்டுவிட்டார். எனது நன்னெறிச் சோதனைகளில் மகன்லால், தனது ஆற்றல், தியாகம், பக்தி இவைகளினால், என்னுடைய ஆரம்ப சக ஊழியர்களில் தலைசிறந்து நிற்பராவார்.

இவ்வாறு போனிக்சு உறைவிடம் 1904-ல் ஆரம்பிக்கப்பட்டது. அநேக இடையூறுகளின் இடையேயும் 'இந்திய சிந்தனை' அங்கிருந்தே பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

உடல் உழைப்பினால் ஒவ்வொருவரும் தன் வாழ்க்கையை நடத்திக்கொள்வதைச் சாத்தியமாக்குவதற்காக, அச்சகத்தைச் சுற்றியுள்ள இடத்தை, மூன்று ஏக்கர் வீதம் ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்தோம். அவற்றில் ஒன்று என் பங்குக்கு வந்தது. இந்த இடங்களில் எல்லாம், எங்கள் விருப்பத்திற்கு மாறாக, வளைவு தகடுகளைக்கொண்டு, வீடுகள் கட்டப்பட்டன. எங்கள் விருப்பம், சாதாரணக் குடியானவனுக்குத் தகுந்தாற்போல் வைக்கோல் வேய்ந்த மண்குடிசைகள், அல்லது சிறிய செங்கல் கட்டிடங்கள் இருக்கவேண்டும் என்பதாகும். ஆனால் அது ஆமாறு இல்லை. அவைகள்,

இன்னும் அதிகமான செலவு பிடித்திருக்கும், அதிகக் காலமும் பிடித்திருக்கும். ஒவ்வொருவரும், எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் குடியேற ஆத்திரப்பட்டுக்கொண்டிருந்தனர்.

நாங்கள் குடியேறத் தயாரானதும், கட்டிடங்கள் கட்டி முடிந்து தயாரானதும், நான் இந்தப் புதிய இடத்தை விட்டு ஜோகனஸ்பர்க்குக்குப் போக வேண்டி இருந்தது. ஆங்குள்ள வேலையை நீண்ட நாள் கவனிக்காமல் விட்டுவைத்திருக்கக் கூடிய நிலையில் நான் இல்லை.

ஜோகனஸ்பர்க் வந்ததும், நான் செய்துள்ள முக்கிய மாறுதல்களைப் பற்றித் திரு. போலக்கிடம் தெரிவித்தேன். தான் கொடுத்த நூல் இவ்வளவு பலன் அளித்திருப்பதை அறிந்தும், திரு. போலக் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. "இந்தப் புதிய காரியத்தில் பங்கு எடுத்துக்கொள்ள எனக்கு ஒன்றும் சாத்தியமில்லையா?" என்று அவர் என்னைக் கேட்டார். "ஓ, நிச்சயமாக!" என்றேன் நான். தனது முதல்வருக்கு ஒரு மாத அறிவிப்புக் கொடுத்துவிட்டு, அவர் போனிக்சுக்கு உரிய காலத்தில் வந்து சேர்ந்தார். அவருடைய கூடிப் பழகும் பண்பினால், அவர் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து, விரைவிலே எங்கள் குடும்பத்தின் ஒருவர் ஆனார். ஆனால் அங்கு அவரை நீண்ட நாள் வைத்திருக்கக்கூடவில்லை. ஜோகனஸ்பர்க் அலுவலகத்தின் பளுவை நான் ஒருவன் தன்னந்தனியாகத் தாங்க முடியவில்லை. போலக் இடம் அவர் ஒரு வழக்குரைஞனாகத் தகுதி செய்துகொண்டு, என் அலுவலகத்தில் சேருமாறு யோசனை கூறினேன்.

அவர், அங்குள்ள வாழ்க்கை அவருக்குப் பிடித்திருப்பினும், பூரணமான மகிழ்ச்சியோடிருப்பினும், அவ் உறைவிடத்தை வளர்ப்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பினும், எங்களுடைய குறிக்கோளை விரைவில் அடைவதற்கு, தான் வழக்குரைஞனாவதற்கு எனது அலுவ

லகத்தில் சேரவேண்டும் என்று நான் கருதுவேனானால், தான் அதைவிட்டு வரத் தயார் என்று போனிக்சி லிருந்து எழுதினார். இக்கடிதத்தை நான் மனமார வர வேற்றேன். போலக் போனிக்சைவிட்டு, ஜோகனஸ்பர்க் வந்து என்னுடன் சேர்ந்துகொண்டார்.

44

இல்லம்

விரைவில் இந்தியா திரும்பும் எண்ணத்தை நான் இப்பொழுது விட்டுவிட்டேன். ஓராண்டிற்குள் வீடு திரும்பி வருவதாக என் மனைவியிடம் உறுதி கூறி இருந்தேன். நான் திரும்பும் வழிஇன்றி ஓராண்டும் கழிந்தது. எனவே மனைவி மக்களைத் தருவிப்பது எனத் தீர்மானித்தேன்.

எளிமை வாழ்க்கைப் போக்கு டர்பானிலே ஆரம்ப மாயிற்று. ஆனால், ரஸ்கினின் போதனையின் முன்னிலை யில், ஜோகனஸ்பர்க் வீடு மிகக் கடினமான மாறுதலுக்கு உள்ளாகியது. ஒரு வழக்குரைஞர் வீட்டில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு எளிய வாழ்க்கையைப் புகுத்தி னேன். சில மேசை நாற்காலிகளாவது இல்லாமல் முடி யாது. புறத்தைவிட அகத்தே மாறுதல் அதிகமாக அமையலாயிற்று. உடல் உழைப்பு அனைத்தும் தானே செய்வது என்பதிலுள்ள ஆசை அதிகரித்தது. எனவே என் குழந்தைகளையும் அந்தக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தொடங்கினேன். கடையில் ரொட்டி வாங்குவதற்குப் பதிலாக, கூக்னியின் முறைப்படி வீட்டி லேயே கோதுமை ரொட்டி செய்யலானோம். இயந்திரத் தில் அறைத்த சாதாரண மாவு இதற்கு உகந்ததல்ல. எனவே, கையால் திரித்த மாவை உபயோகிப்பது, எளிமை, உடல்நலம், சிக்கனம் இவற்றைத் தருவதாகும்,

எனக் கருதப்பட்டது. எனவே, ஏழு பவுனுக்கு ஒரு திருகை வாங்கினேன். அதிலுள்ள இரும்புச் சக்கரம் ஒருவர் சுற்றுவதற்குக் கனமாக இருந்தது; இருவருக்கு எளிது. இதைப், போலக், நான், குழந்தைகள், வழக்கமாகச் சுற்றுவோம். என் மனைவி எப்பொழுதாவது ஒரு சமயம் சுற்றுவாள்; ஆனால் மாத் திரிக்கும் நேரம்தான், அவள் வழக்கமாக சமையல் வேலைக்கு ஆரம்பம் செய்யும் நேரமாகும். போலக்கின் மனைவியும், அங்கு வந்ததும் எங்களோடு சேர்ந்துகொண்டாள். மாத் திரிப்பது குழந்தைகளுக்கு மிகப் பலன் உள்ள தேகப் பயிற்சியாக இருந்தது. இவ்வேலையும் சரி, வேறெந்த வேலையும், அவர்கள் மேல் எக்காலத்தும் கட்டாயமாகச் சுமத்தப் படுவதில்லை; ஆனால் வந்து, ஒரு கைகொடுப்பது அவர்களுக்கு விளையாட்டு; களைப்பானபோது தாராளமாக அவர்கள் போய்விடலாம். வீட்டைப் பார்த்துக்கொள்ள ஒரு பணியாள் அமர்த்தி இருந்தோம். அவன் எங்களோடு, எங்கள் குடும்பத்தில் ஒருவனாக, வசித்து வந்தான். அவனுடைய வேலைகளில் குழந்தைகளும் உதவி செய்யும். நகராட்சித் தோட்டி மலத்தை எடுப்பான். ஆனால், வேலையாளைச் செய்யச் சொல்லவோ அல்லது செய்வான் என்று எதிர்பாராமலே, நாங்களே, கக்கூசு அறை சுத்தம் செய்துவிடுவோம். அது குழந்தைகளுக்கு நல்ல பயிற்சியாக விளைந்தது.

45

சூலுக்கலகம்

சாந்தியான நிலையில் இருக்கலாம் என்று நான் கருதிக்கொண்டிருந்த சமயம் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. நேடாலில் சூலுக்கலகம் கிளம்பிய செய்தியை, நாளிதழ்கள் கொண்டுவந்தன. சூலுக்களிடம்

எனக்குக் குரோதம் கிடையாது; அவர்கள் இந்தியர்களுக்குத் தீங்கிழைப்பதில்லை. அது ‘ கலகம் ’ என்பதைப் பற்றியே எனக்குச் சந்தேகங்கள் உள. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலக நன்மைக்காகவே இருக்கிறது என்று நான் அப்பொழுது நம்பினேன். எனது உண்மையான விசுவாச உணர்ச்சி, சாம்ராஜ்யத்திற்கு தீங்கு நினைப்பதைக்கூடத், தடை செய்து நின்றது. எனவே, ‘ கலக ’த்தின் நியாய—அநியாயத் தன்மை, எனது முடிவை மாற்றுமாறில்லை. நேடாலில் ஒரு தற்காப்புத் தொண்டர் படை இருந்தது. அதற்கு மேலும் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளலாம். ‘ கலகத்தை ’ அடக்க இப் படையை ஏற்கெனவே திரட்டி ஆயிற்று என்றும் படித்தேன்.

“ நான், நேடாலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால், ‘ நேடாலின் ’ குடியென்றே என்னைக் கருதிக்கொண்டேன். எனவே, அவசியமானால் இந்திய சகாயப் படை ஒன்றைச் சேர்க்க நான் தயாராக இருப்பதாகக் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

அதை இவ்வளவு துரிதமாக அவர் ஏற்றுக்கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கடிதம் எழுதும் முன்னரே, நல்ல வேளையாக, அவசியமான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்திருந்தேன். என் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஜோகனஸ்பர்க் இல்லத்தைக் கலைத்து விடுவது என்று தீர்மானித்திருந்தேன்; போலக் சிறிய வீட்டுக்குப் போகவேண்டும். என் மனைவி போனிக்சுக்குச் சென்று அங்குத் தங்கவேண்டும். இம்முடிவுக்கு என் மனைவியின் பூரண சம்மதம் பெற்றிருந்தேன்.

டர்பானுக்குச் சென்று, மக்களைச் சேருமாறு வேண்டினேன். எனக்கு மதிப்புக் கொடுப்பதற்காகவும், வேலை எளிதாக நடப்பதற்காகவும், அப்பொழுதுள்ள சம்பிரதாயங்களின் படிக்கும், மருத்துவ முதல்வர் என்னை, ‘ சார்ஜண்டு மேஜர் ’ என்ற தற்காலிக ஸ்தானத்துக்கும்,

என்னுல் தேர்ந்து எடுக்கப்பட்ட மூவர்களை 'சார்ஜண்டு' ஸ்தானத்துக்கும், ஒருவரை 'கார்ப்போரல்' ஸ்தானத்துக்கும், நியமித்தார். அரசாங்கத்திலிருந்து, நாங்கள் 'யூனிபாரம்' அங்கிகளையும் பெற்ருேம். எங்கள் படை ஆறுவாரம் வரை நேரான சேவையில் ஈடுபட்டிருந்தது. 'கலக' இடத்திற்கு நாங்கள் சென்றபோது, 'கலகம்' என்ற பெயர் சொல்லுவதற்கான எதையும் நாங்கள் அங்குக் காணவில்லை. காணக்கூடிய எதிர்ப்பு ஒன்றையும் அங்கு நாங்கள் காணவில்லை. ஒரு சிறிய பூசலைக் கலகம் என்று பெரிதாக்குவதற்குக் காரணம், ஒரு சூலுத்தலைவர், தம் மக்கள்மேல் சுமத்தப்பட்ட ஒரு வரியைக் கொடுக்க வேண்டாம் என்று யோசனை கூறியதும், அவ்வரியை வசூலிக்க வந்தவரைத் தாக்கியதுமேயாகும். எவ்வாருயினும், எனது உள்ளம் சூலுக்களிடமே இருந்தது. எனவே, நாங்கள் தலைமை நிலையத்திற்கு வந்தபோது, காயம்பட்ட சூலுக்களைச் சிகிச்சை செய்ய வேண்டியதே எங்களுடைய முக்கிய வேலையாகும், என்று கேள்விப்பட்டு, நான் மிக மகிழ்ச்சி அடைந்தேன். அங்கிருந்த மருத்துவர் எங்களை வரவேற்ருர். 'வெள்ளையர்கள், காயம்பட்ட சூலுகளுக்கு விருப்பத்தோடு சிகிச்சை செய்ய முன் வரவில்லை யென்றும், அவர்களுடைய காயங்கள் அழுகுகின்றன என்றும், தான் செய்வதறியாது திகைத்துக்கொண்டிருப்பதாகவும், அவர் சொன்ருர். எங்கள் வருகை, நிரபராதியான அம்மக்களுக்கு ஆண்டவனுடைய வரப்பிரசாதம் என்று அவர் கூறினர். அவர், எங்களுக்குப் புண்கட்டும் துணி, கிருமி கொல்லும் எண்ணெய் முதலியன கொடுத்துத் தற்காலிகமாக ஏற்படுத்திய மருத்துவ நிலையத்திற்கு அழைத்துச் சென்ருர். எங்களைப் பார்த்துச் சூலுக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். வெள்ளைச் சிப்பாய்கள், எங்களையும் அவர்களையும் பிரித்திருந்த கம்பிகளின் ஊடே எங்களைப் பார்த்து, சூலுக்களின் புண்களைச் சிகிச்சை செய்வதைத் தடுக்க முயன்

ருர்கள். அவர்கள் சொன்னதை நாங்கள் கேட்காதபடி யினுல், கோபமுற்றுச் சூலுக்களின்பேரில் சொல்லொணுத வசைமாரிகளைப் பொழிந்தனர். மெள்ள இந்தச் சிப்பாய் களோடு நான் நெருங்கிப் பழகினேன். அவர்களும் தாங் கள் தலையிடுவதை நிறுத்திக்கொண்டனர். எங்கள் பார் வையில் இருந்த காயம்பட்டவர்கள், போரில் காயப்பட்ட வர்களல்லர். அவர்களில் ஒரு பகுதியினர் சந்தேகத்தின் பேரில் சிறைப்படுத்தப்பட்டவர்கள். அவர்களுடைய தளபதிக்குத் தசையடி தண்டனை. அத்தசையடி அவ ருக்குப் பல புண்கள் உண்டாக்கி இருந்தன. இவைகள் கவனிக்கப்படாததால் அழுகிக் கொண்டிருந்தன. மற்ற வர்கள் சூலு நண்பர்கள். எதிரிகளிடமிருந்து வேறு பாடு கண்டுகொள்ள இவர்களுக்கு அடையாளச் சின் னங்கள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், இவர்கள் சிப் பாய்களால் தவறுதலாகச் சுடப்பட்டவர்கள்.

நாங்கள் வேகமாகச் செல்லும் பகுதியோடு இணைக் கப்பட்டிருந்தோம். அபாயகரம் என்று எங்கு அறிவிக் கப்படுகிறதோ அவ்விடத்திற்கு எல்லாம் செல்ல அப் படைக்கு உத்திரவு. அதில் பெரும்பகுதி வாகனம் கொண்ட காலாட்படை. எங்களுடைய முகாம் நகர்ந்த தும், தோளின் மேல் கட்டில்களைச் சுமந்துகொண்டு நாங் கள் நடந்து பின் செல்ல வேண்டும். இரண்டு மூன்று தரம் நாங்கள் ஒரு நாளில் நாற்பது மைல் நடக்கவேண்டி இருந்தது. நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம், ஆண்டவனுடைய பணியையே நாங்கள் செய்யவேண்டி இருந்ததற்கு நான் நன்றி உடையவனுவேன்; ஏனெ னில் தவறுதலாக காயம்படுத்தப்பட்ட சூலு நண்பர்களை எங்கள் முகாமுக்குக் கொண்டுவந்து, அவர்களை நாங் கள் தாதிகள் போலப் பேணி வந்தோம்.

இந்தக் 'கலகத்தை'ப் போல, போரின் கொடுமை களை அவ்வளவு தெளிவாகப் 'போயர்' போர் என் மன தில் பதிப்பிக்கவிலை. இது போரல்ல; மனித வேட்டை.

இது என் கருத்து மட்டுமல்ல; என்னோடு பேசிய பல ஆங்கிலேயர்களின் கருத்துமாகும். நிரபராதியான ஜுக்கிராமங்களில் பட்டாசுபோலப் பட்டாளங்களின் துப்பாக்கி வெடிச் சத்தத்தை ஒவ்வொரு காலையிலும் கேட்பதும், அதற்கெல்லாம் மத்தியில் வாழ்வது என்பதும் ஒரு சோதனையே. காயம்பட்ட ஜுலுக்களுக்குச் சிகிச்சை செய்வதே எங்கள் படையின் வேலை ஆதலால், இந்தக் கசப்பு மருந்தை நான் விழுங்கினேன். நாங்கள் இல்லாவிட்டால், ஜுலுக்கள் கவனிப்பாரன்றிக் கிடந்திருப்பார்கள். எனவே, இப்பணி எனது மனச்சாட்சிக்கு ஆறுதல் அளித்தது.

46

பிரமசரியம்

காயம்பட்டவர்களைத் தூக்கிக்கொண்டோ, தூக்காமலோ, இந்த ஏகாந்த வெளிகளில் நடந்து செல்லும் போது, நான் அடிக்கடி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குவதுண்டு. பிரமசரியத்தையும், அதன் உட்பொருளையும் பற்றிச் சிந்தித்தேன். எனது கருத்து ஆழமாக வேரூன்றியது. என்னுடைய சகஊழியர்களோடு விவாதித்தேன். தன்னைத் தானறிவதற்கு அது எவ்வளவு இன்றியமையாதது என்பதை நான் அப்பொழுது உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால் தன் ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்து மனித சமுதாயத்துக்குத் தொண்டு செய்யும் நோக்கம் கொண்ட ஒருவர், பிரமசரியமின்றிச் சேவைசெய்ய முடியாது என்பதைத் தெளிவாகக் கண்டேன். இப்பொழுது செய்வது போன்ற சேவை செய்யப் பல வாய்ப்புக்கள் எனக்குக் கிடைக்க வேண்டும் என்பதையும், குடும்ப வாழ்க்கையின் இன்பங்களில் ஆழ்ந்து, குழந்தைகள் பெற்று வளர்ப்பதில் நான் ஈடுபட்டு வந்

தால், உரிய காலத்தில் என் பணியினைச் சரிவர நிறை வேற்ற முடியாமல் போகும் என்பதையும் உணர லானேன்.

சுருங்கச் சொல்லின், உடலையும் ஆன்மாவையும் இரண்டையும் ஒருங்கே பேணி நான் உயிர் வாழ்தல் முடியாது என்பதைக் கண்டேன். உதாரணமாக, இந்தச் சந்தர்ப்பத்தில், எனது மனைவிக்குப் பேறுகால மாக இருந்தால், நான் இந்தப் போராட்டத்தில் இறங்கி இருக்க முடியாது. பிரமசரியத்தைக் கடைப்பிடிக்கா விட்டால், குடும்பசேவையும், சமுதாயசேவையும் ஒன் றுக்கொன்று முரண்பட்டதாகும். பிரமசரியத்தைக் கடைப்பிடித்தால் அவைகள் பூரணமாக ஒன்றுக்கொன்று தழுவும் தன்மையன. இவ்வாறு நான் தீவிரமாக உடல் உழைப்பிலும் மன உழைப்பிலும் ஈடுபட்டிருக்கும் போது, கலகத்தை அடக்கும் வேலை அநேகமாக முடிந்து விட்டது என்றும், நாங்கள் விரைவில் விடுதலைபெற்று அனுப்பப்படுவோம் என்றும் செய்தி வந்தது. ஒன்றி ரண்டு நாளில் விடுதலையும் வந்தது. சில நாட்களில் நாங்களும் வீடு வந்து சேர்ந்தோம். பின்னர் கொஞ்சம் கழித்து, எங்கள் சிகிச்சைப் படையின் சேவைக்கு நன்றி செலுத்திக் கவர்னரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

போனிக்ஸ் வந்து சேர்ந்ததும், வாழ்க்கை முழுதும் பிரமசரிய விரதத்தைக் கடைப்பிடிப்பது என்ற பிரதிக் ஞையை எடுத்துக் கொண்டேன். நான் மேற்கொண் டுள்ள காரியம் எவ்வளவு பெரியது, அரியது என்பதை நான் அப்பொழுது நன்முக உணரவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். அதனுடைய கஷ் டங்கள் இன்றும் என்னை நோக்கி முறைத்துப் பார்க் கின்றன. இவ்விரதத்தின் அவசியம் மேலும் மேலும் தெற்றெனத் தெரிகிறது. பிரமசரியம் இல்லாத வாழ்க்கை உயிரற்ற மிருக வாழ்க்கைபோல் தோன்றுகிறது. மிருகத்

தன்மைக்கு இயல்பாகவே தன்னடக்கம் கிடையாது. மனிதன், தன்னடக்கத்தைக் கையாளக் கூடியவனுக இருப்பதாலே தன்னடக்கத்தைக் கையாளும் அளவே, மனிதனுகின்ருன். நம்முடைய சமய நூல்களிலே, மிகவும் மிகைப்படுத்திப் புகழப்பட்டதாக எனக்கு முன்னர் தோன்றிய பிரமசரியம், இப்பொழுது முழுதும் முறையானது என்றும், அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும், ஒவ்வொரு நாளும் தெளிவாகத் தெரிய வரலாயிற்று.

அற்புதமான ஆற்றல்வாய்ந்த பிரமசரியம், ஒருக்காலும் அவ்வளவு எளிய காரியமன்று என்றும், அது உடலைமட்டும் சார்ந்த காரியமன்று என்றும் கண்டேன். அது உடல் அடக்கத்தில் ஆரம்பிக்கின்றது; ஆனால் அத்தோடு முடிவதில்லை. அதன் பூரணத்துவம், தூய்மையற்ற ஒரு எண்ணத்தைக்கூட விலக்கும்: ஒரு பிரமசாரித் தன் மாமிசப்பிண்டத்தின் பசியைத் தணிக்கக் கனவில் கூடக் கருதமாட்டான். அந்த நிலையை அவன் அடையும்வரை, அவன் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது என்றே சொல்லலாம்.

1900-ம் ஆண்டிலிருந்து, விரும்பியோ விரும்பாமலோ, நான் கடைப்பிடித்துவந்த பிரமசரியத்திற்கு 1906 மத்தியில் ஒரு பிரதிக்ஞை முத்திரை வைக்கப் பட்டது.

47

கஸ்தூரி பாவின் தீரம்

என் மனைவி, மூன்று முறை கடுமையான நோயுற்று உயிர் தப்பினுள். வீட்டு மருந்துகளே, அவளை குணப் படுத்தின. அவளுக்கு முதல்தரம் நோய்வந்தபோது, சத்தியாக்கிரகம் நடைபெற்று வந்தது; அல்லது ஆரம் பிக்க இருந்தது. அவளுக்கு அடிக்கடி இரத்தம் வெளி

யாயிற்று. ஒரு மருத்துவ நண்பர் சத்திர சிகிச்சை செய்யுமாறு யோசனை கூறினர். சிறிது தயக்கத்துக்குப் பின்னர் அதற்கு அவள் இசைந்தாள். அவள் மிகவும் மெலிவுற்றிருந்தாள். எனவே, மருத்துவர் மயக்க மருந்து இல்லாமல் அவளுக்குச் சத்திரம் செய்ய வேண்டி இருந்தது. அது வெற்றியாக முடிந்தது ; ஆனல் அவள் மிக வேதனைப்பட வேண்டி இருந்தது. ஆச்சரியமான தீரத்துடன், அந்தச் சத்திர சிகிச்சையை அவள் பொறுத்துக்கொண்டாள். மருத்துவரும் அவளுக்குப் பணியாற்றிய அவருடைய மனைவியும், மிகக் கவனமாகப் பார்த்து வந்தார்கள். இது டர்பானில். மருத்துவர் நான் ஜோகனஸ்பர்க் போவதற்கு விடை கொடுத்தார் ; நோயாளியைப்பற்றி எவ்விதக் கவலையும் வேண்டாம் என்று என்னிடம் சொன்னர்.

ஆனல் சில தினங்களில் எனக்கு வந்த கடிதத்தில், கஸ்தூரிபா நிலைமை மோசமாகி வருகிறது என்றும், படுக்கையில் உட்காரக்கூட முடியாத அளவு இளைத்திருக்கிருள் என்றும், ஒரு சமயம் நினைவிழந்து விட்டாள் என்றும், கண்டிருந்தது. என்னுடைய அனுமதியன்றி அவளுக்கு மதுவோ மாமிசமோ கொடுக்கக் கூடாது என்று மருத்துவருக்குத் தெரியும். எனவே, அவளுக்கு 'மாமிச ரசம்' கொடுக்க அனுமதிக்குமாறு மருத்துவர் 'தொலைபேசி' (டெலிபோன்) மூலம் என்னிடம் கேட்டார்: என்னல் அனுமதி தரமுடியாது என்றும், அவள் இவ்விஷயத்தில் தன் விருப்பத்தைத் தெரிவிக்கக் கூடிய நிலைமையில் இருந்தால் அவளைக் கலந்து கொள்ளலாம் என்றும், அவள் விரும்பியபடி அவள் தாராளமாகச் செய்து கொள்ளலாம் என்றும், நான் பதில் சொன்னேன். மருத்துவர் சொன்னர் :—"ஆனல், நான் இந்த விஷயத்தில் நோயாளியின் விருப்பத்தைக் கலந்துகொள்ள மறுக்கிறேன். நீங்களே இங்கு வர வேண்டும். அவளுக்குக் கொடுக்க வேண்டிய உணவைத்

தீர்மானிக்க என்னை நீங்கள் விடாவிட்டால், உங்கள் மனைவியின் உயிருக்கு நான் பொறுப்பாக இருக்க மாட்டேன்.''

அன்றே டர்பனுக்குப் புகைவண்டியில் புறப்பட்டேன் : மருத்துவரைச் சந்தித்தேன், அவர் கீழ்கண்ட செய்தியை மெள்ளச் சொன்னார் :

'' நான் உங்களுக்குத் தொலைபேசியில் சொன்ன போதே திருமதி காந்திக்கு ' மாமிசரசம் ' கொடுத்து விட்டேன்.'' '' டாக்டர்! இதை நான் வஞ்சகம் என் கிறேன் '' என்றேன்.

'' ஒரு நோயாளிக்கு உணவோ, மருந்தோ கொடுப்பதில் வஞ்சகம் என்ற கேள்வி ஒன்றும் கிடையாது. நோயாளிகளையோ, அவர்களுடைய உறவினர்களையோ ஏமாற்றுவதன் மூலம் நோயாளிகளுடைய உயிரைக் காப்பாற்றக் கூடுமானல், அப்படிச் செய்வதை நாங்கள் மருத்துவர்கள், ஒரு சால்பாகவே கருதுகிறோம் '' என்று உறுதியோடு மருத்துவர் உரைத்தார் :

'' டாக்டர் ! இப்பொழுது நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று சொல்லுங்கள். என் மனைவியாக விரும்பினால் ஒழிய, அவளுக்கு அதனல் அவள் உயிரே போவதாக இருந்தாலும், மாமிசம் கொடுக்க நான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன்.''

'' உங்கள் தத்துவத்தை நீங்கள் தாராளமாக வைத்துக்கொள்ளுங்கள். ஆனல், என்னுடைய சிகிச்சையில் உங்கள் மனைவியை நீங்கள் விட்டுவைத்து இருக்கும் வரை, நான் விரும்புகிற எதையும் அவளுக்குக் கொடுக்க எனக்கு உரிமை இருக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். இதை நீங்கள் விரும்பாவிட்டால், அவளை நீங்கள் கொண்டுபோய்விட வேண்டும் என்று வருத்தத்துடன் கேட்டுக்கொள்ள வேண்டியதிருக்கிறது ''.

'' உடனே நான் கொண்டுபோய் விடவேண்டும் என்று சொல்கிறீர்கள் !''

"அவளை உடனே கொண்டுபோய்விட வேண்டும் என்று எப்பொழுது சொன்னேன்? என் இஷ்டபடி விட வேண்டும் என்றுதானே சொன்னேன். நீங்கள் அப்படிச் செய்தால், நானும் என் மனைவியும் அவளுக்குச் செய்யக் கூடியதை எல்லாம் செய்வோம். அவள் விஷயமாக எவ்விதக் கவலையுமில்லாமல் நீங்கள் திரும்பிப் போகலாம். ஆனால் இச்சிறிய காரியத்தை நீங்கள் அறிந்து கொள்ளா விட்டால், என்னிடத்திலிருந்து உங்கள் மனைவியைக் கூட்டிக்கொண்டுபோகுமாறு உங்களைக் கேட்க நீங்கள் என்னைக் கட்டாயப் படுத்து பவராவீர்கள்".

என்னுடைய பிள்ளைகளில் ஒருவன் என்னோடு இருந்தாக ஞாபகம். அவன் என்னோடு முழுவதும் ஒத்துக்கொண்டான். தன் தாயாருக்கு 'மாமிசா ரசம்' கொடுக்கக்கூடாது என்றான். அவளோ, நாம் கலந்து ஆலோசிக்க முடியாத அளவு இளைப்புற்றிருந்தாள். ஆனால் அது எனது வேதனை அளிக்கக்கூடிய கடமை எனக் கருதினேன். எனவே எனக்கும் மருத்துவருக்கும் நிகழ்ந்ததை அவளிடம் கூறினேன். அவள் உறுதியான ஒரு பதிலை இறுத்தாள்: "நான் மாமிச ரசம் சாப்பிட மாட்டேன். இவ் உலகில் மானிடராய்ப் பிறத்தல் அரிது. எனவே எனது உடம்பை இத்தகைய வெறுத்தற்குரிய பொருள்களால் மாசு படுத்துவதைவிடத் தங்கள் மடியில் மடிவதே மேலாகக் கருதுவேன்" என்றாள்.

நான் அவளோடு வாதித்தேன். என்னை அவள் பின்பற்றவேண்டும் என்று கட்டாயமில்லை என்றேன். மதுவையோ மாமிசத்தையோ மருந்தாக அருந்துவதைத் தவறாகக் கருதாத என்னுடைய இந்து நண்பர்கள், பரிச்சயமானவர்கள் இவர்களின் உதாரணங்களை அவளுக்கு எடுத்துக் காட்டினேன். ஆனால் அவள் பிடிவாதமாக இருந்தாள். "தயவு செய்து என்னை உடனே அழைத்துக்கொண்டு போய் விடுங்கள்" என்றாள்.

நான் மகிழ்ச்சி அடைந்தேன். அவளை நான் அங்கிருந்து கொண்டுபோவதில் எனக்குக் கிளர்ச்சி இல்லாமல் இல்லை. அவளுடைய தீர்மானத்தை மருத்து வரிடம் கூறினேன். அவர் கோபத்தோடு கூவினர் "எவ்வளவு உணர்ச்சியற்ற மனிதர் ஐயா, நீங்கள்! அவளுடைய இப்பொழுதைய உடல் நிலையில் இந்த விஷயத்தை நீங்கள் அவளிடம் சொல்ல வெட்கம் அடைந்திருக்க வேண்டும். உங்கள் மனைவி இப் பொழுது எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை என்று சொல்லுகிறேன். சிறிது ஆட்டத்தைக் கூட அவளால் தாங்க முடியாது. நடுவழியில் இறந்தால் கூட நான் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனல் நீங்கள் வற்புறுத்தினல், தாராளமாகச் செய்துகொள்ளுங்கள். மாமிசரசம் கொடுக்கக்கூடாது என்று சொன்னல், ஒரு நாள்கூட அவளை என் வீட்டில் வைத்திருக்க முடியாது."

எனவே, அவ்விடத்தைவிட்டு உடனே புறப்படு வதாகத் தீர்மானித்தோம். மழை தூற்றிக் கொண் டிருந்தது; புகை வண்டி நிலையமும் கொஞ்சம் தூரம். டர்பானிலிருந்து போனிக்சுக்குப் புகைவண்டி மூலம் போகவேண்டும். அங்கிருந்து எங்கள் உறைவிடத்திற்கு இரண்டரை மைல் பாட்டை வழிசெல்ல வேண்டும். நான் பெரிய ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியத்தைத்தான் மேற்கொண்டிருக்கிறேன் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனல் கடவுளிடம் நம்பிக்கை வைத்துக் காரியத்தில் ஈடுபட்டேன். போனிக்சுக்கு முன்னக்கூட்டியே ஆள் அனுப்பினேன். வெஸ்டுக்கு, ஒரு கட்டில், ஒரு பாட்டிலில் சூடானபால், இன்னொரு பாட்டிலில் வெந்நீர், கட்டிலில் கஸ்தூரிபாவைக் கொண்டு போக ஆறுபேர்—இவற் ருேடுப் புகைவண்டி நிலையத்தில் எங்களைச் சந்திக்கு மாறு, ஒரு கடிதம் எழுதி அனுப்பினேன். அடுத்த புகை வண்டியில் அவளைக் கூட்டிச் செல்லுவதற்குத் தோதாக, ஒரு ரிக்ஷாவைக் கொண்டு வந்து, அவளை அந்த

அபாயகரமான நிலையில் அதில் வைத்துப் புறப்பட்டுச் சென்றோம். கஸ்தூரிபாவை நாங்கள் ஒன்றும் உற்சாகம் மூட்ட வேண்டியதில்லை. அதற்கு மாறாக, அவள் எனக்கு ஆறுதல் சொல்வதானாள்: "எனக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. நீங்கள் கவலைப்படவேண்டாம்." என்றாள்.

பல நாட்களாக உணவில்லாமல் இருந்தபடியால், அவள் வெறும் எலும்பும் தோலுமாய் இருந்தாள். புகை வண்டி நிலையத்தின் பிளாட்பாரம் மிகப் பெரியது: ரிக்ஷா உள்ளே செல்ல முடியாததால் புகை வண்டிக்குச் செல்லுவதற்குக் கொஞ்ச தூரம் நடக்கவேண்டும். எனவே என் கைகளால் அவளைச் சுமந்து கொண்டு போய்ப் புகைவண்டிப் பெட்டியில் வைத்தேன். போனிக்சிலிருந்து, அவளைக் கட்டிலில் சுமந்து கொண்டு போனோம். தண்ணீர்ச் சிகிச்சையின் மூலம் அங்கு அவளுக்கு உடம்பு மெல்லத் தேறலாயிற்று.

48

வீட்டு சத்தியாகிரகம்

எனது முதல் சிறை அனுபவம் 1908-ம் ஆண்டில். ஒரு பிரமசாரி, அதாவது தன்னடக்கத்தை அனுஷ்டிக்க விரும்பும் ஒருவர், தானாகவே கடைப்பிடிக்க வேண்டிய விதிகள், சிறையில் கைதிகள் அனுஷ்டிக்க வேண்டிய விதிகளில் சில என்பதைக் கண்டேன். உதாரணமாக, பொழுது சாயுமுன், கடைசி உணவு முடிக்கப்பட வேண்டும், என்ற விதியாகும். இந்தியக் கைதிகளுக்காகட்டும், ஆபிரிக்காக் கைதிகளுக்காகட்டும், டீ, காப்பி என்பது கிடையாது. சமைக்கப்பட்ட உணவுக்கு, விரும்பினால் உப்பு சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் நாக்கின் ருசிக்காக அவர்களுக்கு எதுவும் கிடையாது.

சிறை மருத்துவ அதிகாரியிடம், எங்களுக்கு மசாலாப் பொடி கொடுக்கும்படியும், பதார்த்தங்கள் வேகும்போதே உப்பு சேர்க்க அனுமதிக்கும்படிக்கும் நாங்கள் கேட்ட போது, அவர் சொன்னார்: "உங்கள் நாக்கு ருசியைத் திருப்திப்படுத்துவதற்காக நீங்கள் இங்கு இருக்கவில்லை. உடல் நலத்தைக் கவனித்தால், மசாலாப் பொடி என்றும் அவசியும் இல்லை. உப்பைச் சமைக்கும்போது சேர்த்தாலும், பின் சேர்த்தாலும், வித்தியாசம் ஒன்றும் இல்லை."

இறுதியில் இந்தக் கட்டுப்பாடுகள் மிகுந்த சிரமத்தின் பேரில் தளர்த்தப்பட்டன. ஆனால் இவ் இரண்டும் தன்னடக்கத்திற்கு அவசியமான விதிகளே. வெளியிலிருந்து சுமத்தப்படும் கட்டுப்பாடுகள் வெற்றி பெறுவது அரிது; ஆனால் தானே கட்டுப்படுத்திக் கொண்டால், அது சிறந்த பலனைத் தருகிறது. எனவே சிறையிலிருந்து நான் விடுதலை அடைந்ததும், இவ் இரண்டு விதிகளையும் நான் எனக்குச் சுமத்திக் கொண்டேன். அப்பொழுது முடிந்த அளவு, டீ சாப்பிடுவதை நிறுத்தினேன்; பொழுது சாயுமுன் கடைசி உணவை முடித்துவிடுவேன். இவைகளைக் கடைப்பிடிப்பதில் எனக்கு இப்பொழுது பிரயாசையுமில்லை.

ஆனால் உப்பையே நான் ஒரே அடியாக விட்டு விடும்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இந்தக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்தார்ப்போல் பத்துஆண்டுகள் வரை நான் கடைப்பிடித்து வந்தேன். சைவ உணவைப் பற்றிய சில நூல்களில், மனிதனுக்கு உணவில் உப்பு அவசியமான ஒரு பொருள் அல்ல என்றும், அதற்கு மாறாக உப்பில்லா உணவே உடல் நலத்திற்கு உகந்தது என்றும், நான் படித்துள்ளேன். உப்பில்லா உணவு ஒரு பிரமசாரிக்கு நலன் பயக்கிறது என்று கருதினேன். உடல் நலம் குன்றியவர்கள், பருப்பு வகைகளை விலக்க வேண்டும் என்பதைப் படித்தும் உணர்ந்தும் இருந்

தேன். ஆனால் எனக்கு அவைகளில் மிக விருப்பம் உண்டு.

கஸ்தூரிபாவுக்குக் கொஞ்ச காலம் ஓய்வாக இருந்த பின்னர், மீண்டும் ரத்தப்பெருக்கு ஆரம்பித்தது. நோய் விடாப்பிடியான நோய் போலத் தோன்றிற்று. நீர் சிகிச்சையால் பலன் இல்லை. என்னுடைய சிகிச்சைகளில் கஸ்தூரி பாவுக்கு அதிக நம்பிக்கை கிடையாது; ஆனால் அவைகளை அவள் எதிர்க்கவில்லை. நிச்சயமாக, வெளி உதவியை ஒன்றும் அவள் வேண்டவில்லை. எனவே, என் சிகிச்சைகள் எல்லாம் பலனற்றுப் போகவே, உப்பையும் பருப்புகளையும் விலக்குமாறு அவளிடம் வேண்டினேன். எவ்வளவு தூரம் நான் ஆதாரங்களுடன் எடுத்துரைத்தாலும், அவள் இணங்கவில்லை. முடிவில், அவள் இப்பொருள்களை விலக்கிவிடுமாறு எனக்கு யோசனை சொல்லப்பட்டாலும், நான்கூட விடமாட்டேன் என்று எனக்குச் சவால் விடுத்தாள். எனக்கு இது வேதனையும், அதேபோல் மகிழ்ச்சியும் அளித்தது. என்னுடைய அன்பை அவளிடம் பொழிய ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்பதே மகிழ்ச்சிக்குக் காரணம். நான் அவளிடம் சொன்னேன்: "நீ தவறுதலாக எண்ணி உள்ளாய். நான் நோயுற்றிருந்து, மருத்துவர் இப்பொருள்களையோ அல்லது வேறு எப்பொருள்களையோ விட்டுவிடுமாறு கூறி இருப்பாராயின், நான் தயங்காமல் அவ்வாறே செய்வேன். ஆனால், இதோ! நீ செய்தாலும் செய்யாவிட்டாலும், நான் மருத்துவர் யோசனை ஒன்றும் இன்றியே, உப்பையும் பருப்புகளையும் ஓராண்டு விலக்குவேன்!" என்றேன். அவள் மிகவும் அதிர்ச்சி அடைந்தாள்; ஆழ்ந்த துக்கத்தோடு கதறினாள். "என்னை மன்னித் தருளுங்கள்! உங்களை அறிந்த நான் உங்களை இவ்வாறு தூண்டி இருக்கக் கூடாது. இப்பொருள்களை நான் விலக்குவதாக வாக்குக் கொடுக்கிறேன். தயவுசெய்து உங்கள் பிரதிக்ஞையை

விட்டுவிடுங்கள். இது என்ளுல் தாங்க முடியாத கஷ்டம்''—என்ருள்.

''இப்பொருள்களை விட்டு விடுவது உனக்கு மிக நல்லது. அவைகள் இல்லாததினுல் உனக்கு நல்லதே என்பதில் எனக்குச் சிறிதுகூடச் சந்தேகம் இல்லை. என் அளவில், செய்த பிரதிக்ஞையை பின்வாங்குவது முடியாது. அது எனக்கு நன்மை பயப்பது நிச்சயம். ஏனெனில், கட்டுப்பாடுகள் அனைத்தும் எப்படித் தூண்டப்பட்டாலும், மக்களுக்கு நலமே. ஆதலால் என்னை அப்படியே விட்டு விடுவாய். எனக்கு அது ஒரு சோதனையாகும்; மேலும் உனது தீர்மானத்தை நிறைவேற்றுவதில் உனக்கு அது ஒரு ஆன்மீக ஆதரவுமாகும்.'' என்றேன்.

எனவே, என்னை விட்டு விட்டாள். ''உங்களுக்கு மிகவும் பிடிவாதம். யார் சொன்ஞலும் கேட்கமாட்டீர்கள்,'' என்று அவள் சொல்லிவிட்டு, தன் கண்ணீரில் ஆறுதல் தேடினுள். இந்த நிகழ்ச்சி, சத்தியாக்கிரகத்தில் ஒரு உதாரணமாக எண்ணிக்கொள்ள விரும்புகிறேன். என் வாழ்க்கை நினைவுகளில் இது மிகவும் இன்பகரமானவைகளில் ஒன்ருகும். இதன் பின்னர் கஸ்தூரிபா விரைவில் உடல் தேற ஆரம்பித்தாள்.

உப்பும் பருப்புமில்லா உணவை, தென் ஆபிரிக்காவில் என் சக ஊழியர்கள் பலரிடம் சோதனை செய்து பார்த்திருக்கிறேன். அது நல்ல பலனையே தந்திருக்கிறது. இவ் உணவின் தன்மையைப் பற்றி, மருத்துவரீதியாக இருவிதக் கருத்துக்கள் இருக்கலாம். ஆனுல் ஆத்மீகரீதியாக, தன்னலமறுப்பெல்லாம் ஆன்மாவுக்கு நல்லதே என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. தன்னடக்கம் உள்ளவரின் வாழ்க்கை முறை எப்படி ஒரு போகியின் வாழ்க்கைக்கு வேறுபட்டிருக்க வேண்டுமோ, அப்படியே அவர்களின் உணவும் வேறுபட்டிருக்க வேண்டும்.

49

தன்னடக்கப்பாதையில்

மேற்சொன்ன காலத்தில், பிரமசரியத்திற்கு ஆதரவு கொடுப்பதற்காகப் பல மாறுதல்கள் புகுத்தப் பட்டன. பாலை விலக்கியது இவற்றில் முதலாவதாகும். இது 1912-ம் ஆண்டு டால்ஸ்டாய்ப் பண்ணையில் வைத்து நடந்தது. ஆனால் இந்த மறுப்பு எனக்குப் போதிய மன நிறைவு அளிக்கவில்லை. இதற்குப் பின்னர், வெறும் பழங் களைமட்டும் உணவாகக் கொண்டேன். தன்னடக்கத் துக்கு ஒரு சாதனமாக உண்ணுவிரதம் இருப்பதை ஆரம் பித்தேன். பண்ணை வாசிகள் எல்லோருமே முழுமை யான அல்லது சிறிதான இவ் உண்ணுவிரதங்களில், எங்களோடு கலந்து கொள்ள முற்பட்டனர். இது அவர் களுக்குப் பூரண நன்மையே அளித்தது என்பது எனக்கு நிச்சயம். இத்தன்னல மறுப்பு அவர்கள் உள்ளத்தை எவ்வளவு தூரம் தொட்டு, உடல் பிண்டத்தை வெற்றி கொள்ளும் முயற்சியில் எவ்வளவு தூரம் உதவி புரிந்தது, என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியாது.

உண்ணு விரதம், தன்னடக்கம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுக் கைக்கொண்டால்தான் அது மிருக இச்சைகளை அடக்க உதவி செய்யும். எனது நண்பர்களில் சிலர், மிருக இச்சையும், ருசியும் உண்ணு விரதத்தின் பின் விளைவுகளாகத் தூண்டப்பட்டிருப் பதைக் கண்டுள்ளார்கள். அதாவது, தன்னடக்கம் பெற வேண்டும் என்று ஓயாத விருப்பத்தோடு உண்ணு விரதம் கலந்து வந்தால் ஒழிய அது பயனற்றதே. பகவத் கீதையின் இரண்டாவது அதிகாரத்தின் புகழ் பெற்ற சுலோகம் இவ் இடத்தில் குறித்தற்கு உரியது :

"புலன்களை வெளியளவில் அடக்குபவனுக்குப் புறப் பொருள்கள் ஆசையை விட்டுவிட்டு தாம் மறைந்து

விடுகின்றன. ஆனால் அவன் பெரும் பொருளைக் கண்ட போது, அவ் ஆசையும் கூட மறைந்து விடுகின்றது.''

எனவே தன்னடக்கம் என்ற குறிக்கோளுக்கு உண்ணா நோன்பும், இனைய கட்டுப்பாடும், சாதனங்களில் ஒன்றாகும்; ஆனால் அதுவே அனைத்துமன்று. உடல் நோன்பு, உள்ள நோன்போடு கலந்து வரா விட்டால், வஞ்சகமும் கேடும் வந்து முடிவது நிச்சயம்.

டால்ஸ்டாய்ப் பண்ணையின் சிறுவர்களின் கல்வியை நான் மேற்கொள்ளுவதற்கு நீண்டகாலம் முன்னதாகவே, ஆத்மப் பயிற்சி ஒரு தனியான பயிற்சி என்பதை அறிந்திருந்தேன். ஆத்ம வளர்ச்சி என்பது, ஒழுக்கத்தை உருவாக்குவதும் கடவுளைப் பற்றிய ஞானம், தன்னைத் தான் அறிதல் என்பனவற்றை அடைவதற்கு ஏற்ற சக்தியை ஒருவர் பெறுவதும் ஆகும். மேலும், சிறுவர்களின் பயிற்சியில் இது ஒரு முக்கியமான பகுதி என்றும், ஆத்ம வளர்ச்சி இல்லாத பயிற்சி அனைத்தும் பயனற்றது என்றும், அது கெடுதலாகக் கூட ஆகலாம், என்றும் கருதினேன். எனவே, இந்த ஆன்மிகப் பயிற்சி எவ்வாறு அளிப்பது? குழந்தைகளைத் தோத்திரப் பாடல்களை மனனம் செய்து ஒப்புவிக்கச் செய்தேன்; நன்னெறிப் பயிற்சி பற்றிய நூல்களை அவர்களுக்குப் படித்துக் காட்டினேன். ஆனால் அது எனக்கு மனநிறைவு அளிக்கவே இல்லை. அவர்களோடு நெருங்கிப் பழகிய போது, ஒருவர், நூல்களின் மூலம் ஆன்மீகப் பயிற்சியைக் கற்பிக்க முடியாது என்பதைக் கண்டேன். உடலுக்குப் பயிற்சி உடல் அப்பியாசத்தின் மூலமும், அறிவுக்குப் பயிற்ச்சி அறிவு அப்பியாசத்தின் மூலமும் கற்பிக்கப்படவேண்டி இருப்பது போல, ஆன்மாவுக்குப் பயிற்சி, ஆன்ம அப்பியாசத்தின் மூலம்தான் சாத்தியமாகும். அந்த ஆன்மப் பயிற்சியும் ஆசிரியரின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் முற்றிலும் பொறுத்ததாகும். ஆசிரியர், மாணவர்கள் இடையில் இருந்தாலும்

இல்லாவிட்டாலும், தனது நெறிமுறையில் யாண்டும் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.

மைல் கணக்கான தூரத்தில் உள்ள ஒரு ஆசிரியருக்குத் தனது வாழ்க்கை முறையால், தனது மாணவர்களின் உள்ளத்தைப் பாதிக்கச் செய்வது சாத்தியமாகும். நான் ஒரு பொய்யுரைப்போனாக இருப்பேனாகில், பிள்ளைகளுக்கு உண்மை பேசுமாறு கற்பிப்பது, என்னளவில் ஒரு பயனற்ற செயலாகும். ஒரு கோழை ஆசிரியர், தன் மாணவர்களை வீரர்களாக்குவதில் ஒருக்காலும் வெற்றி காண முடியாது. தன்னடக்கம் அறியாதவர், தன்னடக்கத்தின் மதிப்பைப் பற்றித் தன் மாணவர்களுக்கு ஒருக்காலும் கற்பிக்க முடியாது. என்னுடன் வாழும் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும், நான் ஒரு நிலையான உதாரணப் பாடமாக இருக்க வேண்டும் என்பதைக் கண்டேன். இவ்வாறு மாணவர்கள் எனக்கு ஆசிரியராக ஆனார்கள். அவர்களுக்காகவேனும், நான் நல்லவனாகவும் நேர்மையாளனாகவும் வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேன். டால்ஸ்டாய்ப் பண்ணையில் நான் என்மீது சுமத்திக் கொண்ட அதிகரித்து வந்த கட்டுப்பாடும் அடக்கமும், என் பாதுகாப்பில் உள்ள பிள்ளைகளின் காரணமாகப் பெரும்பாலும் வந்தவைகளாகும் என்று நான் சொல்லலாம்.

50

நீதிமன்றத்தின் சில நினைவுகள்

வழக்குரைஞன் தொழில், ஒரு பொய்யுரைப்போன் தொழிலாகும் என்று மாணவராக நான் இருந்தபோது கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அப் பேச்சு என்னைப் பாதிக்கவில்லை; ஏனெனில், பொய்யுரைத்துப் பணமோ பதவியோ சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது.

ஒவ்வொருப் புதுக் கட்சிக்காரரிடமும், ஆரம்பத்திலேயே, ஒரு பொய் வழக்கை ஏற்று நடத்துவதையோ சாட்சிகளுக்குச் சொல்லிக் கொடுப்பதையோ அவர் என்னிடம் எதிர்பார்க்கக் கூடாது என்று எச்சரித்து விடுவேன். இதன் விளைவாகப் பொய் வழக்குகள் என்னிடம் வராதவாறு அவ்வளவு நற்பெயர் உண்டாக்கிக் கொண்டேன்.

ஒரு சமயத்தில், ஜோகனஸ்பர்க்கில் நீதிபதி முன்னிலையில் ஒரு வழக்கை நடத்திக்கொண்டிருந்த போது, எனது கட்சிக்காரர் என்னை ஏமாற்றிவிட்டார் என்பதைக் கண்டுபிடித்தேன். சாட்சிக் கூண்டில் அவர் முற்றிலும் முறிவுற்றதைக் கண்டேன். எனவே, எவ்வித வாதமுமின்றி வழக்கைத் தள்ளிவிடுமாறு நீதிபதியைக் கேட்டுக் கொண்டேன். எதிரி வக்கீல் அதிசயித்தார்; நீதிபதி மகிழ்ந்தார். ஒரு பொய் வழக்கை என்னிடம் கொண்டு வந்ததற்காக என் கட்சிக்காரரைக் கடிந்து கொண்டேன். பொய் வழக்குகளை நான் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்பது அவருக்குத் தெரியும்: இதனை அவருடைய மனதில் நன்ருகப் பட வைத்தபோது, தன் தவறை அவர் ஒப்புக்கொண்டார். நீதிபதியை அவருக்கு விரோதமாகத் தீர்ப்புக் கூறும்படி நான் கேட்டுக் கொண்டதைப் பற்றி, அவர் என்னிடம் கோபம் கொள்ளவில்லை என்று எனக்கு ஒரு நினைவு. எவ்வாருயினும், இவ் வழக்கில் நான் நடந்துகொண்டது, என் தொழில் வளர்ச்சிக்கு எவ்விதக் கேடும் விளைவிக்கவில்லை; உண்மையில், இது என் வேலையை மேலும் எளிதாக்கியது. சத்தியத்தில் எனக்கு உள்ள பக்தி, என் தொழில் துறைச் சகாக்களிடையே என் புகழை ஓங்கச் செய்தது, என்பதையும் நான் கண்டேன். நிறத்தடை இருந்தாலும்கூட, சில வழக்குகளில் அவர்களுடைய அன்பையும் கூட என்னுல் பெற முடிந்தது.

எனது தொழில் வேலையின்போது, எனது கட்சிக்

காரர்களிடமோ அல்லது சகாக்களிடமோ எனது அறியாமையை என்றும் மறையாமை எனது வழக்கமாகவும் இருந்தது. வழிதுறை தெரியவில்லை என்று நான் கருதிய போதெல்லாம், எனது கட்சிக்காரரை வேருெரு வக்கீலிடம் கலந்துகொள்ளுமாறு யோசனை கூறுவேன்; அல்லது அவர் என்னிடமே அவர் வழக்கு இருக்க விரும்பிஞல், பெரிய வக்கீலுடைய உதவியை நான் நாடிக்கொள்ள விடும்படி அவரைக் கேட்பேன். இந்தத் திறந்த மனப்பான்மை, எனது கட்சிக்காரர் களின் எல்லையற்ற பிரியத்தையும் நம்பிக்கையையும் எனக்குத் தேடிக் கொடுத்தது.

எனது கட்சிக்காரரும், சகஊழியரும், நண்பருமான பார்சிரஸ்டம்ஜி ஒரு சமயம் ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டார். அவர் தன்னுடைய காரியங்களில் பெரும்பாலனவற்றை என்னிடம் தெரிவித்து வந்த போதிலும், ஒன்றை என்னிடமிருந்து ஜாக்கிரதையாக மறைத்து வைத்திருந்தார். அவர், பம்பாயிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் நிறையப் பொருள்களை இறக்குமதி செய்பவர்; அதில் அவர் அடிக்கடி கள்ளக் கடத்தல் செய்துவந்தார். ஆஞல் அவர் சுங்க அதிகாரிகளிடம் நல்ல நேசமாக இருந்தபடியால், யாரும் அவரைச் சந்தேகிக்க நினைக்கவில்லை. வரிவிதிப்பதில், அவர்கள், இவர் பட்டியல்களை நம்பிச் செய்தார்கள். சிலர் கள்ளக் கடத்தலுக்கு அனுசரணையாகவும் இருந்திருக்கலாம்.

கண்ணீர்த் துளிகள் கன்னத்தின் வழி ஒழுக, அவர் என்னிடம் ஓடோடி வந்து, "சகோதர! உங்களை நான் ஏமாற்றிவிட்டேன். என் குற்றம் இன்று கண்டுபிடிக்கப் பட்டது. நான் கள்ளக் கடத்தல் செய்தேன்; எனவே நான் ஒழிந்தேன். நான் சிறைக்குச் சென்று அழிந்து போகவேண்டும். இந்தச் சங்கடத்திலிருந்து நீங்கள் ஒருவரே என்னைக் காப்பாற்ற முடியும்" என்ருர்.

நான் அவரைச் சாந்தமாக இருக்கும்படிச் சொன்னேன். "உம்மைக் காப்பாற்றுவது அல்லது காப்பாற்ருமலிருப்பது எல்லாம் 'அவன்' கையில் உள்ளது. என்னளவில், என் வழி உங்களுக்குத் தெரியும். ஒத்துக் கொள்ளுவது மூலம், நான் காப்பாற்ற முயலலாம்." என்றேன்.

அந்த நல்ல பார்சியின் மனம் பெரிதும் புண்பட்டது. "ஆனுல் உங்களிடம் நான் ஒத்துக்கொண்டது போதாதா?" என்று கேட்டார்.

"நீங்கள் எனக்குத் தவறிழைக்கவில்லை, ஆனுல் அரசாங்கத்துக்கு இழைத்திருக்கிறீர்கள். எனவே என்னிடம் ஒத்துக்கொண்டது எப்படிப் போதும்? என்று சாந்தமாகச் சொன்னேன்.

என்னுடைய கருத்தை மேலும் அவருக்கு விளக்கிச் சொன்னேன்: "இந்த வழக்கு நீதிமன்றத்துக்குக் கொண்டுபோக வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். உங்கள்மேல் வழக்குத் தொடருவதோ, அல்லது உங்களை விட்டுவிடுவதோ எல்லாம் சுங்க அதிகாரி கையில் இருக்கிறது. அவரும் அரசாங்க வழக்கறிஞர் சொல்லுவதைப் பார்த்துச் செய்யவேண்டும். அவ் இருவரையும் நான் சந்திக்கத் தயார். அவர்கள் நிர்ணயிக்கிற அபராதத்தைக் கொடுக்க நீங்கள் முன்வரவேண்டும் என்று நான் யோசனை கூறுகிறேன். அனுகூல பிரதிகூலங்களைச் சீர்தூக்கின், அவர்கள் இதற்கு இணங்கக்கூடும். ஆனுல், அவர்கள் அதற்கு இணங்காவிட்டால், நீங்கள் சிறைக்குப் போகத் தயாராக இருக்கவேண்டும். குற்றம் செய்வதில் தான் அவமானம் இருக்கிறதே ஒழிய, சிறைக்குச் செல்வதில் அல்ல என்பது என் கருத்து. அவமானத்துக்குரிய காரியம் ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது. சிறைவாசத்தை ஒரு தவமாகக் கருதவேண்டும். இனி ஒருக்காலும் கள்ளக்கடத்தலில் ஈடுபடுவதில்லை என்ற உறுதியிலேயே உண்மையான தவம் உறைவதாகும்."

பார்சிரஸ்டம்ஜி இவற்றை எல்லாம் சரிவர ஏற்றுக் கொண்டார் என்று நான் சொல்லுவதற்கில்லை. அவர் ஒரு தைரியசாலி. ஆனாலும், அச்சமயத்தில் தைரியம் அவரைக் கைவிட்டது. அவருடைய பேரும் புகழும் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. மிகுந்த கவனத் தோடும், உழைப்போடும் எழுப்பப்பட்ட இக்கட்டிடம் சுக்குநூறாக நொறுங்கிப் போனால், அவர் கதி என்ன ?

என் நாவன்மையை முழுதும் இவ்வழக்கில் உபயோகித்தேன். சுங்க அதிகாரியைச் சந்தித்து, விஷயம் முழுவதையும் அவருக்குத் தெரிவித்தேன். கணக்குப் புத்தகங்கள் அனைத்தையும் அவர் வசம் கொடுப்பதாக வாக்குச் சொன்னேன். மேலும், ரஸ்டம்ஜி தனது தவறை உணர்ந்து எவ்வளவு வருந்துகிறார் என்பதையும் அவரிடம் சொன்னேன்.

"அவரை நீங்கள் நீதி மன்றத்திற்கு இழுக்க வற்புறுத்தாதிருந்தால், நான் நன்றி உடையவனாக இருப்பேன்" என்றேன்.

இந்த உறுதியை அவரிடம் வாங்கிக் கொண்டு, அரசாங்க வழக்கறிஞரோடு கடிதப் போக்கு வரத்து ஆரம்பித்தேன்; அவரைச் சந்திக்கவும் செய்தேன். நான் முழுவதும் மனம்விட்டுச் சொன்னதை அவர் பாராட்டிய தோடு, நான் எதையும் அவரிடமிருந்து மறைக்கவில்லை என்பதையும் அறிந்து கொண்டார்.

பார்சிரஸ்டம்ஜியின் வழக்கு ராஜி செய்யப்பட்டது. கள்ளத்தனமாய்க் கடத்தியதாக ரஸ்டம்ஜி ஒத்துக் கொண்டதற்குக் கொடுக்க வேண்டிய வரிக்கு இரு மடங்குத் தொகை அபராதமாக அவர் கொடுக்க வேண்டும். ரஸ்டம்ஜி வழக்கு முழுவதையும் ஒரு காகிதத்தில் எழுதி, அதை ஒரு சட்டத்தில் அமைத்துத் தனது சந்ததியாருக்கும் சகவணிகர்களுக்கும் நிரந்தர நினைவூட்டியாய் நிற்கும் வண்ணம், தனது அலுவலகத்தில் தொங்க விட்டார்.

51

சத்தியாக்கிரகத்தின் பிறப்பு

ஸூலுக் 'கலக' சம்பந்தமான பணியிலிருந்து திரும்பிய பின், போனிக்சில் உள்ள நண்பர்களைச் சந்தித்து விட்டு, ஜோகனஸ்பர்க் வந்து சேர்ந்தேன். இங்கு, டிரான்சுவால் அரசாங்கத்தின் 1906-ம் ஆண்டு ஆகஸ்டு 22-ம் தேதி உள்ள விசேட 'கெஜ'ட்டில் அவசரச் சட்ட நகல் வெளியிடப்பட்டிருந்ததை ஆழ்ந்த வெறுப்போடு படித்தேன். இது, தென் ஆபிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு அடியோடு அழிவுதேடுதாகும். இதன்படி, டிரான்சுவாலில் குடி இருக்க உரிமையுள்ள, இந்திய ஆண், பெண், எட்டு வயதும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் ஒவ்வொருவரும், தன் பெயரை ஆசியப் பதிவாளர் முந்நிலையில் பதிவு செய்து கொண்டு, பதிவு செய்து கொண்ட சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். பதிவு செய்ய விரும்பும் விண்ணப்பதார்கள், தங்களுடைய பழைய அனுமதிகளை * ஆவணரிடம் சேர்ப்பித்து, தங்கள் விண்ணப்பத்தில் தங்கள் பெயர், முகவரி, சாதி, வயது முதலியன குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்தாரரின் உடலில் உள்ள சில முக்கிய அடையாளக் குறிகளை ஆவணர் குறித்துக் கொண்டு, அவருடைய விரல், கட்டைவிரல் ரேகைப் பதிவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் இவ்வாறு விண்ணப்பித்துக் கொள்ளத் தவறிய இந்தியர் ஒவ்வொருவரும் டிரான்சுவாலில் குடி இருக்கும் உரிமையை இழக்க வேண்டும். விண்ணப்பம் கொடுக்கத் தவறுவதும் சட்டப்படி குற்றமாகத் தீர்மானிக்கப்படும். அதற்குத் தண்டனை, அபராதம், சிறைவாசம் அல்லது நீதிபதியின் யுக்தப்படி நாடு கடத்துதல் ஆகும். பொதுப் பாட்டையில் நடந்து

* ஆவணர்—பதிவாளர், (Registrar).

போய்க் கொண்டிருப்பவரிடம்கூடச் சான்றிதழைக் காட்டுமாறு கேட்கப்படலாம். சான்றிதழ்களைப் பார்வை இட போலீஸ் அதிகாரிகள் தனிப்பட்டவர்களுடைய வீடுகளுக்குள் நுழையலாம். உலகத்தில் எந்தப் பகுதியிலும், சுதந்திர மக்களுக்கு எதிராக இத்தகைய சட்டம் கையாளப்படுவதை நான் கேட்டதே கிடையாது.

அடுத்த நாள், முக்கிய இந்தியர்களடங்கிய ஒரு சிறு கூட்டம் நடந்தது. அதில் அவர்களுக்கு அவசரச் சட்டத்தை, ஒவ்வொரு வார்த்தையாக எடுத்து விளக்கினேன். எனக்கு அதிர்ச்சி தந்ததுபோல, இது அவர்களுக்கும் அதிர்ச்சி தந்தது. அனைவரும் நிலைமையின் நெருக்கடியை உணர்ந்தனர்; ஒரு பொதுக் கூட்டம் நடத்தத் தீர்மானித்தனர்.

1906 செப்டெம்பர் 11 உ பொதுக் கூட்டம் நன்முக நடந்தேறியது. கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களில் மிக முக்கியமானது புகழ்பெற்ற நான்காவது தீர்மானமாகும். அதன்படி, தங்களுடைய எதிர்ப்பைப் புறக்கணித்து, அவசரச் சட்டம் சட்டமாக நிறைவேற்றப்படுமானுல், அதற்கு உட்படுவதில்லை என்று இந்தியர்கள் உறுதி எடுத்துக் கொள்ளுவதோடு, அவ்வாறு கீழ்ப்படியாமையினுல் ஏற்படும் தண்டனைகளை அனுபவிப்பது, என்பதுமாகும்.

எங்கள் இந்த இயக்கத்திற்கு என்ன பெயர் கொடுப்பது என்று எங்களில் யாருக்கும் தெரியவில்லை. திரு. மகன்லால் காந்தி, 'நல்வினையில் உறுதி' என்ற பொருள் தரும் 'சதாகிரஹ' என்ற சொல்லைப் பகன்ருர். இச்சொல் எனக்குப் பிடித்திருந்தது; என்ருலும், இன்னதைக் குறிக்க வேண்டும் என்று நான் விரும்பும் கருத்து முழுவதையும் அது பூரணமாகப் பிரதிபலிக்கவில்லை. எனவே, அதனைச் 'சத்தியாக்கிரகம்' என்று நான் திருத்தினேன். 'சத்தியம்' (உண்மை) அன்பை உள்ளடக்கியது. 'ஆக்கிரஹ'

(உறுதி) சக்தியை கிளப்புவதால், சக்திக்கு வேறொரு சொல்லாக உதவிநிற்கிறது. எனவே இந்த இந்திய இயக்கத்தைச் 'சத்தியாக்கிரகம்' என்று அழைக்க ஆரம்பித்தேன். 'சத்தியாக்கிரகம்'—அதாவது சத்தியமும் அன்பும், அல்லது அகிம்சையின்பால் பிறந்த ஆற்றலாகும். இது சம்பந்தமாகப் பின்னர் 'சாத்வீக எதிர்ப்பு' என்ற சொல்லைக் கைவிட்டேன்.

52

சிறை

1907-ம் ஆண்டு மார்ச்சு 21-ம் தேதியன்று ஒரே நாளில் டிரான்சுவால் பாராளுமன்றம், ஆசியர்களின் பதிவுச்சட்டத்தை, அதன் எல்லாக் கட்டங்களிலும் துரிதமாக நிறைவேற்றியது. 1907, ஜூலை 1-ம் தேதியில் இருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என்று சட்டம் பிரகடனப்படுத்தியது. அதன்படி ஜூலை 31-ம் தேதிக்குள் இந்தியர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பம் போடவேண்டும்.

1907 ஜூலை 1-ம் தேதி வந்தது. அனுமதி அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இந்திய சமூகம் ஒவ்வொரு அலுவலகத்தையும் பகிரங்கமாக மறியல் செய்யத் தீர்மானித்திருந்தார்கள். அதாவது அலுவலகத்திற்குப் போகும் பாதைகளில் தொண்டர்களை நிறுத்தி, மன உறுதி இல்லாத இந்தியர்களை அவர்களுக்கு அங்கு வைத்திருக்கும் பொறிகளில் மாட்டிக் கொள்ளாதபடி அவர்கள் எச்சரிக்கை செய்யவேண்டும்.

தங்களால் இயன்ற முயற்சிகள் அனைத்தும் செய்தும், 500-க்கு மேல் இந்தியர்களைப் பதிவு செய்து கொள்ள முடியவில்லை என்பதை ஆசிய இலாக்காக் கண்டதும், அது யாரையாவது ஒருவரைக் கைது

செய்யத் தீர்மானித்தது. ஜெர்மிஸ்டனில் வசித்த பல இந்தியர்களில் ஒருவர் பண்டித ராமசுந்தரர் என்பவர்.

அவர் பல இடங்களில், உணர்ச்சியான சொற்பொழிவுகள் பல செய்தார். ஜெர்மிஸ்டனில் உள்ள சில தீய இந்தியர்கள், ராமசுந்தராவைக் கைது செய்து விட்டால், அநேக இந்தியர்கள் அனுமதி பெற்றுக் கொள்ள முன் வருவார்கள் என்று ஆசிய இலாக்காவுக்கு யோசனை கூறினர்கள். இந்த ஆசையை ஆசிய இலாக்காவால் தவிர்க்க முடியவில்லை. எனவே ராமசுந்தரா கைது செய்யப்பட்டார். இத்துறையில் இதுவே முதல் வழக்கு ஆகையால், அரசாங்கமும் இந்தியர்களும் மிகவும் கிளர்ச்சி உற்றனர். அவர் தண்டனையடைந்த நாளைப் பேரார்வத்தோடு சிறப்பாக இந்தியர்கள் கொண்டாடினர்கள். தளர்ச்சியின் அறிகுறியே இல்லை; அதற்கு மாருக, எங்கும் குதூகலமும் உத்சாகமுமே தாண்டவமாடின. நூற்றுக்கணக்கானவர் சிறை செல்லத் தயாராக இருந்தனர். பதிவாளர்கள் குவிந்து வருவார்கள் என்று ஆசிய இலாகா அதிகாரிகள் நம்பி இருந்ததில், ஏமாற்றம் அடைந்தனர். ஜெர்மிஸ்டனில் கூட ஒரு பதிவாளர்கூட வரவில்லை. இந்திய சமுதாயமே இதில் இலாபம் உற்றது.

ஆனல், ராமசுந்தரர் ஒரு உதவாக்கரைக் காசானர். தன்னிச்சையான வாழ்க்கையில் பழகியும், கெட்ட வழக்கங்களில் ஈடுபட்டவராயும் இருந்ததாலும், சிறை வாழ்க்கையின் தனிமையும் கட்டுப்பாடும் அவரால் தாங்க முடியவில்லை. சிறை அதிகாரிகளும் இந்துக்கள் சமுதாயமும் அவரை எவ்வளவோ கவனத்துடன் பார்த்தும் சிறை அவருக்குத் துன்பமாய் தோன்றியபடியால், டிரான்சுவாலுக்கும் இயக்கத்துக்கும் இறுதியான கும்பிடு ஒன்றைப் போட்டுவிட்டு அவர் விலகிக் கொண்டார்.

இவ்வாறு நான் ராமசுந்தராவின் கதையைக்

கூறியது, அன்னுருடைய குறைகளைத் தூற்றுவதற்காக அல்ல; ஆனல் ஒரு படிப்பினையைக் குறிப்பதற்காகவே ஆகும். ஒவ்வொரு தூயஇயக்கத்தின் தலைவர்களும், தூய வீரர்களையே அதற்கு அனுமதிக்கும்படி பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதுவே அப் படிப்பினை.

ஆசிய இலாக்காவின் அதிகாரிகள், சில தலைவர்கள் வெளியில் இருக்கும் வரை இவ் இயக்கத்தின் வன்மையை எவ்வாற்ருனும் முறிக்க முடியாது என்று கருதலானுர் கள். எனவே 1907 கிரிஸ்துமஸ் வாரத்தில், சில தலைவர் களுக்கு நீதிபதிமுன் வருமாறு கட்டளைகள் வழுங்கப் பட்டன. எனவே, சட்டப்படி பதிவு செய்து கொள்ளு வதற்கு விண்ணப்பிக்கத் தவறியபடியால், ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள் டிரான்சுவாலை விட்டு வெளியேறும் படி ஏன் உத்திரவு பிறப்பிக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு வழுங்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க, அவற்றில் குறித்தபடி 1907 டிசம்பர் 28உ சனிக்கிழமை, அவர்கள் நீதிபதிமுன் வந்தார்கள்.

நீதிபதி ஒவ்வொரு வழக்கையும் தனியாக நடத் திஞர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலரை நாற்பத்தி எட்டு மணி நேரத்திலும், சிலரை ஏழு நாட்களிலும், வேறு சிலரைப் பதினுலு நாட்களிலும் டிரான்சுவாலை விட்டு வெளியேறுமாறு நீதிபதி உத்திரவிட்டார். குறித்த கால வரம்பு 1908 ஜனவரி 10-ம் தேதியோடு முடிவுற்றது. அதே நாளில் தண்டனைக்காக நாங்கள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோம். எங்களில் எவரும் எவ்வித எதிர்வாதமும் பண்ணுவதாகவே இல்லை. குறித்த காலத்தில் டிரான்சுவாலை விட்டு வெளியேறுமாறு கொடுத்த உத்திரவுக்குக் கீழ்ப்படியாத குற்றச்சாட்டை நாங்கள் எல்லோரும் ஒத்துக்கொண்டோம்.

ஒரு சிறிய அறிக்கை கொடுக்க நான் அனுமதி கேட்டேன். அவ் அனுமதி பெற்றதும், என்னுடைய

வழக்குக்கும், பின்னால் வரும் வழக்குகளுக்கும் வேறுபாடு காணவேண்டும் என்று நான் கருதுகிறேன் என்று சொன்னேன். பிரிட்டோரியாவில் என் சக ஊழியர்கள் மூன்று மாதம் கடுங்காவலும், பெரிய தொகை அபாராதமுமாகவும், அபராதம் கொடுக்கத் தவறினால், மேலும் மூன்று மாதக் கடுங்காவல் என்றும், தண்டிக்கப் பட்டுள்ளதாக அப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். இவர்கள் குற்றம் செய்திருந்தால், நான் அதைவிடப் பெரிய குற்றம் செய்துள்ளேன். எனவே, உயர்ந்த தண்டனையை எனக்கு விதிக்குமாறு நீதிபதியைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் நீதிபதி என் வேண்டு கோளுக்கு இணங்காது, எனக்கு 2 மாதம் வெறுங் காவல் தண்டனை கொடுத்தார்.

இரண்டாவது மூன்றாவது நாட்களில் இருந்து, சத்தியாக்கிரகிகள் அதிகமாக வர ஆரம்பித்தனர். அவர்கள் தண்டனையை நாடினார்கள். அவர்களில் பெரும்பாலோர் வீதியில் விற்கும் வியாபாரிகள். நாங்கள் கைதியான பின்னர் சிறைகளை நிரப்புவது என்று சமூகம் தீர்மானித்திருந்தது. இதில் வீதி வணிகர்கள் தலைமைப் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் கைது செய்யப்படுவது எளிது. தங்கள் 'லைசென்சை'க் காட்ட மறுக்கவேண்டியதுதான்; அவர்களைக் கைது செய்ய அது போதும். இவ்வழியில், ஒரு வாரத்தில் நூற்றுக்கு அதிகமான சத்தியாக்கிரகக் கைதிகள் வந்து சேர்ந்தனர். ஒவ்வொரு நாளும் சிலர் நிச்சயம் வந்து கொண்டிருந்தபடியால், நாளிதழ் ஒன்றுமில்லாமல், சிறையில் எங்களுக்குத் தினப்படிச் செய்தி கிடைத்துக்கொண்டிருந்தது. அதிகமான சத்தியாக்கிரகிகள் கைது செய்யப்பட்டபோது, அவர்களுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஜோகனஸ்பர்க்கில், கடுங்காவல் தண்டனை அடையாத சிறைக்கைதிகளுக்குக் காலையில் சோளக் கஞ்சி

கிடைத்தது. அதில் உப்புக்கிடையாது. ஆனால் ஒவ்வொரு கைதிக்குக்கொஞ்ச உப்புத் தனியாகக்கொடுக்கப்பட்டது. நண்பகலில், கைதிகளுக்கு நான்கு அவுன்சு அரிசியும். நான்கு அவுன்சு ரொட்டியும், ஒரு அவுன்சு நெய்யும், சிறிது உப்பும் கொடுக்கப்பட்டன; மாலையில் சோளக் கஞ்சி; கொஞ்சம் காய்கறி; அதில் அதிகப்படியாக உருளைக்கிழங்கு ; சிறியதாயிருந்தால் இரண்டு கிழங்கும் வடிவத்தில் பெரியதாயிருந்தால் ஒன்றும்—கொடுக்கப் பட்டன. இந்த உணவு எங்கள் ஒருவருக்கும் திருப்தி அளிக்கவில்லை. சாதம் குழைவாகச் சமைக்கப்பட்டது. நாங்கள் சிறை மருத்துவரிடம் மசாலைப்பொருள்கள் தருமாறு கேட்டோம்; இந்தியாவில் உள்ள சிறைகளில் இவைகள் அனுமதிக்கப்படுவதாக நாங்கள் அவரிடம் சொன்னோம். "இது இந்தியா அல்ல" என்பதே அவருடைய கடுமையான பதில். "சிறை உணவில் ருசியைப் பற்றிய கேள்வியே கிடையாது. எனவே மசாலப் பொருள்கள் அனுமதிக்கப்பட முடியாது." திட்டப்படி உள்ள உணவில் தசை வளர்க்கும் பொருள்கள் இல்லாத காரணத்தைக் கொண்டு, நாங்கள் பருப்புத் தரும்படி கேட்டோம். "கைதிகள், மருத்துவ ரீதியான வாதங்களில் இறங்கக் கூடாது" என்று மருத்துவர் பதில் உரைத்தார். "வாரம் இருமுறை சோளத்திற்குப் பதிலாக, வேகவைத்த அவரைக் காய்கள் உங்களுக்கு வழங்கப் படுவதால், தசை வளர்க்கும் உணவு உங்களுக்குக் கிடைக்கிறது. ஒரு வாரத்திலோ, அல்லது இரு வாரத்திலோ, பற்பல நேரங்களில் உட்கொள்ளப்படும் பலப் பல உணவுகளிலிருந்து வெவ்வேறு பொருள்களைப் பிரித்து எடுக்க, மனிதக் குடலுக்கு இயலுமானால், மருத்துவர் வாதம் பொருத்தமானதே.

நாங்கள் சிறையில் அரைமாதம் இருந்தோம்; அப்போது, அரசாங்கத்துடன் ஒரு ராஜி செய்வதைப்பற்றிச் சில பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகப் புதி

தாக வந்தவர்கள் செய்தி கொண்டு வந்தார்கள். இந்தியர்கள் தாங்களாகவே வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும், என்றும், அப்படி இந்தியர்களில் பெரும் பாலோர் தாமே வந்து பதிவு செய்து கொண்டால், அரசாங்கம், 'கறுப்புச் சட்டம்' என்று அழைக்கப்பட்டு வந்த ஆசியப் பதிவுச் சட்டத்தை ரத்து செய்துவிட வேண்டும் என்பதும் பிரேரேபிக்கப்பட்ட உடன்படிக் கையின் சாரமாகும். தளபதி சுமட்சைச் சந்திக்க நான் பிரிட்டோரியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். நான் எடுத்துரைத்த ஒரு திருத்தத்தைப் பற்றி அவருடன் வாதித்த பின்னர், நகல் உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். எனது நாட்டு மக்களுக்கு உடன்படிக்கையின் சரத்துக்களைப் பற்றி எங்கும் சென்று விளக்கி வந்தேன்.

53

தாக்கப்பட்டேன்

கைரேகைப் பதிவுசெய்ய நான் இணங்கியதற்காக இரண்டு பட்டானியர்கள் என்னிடம் கோபம் கொண் டனர். 1908 பிப்ரவரி 10-ம் நாள் காலை எங்களில் சிலர் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்குப் போகத் தயார் செய்து கொண்டிருந்தோம். பதிவு வேலையை இயன்ற மட்டும் வெகு விரைவிலே முடிக்கவேண்டிய முக்கிய அவசியத்தைச் சமூகத்திடம் நன்ருக உணர்த்தப் பட்டுள்ளது. கூச்சத்தை நீக்கச் செய்வதற்கும், சம் பந்தப்பட்ட அதிகாரிகள், தங்கள் கடமைகளை மரியா தையோடு நிறைவேற்றுகிருர்களா என்பதைக் கவனிக் கவும், பொதுவாக எல்லா ஏற்பாடுகளையும் கண்காணித் துக் கொள்ளவும், முதல் நாளில் சான்றிதழ்கள் பெறு

வதற்குத் தலைவர்கள்தான் முதலாவதாகப் போக வேண்டும் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. எனது அலுவலகத்துக்குச் சென்றபோது—அதுவே சத்தியாக் கிரகச் சங்கத்தின் அலுவலகமும் ஆகும்—கட்டிடத்திற்கு வெளியே மீர் ஆலம் என்ற பட்டானியனும் அவருடைய தோழனும் நிற்கக் கண்டேன். மீர்ஆலம் என்னுடைய பழைய கட்சிக்காரர்களில் ஒருவர்; தன்னுடைய காரியங் கள் அனைத்திலும் என்னுடைய ஆலோசனையை நாடு வது வழக்கம். அவர் சரியாக ஆறு அடி உயரம் உள்ள வர்; நல்ல வன்மை பொருந்திய பெரிய உடற் கட்டுள்ள வர். மீர் ஆலத்தை அலுவலகத்தின் உள்ளே பார்ப்ப தற்குப் பதிலாக இன்றுதான் முதல் முதலாவதாக வெளி யிலே பார்க்கலானேன். என் கண்கள் அவர் கண்களைச் சந்தித்தாலும், அவர் என்னை வணங்கவில்லை. நான் அவரை வணங்கினேன்; அவர் பதில் வணக்கம் செய் தார். வழக்கம்போல், "என்ன, எப்படி இருக்கிறீர் கள்?" என்று கேட்டேன். தான் நலமாக இருப்பதாய்ச் சொன்னதாக நினைவு. ஆனால் இன்று அவர் முகத்தில் வழக்கமாயுள்ள புன்னகை நிலவவில்லை. அவருடைய கோபக் கண்களைக் கவனித்தேன்; என் உள்ளத்தில் அதைக் குறித்துக் கொண்டேன். ஏதோ நடக்கப் போகிறது என்று நினைத்தேன். அலுவலகத்திற்குள் சென்றேன். தலைவர் திரு. யூசுப்மியானும், ஏனைய நண் பர்களும் வந்தார்கள். நாங்கள் ஆசியக் காரியாலயத் திற்குப் புறப்பட்டோம். மீர்ஆலமும் அவருடைய தோழர்களும் எங்களைப் பின் தொடர்ந்தார்கள்.

பதிவு அலுவலகத்திற்கு மூன்று நிமிட நடை தூரத்துக்கு அதிகமில்லாத, ஆர்னட்கிப்சன் கடை வெளிப்பக்கத்தில், வான்பிரான்டிஸ் தெருவழியாக நாங் கள் போய்க் கொண்டிருந்த போது, மீர்ஆலம் என்னை வணங்கி "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"பத்துக் கைரேகைகளைக் கொடுத்து விட்டுப் பதிவுச் சான்றிதழ் வாங்க உத்தேசிக்கிறேன்" என்று பதில் உரைத்தேன். "நீங்கள் என்கூட வந்தால், இரண்டு கட்டைவிரல் ரேகைப் பதிவுகளோடு உங்களுக்கு முதலில் சான்றிதழ் வாங்கித் தருகிறேன். அதன் பின்னர் என் கை ரேகைகள் கொடுத்துவிட்டு நான் ஒன்று பெற்றுக் கொள்ளுகிறேன்." என்றேன். இந்தக் கடைசி வாக்கியத்தை நான் முடிப்பதற்குள்ளாகப் பின்புறமிருந்து ஒரு பலத்த தடிஅடி என் தலையில் விழுந்தது. என் உதடுகளில் 'ஹேராம்' (ஓ, கடவுளே) என்ற சொற்களோடு நான் உடனே மூர்ச்சையுற்றுக் கீழே தரையில் நெடுஞ்சாண்கடையாக விழுந்து விட்டேன். பின்னர் நடந்ததைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் மீர் ஆலமும், அவருடைய தோழர்களும், எனக்கு மேலும் அடியும் உதையும் கொடுத்தார்கள். அவற்றில் சிலவற்றை யூசுப்மியானும், தம்பி நாயுடுவும் என்மேல் விழாது தடுத்தனர். அதன் விளைவாக அவர்களும், அன்னார்களுடைய தாக்குதலுக்குக் குறியாகலானார்கள். இந்தச் சத்தம் தெருவில் சென்று கொண்டிருந்த சில ஐரோப்பியர்களை அவ்விடத்திற்கு இழுத்தது. மீர்ஆலமும் அவருடைய தோழர்களும் ஓட்டம் பிடித்தனர்; ஆனால் அவ் ஐரோப்பியர்களால் பிடிபட்டனர். இதற்குள்ளே போலீசு வந்து, அவர்களைக் கைது செய்தது. என்னை எடுத்துத் தூக்கிக் கொண்டுபோய் திரு. ஜே. ஸி. கிப்சனின் சொந்த அலுவலகத்தில் கொண்டு வைத்தார்கள். எனக்குச் சுய நினைவு வந்ததும், திரு. டோக் என்மேல் குனிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். "எப்படி இருக்கிறது?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"நான் சரியாக இருக்கிறேன்" என்று பதில் சொன்னேன். "ஆனால் பற்களிலும் விலா எலும்பிலும் வலி இருக்கிறது. மீர்ஆலம் எங்கே?"

"மீர் ஆலம், ஏனையரோடு கைது செய்யப் பட்டார்."

"அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்."

"அஃதெல்லாம் மிகச் சரிதான். ஆனால் இங்கு நீங்கள், உங்கள் உதடும் கன்னமும் மோசமாக கீறப் பட்டு ஒரு அன்னியரின் அலுவலகத்தில் இருக்கிறீர்கள். உங்களை மருந்தகத்திற்குக் கொண்டுபோகப் போலீசார் தயாராக இருந்தனர். ஆனால் நீங்கள் எங்கள் இடத் திற்கு வந்தால், நானும் என் மனைவியும், எங்களால் இயன்ற அளவு உங்கள் சௌகரியத்தைக் கவனித்துச் செய்வோம்."

"சரி, என்னை உங்கள் இடத்திற்கே அழைத்துச் செல்லுங்கள். போலீசு என்னை அழைத்துச் செல்லத் தயாராக இருந்ததற்கு நன்றி கூறுங்கள்; ஆனால் உங்க ளோடு போவதையே நான் விரும்புவதாகச் சொல் லுங்கள்."

ஆசியர்கள் பதிவாளர் திரு. சாம்னே அவ் இடத் திற்கு வந்தார். சுமித் தெருவில் உள்ள இந்த நல்ல பாதிரியர் வீட்டுக்கு என்னை வண்டியில் வைத்துக் கொண்டு போனார்கள்; ஒரு வைத்தியர் அழைக்கப் பட்டார். இதற்கு இடையில் நான் சாம்னேவிடம் கூறி னேன்: "நான் உங்கள் அலுவலகத்திற்கு வந்து, பத்துக் கை ரேகைகள் கொடுத்துவிட்டுப் பதிவுச் சான்றிதழை முதலாவது பெற்றுக்கொள்ள விரும்பினேன். ஆனால், ஆண்டவன் வேறு விதமாக விரும்பிவிட்டார். ஆயினும், கடுதாசிகளை இங்குக் கொண்டுவந்து, நான் உடனே பதிவு செய்துகொள்ள இடம் அளிக்குமாறு இப்பொழுது உங்களை நான் கேட்டுக்கொள்ளவேண்டி இருக்கிறது. எனக்கு முன்பதாகப் பதிவு செய்ய யாரையும் அனு மதிக்க மாட்டீர்களென நம்புகிறேன்."

அதைப் பற்றி இப்பொழுது என்ன அவசரம்? என்று சாம்னே கேட்டார். "வைத்தியர் விரைவில்

இங்கு வந்து விடுவார். நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள் ளுங்கள். எல்லாம் சரியாகிவிடும். நான் மற்றவர் களுக்குச் சான்றிதழ்கள் கொடுத்து விடுகிறேன். ஆனால் உங்கள் பெயரை ஜாபிதாவில் முதலாவதாக வைத்துக் கொள்ளுகிறேன்.'' என்றார்.

''அப்படி அல்ல. நான் உயிரோடிருந்து, ஆண்டவன் திருவுளச் சம்மதமும் இருக்குமானால், நானே முதல் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுவதாகப் பிரதிக்ஞை பூண்டுள்ளேன். எனவேதான், கடுதாசிகளை இங்கே, இப்பொழுதே கொண்டுவருமாறு நான் வற்புறுத்துவது'' என்றேன்.

இதன்மேல் கடுதாசிகளைக் கொண்டுவர சாம்னே சென்றார்.

நான் இரண்டாவதாகச் செய்தது, அரசாங்க வக்கீலுக்கு, என்மேற் பட்ட அடிகளுக்குக் குற்றவாளிப் பொறுப்பை மீர் ஆலத்தின் மேலும் மற்றவர்கள் மேலும் சுமத்தவில்லை என்றும், எவ்வாறாயினும் அவர்கள்மேல் வழக்குத் தொடர்வதை நான் விரும்பவில்லை என்றும், எனவே என் பொருட்டாக அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று நான் நம்புவதாகவும், ஒரு தந்தியை அனுப்பியதாகும். ஆனால், ஜோகனஸ்பர்க்கிலுள்ள ஐரோப்பியர்கள், குற்றவாளிகளுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைப் பற்றிக் காந்தி எவ்விதமான கருத்துக் கொண்டிருந்தாலும், தென் ஆபிரிக்காவில் அவைகளுக்கு அமல் கொடுக்கக்கூடாது என்று, அரசாங்க வக்கீலுக்கு வன்மையாக எழுதி இருந்தார்கள். காந்தி அவராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கலாம். ஆனால் தாக்குதல் நடந்தது தனிப்பட்ட இடத்தில் அல்ல; ஆனால் பொதுப் பாட்டையில்; எனவே அது ஒரு குற்றமாகும். பல ஐரோப்பியர்கள் சாட்சி சொல்லக் கூடியவர்கள் உளர்; எனவே குற்றமிழைத்தோர் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் பேரில், மீர் ஆலத்

தையும், மற்றொருவரையும் மீண்டும் கைதி செய்தார்கள்; இவர்களுக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. என்னைச் சாட்சியாக அழைக்கவில்லை.

சமூகத்தினருக்கு அடியிற் கண்டவாறு சிறிய குறிப்பொன்றை எழுதித் தலைவர் மூலமாக அதை வெளியிட அனுப்பினேன் :

''திரு. டோக்குடையவும் அவருடைய மனைவியுடையவும் அன்பான ஆதரவில் நான் சுகமாக இருக்கிறேன். வெகு விரைவிலே என் கடமையை ஏற்கமுடியும் என நினைக்கிறேன்.

இச் செயலைச் செய்தவர்கள், தாங்கள் செய்வது இன்னதென்று அறியவில்லை. நான் செய்தது தவறான காரியம் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே முறையில் அவர்கள் அதற்குப் பரிகாரத்தைத் தேடிக்கொண்டார்கள். எனவே அவர்கள் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இத்தாக்குதல் முசல்மான்களால் செய்யப்பட்டதால், ஒரு வேளை இந்துக்கள் மனம் புண்படலாம். அப்படி இருந்தால், உலக முன்னிலையிலும் அவர்களைப் படைத்தவன் முன்னிலையிலும், தங்களைத் தவறுக்கு உள்ளாக்கிக்கொண்டவர்கள் ஆவார்கள். அதற்குப் பதில் இன்று சிந்திய இரத்தம் இரண்டு சமூகத்தாரையும் பிரிக்கொணாது இணைக்கட்டும்! இதுவே என் இதய பூர்வமான பிரார்த்தனை. அதனை ஆண்டவன் அருள்வாராக!

சாம்னே கடுதாசிகளோடு வந்தார்; நான் என் கை ரேகைகளைக் கொடுத்தேன்: ஆனால் வேதனையின்றி ரேகைகளைப் பதிவு செய்யவில்லை. அப்பொழுது சாம்னேயின் கண்களில் கண்ணீர் மல்குவதைக் கண்டேன். அவரைப் பற்றி நான் அடிக்கடி கடுமையாக எழுத வேண்டி இருந்தது. ஆனால், கால நிகழ்ச்சிகள் எவ்வாறு

மனித உள்ளத்தை இளக்கக் கூடும் என்பதை இது காட்டிற்று.

இவைகளெல்லாம் சில நிமிடங்களுக்கு மேல் பிடிக்க வில்லை என்பதை வாசகர் எளிதே தெரியலாம். திரு. டோக்கும் அவருடைய நன்மனைவியும் நான் பூரண அமைதியோடும், சாந்தியோடும் இருக்கவேண்டும் என்று கவலையோடிருந்தனர்; எனவே, தாக்குதலுக்குப்பின், எனது இம் மன நிகழ்ச்சிகளைக் கண்டு வேதனை உற்றனர். இது, என் உடல்நலனைப் பாதிக்கும் வகையில், எதிர்ச் செயலை விளைவிக்கலாம் என்று அஞ்சினார்கள். எனவே என் படுக்கைக்கு அருகில் இருந்தவர்களைச் சமிக்ஞைகள் மூலமும், இனைய உபாயங்களின் மூலமும், வெளியே போகும்படி செய்தனர்; என்னையும், எழுதக் கூடாதென்றும், எதையும் செய்யக் கூடாது என்றும் வேண்டினர். நான் அமைதியாகப் படுத்திருக்கும் வண்ணம், அப்பொழுது ஒரு சிறுமியாக இருந்த அவர்களுடைய மகள் ஆலிவ் என்பவளை எனக்குப் பிரியமான 'ஒளியே, அன்பான ஒளியே' என்ற ஆங்கிலப் பாடலைப் பாடச் சொல்லுமாறு, எழுத்துமூலம் வேண்டிக் கொண்டேன். திரு. டோக்குக்கு இது மிகவும் பிடித்திருந்தது. எனவே, இனியதொரு புன்முறுவலோடு எனது இவ் வேண்டுகோளுக்கு இணங்கினார். சமிக்ஞைகளால் அவர் ஆலிவை அழைத்து, வாசற்படிப் பக்கம் நிற்கச் செய்து, தாழ்ந்த குரலில் அப்பாட்டைப் பாடுமாறு சொன்னார். நான் இதைச் சொல்லும்போதே, அக்காட்சி முழுதும் என் மனக் கண் முன் தோற்றம் அளிக்கிறது; சின்னஞ் சிறிய குழந்தை ஆலிவின் இன்னிசை ஓசை இன்றும் என் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.

54

மீண்டும் சத்தியாக்கிரகத் துவக்கம்

இந்தியர்கள் தாங்களாகவே பதிவு செய்து கொண்டார்கள். எனவே அரசாங்கம் அவர்களைப் பொறுத்த வரையில், கறுப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். ஆனால் கறுப்புச் சட்டத்தை ரத்து செய்வதற்குப் பதிலாக, தளபதி சுமட்ஸ், புதிய நடவடிக்கை ஒன்று எடுத்தார். கறுப்புச் சட்டத்தைச் சட்டப் புத்தகத்தில் அப்படியே வைத்துக் கொண்டார்; சட்டப்படி குறிப்பிட்ட தேதிக்குப் பின்னால் எடுத்துக்கொண்ட சான்றிதழ்களையும் சான்றிதழ் பெற்றிருந்தவரையும் சட்டத்தின் அமலுலிருந்து எடுப்பதின் மூலமாகத் தானாகச் செய்து கொண்ட பதிவுகளைச் சட்டபூர்வமாக்கியும், ஆசியாக்காரர்கள் பதிவு செய்வதற்கு மேற்கொண்டு சட்டப்பிரிவுகள் சேர்த்தும், சட்ட சபையில் ஒரு மசோதாக் கொண்டு வந்தார். அம்மசோதாவை நான் படித்தபோது திடுக்கிட்டேன்.

சத்தியாக்கிரகிகளால், அரசாங்கத்துக்கு ஒரு 'இறுதி'க் கடிதம் அனுப்பப் பட்டது. "உடன் படிக்கைப்படி ஆசியக்காரர் சட்டம் ரத்துச் செய்யப் படாவிட்டால், குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அவ்வாறான முடிவு இந்தியர்களுக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், இந்தியர்கள் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் எரிக்கப் படும்; அவர்கள் அதன் விளைவுகளைப் பணிவோடு ஆனால் உறுதியோடு ஏற்றுக் கொள்ளுவார்கள்."—என்பது அதன் சாரம்.

புது ஆசியக்காரர் மசோதாச் சட்டசபையில் நிறைவேற்றப்படுவதற்கிருந்த அதே தேதியில், அவ் இறுதிக் கடிதத்தின் கெடு முடிவுறுவதாகும். சான்றிதழ்களை எரிக்கும் பொதுக் கொண்டாட்டம் நடத்த, அக் காலவரையறைக்கு இரண்டு மணி நேரம் கழித்து ஒரு

கூட்டத்திற்கு ஏற்பாடாகி இருந்தது. மிகவும் எதிர் பாராத விதமாக ஒருக்கால் அரசாங்கத்திடமிருந்து ஒரு அனுகூலமான பதில் கிடைக்கப்பெற்றாலும் கூட, அக் கூட்டம் பயனற்றதாகி விடாது என்று சத்தியாக்கிரகக் குழுவினர் கருதினர்; எவ்வாறென்றால், அந்த நிலையில் அரசாங்கத்தின் அனுகூலமான முடிவை சமூகத்தினருக் குத் தெரிவிக்க அக் கூட்டத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

கூட்டத்தின் நடவடிக்கை தொடங்கப்போகும் தறு வாயில், அரசாங்கத்திடமிருந்து வந்த தந்தியை ஒரு தொண்டர் சைக்கிளில் கொண்டுவந்தார். அதில், இந்திய சமூகத்தினுடைய உறுதிக்கு அவர்கள் வருந்து வதாகவும், அவர்களுடைய நடவடிக்கையின் போக்கை மாற்றிக் கொள்ள இயலாமையைத் தெரிவித்தும் இருந் தது. தந்தி கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. சான்றிதழ் களை எரிக்கும் நல்லதொரு வாய்ப்புத் தங்களிடமிருந்து எப்படியும் நழுவிவிட வில்லை என்பதற்கு மகிழ்ச்சி அடைந்ததுபோல, அத்தந்தியைக் கூட்டத்தினர் ஆர வாரத்தோடு வரவேற்றார்கள்.

இந்தக் கூட்டத்திற்கு மீர் ஆலமும் வந்திருந்தார். அவர் என்னை அவ்வாறு தாக்கியது தவறு என்பதை அறிவித்தார். கூட்டத்தார் மகிழ, தனது அசல் சான்றிதழை என்னிடம் கொடுத்தார். (தானாக வாங்கும் சான்றிதழ் அவர் பெறவில்லை). அவர் கையைப் பிடித்து, மகிழ்ச்சியோடு அமிழ்த்தி, அவரிடம் நான் மனதில் என்றும் வெறுப்புக் கொண்டதில்லை என்று மீண்டும் ஒருமுறை உறுதி கூறினேன்.

எரிக்கப்படுவதற்கு, 2000-க்கு மேற்பட்ட சான்றிதழ் களை ஏற்கெனவே குழுவினர் பெற்றிருந்தனர். 'பார பின்' எண்ணை தோய்ந்து இருந்த, யூசப் மியான் தீ வைத்த தீக்குழியில் அவைகள் எல்லாம் எறியப் பட்டன. கூட்டத்தினர் முழுவதும் எழுந்து நின்று,

அவை எரிகின்ற போது, தங்களுடைய இடைவிடாத ஆரவாரங்களின் எதிரொலிகளால் அவ்விடம் முழங்குமாறு செய்தனர். இன்னும் தங்கள் சான்றிதழ்களைக் கொடாது வைத்துக்கொண்டிருந்தவர்களில் சிலர் அவைகளைப் பெருவாரியாக மேடைக்குக் கொண்டு வந்தனர். இவைகளும் தீக்கிரையாயின.

அக்கூட்டத்தில் இருந்த ஆங்கில நாளிதழ்களின் நிருபர்களின் உள்ளத்தில் இக்காட்சி முழுவதும் ஆழ்ந்து பதியலாயிற்று; அவர்கள் சஞ்சிகைகளில் அக்கூட்டத்தைப் பற்றித் தத்ரூபமாக வருணித்திருந்தார்கள்.

கறுப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்ட அதே ஆண்டில், தளபதி சுமட்சு, டிரான்சுவால் குடியேற்றத் தடை மசோதா என்று அழைக்கப்பட்ட மற்றொரு மசோதாவைச் சட்டசபையில் நிறைவேற்றினர். இந்தச் சட்டம், டிரான்சுவாலுக்குள் புதியதாக வரும் ஒரு இந்தியரைக்கூடப் புகவிடாது மறைமுகமாகத் தடுத்தது.

இந்தியர்களுடைய உரிமைகளுக்கு உலைவைக்கும் இப்புதிய தலையீட்டை எதிர்ப்பது அவர்களுக்கு முழுதும் அவசியமாயிற்று. எனவே அநேக சத்தியாக்கிரகிகள் வேண்டுமென்றே டிரான்சுவாலுக்குள் புகுந்து, சிறை வைக்கப்பட்டனர். நானும் மீண்டும் கைதிசெய்யப் பட்டேன். வால்க்ஸ்ரஸ்டு என்ற எல்லை நகரில் நாங்கள் ஒரு சமயம் 75 இந்தியச் சிறைவாசிகள் வரை இருந்தோம். அரசாங்கம் தத்தளிப்பு நிலையில் இருந்தது. சிறைக்கு எப்படியும் எத்தனை இந்தியர்களைத் தான் அனுப்பமுடியும்? அத்தோடு, இது அதிகப்படியான செலவும் ஆயிற்று. நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் வேறு வழிகளைப் பற்றிச் சிந்திக்கலாயினர்; குற்றவாளிகளை இந்தியாவுக்கு நாடுகடத்தத் தொடங்கினர்: இது சில இந்தியர்களைத் தளர்வுறச் செய்தது; ஆனால் பலர் உறுதியாக இருந்து, போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

55

டால்ஸ்டாய்ப் பண்ணை

இதுவரை, (1910) சிறை சென்ற சத்தியாக்கிரகிகளின் குடும்பங்கள், அவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு ரொக்க மாதாந்திரப் படித்தர முறை மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தனர். இது அதிருப்திகரமாயிருந்தது; மேலும் இது எங்களுடைய நிதிக்கும் பெரிய பளுவாகவும் இருந்தது. இந்தச் சிரமத்திற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. எல்லாக் குடும்பங்களையும் ஒரே இடத்தில் வைத்து, அவர்கள் அனைவரும் ஒரு மாதிரியான கூட்டுறவுப் பொது வாழ்வுக் குடும்பத்தில் அங்கத்தினர்களாகி விடவேண்டும்.

என்னுடைய நெருங்கிய நண்பரான திரு. காலன் பாக், சுமார் 1100 ஏக்கருள்ள ஒரு பண்ணையை விலைக்கு வாங்கிச் சத்தியாக்கிரகிகளுக்கு, அதன் உபயோகத்தை வாடகை இன்றிக் கொடுத்தார் (1910—மே. 30). இப் பண்ணையில், பலன் தரும் சுமார் ஆயிரம் பழமரங்களும், மலையடிவாரத்தில் ஆறுபேர் இருக்கக்கூடிய ஒரு சிறிய வீடும் இருந்தது; தண்ணீருக்கு இரண்டு கிணறுகளும் ஒரு ஓடையும் இருந்தன. மிகப் பக்கத்திலுள்ள புகை வண்டி நிலையம் லாலி, பண்ணையிலிருந்து ஒரு மைலும், ஜோகன்ஸ்பர்க்கு இருபத்திரண்டு மைல் தூரத்திலும் உள்ளது. இப்பண்ணையில் வீடுகளைக் கட்டிச் சத்தியாக்கிரகிகளின் குடும்பங்களை அங்கு வந்து குடி இருக்குமாறு அழைக்கத் தீர்மானித்தோம்.

வீட்டு வேலைக்கும், கூடுமான மட்டும் விவசாயத்திற்கும் கட்டிட வேலைகளுக்கும் கூட வேலையாட்கள் எவரையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று வற்புறுத்தினோம். எனவே, சமையல் வேலையிலிருந்து தோட்டி வேலை வரை, எல்லாம் எங்கள் கைகளாலேயே செய்யப்பட்டன. குடும்பக் குடி இருப்புக்கு, ஆண்களும் பெண்

களும் தனித்த வீடுகளில் இருக்கவேண்டும் என்று முதலிலேயே முடிவு செய்தோம். எனவே ஒவ்வொன்றும் கொஞ்ச தூரத்தில் உள்ளதாக இரண்டு தனி வரிசைகளில் வீடுகள் கட்டப்பட வேண்டும்; தற்காலத்திற்குப் பத்து பெண்களுக்கும் அறுபது ஆண்களுக்கும் இடவசதி அளிப்பது போதுமானது என்று கருதப்பட்டது. மேலும், திரு. காலன்பாக்குக்கு ஒரு வீடும், அதன் அருகில் ஒரு பள்ளியும், தச்சு, செருப்புத் தைத்தல் முதலிய வேலைகளுக்கு ஒரு தொழிற்கூடமும் கட்டவேண்டும்.

அங்கு குடியேறிவர்கள் குஜராத், தமிழ்நாடு, ஆந்திரதேசம், வட இந்தியா—முதலிய இடங்களிலிருந்து வந்தவர்கள். அவர்களில் இந்துக்கள், பார்சியர்கள், கிரிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்களில் நாற்பது பேர் இளைஞர்கள்; இரண்டு மூன்று முதியவர்கள்; இருபது பெண்கள்; நாலைந்து பெண் குழந்தைகள் உள்பட இருபது முப்பது குழந்தைகள்.

டால்ஸ்டாய்ப் பண்ணையில், பலம் குன்றியிருந்தவர்கள் பலமுற்றனர்; உழைப்பு எல்லோருக்கும் பலமூட்டும் மருந்தாக இருந்தது.

ஏதாவது ஒரு வேலையின் பொருட்டு, ஒவ்வொருவரும் ஜோகன்ஸ்பர்க்குப் போக விரும்பினார்கள். குழந்தைகள் விளையாட்டாகப் போக விரும்பினார்கள். எனவே நாங்கள், எங்கள் சிறிய கூட்டுறவின் பொதுக் காரியமாகப் போகிறவர்கள் மட்டும் புகைவண்டியில் போகலாம் என்றும், அதுவும்கூட மூன்றும் வகுப்பில் தான் போகலாம் என்றும், ஒரு விதி செய்தோம். உல்லாச யாத்திரையாகப் போக விரும்புகிறவர்கள், நடந்து போகவேண்டும்; வீட்டில் செய்த உணவுகளைத் தங்களோடு கொண்டுபோக வேண்டும். நகரத்தில் உணவின் பொருட்டு யாரும் எதுவும் செலவழிக்கக் கூடாது. இத்தகைய கடுமையான விதிகள் இல்லாவிட்டால், கிராமாந்திரப் பகுதியில் வாழ்வதினால் சேமிக்கப்பட்ட பணம்

புகைவண்டிக் கட்டணங்களிலும், நகர விருந்துகளிலும் வீணுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்கொண்டு போகும் உணவு சாமான்களும் மிக எளியவை; தவிடு எடுக்கப் படாத வீட்டில் திரித்த கோதுமை மாவில் வீட்டில் செய்த ரொட்டி, வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட நிலக்கடலை வெண்ணெய், வீட்டில் செய்த ஒருவகைச் சட்ணி, (மார்மலேடு)- இவைகளே. கோதுமையைத் திரிக்க நாங்கள் இரும்புக் கைத்திருகை ஒன்று வாங்கி இருந்தோம். நிலக்கடலையை வறுத்துத் திரித்து நிலக்கடலை வெண்ணெய் செய்தோம். அது சாதாரண வெண்ணெயைவிட நாலு மடங்கு சகாய மாக இருந்தது. ஆரஞ்சுப் பழங்களோ வேண்டிய மட்டும் எங்கள் பண்ணையிலேயே இருந்தன. பண்ணையில் நாங்கள் பசும்பால் உபயோகித்ததில்லை. கட்டிப்பாலை வைத்தே பொதுவாகச் சமாளித்துக் கொண்டோம்.

யாத்திரை விஷயத்திற்குத் திரும்புவோம்; ஜோக னஸ்பர்க்கிற்குப் போக விரும்புகிறவர்கள் வாரத்தில் ஓரிரு முறை ஆங்கு நடந்து சென்று அன்றே திரும்பு வர். நான் ஏற்கெனவே சொன்னபடி, அது போக 21 மைல் பயணம் உள்ளது. இப்படி நடந்து செல்லும் இந்த ஒரு விதியினுலேயே, நாங்கள் நூற்றுக்கணக்கான ரூபாயை மிச்சப்படுத்திஞேம்; மேலும் அப்படி நடந்து சென்றவர்கள் மிகப் பயனும் பெற்ருர்கள். சிலர், நடக் கும் பழக்கத்தைப் புதிதாகப் பெற்றுக்கொள்ளலாயினர். பொதுவான வழக்கம் என்னவென்ருல், அப்படிப் போகி றவர் காலை இரண்டு மணிக்குத் துயிலெழுந்து, இரண் டரை மணிக்குப் புறப்படவேண்டும். அவர், ஆறு ஏழு மணி கால அளவில் ஜோகனஸ்பர்க்குப் போய்ச் சேரு வார். யாத்திரையின் குறைந்த பக்ஷ கால அளவு 4 மணி 18 நிமிடங்களாகும்.

பண்ணையை ஒரு சுறுசுறுப்பான தொழிற்கூடம் ஆக்கவேண்டும் என்றும், அப்படிச் செய்து பணம் சேமிக்க வேண்டும் என்றும், இறுதியில், குடும்பங்களை

தன் நிறைவு உள்ளவைகளாகச் செய்ய வேண்டுமென்பதும் எங்கள் கருத்து. இக்குறிக்கோளை நாங்கள் அடைந்தால், டிரான்சுவால் அரசாங்கத்தோடு காலவரம்பின்றிப் போராட இயலும். மிதியடிகளில் நாங்கள் கொஞ்சம் பணம் செலவு செய்யவேண்டி இருந்தது. மிதியடிகளை நாங்களே செய்வதென்று தீர்மானித்தோம். நாங்கள் அத்தொழிலைக் கற்று, மிதியடிகளைச் செய்து விற்க ஆரம்பித்தோம். பெஞ்சுகளிலிருந்து பெட்டிகள் வரை, எல்லாவிதமான பெரிய சிறிய சாமான்கள் எங்களுக்குத் தேவையாக இருந்தபடியால், தச்சுத்தொழிலை நாங்கள் ஏற்படுத்தி, அவைகள் எல்லாவற்றையும் நாங்களே செய்தோம்.

இளைஞர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பள்ளி ஒன்று இன்றியமையாதது. எங்கள் வேலைகளில் இதுவே மிகவும் கடினமானது. இவ்விஷயத்தில் கடேசி வரை, நாங்கள் பூரணவெற்றி அடையவே இல்லை. சொல்லிக் கொடுக்கும் பொறுப்பு திரு. காலன்பாக்காலும் என்னாலும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பள்ளி பிற்பகலில்தான் நடத்த முடியும். அப்பொழுது, நாங்கள் இருவருமே, எங்கள் காலை உடல் உழைப்பினால் மிகவும் களைப்புற்றிருப்போம்; எங்கள் மாணவர்களும் அப்படியே. எனவே ஆசிரியர்கள் அடிக்கடி கண்ணயர்ந்து கொண்டிருப்பார்கள்; மாணவர்களும் அப்படியே. நாங்கள் கண்களில் நீரைத் தெளிப்போம்; பிள்ளைகளோடு விளையாடி, அவர்களைத் தட்டிக்கொடுப்பதோடு, எங்களையும் தட்டி எழுப்பிக் கொள்ளுவோம்; ஆனால் சிலசமயம் இது வீணாகும். உடலானது ஒய்வை மறுப்பிற்கிடமின்றிக் கேட்கிறது; அந்த ஒய்வுதர மறுப்பதை உடல் ஏற்பதில்லை. ஆனால் எங்களுடைய பல கஷ்டங்களில் இது ஒன்றுதான் மிகச் சிறியதாகும். ஏனெனில், தூங்கி விழுந்தாலும் வகுப்புகள் நடைபெற்றன. குஜராத்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசும்

மாணவர்களுக்கு நாங்கள் எதைச் சொல்லிக் கொடுப்பது? எப்படி? இம்மொழிகளைப் போதனுமொழிகளாகச் செய்யவேண்டும் என்று நான் ஆவல் கொண்டிருந்தேன். எனக்குக் கொஞ்சம் தமிழ்த் தெரியும்; தெலுங்கு தெரியாது. இந்த நிலையில் ஒரு ஆசிரியர் என்ன செய்யக்கூடும்?

ஆனல், சொல்லிக்கொடுக்கும் இந்தச் சோதனை பழுதுபோகவில்லை. சகிப்புத்தன்மை இல்லாமை என்ற தொத்து நோயிலிருந்து மாணவர்கள் காப்பாற்றப் பட்டார்கள்; மற்றவர்களுடைய மதங்களையும், பழக்கங்களையும் தாராள மனப்பான்மையோடு நோக்குவதற்குக் கற்றுக்கொண்டனர். உடன்பிறந்தவர்களைப் போலே சேர்ந்து வாழ்வதெப்படி என்பதைக் கற்றுக்கொண்டனர். பரஸ்பர சேவை, மரியாதை, உழைப்பு—என்ற பாடங்களின் போதனையைக் கற்றுக்கொண்டனர். டால்ஸ்டாய்ப் பண்ணையில் இருந்த பிள்ளைகளின் சிலரின் பிற்கால நடவடிக்கைகளைப் பற்றி நான் அறிந்து கொண்ட சிலவற்றிலிருந்து, ஆங்கு அவர்கள் பெற்ற கல்வி வீண்போகவில்லை என்பது எனக்கு நிச்சயம். குறைவுடையதாக இருந்தாலும், அது ஒரு சிந்தையைத் தூண்டும் சமய சோதனையாகும். டால்ஸ்டாய்ப் பண்ணையின் சிறந்த இன்பகரமான நினைவுகள் பலவற்றில் இந்தப் போதனைச் சோதனை நினைவும், ஏனைய நினைவுகளினுல் ஏற்படும் இன்பத்திற்குக் குறைந்ததன்று.

பண்ணையில், உணவைப்பற்றியும், நோய் சிகிச்சையைப் பற்றியும், பல சோதனைகள் செய்தேன். 'சைவ' உணவு உண்போர் என்ற நிலையில், எங்களுக்குப் பால் அருந்த உரிமை உண்டா என்ற பிரசினையைப் பற்றி, நான் ஆழ்ந்து சிந்தித்ததுண்டு; விரிவாகப் படித்ததுமுண்டு. ஆனல் நான் பண்ணையில் வசித்துவந்த போது, ஒரு நூலோ, அல்லது சஞ்சிகையோ என் கைக்கு வந்தது. அதில், பசுவிலிருந்து கடேசிச் சொட்டுப்பால்

வரைப் பிழிந்தெடுக்கக் கல்கத்தாவில் மனிதத்தனமற்ற முறையில் பசுக்களை நடத்துவதைப் பற்றியும், 'பூக்கா' என்ற கொடுமையான, பயங்கரமான முறையின் விவரிப்பையும், நான் படித்தேன். அதே நாளில், நான் பால் அருந்துவதை விட்டேன்.

56

பெண்கள் போரில் சேர்ந்தனர்

1912 அக்டோபரில், சத்தியாக்கிரகிகளுக்கும் அரசாங்கத்துக்கும் மத்தியஸ்தம் செய்ய, கோகலே தென் ஆபிரிக்கா வந்தார். கோகலே சொன்ன பிரகாரம், தளபதி போதா, ஒரு ஆண்டிற்குள் கறுப்புச் சட்டம் ரத்துசெய்யப்படும் என்றும், 3 பவுண் வரி நீக்கப்படும் என்றும், அவரிடம் வாக்குக் கொடுத்தார். ஆனால் இது செய்யப்படவில்லை.

வாக்கு மீறியதைப்பற்றி நான் கோகலேய்க்கு எழுதினேன். நடைபெற இருக்கும் போராட்டத்திற்கு ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினேன். விடாப்பிடியர்களென டிரான்சுவால் அரசாங்கத்தை வரியை ரத்து பண்ணச் செய்துவிடுவோம் என்றும், உயிர்போம் வரை போராடுவோம் என்றும் கோகலேய்க்கு நான் உறுதி அளித்தேன். நாங்கள் நீண்டகாலம் சிறைவைக்கப்படுவோம் என்பதை உணர்ந்தோம். எனவே டால்ஸ்டாய்ப் பண்ணையை மூடிவிட்டு, இதனினும் சௌகரியமான இடத்தில் இருந்த போனிக்ஸை எங்கள் நடவடிக்கைகளுக்கு வருங்காலத் தளமாக வைத்துக்கொள்வதெனத் தீர்மானித்தோம்.

போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு ஆயத்தங்கள் நடந்துகொண்டு இருக்கும்போதே, இன்னொரு புதிய குறைபாடும் உருவாகியது. அது, பெண்கள்கூடப் போராட்டத்தில் தங்களுடைய பங்கையும் செய்வதற்கு ஒரு வாய்ப்பை அளித்தது. இதுவரை நாங்கள், பெண்

கள் சிறைப்பட முன்வரவேண்டாம், என்று அவர்களைத் தடுத்து வந்தோம். ஆனால், இச்சமயத்தில், கிரிஸ்தவர்கள் சடங்குகள் படியும், திருமணப் பதிவாளரால் பதிவுசெய்யப் படாததுமான, திருமணங்கள் எல்லாம் செல்லத்தகாதவை என்று, தென் ஆபிரிக்கா அரசாங்கத்தால் ஒரு தீர்ப்பு செய்யப்பட்டது. எனவே, பேணு முறையினால் இந்து, முஸல்மான், சொரயாஸ்டிரியன் சடங்குகளின்படி நடைபெற்ற மணங்கள் எல்லாம் சட்ட விரோதமாயின ; சம்பந்தப்பட்ட மனைவிமார் காமக் கிழத்தியர் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர் ; அவர்கள் சந்ததியார் சொத்துக்களை அடையும் உரிமை பறி போயது. இது பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண் களுக்குமே சகிக்கவொண்ணாத நிலைமையாகும்.

நமது பெண்களுக்கு வழங்கப்பட்ட அவமரியாதையின் முன்னிலையில், பொறுமை என்பது அசாத்தியம். போராடுபவர்களின் எண்ணிக்கையைப் பற்றி நினையாது, உறுதியான சத்தியாக்கிரகத்தில் இறங்குவதாகத் தீர்மானித்தோம். இப்பொழுது, பெண்களைப் போரில் கலக்கவேண்டாம் என்று தடைசெய்யாதது மட்டுமல்ல : ஆனால் ஆண்களோடு பெண்களும் வந்து சேருமாறு அழைக்கவேண்டுமெனத் தீர்மானித்தோம். டால்ஸ்டாய்ப் பண்ணையில் வசித்து வந்திருந்த சகோதரிகளை முதலில் அழைத்தோம். போராட்டத்தில் இறங்குவதற்கு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள் என்பதைக் கண்டேன். இவ்வாறு பங்கு கொள்ளுவதினால் ஏற்படலாகும் இன்னல்களைப் பற்றி எடுத்துக் காட்டினேன். உணவு, உடை, நடமாட்டம்—இவைகளில் ஏற்படும் கட்டுப்பாடுகளைச் சகித்துக்கொள்ளவேண்டி இருக்கும் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். சிறையில் அவர்களுக்குக் கடுமையான வேலை கொடுக்கப்படலாம் என்றும், துணிகளைத் துவைக்குமாறு செய்யப்படலாம் என்றும், 'வார்டர்'களின் அவமானத்துக்கு ஆளாக்கப்

படலாமென்றும் அவர்களுக்கு நான் எச்சரித்தேன். ஆயின், இச்சோதரிகள் அனைவரும் தைரியமாக இருந்தனர்; இவற்றில் எதற்கும் அவர்கள் அஞ்சவில்லை. அவர்களில் ஒருத்தி சூலி; அறுவர் இடுப்பில் கைக் குழந்தைகள். ஆனால் அவர்கள் எல்லோருமே கலந்து கொள்ள ஆவலோடு இருந்தனர்; எனவே அவர்களின் குறுக்கே நான் வருவதற்கில்லை.

அனுமதிச் சீட்டின்றிச் சகோதரிகள் வீரினிகிங்கி என்ற இடத்தில் டிரான்சுவால் உள்ளே நுழைந்தனர்; ஆனால் அவர்கள் கைது செய்யப்படவில்லை. லைசென்சில்லாமல் சாமான்கள் விற்க ஆரம்பித்தனர். போலீசார் அப்பொழுதும் அவர்களைப் புறக்கணித்தனர்.

போனிக்ஸ் உறைவிடத்திலிருந்த பதினாறு முதல் வாசிகளை டிரான்சுவாலுக்குள் போவதற்கு அனுப்பத் தீர்மானித்தோம். இந்த போனிக்ஸ் கூட்டம் டிரான்சுவாலுக்குள் நுழையும் சமயம், டிரான்சுவாலில் கைதியாக முன்வந்து, பயன்காணாத சோதரிகள் நேடாலுக்குள் நுழைய வேண்டும். அனுமதிச் சீட்டின்றி நேட்டாலில் இருந்து டிரான்சுவாலுக்குள் நுழைவது தண்டனைக்குரிய குற்றமாவது போல, டிரான்சுவாலில் இருந்து நேட்டாலுக்குள் நுழைவதும் குற்றமே. நேட்டாலில் நுழைந்ததும், சகோதரிகள் கைது செய்யப்பட்டால், நல்லதாயிற்று. ஆனால் அப்படி அவர்கள் கைது செய்யப் படாவிட்டால், நேடாலில் உள்ள ஒரு பெரிய நிலக்கரிச் சுரங்கக் கேந்திரமான, நியூகேசிலுக்குச் சென்று, அங்குள்ள இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகளை வேலை நிறுத்தம் செய்யுமாறு கேட்டுக்கொள்ள வேணுமாய் ஏற்பாடு செய்யப்பட்டது. சகோதரிகளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துத் தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தால், தொழிலாளிகளோடு சகோதரிகளையும் அரசாங்கம் கைது செய்தே தீரும். இது அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான உற்சாக மூட்டும். நான் சிந்தித்துக்

கண்ட இந்த யுக்தியை, டிரான்சுவால் சகோதரிகளிடம் சொன்னேன்.

நான் போனிக்சுக்குச் சென்று, சகோதரிகளுக்கும் உறைவிடத்திலிருந்த மற்றவர்களுக்கும் தாங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கையின் கடுமைத் தன்மைப் பற்றியும், சிறையில் படவேண்டி இருக்கும் கஷ்டங்களைப் பற்றியும் சொன்னேன். ஆனால், என் மனைவி உள்பட எல்லோருமே சாவதற்கும் தயாராகவே இருந்தார்கள். எதுவரினும் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று என்னிடம் உறுதி கூறினார்கள்.

போனிக்ஸ் கூட்டம் அனுமதிச் சீட்டின்றி எல்லையைக் கடந்து டிரான்சுவாலுக்குள் நுழைந்தது. அவர்கள் கைது செய்யப்பட்டு, மூன்று மாதம் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

டிரான்சுவாலில் ஏமாற்றம் அடைந்த சகோதரிகள், இப்பொழுது நேட்டாலில் நுழைந்தார்கள். ஆனால் அனுமதிச் சீட்டின்றி அவ்வாறு நுழைந்ததாகக் கைது செய்யப்படவில்லை. எனவே அவர்கள் நியூகேசில் சென்று, ஆங்கு முன்னரே போட்டிருந்த திட்டப்படி தங்கள் வேலையைச் செய்யத் தொடங்கினர். அவர்களுடைய செல்வாக்குக் காட்டுத் தீபோல் பரவியது. 3 பவுண் வரியினால் இழைக்கப்பட்ட அநீதியின் சோகக் கதை, தொழிலாளிகளின் உள்ளத்தைப் பறித்தது; அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

அரசாங்கம், இந்தத் தைரியமான டிரான்சுவால் சகோதரிகள், தங்கள் காரியங்களை மேற்கொண்டு நடத்துவதை இனிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவர்களும் மூன்றுமாதச் சிறைத் தண்டனை அடைந்தார்கள்.

இப் பெண்மக்களின் தீரம் சொல்லுக்கு அடங்காது. அவர்கள் எல்லோரும் 'மாரிட்சுபர்க்'·சிறையில் வைக்கப் பட்டிருந்தனர். ஆங்கு அவர்கள் மிகவும் துன்புறுத்தப்

பட்டனர். அவர்கள் உணவு மிகவும் கீழ்த்தரமானது; அவர்களுக்கு வேலை துணி வெளுப்பது. வெளியிலிருந்து, அநேகமாக அவர்களுடைய சிறைக்காலம் முடியும்வரை, உணவு அனுமதிக்கப்படவில்லை. ஒரு சகோதரி, ஒரு குறிப்பிட்ட உணவையே உண்பது என்று ஒரு சமய சம்பந்தமான விரதம் எடுத்திருந்தாள். மிகுந்த பிரயாசைக்குப் பின்னர், சிறை அதிகாரிகள் அவ் உணவை அவளுக்கு அனுமதித்தார்கள். ஆனால் கொடுக்கப்பட்ட உணவு மனிதர் உண்பதற்குத் தகுதியில்லாதது. அச்சகோதரிக்கு 'ஆலிவ்' எண்ணெய் மிகத் தேவையாய் இருந்தது. முதலில் அவளுக்கு அது கிடைக்கவில்லை. ஆனால் அது கிடைத்தபோது, மிகப் பழசாகவும் நாற்றம் பிடித்ததாகவும் இருந்தது. அவ் அம்மாள் தன் சொந்தச் செலவில் வாங்கிக்கொள்ளுவதாகச் சொன்னாள். ஆனால் சிறை என்பது உணவுச் சாலை அன்று என்றும் ஆங்கு அவளுக்குக் கொடுக்கப்படும் உணவையேஉண்ண வேண்டும் என்றும் அவளுக்குக் கூறப்பட்டது. அவள் விடுதலை பெற்று வந்ததும், வெறும் எலும்பும் தோலுமாகவே இருந்தாள். மிகுந்த பிரயாசையின் பேரிலேயே அவள் உயிர் காப்பாற்றப்பட்டது.

இன்னொருத்தி தீராத சுரத்தோடே சிறையிலிருந்து வெளிவந்தாள். விடுதலை அடைந்த சில தினங்களில் அவள் அச்சுரத்திற்கு இரையானாள் (1914-பிப்ரவரி 22). அவளை நான் எப்படி மறக்கமுடியும்? ஜோகன்னஸ்பர்க்கில் இருந்த வள்ளியம்மா. ஆர். முனுசாமி முதலியார், பதினாறே வயதுள்ள இளம் பெண். நான் அவளைப் பார்த்தபோது படுத்த படுக்கையாக இருந்தாள். அவள் நெட்டையா யிருந்தபடியால் அவளுடைய வற்றிய உடலைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

"வள்ளியம்மா, நீ சிறைக்குச் சென்றதைப்பற்றி வருந்தவில்லையா?" என்று கேட்டேன்.

"வருத்தமா? மீண்டும் நான் கைது செய்யப் பட்டால், இப்பொழுது கூட மீண்டும் சிறைக்குப் போகத் தயாராக இருக்கிறேன்," என்றுள் வள்ளியம்மாள்.

"ஆனல், அது உயிருக்கே ஆபத்தாக விளைந்தால் ....?" எனத் தொடர்ந்து கேட்டேன்.

"அதை நான் பொருட்படுத்தேன். தன் தாய் நாட்டிற்காக யாரே உயிற் துறக்க விரும்பாதார்? என் பதே அவள் பதில்.

இவ் உரையாடலுக்குப் பின்னர், சில நாட்களுக் குள்ளாகவே, வள்ளியம்மா தன் பூத உடலோடு நம்மிடை இல்லை. ஆனல் அவள், நமக்கு, இறவாத தனது பெயராகிய செல்வத்தை நம்மிடம் விட்டுச் சென் றுள்ளாள்.

இச் சோதரிகளின் செயல் பூரனமான தூய தியாக மாகும். தியாகம், தூய்மை உள்ள அளவிற்கே பயன் பயப்பதாகும். கடவுள், மனிதனுடைய பக்தியை நாடிய வண்ணம் இருக்கிருர். ஒரு விதவைத் தன்ன லியன்றதைப் பக்தியோடு அதாவது தன்னல நோக்க மின்றி—வழங்குவதை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிருர். சத்தியாகிரகிகள், தங்களில் ஒருவ ரேனும் பளிங்கு போல் தூய்மை உடையவர்களாய் இருப்பார்களானல், குறித்த குறிக்கோளை அடைவதற்கு அதுவே போதும், என்று உறுதி கொள்ளலாம். சத்தியம் அல்லது உண்மை என்ற பாதையின் மேல் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்ருல் உண்மையில்லை என்ற பொருள் தருவது! அது இல்லாமையையும் குறிக்கும். அசத்தியம், என்பது இருப்பது என்பது கூட இல்லா விட்டால், அதன் வெற்றி என்ற பேச்சு எழுவதற்கே இல்லை. உண்மை என்பது, என்றும் உளது. ஆகவே, அது ஒருக்காலும் அழிக்கொணுதது. இதுவே, சுருக்க மாகச் சத்தியாகிரகத்தின் தத்துவமாகும்.

57

தொழிலாளர் படை

நியூகேசில் அருகில் உள்ள சுரங்கத் தொழிலாளி களிடம், மகளிர் சிறைவாசம் மந்திர சக்தி போல வேலை செய்தது; அவர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டு, கூட்டத்திற்குப் பின் கூட்டமாக நகருக்குள் வந்தனர். இச் செய்தி எனக்குக் கிடைத்ததும், நான் போனிக்சை விட்டு நியூகேசிலுக்குச் சென்றேன்.

இத் தொழிலாளிகளுக்குச் சொந்த வீடுகள் கிடையா. சுரங்கச் சொந்தக்காரர்கள் அவர்களுக்கு வீடுகள் கட்டி, அவர்கள் வீதிகளில் விளக்குகள் வசதியும் தண்ணீர் வசதியும் செய்து கொடுத்தார்கள். இதன் விளைவாகத் தொழிலாளிகள், முழுவதும் பிறர்கை பார்த்து வாழும் நிலைக்கு வந்தனர்.

வேலை நிறுத்தக்காரர்கள், என்னிடம் ஏராளமான புகார்கள் கொண்டு வந்தனர். சிலர், சுரங்கச் சொந்தக் காரர்கள், தங்களுடைய விளக்குகளையோ அல்லது தண்ணீரையோ நிறுத்தி விட்டார்களென்று சொன்னார்கள்; வேறு சிலர், தங்களுடைய வீடுகளிலிருந்து வேலை நிறுத்தக்காரர்களின் வீட்டுச் சாமான்களை அவர்கள் எடுத்து எறிந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். நான் தொழிலாளிகளுக்குச் சாத்தியமான ஒரே வழி தங்கள் முதலாளிகளின் வீடுகளை விட்டுவிட்டு, உண்மையாகவே யாத்ரிகர்களைப் போல வெளிக்கிளம்ப வேண்டும் என்று, யோசனை கூறினேன்.

தொழிலாளிகள் பத்துக் கணக்கானவர் அன்று; நூற்றுக் கணக்கானவர் ஆவர். அவர்கள் எண்ணிக்கை எளிதே ஆயிரங்களாகப் பெருகலாம். வளர்ந்து கொண்டே போகும் இக் கூட்டத்தினருக்கு நான் எப்படி உறைவிடமும் உணவும் தருவது? அங்கே இருந்தது ஒரு

மாபெரும் மக்கள் கூட்டம்; அதில் இடைவிடாது மக்கள் வந்து சேர்ந்துகொண் டிருந்தனர். அவர்களுக்கு வேலை இல்லாத நிலையில், அவர்களை ஒரு இடத்தில் வைத்துப் பராமரிப்பது என்பது அசாத்தியமில்லையானாலும் அபாயகரமானது. எனது பிரசினைக்கு ஒரு வழி கண் டேன். போனிக்சுக் கூட்டத்தைப் போல, இந்தப் 'படையை'யும் நான் டிரான்சுவாலுக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சிறையில் சுகமாகச் சேர்த்துவிட வேண்டும். இப் படையின் பலம் ஐயாயிரம் ஆகும். இவ்வளவு அதிகமான எண்ணிக்கை உள்ள பேர்களுக்கு, புகைவண்டிக் கட்டணம் கொடுக்க என்னிடம் பண மில்லை; எனவே, அவர்கள் அனைவரையும் புகைவண்டி யில் கொண்டுபோக முடியாது. மேலும்; அவர்களைப் புகைவண்டியிற் கொண்டுபோனால், அவர்களுடைய் ஒழுங்குப்பாட்டைச் சோதித்தறியும் வழி எனக்கு இல்லா மல் போய் விடும். நியூகேசிலிலிருந்து டிரான்சுவால் எல்லை 36 கல்லாகும். நேட்டால், டிரான்சுவால் இவை களின் எல்லைக் கிராமங்கள் முறையே, சார்லஸ் டவுனும், வால்க்ஸ்ரஸ்டும் ஆகும். இறுதியில், நான் நடந்து செல்லத் தீர்மானித்தேன். மனைவி மக்களோடு இருந்த சில தொழிலாளிகளை நான் கலந்தேன். அவர்களில் சிலர் அதனால் எனது ஆலோசனைக்கு இணங்கத் தயங்கினர். எனது உள்ளத்தைக் கடினமாக்குவதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை; விரும்பியவர்கள் சுரங்கங்களுக்குத் தாராளமாகத் திரும்பலாம் என்று தெரிவித்தேன். ஆனால் இந்தச் சுதந்திரத்தை அவர்களில் எவரும் பயன் படுத்திக் கொள்வாரில்லை. அங்கஹீனர்கள் புகைவண்டி யில் அனுப்பப்பட வேண்டும் என்று தீர்மானித்தோம்; உடலுறுதி உள்ளவர்கள் அனைவரும், தாங்கள் சார்ல்ஸ் டவுனுக்கு நடந்து செல்லத் தயாராக இருப்பதாகத் தெரி வித்தார்கள். இப்படை நடை இரண்டு நாட்களில் முடிய வேண்டும்.

ஒரு மாலையில், தொழிலாளிகள் பிற்றை நாள் அதிகாலை (1913—அக்டோபர் 28) தங்களுடைய நடையைத் தொடங்க வேண்டும் என்று கூறப்பட்டனர். நடையின் போது கையாள வேண்டிய விதிகள் அவர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டன. ஐந்து அல்லது ஆறு ஆயிரம் மக்கள் கொண்ட கூட்டத்தைக் கண்காணிப்பது என்பது விளையாட்டு அல்ல. அவர்களுடைய திட்டமான எண்ணிக்கையைப் பற்றி எனக்குத் தெரியாது; அவர்களுடைய பெயர்களோ, அல்லது அவர்களுடைய உறைவிடங்களோ, எனக்குத் தெரியாது. எத்தனை பேர் இருக்க விரும்பினார்களோ அத்தனை பேரை வைத்திருப்பதோடு நான் திருப்தி கொண்டேன். ஒவ்வொரு 'சிப்பாய்'க்கும், தினசரிப் பங்கீடு ஒன்றரை அவுன்சு ரொட்டிக்கும் ஒரு அவுன்சு சர்க்கரைக்கும் அதிகமாக, நடையின்போது எதுவும் கொடுப்பதற்கு இயலாதிருந்தேன். வழியில் உள்ள இந்திய வணிகர்களிடமிருந்து ஏதாவது மேலும் பெறத் திட்டமிட்டேன். ஆனால், அது எனக்குக் கிடைக்காவிட்டால், அவர்கள் இந்த ரொட்டியையும் சர்க்கரையும் கொண்டு மனநிறைவு அடைய வேண்டும். இச்சமயத்தில், போயர் போர்—சூலுக்'கலகம்' இவைகளில் என் அனுபவம் எனக்கு நல்ல துணை செய்தது. 'படை எடுப்போ'ரில் எவரும் அவசியத்திற்கு அதிகமான ஆடைகளை வைத்திருக்கலாகாது. வழியில் யாரும் பிறருடைய உடைமைகளைத் தொடக்கூடாது. உத்தியோகம் உள்ள அல்லது இல்லாத ஐரோப்பியர் எவரும் அவர்களைச் சந்தித்துத் திட்டினாலும் அல்லது சவுக்காலடித்தாலும் கூட, அவர்கள் பொறுமையோடு தாங்கிக் கொள்ள வேண்டும். போலீசு அவர்களைக் கைதி செய்ய முற்பட்டால், கைதி செய்து கொள்ளுவதற்கு அவர்கள் தாமே இடம் தர வேண்டும். நான் கைதி செய்யப்பட்டாலும் கூட, நடை தொடர்ந்து செல்ல வேண்டும். இந்த அம்சங்கள் எல்லாம் மக்க

ளுக்கு விளக்கப்பட்டன. என்னுடைய இடத்தில், 'படை'யைத் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டியவர்களின் பெயர்களையும் நான் அறிவித்தேன்.

அவர்களுக்கு விடுக்கப்பட்ட போதனைகளை அறிந்து கொண்டனர். எங்கள் அணிவகுப்பு சார்ல்ஸ்டவுனைப் பத்திரமாக அடைந்தது. ஆங்கு வணிகர்கள் எங்களுக்குப் பேருதவி புரிந்தனர். அவர்கள் தங்கள் வீடுகளை எங்கள் உபயோகத்திற்குக் கொடுத்தார்கள்; பள்ளிவாசல்களின் மைதானங்களில் எங்களுடைய சமையல் ஏற்பாடுகளைச் செய்ய எங்களை அனுமதித்தார்கள். அணிவகுப்பு நடையின்போது கொடுத்த பங்கீடு, முகாம் போய்ச் சேரும்போது தீர்ந்துவிடும். ஆதலால், எங்களுக்குச் சமையல் பாத்திரங்கள் தேவையாயின; அவைகளை எங்களுக்கு வணிகர்கள் மகிழ்ச்சியோடு கொடுத்தார்கள். எங்களிடம் ஏராளமாக அரிசி முதலியன கையிருப்பு இருந்தது; அதனோடு வணிகர்களும் தங்களுடைய பங்கைக் கொடுத்தார்கள்.

சார்ல்ஸ்டவுன், அதிகமாகப் போனால் ஆயிரம் மக்கள்தொகை கொண்ட ஒரு சிற்றூர்; அநேக ஆயிரங்கள் கொண்ட யாத்ரிகர்களை அது ஒருக்காலும் கொள்ளாது; மகளிரும் குழந்தைகளுமே வீடுகளில் வைக்கப்பட்டனர்; ஏனையோர் அனைவரும், திறந்த வெளியில் 'முகா'ம் செய்தனர்.

என் சக ஊழியர்களும் நானும், பெருக்குதல், துப்புரவு செய்தல், ஆகிய இனைய வேலைகள் செய்வதில் ஒருக்காலும் தயங்குவது கிடையாது. இதன் விளைவாக மற்றவர்களும் இதனை உற்சாகத்தோடு செய்ய முற்பட்டனர். இத்தகைய புத்திசாலித்தனமான நடைமுறை இல்லாமல், மற்றவர்களுக்கு உத்திரவுகள் பிறப்பிப்பது நல்லதல்ல. எல்லோரும் தாங்கள் தலைமை தாங்கி, மற்றவர்களுக்கு ஆணை விடுப்பார்கள்; முடிவில் யாதுமே செய்யப்படாமல் போய்விடும். ஆனால், தலைவரே

தொண்டாற்றும்போது, தலைமைக்குப் போட்டி இடுவோர் இல்லாது போகின்றனர்.

சமைப்பவர்களுள் நான் தலைவனாய் இருந்தேன். சில வேளைகளில் பருப்பில் அதிகத் தண்ணீர் இருந்தது. மற்ற வேளைகளில் அது போதுமானபடி வேகவைக்கப் படாதிருந்தது. காய்கறிகளும், சிலவேளைகளில் அரிசியும் கூட மோசமாகச் சமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய உணவை மகிழ்ச்சியோடு விழுங்கக் கூடிய மக்கள் பலரை உலகத்தில் நான் பார்த்ததில்லை.

சமைப்பதைவிட, உணவைப் பரிமாறுவது அதிகக் கடினமானது; அது என் முழு மேற்பார்வையில் இருந்தது. உணவு மிகக் குறைவாகவும் உண்போர் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவும் இருந்தபோது, தனிப்பட்ட பங்கீட்டு அளவைக் குறைத்து எல்லோரையும் திருப்தி செய்யவேண்டியது என்னுடைய பொறுப்பாக இருந்தது. மிகக் குறைவாக உணவு கொடுத்த போது, சகோதரிகள் ஒருகணம் என்னைச் சினந்து பார்த்ததை, நான் என்றும் மறக்க முடியாது. நானே தலைமேற் போட்டுக் கொண்ட இப்பணியின் பிரதிப் பயனற்ற தன்மையை அவர்கள் உணர்ந்த போது, இக் கோபம் உடனே புன்சிரிப்பாக மாறியது. "நான் உதவி புரியும் நிலையில் இல்லை" என்பேன். "சமைத்த உணவின் அளவு குறைவு; நான் உணவு கொடுக்க வேண்டியதோ பலருக்கு; அவர்களுக்கு நான் அதைச் சமமாகப் பங்கிட வேண்டும்." இதன் பின்னர், அவர்கள் நிலைமையை அறிந்து கொண்டு, திருப்திகொண்டோம் என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே போய் விடுவார்கள்.

58

மாபெரும் யாத்திரை

நான் அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் நாங்கள் டிரான்சுவாலுக்குள் நுழைய எண்ணுவது குடியிருக்கும் நோக்கத்தோடு அல்ல என்றும், ஆனால் மந்திரியின் வாக்கு மீறலுக்கு பலன்தரும் மறுப்பாகவும், எங்கள் தன்மானம் போனமை குறித்து எங்கள் துயரத்தை வெளிப்படைக் காட்சியாகவும் எடுத்துக் காட்டுவதே நோக்கம் என்றும், தெரிவித்திருந்தேன். நாங்கள் அப்பொழுது இருந்த இடத்தில், அதாவது சார்லஸ்டவுனில் அரசாங்கத்தார் எங்களைக் கைதி செய்ய மனம் வைப்பார்களானால், எங்களுடைய கவலை அனைத்தையும் நீக்கியவர்களாவார்கள். ஆனால் அவர்கள் எங்களைக் கைதி செய்யாவிட்டால், எங்களில் எவரேனும் டிரான்சுவாலுக்குள் கள்ளத்தனமாய் நுழைந்தால், அதன் பொறுப்பு எங்களுடையதாகாது. எங்கள் இயக்கத்தில் ஒளிவு மறைவு கிடையாது. எங்களில் எவருக்கும் சொந்தமான காரியம் எதுவும் இல்லை. எங்களில் எவரும் இரகசியமாக டிரான்சுவாலுக்குள் நுழைந்தால், நாங்கள் அதை விரும்ப மாட்டோம். ஆனால், நாங்கள் எங்களுக்குத் தெரியாத ஆயிரக் கணக்கான மக்களைச் சமாளிக்க வேண்டி இருந்ததாலும், எங்களுக்கு அன்பின் ஆணை தவிரப் பிறிதொரு ஆணை இல்லாமையாலும், எவருடைய செயல்களுக்கும் நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. கடேசியாக, அரசாங்கத்தார் 3 பவுண் வரியை ரத்து செய்வார்களானால், வேலைநிறுத்தம் நிறுத்தப்படும் என்றும், ஒப்பந்தத் தொழிலாளிகள் வேலைக்குத் திரும்புவார்களென்றும் ஏனெனில், எங்களுடைய மற்ற குறைகளை எதிர்த்து நடத்தப்படும் பொதுப் போராட்டத்தில் அவர்களைச்

சேருமாறு கேட்கமாட்டோம், என்றும் நான் அரசாங்கத்துக்கு உறுதி கூறினேன்.

இம்மாதிரியான நெருக்கடியில், அரசாங்கத்தின் பதிலுக்குப் பலநாட்கள் நாங்கள் காத்திருக்க முடியாது. எனவே, அரசாங்கம் எங்களைக் கைதி செய்யாவிட்டால், சார்ல்ஸ்டவுனை விட்டு டிரான்சுவாலுக்குள் உடனே நுழைவது என்று தீர்மானித்தோம். வழியில் நாங்கள் கைதி செய்யப்படா விட்டால், 'சமாதானப் படை' தினம் இருபது முதல் இருபத்துநான்கு மைல்களாக எட்டு நாட்கள் விடாமல் நடந்து டால்ஸ்டாய்ப் பண்ணை சென்று, போராட்டம் முடியும், வரை அங்குத் தங்க வேண்டும்; அக்காலத்தில் பண்ணையில் வேலை செய்து அவர்கள் தங்களைப் பராமரித்துக் கொள்ளவேண்டும்.

நாங்கள் யாத்திரைக்கு வேண்டிய மற்ற ஏற்பாடுகளையும் செய்தோம். நல்ல மனிதரான மருத்துவர் பிரிஸ்கோ, எங்களுக்கு ஒரு சிறிய மருந்துப் பெட்டியையும் என்னைப் போன்ற சாதாரணமானவனும் கூட எளிதில் கையாளக்கூடிய ஆயுதங்களையும் கொடுத்தார்.

ரொட்டியும் சர்க்கரையுமே எங்களுடைய முழுப் பங்கீட்டுப் பொருள். ஆனால், இவ் எட்டு நாள் யாத்திரையில், ரொட்டி வினியோகம் எவ்வாறு செய்ய முடியும்? யாத்ரிகர்களுக்கு ஒவ்வொரு நாளும் ரொட்டி வழங்கப்படவேண்டும்; அதில் எதையும் நாம் கையிருப்பில் வைத்துக் கொள்ள முடியாது. ஒவ்வொரு படியிலும் யாராவது எங்களுக்கு ரொட்டி வழங்க வேண்டும் என்பதே இப்பிரசினைக்கு ஒரே வழியாகும். ஆனால் யார் எங்களுக்கு வழங்குபவராவார்? வால்கிரஸ்டு, சார்லர்ஸ் டவுனை விட சுமார் இருமடங்கு அளவினது. அங்குள்ள ஒரு பெரிய ஐரோப்பிய ரொட்டிக்கடை எங்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் புகைவண்டி மூலம் ரொட்டி கொண்டு வந்து கொடுக்க விருப்பத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டது. புகைவண்டி நிலைய அதிகாரிகள், அவர்

களும் ஐரோப்பியர்களே—நாணயத்தோடு எங்களுக்கு அவற்றைக் கொடுத்தது மல்லாமல், அவற்றை அனுப்பி வைப்பதில் நல்ல கவனமும் செலுத்தினார்கள்; மேலும் எங்களுக்குச் சில தனி வசதிகளும் செய்தார்கள். எங்கள் மனத்தில் அவர்களிடம் பகைமை கிடையாது என்பது அவர்கள் அறிந்தது.

யாத்திரைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் முடிவானபோது, ஒரு உடன்பாட்டிற்கு மீண்டும் ஒரு முயற்சி செய்தேன். நான் ஏற்கெனவே கடிதங்களும் தந்திகளும் அனுப்பி இருந்தேன். என்னுடைய இச் சமாதானப் பேச்சு, அவமரியாதையான பதிலைப் பெறலாம் என்ற நெருக்கடியான நிலையிலும்கூட நான் தொலை பேசி மூலம் பேசத் தீர்மானித்தேன். அரை நிமிடத்திற்குள் இந்த பதில் எனக்குக் கிடைத்தது: "தளபதி சமட்சு உங்களோடு எதுவும் செய்வதற்கில்லை. நீங்கள் உங்களுக்கு தோன்றியபடியே செய்து கொள்ளலாம்." இத்தோடு இச் செய்தி முடிவுற்றது. இப்பதிலின் துடுக்குக்கு நான் தயாராக இல்லாவிட்டாலும் இம் முடிவு, நான் முற்றிலும் எதிர்பார்த்ததே.

மறுநாள் (1913-நவம்பர் 6) குறிப்பிட்ட மணியடித்த போது (6-30) நாங்கள் பிரார்த்தனை செய்துவிட்டு, ஆண்டவன் பெயரில் யாத்திரையைத் தொடங்கினோம்.

யாத்திரைக் கூட்டம் 2037 ஆடவர், 127 மகளிர், 57 குழந்தைகள் கொண்டதாய் இருந்தது.

சார்ல்ஸ்டவுனிலிருந்து ஒரு மைல் தூரத்தில் ஒரு சிற்றோடை இருந்தது. அதை ஒருவர் கடந்ததும், வால் கிரஸ்டு அல்லது டிரான்சுவாலுக்குள் நுழைந்ததாகும். எல்லை வாசலில், காவல் புரியும் குதிரைப் போலீசாரின் ஒரு சிறு கூட்டம் இருந்தது. நான் சைகை காட்டிய போது ஓடையைக் கடந்து வருமாறு 'படை'யிடம் குறிப்புரைகள் சொல்லிவிட்டு, நான் அவர்களிடம் சென்றேன். ஆனால், நான் போலீசாரோடு பேசிக்கொண்

டிருந்தபோதே, யாத்ரிகர்கள் திடீரெனப் பாய்ந்து, எல்லையைக் கடந்தனர். போலீசார் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனல் பொங்கி எழும் கூட்டம் அடக்கப்படுவதற்கு எளிதாக இல்லை. போலீசுக்கு அவர்களைக் கைதி செய்யும் எண்ணம் இல்லை. யாத்ரிகர்களை நான் சமாதானப்படுத்தி, அவர்களை ஒருங்கான வரிசைகளில் நின்றுகொள்ளுமாறு செய்தேன். சில நிமிடங்களில் எல்லாம் ஒழுங்காயது; டிரான்சுவாலுக்குள் செல்லுவதும் ஆரம்பமாயது.

இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வால்க்ஸ்ரஸ்டிலுள்ள ஐரோப்பியர்கள் ஒரு கூட்டம் நடத்தினர்கள்; அதில் இந்தியர்களுக்குப் பலவிதமான பயமுறுத்தல்கள் விடுத்தனர். டிரான்சுவாலுக்குள் நுழைந்தால் இந்தியர்களைச் சுடுவோம் என்று சிலர் சொன்னர்கள். ஐரோப்பியர்களோடு தர்க்கரீதியாக விவாதிக்க திரு. காலன்பாக் இக் கூட்டத்திற்குச் சென்ருர்; ஆனல் ஐரோப்பியர்களோ எவ்வகையிலும் அவருக்குச் செவி சாய்க்கத் தயாராயில்லை.

எங்கள் ஊர்வலம் அமைதியாக வால்க்ரஸ்டின் வழியாகச் சென்றது. ஐரோப்பியர் எவரும் கேலிகூடச் செய்ய முயற்சிக்கவில்லை என்பது என் நினைவு. இந்தப் புதுமைக் காட்சியைக் காண எல்லோரும் வெளியே வந்து நின்ருர்கள். அவ்வமயம், அவர்களில் சிலர் கண்களில் நேச ஒளி கூட வீசியது.

வால்க்ஸ்ரஸ்டிலிருந்து சுமார் எட்டு மைல் தொலையில் உள்ள பாம்போர்டில் எங்களுக்கு முதல்நாள் இரவு தங்கல்; அவ் இடத்திற்கு நாங்கள் சுமார் மாலை ஐந்து மணிக்கு போய்ச் சேர்ந்தோம். யாத்ரிகர்கள், தங்குளுடைய பங்கீட்டு ரொட்டியையும் சர்க்கரையும் எடுத்துக் கொண்டுபோய், திறந்த வெளியில் பரவலாக அமர்ந்தனர்; சிலர் பேசிக்கொண்டிருந்தனர்; அவ்வமயம் மற்றவர்கள் பஜனை பாடிக்கொண்டிருந்தனர்.

மகளிரில் சிலர், நடையினுல் மிகவும் தளர்வடைந் திருந்தனர். தங்கள் குழந்தைகளை இடுப்பில் சுமந்து வரத் துணிவு கொண்டிருந்தார்கள்; ஆனுல் மேற் கொண்டு அவர்கள் செல்லுவது அசாத்தியமானது. எனவே அவர்களை என்னுடைய முன் எச்சரிக்கைப்படி, ஒரு நல்ல இந்தியக் கடைக்காரரோடு, அங்கு தங்கி இருப் பவர்களாகவைத்தேன். நாங்கள் டால்ஸ்டாய்ப்பண்ணைக் குச் செல்ல அனுமதிக்கப்பட்டால், அவர்களை ஆங்கு அனுப்புவதாகவும், நாங்கள் கைதி செய்யப்பட்டால் அவர்களை அவர்கள் வீடுகளுக்கு அனுப்புவதாகவும், அவர் உறுதி கூறினுர்:

இரவு நேரமானபோது, இரைச்சல் அனைத்தும் அடங்கியது; நானும் தூங்கத் தயார் செய்து கொண் டிருந்தபோது, ஒரு காலடிச் சத்தம் கேட்டது. கையில் விளக்கோடு ஒரு ஐரோப்பியர் வருவதைப் பார்த்தேன். இதன் பொருளை நான் உணர்ந்தேன். ஆனுல் நான் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றும் இல்லை. அப் போலீசு அதிகாரி சொன்னுர்.

"உங்களைக் கைதி செய்ய அதிகாரப்பத்திரம் இருக் கிறது. உங்களை நான் கைதி செய்ய விரும்புகிறேன்."

"எப்பொழுது?" என்றேன்.

"இப்பொழுதே."

"என்னை எங்கே கொண்டு போவீர்கள்?"

"இப்பொழுது அருகிலுள்ள புகைவண்டி நிலையத் திற்கு; புகைவண்டி கிடைத்ததும் வால்க்ஸ்ரஸ்டுக்கு."

"ஏவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் நான் உங்க ளோடு வருகிறேன். ஆனுல் என்னுடைய சக ஊழியர் களில் ஒருவரிடம் சில குறிப்புரைகள் விட்டு வருவேன்"

"நீங்கள் அவ்வாறு செய்யலாம்".

என் அருகில் தூங்கிக்கொண்டிருந்த பி. கே. நாயுடுவை எழுப்பினேன். நான் கைதியானதை அவ ருக்குத் தெரிவித்து, யாத்ரிகர்களை விடியுமுன் எழுப்ப

வேண்டாம் என்று கேட்டுக்கொண்டேன். விடிந்ததும், அவர்கள் யாத்திரையைத் தொடர்ந்து நடத்தவேண்டும். சூரியன் எழுமுன் யாத்திரை ஆரம்பமாகும். அவர்கள் தங்கித் தங்கள் பங்கீட்டைப் பெறும் நேரம் வந்தபோது, நான் கைதியான செய்தியை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். இடையில் என்னைப் பற்றி யாரும் விசாரித்தால் அவருக்கு அவர் தெரிவிக்கலாம். யாத்ரிகர்கள் கைதி செய்யப்பட்டால், அவர்கள் அதற்கு இடம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால், திட்டப்படி யாத்திரையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். நாயுடுவுக்கு அச்சம் எதுவுமே கிடையாது. அவரும் கைதி செய்யப்பட்டால், என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவருக்குச் சொன்னேன். காலன்பாக்கும் வால்க்ஸ்ரஸ்டில் அச்சமயம் இருந்தார்.

நான் போலீசு அதிகாரியோடு சென்று, மறுநாட் காலை வால்க்ஸ்ரஸ்டுக்குப் புகைவண்டியில் போனேன். வால்க்ஸ்ரஸ்டில் நீதிமன்றத்தின் முன் சென்றேன். ஆனால் அரசாங்க வழக்கறிஞர் தான், சாட்சியோடு தயாராக இல்லாதபடியால் 14-ம் தேதி வரைக் கைதியைக் காவலில் வைத்துக்கொள்ளக் கேட்டுக்கொண்டார். எனவே வழக்கு ஒத்தி போடப்பட்டது. 2000 ஆடவரும், 122 மகளிரும், 50 குழந்தைகளும் என் பாதுகாப்பில் இருப்பதால், வாயிதாக் காலத்திற்குள்ளாக அவர்களை அவர்கள் போகவேண்டிய இடத்திற்கு நான் கூட்டிச் செல்ல விரும்பியபடியால், நான் சாமீனுக்கு மனுச் செய்தேன். அரசாங்க வழக்கறிஞர் மனுவை எதிர்த்தார். கொலைக் குற்றம் சாற்றப்படாத ஒவ்வொரு கைதிக்கும், சட்டப்படி தான் ஆஜராவதற்குச் சாமீன் கொடுக்க உரிமை இருந்தபடியாலும், அவ் உரிமையை என்னிடமிருந்து பறிக்கமுடியாத படியாலும், நீதிபதி இவ் விஷயத்தில் அசக்தராயிருந்தார். எனவே, அவர், 50 பவுண் சாமீனில் என்னை விடுதலை செய்தார். திரு.

காலன்பாக் எனக்காக ஒரு கார் தயாராக வைத்திருந் தார்; எனவே 'படையெடுப்'போரைத் திரும்பச் சேர என்னை உடனே கூட்டிப் போனார். 'டிரான்சுவால் லீட்ரி'ன் விசேட நிருபர் எங்களோடு வர விரும்பினார். அவரை எங்கள் காரில் கூட்டிச் சென்றோம். அவர் அச் சமயம், வழக்கையும் பயணத்தையும் குதூகலத்தோடு என்னை வரவேற்று மகிழ்ச்சியில் திளைத்த யாத்ரிகர்களைச் நான் சந்தித்ததையும் பற்றி ஒரு விவரமான வருணனையை வெளியிட்டார்; சார்லஸ் டவுனில் தங்கி உள்ள இந்தியர்களையும், அங்குப் புதிதாக வருபவர்களையும் கவனிக்க வேண்டி இருந்ததால், திரு. காலன்பாக் உடனே வால்க்ஸ்ரஸ்டுத் திரும்பினார்.

யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினோம். ஆனால் என்னைச் சுதந்திர நிலையில் விட்டுவைத்திருப்பது அரசாங்கத்துக்குப் பிடித்தம் இல்லை. எனவே 8-ம் தேதி ஸ்டண்டர்டன்னில் நான் மீண்டும் கைதி செய்யப்பட்டேன். ஸ்டண்டர்டன், மற்ற ஊரை உத்தேசிக்கும்போது, ஒரு பெரிய இடமாகும். இங்கு நான் கைதியான விதம் ஒரு விதமான புது மாதிரியாக இருந்தது. நான் யாத்திரிகர்களுக்கு ரொட்டி கொடுத்துக் கொண்டிருந்தேன். ஸ்டண்டர்டன்னிலுள்ள இந்திய மளிகைக்கடைக்காரர்கள் எங்களுக்குச் சில 'மார்மலேடு' புட்டிகள் இனாமாக அளித்தனர். எனவே, வினியோகம் வழக்கத்திற்கு அதிகமான நேரம் ஆயிற்று. இதற்கு மத்தியில், நீதிபதி வந்து என் பக்கத்தில் நின்றார். பங்கீடு வழங்குதல் முடியும் வரை அவர் காத்திருந்து, பின் என்னை ஒரு புறம் அழைத்தார். அவரை எனக்குத் தெரியும். என்னிடம் அவர் பேச விரும்பினார் போலும் என்று நினைத்தேன். அவர் சிரித்துவிட்டுச் சொன்னார்:

"நீங்கள் என் கைதி."

"பதவியில் எனக்கு ஏற்றம் கிடைத்திருப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் வெறும் போலீசு அதிகாரி

களுக்குப் பதிலாக, என்னைக் கைதி செய்யும் சிரமத்தை நீதிபதியான தாங்கள் எடுத்துக் கொள்ளுகிறீர்கள். ஆனால், நீங்கள் இப்பொழுதே என்னை விசாரணை செய்வீர்கள்''.

''என்னோடு வாருங்கள். நீதிமன்றங்கள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன'' என்று நீதிபதி பதில் கொடுத்தார்.

யாத்ரிகர்களைப் பயணத்தைத் தொடர்ந்து நடத்து மாறு கேட்டுக்கொண்ட பின், நீதிபதியோடு சென்றேன். நான் நீதிமன்றம் சென்றதும், என்னுடைய சக ஊழியர் களில் சிலரும் கைதி செய்யப்பட்டிருப்பதைக் கண்டேன். அவர்கள் ஐந்து பேர்கள் அங்கு இருந்தனர்.

நான் நீதிமன்றம் முன் கொண்டுவரப்பட்டேன்; காவல் நீடிக்க மனுச் செய்துகொள்ளப்பட்டது. நானும் வால்க்ரஸ்டில் உள்ள அதே காரணங்களைக் கொண்டு சாமீன் மனுச் செய்தேன். இங்கும் அரசாங்க வழக் கறிஞர் என் மனுவை வன்மையாக எதிர்த்தார். இங்கும் 50 பவுண் என் சொந்த சாமீனில் நான் விடுதலை செய்யப்பட்டு, வழக்கு 21-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது. இந்திய வியாபாரிகள் எனக்காக ஒரு வாகனம் தயாராக வைத்திருந்தார்கள். யாத்ரிகர் அதிகப்படி மூன்று மைல்கள் போயிருப்பதற்குள்ளாக, நான் அவர்க ளோடு மீண்டும் சேர்ந்துகொண்டேன். நாங்கள் இனி ஒருவேளை டால்ஸ்டாய்ப் பண்ணையை அடைந்து விடலாம் என்று யாத்ரிகர்கள் நினைத்தார்கள்; நானும் அவ்வாறு நினைத்தேன். ஆனால், அது நடப்பதற்கில்லை. 'படை' எடுப்போர் நான் கைதி செய்யப்படுவதற்கு இவ்வாறு பழகிக்கொண்டது ஒரு சிறிய காரியமல்ல. அந்த ஐந்து சக ஊழியர்களும் சிறையில் இருந்தனர்.

நாங்கள் இப்பொழுது ஜோகனஸ்பர்க்கு அருகில் இருந்தோம். யாத்திரை முழுவதும் எட்டுப் படிகளாக வகுக்கப்பட்டிருந்தன. இதுவரை, எங்கள் யாத்திரை

கள் திட்டப்படியே நடைபெற்றன; இப்பொழுது இன்னும் நான்கு நாள் யாத்திரை எஞ்சி இருந்தன. எங்களது ஊக்கம் நாளுக்கு நாள் வளர்ந்தது என்றால், அரசாங்கமும் இவ் இந்தியப் படை எடுப்பை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி மென்மேலும் கவலை கொள்ளலாயினர். எங்களது இலக்கை நாங்கள் அடைந்த பின்னர் நாங்கள் கைதி செய்யப்பட்டால், அவர்கள், மெலிவுக்கும் சாமர்த்தியக் குறைவுக்கும் குற்றம் சாட்டப் படுவார்கள். நாங்கள் கைதி செய்யப் படுவதானால், வாக்குக் கொடுத்த இடத்திற்குப் போகு முன்னர், கைதி செய்யப்பட வேண்டும்.

கோகலே, போலக் இந்தியா வரவேண்டும் என்றும் இந்திய ஏகாதிபத்திய அரசாங்கங்களின் முன்னர், நிலைமையின் விவரங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தனக்கு உதவி புரிய வேண்டும் என்னும், கடல் தந்தி மூலம் விரும்பி இருந்தார். எனவே அவரை நாங்கள் இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண் டிருந்தோம். அவர் போகலாம் என்று நான் அவருக்கு எழுதினேன். ஆனால் அவர் என்னை நேரில் சந்தித்து, என்னிடமிருந்து பூரணமான குறிப்புரைகள் பெற்றுக் கொள்ளாமல் போவதாக இல்லை. எனவே, எங்க ளுடைய யாத்திரையின்போது என்னை வந்து சந்திப்ப தாக அவர் தெரிவித்தார். அவர் விரும்பினால் வரலாம் என்றும் ஆனால் அப்படிச் செய்வதில் கைதியாகக் கூடிய ஆபத்து ஏற்படலாம் என்றும் அவருக்குத் தந்தி கொடுத்தேன்.

இவ்வாறிருந்தும், ஸ்டண்டர்டன்னுக்கும் கிரேலிங்க் ஸ்டாடுக்கும் இடையில் உள்ள டீக்வொர்தில், 9-ம் தேதி எங்களோடு போலக் வந்து சேர்ந்தார். நாங்கள் எங்கள் ஆலோசனையை அநேகமாக முடித்த நிலையில் இருந்தோம். அப்பொழுது பிற்பகல் சுமார் மூன்று மணி இருக்கும்—யாத்ரிகர்கள் கூட்டத்தில் முன் அணியில்

போலக்கும் நானும் நடந்து சென்று கொண்டிருந்தோம். எங்களது உரையாடலை எங்களுடைய சகஊழியர்களில் சிலர் கேட்டுக் கொண்டிருந்தனர். போலக், டர்பானுக்கு மாலைப் புகைவண்டியில் போக இருந்தார். ஆனால், தனது திட்டங்களை நிறைவேற்ற மனிதனுக்கு கடவுள் எப்பொழுதும் அனுமதிப்பதில்லை. நாங்கள் இப்படி உரையாடலில் ஈடுபட்டிருந்தபோது ஒரு 'கேப்' வண்டி வந்து எங்கள் முன் நின்றது. டிரான்சுவால் தலைமைக் குடியேற்ற அதிகாரியான திரு. சாம்னேயும், ஒரு போலீஸ் அதிகாரியும் அதிலிருந்து இறங்கினர். அவர்கள் என்னை ஒரு பக்கம் சிறிது கூட்டிச் சென்று, அவர்களில் ஒருவர் என்னிடம், "உங்களை நான் கைதி செய்கிறேன்" என்றார்.

இவ்வாறு நான்கு நாட்களில் நான் மூன்று தடவைகள் கைதியானேன்.

"யாத்ரிகர்களைப் பற்றி என்ன?" என்று கேட்டேன்.

"அதைப் பற்றிப் பார்த்துக் கொள்ளுவோம்" என்ற விடை வந்தது.

மேலொன்றும் நான் சொல்லவில்லை.—யாத்ரிகர்களைப் பற்றிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர்களோடு போகுமாறு போலக்கைக் கேட்டுக் கொண்டேன். நான் கைதி செய்யப்பட்டதை யாத்ரிகர்களுக்கு சொல்ல மட்டும் போலீசு அதிகாரி என்னை அனுமதித்தார். நான் அவர்களை அமைதியைப் பாதுகாக்க வேண்டும் என்பன சொல்ல முற்பட்டபோது, அதிகாரி என்னை இடைமறித்துச் சொன்னதாவது:

"நீங்கள் இப்பொழுது ஒரு கைதி; சொற்பொழிவுகள் ஒன்றும் செய்யலாகாது."

என்னை கிரேலிங்க்ஸ்டாடுக்கும், அங்கிருந்து, பால்போர் வழியாக, ஹீடல்பர்க்குக்கும் கொண்டு போனார்கள். அங்கு இரவைக் கழித்தேன். போலக்கைத்

தலைவராகக் கொண்ட யாத்ரிகர்கள், யாத்திரையைத் தொடர்ந்து நடத்தி, இரவில் கிரேலிங்ஸ்டாடில் தங்கினுர்கள். 10-ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு, யாத்ரிகர்கள் பால்போர் அடைந்தார்கள். ஆங்கு புகைவண்டி நிலையத்தில் இவர்களைக் கொண்டுபோய் நேடாலில் கொண்டு விடுவதற்கு, மூன்று தனிப் புகைவண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. யாத்ரிகர்கள் சிறிது பிடிவாதம் உள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் என்னை அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் அவ்வாறு புத்திமதி கூறினுல் தாங்கள் கைதி செய்யப்படுவதற்கும் புகைவண்டியில் ஏறுவதற்கும் உறுதி தந்தார்கள். ஆனுல் போலக்கும் கச்சாலிய சேத்தும், அவர்களோடு வாதித்த பின்னர், யாத்ரிகர்கள் சரிக்கட்டப்பட்டார்கள். அமைதியாகப் புகைவண்டியில் ஏறினுர்கள்.

59

சத்தியாக்கிரகத்தின் வெற்றி

என்னளவில், நான் மீண்டும் நீதிபதி முன் நிறுத்தப்பட்டேன். இச்சமயம் நான் டண்டியிலிருந்து வந்த அதிகாரப் பத்திர மூலம் கைதி செய்யப்பட்டேன். நேட்டால் மாகாணத்தை விட்டு ஒப்பந்தத் தொழிலாளிகள் வெளியேறுமாறு தூண்டியதான பிரதானக் குற்றச் சாட்டின் பேரில் என்மேல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனவே புகைவண்டி மூலம் அன்றே நான் டண்டிக்குக்கொண்டு போகப்பட்டேன்.

போலக் பார்ல்போரில் கைது செய்யப்படாதது மட்டுமல்லாமல், அதிகாரிகளுக்கு உதவிபுரிந்தமைக்காக நன்றியும் கூடச்செலுத்தப்பட்டார். ஆனுல், அவர் ரயிலுக்காக சார்லஸ்டவுனில் காத்துக்கொண்டிருந்த போது ஆங்கு கைதிசெய்யப்பட்டார். காலன்பாக்கும்

கைது ஆனார். இவ் இருநண்பர்களும் வால்கிரஸ்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

நான் 11-ம் தேதி டண்டியில் விசாரிக்கப்பட்டு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை அடைந்தேன். தடுக்கப்பட்ட மக்கள் டிரான்சுவாலுக்குள் நுழைவதற்கு உதவி செய்ததும் தூண்டுதல் செய்ததும் ஆன குற்றத்திற்கு எனது இரண்டாவது விசாரணை வால்கிரஸ்டில் நடைபெறும். எனவே நான் டண்டியிலிருந்து வால்கிரஸ்டுக்கு 13-ம் தேதி கொண்டுபோகப்பட்டேன். ஆங்கே சிறையில் காலன்பாக்கையும் போலக்கையும் கண்டுகளித்தேன். நாங்கள் சில தினங்களை ஒன்றாக மகிழ்ச்சியோடு கழித்தோம்; ஆனால் விரைவிலேயே நாங்கள் அரசாங்கத்தாரால் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு சிறைகளில் வைக்கப்பட்டோம்.

இனி, யாத்ரிகர்களுக்கு வருவோம். தனிப் புகை வண்டிகள் அவர்களை நேட்டாலுக்குத் திரும்பக்கொண்டு போயின. அரசாங்கம், நிலக்கரிச் சுரங்கங்களைச்சுற்றிக் கம்பிவலைபோட்டனர். அரசாங்கம் டண்டியும் நியூகேசிலும், சிறைகளின் வெளிக்கிளை நிலையங்களெனப் பிரகடனம் செய்து, சுரங்கச் சொந்தக்காரர்களின் ஐரோப்பிய சிப்பந்திகளைச் சிறைகாவலார்களாக நியமித்து, யாத்திரிகர்களை மீண்டும் வேலையில் ஈடுபடுத்தினர். தொழிலாளிகள் இவ்வாறு கேவலம் வடிகட்டின அடிமை நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். ஆனால் சுரங்கங்களில் வேலை செய்ய அவர்கள் அறவே மறுத்தனர்; அவர்கள் மிருகத்தனமாய்ச் சவுக்காலடிக்கப்பட்டனர்; உதைக்கப்பட்டனர்; திட்டப்பட்டனர். இந்த அக்கிரமங்களைப் பற்றி இந்தியாவிற்குக் கடல்தந்திகள் அனுப்பப்பட்டன. அகில இந்தியாவும் மிகுந்த கொதிப்பு அடைந்தது; தென் ஆப்பிரிக்காப் பிரசினை அந்நாளில் எங்கும் பேச்சாக இருந்தது.

தென் ஆப்பிரிக்காவிலும் இங்கிலாந்திலும் பர

பரப்பை உண்டாக்கிய ஹார்டிஞ்சு பிரபுவின் புகழ்பெற்ற சொற்பொழிவு சென்னையில் 1913 டிசம்பரில் நடந்தது. சாம்ராஜ்யத்தின் மற்ற உறுப்பினர்களே இராஜப்பிரதிநிதி வெளிப்படையாகக் கண்டிப்பதற்கில்லை. ஆனால் ஹார்டிஞ்சு பிரபு யூனியன் அரசாங்கத்தின் பேரில் கடுமையான கண்டனங்கள் கூறியதோடு மட்டுமல்லாமல், சத்தியாக்கிரகிகளின் செயல்களை முழுமனதோடு ஆதரித்தார். ஹார்டிஞ்சு பிரபுவின் உறுதி எங்கணும் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தியது.

ஆயிரக்கணக்கான நிரபராதிகளைச் சிறையில் வைத்திருக்க யூனியன் அரசாங்கத்திற்குச் சக்தி கிடையாது. இராஜப்பிரதிநிதி அதைச் சகிக்கமாட்டார். சுமட்சு தளபதி என்ன செய்யப் போகிறார் என்று அகில உலகமும் எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. இம்மாதிரி நிலையில் உள்ள மற்ற அரசாங்கங்கள் பொதுவாக என்ன செய்யுமோ அதையே யூனியன் அரசாங்கமும் செய்தது. பொது மக்கள் கருத்தைக் கவனிக்கும் அரசுகள், இம்மாதிரி இக்கட்டான நிலைகளில் இருந்து மீள, ஒரு விசாரணைக் குழுவை நியமிப்பார்கள் ; அது பேருக்கு ஒரு விசாரணையை நடத்தும். ஏனெனில் அதன் சிபாரிசுகள் முன்னரே முடிவானவைகளே. இக்குழுவின் சிபாரிசுகளை அரசாங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது பொதுவான வழக்கம். எனவே, அச்சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளும் போர்வையில், அரசாங்கங்கள் தாங்கள் முதலில் மறுத்த நியாயத்தை பின் வழங்குவார்கள். மூன்று பேர்கள் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை சுமட்சு தளபதி நியமித்தார். விசாரணை முடிந்த மட்டும் பூரணமாக இருப்பதற்குத் தோதாக, காலன்பாக், போலக், நான் ஆகியோர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும் என்று விசாரணைக்குழு சிபார்சு செய்தது. அரசாங்கம் இச்சிபார்சை ஏற்றுக்கொண்டு ஆறுமாதத்துக்குள்ளான எங்கள் சிறைவாசத்திற்குப்

பின் எங்கள் மூவரையும் ஒரே சமயத்தில் விடுதலை செய்தார்கள். (1913 டிசம்பர், 18)

விசாரணைக் குழுவில் ஒருவரையாவது நியமிக்க இந்திய சமூகத்திற்கு நிச்சயமாக அனுமதி வேண்டும் என்று நாங்கள் கருதினோம். எனவே நான் சுமட்சு தளபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். ஆனால், அவர் விசாரணைக் குழுவில் மேற்கொண்டு உறுப்பினர்களை நியமிக்க மறுத்தார். எனவே நாங்கள் சிறை செல்லத் தயாரானோம். சிறை செல்லும் இந்தியர் கோஷ்டி ஒன்று டர்பானிலிருந்து 1914 ஜனவரி 1-ல் யாத்திரையைத் தொடங்கும் என்று அறிவித்தோம்.

இதேசமயத்தில் யூனியன் புகைவண்டி அலுவலகங்களில் ஐரோப்பியச் சிப்பந்திகள் ஒரு பொது வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். இது அரசாங்கத்தின் நிலைமையை மிகவும் நெருக்கடியாக்கி இருந்தது. இம்மாதிரியான அதிர்ஷ்டகரமான சமயத்தில் இந்தியர் யாத்திரையைத் தொடங்குமாறு நான் கேட்கப்பட்டிருந்தேன். ஆனால், இந்தியர்களுடைய போராட்டம் அரசாங்கத்திற்குத் தொந்திரவு கொடுப்பதற்காக இல்லை என்பதாலும், அவர்களுடைய போராட்டத்தின் போக்கும் நோக்கும் முழுதும் வேறு ஆதலாலும், ரெயில்வே வேலைநிறுத்தக்காரர்களுக்கு இந்தியர்கள் இதன் மூலம் உதவி செய்யக் கூடாது என்று நான் அறிவித்தேன். யாத்திரையை மேற்கொள்வது என்றாலும்கூட, ரயில்வேச்சங்கடம் முடிந்த பின்னர் வேறு ஒரு சமயம், ஆரம்பித்துக் கொள்ளலாம், என்று முடிவு செய்தேன்.

எங்களுடைய இம்முடிவு, ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்தியது. இதை ராய்ட்டர் செய்திநிலையம் கடல் தந்தி மூலம் இங்கிலாந்துக்குத் தெரிவித்தது. ஆம்தில் பிரபு தமது பாராட்டுதலை இங்கிலாந்திலிருந்து கடல் தந்தி மூலம் தெரிவித்தார். தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஆங்கிலேய நண்பர்களும் இம்முடிவைப் பாராட்

டினார்கள். சுமட்சு தளபதியின் செயலாளர்களில் ஒரு வர் நகைச்சுவையோடு சொன்னதாவது: "உங்கள் ஜனங்களை எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கு உதவி புரிவதில் எனக்கு அக்கறையே கிடையாது. ஆனால் நான் என்ன செய்ய? எங்களுக்குத் தேவையான நேரங்களில் நீங்கள் எங்களுக்கு உதவுகிறீர்கள். உங்கள் மேல் நாங்கள் எப்படிக் கைவைப்பது? ஆங்கிலேய வேலைநிறுத்தக்காரர்கள்போல் நீங்கள் இம்சை முறை யில் இறங்க வேண்டும் என்று நான் பலமுறை நினைத்த துண்டு; அப்பொழுது உங்களை எப்படித் தீர்த்துக் கட்டு வது என்பது எங்களுக்கு உடனே தெரியும். ஆனால் நீங்களோ, பகைவனுக்குக்கூடத் துன்பம்விளைக்க மாட் டீர்கள்; தன்னைத் தானே துன்புறுத்துவதின் மூலமே வெற்றி அடைய நீங்கள் விரும்புகிறீர்கள்; ஊராண்மை, மரியாதை என்பவற்றிற்குத் தாமே ஏற்படுத்திக்கொண்ட வரம்புகளை நீங்கள் ஒருக்காலும் மீறுவதில்லை. அதுவே எங்களை அடியோடு செயலறச் செய்கிறது" என்றார். சுமட்சு தளபதியும் இம்மாதிரியான கருத்துக்களை வெளி யிட்டார்.

இத்தகைய நற்செயல்கள் பல, கண்ணுக்குத் தெரியாத, ஆனால் ஆற்றல் மிகுந்த, அடையாளங்களை எங்கணும் பதிவு செய்தன; இந்தியர்களுடைய கண்ணி யத்தை உயர்த்தியது; உடன்படிக்கைக்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியது.

விசாரணைக் குழுவின் வேலையைப் பற்றி சுமட்சு தளபதியோடுக் கடிதப் போக்குவரவு செய்து ஒரு ஒப்பந் தத்துக்கு வந்தேன். குழு தனது அறிக்கையில் இந்தி யர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டும் என்று சிபார்சு செய்தது. அறிக்கை வெளியான சிறிது காலத்திற்குள்ளாக, யூனியன் அதிகார பூர்வமான கெஜட்டில், இந்தியர்களின் விமோசன மசோதாவை வெளியிட்டது. அது, 3 பவுண் வரியை ஒழித்தது; இந்

தியாவில் சட்டப்படி செல்லத்தகும் எனக் கருதப்படும் மணங்களைச் செல்லும்படியாக்கியது; கட்டைவிரல் ரேகை கொண்ட குடியிருப்புச் சான்றிதழை வைத்திருப்போர் யூனியனில் நுழையும் உரிமைக்குப் போதுமான சான்ருகும் என்றது.

இவ்வாறு எட்டு ஆண்டுகளுக்குபின், மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவுற்றது. தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் இப்பொழுது சாந்தியோடு இருப்பதாகத் தோன்றியது. 1914 ஜுலை 18-ம் நாள், நான் இன்பமும் துன்பமும் கலந்த உணர்ச்சியோடு, இந்தியாவுக்குத் திரும்பும் வழியில், கோகலேயைச் சந்திப்பதற்காக இங்கிலாந்துக்குக் கப்பலேறினேன். இன்பத்திற்குக் காரணம் பல ஆண்டுகளுக்குப் பின் தாயகம் திரும்புகிறேன் என்பதும் கோகலேயின் மேற்பார்வையில் தேசசேவை செய்வதை ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருந்ததும் ஆகும். துன்பத்திற்குக் காரணம் என் வாழ்வில் 21 ஆண்டுகளைக் கழித்து மனித அனுபவத்தின் இன்ப துன்பங்களை முற்றிலும் பகிர்ந்து அனுபவித்த நிலைக்களனும், என் வாழ்க்கையின் தொழிலை உணரச்செய்த நாடானுமான, தென் ஆப்பிரிக்காவை விட்டுப் போவது மனதிற்குப் பெரிய கஷ்டம் என்பதே ஆகும்.

பாகம் IX

இங்கிலாந்துக்குச் செல்லுதலும் போரும்

60

போரில் என் பங்கு

1914 ஆகஸ்டு 4-ம் நாள், போர் ஆரம்பமாயிற்று. நாங்கள் 6-ம் நாள் இலண்டன் அடைந்தோம்.

இங்கிலாந்தில் உள்ள இந்தியர்கள் போரில் தங்களால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும் என்று நான் கருதினேன். போரில் பட்டாளத்தில் சேவை செய்ய ஆங்கில மாணவர்கள் முன் வந்தார்கள். இந்தியர்களும் அதற்குக் குறையாமல் செய்யலாம் என்றேன். இம்மாதிரியான வாதத்திற்கு பல எதிர்ப்புகள் சொல்லப்பட்டன.

இந்தியர்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ளவும், இந்தியர்களுடைய கோரிக்கைகளை உறுதியாகத் தைரியமாக வெளியிடுவதற்கும் இதுவே உரிய தருணம் என்றும் என்னை எதிர்த்த நண்பர்கள் கருதினார்கள்.

இந்தியாவின் தேவையை, நமக்கு ஒரு சந்தர்ப்பமாக உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்றும், போர் நடக்கும் வரை நமது கோரிக்கைகளை வற்புறுத்தாமல் இருப்பதே, கண்ணியமும் தீர்க்கதரிசனமுமாகும் என்று நான் நினைத்தேன். எனவே எனது புத்திமதியைக் கைப்பிடித்துத் தொண்டர்களாகச் சேர விரும்புபவர்களை அழைத்தேன். இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. தொண்டர்களில் எல்லா மதங்களையும் எல்லா மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் இருந்தனர்.

நான் குரு பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதினேன்;

அதில் இவ்விவரங்களைத் தெரிவித்து, எங்கள் வேண்டுதலை ஏற்றுக்கொள்வதற்குச் சிகிச்சைப் பயிற்சி முன் நிபந்தனையாகக் கருதப்பட்டால், அதனைப்பெற நாங்கள் தயார் என்றும் எழுதி இருந்தேன்.

எங்கள் வேண்டுதலைக் குருப் பிரபு, சிறிது தயக்கத்திற்குப் பின் ஏற்றுக்கொண்டார்; அந்த நெருக்கடியான நேரத்தில் எங்கள் சேவையைச் சாம்ராஜ்யத்திற்குக் கொடுக்க முன் வந்ததற்காக எங்களுக்கு நன்றி செலுத்தினர்.

போரில் பங்கு கொள்ளுவது அகிம்சைக்கு எக்காலும் பொருத்தமாகாது என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனல் தனது கடமையைப்பற்றி அவ்வளவு தெளிவாகத் தெரிந்து கொள்ளுவதற்கு ஒவ்வொருவருக்கும் கொடுத்துவைக்கப் படுவதில்லை.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மூலம் எனது நிலையையும், என் மக்களின் நிலையையும் உயர்த்திக் கொள்ளலாம் என்று நான் நம்பி இருந்தேன். நான் இங்கிலாந்தில், ஆங்கிலக் கடற்படையின் பாதுகாப்பிலும் ஆதன் ஆயுதபலத்தின் கீழ் அடைக்கலமாகவும் இருந்த பொழுது, அதனல் ஏற்படக்கூடிய இம்சையில் நான் நேரடியாகக் கலந்துகொண்டவன் ஆனேன். எனவே, சாம்ராஜ்யத்தோடு நான் தொடர்பு வைத்துக் கொண்டு, அதன் கொடியின்கீழ் வாழவிரும்பினல், எனக்கு உள்ள மூன்று வழிகளில் ஒன்றை நான் பின்பற்றலாம். போருக்கு எதிர்ப்பைப் பகிரங்கமாகத் தெரிவித்துச் சத்தியாக்கிர அறத்தின்படி, சாம்ராஜ்யம் தனது இராணுவ முறையை மாற்றிக்கொள்ளும்வரை, அதைப் பகிஷ்கரித்தல்; அல்லது மறுத்தற்கு உரிய அதனுடைய சட்டங்களைச் சட்டமறுப்பு மூலம் மறுத்து சிறைபுக நாடலாம்; அல்லது சாம்ராஜ்யத்தின் சார்பில் நான் போரில் பங்கெடுத்து, அதன் மூலம் போரின் இம்சையை எதிர்ப்பதற்கு வேண்டிய ஆற்றலையும்

தகுதியையும் பெறலாம். ஆனால் இவ் ஆற்றலும் தகுதியும் என்னிடம் இல்லை. எனவே போரில் உழைப்ப தன்றிப் பிறிதொரு வழி இல்லை என்று நினைத்தேன்.

அகிம்சை நோக்குடன் பார்க்குங்கால், போர் முனையில் பங்கெடுப்போர் பங்கெடுக்காதார் என்று நான் வேறுபாடு பாராட்டுவதில்லை. ஒரு கொள்ளைக் கூட்டத்தினர்க்கு ஒருவன், அவர்கள் சாமான்களை எடுத்துச் செல்லவோ, அல்லது அவர்கள் கொள்ளை யடிக்கும்பொழுது அவர்களுக்குக் காவல் புரியவோ, அல்லது அவர்கள் காயமுற்றபோது அவர்களுக்குப் பணிவிடை செய்யவோ முன்வந்தால், கொள்ளைக்காரர் களைப் போலவே, அவனும் கொள்ளைக் குற்றத்துக்கு உள்ளாகிறான். அதேபோல், போரில் காயம் அடைந்த வர்களுக்குப் பணிவிடை செய்வதில் மட்டும் ஈடுபடு வோரும் போர்க் குற்றத்திலிருந்து விலக்கப்பட மாட்டார்கள். என்னுடைய அகிம்சாக் கொள்கையோடு எனது செயல் பொருத்தத்தை மறுத்து போலக்கின் கடல்தந்தி வருவதற்கு முன்னமேயே எனக்குள்ளாகவே இப் பிரசினை முழுவதையும் இம்மாதிரியாக விவாதித் திருந்தேன்; அது வரப்பெற்றதும், இக்கருத்துக்களை நண்பர் பலரோடும் விவாதித்துப் போரில் தொண்டு புரிய முன்வருவது என் கடமையென முடிவு செய்தேன். இன்றும்கூட, இந்த வாத முறையில் எவ்விதத் தவறும் நான் காணவில்லை. பிரிட்டிஷ் உறவுக்குச் சாதகமாகவே நான் அந்நாளில் கருத்துக்கொண்டிருந்தேனாதலால், என் செயலின் பொருட்டு நான் வருந்தவுமில்லை.

எனக்குப் பாரிச நோய் வந்தது. எனவே நான் மாரிகாலத்திற்கு முன்னதாக இந்தியாவிற்குத் திரும்பி விடுமாறு ஆலோசனை சொல்லப்பட்டேன். அவ்வாறே செய்தேன். பல ஆண்டுகள் அஞ்ஞாத வாசத்திற்குப் பின்னர் தாயகத்திற்குத் திரும்பி வருவது மகிழ்ச்சிக் குரியதே.

பாகம் X

இந்தியாவில்

61

சபர்மதி ஆசிரமம் நிறுவுதல்

நான் தாயகம் சேருமுன்னர், போனிக்ஸிலிருந்து புறப்பட்டவர்கள் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார்கள். நான் பம்பாயில் இறங்கியபொழுது, போனிக்சு கோஷ்டி, சாந்திநிகேதத்தில் இருப்பதாக அறிந்தேன். கோகலேயே நான் சந்தித்தபின், கூடியவிரைவில் அவர்களைச் சந்திக்க ஆவல் கொண்டிருந்தேன்.

கோகலேயும், இந்திய ஊழியர்சங்க உறுப்பினர்களும் என்னை அன்பிலே ஆழ்த்தினர். என் நினைவு, கோகலே என்னைச் சந்திக்க அவர்கள் அனைவரையும் அழைத்திருந்தனர் என்று. அவர்கள் எல்லோருடனும், நானாவித விஷயங்களைப்பற்றி மனம்விட்டுப் பேசினேன்.

கோகலே நான் அச்சங்கத்தில் சேரவேண்டும் என்று பெரிதும் விழைந்தார்; யானும் அவ்வாறே. ஆனால் உறுப்பினர்களோ, என்னுடைய குறிக்கோள்களுக்கும் வேலை முறைக்கும், அவர்களுடையவற்றிற்கும் மிகுந்த வேறுபாடு இருந்ததால், நான் சங்கத்தில் சேருவது முறையாகாது என்று கருதினார்கள். பின் என் உத்தேசங்களைக் கோகலேய்க்குத் தெரிவித்தேன். நான் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டாலும், படாவிட்டாலும், கூடுமானால் குஜாராத்தில் ஏதாவது ஓரிடத்தில், என்னுடைய போனிக்சுக் குடும்பத்தோடு குடியேறுவதற்கு ஒரு ஆசிரமம் நிறுவ விரும்பினேன். நான் ஒரு குஜராத்தியாகவே, குஜராத்தின் மூலமாக நாட்டுக்கு உழைக்க மிகவும் தகுதிவாய்ந்தவனாகக்

கருதினேன். கோகலேய்க்கு இக்கருத்துப் பிடித்தது. அவர் சொன்னதாவது: "நீங்கள் அவ்வாறே செய்ய வேண்டும். உறுப்பினர்களோடு உங்கள் பேச்சுக்களின் முடிவு எதுவாயினும், ஆசிரமத்தின் செலவுகளுக்கு என்னை நீங்கள் எதிர்பார்க்கவேண்டும்; அவ் ஆசிரமத்தை என்னுடையதாகவே கருதுகிறேன்."

என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கி வழிந்தது. நிதி திரட்டும் பொறுப்பிலிருந்து விடுபட்டிருக்கும் உணர்ச்சியும், நான் தன்னந்தனியனாய் வேலை தொடங்க வேண்டியதில்லை என்பதும், சங்கடம் நேர்ந்த காலை ஒரு சிறந்த வழிகாட்டி எனக்கு உளர் என்ற நினைப்பும், மகிழ்ச்சிக்கு உரியதாகும். இது என் மனதிலிருந்த ஒரு பெரிய பாரத்தை நீக்கியது.

அனுபவம் பெறுவதற்காக இந்தியாவில் நான் பிரயாணம் செய்ய வேண்டும் என்றும், பயிற்சிக்காலம் முடிவடையும் முன்னர்ப் பொதுப்பிரசினைகளில் நான் கருத்து எதுவும் வெளியிடக்கூடாது என்றும் கோகலே என்னிடம் ஒரு வாக்குறுதி வாங்கிக்கொண்டார்.

62

மூன்றும் வகுப்புப் பிரயாணியின் துயரங்கள்

தென் ஆபிரிக்கா சத்தியாக்கிரகத்தின்போது, ஒரு ஒப்பந்தத் தொழிலாளியின் உடைக்கு ஒத்ததாக நான் ஆடை அணிவதை மாற்றிக்கொண்டேன். இங்கிலாந்திலும், வீட்டுக்குள் பழக்கத்திற்கு அதே ஆடை அணியும் முறையை வைத்துக்கொண்டேன். பம்பாயில் இறங்கும் போது, இந்திய ஆலைத் துணியாலான, ஒரு ஷர்ட்டு, வேஷ்டி, ஒரு மேலங்கி கொண்டதான கத்தியவாடி உடையை அணிந்து கொண்டிருந்தேன். ஆனால் நான்

பம்பாயிலிருந்து மூன்றுவது வகுப்பில் பிரயாணம் செய்ய வேண்டி இருந்ததால், அங்கவஸ்திரமும் கோட்டும் அவசியமில்லை என்று களைந்துவிட்டு, ஒரு எட்டு அல்லது பத்தணு காஷ்மீரிக் குல்லா வாங்கிக்கொண்டேன். அந்த முறையில் உடை அணிந்திருப்பவர், ஒரு எளியவனுகவே கருதப்படுவார்.

சாந்தி நிகேதனிலிருந்து திரும்பியபின், பர்த்வானில், தமது பிரயாணச் சீட்டு வாங்குவதற்குக்கூட மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் பட்ட கஷ்டங்களைக் கண்ணுக்கெதிரில் கண்டோம். 'மூன்றும் வகுப்புப் பிரயாணச் சீட்டுகள் அவ்வளவு சீக்கிரம் கொடுக்கப் படுவதில்லை' என்று சொல்லப்பட்டோம். நான் புகை வண்டி நிலைய அதிகாரியிடம் சென்றேன்; அவரிடம் போவதும் மிகவும் கஷ்டமான காரியமாய் இருந்தது. அவர் இருக்கும் இடத்தை யாரோ ஒருவர் அன்பு கூர்ந்து காட்டினர். எங்கள் கஷ்டங்களை அவருக்கு எடுத்து உரைத்தேன். அவரும் அதே பதிலையே சொன்னர். சீட்டுக்கொடுக்கும் பலகணி திறந்தவுடன், நான் சீட்டு வாங்கச் சென்றேன். ஆனல் பிரயாணச் சீட்டு வாங்குவது அவ்வளவு எளிதான காரியமல்ல. வலிமையே உரிமையாக இருந்தது. எனவே, மற்றவர்களுடைய நலங்களைக் கவனியாது முனைந்து வருவோர்கள், ஒருவர் பின் ஒருவராய் வந்து என்னை வெளியே தள்ளிவிட்டார்கள். எனவே, முதல் கூட்டத்தில் அநேகமாகக் கடேசியாகவே நான் பிரயாணச் சீட்டு வாங்க முடிந்தது.

புகை வண்டி வந்தது. அதில் ஏறுவதும், இன்னொரு சோதனையாக இருந்தது. புகை வண்டியில் ஏற்கெனவே உள்ளே இருந்த பிரயாணிகளுக்கும் உள்ளே ஏற முயற்சிப்பவர்களுக்கும் இடையே வசை மொழிகளும், பிடித்துத் தள்ளுதல்களும் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பிளாட்பாரத்தில் மேலும் கீழும்

ஓடினேம். ஆனல் எங்கும் எங்களுக்கும் ஒரே மறுமொழி தான் கிடைத்தது: "இங்கு இடமில்லை!" நான் கார்டி னிடம் சென்று சொன்னேன். அவர் சொன்னர்: "உங்களுக்கு முடிந்த இடத்தில் ஏறிக்கொள்ள முயற்சி செய்யுங்கள். இல்லாவிடில் அடுத்த புகை வண்டியில் வாருங்கள்."

"ஆனல் எனக்கு அவசரமான வேலை இருக்கிறது." என்று நான் மரியாதையோடு மறுமொழி கூறினேன். நான் சொன்னதைக் கேட்டுக்கொள்ள அவருக்கு நேர மில்லை. செய்வது அறியாது திகைத்தேன். அகப்பட்ட இடத்தில் ஏறிக்கொள்ளுமாறு மகன்லாலிடம் கூறிவிட்டு, என் மனைவியோடு நான் 'இன்டர்' வகுப்புப் பெட்டியில் ஏறிக்கொண்டேன். நாங்கள் ஏறுவதைக் கார்டு பார்த் தார். அசான்சால் புகை வண்டி நிலையத்தில் அதிகக் கட்டணம் வசூலிப்பதற்காக அவர் எங்களிடம் வந்தார். நான் அவரிடம் சொன்னதாவது:

"எங்களுக்கு இடம் தரவேண்டியது உங்களுடைய கடமையாகும். எங்களுக்கு இடம் கிடைக்காதபடியால், நாங்கள் இங்கு இருக்கிறேம். மூன்ருவது வகுப்புப் பெட்டியில் எங்களுக்கு இடம் காட்டினல், நாங்கள் மகிழ்ச்சியோடு அங்குச் செல்லுவோம்."

"நீங்கள் என்னேடு வாதாடவேண்டாம்; உங் களுக்கு நான் ஒன்றும் இடம் தர முடியாது. நீங்கள் அதிகக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும் இல்லா விட்டால் வெளியேற வேண்டும்." என்றுர் கார்டு.

நான் பூனவுக்கு எப்படியும் போய்ச் சேரவேண்டு மென விரும்பினேன். எனவே கார்டுடன் சண்டைபோட நான் தயாராக இல்லை. எனவே பூன வரை அவர் கேட்ட அதிகக் கட்டணத்தைச் செலுத்தினேன். ஆனல் இவ் அநீதியைக் குறித்துப் பெரிதும் மனக் கொதிப்பு உற்றேன்.

காலையில் மோகல்சராய் அடைந்தோம். மகன்

லாலுக்கு மூன்றுவது வகுப்புப் பெட்டியில் ஒரு இடம் கிடைத்தது. இவ் இடத்திற்கு நாங்களும் இப்பொழுது மாற்றிக் கொண்டோம். சீட்டுப் பரிசோதகரிடம் இவ் விவரங்களை எல்லாம் சொல்லி, மோகல்சராயில் நான் மூன்றுவது வகுப்புப் பெட்டிக்கு மாற்றிக்கொண்டேன் என்று ஒரு சான்றிதழ்த் தருமாறு கேட்டேன். இதைச் செய்ய அவர் மறுத்தார். பரிகாரம் தருமாறு வேண்டி, புகை வண்டி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தேன். நான் பெற்ற பதில் இதுவே: "சான்றிதழ் கொடுக்கப்படாமல், அதிகக் கட்டணத் தொகைகளைத் திரும்பக் கொடுப்பது எங்கள் பழக்கம் அல்ல. ஆனால் உங்கள் விஷயத்தில் ஒரு விதிவிலக்குச் செய்கிறோம். பர்த்வானிலிருந்து மோகல்சராய் வரை உள்ள அதிகக் கட்டணத்தைத் திரும்பத்தர முடியாது."

புகை வண்டி அதிகாரிகளின் யதேச்சாதிகாரமே, மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளின் துயரங்களுக்குக் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், பிரயாணிகளின் முரட்டுத்தனம், ஆபாசமான வழக்கங்கள், சுயநலம், அறியாமை ஆகியவைகளும், கண்டனத்திற்கு உரியனவே. இதில் பரிதாபம் என்னவெனில், தாங்கள் ஒழுங்கீனமாகவும், ஆபாசமாகவும், சுயநலத்தோடும் நடந்து கொள்ளுகிறோம் என்பதை அவர்கள் பெரும்பாலும் உணராமல் இருப்பதேயாகும். தாங்கள் செய்வது அனைத்தும் இயற்கையானவையே என்று நம்புகிறார்கள். 'படித்த' மக்களாகிய நாம் பாமரர்களிடம் காட்டும் பராமுக மனப்பான்மையே இவைகளுக்கெல்லாம் காரணமெனக் காணலாம்.

லாகூரிலிருந்து டெல்லிப் பயணம்தான் எனக்கு மிகக் கடுமையான அனுபவமாகும். லாகூர் வழியாக நான் கராச்சியிலிருந்து கல்கத்தா சென்று கொண்டிருந்தேன். லாகூரில் புகைவண்டி மாற்றவேண்டும். புகை வண்டியில் இடம் கிடைப்பது அசாத்தியமாக இருந்தது.

அது நிரம்பி இருந்தது. உள்ளே போக முடிந்தவர்கள் வெறும் பலாத்காரத்தால் நுழைந்தார்கள்; கதவுகள் பூட்டப்பட்டிருந்ததால், பலகணி வழியாக நுழைந்தார்கள். நான் கல்கத்தாவுக்குப் போய்ச் சேர வேண்டிய தினத்தில், கூட்டம் போடப்பட்டிருந்தது. அந்தப் புகைவண்டியை விட்டுவிட்டால், கூட்டத்திற்கு நேரத்திற் போய்ச் சேரமுடியாது. புகைவண்டியில் ஏறும், நம்பிக்கையை அநேகமாகக் கைவிட்டு விட்டேன். யாரும் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இச்சமயத்தில் என் நிலையைக் கண்டறிந்த ஒரு போர்ட்டர் என்னிடம் வந்து, "பன்னிரண்டு அணுக் கொடுங்கள்; நான் உங்களுக்கு ஒரு இடம் தருகிறேன்," என்று சொன்ஞன். 'சரி, எனக்கு ஒரு இடம் தந்தால், பன்னிரண்டு அணு உனக்குத் தருகிறேன்" என்று சொன்னேன். அவ் இளைஞன் பெட்டி பெட்டியாகச் சென்று பிரயாணிகளிடம் இடம் தருமாறு மன்ருடினுன்; ஆனுல் யாரும் அவன் சொன்னதற்குக் காது கொடுக்க வில்லை. புகைவண்டி புறப்படுப்போகும் சமயத்தில், சில பிரயாணிகள் சொன்ஞர்கள்: "இங்கு இடமில்லை; ஆனுலும் நீ விரும்பினுல் அவரை உள்ளே தள்ளிவிடு. இங்கு அவர் நிற்கவேண்டும்." நான் அதற்குத் தாராளமாக இசைந்தேன்; அவன் என்னை உடம்போடு பலகணிவழியாக உள்ளே தள்ளினுன். இவ்வாறு நான் உள்ளே வந்தேன். போர்ட்டரும் பனிரண்டணு பெற்ருன்.

அவ் இரவு ஒரு சோதனை. மற்றப்பிரயாணிகள் எப்படியோ உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான் மேற் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு மணிக்கணக்கில் நின்றேன். இதற்கிடையில் சில பிரயாணிகள் எனக்கு ஓயாது தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தனர். "நீங்கள் ஏன் உட்காரவில்லை?" என்று கேட்டார்கள். உட்காருவதற்கு இடமில்லை என்று அவர்களுக்கு காரணம் காட்டினேன். ஆனுலும் அவர்களுக்கும், அவர்

களே மேற்பலகையில் நன்ருகக் காலை நீட்டிப் படுத்துக் கொண்டு, நான் நிற்பதைமட்டும் சகிக்கமுடியவில்லை. அவர்கள் எனக்குத் தொந்தரவு கொடுப்பதில் சலிப் படையவில்லை. நானும் அவர்களுக்கு மெள்ள மறு மொழி சொல்லுவதிலும் களைப்படையவில்லை. அவர்களில் சிலர் என் பெயரைக் கேட்டார்கள். அதைச் சொன்ன தும், அவர்கள் நாணம் அடைந்தனர். அவர்கள் மன்னிப்புக் கேட்டு, எனக்கு உட்கார இடம் கொடுத் தார்கள். பொறுமை இவ்வாறு பரிசுபெற்றது. நான் மிகவும் களைத்திருந்தேன்; என் தலை சுழன்று கொண் டிருந்தது. மித அவசியமாக இருந்த தருணத்திலே ஆண்டவன் இவ்வாறு உதவி அனுப்பி அருளினுர்.

63

ஆசிரமம் நிறுவுதல்

ஆமதாபாத்தில் சப்ர்மதியில் சத்தியாக்கிரக ஆசிர மம் 1915 மே மாதம் 25-ம் நாள் நிறுவப்பட்டது.

ஆமதாபாத் என் மனதுக்கு உகந்த ஊர். நான் ஒரு குஜராத்தியாதலால், குஜராத்தி மொழியின் மூலமாக நாட்டுக்கு மாபெருஞ் சேவை என்ஞல் செய்ய இயலும் என்று கருதினேன். மேலும், ஆமதாபாத் தொன்மை யான கைத்தறித் தொழிலின் கேந்திர ஸ்தானமானதால், குடிசைத் தொழிலான இராட்டையில் நூற்கும் தொழிலை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு, அது மிகவும் அனுகூலமான இடமாக இருத்தலும் கூடும். இன்னும் அந் நகரம் குஜராத்தின் தலைநகர் ஆதலால், பிறிதெவ்விடத்தைக் காட்டிலும் அங்கே செல்வந்தர்களின் பண உதவி எளிதில் கிடைக்கக் கூடும், என்ற நம்பிக்கையும் எனக்கு இருந்தது.

இடத்தைப் பற்றிய வரையில் ஆமதாபாதில் வழக்குரைஞராக இருந்த திரு. ஜீவன்லால் தேசாய், எங்களுக்கு உதவி செய்தவரில் முதன்மையானவராவார். கோச்ரப்பில் இருந்த அவருடைய பங்களாவை வாடகைக்குத் தர முன் வந்தார்; நாங்கள் அதை வாடகைக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்தோம். உண்மையில் பற்றுக்கோடே எங்களது கோட்பாடு. உண்மையை ஆராய்வதும் உண்மையில் உறுதிப்பாடும், எங்களுடைய வேலையாகும். தென் ஆபிரிக்காவில் நான் கையாண்ட முறைகளை இந்தியாவுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினேன்; அதை இந்தியாவில் எவ்வளவு தூரம் கையாளலாம் என்பதைச் சோதிக்கவும் விரும்பினேன். எனவே எனது தோழர்களும் நானும் எங்கள் குறிக்கோளையும், தொண்டு முறையையும் ஒருங்கே குறிப்பிடும் சொல்லான 'சத்தியாக்கிரக ஆசிரம்' என்ற பெயரைத் தெரிந்தெடுத்தோம். ஆசிரமத்தை நடத்துவதற்கு விதிகளும் ஒழுக்க முறைகளும் அவசியம். எனவே ஒரு நகல் தயாரிக்கப்பட்டு, அவற்றைப் பற்றி தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி நண்பர்கள் வேண்டிக் கொள்ளப் பட்டார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து சுமார் இருபத்தைந்து ஆடவரும் மகளிரும் இருந்தோம். ஆசிரமம் இவ்வண்ணம் தொடங்கப்பட்டது. எல்லோரும் ஒரு பொதுச் சமையலறை உணவை உண்டு, ஒரு குடும்பமாக வாழ்ந்து வர முயன்றோம்.

ஆசிரமம் ஏற்பட்டு சில மாதங்களுக்குள்ளாக, நான் சிறிதும் எதிர்பாராத விதத்தில் எங்களுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அமிர்தலால் தக்கரிடமிருந்து கீழ்க்கண்டவாறு பொருள் கொண்ட கடிதம் ஒன்று எனக்கு வந்தது: "பணிவும் நாணயமும் உள்ள ஒரு 'தீண்டப்படாத' குடும்பம் உங்கள் ஆசிரமத்தைச் சேர விரும்புகிறது. நீங்கள் அதனை ஏற்றுக் கொள்ளுவீர்களா?"

அக் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஆசிரமத்தின் விதிகளின்படி நடக்கத் தயாராக இருப்பார்களானல், அக் குடும்பத்தை ஏற்றுக்கொள்ள எங்கள் இணக்கத்தைத் தெரிவித்து அமிர்தலால் தக்கருக்குப் பதில் கடிதம் எழுதினேன்.

தூதாபாய், அவர் மனைவி தனிபென், அப்பொழுது நடை பயிலும் சிறு குழந்தையாயிருந்த அவர்களுடைய மகள் இலக்ஷ்மி ஆகியோர் கொண்டதே அக் குடும்பம். அவர்கள் அனைவரும் ஆசிரம விதிகளுக்கு இணங்கி நடக்க இசைந்ததின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

ஆனல், இவர்களைச் சேர்த்துக்கொண்டது ஆசிரமத்திற்கு உதவி புரிந்துவந்த நண்பர்களிடையே பரபரப்பை உண்டாக்கியது. கிணற்றை உபயோகிக்கும் விஷயமாக முதல் சங்கடம் ஏற்பட்டது. பங்களாவின் சொந்தக்காரரும் அக்கிணற்றை உபயோகித்து வந்தார். அதில் தண்ணீர் இறைப்பவன், எங்கள் வாளியிலிருந்து விழும் நீர்த் துளிகள் சிந்தித் தனக்குத் தீட்டு ஏற்படும் என்று கூறி ஆட்சேபித்தான். எனவே எங்களைத் திட்டினன்; தூதாபாயைத் தொந்தரவு செய்தான். ஏச்சைப் பொறுத்துக்கொண்டு, என்னவானலும் தண்ணீரை இறைத்து வாருங்கள் என்று நான் ஒவ்வொருவரிடமும்சொன்னேன். அவன் வசவுக்கு நாங்கள் திரும்ப வையாததை அவன் கண்டபோது, வெட்கமடைந்து எங்களைத் தொந்திரவு செய்வதை நிறுத்திவிட்டான்.

ஆயின், பண உதவி அனைத்தும் நிறுத்தப்பட்டது. பண உதவி நிறுத்தப்பட்டபோது, அதன்கூடச் சமூக பகிஷ்காரம் செய்யப்போவதான வதந்திகளும் கிளம்பின. இவை அனைத்துக்கும் நாங்கள் தயாராகவே இருந்தோம். நாம் பகிஷ்கரிக்கட்டு, வழக்கமான வசதிகள் நமக்கு மறுக்கப்பட்டாலும், நாம் ஆமதாபாதை விட்டுப் போகக் கூடாது என்றும், அதைவிடத் 'தீண்டாதார்' சேரிக்குச் சென்று, அங்கு தங்கி, உடல் உழைப்பினல் கிடைப்

பதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவோம் என்றும் என் தோழர்களிடம் கூறி இருந்தேன்.

நிலைமை நெருக்கடியானது; ஒரு நாள் மகன்லால் காந்தி என்னிடம் வந்து "நம்மிடம் பணம் இல்லை, அடுத்த மாதத்திற்கு ஒன்றுமே இல்லை," என்று அறிவித்தார்.

நான் மெள்ள, "அப்படியானால், நாம் தீண்டாதார் சேரிக்குச் செல்லுவோம்," என்று மறுமொழி சொன்னேன்.

இத்தகைய சோதனை எனக்கு நேர்ந்தது இது முதல் தடவை அன்று. இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம், ஆண்டவன் கடைசித் தருணத்தில் உதவி புரிந்து வந்துள்ளார். எங்கள் பணநிலையைப்பற்றி மகன்லால் எச்சரிக்கை விடுத்த சிறிது நேரத்தில் எல்லாம் வெளியிலே ஒரு சேத் வந்து மோட்டாரில் காத்திருப்ப தாகவும் என்னைப்பார்க்க விரும்புவதாகவும், ஆசிரமக் குழந்தைகளில் ஒன்று வந்து என்னிடம் சொல்லியது. நான் அவரைப் பார்க்க வெளியே சென்றேன். "நான் ஆசிரமத்திற்கு ஏதோ உதவிபுரிய விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்களா?" என்றார்.

"ஓ, நிச்சயமாக: மேலும் இச்சமயத்தில் எங்களுடைய கையிருப்பெல்லாம் கரைந்த நிலையில் உள்ளோம் என்பதை நான் ஒத்துக்கொள்ளவேண்டும்" என்றேன்.

அவர், "நாளைக் காலை இதே நேரத்திற்கு இங்கு வருகிறேன். தாங்கள் இருப்பீர்களா?" என்றார்.

"ஓ—இருப்பேன்" என்று சொன்னேன். அவரும் சென்றார்.

மறுநாள், குறிப்பிடப்பட்ட நேரத்தில் சரியாக, மோட்டார் எங்கள் இருப்பிடத்திற்கு அருகில் வந்து, குழல் ஊதிற்று. குழந்தைகள் அச் செய்தியோடு என்னிடம் வந்தார்கள். சேத் உள்ளே வரவில்லை. அவரைப்

பார்க்க நான் வெளியே சென்றேன். அவர் என் கையில், 13,000 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்துவிட்டு வண்டியை விட்டுக்கொண்டு சென்றுர்.

இத்தகைய உதவியை நான் எதிர்பார்த்ததே இல்லை. அதிலும் செய்யும் முறைதான் என்ன புதுமையானது! அக்கனவான் இதற்கு முன் என்றும் ஆசிரமத்திற்கு வந்ததே இல்லை. எனக்கு நினைவு இருக்கும்மட்டும், அவரை நான் ஒரே ஒரு தரம்தான் சந்தித்து இருக்கிறேன். வந்ததில்லை; விசாரிப்பு இல்லை; உதவி புரிவது; சென்றுவிடுவது! இது எனக்குத் தனியாய ஒரு அனுபவமாகும். இவ் உதவி நாங்கள் 'தீண்டாதோர்' இடத்திற்குச் செல்லுவதைத் தள்ளிவைத்துவிட்டது. இன்னும் ஒரு ஆண்டுக்குச் சிரமம் இல்லை என்று தைரியம் அடைந்தோம்.

வெளியிலே புயல் தோன்றிய மாதிரி, ஆசிரமத்திற்கு உள்ளேயும் ஒரு புயல் அடித்தது. தென் ஆபிரிக்காவிலே 'தீண்டாத' நண்பர்கள் எங்கள் இடத்திற்கு வந்து, இருந்து, என்னுடன் சாப்பிட்டு வருவது வழக்கமாயிருந்தாலும், என் மனைவிக்கும் மற்றப் பெண்களுக்கும், ஆசிரமத்தில் 'தீண்டா'தோரைச் சேர்த்துக் கொண்டது அவ்வளவு பிடிக்கவில்லை என்று எனக்குத் தோன்றிற்று. தனிபென்னிடம், அவர்கள் வெறுப்புக் காட்டாவிடினும், அவர்களுடைய பராமுகத்தை என் கண்களும் காதுகளும் எளிதே கண்டுபிடித்தன. பணக்கஷ்டம் எனக்குக் கவலை உண்டாக்கவில்லை. ஆனால் இந்த உட்புயல் என்னால் பொறுக்கக்கூடவில்லை. தனிபென் ஒரு சாதாரணப் பெண். தூதாபாய் கொஞ்சம் படிப்பு உள்ளவர்; ஆனால் நல்ல அறிவு படைத்தவர். அவர் பொறுமை எனக்குப் பிடித்திருந்தது. சில சமயங்களில் அவர் கோபப்பட்டதுண்டு. ஆனால் மொத்தத்தில் அவரது சகிப்புத்தன்மை என் உள்ளத்தை நன்கு கவர்ந்திருந்தது. சிறிய அவமதிப்புக்களை அவர்

பொருட்படுத்தக்கூடாது என்று நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். அவர் அதற்கு இணங்கியதோடு மட்டு மல்லாமல், தன் மனைவியையும் அவ்வாறு இருக்கும்படி செய்தார்.

இக்குடும்பத்தைச் சேர்த்துக்கொண்டது, ஆசிரமத் திற்கு சிறந்த ஒரு பாடமாக விளைந்தது. அதன் ஆரம் பத்திலேயே, ஆசிரம் தீண்டாமையைப் பாராட்டாது என்று உலகுக்கு அறிவித்தோம். எனவே ஆசிரமத்திற்கு உதவிபுரிய விரும்புவர்களை இது எச்சரித்தபடியாயிற்று; மேலும் இத்துறையில் ஆசிரமத்தின் வேலை மிகவும் எளிமை ஆயிற்று. ஆசிரமத்தின் நாள்தொறும் அதிகரித்துவரும் செலவுகளைப் பெரும்பாலும் உண்மை யான வைதிக இந்துக்களே ஏற்றுவந்தார்கள் என்ற விவரம், தீண்டாமை அதன் அடிப்படையோடு ஆட்டங் கொடுத்துவிட்டது என்பதற்குத் தெளிவான அறிகுறி போலும்! இதற்கு இன்றும் எத்தனையோ பிற சான்று களும் உள. ஆனால், நாங்கள் தீண்டாதவர்களோடு சாப்பிடும் அளவுக்குச் சென்றுள்ள எங்கள் ஆசிரமத் திற்கு, உதவி செய்ய நல்ல இந்துக்கள் பின்வாங்கவில்லை என்பது ஒன்றும் சிறிய சான்று அன்று.

பாகம் XI

சம்பரான்

64

அவுரி அநீதி

சம்பரான் ஜனக மன்னனுடைய நாடு. அங்கு மாந்தோப்புகள் ஏராளம். அஃதேபோல் 1917-ம் ஆண்டு வரை அவுரித் தோட்டங்களும் நிரம்பி இருந்தன; சம்பரானில் உள்ள விவசாயி, சட்டப்படி அவன் நிலத்தில் இருபதில் மூன்று பகுதியில் நிலச்சுவான்தாருக்கு அவுரி பயிரிட வேண்டும். இதற்குத் 'தீன்காதியா' முறை என்று பெயர். ஒரு ஏகராவிலுள்ள இருபது கதாக்களில் மூன்று கதா அவுரி பயிரிடப்பட வேண்டுமாதலால் இம் முறைக்கு அப்பெயர் வந்தது.

இராஜகுமார் சுக்லா என்பவர், இத்துயரத்திற்கு உள்ளான விவசாயிகளில் ஒருவர். தான் துன்புற்றது போல், அவுரி அநீதியால் ஏற்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் துன்பத்தைத் துடைக்க அடங்காத ஆர்வம் கொண்டிருந்தார். சம்பரானுக்கு வந்து, விவசாயிகளின் துயரங்களை நேரில் காணுமாறு என்னை அவர் வேண்டினர். நான் உத்தேசித்திருக்கும் சுற்றுப் பயணத்தில் சம்பரானைச் சேர்த்துக்கொண்டு, அதில் ஒன்றிரண்டு நாள் பயணம் செய்கிறேன் என்றும் அவரிடம் சொன்னேன். "ஒரு நாளே போதும். விஷயங்களை உங்கள் கண்ணாலே நீங்கள் பார்த்துக் கொள்ளுவீர்கள்" என்றார்.

எனவே, 1917-ம் ஆண்டின் ஆரம்பத்தில் நாங்கள் கல்கத்தாவை விட்டுச் சம்பரானுக்குப் பயணமானோம். இருவரும் அசல் பட்டிக்காட்டுக் கூட்டாளிகள் போலவே தோற்றம் அளித்தோம். எனக்குப் போகவேண்டிய

ரயில்கூடத் தெரியாது. அவர் என்னை வண்டிக்குக் கூட்டிச் சென்றார். இருவரும் சேர்ந்து பிரயாணம் செய்து காலையில் பாட்னு சேர்ந்தோம்.

இராஜகுமார் சுக்லா இராஜேந்திர பாபுவின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். இராஜேந்திர பாபு பூனுவுக்கோ—அல்லது எந்த இடத்திற்கு என்று இப்பொழுது நினைவில்லை,—வேறு எந்த இடத்திற்கோ போயிருந்தார். பங்களாவில் ஒன்றிரண்டு பணியாட்கள் இருந்தார்கள். அவர்கள் எங்களைக் கவனிக்கவே இல்லை. சாப்பிடுவதற்கு என்னிடம் ஏதோ கொஞ்சம் உணவு இருந்தது. பேரீச்சம்பழம் வேண்டும் என்று சொன்னேன். என் தோழர் கடைக்குப் போய் எனக்கு வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார்.

பீகாரில் ‘தீண்டாமை’ தீவிரமாக இருந்தது. பணியாட்கள் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொண்டிருக்கும்பொழுது நான் இழுக்கக் கூடாதாம்; ஏனென்றால் என் வாளியிலிருந்து விழும் நீர்த்துளிகள் அவர்களைத் தீட்டாக்கி விடுமாம்; அவர்களுக்கு நான் என்ன சாதியைச் சேர்ந்தவன் என்று தெரியாது. இராஜகுமார் எனக்கு உட்புறமிருந்த கக்கூசைக் காட்டினார்; ஆனால் வேலைக்காரர்களோ உடனே வெளிப்புறமிருந்த கக்கூசைக் காட்டினார்கள். இவைகளெல்லாம் எனக்கு வியப்பையோ எரிச்சலையோ ஊட்டவில்லை. ஏனெனில் இவைகள் எல்லாம் எனக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்தன. வேலைக்காரர்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள்; இராஜேந்திர பாபு அப்படி அவர்கள் செய்வதை விரும்புவார் என்று எண்ணினார்கள்.

நான் முதலில் முசாபர்பூர் போகவேண்டும் என்று ஆலோசனை சொல்லப்பட்டது. கிருபாலனி முசாபர்பூர் அரசினர் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். நான் அவரிடம் போவதற்குச் சிறிது முன்னர்தான் அவ்வேலையை அவர் ராஜீனுமாச் செய்திருந்தார். என் வரு

கையைத் தெரிவித்து அவருக்குத் தந்தி கொடுத்திருந்தேன். புகைவண்டி நள்ளிரவில் அங்கு போய்ச் சேர்ந்தாலும், கிருபாலனி மாணவர்கள் குழாத்துடன் என்னை நிலயத்தில் சந்தித்தார்.

பீகாரில், குறிப்பாக, திர்ஹுத் பகுதியில், நிலவிய நம்பிக்கைக்கு இடமில்லாத படுமோசமான நிலைமையைப் பற்றி என்னிடம் அவர் கூறினார். மேலும் என் வேலை எவ்வளவு கடினமானது என்பதைப் பற்றியும் எனக்கு எடுத்துக் காட்டினார். அவர் பீஹாரிகளோடு மிக நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தார்; ஏற்கெனவே பீஹாருக்கு நான் வரும் காரியத்தைப் பற்றி, அவர்களுக்குக் கூறி இருந்தார்.

காலையில் ஒரு சிறிய வக்கீல்கள் கூட்டம் என்னைப் பார்க்க வந்தது. பிரஜ்கிஷர்பாபு தர்பங்காவிலிருந்தும், இராஜேந்திர பாபு பாட்னுவிலிருந்தும் இதற்குள் வந்துவிட்டார்கள். விரைவிலேயே, இந்த நண்பர் குழாத்தோடு, வாழ்நாள் நட்புரிமைத் தளை பிணைத்துவர ஆரம்பித்ததை உணர்ந்தேன். பிரஜ்கிஷோர் பாபு நிலைமை குறித்து எனக்கு எல்லா விவரங்களும் எடுத்து உரைத்தார். அவர், ஏழை விவசாயிகளின் வழக்குகளை ஏற்று நடத்துவது வழக்கம். நான் அங்கு போயிருந்தபோது, இத்தகைய வழக்குகளில் இரண்டு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நான் சொன்னதாவது:—"இவ்வழக்குகளை நான் படித்த பின்னர், நீதி மன்றங்களுக்குப் போவதை நாம் நிறுத்திவிடவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளேன். இத்தகைய வழக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு போவதில் எத்துணை நலனுமில்லை. குடியானவர்கள் இவ்வளவு நசுக்கப்பட்டுப் பயத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் போது, நீதிமன்றங்கள் பயனற்றவை ஆகின்றன. அவர்களுக்கு உண்மையான விமோசனம், பயத்திலிருந்து விடுபடுவதே ஆகும். 'தீன்கதி'யாவைப் பீஹாரிலிருந்து

விரட்டும் வரை நாம் சும்மா வாளா இருக்க முடியாது. நான் இரண்டு நாட்களில் இங்கிருந்து திரும்பிப் போக லாம் என்று எண்ணி இருந்தேன்; ஆனால் இங்குள்ள வேலை இரண்டு ஆண்டுகள் கூடப் பிடிக்கலாம் என்பதை இப்பொழுது உணர்கின்றேன். அவசியமானால் அவ் வளவு காலமும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். செய்ய இருக்கும் வேலையைப் பற்றி ஒருவாறு நான் உணர்ந்து வருகிறேன். ஆனால் எனக்கு உங்களுடைய உதவி எல்லாம் வேண்டும்.''

பிரஜ்கிஷோர் அபூர்வமான நிதானபுத்தி உடையவ ரென்பதைக் கண்டேன். "எங்களால் இயன்ற உதவி அனைத்தையும் நாங்கள் செய்யத் தயார். ஆனால் எத் தகைய உதவித் தங்களுக்குத் தேவை என்பதைத் தயவு கூர்ந்து சொல்லுங்கள்,'' என்று அவர் மெள்ளச் சொன்னார்.

இவ்வண்ணம் நாங்கள் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தோம்.

நான் அவர்களுக்குச் சொன்னதாவது: "உங்க ளுடைய சட்ட ஞானத்தால் எனக்கு எவ்விதப் பிர யோசனமும் இல்லை. குமாஸ்தா செய்யக்கூடிய எழுத்து வேலைக்கும், மொழி பெயர்ப்பதில் உதவியும்தான் எனக் குத் தேவை. சிறைபுகுவதும் அவசியமாக இருக்கலாம். ஆனால் அவ் ஆபத்துக்கு நீங்கள் தயாராக இருக்கவேண் டும் என்று நான் பெரிதும் விரும்புவேனாயினும், உங்க ளுக்கு எவ்வளவு தூரம் போக முடியும் என்று துணிவு கொள்ளுகிறீர்களோ, அவ்வளவு தூரம் போகலாம். நீங் கள் எழுத்துவேலைக்குக் குமாஸ்தாக்களாக மாறிக், கால வரம்பின்றி உங்கள் தொழிலை விடுவது என்பது ஒன்றும் சிறிய காரியம் அல்ல. இங்குப் பேசப்படும் ஹிந்தி எனக்கு விளங்கவில்லை. மேலும், 'கயிதி' அல்லது உருதுவில் எழுதப்பட்ட தாள்களை என்னால் படிக்க முடி யாது. அவைகளை எனக்கு நீங்கள் மொழிபெயர்த்துத்

தரவேண்டும். இவ்வேலைகளுக்கு நாம் பணம் கொடுத்துக் கட்டுப்படியாகாது. இவை அனைத்தும் அன்பினாலும் தொண்டு உணர்ச்சியாலும் செய்யப் படவேண்டும்.''

பிரஜ்கிஷோர் பாபு இதை உடனே அறிந்து கொண்டார். அவர் என்னையும், தன்னுடைய சகாக்களையும் மாறி மாறிக் குறுக்கு விசாரணை செய்தார்.

இறுதியாக அவர்கள் எனக்கு இந்த உறுதியை அளித்தார்கள் : ''எங்களில் இத்தனை இத்தனை எண்ணிக்கை உள்ளவர்கள் நீங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயார். எங்களில் சிலர் உங்களோடு எவ்வளவு நேரம் இருக்கவேண்டும் என்று வேண்டுகிறீர்களோ, அவ்வளவு நேரம் இருக்கிறோம். சிறைபுகுவது என்னும் கருத்து எங்களுக்குப் புதுமையானது; அது எங்கள் உள்ளத்தில் கலந்து கொள்ளுமாறு செய்ய முயற்சிக்கிறோம்.''

65

அகிம்சையின் காட்சி

சம்பரான் விவசாயிகளின் நிலைமையை விசாரித்து அவுரித் தோட்டக்காரர்கள் மீது அவர்களுக்குள்ள குறைகளைத் தெரிந்து கொள்ளுவதே எனது விசாரணையின் நோக்கமாகும். இக்காரியத்திற்கு நான் ஆயிரக் கணக்கான விவசாயிகளைச் சந்திக்க வேண்டியதவசியம். ஆனால் எனது விசாரணையைத் தொடங்குவதற்கு முன்னர், தோட்டக்காரர்களின் கட்சி என்ன என்பதைப் பற்றித் தெரிவதும், அதற்குப் பகுதிக் கமிஷனரைப் பார்ப்பதும் முக்கியம் எனக் கருதினேன். எனவே அவர்கள் இருவருக்கும் எழுதி, அவர்களைப் போய்ப் பார்க்க, நாள் குறித்துவந்த பதிலும் பெற்றேன்.

தோட்டக்காரச் சங்கச் செயலாளர், நான் ஒரு

வெளியாள் என்றும், தோட்டக்காரர்களுக்கும் அவர்களுடைய சம்சாரிகளுக்கும் இடையில் வருவது எனக்கேற்பட்ட வேலையல்ல என்றும், ஆனால் நான் ஏதாவது முறையீடுகள் செய்யவேண்டி இருந்தால் அவற்றை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம் என்றும், அவர் ஒளிமறைவின்றிக் கூறினார். நான், என்னை வெளியாளாகக் கருதிக் கொள்ளவில்லை என்றும், விவசாயிகள் விரும்பினால் அவர்களுடைய நிலைமையைப் பற்றி விசாரிக்க எனக்கு எல்லாவித உரிமையும் உண்டு என்றும் மரியாதையாக அவரிடம் சொன்னேன்.

பின்னர்க் கமிஷனரை நான் போய்ப் பார்த்தேன். அவர் என்னை மிரட்டத் தொடங்கினார்; உடனே தீர்கத்தை விட்டுப் போய்விடும்படி புத்தி கூறினார்.

இவற்றை எல்லாம் என் சகஊழியர்களிடம் சொன்னேன். அரசாங்கம் நான் மேலும் காரியம் செய்வதைத் தடுத்துவிடக்கூடும் என்றும், நான் எதிர்பார்த்ததிற்கு முன்பாகவே சிறைசெல்ல வேண்டி இருக்கலாம் என்றும், நான் கைதி செய்யப்படுவதா யிருந்தால், மோதிஹாரியிலே அல்லது முடிந்தால் பெட்டய்யாவிலே கைதி செய்யப்படுவது மிகநல்லது என்றும் அவர்களிடம் சொன்னேன். எனவே, கூடிய விரைவில் நான் அவ்விடங்களுக்குப் போவது நல்லது.

சம்பரான், தீர்கத் பகுதியில் உள்ள ஒரு மாவட்டம். மோதிஹாரி அதன் தலைமை இடம். இராஜகுமார் சுக்லாவின் வீடு பெட்டையாவின் அண்மையில் உள்ளது. அந்தப்பக்கத்தில் உள்ள பாங்குக்காரர்களுடைய சம்சாரிகளே அம்மாவட்டத்திலேயே பரம ஏழைகள். இராஜகுமார் சுக்லா நான் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார்; நானும் அதைப் போலவே அவர்களைப் பார்க்க ஆவல் கொண்டிருந்தேன்.

எனவே, என்னுடைய சக ஊழியர்களோடு மோதிஹாரிக்கு அன்றே புறப்பட்டேன். பாபு கோரக் பிரசாத்

தமது வீட்டில் எங்களுக்கு இடமளித்தார். அதுபின் பெரிய சத்திரமாக ஆயிற்று. அதில் நாங்கள் எல்லோரும் இருக்க இடமில்லை. அதே நாளில் மோதிஹாரிக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு விவசாயி துன்புறுத்தப் பட்டான் என்று கேள்விப் பட்டோம். பாபு தரணிதார் பிரசாதுடன் மறுநாட்காலை நான் சென்று அவரைப் பார்க்கவேண்டும் என்று முடிவு செய்தோம். எனவே நாங்கள் அவ் இடத்திற்கு யானையில் ஏறிச் சென்றோம். நாங்கள் பாதி தூரத்திற்கு உள்ளாகவே போயிருப்போம். அப்பொழுது போலீஸ் சூப்ரன்டெண்டின் ஒரு தூதன் எங்களைத் தொடர்ந்து எங்கள் முன்வந்து, போலீஸ் அதிகாரி தமது வந்தனங்களை அனுப்பி உள்ளதாகக் கூறினான். அதன் பொருள் என்னவென்று நான் அறிந்துகொண்டேன். தாரானிதர் பாபுவைப் போக வேண்டிய இடத்திற்கு மேலே செல்லுமாறு சொல்லி விட்டு, நான் அந்த ஆள் கொண்டு வந்திருந்த வாடகை வண்டியில் ஏறிக் கொண்டேன்: அவன் அப்பொழுது சம்பரானை விட்டு வெளியேறுமாறு குறித்த ஒரு கட்டளையை என்னிடம் சாதரா செய்தான்; என்னிடத்திற்கு வந்தேன். உத்திரவை பெற்றுக் கொண்டதற்குக் கையொப்பம் தருமாறு அவன் கேட்டான்; நான், எனது விசாரணை முடியும் வரை சம்பரானைவிட்டுப் போக முடியாது என்றும், உத்திரவுக்குப் படிந்து நடப்பதான உத்தேசம் இல்லை என்றும் எழுதிக் கொடுத்தேன். அதன்மேல், சம்பரானிலிருந்து வெளியேற வேண்டும் என்ற உத்திரவுக்குக் கீழ்படியாத குற்றத்திற்காக மறுநாள் விசாரணைக்கு வரும்படி ஒரு கட்டளை கிடைத்தது.

நான் அன்றிரவு முழுவதும் கடிதங்கள் எழுதியும் பாபு பிரஜ்கிஷோர் பிரசாதுக்கு அவசியமான குறிப்புக்கள் கொடுத்தும், விழித்திருந்து கழித்தேன்.

உத்திரவைப் பற்றியும் கட்டளையைப் பற்றியுமான

செய்தி காட்டுத் தீபோல் பரவியது. மோதிஹாரி அன்று இதுவரை கண்டறியாத காட்சிகளைக் கண்டதாகக் கேள்விப் பட்டேன். கோரக்பாபுவின் வீட்டிலும் நீதி மன்றத்திலும், மக்கள் கூட்டம் பொங்கிவழிந்தது. நல்ல வேளையாக என் வேலைகளை எல்லாம் இரவே முடித் திருந்தேன். எனவே கூட்டங்களை என்னால் சமாளித்துக் கொள்ள முடிந்தது. என் தோழர்கள் எனக்குப் பேருதவி புரிந்தார்கள். அவர்கள் கூட்டங்களை ஒழுங்குபடுத்து வதில் ஈடுபட்டார்கள். ஏனென்றால் நான் சென்ற இட மெல்லாம் கூட்டமும் தொடர்ந்து வந்தது.

கலெக்டர், மாஜிஸ்டிரேட், போலீஸ் சூபிரன்டெண்டு ஆகிய அதிகாரிகளுக்கும் எனக்கும் இடையே ஒருவித நேயபாவம் ஏற்பட்டது. என்னிடம் சாதரா செய்யப் பட்ட உத்திரவுகளை நான் சட்டப்படி நிராகரித்து இருக்கலாம். அதற்குப் பதிலாக, நான் அவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டேன். அதிகாரிகளிடம் நான் நடந்து கொண்டமுறையானது நான் அவர்களைச் சொந்த முறையில் அவமதிக்கும் நோக்கம் எனக்கில்லை என்றும், ஆனால் அவர்கள் உத்திரவுகளுக்குச் சாத் வீக எதிர்ப்புச் செய்யவே விரும்புகிறேன் என்றும் கண்டார்கள். இவ்வாறு ஒரு சுமுகமான சூழ்நிலை யேற் படவே, அவர்கள் என்னைத் தொந்தரவு படுத்துவதற்குப் பதிலாகக் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதில் என் னுடைய ஒத்துழைப்பையும் என்னுடைய சக ஊழியர் களுடைய ஒத்துழைப்பையும் மகிழ்ச்சியோடு பயன்படுத் திக்கொண்டனர். ஆனால் தங்கள் அதிகாரம் ஆட்டம் கொடுத்து விட்டது என்பதை இதன்மூலம் அவர்கள் கண்கூடாகக் கண்டார்கள். மக்கள் அந்நேரத்திலே, தண்டனை பயமனைத்தையும் துறந்தனர்; அவர் களுடைய புதிய நண்பன் செலுத்திய அன்பின் சக்திக்கே அடிபணியலானார்கள்.

சம்பாரனில் ஒருவருக்கும் என்னைத் தெரியாது

என்பது நினைவிருக்க வேண்டும். குடியானவர்கள் அனைவரும் அறியாப் பேதையர். சம்பரான் கங்கை நதிக்கு நெடுந்தூரம் வட திசையில், இமயமலை அடிவாரத்தில், நேபாலுக்கு வெகு சமீபத்தில் உள்ளதால், இந்தியாவின் மற்ற பாகத்தோடு தொடர்பில்லாமல் இருந்தது. அப்பகுதிகளில் அக்காலத்தில் காங்கிரசைப் பற்றி அநேகமாக ஒன்றுமே தெரியாது. •காங்கிரசின் பெயரைக் கேள்விப்பட்டவர்களும்கூட காங்கிரசில் சேருவதற்கும் அல்லது அப்பெயரைச் சொல்லுவதற்குக் கூடப் பின்வாங்கினார்கள்.

எனவே, காங்கிரசின் சார்பாக வேலைசெய்து, எங்கள் வருகைக்கு முன் ஏற்பாடுகள் செய்துவைக்கஇரகசியமாகவோ வெளிப்படையாகவோத் தூதர்கள் யாரும் அனுப்பப்படவில்லை. இராஜ்குமார் சுக்லாவால் ஆயிரக் கணக்கான குடியானவர்களிடம் செல்லச் சக்தி கிடையாது. அவர்களிடையில் இதுவரை அரசியல் வேலை ஒன்றும் செய்யப்படவில்லை. அவர்களுக்கு சம்பரானுக்கு வெளியில் உள்ள உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. என்றாலும், அவர்கள் என்னை நெடுங்காலம் பழகிய நண்பனைப் போல் வரவேற்றார்கள். விவசாயிகளோடு என்னுடைய இந்தச் சந்திப்பில் நான் நேருக்கு நேர் ஆண்டவனை,—அகிம்சையை,—உண்மையைக்—காணலுற்றேன் என்று கூறுவது எழுத்துக்கெழுத்து முற்றிலும் உண்மையேயன்றி மிகையன்று.

இவ் உண்மையை அறிந்துகொள்ள என்னை உரியவனாக்கியது எது என்று ஆராயும் வேளையில், மக்களிடம் நான் கொண்டிருந்த அன்பே அன்றிப் பிறிதொன்றில்லை என்பதைக் காண்கிறேன். இந்த அன்பு என்பதும், அகிம்சையில் எனக்குள்ள அசைக்கொணாத நம்பிக்கையின் வெளிப்பாடேயன்றி வேறொன்றுமில்லை.

சம்பரானில் அந்த நாள் என் வாழ்நாளில் மறக்

கொணுத ஒரு நிகழ்ச்சியாகும்; விவசாயிகளுக்கும் எனக்கும் முக்கியம் வாய்ந்த ஒரு நல்ல நாளாகும்.

சட்டப்படி விசாரணைக்குள்ளானவன் நான்தான்; ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அரசாங்கமே விசாரணைக்குள்ளாக வேண்டியிருந்தது. கமிஷனர் எனக்காக விரித்த வலையில் அரசாங்கத்தைச் சிக்க வைத்ததிலேயே வெற்றி அடைந்தார்.

66

வழக்கு 'வாப்பஸ்'

விசாரணை ஆரம்பமாயிற்று. அரசாங்க வழக்குரைஞரும், மாஜிஸ்டிரேட்டும், மற்ற அதிகாரிகளும், என்ன செய்வது என்று அறியாது தவித்தனர். அரசாங்க வக்கீல் மாஜிஸ்டிரேட்டை வழக்கை ஒத்திவைக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் நான் குறுக்கிட்டுச் சம்பரானிலிருந்து வெளியேறும்படி போட்ட உத்திரவைக் கீழ்ப்படியாத குற்றத்தை நான் ஒத்துக் கொள்ளப் போவதால், வழக்கைத் தள்ளிப்போட வேண்டாம் என்று மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக்கொண்டேன்.

விசாரணையை இனி ஒத்திபோட வேண்டிய பிரமேயமில்லை. ஆனால், மாஜிஸ்டிரேட்டுக்கும் வக்கீலுக்கும் என் வேண்டுகோள் எதிர்பாராத விதத்தில் திடீரென வந்ததாக இருந்தபடியால், மாஜிஸ்டிரேட் தீர்ப்புக் கூறுவதை ஒத்தி வைத்தார். தண்டனை பெறுவதற்காக நான் நீதிமன்றத்துக்கு போகுமுன்னரே, என்பேரில் உள்ள வழக்கைத் திரும்ப வாங்கிக்கொள்ளுமாறு உதவி கவர்னர் உத்தரவு இட்டிருப்பதாக, மாஜிஸ்டிரேட்டு எழுத்து மூலமாக எனக்கு ஒரு செய்தி அனுப்பினர். கலெக்டரும், நான் உத்தேசித்த விசாரணையைத் தாராளமாக நடத்தலாமென்றும், அதிகாரிகளிடமிருந்து

நான் வேண்டிய எவ்வித உதவியும் பெற்றுக்கொள்ளலா மென்றும், எனக்கு எழுதினார். இவ்விஷயம் இவ்வளவு விரைவிலும் இவ்வளவு மகிழ்ச்சியோடும் முடியும் என்று நாங்கள் எவரும் எதிர்பார்க்கவே இல்லை.

கலெக்டர் திரு. ஹேகாக்கைப் பார்க்கச் சென்றேன். அவர் நீதி வழங்குவதில் ஆர்வமுள்ள நல்ல மனிதராகவே காணப்பட்டார். நான் பார்ப்பதற்குத் தஸ்தாவேஜுகள் எதுவேண்டுமானாலும் நான் கேட்கலாமென்றும், நான் எப்போது விரும்பினும் தன்னை வந்து தாராளமாகப் பார்க்கலாம் என்றும் என்னிடம் சொன்னார்.

இவ்வண்ணம் சட்டமறுப்பில் நாடு முதலாவது உதாரணப் பாடத்தைப் பெற்றது. இவ்விஷயம், சம்பரானிலும் பத்திரிகைகளிலும் தாராளமாக விவாதிக்கப்பட்டது; எனது விசாரணைக்கும் எதிர்பாராத விளம்பரம் கிடைத்தது.

பணம் இல்லாமல் இவ்வேலையை நடத்துவது சாத்தியமில்லை. இத்தகைய வேலைக்குப் பொது மக்களிடம் பணம் வேண்டுவது இதுவரை பழக்கமில்லை. பிரஜ் கிஷோர்ப்ாபும் அவரது நண்பர்களும் பெரும்பான்மையோர் வக்கீல்கள். அவர்கள் நிதிக்குத் தாங்களே வழங்கினார்கள்; அல்லது சமயம் வாய்த்தபோது தங்கள் நண்பர்களிடமிருந்து வாங்கிக் கொடுத்தார்கள். தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கச் சக்தி இருக்கும்போது, பிறரைக் கொடுக்கும்படி எப்படிக் கேட்பது என்பது அவர்களுடைய வாதம். சம்பரான் விவசாயிகளிடமிருந்து நான் யாதொன்றும் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்று உறுதி செய்துகொண்டேன். ஏனென்றால் அது தவறாகப் பொருள் கொள்ளுவதற்கு இடம் கொடுத்தல் நிச்சயம். இவ்விசாரணையை நடத்தப் பொதுவாக நாட்டுக்கு வேண்டுகோள் விடவும் கூடாது என்பதையும் அதே மாதிரி நிச்சயித்திருந்தேன். ஏனென்றால் அது, இவ்விசாரணைக்கு அகில-இந்தியத்

தன்மையும் அரசியல் பான்மையும் கொடுத்ததாகும். சம்பரான் மக்களின் ஏழ்மைக்கு ஏற்ப நாங்கள் அதி சிக்கனத்தைக் கையாளுவதில் முனைந்திருந்தபடியால், எங்களுக்கு அதிகமான நிதி தேவைப்படாது. உண்மையில், அதிகமான தொகை ஒன்றும் எங்களுக்குத் தேவை இல்லை என்பதை முடிவில் கண்டோம். எல்லாம் சேர்ந்து நாங்கள் மூவாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமலே செலவழித்ததாக எனக்கு நினைவு. இன்னும், நாங்கள் வசூலித்த ரூபாயில் சில நூறு ரூபாய்கள் மீதிப்படுத்தினோம் என்றும் நினைவு இருக்கிறது.

விவசாயிகள் கூட்டங் கூட்டமாகத் தங்கள் வாக்குமூலம் கொடுப்பதற்கு வந்தார்கள். அவர்களோடு படைபோல் ஏராளமான தோழர்களும் வந்தார்கள்; வீட்டைச் சுற்றி உள்ள இடத்திலும் தோட்டத்திலும் இடம் கொள்ளாமல் நிரம்பி இருந்தார்கள்.

வாக்குமூலங்களை எழுதுபவர்கள், சில விதிகளைப் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு விவசாயியையும் நுணுக்கமாகக் குறுக்கு விசாரணை செய்யவேண்டும். இச்சோதனையில் தவறியவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். இதனால் அதிகக் காலம் பிடித்தது; என்றாலும் இதனால் வாக்குமூலங்களில் பெரும்பாலானவை மறுப்பதற்கிடம் இல்லாதவை ஆயின.

இவ்வாக்குமூலங்களைப் பதிவு செய்யும்போது, சி. ஐ. டி. அதிகாரி ஒருவர் எப்பொழுதும் பிரசன்னமாக இருப்பார். நாங்கள், அவர் இருக்கக் கூடாதென்று தடுத்திருக்கலாம்; ஆனால், நாங்கள் முதல் ஆரம்பத்திலேயே, சி. ஐ. டி. அதிகாரிகள் பிரசன்னமாக இருப்பதைப் பொருட்படுத்தாமல் இருப்பதோடுமட்டுமல்லாமல், அவர்களை மரியாதையோடு நடத்தவேண்டும் என்றும், எங்களால் தரக்கூடிய தகவல் அனைத்தையும் அவர்களுக்குத் தரவேண்டும் என்றும், நாங்கள் தீர்மானித்திருந்தோம். தோட்டக்காரருக்கு எரிச்சல் உண்

டாக்காது அவர்களைச் சாந்தத்தினால் வசப்படுத்தவே விரும்பினேன். எனவே அவர்களில் யார்மீதெல்லாம் கடுமையான குற்றங்கள் சாட்டப்பட்டனவோ, அவர்களனைவருக்கும் நான் எழுதி அவர்களைச் சந்திப்பது என்று ஒழுங்காக வைத்துக்கொண்டேன். தோட்டக்காரர்களின் சங்கத்துக்கும் சென்று, விவசாயிகளின் குறைகளை அவர்களிடம் சொல்லி, அவர்களுடைய நோக்கின் போக்கையும் தெரிந்து கொண்டேன். தோட்டக்காரர்களில் சிலர் என்னை வெறுத்தார்கள்; சிலர் பராமுகமாக இருந்தார்கள்; ஒரு சிலர்மட்டும் என்னைக் கண்ணியத்தோடு நடத்தினார்கள்.

67

கிராமங்களிலே

பீஹாரைப்பற்றி எனக்கு அநுபவம் அதிகமாக ஆக, சரியான கிராமக் கல்வி இல்லாமல், நிரந்தரமான வேலை எதுவும் சாத்தியம் இல்லை என்பது என்மனதில் உறுதி அடையலாயிற்று. குடியானவனுடைய அறியாமை பரிதாபகரமானது. அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒன்று இஷ்டம்போல் திரியவிட்டிருந்தார்கள்; அல்லது நாளைக்கு இரண்டு செம்புக்காசுக்காகக் காலையிலிருந்து மாலை வரை அவுரித்தோட்டங்களில் உழைக்கச் செய்திருந்தார்கள். அந்த நாட்களில் ஆண் தொழிலாளியின் கூலி 2½ அணுவுக்கும், பெண் தொழிலாளியின் கூலி 1½ அணுவுக்கும், குழந்தையின் சம்பளம் ¾ அணுவுக்கும், மேல் போகாது. நாள் ஒன்றுக்கு நாலணுச் சம்பாதிப்பவன் மிகவும் பாக்கியசாலியாகக் கருதப்பட்டான்.

என் தோழர்களோடு கலந்து கொண்டு, கிராமங்களில் ஆறு ஆரம்பப் பள்ளிகள் திறக்கத் தீர்மானித்தேன். கிராமத்தார்கள், ஆசிரியர்களுக்கு இடமும்

உணவும் அளிக்கவேண்டும் என்றும், மற்றச் செலவுகளை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் என்றும் ஏற்பாடு செய்து கொண்டோம். கிராமவாசிகளிடம் கையில் ரொக்கப்பணம் என்பது கிடையாது; ஆனால் அவர்களால் உணவுப்பொருள்களைக் கொடுக்க முடியும். வாஸ்தவத்தில், தானியங்களும், மற்றக்கச்சாப் பொருள்களும் கொடுக்கத்தயார் என்பதை ஏற்கெனவே தெரிவித்துள்ளார்கள்.

முடிந்த மட்டும் நாங்கள் ஒவ்வொரு பள்ளியையும் ஒரு ஆடவரும் ஒரு பெண்மணியும் ஏற்று நடத்துமாறு செய்தோம். இத்தொண்டர்கள், வைத்திய வசதியையும் சுகாதாரத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டும். கிராமப்பெண்களைப் பெண்கள் மூலம் அணுகவேண்டும்.

வைத்திய வசதி என்பது மிக எளிய காரியம். விளக்கெண்ணெய், கொயினா, கெந்தக மெழுகு ஆகிய மருந்துகளே தொண்டர்களிடம் தரப்பட்டன. நோயாளியின் நாக்கு அழுக்குப் படிந்திருந்தாலும், அல்லது மலச்சிக்கல் இருப்பதாகச் சொன்னாலும், விளக்கெண்ணெய் கொடுக்கப்பட்டது. காய்ச்சலுக்கு, ஒரு முறை முதலில் விளக்கெண்ணெய்க் கொடுத்துவிட்டுப் பின் கொயினா கொடுக்கப்பட்டது. கொப்பளம், சிரங்கு முதலிய வற்றிற்கு, அவை பாதித்துள்ள இடங்களை நன்றாகக் கழுவிவிட்டு, கந்தக மெழுகு போடப்பட்டது. நோயாளி யாரும் வீட்டுக்கு எந்த மருந்தும் கொண்டுபோக அனுமதிக்கப் படவில்லை. எப்பொழுதாவது, சிக்கலான நோய் ஏற்பட்டால், டாக்டர் தேவ் கலந்து ஆலோசிக்கப்பட்டார். டாக்டர் தேவ் வாரத்தில் குறிப்பிட்ட தினங்களில் ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் சென்று வந்தார்.

இந்த எளிய வசதிகளை ஏராளமான மக்கள் பயன் படுத்திக் கொண்டார்கள். கிராம மக்களிடம் பரவி இருந்த நோய்கள் சிலவே. அவைகளும் நிபுணர்களின் உதவி எதுவுமில்லாமலே எளிய மருந்துகளால் குணப்

படக்கூடியவைகளே என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், இந்த வேலைத்திட்டம் ஆச்சரியமாக ஒன்றும் தோன்ருது. மக்கள் சம்பந்தப்பட்டமட்டில், இவ் ஏற்பாடுகள் அவர்களுக்கு நல்ல விதமாகத் திருப்தி அளித்தன.

சுகாதார சேவை மிகவும் சிரமம் ஆனது. மக்கள் தாங்களாகவே எதுவும் செய்யத் தயாரில்லை. வயலில் வேலை செய்யும் விவசாயிகூடத் தாங்களே தங்களிடத் தைத்துப்புரவு செய்துகொள்ளத் தயாராக இல்லை. ஆனால் எளிதிலே தைரியத்தை இழந்து விடக்கூடிய மனிதரல்ல டாக்டர் தேவ். ஒரு கிராமத்தைச் சுத்தத்தில் மாதிரிக் கிராமமாக்கத் தானும் தனது தொண்டர்களும் தங்கள் ஆற்றல் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி உழைத்தனர். அவர்கள் வீதிகளையும், வாயிற்புறங்களையும் பெருக்கினார்கள்; கிணறுகளைத் தூர்வை எடுத்தார்கள், பக்கத்தி லிருந்த குட்டைகளைத் தூர்த்தார்கள். கிராமவாசிகளை, அவர்களுக்குள்ளே தொண்டர்களைச் சேர்க்குமாறும் அன்பாக இணங்கும்படி பேசினார்கள். சில கிராமங்களில், கிராமவாசிகளே வெட்கமுற்று அவ்வேலைகளை மேற் கொள்ளுமாறு செய்தனர்; வேறு சில கிராமங்களில், என்னுடைய மோட்டார் வண்டி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லுவதற்காகச் சாலைகள் கூடப் போடும் அளவிற்கு உற்சாகமாக வேலை செய்தார்கள். இந்த இன்பகரமான அநுபவங்கள், மக்களின் அசிரத் தையைப் பற்றிய துயரகரமான அனுபவங்களோடு கலந்து வராமல் இல்லை. இவ் வேலையில் சில கிராம வாசிகள் ஒளிவுமறைவின்றித் தங்கள் வெறுப்பைத் தெரி வித்ததும் எனக்கு நினைவிருக்கிறது.

இதற்கு முன் பல கூட்டங்களில் நான் விவரித்துள்ள ஒரு அநுபவத்தைப் பற்றி இங்கு கூறுவது பொருத்தம் இல்லாதது ஆகாது. பிதிஹர்வா ஒரு சிறிய கிராமம். அதில் எங்கள் பள்ளிக்கூடங்களில் ஒன்று இருந்தது.

அதன் அருகிலுள்ள, அதிலும் சிறிய இன்னொரு கிராமத்திற்கு நான் செல்ல நேர்ந்தது. அங்குப் பெண்களில் சிலர் அழுக்கு உடை உடுத்தி இருந்ததைப் பார்த்தேன். எனவே, தங்கள் துணிகளை ஏன் துவைப்பதில்லை என்று அவர்களைக் கேட்கும்படி என் மனைவியிடம் சொன்னேன். என் மனைவி அவர்களைக் கேட்டாள். அவர்களில் ஒருத்தி அவளைத் தன் குடிசைக்குள் அழைத்துச் சென்று, "இங்கே பாருங்கள் அம்மா, வேறு ஆடைகள் வைத்திருக்கப் பெட்டி அலமாரி ஒன்றும் இங்கே கிடையாது. நான் உடுத்தி இருக்கும் புடவை ஒன்றுதான் என்னிடம் உள்ளது. இதை எப்படி நான் துவைப்பது? எனக்கு இன்னொரு சேலை வாங்கித் தரும்படி மகாத்மாஜியிடம் சொல்லுங்கள்; அப்போது நான் நாள்தோறும் குளித்துச் சுத்தமான ஆடை உடுத்திக் கொள்ளுவதாக வாக்குக் கொடுக்கிறேன்."

இந்தக் குடிசை இந்தியக் கிராமங்களில் பலவற்றில் காணும் ஒரு உதாரணமே யன்றி ஒன்றும் விதிவிலக்கானது அன்று. இந்தியாவில் எண்ணற்ற குடிசைகளில், மக்கள், எவ்விதத் தட்டுமுட்டுச் சாமான்களுமில்லாமலும், மானத்தை மூடிக்கொள்ள ஒரு கந்தைத் துணியைத் தவிர மாற்று உடை கூட இல்லாமலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்னும் ஒரு அநுபவத்தையும் குறிப்பிடுவேன். சம்பரானில், மூங்கிலுக்கும் புல்லுக்கும் குறைவே கிடையாது. பீதிஹர்வாவில் உள்ள பள்ளிக்கூடம் இத் தகைய பொருள்களால் அமைக்கப்பட்டிருந்தது. யாரோ—அண்மையிலுள்ள தோட்டக்காரர்களின் ஆட்களாக இருக்கலாம்—ஒருநாளிரவு அதற்குத் தீ வைத்து விட்டார்கள். மூங்கிலும் புல்லும் வைத்து மீண்டும் பள்ளியைக் கட்டுவது உசிதமன்று என்று கருதப் பட்டது. இப்பள்ளியை திரு. சோமனும் கஸ்தூரிபாவும் நடத்தி வந்தார்கள். திரு. சோமன் ஒரு காரைக்

கட்டிடமாகவே கட்டிவிடத் தீர்மானித்தார். பிறரையும் தொற்றிக் கொள்ளக்கூடிய அவருடைய உழைப்பினால், பலரும் அவருடன் ஒத்துழைக்கவே, ஒரு காரைக் கட்டிடம் விரைவிலே கட்டிமுடிக்கப்பட்டது. இனிமேல் இக்கட்டிடம் தீக்கிரையாகும் என்ற அச்சம் இல்லை.

இவ்வண்ணம், பள்ளிகள், சுகாதார சேவை, வைத்திய உதவி இவற்றின் மூலமாகத் தொண்டர்கள் கிராம மக்களின் நம்பிக்கையையும் மரியாதையையும் பெற்று, அவர்களிடையே நல்ல செல்வாக்கும் பெறலாயினர்.

ஆனால், இந்த நிர்மாண வேலை நிரந்தரமானதாக அமையுமாறு செய்ய வேண்டும் என்ற என் நம்பிக்கை நிறைவேறவில்லை என்று வருத்தத்துடன் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். தொண்டர்கள் தற்காலிகமாகவே வந்தவர்கள்; வெளியிலிருந்து மேற்கொண்டு தொண்டர்களை வருவிக்க முடியவில்லை; பீகாரிலேயே, நிரந்தரமாக ஊதியமின்றி உழைக்கும் ஊழியர்கள் அகப்படவில்லை. சம்பரானில் எனது வேலை முடிந்ததும் இதற்கிடையில் வெளியே உருவாகிக் கொண்டிருந்த வேலை என்னை இழுத்துக் கொண்டுவிட்டது. ஆனாலும், சம்பரானில் நிகழ்ந்த இச் சில மாத வேலை, ஆழ்ந்த வேரூன்றி இருந்தமையால், இன்றளவும் அதன் பயன் ஏதேனும் ஒரு வடிவத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

68

கறை நீங்கியது

வாக்கு மூலங்கள் கொடுக்க வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வந்தது. இது தோட்டக்காரர்களுடைய கோபத்தையும் அதிகரிக்கச் செய்தது. எனவே எனது விசாரணைக்கு முட்டுக்கட்டை போட அவர்கள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தனர்.

ஒரு நாள் பீஹார் அரசாங்கத்திடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது: ''உங்களுடைய விசாரணை போதுமானபடி நீடித்துள்ளது. இப்பொழுது இதை முடித்துவிட்டு நீங்கள் பீஹாரை விட்டுப் போய்விட வேண்டுமல்லவா?'' என்ற பொருள் கொண்டது அக் கடிதம். கடிதம் கண்ணியமான வாசகத்திலேயே வரையப் பட்டிருந்தது; ஆனால் அதனுடைய பொருள் தெளிவாக இருந்தது.

விசாரணை நீடிக்கத்தான் செய்யும் என்றும், அதனால், மக்களுக்கு விமோசனம் ஏற்பட்டாலொழிய அதுவரையில் நான் பீஹாரை விட்டுப் போவதான உத்தேசம் எனக்கு இல்லை என்றும், பதில் எழுதினேன். ஆனால் அரசாங்கம், ஒன்று, விவசாயிகளின் குறை பாடுகள் உண்மையென ஏற்றுக்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்யலாம்; அல்லது அதிகாரபூர்வமான விசாரணையை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை விவ சாயிகள் பூர்வாங்கமாக நிரூபித்துவிட்டார்கள் என்பதை அங்கீகரித்து அத்தகைய விசாரணையை ஏற்படுத்தலாம். இவை இரண்டில் ஒன்றைச் செய்து என் விசாரணையை முடிப்பது அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்பதையும் அக்கடிதத்தில் எடுத்துக் காட்டி இருந்தேன்.

அப்போது லெப்டினென்ட் கவர்னராக இருந்த சர். எட்வர்டு கெயிட், தன்னைவந்து பார்க்கும்படி எனக்கு எழுதினார். ஒரு விசாரணை ஏற்படுத்தத் தனது சம்மதத்தைத் தெரிவித்து விசாரணைக் குழுவில் என்னை ஒரு உறுப்பினராக இருக்கும்படி சொன்னார். நான் மற்ற உறுப்பினர்களின் பெயரை விசாரித்து அறிந்து கொண்டேன். என்னுடைய சக ஊழியர்களோடு கலந்து ஆலோசித்த பின்னர், சில நிபந்தனைகளோடு கமிட்டி யில் சேவை செய்ய ஒத்துக்கொண்டேன். அந்நிபந்தனை களாவன:—

"விசாரணையின்போது எனது சக ஊழியர்களுடன் நான் கலந்துபேசச் சுதந்திரம் இருக்க வேண்டும். நான் கமிட்டியில் ஒரு உறுப்பினராக இருந்தாலும், விவசாயிகள் கட்சியை எடுத்துரைக்கும் உரிமை எனக்கு இல்லாமல் போகவில்லை என்பதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். விசாரணையின் முடிவு எங்களுக்குத் திருப்தி அளிக்காமல் போனுல், விவசாயிகள் என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு வழிகாட்டவும் ஆலோசனை கூறவும் எனக்கு உரிமை இருக்க வேண்டும்."

சர். எட்வர்ட் கெயித் இந்நிபந்தனைகள் நியாயமும் முறையுமானவை எனக் கருதி, ஒப்புக் கொண்டார்.

விசாரணைக் குழு, குடியானவர்களுக்கு அநுகூலமாகத் தீர்ப்புக் கூறியது. தோட்டக்காரர்கள் குடியானவர்களிடமிருந்து வசூலித்து வந்ததில் ஒரு பகுதி சட்ட விரோதமானது என்று தீர்மானித்து அதைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்றும், 'தீன்கதியா' முறையை சட்டமூலமாக ஒழிக்கவேண்டும் என்றும், விசாரணைக் குழு சிபாரிசு செய்தது.

குழு ஒருமனதாக அறிக்கை சமர்ப்பித்ததற்கும், குழுவின் சிபாரிசுப்படி விவசாயச் சட்டத்தை நிறைவேற்றச் செய்ததற்கும், சர். எட்வர்டு கெயித் எடுத்துக் கொண்ட முயற்சி அதிகம். அவர் உறுதியான மனோபாவத்தைக் கையாண்டிராவிட்டால், அதனோடு தனது சாதுரியத்தையெல்லாம் இக்காரியத்தில் பயன்படுத்தி இருக்காவிட்டால், குழுவின் அறிக்கை ஒருமனதாக இருந்திருக்காது; விவசாயச் சட்டமும் நிறைவேறி இருக்காது. தோட்டக்காரர்கள் அபரிமிதமான செல்வாக்கு வாய்க்கப் பெற்றிருந்தார்கள். ஆனுல், சர். எட்வர்ட் கெயித் இறுதிவரை உறுதியாக இருந்து, குழுவின் சிபாரிசுகளை முழுவதும் நிறைவேற்றி வைத்தார்.

சுமார் ஒரு நூற்றுண்டுக்குமேல் இருந்த ‘தீன் கதியா’ முறை இந்தவிதமாக ஒழிந்தது. அதனேடு தோட்டக்காரர்களின் இராஜ்யமும் முடிவுற்றது. இது வரை நசுக்கப்பட்டு வந்த குடியானவர்களும், இப்பொழுது ஓரளவு எழுந்து நின்ருர்கள். மேலும், அவுரிக் கறையை ஒருநாளும் கழுவவே முடியாது என்ற குருட்டு நம்பிக்கையும் மறைந்து ஒழிந்தது.

பாகம் XII

ஆமதாபாத் தொழிலாளர்

69

தொழிலாளர் தொடர்பு

இதே சமயத்தில், ஆமதாபாத்திலுள்ள தொழிலாளிகள் நிலைமைபற்றி திருமதி அனுசூயாபென் இடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அவர்களுடைய கூலிகள் குறைவு. அதைக் கூட்டவேண்டும் என்று நீண்ட நாட்களாக அவர்கள் கிளர்ச்சி செய்து வந்துள்ளனர். முடிந்தால் அவர்களுக்கு வழிகாட்ட நான் விரும்பினேன். ஆனால் அந்தத் தொலை தூரத்திலிருந்து, இந்தச் சிறிய காரியத்தைக்கூட நடத்த எனக்குப் போதிய நம்பிக்கை இல்லை. எனவே இவ் வாய்ப்புக் கிடைத்ததும் உடனே ஆமதாபாத்துக்குச் சென்றேன்.

நான் ஒரு தருமசங்கடமான நிலையில் இருந்தேன். ஆலைத் தொழிலாளிகளின் கட்சி நியாயமாக இருந்தது. திருமதி அனுசூயாபென், தனது சொந்தச் சகோதரரான திரு. அம்பலால் சராபாயோடு போராட வேண்டி இருந்தது. அவர் ஆலை முதலாளிகளின் கட்சிக்குத் தலைவர். அவர்களோடு என் உறவு நேய பாவமாக இருந்தது ; எனவே அவர்களோடு போராடுவது மேலும் கஷ்டமாக இருந்தது. அவர்களோடு நான் கலந்து ஆலோசித்து, இந்த விவகாரத்தை மத்தியஸ்தத்துக்கு விடும்படி வேண்டினேன். ஆனால் மத்தியஸ்தத்துக்கு விடும் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

எனவே, தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யுமாறு நான் யோசனை சொல்ல வேண்டியதாயிற்று. ஆனால் அப்படி நான் செய்யுமுன், அவர்களோடு நான்

மிக நெருங்கிய தொடர்பு கொண்டு, வெற்றிகரமான வேலை நிறுத்தத்திற்கு வேண்டிய நிபந்தனைகளை விளக்கிக் கூறினேன். அவையாவன :

(1) எக்காலும் பலாத்காரத்தில் இறங்கக் கூடாது.
(2) எக்காலும் கருங்காலிகளைத் தொந்திரவு செய்யக் கூடாது.
(3) எக்காலும் பிச்சைப்பொருளை நம்பி இருக்கக் கூடாது.
(4) எவ்வளவு நாள் வேலை நிறுத்தம் நீடித்தாலும் உறுதியோடு இருத்தல் வேண்டும். வேலை நிறுத்தத்தின் போது, வேறு கண்யமான தொழில் செய்து, உணவுக்கு வழிதேடிக் கொள்ள வேண்டும்.

வேலை நிறுத்தத் தலைவர்கள் இந்நிபந்தனைகளை அறிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். தொழிலாளர்கள் பொதுக்கூட்டம் கூடி, தங்களுடைய நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்படும் வரை, அல்லது ஆலை முதலாளிகள் விவகாரத்தை மத்தியஸ்தத்துக்கு ஒப்புக்கொள்ளும் வரை, வேலைக்குப் போவதில்லை என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள்.

வேலை நிறுத்தம் இருபத்தொரு நாள் நடந்தது. வேலை நிறுத்தத்தின் போது, அப்போதைக்கப்போது ஆலை முதலாளிகளை நான் கலந்து, தொழிலாளிகளுக்கு நீதி வழங்குமாறு மன்றாடினேன். அவர்கள் பின் வருமாறு சொல்லுவார்கள் : "எங்களுக்கும் பிரதிக்ஞை உண்டு : தொழிலாளர்களோடு எங்கள் உறவு, பெற்றோரும் குழந்தைகளுக்கும் உள்ளதுபோல. மூன்றாவது மனிதர்கள் இதில் தலை இடுவதை நாங்கள் எப்படிப் பொறுக்க முடியும்? இதில் மத்தியஸ்துக்கு இடமேது?"

70

உண்ணு நோன்பு

முதல் இரண்டு வாரங்கள் ஆலைத் தொழிலாளிகள் சிறந்த தைரியத்தோடும், தன்னடக்கத்தோடும் நடந்து கொண்டார்கள். தினந்தோறும் மாபெருங் கூட்டங்கள் நடத்தினர்கள். இச்சந்தர்ப்பங்களில், அவர்கள் செய்திருந்த பிரதிக்ஞையை அவர்களுக்கு நான் நினைவூட்டுவேன்; அவர்களும், தாங்கள் தங்கள் உயிரை விட்டாலும் விடுவோமேயன்றி, சொன்ன வாக்கை மீறமாட்டோம் என்று எனக்கு மீண்டும் உறுதி கொடுப்பார்கள்.

ஆனல், கடைசியில் அவர்கள் தளர்ந்து சோரும் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. மனிதனின் உடல் வலிமைக் குறைவு, கோபவடிவமாக உரு வெடுப்பது போலவே, வேலை நிறுத்தம் பலவீனம் அடைவதாகத் தோன்றியபோது, கருங்காலிகளிடம் அவர்கள் நடந்து கொண்ட விதம் வரவர அதிகப் பய முறுத்தல் உடையதாக இருந்தது; எங்கு அவர்கள் காலித்தனத்தில் இறங்கி விடுவார்களோ என்று நான் அஞ்ச ஆரம்பித்தேன். தினப் பொதுக் கூட்டங்களில் அவர்கள் வரும் எண்ணிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. வந்திருப்பவர்களின் முகங்களும் அவர்களுடைய சோர்வையும் நம்பிக்கை இன்மையையும் நன்ருகக் காட்டின. முடிவிலே, வேலை நிறுத்தக்காரர்கள் ஆட்டங்கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்ற தகவல் எனக்கு வந்தது. நான் மிகவும் கிலேசம் உற்றேன். இந்த நிலையில் என்னுடைய கடமை என்ன என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானேன்.

ஒரு நாட்காலை—தொழிலாளர்களின் கூட்டத்தில்

இருக்கும்போது இன்னும் என்னுடைய வழியை தெளிவாக காணமுடியாது திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில், திடீரென்று ஒளி உதயமாயது. அழையாது தாமாகவே பின்வரும் சொற்கள் எல்லாம் என் நாவில் இருந்து எழுந்தன: "வேலை நிறுத்தக்காரர்கள் அனைவரும் மீண்டும் ஒருங்கு சேர்ந்து ஒன்று, ஒரு சமரசம் ஏற்படும் வரையில் வேலை நிறுத்தத்தை நீடிக்க வேண்டும், அல்லது ஆலைகளிலிருந்து வேலைகளை அடியோடு விட்டுவிட வேண்டும். இவ் இரண்டில் ஒன்று நிகழும்வரை, நான் உணவு எதுவும் தீண்டுவதில்லை" என்று அக்கூட்டத்தில் அறிவித்தேன்.

தொழிலாளிகள் இடிவிழுந்தவர்கள் போலானார்கள். அனுசூய பென்னின் கன்னங்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. தொழிலாளிகள் யாவரும் கூவினார்கள்; "நீங்கள் பட்டினி இருக்க வேண்டாம்; நாங்கள் பட்டினி இருக்கிறோம். நீங்கள் உபவாசம் இருப்பதானால், அது எங்களுக்குப் பெரும்பாதகமாகும். எங்கள் தவறுகளைத் தயவு கூர்ந்து மன்னித்தருளுங்கள்! எங்களுடைய வாக்குறுதியை இறுதிவரை நாங்கள் காப்பாற்றுகிறோம்."

நான் அவர்களுக்கு மறுமொழி சொன்னதாவது: "நீங்கள் பட்டினி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் பிரதிக்ஞைக் காப்பாற்றினால், அதுவே போதும். நம்மிடம் பணம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். பொதுமக்களுடைய தருமத்தினால், நம்முடைய வேலை நிறுத்தத்தை நீடிக்க நாம் விரும்பவில்லை. எனவே வேலைநிறுத்தம் எவ்வளவு நாள் நீடித்தாலும்கூட, நீங்கள் அதைப்பற்றி கவலைப்படாமல் இருக்க வேண்டுமானால், ஏதாவது தொழில் செய்து கஷ்ட ஜீவனம் நடத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். என்னைப் பற்றிய வரையில், வேலைநிறுத்தம் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் பட்டினி நிறுத்தப்படும்."

இதற்கிடையில், வல்லபாய் வேலை நிறுத்தக்காரர்களுக்கு நகராட்சியின்கீழ் வேலை தேடிக் கொடுக்க முயன்று கொண்டிருந்தார்; ஆனால் அங்கு பயனை எதிர்பார்க்கக் கூடிய நம்பிக்கை அதிகமில்லை. மகன்லால் காந்தி ஒரு யோசனை சொன்னார். ஆசிரமத்தில் எங்களுடைய நெசவுப் பள்ளியின் அடித்தளத்தை நிரப்ப மணல் வேண்டி இருந்தமையால், அந்த வேலைக்குத் தொழிலாளர்களில் பலரை ஏற்படுத்திக் கொள்ளலாம், என்பது அந்த யோசனை. தொழிலாளிகள் இந்த யோசனையை வரவேற்றார்கள். அனுசூய பென் கூடை மணலைத் தன் தலையில் சுமந்து வழி காட்டினார். உடனே, தொழிலாளிகள் ஆற்று உள்வாயிலிருந்து மணலைக் கூடையில் தலையில் சுமந்து கொண்டு வரிசை வரிசையாக வந்து கொண்டே இருக்கலானார்கள். தொழிலாளிகள், தங்களுக்கு ஒரு புதிய பலம் பெற்றுள்ளதாக உணர்ந்தனர். அவர்களுக்குக் கூலி கொடுக்கும் வேலையைச் சமாளிப்பதே மிகவும் சிரமம் ஆயிற்று.

என்னுடைய பட்டினி நோன்பில், ஒரு பெரிய குறைபாடு இல்லாமல் போகவில்லை. ஆலை முதலாளிகளிடம் நெருங்கிய அன்னியோன்னிய பாவத்தை நான் அனுபவித்து வந்தேன் என்று முன் அதிகாரத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே என் உண்ணாவிரதம், அவர்கள் முடிவைப் பாதிக்காமல் போகாது. ஒரு சத்தியாக்கிரகியாகிய நான் அவர்களுக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கக் கூடாதென்பதும், ஆனால் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம் மட்டுமே அவர்களைப் பாதிக்கும் வண்ணம் அவர்களை விட்டுவிட வேண்டும் என்பதும் அறிவேன். நான் உண்ணாவிரதம் மேற்கொண்டது ஆலை முதலாளிகளின் தவறால் ஏற்பட்டது அன்று; ஆனால் தொழிலாளிகளின் தவறால் ஏற்பட்டது. தொழிலாளிகளின் பிரதிநிதியான எனக்கும் அத்தவறில் ஒரு பங்கு உண்டென கருதினேன். ஆலை முதலாளி

களிடம் நான் வேண்ட மட்டும்தான் செய்யலாம். அவர்களுக்கு எதிர்ப்பாகப் பட்டினி நோன்பு இருப்பது வலுக்கட்டாயப் படுத்துவதாகவே அமையும். எனவே, என் பட்டினி நோன்பு அவர்களைக் கட்டாயத்திற்கு உள்ளாக்கும் என்ற ஞானம் இருந்தும்கூட, (உண்மையில் அவ்வாறே அது கட்டாயப் படுத்தியது) என்னால் அதைத் தவிர்க்க முடியவில்லை என்பதை உணர்ந்தேன். நோன்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமை தெளிவாக இருந்ததாக எனக்குத் தோன்றியது.

நான் ஆலை முதலாளிகளைச் சாந்தப்படுத்த முயன்றேன். "உங்களுடைய கட்சியிலிருந்து நீங்கள் பின் வாங்கிக்கொள்ள இதனால் சிறிதுகூட அவசியமில்லை, என்று சொன்னேன். ஆனால் என்னுடைய வார்த்தைகளை அவர்கள் காதில் போட்டுக்கொள்ள வில்லை; அவர்கள் கூறிய மெல்லிய நையாண்டிச் சொற்களைக் கூட என்மீது செலுத்தினார்கள். அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்குப் பூரண உரிமை உண்டு.

வேலை நிறுத்த விஷயத்தில், ஆலை முதலாளிகளின் இவ் வளைந்துகொடாத மனோபாவத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர் சேத் அம்பாலால் ஆவார். அவருடைய உறுதியான உளமும், பளிங்கு போன்ற நேர்மையும் ஆச்சரியகரமானவை; அவை என் உள்ளத்தை கவர்ந்தன. அவருக்கு எதிராகப் போராடுவதே இன்பம் தருவதா யிருந்தது. எனவே அவர் தலைவராக இருந்த எதிர்க் கட்சியில் எனது உண்ணா நோன்பு காரணமாக ஏற்பட்ட வருத்தம் என் மனதைப் புண் படுத்தியது. மேலும், அவருடைய மனைவி சாரளாதேவி உடன்பிறந்த சகோதரியைப் போல் என்னிடம் அன்பு கொண்டிருந்தார். என் செயலின் காரணமாக அவருடைய மனோவேதனையையும் என்னால் பார்க்கச் சகிக்க வில்லை. அனுசூயா பென்னும், மற்றும் நண்பர்கள் சிலரும், தொழிலாளிகளும் என்னோடு முதல்நாள் பட்

டினி நோன்பு இருந்தனர். ஆனால், கொஞ்சம் சிரமத்திற்குப் பிறகு, அவர்களுடைய பட்டினியை மேற்கொண்டு நீடிக்காதிருக்கும்படி செய்தேன்.

இவற்றின் நிகர விளைவாக, எங்கணும் நல்லெண்ணமான சூழ்நிலை நிலவுவதாயிற்று. ஆலை முதலாளிகளின் மனமும் நெகிழ்ந்தது. அவர்களும் சமாதானத்திற்கு ஏதேனும் வழிகாண முற்பட்டனர். அனுசூய பென்னின் வீடு அவர்களுடைய விவாதங்கள் நடைபெறும் இடமாயிற்று. திரு ஆனந்த சங்கரதுருவர் இதில் தலையிட்டார்; முடிவில் அவரே மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். நான் பட்டினி நோன்பு மேற்கொண்டு மூன்றே நாளையில், வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது. ஆலை முதலாளிகள் தொழிலாளிகளுக்கு இனிப்புகளை வழங்கி இந் நிகழ்ச்சியைக் கொண்டாடினார்கள். இவ்வாறு 21 நாள் வேலை நிறுத்தத்திற்கு பிறகு ஒரு சமாதானம் ஏற்பட்டது.

பாகம் XIII

கேதா சத்தியாக்கிரஹம்

71

கேதா சத்தியாக்கிரஹம்

ஆமதாபாத் தொழிலாளர் சத்தியாக்கிரஹம் முடிவுற்றதும், கேதா சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் நான் குதிக்க வேண்டி இருந்தது. எனவே, எனக்கு மூச்சு விடும் அவகாசம் கூட அகப்படவில்லை.

கேதா மாவட்டத்தில் எங்கணும் பயிர்கள் தீய்ந்து போனபடியால், அங்கு பஞ்சம் போன்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. கேதாப் பட்டாதார்கள் அவ்வருட வரி வசூலை எவ்வாறு நிறுத்தி வைக்கச் செய்வது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

விவசாயிகளின் கோரிக்கை பகலொளி போல் தெளிவாயிருந்தது. அது மிக மிதமாகவும் இருந்தபடியால், அது எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயும் இருந்தது. நில வருமான விதிகளின்படி, விளைச்சல் நாலில் ஒரு பங்கு அல்லது அதற்குக் கீழ் இருந்தால், விவசாயி அவ்வருடத்திற்கு முழுவரி வஜாக் கேட்கலாம். உத்தியோக பூர்வமான விவரங்கள்படி, விளைச்சல் நாலில் ஒரு பங்குக்கு மேற்பட்டது என்று கூறப்பட்டது. அதற்கு மாருக, விவசாயிகளின் வாதப்படி அது நாலில் ஒரு பங்குக்குக் குறைவானது என்பதாகும். ஆனால் அரசாங்கமோ அதற்குச் செவி சாய்க்கத் தயாராயில்லை. மத்தியஸ்துக்கு விட்டுவிடலாம் என்ற மக்கள் கோரிக்கையை அரசாங்கத்தார் தங்களுக்கு மதிப்புக் குறைவு என்று கருதினர்கள். விண்ணப்பங்களும் பிரார்த்தனையும் பயன் தராமல் போகவே, முடிவில், சகாக்களுடன் கலந்து கொண்டு, பட்டாதார்களைச் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளுமாறு யோசனை கூறினேன்.

இப் போராட்டத்தில், கேதாவிலுள்ள தொண்டர்களைத் தவிர, என்னுடைய முக்கிய தோழர்களாக இருந்தவர்கள், திரு. வல்லப்பாய் பட்டேல், சங்கர்லால் பாங்கர், திருமதி அனுசூயா பென், திரு. இந்துலால் யாக்னிக், திரு. மகாதேவ் தேசாய் முதலியோர் ஆவர். வல்லபாய் போராட்டத்தில் சேர்ந்த போது சிறந்த வருமானம் வந்ததும், வளர்ந்து கொண்டிருந்ததுமான வக்கீல் தொழிலை நிறுத்த வேண்டி இருந்தது. விட்ட அத்தொழிலை மீண்டும் அவர் யாண்டும் தொடங்க முடியவில்லை என்னலாம்.

நதியாத் ஊரிலிருந்த அனுதாசிரமத்தில் எங்களுடைய தலைமை இடத்தை ஏற்படுத்தினோம். நாங்கள் எல்லோரும் இருப்பதற்குத் தகுதியான வேறு பெரிய இடம் பக்கத்தில் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

அடியிற்கண்ட உறுதிமொழிப் பத்திரத்தில் சத்தியாக்கிரஹிகள் கையொப்பம் செய்தனர்.

"எங்கள் கிராமத்தின் விளைவு நாலில் ஒரு பங்குக்குக் கீழ் என்பதைத் தெரிந்துகொண்டு, நாங்கள், நடப்பு ஆண்டுக்கு வரி வசூலை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டோம். ஆனால் அரசாங்கம் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. எனவே கீழே கையொப்பம் இட்டுள்ள நாங்கள், இவ்வாண்டுக்குரிய முழுத் தீர்வையோ பாக்கித் தீர்வையோ அரசாங்கத்துக்கு நாங்களாகச் செலுத்தமாட்டோம் என்று மனப்பூர்வமாகச் சங்கல்பம் செய்கிறோம். அரசாங்கம் உசிதமெனக் கருதுகிற சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அனுமதிப்போம்; எங்களது வரி கொடாமையினால் எங்களுக்கு ஏற்படும் விளைவுகளை மகிழ்ச்சியோடு அநுபவிப்போம். எங்கள் நிலங்கள் பறிமுதலாவதையாவது அனுமதிப்போமே யன்றி, நாங்களாக வரி கொடுத்து எங்கள் கட்சி பொய்யானதென்று கருதப்படுவதற்கோ எங்கள் தன் மானத்திற்கு ஊறு

நேர்வதற்கோ இடம்தர மாட்டோம். மாவட்டம் முழுவதும் இரண்டாவது தவணைக்கிஸ்தி வசூலிப்பதை நிறுத்தி வைக்க அரசாங்கம் ஒத்துக் கொண்டால், எங்களில் பணம் செலுத்தக் கூடியவர்கள் வரி முழுவதையுமோ, அல்லது பாக்கியையோ செலுத்தி விடுவோம். பணம் செலுத்தச் சக்தி உள்ளவர்களும் இன்னும் பணம் செலுத்தாததற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் கொடுப்பார்களானால், கொடுக்க முடியாத ஏழைகளும் பயத்தினால் தங்களுடைய சாமான்களை விற்றோ கடன் வாங்கியோ, தங்கள் பாக்கிகளைக் கொடுக்க முற்பட்டுத் தங்களைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கிக் கொள்ளுவார்கள். இந்த நிலையில், ஏழைகளின் நன்மையை முன்னிட்டு, எங்களில் கொடுக்கச் சக்தி உள்ளவர்களும் கூட பணம் செலுத்தாதிருப்பது எங்களுடைய கடமை எனக் கருதுகிறோம்.’’

இப்போராட்டத்தைப் பற்றி அநேக அதிகாரங்கள் நான் எழுதுவதற்கில்லை. எனவே, இது சம்பந்தமான இன்பமான நினைவுகள் பலவற்றை விட்டுவிட வேண்டி இருக்கிறது. இம் முக்கிய போராட்டத்தைப் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், கேதா, காத்லாலில் உள்ள திரு. சங்கர்லால் பாரிக் எழுதிய, விரிவானதும் நம்பகமானதுமான, ‘‘கேதா சத்தியாக்கிரஹம்’’ என்ற நூலைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

72

‘ வெங்காயக் கள்வன் ’

இந்தப் போராட்டம் குஜராத்திகளுக்கு ஒரு புதுமையான சோதனையாக இருந்தபடியால், அவர்கள் இதில் ஆழ்ந்த அக்கறை கொண்டார்கள். இக்காரியம் வெற்றி அடைவதற்காகத் தங்களுடைய செல்வங்களை அள்ளிக்

கொடுக்கத் தயாராக இருந்தார்கள். பணத்தினால் மட்டும் சத்தியாக்கிரஹத்தை நடத்த முடியாது என்பதைத் தெரிந்து கொள்ளுவது அவர்களுக்கு எளிதாக இல்லை. சத்தியாக்கிரஹத்திற்குத் தேவையானவைகளுள் பணமே கடைசியான தேவையாகும். என்னுடைய கோபத்தையும் பொருட் படுத்தாதது, பம்பாய் வணிகர்கள் அவசியத்திற்கு அதிகமான பணத்தை அனுப்பினார்கள். எனவே போராட்டத்தின் இறுதியில் கொஞ்சப் பணம் மிஞ்சிற்று.

விவசாயிகளுடைய அச்சத்தைத் தவிர்க்க வேண்டியதே எங்களுடைய முக்கியமான வேலையாகக் கொண்டோம். அதிகாரிகள் மக்களுடைய ஊழியர்களே அன்றி, எஜமானர்கள் அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்த விரும்பினோம். எப்படி என்றால் அதிகாரிகள் வரிகொடுப்போரின் வரிப்பணத்திலிருந்தே சம்பளம் பெறுகிறார்கள். அதனோடு, அஞ்சாமையோடு மரியாதையையும் கையாள வேண்டிய கடமையை அவர்களுக்கு அறிவுறுத்துவது மிகவும் கஷ்டசாத்தியமான காரியமாயிற்று. அதிகாரிகளிடம் பயம் போனவுடன், அவர்களுடைய அவமதிப்புக்கு விவசாயிகள் பதில் அவமதிப்புக் கொடுப்பதை எப்படி நிறுத்த முடியும்? ஆனால் அவர்கள் மரியாதைக் குறைவான நடத்தையில் இறங்குவார்களானால், அது தெள்ளிய பாலில் சிறிது நஞ்சைச் சேர்த்தது போல் சத்தியாக்கிரஹத்தைக் கெடுத்து விடும். அவர்கள் கண்ணியமாக நடக்கவேண்டிய பாடத்தை நான் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே படித்துள்ளார்கள் என்பதை அறிந்தேன். மரியாதையே சத்தியாக்கிரஹத்தில் மிகவும் கஷ்டமான பகுதி என்று அனுபவம் எனக்கு படிப்பித்துள்ளது. மரியாதை என்பது, அந்தந்த சமயத்துக்கு ஏற்றாற்போல் கையாளும் வெறும் வெளிப்படைச்சொல் இனிமையன்று; இயல்பான பெருந்தகைமையும், எதிரிக்கும் நலம் செய்யும் விருப்பமும்

ஆகும். இவைகள் சத்தியாக்கிரஹியின் ஒவ்வொரு செயலிலும் காட்சி அளிக்க வேண்டும்.

ஆரம்பக் கட்டங்களில், சத்தியாக்கிரஹிகள் மிகுந்த தைரியத்தைக் காட்டினுர்களேனும், அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனுல் மக்களுடைய உறுதி அசையும் அறிகுறிகள் காணப்படாமையால், அரசாங்கம் கட்டாய முறைகளில் இறங்கினுர்கள். ஜப்தி அதிகாரிகள், மக்களுடைய ஆடுமாடுகளை விற்ருர்கள், தங்கள் கையில் அகப்பட்ட அசையும் பொருள்களை எல்லாம் கைப்பற்றினுர்கள். அபராத அறிக்கைகள் சாதரா செய்யப்பட்டன ; சிலருடைய விளைபயிர்கள் ஜப்தி செய்யப்பட்டன. இது குடியானவர்களுடைய உறுதியைக் குலேத்தது. சிலர் தங்கள் பாக்கியைச் செலுத்தினுர்கள் ; வேறு சிலர், தங்களுடைய பத்திரமாக கையாளக்கூடிய அசையும் பொருள்களை அதிகாரிகள் கைகளில் எளிதில் கிடைக்குமாறு வைத்துப் பாக்கிக்காக அவைகளை ஜப்தி செய்து எடுத்துக்கொள்ள வழி செய்தார்கள். இதற்கு மாருக, சிலர் இறுதிமட்டும் போராட உறுதியோடிருந்தனர்.

இவைகள் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, திரு. சங்கர்லால் பாரிக்கின் சமுசாரிகளின் ஒருவன், தன் நிலத்துக்குள்ள நிலவரியைச் செலுத்தினுன். இது ஒரு பரபரப்பை உண்டாக்கியது. தனது சமுசாரி செய்த தவறுக்காக, திரு. சங்கர்லால்பாரிக் உடனே, எந்த நிலத்திற்காக வரி செலுத்தப்பட்டதோ அதைத் தரும காரியங்களுக்காகக் கொடுத்துப் பிராயச்சித்தம் செய்து கொண்டார். இவ்வாறு அவர் தமது கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொண்டு, மற்றவர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக விளங்கினுர்.

அச்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தவர்களுக்கு மனே தைரியம் ஊட்டும் பொருட்டு நான் மக்களுக்கு ஒரு

யோசனை கூறினேன். என்னுடைய கருத்தில் ஒரு வயல் தவருக ஜப்தி செய்யப்பட்டிருந்தது. அதிலிருந்த வெங்காய மகசூலை திரு. மோகன்லால் பாண்டியாவின் தலைமையில் ஜனங்களை எடுத்துக்கொண்டு போகும்படி சொன்னேன். இதை நான் சட்டமறுப்பு என்று கருத வில்லை. ஆனல் அப்படிச் சட்டமறுப்பாயிருந்தாலும் கூட, மகசூலை ஜப்தி செய்வது சட்டத்திற்கு ஒத்ததாக இருந்தாலும்கூட, அது அறநெறிக்குப் புறம்பானது என்றும், அது கொள்ளையைத் தவிர வேறில்லை என்றும், ஆதலின் ஜப்தியாகி இருந்தாலும்கூட வெங்காயத்தை அப்புறப்படுத்துவது ஜனங்களுடைய கடமையாகும் என்று கூறினேன். இத்தகைய சட்டமறுப்பால் நிச்சய மாகக் கிடைக்கக்கூடிய அபராதமோ சிறைவாசமோ தாமே நாடிப் பெற்றுக்கொள்ளுவதில் ஜனங்கள் ஒரு பாடம் படித்துக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாகும் என்று தோன்றியது. திரு. மோகன்லால் பாண்டியா வுக்கோ, இது அவர் மனதிற்கு உகந்த காரியம். சத்தி யாக்கிரஹக் கொள்கைக்கு இணங்க, ஏதாவது செய்து யாராவது சிறைபுகுந்து துன்பம் அனுபவியாது, இப் போராட்டம் முடிவது அவருக்கு விருப்பமில்லை. எனவே வயலில் இருந்து வெங்காய மகசூலை அப்புறப்படுத்த முன் வந்தார். இதில் அவரோடு ஏழெட்டு நண்பர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

இவர்களைச் சும்மா விட்டுவிடுவது அரசாங்கத்துக்கு இயலாத காரியம். திரு. மோகன்லாலும் அவருடைய சகாக்களும் கைதி செய்யப்பட்டது, மக்களின் உற்சா கத்தை அதிகப்படுத்தியது. சிறைவாச அச்சம் மறைந்த பொழுது, அடக்குமுறை மக்களுக்கு தைரியத்தை ஊட்டு கிறது. விசாரணை நாளன்று, திரளான ஜனக்கூட்டம் நீதிமன்றத்தை முற்றுகை இட்டது. பாண்டியாவும் அவ ருடைய தோழர்களும் கொஞ்சகால சிறை தண்டனை அளிக்கப்பட்டார்கள். அத்தண்டனை தவறு என்பது

என் கருத்து. ஏனென்ருல் வெங்காய மகசூலை அப்புறப் படுத்திய செய்கை, குற்றச்சட்டத்தில் காணப்படும் 'திருட்டு' என்ற சொல்லின் இலக்கணத்திற்குக் கீழ் வராது. ஆனுல் நீதி மன்றங்களைத் தவிர்ப்பது என்ற கொள்கையை முன்னிட்டு, மேல் வழக்குப் (அப்பீல்) போடவில்லை.

'தண்டனை' அடைந்தோர் சிறைக்குச் சென்ற போது, மக்கள் ஊர்வலம் ஒன்றும் கூடச் சென்றது. அன்று, திரு. மோகன்லால் பாண்டியா, 'வெங்காயக் கள்வன்' என்னும் பெருமைக்குரிய பட்டத்தை மக்களிட மிருந்து பெற்ருர். அந்தப் பட்டப் பெயர் அவருக்கு இன்றும் வழங்கி வருகிறது.

73

கேதா சத்தியாக்கிரஹத்தின் முடிவு

ஜனங்கள் சோர்வுற்றனர் என்று தெளிவாகத் தெரிந்தது. உறுதியுடனிருந்தோர் அடியோடு அழிந்து போகும் நிலைக்கு விட்டுவிடத் தயங்கினேன். ஒரு சத்தியாக்கிரஹி ஏற்றுக் கொள்ளக்கூடிய கண்ணியமான முறையில் போராட்டத்தை நிறுத்திவிட வழிதேடிக் கொண்டிருந்தேன். இப்படி ஒன்று மிகவும் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டது. நாதியாத் தாலூகாவின் தாசில் தார், பணக்காரப் பட்டாதார்கள் பணம் செலுத்தி விட்டால், ஏழைகளுக்கு வரிவசூல் நிறுத்தி வைக்கப்படும் என்று எனக்குச் சொல்லி அனுப்பி இருந்தார். ஆனுல், தாசில்தார் தன் தாலூகாவுக்கு மட்டுமே பொறுப்பாளி. கலெக்டர்தான் மாவட்டம் முழுவதுக்கும் வாக்குறுதி கொடுக்க முடியும். எனவே நாதியாத் தாசில்தாரின் வாக்குறுதி மாவட்டம் முழுவதுக்கும் பொருந்துமா என்று கலெக்டரை விசாரித்தேன். தாசில்தாரின் கடிதத்

தில் கண்டவாறு வரிவசூலை நிறுத்தி வைக்குமாறு ஏற் கெனவே உத்திரவுகள் அனுப்பியாயிற்று என்று கலெக்டர் பதில் அனுப்பினார். எனக்கு இதைப்பற்றி முன் தெரியாது. ஆனால், அது உண்மையாயின், மக்க ளுடைய பிரதிக்ஞை நிறைவேறி விட்டது. இதனை அடைவதே பிரதிக்ஞையின் நோக்கம் என்பது நினைவி லிருக்கும். எனவே, எங்களுக்கு இவ் உத்திரவுகள் திருப்தி அளித்தன என்று தெரிவித்தோம்.

என்றாலும், இம் முடிவு எனக்குக் கொஞ்சமும் மகிழ்ச்சை உண்டாக்க வில்லை. ஒவ்வொரு சத்தியாக் கிரகப் போராட்டமும் கண்ணியத்தோடு முடிவுறுதலே முறையாகும். ஆனால் இம்முடிவில் அக் கண்ணியம் காணப்படவில்லை. கலெக்டர் சமரசம் காணுவதில் தாம் எதுவும் செய்யாதவர்போல், காரியங்களை நடத்திச் சென்றார். ஏழைகள் வரிவசூல் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் எவரும் அதன் நன்மையை அடையவில்லை. ஏழைகள் யார் என்று நிர்ணயிப்பது மக்களுடைய உரிமையாகும். எனினும், அவ்வுரிமையை அவர்களால் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை. அவ்வுரிமையை பயன் செய்து கொள்ள அவர்களுக்குப் போதிய வலிமை இல்லாதது கண்டு வருத்த முற்றேன். ஆதலால், இம் முடிவு சத்தியாக்கிரஹத்தின் வெற்றியாகக் கொண்டாடப் பட்டாலும், முழு வெற்றிக்குரிய முக்கிய அம்சங்கள் அதில் இல்லாமையால் நான் அது குறித்து உற்சாகம் கொள்ளுவதற்கில்லை.

ஆயினும் இப்போராட்டத்தினால் மறைமுகமான பல பயன்கள் ஏற்படாமல் போகவில்லை. அவற்றை இன்னும் நாம் காணலாம்; அநுபவித்தும் வருகிறோம். கேதா சத்தியாகிரஹம், குஜராத் விவசாயிகளிடை விழிப்பை உண்டாக்குவதற்கு ஆரம்பமாக இருந்தது; அவர்க ளுடைய உண்மையான அரசியல் கல்விக்கும் அதுவே ஆரம்பமாகும். பட்டாதார் விவசாயிகளும் என்றும்

மறவா வண்ணம் தங்கள் வலிமையை உணரலானார்கள். மக்களுடைய விமோசனம் அவர்கள் கையிலேயே இருக்கிறது என்பதும், துன்பம் அனுபவிக்கவும், தியாகம் செய்யவும் அவர்களுக்குள்ள ஆற்றலைப் பொறுத்துளது என்பதுமான படிப்பினை மக்கள் உள்ளத்தில் என்றும் அழியா வண்ணம் பதிவுற்றது. கேதாப் போராட்டத்தின் மூலமாக குஜராத் மண்ணில் சத்தியாகிரஹம் உறுதியாக வேரூன்றியது.

பாகம் XIV

பட்டாளத்திற்கு ஆள் சேர்த்தல்

74

பட்டாளத்திற்கு ஆள் சேர்த்தல்

ஐரோப்பாவில் நாசகரமான யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, கேதா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது ஒரு நெருக்கடி நிலை நேரவே, இராஜப் பிரதிநிதி டில்லியில் ஒரு போர் மாநாட்டுக்குப் பற்பல தலைவர்களை அழைத்திருந்தார். நானும் அம்மாநாட்டுக்கு வருமாறு வற்புறுத்தப்பட்டிருந்தேன்.

அழைப்பிற்கு இணங்க நான் டில்லி சென்றேன். ஆனாலும் அம்மாநாட்டில் கலந்துகொள்ள எனக்கு ஆட்சேபங்கள் இருந்தன; அவற்றில் முக்கியமானது, அம்மாநாட்டிலிருந்து அலிசோதரர்கள் போன்ற தலைவர்களை விலக்கி இருந்ததாகும்.

இந்துக்களுக்கும் முசல்மான்களுக்கும் இடையே உண்மையான நேயம் கிடையாது என்பது தென்னாப்பிரிக்காவில் வெகு முன்னதாகவே நான் தெரிந்து கொண்டிருந்தேன். ஒற்றுமைக்கு இடைநிற்கும் தடைகளை நீக்குவதில் நான் எந்த ஒரு வாய்ப்பினையும் கூட எக்காலும் நழுவ விட்டதில்லை. தன்மானத்திற்கு ஊறு விளையும் முறையிலேயோ, அல்லது முகமன் கூறியோ யாரையும் இணக்குவது என் இயல்பு அன்று. ஆனால், எனது தென்னாப்பிரிக்கா அநுபவங்களிலிருந்து, இந்து—முஸ்லீம் ஒற்றுமைப் பிரசினையில்தான், என்னுடைய அஹிம்சை கடுமையான சோதனைக்கு உள்ளாகும் என்பதறிந்திருந்தேன்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியபொழுது இவ்விஷயமாக இவ்வளவு திடமான கருத்துக்கள் நான்

கொண்டிருந்தபடியினுல், அலிசோதரர்களுடைய உற வில் பெருமதிப்பு வைத்திருந்தேன். ஆனல், நெருங்கிய தொடர்பு ஏற்படுமுன் அவர்கள் பிரிக்கப்பட்டனர். மௌலான முகமது அலி, பீட்டுல் சிண்டுவாடா சிறைச் சாலைகளிலிருந்து, சிறை அதிகாரிகள் அநுமதி கொடுத்த போதெல்லாம் எனக்கு நீண்ட கடிதங்கள் எழுதி வந்த னர். அச்சோதரர்களைச் சந்திக்க விண்ணப்பித்தேன்; ஆனல் பயன் ஏதும் ஏற்படவில்லை.

கிலாபத் பிரசினை சம்பந்தமாக நான் மேற்கொண்ட முறையை நண்பர்களும் ஏனையோரும் கண்டனம் செய் தார்கள். ஆயினும், அதனை மாற்றவோ, முஸ்லிம்களு டன் என்னுடைய ஒத்துழைப்பைக் குறித்து வருந்தவோ காரணம் யாதும் இருப்பதாக நான் காணவில்லை. இதே மாதிரிச் சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டால் நான் அதே முறையைத்தான் கையாளுவேன்.

எனவே நான் டில்லிக்குச் சென்றபோது, இராஜப் பிரதிநிதியிடம் முஸ்லீம் கட்சியை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று முழு உத்தேசத்துடன் சென்றேன். கிலாபத் பிரசினை பின்னல் உருவாகிய அளவு, அப் பொழுது அது அவ்வளவு பிரமாதமாக இல்லை.

ஆனல் நான் டில்லி சேர்ந்தபொழுது, நான் மாநாட் டிற்குச் செல்லத் தடையாக இருக்கக்கூடிய இன்னெரு சங்கடம் ஏற்பட்டது. தீனபந்து ஆண்ட்ரூஸ், போர் மாநாட்டில் நான் கலந்துகொள்ளுவதின் தார்மீகத்தைப் பற்றி ஒரு கேள்வியைக் கிளப்பினர். இங்கிலாந்துக்கும் இதாலிக்கும் இரகசிய உடன்படிக்கைகள் ஏற்பட்டிருப் பது சம்பந்தமாக ஆங்கிலப் பத்திரிகைகளில் நடந்து வரும் விவாதத்தைப் பற்றி அவர் என்னிடம் சொன்னர். இங்கிலாந்து இன்னெரு ஐரோப்பிய வல்லரசுடன் இர கசிய உடன்படிக்கைகள் செய்துகொண்டால், நான் எப் படி அந்த மாநாட்டில் கலந்துகொள்ள முடியும்? என்று ஆண்ட்ரூஸ் கேட்டார். அவ் உடன்படிக்கைகளைப் பற்றி

எனக்கு யாதொன்றும் தெரியாது. தீனபந்து ஆண்ட்ரூஸின் சொல்லே எனக்குப் போதும். ஆகவே, நான் மாநாட்டில் கலந்துகொள்ளத் தயங்குவதை விளக்கி செம்ஸ்போர்டு பிரபுவுக்குக் கடிதம் எழுதினேன். தம்மிடம் அது குறித்து நேரில் விவாதிக்குமாறு அவர் என்னை அழைத்தார். அவரோடும், அவரது அந்தரங்கச் செயலாளர் திரு. மாப்பே உடனும் நீண்ட விவாதம் நிகழ்த்தினேன். அதன் விளைவாக மாநாட்டில் கலந்துகொள்ள ஒத்துக்கொண்டேன்; இராஜப்பிரதிநிதியினுடைய வாதத்தின் சாராம்சமாவது :—"ஆங்கிலேய மந்திரிபை செய்யும் ஒவ்வொன்றும் இராஜப்பிரதிநிதிக்குத் தெரியும் என்று நிச்சயமாக நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆங்கில அரசாங்கம் தவறே செய்யாது என்று நான் சொல்லவில்லை; யாரும் சொல்லவில்லை. ஆனால், மொத்தத்தில் சாம்ராஜ்யம் நலம் செய்தற்குரிய ஒரு சக்தியாக இருந்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொண்டால், ஆங்கிலேயருடைய உறவினால், மொத்தத்தில், இந்தியா நன்மை அடைந்திருக்கின்றது என்று நீங்கள் நம்பினால், இந்த நெருக்கடியான நேரத்தில் சாம்ராஜ்யத்திற்கு உதவ வேண்டியது ஒவ்வொரு இந்தியக் குடியின் கடமை என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்களல்லவா? இரகசிய உடன்படிக்கைகள் பற்றி ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதி இருப்பதை நானும் படித்துள்ளேன். சஞ்சிகைகள் சொல்லுவதைத் தவிர அதிகமாக வேறொன்றும் எனக்குத் தெரியாது என்று உறுதி கூறுகிறேன். மேலும் பத்திரிகைகள் அடிக்கடி கயிறு திரிப்பதும் உங்களுக்குத் தெரியும். வெறும் பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இம்மாதிரி நெருக்கடியான சமயத்தில் நீங்கள் சாம்ராஜ்யத்திற்கு உதவி புரிய மறுக்கலாமா? போர் முடிந்த பிறகு விருப்பம்போல் எந்தத் தார்மிகப் பிரசினைகளையும் நீங்கள் கிளப்பி எங்களைக் கேட்கலாம்; ஆனால் இன்று அது செய்யவேண்டாம்."

இவ்வாதம் புதியதன்று. ஆனால் அது சொல்லப் பட்ட முறையும் நேரமும் அது எனக்குப் புதிதாகத் தோன்றும்படி செய்தது. நான் மாநாட்டில் கலந்து கொள்ள ஒத்துக்கொண்டேன். முஸ்லிம் கோரிக்கை களைப் பற்றி நான் இராஜப்பிரதிநிதிக்குப் பின் ஒரு கடிதம் எழுதவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே போர் மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். பட்டாளத்திற்கு ஆட் சேர்க்கும் தீர்மானத்தை நான் ஆதரிக்க வேண்டும் என்று இராஜப் பிரதிநிதி மிக ஆர்வமாக இருந்தார். நான் ஹிந்தி—ஹிந்துஸ்தானியில் பேசுவதற்கு அநுமதி கேட்டேன். இராஜப்பிரதிநிதி என் வேண்டுகோளுக்கு இணங்கினார். ஆனாலும் நான் ஆங்கிலத்திலும் பேசவேண்டும் என்று யோசனை கூறினார். எனக்குப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நான் ஒரே ஒரு வாக்கியமே பேசினேன்: "என்னுடைய பொறுப்பை பூரணமாக உணர்ந்து, இத்தீர்மானத்தை ஆதரிக்கிறேன்." என்று மட்டும் சொன்னேன்.

ஆள் திரட்டுவதில், கேதாவில் தவிர நான் வேறு எங்கே ஆரம்பிக்க முடியும்? அதில் முதல் ஆட்களாகச் சேர்வதற்கு என்னுடைய சக ஊழியர்களைத் தவிர வேறு யாரை அழைக்க முடியும்? எனவே நாதியாத் வந்து சேர்ந்ததும், வல்லபாயுடனும் மற்ற நண்பர்களுடனும் கலந்து பேசினேன். அவர்களில் சிலருக்கு இவ்யோசனை எளிதே பிடிக்கவில்லை. யோசனை பிடித்தவர்களுக்கும், அதன் வெற்றியைப் பற்றிச் சந்தேகம் இருந்தது. அரசாங்கத்துக்கும், நான் வேண்டுகோள் விடுக்க நினைத் திருந்த வகுப்பாருக்கும் இடையில் அன்னியோன்ய பாவம் கிடையாது. அரசாங்க அதிகாரிகளிடம் அவர்கள் அடைந்த கசப்பான அநுபவங்கள் இன்னும் அவர்கள் மனதில் அப்படியே மறவாமல் இருந்தன.

ஆயினும் வேலையைத் தொடங்கலாம் என்று சொன்னார்கள். நான் வேலையை ஆரம்பித்த உடன்

என் கண்கள் திறந்தன. எனது நந்நம்பிக்கைக்கு ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டது. வரி இயக்கத்தின் போது மக்கள், தங்கள் வண்டிகளை வாடகை இல்லாமல் இலவசமாகக் கொடுக்க முன் வந்தனர்; ஒரு தொண்டரே தேவையானபோது இருவர் ஓடி வந்தனர். ஆனல், இப்பொழுதோ வாடகைக்குக்கூட வண்டி கிடைப்பது சிரமமாக இருந்தது. தொண்டர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆனலும் நாங்கள் அதைரியம் அடைந்து விடவில்லை. வண்டிகளை நாடாமல் கால் நடையாகவே செல்லுவோம் என்று தீர்மானித்தோம். இவ்வண்ணம் தினந்தோறும் நாங்கள் 20 மைல் நடக்கவேண்டி இருந்தது. வண்டிகளே கிடைக்காதபோது, மக்கள் எங்களுக்கு உணவு கொடுப்பார்கள் என்று எதிர் பார்ப்பது அறியாமை. மேலும், உணவு அவர்களிடம் கேட்பதும் முறையல்ல. எனவே ஒவ்வொரு தொண்டரும் உணவைக் கையில் எடுத்துச் செல்லவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அது கோடை காலமாதலின், படுக்கையும் போர்வையும் தேவை இல்லை.

நாங்கள் போன இடங்களில் எல்லாம் பொதுக் கூட்டம் போட்டோம். ஜனங்கள் வந்திருந்தார்கள். ஆனல் ஒருவர் இருவர்கூடச் சைனியத்தில் சேர முன் வரவில்லை. "நீங்கள் அஹிம்சாவாதி ஆயிற்றே; எப்படி எங்களைத் துப்பாக்கி தூக்கச் சொல்லுகிறீர்கள்?" "எங்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அரசாங்கம் இந்தியாவுக்கு என்ன நன்மை செய்திருக்கிறது?' இவையும், இனைய கேள்விகளும் எங்களிடம் கேட்கப்பட்டன.

ஆனலும் எங்களுடைய நிதானமான வேலை பலன் தர ஆரம்பித்தது. ஏராளமான பெயர்கள் பதிவாயின. முதல் கோஷ்டியை அனுப்பியதும், மேலும் ஒழுங்காக ஆட்கள் அனுப்பிக்கொண்டிருக்க முடியும் என்று தோன்றியது. சேர்ந்த ஆட்களை எங்கே இருக்கச்

செய்வது என்பது பற்றிக் கமிஷனரோடு கலந்து பேசத் தொடங்கினேன்.

ஒவ்வொரு பகுதியிலும் கமிஷனர்கள், டில்லியில் நடைபெற்றதைப் போல் மாநாடு கூட்டினார்கள். அது மாதிரிக் குஜராத்தில் ஒன்று நடந்தது. நானும் என் சக ஊழியர்களும் அதற்கு அழைக்கப்பட்டிருந்தோம். நாங்கள் அதற்குச் சென்றிருந்தோம். டில்லி மாநாட்டை விட, எனக்கு இங்கு இடமே இல்லை என்று உணர்ந்தேன். கேவலம் அடிமை நிலையில் தலை வணங்கும் அச் சூழ்நிலையில், நான் மிகவும் வேதனை உற்றேன். நான் கொஞ்சம் நீளமாகப் பேசினேன். அதிகாரிகளை மகிழ் விக்கக்கூடிய தொன்றும் நான் சொல்லுவதற்கில்லை; ஆனால் ஒன்றிரண்டு கடுமையான விஷயங்களைச் சொல்லவேண்டி இருந்தது.

மக்களைப் பட்டாளத்தில் சேர்ந்து கொள்ளுமாறு நான் துண்டுப் பிரசுரங்கள் விடுத்தேன். அவற்றில் நான் எழுதிய வாதங்களில் ஒன்று கமிஷனருக்குப் பிடிக்கவில்லை : " இந்தியாவின் ஆங்கில அரசாங்கத்தின் பல அநீதிகளில் ஒன்று தேச முழுவதையும் நிராயுத பாணிகளாக ஆக்கியதே மிகவும் கறுப்பானது என்று சரித்திரம் கூறும். ஆயுதச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டுமானால், ஆயுதங்களை உபயோகிக்க நாம் படித்துக்கொள்ள வேண்டுமானால், இதோ பொன்னான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. மத்தியதர வகுப்பார், இச் சோதனை வேளையிலே, அரசாங்கத்திற்கு உதவிபுரிய முன் வருவார்களானால், அரசாங்கத்தின் அவநம்பிக்கை மறைந்து, ஆயுதத்தடை நீங்கப்பெறும்" என்று எழுதி இருந்தேன். கமிஷனர் இதைக் குறித்து, எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருப்பினும் நான் மாநாட்டில் வந்திருந்ததைப் பாராட்டியதாகக் கூறினார். நான் என்னுடைய கட்சியின் நியாயத் தன்மையைக் கூடியவரை கண்ணியத்தோடு எடுத்துரைக்க வேண்டி இருந்தது.

75

எமன் வாயிலே

பட்டாளத்திற்கு ஆள் திரட்டும் வேலையில் என் உடம்பை அநேகமாகப் பாழாக்கிவிட்டேன். அந்த நாட்களில் நிலக்கடலை வெண்ணெயும் எலுமிச்சம் பழமுமே என்னுடைய பிரதான உணவுகளாக இருந்தன. அளவுக்கு மீறி வெண்ணெயைச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளமுடியும் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், அவ்வாறு நான் அதை அதிகமாகச் சாப்பிட்டேன். அது எனக்கு இலேசான வயிற்றளைச்சலை உண்டாக்கியது. இதைப்பற்றி நான் ஒன்றும் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. இடையிடையே நான் ஆசிரமத்திற்குச் சென்றுவரும் வழக்கம் போலே, அன்று மாலை ஆசிரமத்திற்குச் சென்றேன். அக்காலங்களில் நான் மருந்தே அருந்துவது கிடையாது. ஒரு வேளை பட்டினி போட்டால், குணமாகிவிடும் என்று நினைத்தேன். உண்மையில், மறுநாட் காலையில் நான் உணவு அருந்தாமல் இருந்ததால், அநேகமாக நோயின் கஷ்டம் நீங்கியது. ஆயினும், நோய் அறவே நீங்கவேண்டுமானால், எனது பட்டினியை நீடிக்க வேண்டும் என்றும், அப்படி ஏதாவது சாப்பிடுவதாயினும் பழரசத்தைத் தவிரப் பிறிதொன்றும் அருந்தக் கூடாது என்றும் அறிவேன்.

அன்று ஏதோ ஒரு திருவிழா. அன்று நண்பகல் உணவு வேண்டாம் என்று நான் கஸ்தூரிபாவிடம் சொல்லி இருந்தபோதிலும், அவள் எனக்கு ஆசை காட்டினாள்; நானும் அதற்கு இரையானேன். பால் அல்லது பாலினால் ஆகும் பொருள்களை அருந்துவது இல்லை என்று நான் நோன்பு கொண்டிருந்தபடியால், அவள் அன்று எனக்காகத் தனியாக நெய்க்குப் பதிலாக எண்ணெயைச் சேர்த்து ஒரு இனிப்புக் கோதுமைஅல்வா செய்து வைத்திருந்தாள்; எனக்காகப் பாத்திரம் நிறைய

பருப்புச் சுண்டலும் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். இவைகள் எனக்கு மிகவும் பிடித்தவைகள். எனவே அவைகளைத் தாராளமாகச் சாப்பிட்டேன். கஸ்தூரி பாவை மகிழ்விப்பதற்கும், என்னுடைய சுசி ருசியைத் திருப்தி செய்துகொள்வதற்கும் போதிய அளவு, உடம்புக்கு ஊறுவிளைவிக்காமல், சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று நம்பினேன். ஆனால் அந்தப் பிசாசு சரியான ஒரு சந்தர்ப்பத்திற்காகவே காத்துக் கொண்டிருந்தது போலும்! மிகக் குறைவாக அருந்துவதற்குப் பதிலாக வயிறார உண்டேன். எமதூதர்களை அழைப்பதற்கு இதுவே போதுமானது. உணவு அருந்தி ஒரு மணி அளவிற்குள் வயிற்றழைச்சல் மிகக் கடுமையாகி விட்டது.

நண்பர்கள் அனைவரும் ஆழ்ந்த கவலையுற்று என்னைச் சூழ்ந்துகொண்டனர்.

அவர்கள் காட்டிய அன்புக்கும் கவனத்துக்கும் அளவே இல்லை. ஆனால், அவர்களால் என்னுடைய வலியை நிவர்த்திக்க முடியவில்லை. என்னுடைய பிடிவாதமும் இதற்குத் துணை செய்தது. நான் மருத்துவ உதவி அனைத்தும் மறுத்தேன். மருந்து அருந்த மறுத்தேன்; என்னுடைய மடமைக்குரிய தண்டனையை அநுபவிக்கவே விரும்பினேன். எனவே, அவர்கள் செயலற்றுக் கலக்கமுற்றுப் பார்த்துக்கொண்டு வாளா இருந்தார்கள். இருபத்துநான்கு மணி நேரத்தில், நான் முப்பது நாற்பது தடவை மலங்கழித்திருப்பேன். முதலில், பழரசம்கூட அருந்தாது, நான் பட்டினி கிடந்தேன். பசியே இல்லை. என் உடம்பு இரும்பைப் போல் உறுதி கொண்டது என இவ்வளவுநாளும் நான் எண்ணி இருந்தேன். ஆனால் இப்பொழுது அவ்வுடல் ஒரு களிமண் கட்டியைப் போல் ஆகி இருப்பதைக் காணலுற்றேன். நோயை எதிர்க்கும் சக்தியை எல்லாம் அது இழந்துவிட்டது. டாக்டர் கானுகோ வந்து, மருந்து

அருந்துமாறு என்னிடம் வேண்டினர். நான் மறுத்தேன். அவர் ஊசிபோடுவதாகச் சொன்னர். அதையும் நான் மறுத்தேன். ஊசி போடுவதைப் பற்றி அந்த நாளில் எனக்கிருந்த அறியாமை நகைத்தர்க்குரியது. ஊசி மருந்து என்பது ஏதோ பிராணிகளின் நிணநீர் ஆக இருக்கவேண்டும் என்று நம்பினேன். ஆனல் டாக்டர் எனக்குக் கொடுக்க விரும்பிய ஊசிமருந்து ஒரு மூலிகையின் ரசம் என்பது எனக்குப் பின்னல் தெரியவந்தது. ஆனல், பயன்பெற முடியாதபடி, அந்த அறிவு உரிய காலம்கடந்து பிறகே வந்தது. வயிற்ருேட்டம் இன்னும் போய்க் கொண்டிருந்தது. நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். இக்களைப்பு, எனக்குக் காய்ச்சலையும் பிதற்றலையும் உண்டாக்கியது. நண்பர்கள் மேலும் அதிகமாக பயமடைந்துப் பல வைத்தியர்களை அழைத்தார்கள். ஆனல், வைத்தியர்கள் சொன்னதைக் கேளாத ஒரு நோயாளியை வைத்துக் கொண்டு, என்னதான் செய்யமுடியும்?

வைத்தியர்கள் பலரும் ஏராளமான யோசனைகளைச் சொன்னர்கள்; ஆனல் எதையும் அருந்துவதற்கு என் மனதைச் சரிப்படுத்தமுடியவில்லை. பால் அருந்தாமை விரதத்தைக் கைவிடாமலேயே, மாமிசரசம் அருந்துமாறு இரண்டு மூன்று பேர் யோசனை சொன்னர்கள்; அவ்யோசனைக்கு ஆயுர்வேதத்திலிருந்து ஆதாரம் காட்டினர்கள். ஒருவர் முட்டை சாப்பிடுமாறு பலமாகச் சிபாரிசு செய்தார். இவர்கள் அனைவருக்கும் நான் "முடியாது" என்னும் ஒரே ஒரு மறுமொழிதான் சொன்னேன்.

என்னளவில், உணவு, சாஸ்திரங்களின் ஆதாரங்களைக் கொண்டு முடிவுகட்ட வேண்டிய விஷயம் அன்று. புற அதிகாரங்களைப் பொறுத்தனவாக இல்லாத கோட்பாடுகளால் என் வாழ்க்கை இயக்கப்பட்டுவருகிறது. அவ்வாழ்க்கை முறையோடு, இவ்வுணவு விஷயமும் பிணைக்கப்பட்டுள்ளது. அக் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு

நான் வாழ விரும்பவில்லை. என் மனைவி, குழந்தைகள், நண்பர்கள் விஷயத்தில் இரக்கமின்றி நான் வற்புறுத்திய ஒரு கொள்கையை என் விஷயத்தில் நான் எப்படிக் கைவிட முடியும்?

இவ்வாறு, என் வாழ்வில் நீடித்த எனது முதல் நீண்டகால நோய், எனது கொள்கைகளை ஆராயவும் அவற்றைச் சோதிக்கவும் சிறந்த தொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. ஒரு நாள் இரவு நான் என்னைக் கைவிட்டு நம்பிக்கையை இழந்தேன். நான் மரணத் தறுவாயில் இருப்பதாகத் தோன்றியது.

இவ்வாறு நான் மரணத்தை ஒவ்வொரு பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டு படுத்துக் கிடந்த வேளையிலே, ஒருநாள் டாக்டர் தல்வால்கர், ஒரு அபூர்வமான மனிதரோடு அங்கு வந்தார். அவர் மகாரஷ்டிரத்தைச் சேர்ந்தவர். அவர் புகழ்பெற்றவரல்லர். ஆனால் அவரைப் பார்த்த உடனேயே அவரும் என்னைப் போலவே ஒரு கிறுக்கு என்பதைக் கண்டு கொண்டேன். அவர் தன்னுடைய சிகிச்சையை எனக்குச் செய்ய அங்கு வந்திருந்தார். பனிக்கட்டியை உடம்பு முழுவதும் போடுவதே அந்தச் சிகிச்சையாகும். அச் சிகிச்சையினால் என் உடம்பில் ஏற்பட்ட குணத்தைப்பற்றி அவர் கூறியதை நான் ஆமோதிக்க முடியாவிட்டாலும், எனக்கு அது ஒரு புதிய நம்பிக்கையும், புதிய சக்தியையும் நிச்சயமாக ஊட்டியது. உள்ளத்தின் நிலை உடம்பில் பிரதிபலிப்பது இயற்கைதானே! எனக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. இப்பொழுது எனது உடல்நிலையில் ஏற்பட்டிருந்த அபிவிருத்தி பொதுக் காரியங்களில் நான் அக்கறை கொள்ளப் போதுமானதாக இருந்தது.

சங்கர்லால் பாங்கர் இப்பொழுது எனது உடலைக் கவனிக்க ஒரு மேற்பார்வையாளராகத் தன்னையே ஏற்படுத்திக் கொண்டார்; டாக்டர் டலாலைக் கலந்து கொள்ளுமாறு என்னை வற்புறுத்தினர். அவ்வாறே

டாக்டர் டலால் வரவழைக்கப்பட்டார். உடனடியாக முடிவுகள் செய்யும் அவருடைய ஆற்றல் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

அவர், "நீங்கள் பால் அருந்தினால் அன்றி உங்கள் உடம்பை நான் உறுதிப்படுத்த முடியாது. பால் குடிப்ப தோடு கூடவும் இரும்பும் 'ஆர்சனிக்'கும் ஊசிமூலம் ஏற்றினால், உங்கள் உடம்பை முன்போல நன்றாகத் திடம்பெறச் செய்வதற்கு நான் உத்தரவாதம்" என்றார்.

"நீங்கள் ஊசிபோடலாம். ஆனால் பால் விஷயம் வேறு. பால் அருந்துவதில்லை என்று நான் விரதங் கொண்டுள்ளேன்" என்றேன்.

"உங்களுடைய விரதம் எத்தன்மையது"—என்று டாக்டர் விசாரித்தார்.

நான் வரலாறு முழுவதையும் விரதத்திற்கான காரணத்தையும் சொன்னேன். பசுவும் எருமையும் 'பூக்கா' என்ற முறைக்கு உள்ளாக்கப்படுவதை நான் அறிந்தபின், பாலில் எப்படி எனக்குப் பலமான வெறுப்பு ஏற்பட்டது என்பதையும் கூறினேன். மேலும், பால் மனிதனுடைய இயற்கையான உணவு அன்று என்பது என் நெடுநாட் கருத்து. எனவே அதன் உபயோகத்தை அறவே தவிர்த்தேன். கஸ்தூரிபா, என்படுக்கைக்கு அருகில் இவ் உரையாடல் அனைத்தையும் கேட்டுக் கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

"அப்படியானால், வெள்ளாட்டுப் பாலை அருந்த நிச்சயமாக உங்களுக்கு எவ்வித ஆட்சேபமும் இருக்க முடியாதே" என்று கஸ்தூரிபா இடையில் கூறினாள்.

டாக்டரும் அதைப் பற்றிக் கொண்டார்: "நீங்கள் வெள்ளாட்டின் பாலைச் சாப்பிட்டால், அதுவே எனக்குப் போதும்" என்றார்.

நான் இணங்கினேன். சத்தியாக்கிரகப் போரை ஏற்று நடத்தவேண்டும் என்ற ஆழ்ந்த ஆர்வம், நான்

---

* arsenic - ஆர்சனிக், ஒரு நஞ்சு

உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கி இருந்தது. எனவே, விரதத்தின் எழுத்தை மட்டும் கடைப்பிடிப்பதில் திருப்தி அடைந்துகொண்டு அதன் உட்பொருளைக் கைவிட்டேன். நான் விரதம் எடுத்த போது, பசுவின் பாலும் எருமைப் பாலுமே என் மனதில் இருந்தனவாலும் இயல்பான உட்பொருளின்படி, அது எல்லா மிருகங்களின் பாலையே குறிப்பதாகும். மேலும், பால் மனிதனுக்கு இயற்கையான உணவு அன்று என்று நான் கருதிக் கொண்டிருக்கும் வரை, பாலை நான் உபயோகிப்பது சரியுமாகாது. என்றாலும், இவை அனைத்தும் தெரிந்துகொண்ட நான் ஆட்டுப்பால் அருந்தச் சம்மதித்தேன். வாழவேண்டும் என்ற விருப்பம் உண்மையினிடத்துள்ள பற்றுக்கோட்டை விட வன்மை மிகுதி உடையதாகி விட்டது. எனவே, முதல் முறையாக, உண்மை உபாசகன், சத்தியாக்கிரகப் போரை நடத்தவேண்டும் என்ற பேரார்வத்தின் காரணமாக, தனது புனிதமான குறிக்கோளை ஓரளவு கைவிடலானான். இச் செயலின் நினைவு இப்பொழுது கூட என் உள்ளத்தை அரித்து வேதனை தந்து வருகிறது. ஆட்டுப்பாலை விடுவதெப்படி என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஆசைகளுக்கெல்லாம் மிகவும் நுட்பமானதான தொண்டுபுரிய வேண்டும் என்னும் ஆசை இன்னும் என்னைப் பற்றிக் கொண்டிருக்கிறது; அதனிலிருந்து இன்னும் என்னால் என்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

நான் வெள்ளாட்டுப்பால் அருந்த ஆரம்பித்த பின்னர், டாக்டர் டலால் ஆசனப் பிளவுகளைச் சரிப்படுத்தச் சத்திர சிகிச்சை செய்தார். அது வெற்றியாக முடிந்தது. நான் குணமடைய ஆரம்பித்ததும், ஆண்டவன் எனக்கு வேலை தயாராக வைத்திருந்த படியால், வாழவேண்டும் என்ற ஆசை மீண்டும் எழுவதாயிற்று.

பாகம் XV

ரௌலட் சட்டம்—அரசியல் பிரவேசம்

76

ரௌலட் சட்டம்

இவ்வாறு நான் குணமடைந்து வரும்போது, ரௌலட் கமிட்டியின் அறிக்கையைத் தற்செயலாகப் பத்திரிகைகளில் படிக்க நேர்ந்தது. அவ் அறிக்கை அப்பொழுது தான் வெளியிடப்பட்டிருந்தது. அதன் சிபாரிசுகள் என்னைத் திடுக்குறச் செய்தன. இவ் விஷயத்தில் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, சங்கர்லால் பாங்கரும், உமார் சோபானியும் என்னிடம் வந்து யோசனை கூறினார்கள். ஒரு மாதத்திற்குள் நான் ஆமதாபாத் சென்றேன். வல்லபாய் அநேகமாக தினந் தோறும் என்னை வந்து பார்ப்பது வழக்கம். அவரிடம் என்னுடைய கருத்துக்களைக் கூறினேன். "ஏதாவது செய்து தீரவேண்டும்" என்று அவரிடம் சொன்னேன். "இந்த நிலையில் நாம் என்ன செய்யமுடியும்? என்று அவர் பதிலுக்கு கேட்டார். நான் அதற்குக் கூறிய மறுமொழியாவது : "எதிர்ப்புப் பிரதிக்ஞையில் கையெழுத்துச் செய்ய ஒரு சிலரே முன் வந்தாலும் போதும். அதைப் பொருட் படுத்தாது, உத்தேசிக்கப்பட்ட மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுமானால், நாம் உடனே சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும். நான் இப்படி நோயுற்றுப் படுக்கையில் கிடக்காவிட்டால், நானே தன்னந்தனியனாய் அதனை எதிர்த்துப் போராடிப் பிறரையும் என்னைப் பின்பற்றுமாறு செய்திருப்பேன். எனது இப்போழ்தைய தீனமான நிலையில், இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளக் கொஞ்சமும் தகுதியற்றவன் எனத் தோன்றுகிறது."

இந்தப் பேச்சின் பயனுக, என்னேடு தொடர்பு கொண்டுள்ள சிலர்கள் அடங்கிய சிறிய கூட்டம் ஒன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது இருந்த ஸ்தாபனம் எதுவும், சத்தியாக் கிரஹம் போன்ற புதுமையான ஒரு ஆயுதத்தை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை எல்லாம் வீண் என்று தோன்றியபடியால், என்னுடைய யோசனையின்படி, சத்தியாக்கிரஹ சபை என்று ஒரு புதிய அமைப்பு நிறுவப்பட்டது.

ஆனுல் முதல் ஆரம்பத்தில் இருந்தே, அந்தச் சபை நீடித்து வாழாது என்று எனக்குத் தெளிவாகத் தெரிந் தது. உண்மையையும் அஹிம்சையையும் பற்றி நான் வற்புறுத்தி வந்ததை அதற்குள்ளாகவே சபையின் சில உறுப்பினர்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள் என் பதை நான் தெரிந்துகொள்ள முடிந்தது. இருந்தாலும், அதன் ஆரம்ப காலத்தில் எங்களுடைய புதிய முயற்சி தீவிரமாகவே நடந்தது. இயக்கமும் வேகமாக வலு வடைந்து வந்தது.

மசோதாச்சட்டமாக இன்னும் கெஜட்டில் பிரசுரமாக வில்லை. நான் மிகவும் பலவீனமாகவே இருந்தேன். ஆனுல் சென்னையிலிருந்து ஒரு அழைப்பு வந்ததும், அதனை ஏற்று நீண்டதூரப் பிரயாணம் செய்யத் துணிந்தேன். இராஜகோபாலாச்சாரி அப்பொழுதுதான் சேலத்தைவிட்டு, வக்கீல் தொழில் செய்யச் சென்னைக்கு வந்திருந்தார். போராட்டத்தின் திட்டங்களைப் பற்றி நாங்கள் தினந்தோறும் விவாதிப்போம். ஆனுல் பொதுக்கூட்டங்கள் நடத்துவதை தவிர, வேறு திட்டம் எதுவும் எனக்குப் புலப்படவில்லை. ரௌலட் மசோதா, இறுதியிலே சட்டமாக்கப்பட்டால், அதற்கு விரோதமாக சட்ட மறுப்பு எப்படிச் செய்வது என்பது எனக்கு விளங்கவில்லை. அரசாங்கம் அதற்கு உரிய வாய்ப்பை ஏற்படுத்தினுல்தானே சட்டத்திற்குக் கீழ்படிய மறுக்க

லாம். அப்படிச் செய்யாவிட்டால், மற்றச் சட்டங்களுக்குச் சாத்வீகமாகக் கீழ்படிய மறுப்பது மூலம் சட்ட மறுப்புச் செய்யலாமா? அப்படியானால், அதற்கு வரம்புக் கோடு எங்கே இழுப்பது? இவையும், இவைபோன்ற பல விஷயங்களும் எங்கள் விவாதத்தின் பொருள்களாக இருந்தன.

இவ்வாறு ஆலோசனைகள் நடந்துகொண்டிருக்கும் போது, ரௌலட் மசோதாச் சட்டமாக்கப்பட்டது என்ற செய்தி கிடைத்தது. அன்றிரவு இப்பிரசினையைச் சிந்தித்துக் கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்தேன். வழக்கத்திற்கு வெகு முன்பாகவே, அன்று அதிகாலையில் விழித்துக் கொண்டேன். தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் மத்தியிலுள்ள இடைநிலையில் இருந்தேன்; அப்போது, எனக்கு ஒரு கருத்துத் திடீரென உதித்தது. அது ஒரு கனவில் நிகழ்ந்ததைப் போலவே இருந்தது. அதிகாலையில் இராஜகோபாலாச்சாரியிடம் கதை முழுவதையும் சொன்னேன்.

'ஒரு பொது 'ஹர்த்தால்' செய்யுமாறு நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்' என்று நேற்று இரவு ஒரு கனவில் யோசனை உதயமாயிற்று. சத்தியாக்கிரஹம் தன்னைத் தானே தூய்மை செய்துகொள்ளும் ஒரு வழியேயாகும்; நம்முடைய போராட்டம் ஒரு புனிதமானது. எனவே அது ஆத்மத் தூய்மைக்குரிய செயலோடு தொடங்குவது முறையேயாகும். எனவே அந்த நாளில் இந்திய மக்கள் அனைவரும் தங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு, அந்நாளை விரதத்தோடும் பிரார்த்தனையோடும் கொண்டாடவேண்டும். முசல்மான்கள் ஒரு நாளைக்கு மேலாக நோன்பிருப்பதற்கில்லை. எனவே விரதத்தின் கால அளவு 24 மணியாகும். இவ்வேண்டுகோளுக்கு எல்லா மக்களும் இணங்க நடப்பார்களா, மாட்டார்களா என்று சொல்லுவது மிகவும் கஷ்டம்; ஆனால் பம்பாய், சென்னை, பீஹார், சிந்து ஆகிய மாகா

ணங்களைப் பற்றி எனக்கு நிச்சயம் உண்டு. இவ்விடங்கள் எல்லாம் ஹர்த்தாலைச் சரிவர நடத்தினுலே, நாங்கள் திருப்தி அடையக் காரணம் உண்டு.''

இராஜகோபாலாச்சாரி என்னுடைய யோசனையை உடனே ஏற்றுக்கொண்டார். பின்னர் மற்ற நண்பர்களுக்கு இதைச் சொன்னபோது அவர்களும் வரவேற்ருர்கள். நான் ஒரு சிறிய வேண்டுகோளைத் தயார் செய்தேன். முதலில் ஹர்த்தாலின் தேதி 1919-ம் ஆண்டு மார்ச் 30-ம் நாளென்று வைத்திருந்தது; ஆனுல் அதைப் பின்னர் ஏப்ரல் 6-ம் தேதிக்கு மாற்றப்பட்டது. இவ்வாறு மக்களுக்கு ஹர்த்தாலைப் பற்றிச் சிறிது கால அறிவிப்பே இருந்தது. வேலை விரைவிலே ஆரம்பிக்கவேண்டி இருந்ததால் நீண்டகால அறிக்கை தருவதற்கில்லை.

ஆனுல், எப்படி அது நடைபெறலாயிற்று என்று யாரே அறிவார்? அன்று இந்தியா முழுவதும், ஒரு மூலையிலிருந்து இன்னெரு மூலை வரை, நகரங்களும் கிராமங்களும் பரிபூரண ஹர்த்தாலை அனுஷ்டித்தன. அது மிக அற்புதமான ஒரு காட்சியாக இருந்தது!

77

மறக்கமுடியாத அந்த வாரம்

தென்னிந்தியாவில் சுருக்கமாகச் சுற்றுப்பயணம் செய்து விட்டு, நான் பம்பாய்க்குச் சென்றேன். பம்பாயில் ஹார்த்தல் பரிபூரண வெற்றி என்று சொல்லத் தேவைஇல்லை. சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக இரண்டு மூன்று விஷயங்கள் விவாதிக்கப் பட்டிருந்தன. பொது மக்களால் மீறுவதற்கு எளிதாக இருக்கக் கூடிய சட்டங்களை மட்டுமே சாத்வீகமாக மறுக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். உப்பு

வரி மக்களுக்கு மிகவும் பிடிக்காத தொன்று. அதை ரத்துச் செய்வதற்குக் கடந்த சில காலமாக ஒரு சக்தி வாய்ந்த இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே, உப்புச்சட்டங்களைப் பொருட்படுத்தாது மக்கள் கடல் நீரிலிருந்துத் தங்கள் சொந்த வீடுகளில் உப்புக் காய்ச்சலாம் என்று யோசனை கூறினேன். அரசாங் கத்தினுல் தடைவிதிக்கப்பட்ட நூல்களை விற்பது பற்றி யது என்னுடைய இன்னொரு யோசனை. என்னுடைய நூல்களில் 'இந்திய சுயராஜ்யம்' 'சர்வோதயம்' (ரஸ்கி னுடைய 'unto this last' நூலின் குஜராத்தி மொழி பெயர்ப்பு), என்னும் இரண்டு நூல்கள் ஏற்கெனவே தடைக்கு உள்ளா யிருந்தன. எனவே அவைகளை அச்சடித்துப் பகிரங்கமாக விற்பது சட்டமறுப்புச் செய் வதற்கு மிகச் சுலபமான வழி என்று தோன்றியது. எனவே போதுமான அளவு அந்நூல்கள் அச்சடிக்கப் பட்டன. உண்ணு நோன்பை முடித்த பிறகு நடக்கும் மாபெரும் பொதுக் கூட்டத்தின் முடிவில், அவைகளை விற்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தோம்.

அதன்படி 6-ம் தேதி மாலை, தொண்டர் கூட் டம் தடுக்கப்பட்ட இந்த நூல்களை விற்பதற்கு வெளிக்கிளம்பியது. விற்பனைப் பணத்தைச் சட்ட மறுப்பு இயக்கத்தை முன்னேற்றம் செய்வதற்காகவே உபயோகப் படுத்தப் படும். இந்நூல்கள், பிரதி ஒன்று நான்கணுவாக விலை வைக்கப்பட்டிருந்தது. ஆனுல் போட்டிருந்த விலைக்கே யாரும் என்னிடமிருந்து நூல் களை வாங்கினதாக ஞாபக மில்லை. ஏராளமான பேர் கள் நூல்களை வாங்குவதற்கு தங்கள் பைகளில் இருந்த காசுகள் அனைத்தையுயே சும்மா கொட்டினுர்கள். ஒரு பிரதியின் விலையாக ஐந்து ரூபாய் நோட்டுகள், பத்து ரூபாய் நோட்டுகள் அப்படியே பறந்து வந்தன. ஒரு பிரதியை நான் ஒருவருக்கு ஐம்பது ரூபாய்க்கு விற்ற ஞாபகம் இருக்கிறது.! தடைசெய்யப்பட்ட பிரசுரங்களை

வாங்குவோர் கைதி செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படுவதற்கு உள்ளாவர்கள் என்று, மக்களுக்கு ஒழுங்காக விளக்கப்பட்டது. ஆனால், அச்சமயத்தில் சிறைக்குப் போகும் அச்சம் எல்லாம் அவர்கள் உதறித் தள்ளி இருந்தார்கள். தடைசெய்யப்பட்ட நூல்களின் மறு பதிப்பு, அவைகளின் புதிய பதிப்பு என்று அரசாங்கத்தாரால் கருதப்பட்டது. எனவே அவைகளை விற்பது, சட்டப்படி ஒரு குற்றமாக வில்லை. இச் செய்தி எங்கும் ஏமாற்றத்தை அளித்தது.

7-ம் தேதி இரவு நான் டெல்லியை விட்டு அமிர்த சரசுக்குப் புறப்பட்டேன். 8-ம் தேதி மதுரா வந்து சேர்ந்ததும் நான் கைதிசெய்யப்படக் கூடும் என்ற வதந்தியை முதலாவதாகக் கேள்விப் பட்டேன். மதுராவுக்குப் பிறகு வண்டி நின்ற அடுத்த இடத்தில் ஆசாரியா கித்வானி என்னிடம் வந்து, நான் கைதியாவது நிச்சயம் என்ற செய்தியைத் திட்டமாகச் சொன்னதுடன், எனக்குத் தேவையானால் தனது சேவையைத் தரத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

ரயில் பால்வால் நிலையத்திற்குப் போய்ச் சேருமுன், எனக்கு எழுத்து மூலமாக ஒரு உத்திரவு கொடுக்கப்பட்டது. நான் பஞ்சாபு சென்றால், ஆங்கு அமைதிக்கு ஊறு விளையக் கூடும் ஆதலால், அம் மாகாணத்தின் எல்லைக்குள் நான் நுழையக் கூடாது என்று அதில் கண்டிருந்தது. என்னை வண்டியிலிருந்து இறங்கும்படி போலீசார் சொன்னார்கள். "ஒரு அவசரமான அழைப்பிற்கு இணங்கப் பஞ்சாபில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவேயன்றி அமைதியைக் குலைப்பதற்காக அல்ல, நான் அங்குச் செல்ல விரும்புவது. எனவே இந்த உத்திரவுக்கு இணங்கமுடியாமை பற்றி வருந்துகிறேன்" என்று சொல்லி இறங்க மறுத்தேன்.

பால்வால் ரயில் நிலையத்தில் என்னை ரயிலிருந்து கீழே இறக்கிப் போலீஸ் பாதுகாவலில் வைத்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் டெல்லியில் இருந்து ஒரு ரயில் வந்தது. ஒரு மூன்ரும் வகுப்பு வண்டியில் ஏற்றப் பட்டேன். போலீசாரும் கூடவந்தனர். மதுரா ரயில் நிலயம் அடைந்ததும், போலீஸ் நிலயத்திற்கு என்னைக் கூட்டிச் சென்றனர். ஆனல், என்னை அவர்கள் என்ன செய்யப் போகிருர்கள் என்ருே அல்லது அடுத்தபடி எங்கே கூட்டிப்போகப் போகிருர்கள் என்ருே எந்தப் போலீஸ் அதிகாரியாலும் எனக்குத் தெரிவிக்கக் கூட வில்லே. மறுநாட் காலே 4 மணிக்கு என்னை எழுப்பி, பம்பாய்க்குச் சென்று கொண்டிருந்த ஒரு சாமான் வண்டியில் என்னை ஏற்றினர்கள்.

நாங்கள் சூரத்தை அடைந்தோம். இங்கு மற்ருெரு போலீஸ் அதிகாரியிடம் நான் ஒப்படைக்கப் பட்டேன். நாங்கள் பம்பாய் போய்ச் சேர்ந்ததும் அவ் அதிகாரி, " நீங்கள் இப்பொழுது சுவாதீனமாய் விட்டீர்கள். ஆனல் மரைன்லயனில் * நீங்கள் இறங்கிவிட்டால் நல்லது. ரயிலே உங்களுக்காக அவ்விடம் நிறுத்தச் செய்கிறேன். கொலா * பாவில் கூட்டம் அதிகமாக இருக்கக்கூடும்" என்று சொன்னர். அவருடைய விருப்பத்திற்கு இணங்க எனக்கு மகிழ்ச்சிதான் என்று சொன்னேன். அவர் மகிழ்ச்சி அடைந்து எனக்கு நன்றி செலுத்தினர். அவ்வாறே நான் மரைன் லயனில் இறங்கினேன். என் நண்பர் ஒருவருடைய கார் அப்பொழுது அப்பக்கம் போய்க் கொண்டிருந்தது. அவ்வண்டியில் ஏறி நான் ரேவா சங்கர ஜாவேரியின் வீட்டிற்குச் சென்றேன். நான் கைதியான செய்தி மக்க ளுக்குக் கோபமூட்டி இருப்பதாகவும், அவர்களுக்கு வெறிபிடிக்கும் ஆவேசத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது என்றும் அந்த நண்பர் என்னிடம் சொன்னர். *பைதுன்னிக்கு அருகில் ஒவ்வொரு நிமிஷமும் கலகம்

---

* பம்பாய் நகரின் ஒரு பகுதி

உண்டாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே மாஜிஸ்டிரேட்டும், போலீசும் அவ்விடம் சென்றுள்ளார்கள்,'' என்று மேலும் அவர் சொன்னுர்.

நான் சங்கரின் வீட்டை அடைந்ததுமே உமார் சோபானியும், அநுசூயபென்னும் ஆங்கு வந்து நான் பைதுன்னிக்கு உடனே மோட்டாரில் செல்லவேண்டும் என்று சொன்னுர்கள். ''மக்கள் பொறுமையை இழந்து, மிகவும் ஆவேசத்தோடு இருக்கின்ருர்கள். எங்களால அவர்களேச் சாந்தப்படுத்த முடியவில்லே. நீங்கள் வந்தால்தான் அது முடியும்'' என்ருர்கள்.

நான் காரில் ஏறினேன். பைதுன்னிக்கு அருகில் ஒரு பெரிய கூட்டம் கூடி இருப்பதைக் கண்டேன். என்னேக் கண்டதும் மக்கள் மகிழ்ச்சியால் வெறிபிடித்தவர்கள் போலானுர்கள். உடனே ஒரு ஊர்வலம் கிளம்பியது. 'வந்தே மாதரம்,' 'அல்லாஹோ அக்பர்' என்ற முழக்கங்கள் ஆகாயத்தைப் பிளந்தன. பைதுன்னியில் குதிரைப் போலீஸ் படை ஒன்றைக் கண்டோம். மேலிருந்து செங்காமுட்டிகள் சரமாரியாகப் பொழிந்தன. நான் கூட்டத்தை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஆனுல் கல்மாரியிலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்வது முடியாதது போலிருந்தது. ஊர்வலம், அப்துல் ரஹமான் தெருவிலிருந்து வெளிக் கிளம்பி, கிராபோர்டு மார்க்கெட்டை நோக்கிப் போகப் போகும் சமயம், திடீரென்று ஒரு குதிரைப் போலீஸ்படை எதிர்ப்பட்டது. ஊர்வலம் கோட்டையை நோக்கிச் செல்லுவதைத் தடை செய்வதற்காகவே, அக்குதிரைப் படை அங்கு வந்தது. கூட்டம் மிக நெருக்கமாக இருந்தது. கூட்டம் அநேகமாக போலீஸ் வளேயத்தை ஊடுருவிச் செல்ல ஆரம்பித்தது. அம்மாபெருங் கூட்டத்தில், என்னுடைய குரல் காதிலே விழுவது என்பது இயலாத காரியம். இந்நிலேயில், குதிரைப் படைத் தலேமை அதிகாரி, கூட்டத்தைக் கலேக்குமாறு

தம்முடைய படைக்கு உத்திரவிட்டார். உடனே குதிரை வீரர்கள், தங்கள் ஈட்டிகளைச் சுழற்றிக்கொண்டு கூட்டத்தின் மேற் பாய்ந்தனர். ஒரு நிமிடம், நானும் காயப்படுவேன் என்று நினைத்தேன். ஆனால் என் பயத்திற்கு ஆதாரமில்லை. ஈட்டிவீரர்கள் எங்கள் கார்ப்பக்கம் வேகமாகத் தாண்டிச் சென்றபோது, ஈட்டிகள் எங்கள் மோட்டாரை இலேசாகத் தடவிக்கொண்டு சென்றன. கூட்டம் சின்னுபின்னமாயிற்று; மக்கள் ஒரே பெருங் குழப்பத்திற்குள்ளானார்கள். பின்னர் ஓட்டம்பிடிக்க ஆரம்பித்தனர். சிலர் காலடியில் மிதிக்கப்பட்டனர்; சிலர் படுகாயமுற்றனர். சிலர் நசுக்குண்டனர். பொங்கி எழும் அம்மக்கள் பெருங்கூட்டத்தில், குதிரைகள் உள் நுழைவதற்கு இடமே இல்லை; மக்கள் கலைந்துபோய்விட வழியுமில்லை. எனவே, ஈட்டிவீரர்கள் கண்ணைமூடிக் கொண்டுக் கூட்டத்தில் இடையே பாய்ந்தார்கள். அவர்கள் செய்தது இன்னதென்று அவர்களே பார்க்கமுடியுமா என என்னால் சிந்திப்பதற்கில்லை. இவை அனைத்தும் ஒரு பயங்கரக் காட்சியை அளித்தது.

இவ்வாறு கூட்டம் கலைக்கப்பட்டு, ஊர்வலத்தின் போக்கும் தடுக்கப்பட்டது. எங்கள் மோட்டார் மட்டும் மேலே செல்ல அநுமதிக்கப்பட்டது. நான் அதைக் கமிஷனருடைய அலுவலகத்தின் முன்னே நிறுத்திக்கீழே இறங்கிப் போலீசின் நடவடிக்கையைப் பற்றிப் புகார் செய்தேன்.

நாங்கள் வாதம் செய்துகொண்டே போனோம். நாங்கள் ஒத்துப்போவது இயலாத காரியம். மக்கள் அமைதியாக இருக்கும்படியாகக் கேட்டுக்கொள்வதற்காக நான் சௌபாதியில் ஒரு கூட்டம் போட்டுப் பேச உத்தேசிப்பதாக அவரிடம் கூறி விடைபெற்றுச் சென்றேன். கூட்டம் சௌபாத்தி மணல்பரப்பில் நடந்தது. அஹிம்சா தருமத்தின் கடமையைப் பற்றியும், சத்தியாக்கிரஹத்தின் வரம்புகளைப் பற்றியும் நான்

விரிவாகப் பேசினேன். "சத்தியாக்கிரஹம் சிறப்பாக உண்மையாளருக்கே உரிய கருவி. சத்தியாக்கிரஹி அகிம்சையைக் கடைப்பிடிப்பதாக விரதம் பூண்டுள்ளான். மக்கள் சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும், அகிம்சையைக் கடைப்பிடித்தாலன்றி, நான் பொது மக்கள் சத்தியாக்கிரஹம் நடத்த முடியாது."

ஆமதாபாதில் கலவரங்கள் நடந்ததான செய்தி அனுசூயாபென்னுக்கும் கிடைத்திருந்தது. அவளும் கைதி செய்யப்பட்டாள் என்ற வதந்தியை யாரோ கிளப்பி விட்டிருந்தார்கள். இவ்வதந்தியினால், ஆலைத் தொழிலாளிகள் வெறிகொண்டு, வேலைநிறுத்தம் செய்து, பலாத்காரச் செயல்கள் செய்தார்கள்; ஒரு சார்ஜண்டும் அடித்துக் கொல்லப்பட்டார்.

நான் ஆமதாபாதுக்குச் சென்றேன். நாதியாத் ரயில்வே நிலையத்திற்கு அருகில் தண்டுவாளங்களைப் பெயர்த்தெடுக்க முயற்சி செய்யப்பட்டதாகவும், வீரம்காமில் ஒரு அரசாங்க அதிகாரி கொலைசெய்யப்பட்டதாகவும், ஆமதாபாதில் இராணுவச்சட்டம் அமுலில் இருப்பதாகவும், நான் கேள்விப்பட்டேன். மக்கள் பீதி அடைந்திருந்தனர். அவர்கள் பலாத்காரச் செயலில் ஈடுபட்டிருந்தனர்; அதற்கு இப்பொழுது அவர்கள் வட்டியோடு கொடுக்கும்படி நேரிட்டுள்ளது.

கமிஷனர் திரு. பிரிப் என்பவரிடம் என்னைக் கூட்டிச் செல்ல ரயில் நிலையத்தில் ஒரு போலீஸ் அதிகாரி காத்துக்கொண்டிருந்தார். கமிஷனர் கோபாக்கினி நிலையில் இருந்ததைக் கண்டேன். அவரிடம் நான் சாந்தமாகப் பேசிக் கலவரங்கள் நடைபெற்றதற்கு என் வருத்தத்தைத் தெரிவித்தேன். இராணுவச்சட்டம் அநாவசியம் என்று நான் அவரிடம் யோசனை கூறினேன். அமைதியை நிலைநாட்டச் செய்யும் முயற்சிகள் அனைத்திலும் நான் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்தேன். சபர்மதி ஆசிர

மத்தின் மைதானத்தில் நான் ஒரு பொதுக்கூட்டம் நடத்த அவரிடம் அனுமதி கேட்டேன். அந்த யோசனை அவருக்குப் பிடித்திருந்தது. ஏப்ரல் 13-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று, அக்கூட்டம் நடைபெற்றது என்று நினைக்கிறேன். இராணுவச்சட்ட அமுல் அன்றோ, மறுநாளோ நீக்கப்பட்டது. கூட்டத்தில், மக்களுக்கு அவர்களுடைய தவறை அறிவுறுத்த முயன்றேன். கழுவாயாக* மூன்று நாள் பட்டினி நோன்பு நான் இருக்கப்போவதாகவும், மக்களும் அம்மாதிரி ஒரு நாள் பட்டினி நோன்பு இருக்கலாம் என்றும், பலாத்காரச் செயல் செய்தவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் அக்கூட்டத்தில் கூறினேன்.

எனது கடமை பகலொளிபோல் தெளிவாகத் தெரிந்தது. தொழிலாளிகளோடு என்நேரத்தில் பெரும்பகுதியைக் கழித்திருக்கிறேன்; அவர்களுக்குத் தொண்டு புரிந்திருக்கிறேன்; அவர்களிடம் நான் எதிர்பார்த்தது எவ்வளவோ. அத்தகையவர்கள், அக்கலகங்களில் பங்கு எடுத்திருந்தார்கள் என்பதை அறிய என்னால் தாங்க முடியாததாயிற்று. அவர்களுடைய குற்றங்களில் எனக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்தேன்.

நான் மக்களைக் குற்றத்தை ஒத்துக் கொள்ளும்படி யோசனை கூறியது போலவே, அரசாங்கத்திற்கும் அக்குற்றத்தை மாப்புச் செய்து விடும்படி யோசனை கூறினேன். ஆனால் இருவரும் என் யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை.

காலம் சென்ற சர் ராம்஭ாயும், மற்ற ஆமதாபாத் நகரவாசிகளும் என்னிடம் வந்து, சத்தியாகிரஹத்தை நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இவ்வேண்டுகோளுக்கு அவசியம் இல்லை; ஏனென்றால், மக்கள் அமைதியின் பாடத்தை நன்றாகப் படியாதவரைக்கும்

* கழுவாய் - பிராயசித்தம்

சத்தியாக்கிரஹத்தை நிறுத்தி வைப்பது என்று நான் ஏற்கெனவே முடிவு செய்திருந்தேன். அந்த நண்பர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றூர்கள்.

ஆனுல், இம் முடிவினுல், வருத்தமுற்ற சிலரும் இருந்தனர். எங்கும் அமைதி நிலவவேண்டும் என்று நான் எதிர்பார்த்துச் சத்தியாக்கிரஹம் தொடங்குவதற்கு அதை ஒரு முன் நிபந்தனையாக ஏற்படுத்துவேனுனுல், பொதுமக்கள் சத்தியாக்கிரஹம் என்றுமே சாத்திய மில்லை என்று அவர்கள் கருதினுர்கள். அவர்களோடு வேறுபாடு கொள்ளுவது எனக்கு வருத்தமாக இருந்தது. என்னுேடு உழைத்த நண்பர்கள், எவர்கள் அஹிம்சைக் குத் தன்னைத் தியாகம் செய்து கொள்வதற்கும் தயாராக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேனுே, அவர்கள் அஹிம்சையைக் கையாள முடியாவிட்டால், நிச்சயமாக சத்தியாக்கிரஹம் அசாத்தியமானதுதான். மக்களைச் சத்தியாக்கிரஹத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கூடிய வர்கள், அவர்களிடம் எதிர்பார்க்கும் இன்றியமையாத அளவிலேனும் மக்களை அகிம்சா எல்லைக்குள் வைக்க முடியவேண்டும் என்று உறுதியான கருத்துக் கொண் டிருந்தேன். இன்றும்கூட அதே கருத்தே கொண் டுள்ளேன்.

78

‘இமாலயத்தவறு’

ஆமதாபாத் கூட்டம் முடிந்த உடனேயே நான் நாதியாத் சென்றேன். ஆமதாபாதிலேயே, எனது தவறைப் பற்றி ஓரளவு மங்கலாக உணரத் தொடங்கி இருந்தேன். ஆனுல் நாதியாத்துக்கு வந்து அங்கே உள்ள நிலையை நேரிலே பார்த்ததோடு, கேதா மாவட்டத்தில் ஏராளமான மக்கள் கைதியான செய்திகளைக் கேள்விப்

பட்டபொழுது, கேதா மாவட்டத்திலும் மற்ற இடங்களிலும், உரிய பக்குவம் அடைவதற்கு முன்பே, மக்களைச் சட்ட மறுப்பில் இறங்கச் சொல்லி, ஒரு மகத்தான தவறைச் செய்துவிட்டேன் என்பது எனக்குத் திடீரெனப் புலனாயது. நான் இதைப்பற்றி அங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினேன். இவ்வாறு ஒத்துக்கொண்டது நான் ஏராளமான ஏளனத்துக்கு ஆளாகும்படியாயிற்று. ஆனால் அவ்வாறு ஒத்துக்கொண்டதைப் பற்றி என்றுமே நான் வருந்தியதில்லை. ஒருவன் தன்னுடைய குற்றங்களைப் பெரிதாகவும், பிறருடைய குற்றங்களைச் சிறிதாகவும் காணப் பெறுவானானால், அவனே இருவருடைய குற்றங்களின் அளவையும் நியாயமாக மதிப்பிடமுடியும். சத்தியாக்கிரஹியாக ஆக விரும்பும் ஒருவன், இவ்விதியை நேர்மையாகவும் மனப்பூர்வமாகவும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று நான் மேலும் நம்புகிறேன்.

இப்பொழுது அந்த இமாலயத் தவறு என்ன என்று பார்ப்போம். ஒருவன் சத்தியாக்கிரஹத்தைக் கையாளத் தகுதி யடைவதற்கு முன், இராஜாங்கச் சட்டங்களுக்கு மனதோடு மரியாதையாகக் கீழ்ப்படிந்து நடந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஒருவன் சமுதாயத்தின் சட்டங்களுக்குக் கிரமமாகக் கீழ்ப்படிந்து நடந்திருந்தால்தான், நியாயமும் நல்லவையுமான விதிகள் எவை, அநீதியும் அக்கிரமமும் ஆனவை எவை என்பதை முடிவு செய்யக்கூடியவனாகிறான். அப்பொழுதுதான், நன்றாக வரையறுக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில சட்டங்களுக்குச் சாத்வீக மறுப்புச் செய்யும் உரிமை அவனுக்கு ஏற்படுகிறது. இந்த அவசியமான நிபந்தனையை நான் கவனிக்கத் தவறியதுதான் என் குற்றமாகும். மக்கள் அதற்குத் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ளுமுன், அவர்களைச் சட்டமறுப்புச் செய்யும்படி நான் கேட்டுக்

கொண்டேன்; எனது இத்தவறு இமயம்போல் பிரமாண்டமாக எனக்குத் தோன்றியது. கேதா மாவட்டத்தில் நான் நுழைந்ததும், பழைய கேதா சத்தியாக்கிரஹப் போராட்ட நினைவுகள் எல்லாம் எனக்குத் திரும்பியும் வந்தன; இவ்வளவு தெளிவாக இருக்கிற விஷயத்தைக் கண்டுகொள்ள நான் எப்படித் தவறி இருக்க முடியும் என்று வியப்புற்றேன். மக்கள் சத்தியாக்கிரஹத்தைத் தொடங்குமுன், அதனுடைய ஆழ்ந்த உட்பொருள்களை நன்ருக அறிந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தேன். எனவே பொதுஜன சட்ட மறுப்பியக்கம் மீண்டும் தொடங்கு முன்னம், நன்ருகப் பயிற்சி பெற்றவர்களும், தூய உள்ளம் படைத்தவர்களும், சத்தியாக்கிரஹத்தின் கண்டிப்பான நிபந்தனைகளைப் பூரணமாக அறிந்தவர்களுமான தொண்டர் கூட்டம் ஒன்றை உண்டாக்குவது அவசியமாகும். அவர்கள் இவற்றை மக்களுக்கு விளக்கிக் கூறுவதோடு, ஒழியாத கவனத்துடனிருந்து அவர்களை நேரிய பாதையில் நடத்தவும் கூடும்.

இத்தகைய எண்ணங்கள் நிரம்பிய உள்ளத்தோடு நான் பம்பாய் சென்று, அங்கிருந்த சத்தியாக்கிரஹச் சபையின் மூலமாக, ஒரு சத்தியாக்கிரஹத் தொண்டர் படை அமைத்தேன். அத்தொண்டர்களின் உதவி கொண்டு, சத்தியாக்கிரஹத்தின் உட்தத்துவத்தைப் பற்றியும் பொருளைப் பற்றியும் மக்களுக்கு அறிவூட்டும் வேலையை ஆரம்பித்தேன். இப்பொருளைப் பற்றி விஷயம் புகட்டும் முறையில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதன் மூலமாகவே இவ்வேலை முக்கியமாக நடந்து வந்தது.

ஆனால் இந்த வேலை இப்படி நடந்துகொண்டிருக்கும் பொழுது, சத்தியாக்கிரஹத்தின் சாந்தமான பகுதியில் மக்களுக்கு அக்கறை உண்டாக்குவது கடினமான வேலை என்பதைத் தெரிந்துகொண்டேன். தொண்டர்களும் ஏராளமாகப் பதிவு செய்துகொள்ள முன்வரவில்லை.

பதிவு செய்துகொண்டவர்களிலும், எல்லோரும் ஒழுங்காக முறையான பயிற்சி ஒன்றும் பெற்றுக்கொள்ளவில்லை. நாளாக ஆக, புதிதாகச் சேரும் தொண்டர்களின் எண்ணிக்கை கூடுவதற்குப் பதிலாக மெள்ள மெள்ளக் குறைய ஆரம்பித்தது. சட்டமறுப்புப் பயிற்சி நான் முதலில் எதிர்பார்த்ததைப் போல் அவ்வளவு வேகமாக முன்னேறப் போவதில்லை என்பதை அறிந்தேன்.

79

' நவஜீவன் '—' யங் இந்தியா '

இச் சஞ்சிகைகளின் மூலம், படிக்கும் பொதுமக்களுக்குச் சத்தியாக்கிரஹத்தைப் பற்றி, என் ஆற்றலுக்கு இயன்ற அளவு போதிக்கும் பணியைத் தொடங்கினேன். இரு பத்திரிகைகளும் அதிகமான சந்தாதாரர்களைப் பெற்றிருந்தன. ஒரு சமயத்தில் ஒவ்வொன்றுக்கும் சுமார் 40,000 வரை சந்தாதார்கள் இருந்தார்கள். ஆனால் ' நவஜீவ'னின் சந்தா எண்ணிக்கை ஒரே எட்டில் ஏறியது. ' யங் இந்தி 'யாவின் எண்ணிக்கை நிதானமாக மெள்ள மெள்ளவே ஏறியது. நான் சிறை சென்ற பின்னர், இவ்விரு பத்திரிக்கைகளின் சந்தா எண்ணிக்கை மிகவும் குறைந்தது. தற்போது அது எட்டாயிரத்துக்குக் குறைவாகவே இருக்கிறது.

அவற்றின் ஆரம்பத்திலிருந்தே, அவைகளில் விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளுவதை மறுத்துவிட்டேன். அதனால் அவைகளுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை என்றே நினைக்கிறேன். அதற்கு மாறாக, அவற்றினுடைய சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொள்ள, அம்முடிவு பெருந்துணையாக இருந்தது என்பது என் நம்பிக்கையாகும்.

ஓரளவு நான் மனச்சாந்தி பெறுவதற்கும் இச்

சஞ்சிகைகள் எனக்கு உறுதுணைபுரிந்தன. ஏனென்றால், உடனே சட்டமறுப்புத் தொடங்குவது இயலாத நிலையில், என்னுடைய கருத்துக்களைத் தாராளமாக வெளியிடவும், மக்களுக்கு தைரியம் ஊட்டவும் எனக்குத் தோதாக இருந்தன.

80

அமிர்தசரஸ் காங்கிரஸ்

புதிய சீர்திருத்தங்களைக் குறித்து, மன்னரின் அறிக்கை அப்பொழுதுதான் வெளி வந்திருந்தது. எனக்குக்கூட அது முழுதும் திருப்தி அளிக்கவில்லை. மற்றவர்களுக்கு எல்லாம் திருப்தியே அளிக்கவில்லை. ஆனால், சீர்திருத்தம் குறைபாடு உடையதாக இருந்தாலும் கூட, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று அச்சமயம் எண்ணினேன்.

அதற்கு மாருகத் தேசபந்து சித்தரஞ்சனதாஸ், சீர்திருத்தங்கள் போதா, அதிருப்திகரமானவை என்று அவை முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான கருத்துக் கொண்டிருந்தார். காலஞ் சென்ற லோகமான்யர், ஏறக்குறைய நடுநிலைமையாக இருந்தார். ஆனால் தேசபந்து ஆமோதிக்கிற தீர்மானத்தை அவர் ஆதரிப்பதாக முடிவு செய்து இருந்தார்.

உரங்கொண்டு, நன்கு தேர்ச்சியுற்று, அனைவரின் மரியாதைக்கும் உரிய இத்தகைய தலைவர்களோடு நான் வேறுபாடு கொள்ள வேண்டியிருந்தது, எனக்குப் பொறுக்கமுடியாததாக இருந்தது. ஆனால் அதற்கு மாருக, என் மனச்சாட்சியின் குரல் தெளிவாக இருந்தது. நான் காங்ரசிலிருந்து ஓடிவிட முயன்றேன். எஞ்சியுள்ள காங்கிரஸ் கூட்டத்திற்கு நான் வராமலிருந்தால் பொதுவாக எல்லோருக்கும் நன்மையாயிருக்கும் என்று நான்

மாளவியாஜியிடமும் மோதிலால்ஜியிடமும் சொன்னேன். இதனுல், மதிப்பிற்குரிய இத்தகைய தலைவர்களோடு நான் மாறுபடுவதை வெளியே காட்டிக்கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளலாம். ஆனுல் இவ் இரு பெரியார்களும் என் யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே எனது தீர்மானத்தைத் தயாரித்து, நடுங்கிய உள்ளத்துடன் அதைப் பிரேரேபிக்க முற்பட்டேன். எங்களுடைய கருத்து வேறுபாடுகளில் மனக்கசப்பின் சாயல் எதுவும் கிடையாது; எங்கள் சொற்பொழிவுகளும் அறிவு பூர்வமானவைகளாகவே இருந்தன. என்ருலும், நாங்கள் மாறுபடுகிருேம் என்ற விஷயமே மக்களால் பொறுக்க முடியவில்லை என்பதைக் கண்டேன். அது அவர்களுக்கு வருத்தம் அளித்தது. அவர்கள் ஒற்றுமையை விரும்பினுர்கள்.

சொற்பொழிவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது கூட, சமரசம் உண்டுபண்ண மேடையில் முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. இது சம்பந்தமாகத் தலைவர்களுக்கிடையே குறிப்புகள் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பிளவைப் பொருத்த மாளவியாஜி பெருமுயற்சி செய்தார். அச்சமயத்தில், ஜெயராம் ஒரு திருத்தப் பிரேரேபணையை என்னிடம் கொடுத்துப் பிரதிநிதிகளை வாக்குப் பிரிவினைத் தொந்திரவிலிருந்து காப்பாற்றுமாறு, தமக்கே இயல்பான இனிய முறையில் என்னை வேண்டினுர். அவருடைய திருத்தம் எனக்குப் பிடித்தது. மாளவியாஜியின் கண்கள் நம்பிக்கையின் ஒளிக்காக எல்லா இடங்களிலும் தேடிக்கொண்டிருந்தன. ஜெயராம்தாஸினுடைய திருத்தம் இருகட்சியாரும் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று எனக்குத் தோன்றுவதாக அவரிடம் சொன்னேன். அடுத்தபடி அது லோகமான்யரிடம் காட்டப்பட்டது. அவர் "ஸி. ஆர். தாஸ் ஆமோதித்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை" என்ருர்.

இறுதியாக, தேசபந்துவும் மனமிரங்கி, ஆமோதிப்பிற்காக விபின சந்திரபாலரை நோக்கினர். மாளவியாஜிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. திருத்தம் எழுதப்பட்டிருந்த கடிதத்தை அவரிடமிருந்து பிடுங்கி, தேசபந்து 'சரி' என்று திட்டமாக வாய்திறந்து கூறு முன்னர், மாளவியாஜி, "சகோதரப் பிரதிநிதிகளே! எங்களிடையே ராஜி ஏற்பட்டுவிட்டது என்று கேள்விப்பட நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்!" என்று உரத்துக் கூறினர். பின்னர் நிகழ்ந்தது வருணிக்கும் தரமன்று. கைதட்டலின் முழக்கம் பந்தலையே தொளைத்தது. இதற்கு முன் வாட்டமுற்றிருந்த அவையோரின் முகங்கள் மகிழ்ச்சியால் ஒளிவீசின.

அமிர்தசரஸில் நான் காங்கிரஸ் நடவடிக்கைகளில் கலந்து கொண்டதுதான், காங்கிரஸ் அரசியலில் எனது உண்மையான பிரவேசம் என்று கருதவேண்டும்.

எனது அமிர்தஸரஸ் அனுபவத்திலிருந்து இரண்டொரு விஷயங்களில் நான் காங்கிரசுக்கு உபயோகமாக இருக்கக்கூடும் என்று தெரிந்துகொண்டேன். அவைகளில் எனக்கு ஒரு சுவை உண்டு.

அடுத்த வருடத்தில் நடக்கவேண்டிய இரண்டு வேலைகள் எனக்கு அக்கறை தந்தன. அவற்றைச் செய்ய எனக்கு இயல்பான தகுதியும் இருந்தது. இவற்றில் ஒன்று ஜாலியன் வாலாபாக் படுகொலையின் நினைவுச்சின்னமாகும். காங்கிரஸ் மிகுந்த உற்சாகத்துக்கிடையே அத்தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது. அதற்காக ஐந்துலக்ஷம் ரூபாய் நிதி திரட்டவேண்டி இருந்தது. நான் அந்த நிதியின் தருமகருத்தாக்களில் ஒருவனுக நியமிக்கப்பட்டேன். பொதுப் பணிகளுக்காக பிச்சை எடுப்போரில் பண்டித மாளவியா திறமைசாலி என்று பெயர் வாங்கி இருந்தார். ஆனல் அத்துறையில் நானும் ஒன்றும் இளைத்தவனில்லை என்பது எனக்குத் தெரியும். தென்னுப்பிரிக்காவில் இருந்தபோதுதான்

இத்துறையில் எனக்குள்ள ஆற்றலை நான் கண்டு பிடித்தேன்.

காங்கிரசு பயன்படுத்தக்கூடிய என்னுடைய இன்னொரு ஆற்றல், எழுத்துத் துறையிலாகும். செறிவுள்ள சொற்றொடரைக் கையாளும் ஆற்றல் எனக்கு இருந்ததைக் காங்கிரஸ் தலைவர்கள் கண்டிருந் தார்கள். அவ் ஆற்றல் நீண்டகாலப் பயிற்சியால் நான் பெற்றது ஆகும். அப்பொழுதிருந்த காங்கிரஸின் அமைப்பு, கோகலேயின் கைவேலையாகும். காங்கிரஸ் ஸ்தாபனம் நடைபெறுவதற்கு ஆதாரமாக கோகலே சில விதிகளை அமைத்திருந்தார். கோகலேயின் வாய்மொழி மூலமாகவே, இவ்விதிகளை அமைக்கலான ருசிகரமான வரலாற்றை, நான் அறிந்திருந்தேன். ஆனால் நாள் தோறும் பெருகிவரும் காங்கிரஸின் வேலைக்கு அவை இனிமேல் போதா என்று எல்லோரும் இப்பொழுது உணரலானார்கள். இவ்விஷயம் ஆண்டுதோறும் காங்கி ரஸில் வந்துகொண்டிருந்தது.

நான், ஒரு நிபந்தனையின் பேரில், காங்கிரசுக்கு அமைப்புத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். பொதுமக்களிடத்தில் மிகுந்த செல்வாக்கு உடைய இருதலைவர்கள், லோகமான்யரும் தேசபந்து வும் என்பதைக் கண்டேன். மக்களின் பிரதிநிதிகளாக அமைப்புத் தயாரிக்கும் குழுவில் அவர்கள் என்னுடன் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக் கொண்டேன். ஆனால் அமைப்புத் தயாரிக்கும் வேலையில் அவர்கள் நேரிலே கலந்துகொள்ளுவதற்கு நேரம் இருக்காது என்றபடியால், அவர்களுடைய நம்பிக்கைக்கு உரிய இருவரை அக்குழுவில் என்னோடு நியமிக்க வேண்டும் என்றும், குழுவின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை மூன்றுக்கு மேல் கூடாது என்றும் யோசனை கூறினேன். லோகமான்யர், தேசபந்து இருவரும் என் யோசனையை ஏற்றுக்கொண்டனர்.

அவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாக முறையே திரு. கெல்கர் பெயரையும், ஐ. பி. சென் பெயரையும் சொன்னார்கள். அமைப்புக் குழு ஒரு தரம்கூடக் கூட முடியவில்லை. ஆனால் நாங்கள் கடிதப் போக்குவரத்து மூலம் கலந்து கொண்டோம். கடேசியில் ஒருமனதான அறிக்கை ஒன்றையும் கொடுத்தோம். இந்தக் காங்கிரஸ் அமைப்பைக் குறித்து, நான் ஓரளவு பெருமை அடைகிறேன். இந்த அமைப்பை நாம் சரிவர இயக்குவோமானால், அதை நடத்தி வருவதொன்றே நமக்கு சுயராஜ்ஜியத்தைக் கொண்டு வந்துவிடும். இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டபோதுதான், நான் காங்கிரஸின் அரசியலில் உண்மையாக நுழைவதானேன் என்று கூறலாம்.

பாகம் XVI
காதியின் பிறப்பு

81

காதியின் பிறப்பு

பெருகிவரும் இந்தியாவின் வறுமைக்கு உற்ற மருந்து கைராட்டினமே என்று 'இந்திய சுய ராஜ்யம்' என்ற நூலில் நான் எழுதியபோது கைராட்டினத்தையோ, கைத்தறியையோ நான் பார்த்ததாக ஞாபகம் இல்லை. இந்திய நாட்டின் பாமர மக்களை நசுக்கி வரும் வறுமையைப் போக்கத் துணைபுரியும் எந்தச் சாதனமும், அதே வகையிலேயே சுயராஜ்ஜியத்தையும் ஏற்படுத்தும், என்பது யாவரும் அறிந்தது என்றே கொண்டு, அந்நூலை எழுதினேன். 1915-ம் ஆண்டில் நான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்த பொழுதுகூட நான் ஒரு கைராட்டினத்தை நேரிலே கண்டதில்லை. சபர்மதியில் சத்தியாக்கிரஹ ஆசிரம் நிறுவப்பட்ட பொழுது, அங்குச் சில கைத்தறிகளை அமைத்தோம். ஆனால் நாங்கள் இதைச் செய்தவுடனே, ஒரு பெரிய சங்கடம் எங்களுக்கு ஏற்பட்டது. ஆசிரமத்திலுள்ள நாங்கள் எல்லோரும் உத்தியோகத் தொழில்களையோ, வியாபாரத்தையோ சேர்ந்தவராக இருந்தோம். ஒருவராவது கைத் தொழிலாளி இல்லை. கைத்தறியில் வேலை செய்யும் முன்னர், எங்களுக்கு நெசவு கற்றுக் கொடுப்பதற்கு ஒரு நெசவு நிபுணர் தேவையாக இருந்தது. கடைசியில் பாலன்பூரிலிருந்து ஒருவர் வரவழைக்கப் பட்டார். ஆனால் எங்களுக்குத் தொழில் நுணுக்கம் முழுவதும் சொல்லிக் கொடுக்கவில்லை. ஆனால் மகன்லால் காந்தி எளிதே திகைப்படைபவரல்லர். தொழில் நுணுக்கத்திற்கு வேண்டிய இயற்கை ஆற்றல் அவருக்கு

இருந்தபடியால், வெகுவிரைவிலே அக்கலையில் நன்கு கற்றறிந்த வல்லவரானார்; ஆசிரமத்தில் ஒருவர் பின் ஒருவராய்ப் பலர் நெசவுத் தொழில் பயிற்சி பெற லானார்கள்.

எங்கள் கையினால் நெய்யப்பட்ட துணிகளினாலேயே நாங்கள் உடுத்தும் ஆடைகள் முழுதும் இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தை எங்கள் முன் ஏற்படுத்திக் கொண்டோம். எனவே, உடனடியாக ஆலைத் துணிகளை ஒழித்தோம். இந்தியாவில் உற்பத்தியான நூலைக்கொண்டு நெய்யப்பட்ட துணிகளையே உடுத்துவது என்று உறுதி பூண்டோம். இவ்வழக்கத்தை நாங்கள் மேற்கொண்டது, எங்களுக்குப் பல அநுபவங்களைத் தரலாயிற்று. நெசவாளர்களின் வாழ்க்கை நிலை, அவர்களுடைய உற்பத்தி அளவு, நூல் பெற்றுக் கொள்வதில் அவர்களுக்கு உள்ள சிரமங்கள், சூழ்ச்சிகளுக்கு அவர்கள் ஆளாகும் வழிகள், கடேசியில், அவர்களுடைய பெருகும் கடன்கள் முதலியவைகளைக் குறித்து நாங்கள் நேரடியாகத் தெரிந்து கொள்ளத் தோதாக இருந்தது. எங்கள் தேவைக்கு வேண்டிய எல்லாத் துணிகளையும் நாங்கள் உடனே தயாரித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அடுத்தபடியாகச் செய்யக் கூடியது நெசவாளர்களிடமிருந்து நாங்கள் துணி வாங்குவதேயாகும். ஆனால், இந்திய ஆலை நூலினால் நெய்யப்பட்ட துணிகள் துணி வியாபாரிகளிடமோ, நெசவாளிகளிடமோ, எளிதே கிடைப்பதற்கில்லை. கைத்தறியாளர்கள் நெய்த மெல்லிய துணிகளெல்லாம் அன்னிய நூலினால் ஆனவை. இந்திய ஆலைகள் நுண்ணிய உயர்ந்த எண் உள்ள நூலை உற்பத்தி செய்வது இல்லை. இன்னும்கூட இந்திய ஆலைகளில் உயர்ந்த நம்பர் நூல் உற்பத்தி மிகக் குறைவு; மிக உயர்ந்த நம்பர் நூல் இந்திய ஆலையில் உற்பத்தி செய்யவே முடியாது. எங்களுக்காகச் சுதேசி நூலைக்கொண்டு துணி நெய்யச் சில நெசவாளிகளைப்

பெருமுயற்சி செய்து, ஏற்பாடு செய்தோம். மேலும், அவர்கள் உற்பத்தி செய்யும் துணி முழுவதையும் நாங்கள் எடுத்துக் கொள்ளுவதாக ஒத்துக் கொண்டோம். இந்திய ஆலை நூலினால் ஆன துணிகளை நாங்கள் உடுத்தியும், எங்கள் நண்பர்களிடையே அதைப் பிரசாரம் செய்வதன் மூலம், இந்திய நூல் ஆலைகளுக்கு நாங்கள், தாமே ஏற்படுத்திக் கொண்ட ஏஜண்டுகளானோம். இது எங்களுக்கு ஆலைகளோடு தொடர்பு ஏற்படுத்தியது; அவற்றின் நிருவாகத்தைப் பற்றியும் அவர்களுடைய கஷ்டங்களைப் பற்றியையும் தெரிந்து கொள்வதானோம்.

ஆலைகளில் உற்பத்தியாகும் நூலை ஆலைகளிலேயே நெய்து விடுவது என்பது ஆலைகளின் நோக்கம் என்பதைக் கண்டோம். கைத்தறி நெசவாளிகளுடன் அவர்களுடைய ஒற்றுழைப் பெல்லாம் மனப் பூர்வமானதில்லை என்றும், ஆனால் தற்காலிகமானதும் தவிர்க்க முடியாததும் ஆகும் என்பதையும் கண்டோம். எங்களுக்கு வேண்டிய நூலை நாங்களே நூற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டோம். இதை நாங்களே செய்யும் வரை, நாங்கள் ஆலைகளை நம்பியே இருக்கவேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்திய நூற்பு ஆலைகளுக்கு நாங்கள் ஏஜண்டுகளாக நீடித்து வருவதினால் நாட்டுக்கு எவ்விதச் சேவையும் செய்வதிற்கில்லை என்பதை உணர்வதானோம்.

இதிலும் எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை. எங்களுக்குக் கைராட்டினமும் கிடைக்கவில்லை; எப்படி நூற்பது என்பதைச் சொல்லிக்கொடுக்க ஆளும் கிடைக்கவில்லை. ஆசிரமத்தில் நெசவு வேலைக்காக நூலைக் கழியிலிருந்துப் பிரித்துச் சுற்றுவதற்காகச் சில சுழல் சக்கரங்களை வைத்திருந்தோம். ஆனால் அவைகளைக் கைராட்டினங்களாக உபயோகித்துக் கொள்ளலாம் என்பது எங்களுக்குத் தெரியாது. ஒரு சமயம், காளிதாஸ்ஜவேரி எப்படி நூற்பது என்பதை

எங்களுக் காட்டித் தரக்கூடிய ஒரு பெண்ணைக் கண்டு பிடித்தார். அவளிடம் எங்கள் ஆசிரமவாசி ஒருவரை அனுப்பினேம். அவர் புதிய விஷயங்களை எளிதே கற்றுக் கொள்ளக்கூடிய அபாரத் திறமை உள்ளவர் என்று பெயர் வாங்கினவர். ஆனால், அவரும்கூட அக் கலையின் மருமத்தைக் கண்டுவர முடியவில்லை.

இவ்வாறு காலங் கழிந்து கொண்டிருந்தது. என் பொறுமையின்மையும் அதனேடு கூடவே வளர்ந்து வந்தது. ஆசிரமத்து வந்து போவோரில் கையினல் நூல் நூற்றலைப்பற்றித் தெரிந்திருக்கக் கூடியவர் என்று நான் நினைத்த எல்லோரையும், இக்கலையைப் பற்றிக் கேள்விகள் கேட்டேன். ஆனல் இக்கலையோ முழுதும் பெண்களாலே கையாளப்பட்டு வந்தது; மேலும் அது அநேகமாக அழிந்து போயிருந்தது. எனவே, எங்கே யாவது ஒரு மறைவான மூலையில் தப்பித்தவறி ஒரு நூற்பவர் இருந்தால், அவள் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பது, பெண்பால் ஒருத்தியினலேயே முடியும்.

1917-ம் ஆண்டில் புரோச் கல்வி மாநாட்டில் தலைமை தாங்குவதற்காக என்னுடைய குஜராத்தி நண்பர்கள் என்னை அழைத்துச் சென்றிருந்தனர். இங்குத்தான் கங்காபென் மஜூம்தார் என்ற வியக்கத்தகும் பெண் மணியை நான் கண்டுபிடித்தேன். அவர் கைம்பெண்; ஆனல் அவருடைய செயலாற்றும் ஊக்கம் எல்லை அறியாதது. அவருக்கு இப்பொழுது கல்வி என்று கூறப்படுகிற கல்வி அதிகம் கிடையாது. ஆனல், தைரியத்திலும் இயற்கை அறிவிலும் சாதாரணமாக நமது படித்த பெண்களை அவர் எளிதே தூக்கி அடிக்கக் கூடியவர். அவர், ஏற்கெனவே தீண்டாமைச் சாபத்தை விட்டொழித்தவர்; ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களிடையே யாருக்கும் அஞ்சாது பழகி அவர்களுக்குச் சேவை செய்து வந்தார். அவருக்குச் சொந்தமாகச் சொத்து இருந்தது; மேலும் அவருடைய தேவைகளும் சொற்பம்.

அவர் நன்றாக உரம்பெற்ற உடலுறுதி உடையவராக இருந்தார். எனவே துணையின்றி எங்கனும் செல்லு வார். குதிரை சவாரி இலாவகமாகச் செய்வார். கோத்ரா மாநாட்டில், அவரை மேலும் நன்றாகத் தெரிய லானேன். அவரிடம் கைராட்டினத்தைப் பற்றிய எனது துயரத்தைக் கொட்டினேன். கைராட்டினத்தைத் தேடிப் பிடிக்க ஊக்கத்தோடு இடையறாது முயற்சி செய்வதாக, அவர் எனக்கு உறுதி கூறி, என் மனப்பளுவைக் குறைத்தார். கங்காபென் குஜராத்தில் அலைந்து திரிந்த பின்னர், பரோடா சமஸ்தானத்தில் உள்ள விஜயபுரியில், கைராட்டினத்தைக் கண்டார். அங்கு ஏராளமான பேர் வீட்டில் இராட்டினங்கள் இருந்தன. ஆனால், பயன் படாத மரக்கட்டையாக நீண்ட நாட்களுக்கு முன்னமே யே பரணின் மீது போடப்பட்டிருந்தன. அவர்கள், யாராவது தங்களுக்கு ஒழுங்காகப் பஞ்சுப் பட்டைகள் கொடுத்து வரவும், அவர்கள் நூற்ற நூலை வாங்கிக் கொள்ளவும் உறுதி கொடுத்தால், மீண்டும் நூல் நூற்கத் தயாராக இருப்பதாகக் கங்காபென்னிடம் தெரிவித்தார்கள். கங்காபென் இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை எனக்குத் தெரிவித்தார். பஞ்சுப்பட்டை கொடுப்பது மிகவும் கஷ்டமான வேலையாகத் தோன்றி யது. காலஞ் சென்ற உமார் சோபானியிடம் இவ் விஷயத்தைத் தெரிவித்தபோது, அவர் தனது ஆலையி லிருந்து போதுமான பட்டைகள் அனுப்புவதாக உடனே ஏற்றுக்கொண்டார். உமார் சோபானிடமிருந்து கிடைத்த பட்டைகளை நான் கங்காபென்னுக்கு அனுப்பி னேன். விரைவிலே நூல் வந்து குவிய ஆரம்பித்தது. அதை என்ன செய்வது என்பது இப்பொழுது பெரிய பிரசினை ஆகிவிட்டது.

உமார் சோபனின் தாராளம் பெரியது; என்றாலும், எந்தக் காலமும் அதையே பயன்படுத்திக் கொண்டு வரக்கூடாது. பஞ்சுப் பட்டைகளை ஓயாமல் அவரிடமே

வாங்கிக் கொண்டிருப்பது என் மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. மேலும், ஆலைப் பஞ்சுப்பட்டைகளை உபயோகிப்பதும் அடிப்படையிலேயே தவறு என்று தோன்றிற்று. ஆலைப்பட்டைகளை உபயோகிக்கலாம் என்ருல், ஏன் ஆலை நூலையே உபயோகிக்கக்கூடாது? பழங்காலத்தவர்க்குப் பஞ்சுப் பட்டைகளை நிச்சயமாக எந்த ஆலைகளும் கொடுக்கவில்லையே? பின் எப்படி அவர்கள் பட்டைகள் செய்தார்கள்? இவ் எண்ணங்களை மனதில் கொண்டு, பட்டைகள் தயாரிக்கப் பஞ்சு உடைப்பவர்களைக் கண்டு பிடிக்கும்படி கங்காபென்னிடம் கூறினேன். அவரும் இவ்வேலையை நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டார். அவர், பஞ்சு உடைக்கக்கூடிய ஒருவனை அமர்த்திஞர். அவன் மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 35 ரூபாய்ச் சம்பளம் கேட்டான். அச்சமயத்தில் இதற்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் அதிகமானதென்று நான் கருதவில்லை. உடைத்த பஞ்சைப் பட்டை போடும் வேலையை இவர் சில இளைஞர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். நான் பம்பாயிலிருந்து பருத்தி கேட்டேன். திரு. எச்வந்தரபிரசாத் தேசாய் உடனே பருத்தி அனுப்பி வைத்தார். இவ்வாறு கங்காபாயின் முயற்சி எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே பலன் தருவதாயிற்று. விஜயபுரியில் நூற்ற நூலை அங்கேயே நெய்வதற்கு நெசவாளிகளையும் அவர் கண்டுபிடித்தார். விஜயபுரிக் கதர் விரைவிலேயே நல்ல பெயர் வாங்கலாயிற்று.

விஜயபுரியில் இவ்வண்ணம் அபிவிருத்திகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, ஆசிரமத்திலும் இராட்டினம் வெகுவேகமாக வேரூன்றலாயிற்று. மகன்லால் காந்தி, தனது அற்புதமான இயந்திர சம்பந்தமான ஆற்றலை எல்லாம் செலுத்தி இராட்டினத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்திஞர். இராட்டினத்தின் சக்கரம், மற்றக் கருவிகள் எல்லாம் ஆசிரமத்தி

லேயே செய்யப்படலாயின. ஆசிரமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் கதர் கஜத்திற்கு 17 அணு அடங்கியது. மிக முரடாக இருந்த அக்கதரை, அவ் விலையில் வாங்கிக்கொள்ளுமாறு என் நண்பர் களுக்குச் சிபார்சு செய்ய நான் தயங்கவில்லை. அவர் களும் மனதோடு அவ்விலை கொடுத்து வாங்கினுர்கள்.

நான் பம்பாயில் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தேன். ஆனுலும், அங்கே இராட்டினத்தைத் தேட எனக்குப் போதிய சக்தி இருந்தது. கடேசியில் இரண்டு நூற்பவர்கள் எனக்கு அகப்பட்டார்கள். அவர்கள் ஒரு சேர் நூலுக்கு, அதாவது 28 தோலா அல்லது ஏறக்குறைய முக்கால் பவுண்டுக்கு, ஒரு ரூபாய் கேட்டார்கள். கையினுல் நூற்ற நூல் வாங்கு வதற்கு எவ்வளவு விலையாளுலும் பாதகம் இல்லை என்று கருதினேன். விஜயபுரியில் கொடுக்கப்படும் விகிதத்தை யும், நான் கொடுத்த விகிதத்தையும் ஒத்துப் பார்த்த பொழுது, நான் ஏமாற்றப்பட்டு வருகிறேன் என்பதைக் கண்டேன். நூற்பவர்கள் தங்கள் விகிதத்தை எவ் வளவும் குறைத்துக் கொள்ளச் சம்மதிக்க வில்லை. எனவே அவர்களுடைய வேலையை நான் நீக்க வேண்டிய தாயிற்று. ஆனுலும், அவர்களால் பயன் ஏற்பட்டது. திருமதிகள் அவந்திகாபாய், ராமிபாய் கம்தார், சங்கரலால் பாங்கரின் விதந்து அன்னையார், வசுமதி பென்—ஆகியோருக்கு அவர்கள் நூற்பதைக் கற்றுக் கொடுத்தார்கள். எனது அறையில் இராட்டினம் ஆனந்தமாக ரீங்காரமிட ஆரம்பித்தது. அதனுடைய ரீங்காரம் எனது உடல் நலம் உறுவதற்கு பெருந் துணையாக இருந்தது என்று சொல்லுவது மிகை யாகாது. உடலைவிட உள்ளத்திற்கே அதன் விளைவுகள் நேராக ஏற்பட்டன என்பதை ஒத்துக் கொள்ளத் தயார். ஆனுல், உள்ள நிகழ்ச்சிகள் எவ்வளவு சக்தியோடு மனிதனின் உடலைப் பாதிக்கின்றன என்பதையே இது

காட்டுவதாகும். நானும் கைராட்டினத்தில் சிறிது கைவைத்தேன். ஆனால் அதுபோழ்து அதிகமாக ஒன்றும் செய்துவிடவில்லை.

பம்பாயிலும் கையால் செய்த பஞ்சுப் பட்டைகளைப் பெறும் பழைய பிரசினை மீண்டும் எதிர்ப்பட்டது. திரு. ரேவாசங்கர் வீட்டின் வழியே ஒரு பஞ்சு வெட்டு பவன் தினம்தோறும் தன் வில்லைத் தட்டிக் கொண்டு போவது வழக்கம். அவனை நான் கூப்பிட்டனுப்பி னேன். மெத்தைகளுக்கு அடைப்பதற்காக அவன் பஞ்சு கொட்டுவதாகத் தெரிந்து கொண்டேன். அவன் பட்டைகள் செய்வதற்குப் பருத்தி கொட்ட ஒத்துக் கொண்டான். ஆனால் அதற்குக் கூலி மிகவும் அதிக மாகக் கேட்டான். அதை நான் கொடுத்தேன். இவ்வாறு நூற்கப்பட்ட நூலை, பவித்ர ஏகாதசிக்கு அவற்றால் மாலைகள் செய்யச் சில வைணவ நண்பர் களிடம் கொடுத்தேன். திரு. ஷிவ்ஜி பம்பாயில் ஒரு நூற்பு வகுப்பை ஆரம்பித்தார். இச்சோதனைகளுக்கு எல்லாம் மிகுதியான செலவு பிடித்தது. ஆனால் அச் செலவெல்லாம், கதரில் நம்பிக்கை உள்ள, தாய் நாட்டில் அன்புடைய தேசபக்த நண்பர்களால் மனமுவந்து, செய்யப்பட்டது. இவ்வாறு செலவான பணம் வீண் அன்று என்பது எனது தாழ்மையான கருத்து. அது, எங்களுக்கு நிறைந்த அநுபவத்தைத் தந்தது; இராட் டினத்தின் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகளையும் தெரிவித்தது.

இச்சமயத்தில் என் உடை முழுதும் கதராக இருக்க வேண்டும் என்று அவசரப்படலானேன். என் வேஷ்டி இன்னும் இந்திய ஆலைத் துணியால் ஆனதாக இருந்தது. ஆசிரமத்திலும் விஜயபுரியிலும் நெய்யப் பட்ட முரட்டுக் கதர் 30 இஞ்சு அகலமே உள்ளது. ஒரு மாதத்திற்குள் 45 இஞ்சு அகலமுள்ள கதர்த்துணி எனக்குக் கொடுக்காவிட்டால், நான் இந்த முரட்டு

அகலம் குறைந்த கதர் வேஷ்டியை உடுத்திக் கொள்வேன் என்று கங்கா பென்னிடம் சொன்னேன். இவ் இறுதி எச்சரிக்கை அவரைத் திடுக்கிடும்படி செய்தது. ஆனாலும், அவருக்கிட்ட வேலையை முடித்தே தீர்த்தார். அந்த ஒரு திங்களுக்கு உள்ளாக 45 இஞ்சு அகலத்தில் ஒரு ஜோடிக் க்தர் வேஷ்டி அவர் எனக்கு அனுப்பினர். இவ்வாறு ஒரு கஷ்டமான நிலைமையில் இருந்து அவர் என்னைக் காப்பாற்றினர்.

இதே சமயத்தில் திரு. லக்ஷ்மிதாஸ், லாதியிலிருந்து திரு. ராம்ஜி என்ற நெசவாளியையும், கங்கபென் என்ற அவருடைய மனைவியையும், ஆசிரமத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்தார். கதர் பரவியதில் இத்தம்பதிகள் ஆற்றிய தொண்டு அற்பசொற்பம் அன்று. அவர்கள் குஜராத்திலும், வெளியிலும் கைநூலைக் கொண்டுத் துணி நெய்யும் கலையை ஏராளமான பேருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறர்கள்.

82

வந்தனம் !

இந்நூலை முடிப்பதற்குரிய சமயம் இப்பொழுது வந்துவிட்டது.

இக்காலம் முதற்கொண்டு எனது வாழ்க்கை எல்லாம் பகிரங்கமானது. எனவே, மக்கள் அறியாத நிகழ்ச்சி யாதொன்றும் கிடையாது.

உண்மையில், எனது பேனவும், தானகவே இதற்கு மேற்போக மறுக்கிறது.

நான் இப்பொழுது வாசகர்களிடம் விடைபெற்றுக் கொள்ளுவதில், எனக்குப் பிரிவுத் துயரம் இல்லாமல் இல்லை. எனது சோதனைகளில் நான் பெரு மதிப்பு வைத்துள்ளேன். அவைகளின் மேன்மை தெரியும் வண்ணம் நான் எழுதி உள்ளேனு என்பது எனக்குத்

தெரியாது. உள்ளதை அப்படியே எடுத்து உரைக்க அரும்பாடு பட்டுள்ளேன் என்பதை மட்டுமே சொல்ல முடியும். யான் கண்டவாறு உண்மையை எடுத்துரைப்பதே என்னுடைய ஓயாத முயற்சியாகும். இது சந்தேகப் பிராணிகளுக்கு உண்மையிலும் அஹிம்சையிலும் நம்பிக்கையை ஊட்டும் என்று நான் நம்புகிறபடியால், இம்முயற்சி எனக்குச் சொல்லொணாத மனச் சாந்தியை அளித்துள்ளது.

உண்மை யன்றிப் பிறிதொரு கடவுள் இல்லை என்று என்னுடைய அனுபவம் அனைத்தும் ஒருங்கே எனக்கு அறிவுறுத்தி உள்ளது. உண்மையைக் காண்பதற்கு அகிம்சை ஒன்றே வழி என்று இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் வாசகர்களுக்குப் பறை சாற்றுவிட்டால், இந் நூலை எழுதிய என் வேலை எல்லாம் வீணாயின என்றே நான் கருதுவேன். இத்துறையில் என் முயற்சி பயன் தராது போவதானாலும், குற்றம் கருவியான என்னுடைய தாகுமேயன்றி, மாபெரும் கொள்கையின் குற்றமாகாது என்று வாசகர்கள் அறிவார்களாக! அஹிம்சா தருமத்தில் என் முயற்சிகள் எவ்வளவு உண்மை உள்ளத்துடன் செய்யப்பட்டிருப்பினும், அவைகள் இன்னும் அரை குறையானவைகளே; போதா. மின்னி மறையும் சிறிய ஒளியாக உண்மையை நான் கண்டதைக் கொண்டு, நாம் தினமும் நம் கண்களால் காணும் கதிரவனைவிடக் கோடி மடங்கு அதிக ஒளி படைத்த, விவரிக்க வொண்ணாத, உண்மையின் அற்புத சோதியை அளந்து விட முடியாது. வாஸ்தவத்தில், அந்த மகத்தான சோதிப் பிழம்பில், நான் கண்ட தெல்லாம், மிக மிக மங்கிய சிறிய கதிர் ஒளியேயாகும். அஹிம்சையை முழுமையும் கடைப்பிடித்தால்தான் உண்மையின் பரிபூரணக் காட்சி கிடைப்பதாகும் என்று, என்னுடைய சோதனைகள் அனைத்தின் விளைவாக, உறுதியோடு நான் சொல்ல முடியும்.

அகிலாண்டம் அனைத்தும் பரவி நிற்கும் மெய்ப் பொருளை நேருக்கு நேர் காண வேண்டுமாயின், படைப்பில் மிகத்தாழ்ந்த உயிரிடமும்கூட தன்னைப் போலவே அன்பு செலுத்தத்தெரிய வேண்டும். இதனைப் பெற விரும்பும் ஒருவன், வாழ்வில் எத்துறையிலும் இருந்து விலகி நிற்கமுடியாது. எனவேதான் சத்தியத்தில் எனக்குள்ள பற்று, என்னை அரசியல் துறைக்கு இழுத்து வந்தது. சமயத்திற்கும் அரசியலுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று சொல்லுபவர்களுக்கு, சமயம் என்றால் என்ன என்பது தெரியாது என்று கொஞ்சம் கூடத் தயக்கமின்றி, ஆனால் மிகப் பணிவோடு, கூறுவேன்.

ஆத்மத் தூய்மையின்றி, வாழும் உயிர்களோடு ஒருமைப்படுவது என்பது இயலாத காரியம். ஆத்மத் தூய்மையின்றி அகிம்சா தருமத்தைக் கடைப்பிடித்தல் என்பது வெறும் பகற் கனவாகவே முடியும். அக உள்ளத்தில் தூய்மை இல்லாத ஒருவன் ஆண்டவனை அடைய முடியாது. எனவே ஆத்மத் தூய்மை என்பது, வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தூய்மை அடைவது என்று பொருள். தூய்மை என்பது பிறரையும் தொற்றிக்கொள்ளும் தன்மை உடையது ஆதலால், ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்தும்போது தன் சூழ்நிலையையும் தூய்மைப்படுத்தி விடுகிறான்.

ஆனால், ஆத்மத் தூய்மை நெறி எளிதன்று; அது கடினமும் செங்குத்தும் நிறைந்த பாதை. பரிபூரணத் தூய்மை அடைவதற்கு, ஒருவன் சிந்தையிலும், சொல்லிலும் செயலிலும், அறவே கோப தாபம் நீக்கியவன் ஆக வேண்டும்; விருப்பு வெறுப்பு, பற்று பகைமை என்னும் மாறுபட்ட உணர்ச்சிகளுக்கு எல்லாம் அப்பாலிருக்க வேண்டும். நான் இடையறாது ஓய்வு ஒழிவு இன்றி முயற்சித்தும், இன்னும் இம்மூன்று தூய்மைகளையும் அடையவில்லை என்பது அறிவேன். எனவேதான்,

உலகத்தின் புகழ்ச்சி எனக்குக் கிளர்ச்சி தருவதில்லை; உண்மையில் அது எனக்கு அடிக்கடி துயரையே தந்துளது. புற உலகத்தை ஆயுத பலத்தால் வெற்றி கொள்ளுவதைவிட, நுண்ணியதான புலன் உணர்ச்சிகளை வெற்றிக் கொள்ளுவது மிகக் கடினமானதென்றே தோன்றுகிறது. நான் இந்தியாவிற்குத் திரும்பி வந்ததில் இருந்தே, எனக்குள் மறைந்து கிடந்த உணர்ச்சிகளின் அனுபவங்களை அடைந்து வந்திருக்கிறேன். அந்த ஞானம் என்னைத் தாழ்வுறச் செய்யினும், தோல்வியுறச் செய்யவில்லை. அவ் அனுபோகங்களும் சோதனைகளும், எனக்கு ஆற்றலையும் அதிக ஆனந்தத்தையும் அளித்து வந்துள்ளன. ஆனால், நான் இன்னும் கடக்கவேண்டிய கடினமான பாதை உண்டு என்பதறிவேன். நான் என்னை ஒரு வெறும் சூனியமாகத் தாழ்த்திக்கொள்ள வேண்டும். ஒருவன், படைப்பிலுள்ள தன்கூடவாழும் உயிர்களில் எல்லாம், தன்னைத் தானாகவே, கடைசியில் வைத்துக் கொள்ளாவிட்டால், அவனுக்கு விமோசனம் இல்லை. பணிவின் கடைசி எல்லையே அஹிம்சையாகும்.

இப்பொழுது வாசகர்களிடம் தற்போதைக்கேனும் நான் விடைபெற்றுக் கொள்ளவேண்டும். சிந்தனையிலும், சொல்லிலும் செயலிலும், எனக்கு ஆண்டவன் அஹிம்சா வரத்தை அருளுமாறு உண்மை என்ற கடவுளிடம் நான் பிரார்த்திக்கிறேன். அப்பிரார்த்தனையில் என்னோடு கலந்து கொள்ளுமாறு வாசகர்களையும் வேண்டிக்கொண்டு விடைபெறுகிறேன் : வந்தனம் !